Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# ஞானிகளின் இறைவன்



நிஜகுண ஶிவயோகி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# ஞானிகளின் இறைவன்

கன்னட மூலம்

திருமதி சாந்தலா யோகீசயட்ராவி

தமிழ் மொழி பெயர்ப்பு

திருமதி கல்யாணி வெங்கடராமன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# பொருளடக்கம்

பகுதி 1: ............................... 1

பகுதி 2: ...............................187

*Sponsored by:*

**YAJNESHWARA FOUNDATION**

T.Nagar, Chennai - 600 017.

பக்கங்கள் : 320

முதல் பதிப்பு - 2015

விலை ரு : 150.00

பதிப்புரிமை:

**நிஜகுணா பவுண்டேஷன்**

ஸ்ரீ சம்புலிங்கக்ஷேத்ரம், சிலுக்கவாடி,

கொள்ளேகால் தாலுகா.

Printed at: *Sankar Printers (P) Ltd.*, Chennai - 600 042.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# வாழ்த்துரை

ஆன்மீக சாத்திரத்திற்கு அடிப்படையாக விளங்கும் வேதாந்தம் மற்றும் சித்தாந்த நூல்களை ஒருமிப்புடன் உணர்ந்துகொண்ட ஒப்பற்ற ஞானியான நிஜகுணஶிவயோகிகள், நிகம, ஆகமங்களைப் பாங்குற கையாண்ட உயர்குருவாகத் திகழ்கிறார். அல்லாமல், ஆறு தரிசனங்களிலே, சாங்கியம் மற்றும் யோக தரிசனங்களைச் சீராக ஒப்பீட்டாய்வு செய்த சிறந்த தத்துவஞானியாகவும் விளங்குகிறார்.

கன்னட மொழியின் ஆறு சாத்திரங்கள் என்றே புகழ் பெற்றுள்ள பரமானுபவபோதை, பரமார்த்த கீதை, அனுபவசாரம், பாரமார்த்த பிரகாசிகை, விவேக சிந்தாமணி மற்றும் கைவல்யபத்ததி என்னும் ஆறு விலைமதிக்கவியலாத நூல்களை, கன்னட மக்கள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன், சாரம் மிக்கதாக, முக்தி அடைவதற்கான வழிமுறைகளைக் கன்னட மொழியில் காவியமயமாக இயற்றியுள்ள கவிச்சக்கரவர்த்தி ஆவார்.

அவர் வாழ்ந்த காலத்திலே அனைவராலும் அறியப்பட்டிருந்த முப்பத்துஇரண்டு ராகங்களில், முக்தி, பரம்பொருளின் உண்மைநிலை என்னும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவற்றைக் குறித்துப் புகழ் பெற்ற கீர்த்தனைகளை, சாத்திரத்தின் கம்பீரம், இலக்கிய அழகு, இசையின் இனிமை என்னும் இம்மூன்றும் மூவிழையாகத் திகழுமாறு கைவல்யபத்ததி என்னும் நூலிலே வழங்கியுள்ளார்.

அது மட்டுமின்றி அவருடைய விவேக சிந்தாமணியில் இசைச்சாத்திரத்தை முதன்முதலில் கன்னடத்தில் அருளிய ஈடு இணையற்ற கர்நாடக இசை வல்லுநராகவும் இலங்குகிறார்.

மேலே கூறப்பட்டுள்ள ஆறு சாத்திரங்கள் மட்டுமின்றி, தமிழ்நாட்டிலே குரு, லிங்க, ஜங்கமர்களுக்கு உடல், உள்ளம், செல்வம் என்னும் இவற்றுடன் உயிரையும் அர்ப்பித்து, பக்தியின் உச்ச நிலையிலே ஒளிர்ந்து கொண்டிருந்த அறுபத்துமூன்று நாயன்மார்களைக் குறித்து ‘‘அரவத்துமூவரு புராதனர த்ரிவிதி’’ என்று புகழ்பெற்றுள்ள த்ரிபதி இலக்கியத்தை (மூன்று வரிப் பாடல்கள்) அளித்த மிகச்சிறந்த பக்திக் கவிஞராகவும் விளங்குகிறார்.

போக்குவரத்துச் சாதனங்களும், சாலை வசதிகளும் சரியாக இல்லாமலிருந்த அக்காலத்தில், எல்லா வகையான சாத்திரங்களைக் குறித்த ஆறாயிரம் ஓலைச் சுவடிகளைச் சேகரித்துப் படித்து, அவற்றின் சாரமனைத்தையும் பிழிந்தெடுத்துக் கன்னடமொழியிலே முதன்முதலிலே வெளிவந்த கலைக்களஞ்சியம் என்று அழைக்கப்படும் விலைமதிக்கவியலாத விவேக சிந்தாமணியை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருளிய ஒப்பற்ற கலைக்களஞ்சியத்தை இயற்றியவராகவும் திகழ்கிறார்.

இத்தகைய மிகச் சிறந்த ஞானம் நிறைந்த மதிப்பும், கௌரவமும் வாய்ந்தவரின் விவேகசிந்தாமணியின் பத்து அத்தியாயங்களில் முதல் அத்தியாயத்தை, தமிழ்நாட்டைச் சார்ந்த ஸ்ரீ சிவபிரகாச சுவாமிகள் 17 ஆம் நூற்றாண்டில் தமிழிலே மொழிபெயர்த்து இருந்ததைப் படித்த, அதிகாலை நேரத்திலே நினைக்கத்தக்கவரான ஸ்ரீ ரமணமகரிஷி அவர்கள் அதை வேதாந்தத்தின் ''ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட்'' என்று கூறினாராம்!

தொடக்க காலத்தில் மிகச் சிறந்த இலக்கியத் தொண்டாற்றிய இந்த ஞானியைக் குறித்து மதிப்பிற்குரிய திருமதி சாந்தலா யட்ராவீ அவர்கள் 'ஜாணர தேவ' என்னும் சுவை மிகுந்த புதினத்தை (நாவலை) எழுதியுள்ளார். அது மக்களின் மனங்களைக் கவர்ந்து, கர்நாடக மாநிலத்திலே மூன்று பதிப்புகள் வெளிவந்துள்ளன.

அந்த விலை மதிக்கவியலாத நூலைக் குறித்துத் தமிழ்நாட்டிலும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நல்ல நோக்கத்துடன் மதிப்பிற்குரிய திருமதி. கல்யாணி வெங்கடராமனிடம் கேட்டுக் கொண்டபொழுது, அவர் அதனை ஏற்று மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மொழிபெயர்ப்பதில் வல்லவரான அவர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்கும், கர்நாடக மாநிலத்தில், சித்ரதுர்கா மாவட்டத்திலுள்ள ஸிரிகெரெ சமஸ்தானத்திற்கும் சுமார் 27 நூல்களை அனைவரும் மெச்சிப் பாராட்டும் விதத்தில் மொழிபெயர்த்து அளித்துள்ளார். இவற்றுடன் யோகக்கலையின் மீது அவருக்கு உள்ள ஈடுபாடும் மெச்சத்தக்கது ஆகும்.

பல வகைப்பட்ட மக்களுக்கு யோகப்பயிற்சி அளித்து, தம் வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்து கொண்டுள்ளார்.

இவ்வனைத்திற்கும் மேலாக, உலகின் தன்னிகரற்ற வீரத் துறவியான சுவாமி விவேகானந்தரின் பூஜிக்கத்தக்க குருவான ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைக் குறித்து விலைமதிக்கவியலாத ''ஸ்ரீராமகிருஷ்ணப் பேரொளி'' என்னும் நூலைத் தமிழ்நாட்டிலே வெளியிட்டு அர்ப்பித்துள்ளார்.

ஞானநெறியிலே ஈடுபாடு உடைய அவருக்கும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் ஒப்பற்ற ஞானியான நிஜகுணர், நீண்ட ஆயுளையும், உடல் நலத்தையும், எல்லா மங்கலங்களையும் அருள வேண்டும் என்று உள்ளம் நிறைந்து வேண்டுகிறோம்.

பத்ரம் சுபம் மங்களம்

- குமார நிஜகுணர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



## உண்மையின் இருப்பிடமாக

ஷிவனின் ஆணையைப் பின்பற்றி நடக்கும், அழகின், எழிலின் எல்லையோ எனத் திகழும் கௌஹுளா மண்டலம்.

ஓம்கார பூபாலன் அதனை ஆண்டு வந்தான்.

காளிபுரம் தலைநகரமாக விளங்கியது.

மகேசுவரி தேவி ஓம்கார பூபாலனிற்குத் தகுந்த மனைவியாக விளங்கினாள்.

கணவனும்-மனைவியும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து, அறிந்து கொண்டு, மிகுந்த அன்புடன் பொருத்தமுற இன்பவாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தனர். இருப்பினும் குழந்தைகள் இல்லை என்னும் குறையானது அவர்களுடைய நிறைந்த வாழ்விற்கு ஒரு சாபமாக விளங்கி பரிதவிக்கும் நிலை ஏற்பட்டது. குலவிளக்கை விளங்கவைக்கவியலாத தன்னுடைய இயலாமைக்கு, எத்தகைய உதவியுமற்ற நிலையில் மௌனமாகக் கண்ணீர் சிந்துவாள். அந்தக் கண்ணீரின் ஒவ்வொரு துளியிலும் குழந்தை வேண்டும் என்னும் ஆசையே நிறைந்து, நிலத்திலே உருண்டு, வெப்பக் காற்று பட்டு, ஆவியாக மேலே சென்று, எங்கோ சென்றடைந்து, யாருக்கோ உரைத்துத் தொலைவிலுள்ள எதிர்காலத்தைக் குறித்த விளக்கத்தை வெட்டவெளியிலே எழுதும் ஆயத்தத்துடன் கூடிய செயலானது கவனத்திற்கு வராமல் இருப்பினும், அரசி மகேசுவரியின் மனத்துயரைக் குறைத்து, நிம்மதியை அளிப்பதற்கு உதவுவதாக அமைந்திருந்தது.

மலடி என்னும் நஞ்சுச் சொல்லிற்கு அஞ்சி, அஞ்சி, இளமைக்கும், முதுமைக்கும் இடைப்பட்ட நடுத்தரவயதின் நண்பகலிலேயே, அந்திமாலையின் இருளானது சூழ்ந்து கொண்டதைப் போல அவள் நிலை விளங்கியது. வசந்தத்தின் மகிமையானது கணநேரத்தைப் போலக் கடந்து, பின்பனிக்காலமே அவள் வாழ்க்கையிலே எப்பொழுதும் நிலைத்து நின்று விடுமோ!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஒரே ஒரு தடவை, கேவலம் ஒரு தடவை மட்டும் இந்தப் பருவச்சக்கரமானது நிற்கக் கூடாதா? வசந்தம் மீண்டும் வாராதோ? குழந்தையின் குயிலைப் போன்ற இனிய குரலைக் கேட்கவியலாதா? மகேசுவரியின் இத்தகைய எண்ணங்களுக்கு முடிவும், தொடக்கமும் இருக்கவில்லை. வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதைப் போல, மனிதர்களின் மறைமுகமான பேச்சுக்கள் அவளுடைய இதயத்தைச் சுக்குநூறாகச் செய்தன. காளிபுரத்திலிருந்து சிறிது தொலைவிலுள்ள, அவளுடைய குலதெய்வம் வீற்றிருக்கும் சம்புலிங்கமலை மட்டும் அவள் மீண்டும் சமாதானத்தையும், அமைதியையும் அடைந்து நல்ல நிலைக்கு வருவதற்கு, நிம்மதியை அளிக்கவல்ல ஒரே ஒரு இடமாக விளங்கியது.

நீண்ட நாட்களுக்குப்பிறகு அரசி மகேசுவரியின் வயதான பாட்டி கௌராம்பிகை வருகை தந்தது அவளுக்கு நல்ல நிம்மதியை அளித்தது. கௌராம்பிகை மூன்று வேளைகளிலும் தவறாமல் பூஜை செய்வார். விரதம், (நோன்பு) முறையாகச் செய்யும் வழிபாடுகள் போன்றவற்றில் மிகுந்த சிரத்தை உடையவர். வாழ்க்கையிலே மகிழ்ச்சி-துயரம், இன்பம்-துன்பம், மரணம்-வேதனைகளைக் கண்டு அனுபவித்தவர். செல்வம் நிறைந்து, இன்பம் நிறைந்திருந்த வாழ்க்கையிலே குழந்தைகள் இல்லாத குறையால் துயரப்பட்டுக் கொண்டிருந்த பேத்தியின் துன்பத்தை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. அன்று காலையிலே, ஶிவபூஜை முடிந்த பிறகு கௌராம்பிகை பேத்தியை அழைத்து,

''குழந்தாய், உன்னுடைய கையைக் காட்டு'' என்று மகேசுவரியின் கைரேகையை ஊன்றிப் பார்த்து விட்டு,

''உன்னுடைய கையில் என்ன அற்புதம் உள்ளது என்று நீ அறிவாயா?'' என்று கேட்டார்.

''அது என்ன அற்புதம் பாட்டி?''

''கண்டிப்பாக உனக்குக் குழந்தைப் பாக்கியம் உள்ளது''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''என்ன பாட்டி, நீ கேலி செய்யவில்லைதானே. ஒரு குறிபார்ப்பவள் கூட அப்படித்தான் கூறினாள்''.

''ஆனால்...''

''ஆனால் அது நடக்கவில்லை என்று தானே நீ கூறுகிறாய். நான் குறிபார்ப்பவளாக இல்லாவிட்டாலும், இந்தக் காலை நேரத்திலே செய்த ஶிவ பூஜையின் பயனாகத் தோன்றியதைக் கூறுகிறேன் மகளே''.

''அது என்னவென்று சொல் பாட்டி.''

''ஒரே ஒரு குழந்தைப்பாக்கியம் உள்ளது. ஆனால்...''

''ஆனால் என்ன பாட்டி?''

''அந்தப்பயனை அடைவதற்கு நீ தவம் செய்ய வேண்டும் குழந்தாய். அதன் பயன் காமஜன் அல்ல, ஞானஜன்.''

''நீ என்ன சொல்கிறாய் என்று புரியவில்லை பாட்டி.''

''அதாவது காமஜன் என்றால் பிறப்பும், இறப்பும் இருக்கும். ஞானஜன் என்றால் பிறப்பையும், இறப்பையும் துகைத்து நிற்பது ஆகும்.''

''போ பாட்டி. இன்னும் புதிராகப் பேசுகிறாய். விளக்கமாகக் கூறுவாய்''

''இதையெல்லாம் விளக்கமாகக் கூறி ஶிவ மகிமையைக் குறைத்துக் காணக் கூடாது. இப்பொழுது நான் சொல்வதை மட்டும் செய்வாய்''

''அதையாவது சொல்லு பாட்டி''

''108 நாட்களுக்குச் சம்புலிங்க விரதத்தை மேற்கொள்ள வேண்டும். அதைச் செய்யும் வழிமுறைகள், எப்படி வழிபட வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுக்கிறேன்'' என்று கௌராம்பிகை கூறியபொழுது அரசி மகேசுவரிக்கு தொலைவிலே ஆசையானது மின்னி, விருப்பமானது படம் எடுத்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அன்றே கௌராம்பிகை சொல்லிக் கொடுத்த முறையிலிருந்து சிறிதளவு கூட பிறழாமல் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டிய சம்புலிங்க விரதத்தைத் தொடங்கினாள். அதனை நல்லபடி நிறைவேற்றினாள்.

ஆனால் - பயன்?

அதே ஈடேறாத ஆசையின் கசப்பான பயன்.

அரசர் ஓம்காரபிரபுவிற்கு எல்லாம் தெரிந்து இருந்தும் மௌனமாக இருந்தார். தம்முடைய எந்த விதமான சொற்களும் அன்பு மனைவியின் துயரத்தை அகற்றுவதில் நல்ல பயனை அளிக்காது என்று எண்ணினார். தங்களுக்கு நிம்மதியை, அமைதியை அளிக்கவல்ல இடமான சம்புலிங்க மலைக்கு தம்பதியினர் சென்றனர். சம்புலிங்கத்திற்கு, நெடுங்காலமாக நடைபெற்றுக் கொண்டு வரும் முறைப்படி அபிஷேகம், அர்ச்சனை, மற்றும் சோடச பூஜைகளுடன் மங்கல ஆரத்தியும் நடைபெற்று, பிரசாதமும் வழங்கப்பட்டு விட்டது. பூஜைகள் முடிந்த பிறகும் சம்புலிங்கத்தையே கூர்ந்து பார்த்தவாறு அமர்ந்திருந்த மனைவியின் தனிமைக்குப் பங்கம் ஏற்படாதவகையில் மலைச்சரிவிலே இருந்த கூடாரத்தில் ஓய்வு கொள்வதற்காக ஓம்காரபிரபு நடந்து சென்றார்.

பாட்டி கூறியவாறு 108 நாட்களுக்கு நோன்பை மேற்கொண்டு நிறைவேற்றியும் குழந்தை பிறப்பதற்கான எத்தகைய அறிகுறியும் தென்படாமலிருந்ததால் அவள் ஆழமான நிராசை என்னும் மடுவிலே மூழ்கி, திசை தெரியாமல், கை சோர்ந்து, ஆற்றல் குறைந்தவளாக அமர்ந்து விட்டாள். குழந்தை இல்லாத குறையின் வேதனை ஊற்றால் இதயம் நிறைந்து, துயரம் பொங்கிப் பாய்ந்து விக்கி விக்கி அழுதாள். தாய்மை என்னும் மேருமலையிலே மகிழ்ச்சியுடன் சுற்றித்திரியும் அந்தப் பேறு, அற்ப உயிரினங்களான குருவி, காகம், பூனை, நாய் போன்றவற்றிற்கும் இருக்கவியலும் என்றால் எனக்கு ஏன் இல்லை? நான் என்ன தவறு செய்தேன்? இந்த அரசபரம்பரையானது என்னால் வற்றிவிடும் போலாகிவிட்டதே. சம்புலிங்கமே, உனக்குச் சிறிதளவும் கருணை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



இல்லை. நோன்பு, பூஜைகள் போன்றவை பொய்த்துப் போவதில்லை என்று கூறுகின்றனர். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் பொய்த்து விட்டன. சம்புலிங்கமே, உன்னைச் சுற்றிச் சூழ்ந்துள்ள கவிந்துள்ள மேல் பகுதி மட்டுமே கல் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன். ஆனால் உன் இதயமும் கல் என்பது இப்பொழுது தெரிந்துவிட்டது. சம்புலிங்கமே, நீ அருந்திய விஷமானது வெறும் கழுத்திலே மட்டும் எஞ்சி நின்றது. ஆனால் "இந்த மலடி என்னும் நஞ்சுச் சொல்லின் விஷத்தை நான் இறக்கும் வரையில் ஒவ்வொரு வாயாகக் குடித்தவாறு, ஒவ்வொரு நிமிடத்தையும் துயரத்துடன் கழிக்குமாறு செய்து விட்டாய். நீ எத்தகைய கொடூரமானவன்" என்று அரசி மகேசுவரி தேவி மனத்துக்குள்ளேயே பேசியவாறு மௌனமாக அழுதவாறு அமர்ந்திருந்தாள். சிறிது நேரத்தில் பணிப்பெண் ஒருத்தி அங்கு வந்து. "மஹாராணி, யாரோ ஒரு தவசி இந்தப் பக்கமாக வருகை தந்து கொண்டிருக்கிறார். தங்களிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்காக நான் இங்கு வந்தேன்."

"தவசியா"? என்று கேட்டுக் கொண்டே எழுந்து வந்த பொழுது அந்தத் தவசி கோயிலிற்கு வந்தார். வரிசையாக இருந்த மணிகளை முழங்கினரோ, முழங்கியதோ, அந்த மணியின் நாதமானது, கருவறையில் எதிரொலித்து, சராசரத்தை எழுப்பும் திவ்வியமான நாதமாக, வெட்டவெளியெங்கிலும் பரவியது. ஒரு கணத்திலே, மின்னலைப் போல வரிசையாக இருந்த விளக்குகளை ஏற்றினர். தூய்மையான அந்த ஒளியானது வெண்மையான ஒளி வரிசையாக அகத்தையும் புறத்தையும் விளங்கச் செய்தது. வெற்றிடமாகத் துலங்கிய அந்த இடத்திலே முழுமையைக் கண்கூடாக உணர்வது போல அந்தத் தவசி நிறைந்து விளங்கினார். நிறைந்த அவருடைய கரங்களிலிருந்து விண்ணிலிருந்து வீழ்வதைப் போல மலர்களின் திரளானது சம்புலிங்கத்தின் உச்சிப்பகுதியின் மீது மழையெனப் பொழிந்தது. எல்லா நறுமணங்களையும் மீறி, சந்தனத்தின் நறுமணமானது மிதந்து மிதந்து வந்தது. ஆஜானுபாகுவான தோற்றம் கொண்ட அவர் சம்புலிங்கத்தின் எதிரில் நெடுஞ்ஜாண்கிடையாக விழுந்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



வணங்கி, கைகளைக் கூப்பிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு நின்றார். சில கணங்கள் அகன்றன. அதன்பிறகு அந்தச் சிறப்பான பூஜையை முடித்துக்கொண்டு புறஉலக நினைவிற்கு வந்த அந்த யோகி தன்னுடைய பையிலே கையை விட்டுப் பெரிய விபூதி உருண்டையைத் திருக்கரத்தில் கவனமாகப் பிடித்துக் கொண்டு சென்று, சம்புலிங்கத்தின் எதிரிலே வைத்து, மீண்டும் அதை எடுத்துக் கொண்டு இந்தப் பக்கமாக வந்தார். அரசி மகேசுவரி இவ்வனைத்தையும் கனவிலே கண்டு கொண்டு இருப்பவளைப் போல வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனத்திலிருந்து ஆசைகள் அனைத்தும் எப்பொழுதோ நசித்து, அகத்திலும், புறத்திலும் ஶிவபாவமானது தானாகவே மலர்ந்தது.

அரசி மகேசுவரி பக்திப் பெருக்குடன் அந்த யோகியின் திருவடிகளில் வணங்கினாள். அதே நேரத்தில் அரசர் ஓம்காரபூபால பிரபவும் அங்கு வந்தார். அவரும் வணங்கி, கைகூப்பியவாறு நின்றார்.

''மங்கலம் உண்டாகட்டும். நலம் உண்டாகட்டும்'' என்று விண்ணைத் தொடுமளவிற்கு மனம் நிறைந்து வாழ்த்திய மங்கல வாழ்த்தானது தம்பதியரை மகிழ்வித்தது, மற்றும் மயிர்க்கூச் செடுக்குமாறு செய்தது. ஓம்காரபூபால பிரபு மிகவும் பணிவுடன் ''ஸ்வாமி, சிறிது தொலைவிலுள்ள எங்களுடைய அரண்மனைக்கு நீங்கள் வருகை புரிந்து எங்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பை அளிக்க வேண்டும்'' என்று கூறினார்.

''மற்றொரு சமயத்தில் நிச்சயமாக வருகிறேன். அரசனே, வேறு ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டி உள்ளது. இந்தத் திருநீற்றை (விபூதியை) வைப்பதற்கு இடமின்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.'' ''நீங்கள் ஆணையிட்டால், தாங்கள் மீண்டும் வரும் வரையில் அது எங்களிடம் பத்திரமாக இருக்கும் ஸ்வாமி. தாங்கள் ஒப்புக் கொண்டால்...'' என்று அரசி மகேசுவரி கூறினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



''அம்மா, உன்னை விடத் தகுதியான இடம் எங்கு உள்ளது? இது சாதாரணமான விபூதி இல்லை. மகாவிபூதி, விசுவவிபூதி. இதை உன்னுடைய கர்ப்பத்திலே பாதுகாப்பதை போலப் பத்திர... பார்த்துக்கொள். இதோ இனிமேல் எனக்குக் கவலை இ... என்று கையை முன்னால் நீட்டியபொழுது தன் முன்பு நி... மகாராணியின் மடியிலே அந்த விபூதியைக் கவனத்துடன் வைத்து அந்த யோகி எதையோ சங்கல்பித்துக் கொண்டார்.

''மகளே, விரதம், வழிபாடுகள் போன்றவை என்றுமே பொய்த்துப் போகாது. நீ செய்த சம்புலிங்க விரதமானது சம்புலிங்கனை இங்கே இழுத்துக் கொண்டு வந்துள்ளது.'' (எதையும் எதிர் பார்க்காத நட்பு, (அன்பு) உவமிக்கவியலாத ஆனந்தக்கடல், பணிவு போன்ற உண்மையான இயல்புகளை உள்ளே கொண்டுள்ள மகாவிபூதி.) ஞான விளக்கை உள்ளே கொண்டுள்ள இந்த விபூதிக்கு, உங்கள் குலத்தை மட்டுமின்றி மனிதகுலத்தையே முன்னேற்றவல்ல ஆற்றல் உள்ளது. பத்திரம், மிகவும் பத்திரம். நான் வந்து கேட்கும் வரையில் உங்களிடமே இருக்கட்டும். எனக்குத் தேவை என்றால் கொண்டு செல்கிறேன். அதுவரைக்கும் இந்த விபூதியை நாள்தோறும் பூஜித்து தரித்துக் கொள்வாய். இதில் உன்னுடைய ஆசையின் தோற்றமானது இருப்பதைப் போல உலகின் முன்னேற்றமும் அடங்கியுள்ளது. நான் வருகிறேன். ''ஓம் சம்புலிங்கம்'', ''ஓம் சம்புலிங்கம்'' என்று கூறியவாறு, தன்னை வணங்கிய மகேசுவரியின் தலையின் மீது தன் கையை வைத்து ஆசீர்வதித்து விட்டுக் கிளம்பிச் சென்று விட்டார். அற்புதமான, சிறந்த, ஒளிக்கதிரானது அவரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று நீண்ட காலத்திற்குப்பிறகு உணர்ந்ததைப் போல, அந்தத் தம்பதியினர் விவரிக்கவியலாத மகிழ்ச்சியுடன் உடலும் மனமும் பூரிப்படைய, சம்புலிங்கனை வலம் வந்து, முதலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததைப் போலத் தம்மைச் சேர்ந்தவர்கள் மற்றும் அன்பான சேவகர்களுடன் அரண்மனையை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஓம்காரபிரபுவின் அரண்மனையில் ஜங்கமதாசோகம் (புண்ணியம் பெறுவதற்காக ஜங்கமர்களுக்கு அன்னதானமளிப்பது) மற்றும் அரச குருவாக விளங்கும் ஸ்ரீ சன்ன சதாஸிவ ஸ்வாமிகளின் தத்துவ விளக்கம் சார்ந்த சொற்பொழிவு என்னுமிவை பரம்பரையாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தன. வாழ்க்கையிலே அனுபவிக்கத் தக்கவை தேவைக்கு அதிகமாகவே அவர்களிடம் இருப்பினும் அவர்களுடைய வயதும் மற்றும் பக்குவப்பட்ட மனமும் அந்தப் பக்கமாகச் செல்லாமல், தர்மம் சார்ந்த, தத்துவம் சார்ந்த விஷயங்களிலேயே மூழ்குவதற்கு முயற்சி செய்யுமாறு சிந்திக்குமாறு செய்தன. ஒளியை ஒளிரச் செய்வதற்கு முன்பு ஒளியைப் பெறும் விளக்கைப் போல மகேசுவரியின் அறிவானது ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டு வந்தது. அந்தத் தூய்மையான, முழுமையாக மலர்ந்த இரு உயிர்களின் இணைவிலே அறிவு, உண்மையான அறிவு முளைவிட்டது. குழந்தை வேண்டும் என்னும் தீவிரமான ஆசையே பூஜையாகி வழிபாடாகி, பக்தியாகித் தவமாகி அறிவு பூர்வமான தியானமாக நிலை கொண்டபிறகு அந்த இதயங்களில் நிறைவானது தானாகவே நிறைந்தது.

அரசி மகேசுவரி 108 நாட்கள் சம்புலிங்க விரதத்தை மேற்கொண்டது, சம்புலிங்க மலையில் ஒரு யோகியைச் தரிசித்தது, விபூதியைக் கொடுத்தது, அதைக் கொடுப்பதற்கு முன்பு அவர் கூறிய பொருள் பொதிந்த சொற்கள் என்னும் இவ்வனைத்துமே அவர் அறிந்த விஷயங்கள்தான். இப்பொழுது மகேசுவரி கருத்தரித்திருந்தாள். அந்த நேரத்தில் அவளுக்கு இருந்த தத்துவஞானத்தை அறிய வேண்டும் என்னும் தீவிரமான விருப்பம், மந்திரங்களை விரும்பிக் கூறும் சாத்துவீகமான வாழ்க்கை, எப்பொழுதும் ஜங்கமர்களுக்கு அன்னதானம் அளிப்பது, பூஜை-தான-தர்மங்களைச் செய்வதில் ஈடுபாடு என்னும் இந்த ஒவ்வொன்றும் ஸ்ரீசன்ன சதாஸிவ யோகிகளுக்கு ஏதோ புதையலைக் குறித்த அடையாளத்தைக் கொடுக்கும் சாதனங்களைப் போன்றே தென்பட்டன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அந்த அரச தம்பதியினருக்கு ஆண் குழந்தையே பிறந்தது. எல்லா இலட்சணங்களும் அந்தக் குழந்தையிடம் நிறைந்து இருந்ததைப் போன்றே நிறைநிலவைப் போல தம்பதிகளின் மனத்தையும் அரண்மனையையும் விளங்கவைத்தது. அவர்கள் முழுமையான நிறைவை அடைந்திருந்தனர். ஆன்மீக உணர்வுடன் உலகியல் உணர்வையும் பெற்றிருந்த ஸ்ரீ சன்னசதாஸிவ யோகிகள், குழந்தைக்கு ''நிஜகுண''(ன்) என்னும் பெயரைச் சூட்டினார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆண்டுகள் ஒரு கணத்தைப் போல உருண்டோடி விட்டன. ஆனால் ஸிவலீலையின் விசித்திரத்தை அறிந்தவர் யார்? குழந்தைச் செல்வத்தைப் பெற்று, நிறைந்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்த மகேசுவரிக்குக் கணவனின் அகால மரணத்தால் வாழ்க்கையே வெறுமையாயிற்று.

''இன்பத்தின் பின்னே துன்பம்,
துன்பத்தின் பின்னே மீண்டும் இன்பம்,
பகலின் பின்னே இரவு,
இரவு அகன்றால் மீண்டும் பகல்
இது படைப்பின் நியமம்.''

ஒவ்வொருவருக்கும் இந்த முறையானது கண்டிப்பாக வரும்.

அரசிக்குக் கண்ணைக்கட்டிக் காட்டிலே விட்டதைப் போல, வழி எதுவும் புலப்படாமல், அடுத்து என்ன செய்வது என்றும் தெரியாமல், எதுவும் புலப்படாமல் இருந்தது. அவளுக்கு அரசகுருவான ஸ்ரீ சன்ன சதாஸிவ ஸ்வாமிகள் மற்றும் தந்தைக்கு நிகரானவரான முதலமைச்சர் ஸ்ரீ ஸிவகுமாரர் என்னும் இருவரின் கனிவான பேச்சுக்கள் ஓரளவிற்காவது அமைதியை அளித்தன. வேண்டிய அளவிற்குச் செல்வம் இருப்பினும் கணவரை மரணம் தழுவிக் கொண்டது. அவளுடைய வாழ்க்கையானது வீழ்ச்சியின் இறுதிக்கட்டத்தை அடைந்தது.

கணவரின் மரணத்தால் பரிதவித்துக் கொண்டிருந்த மகேசுவரியைப் பகலும் இரவும் இரு கவலைகள் வாட்டிக் கொண்டிருந்தன. முதலாவது - பத்து வயதுச் சிறுவனைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கருத்திலே கொண்டு அரசாட்சியைக் கவனித்துக் கொள்வது, இரண்டாவது என்ன என்றால் அரசகுமாரன் நிஜகுணனிற்குக் கல்வியுடன் நல்ல இயல்புகள், பண்பாடு போன்றவற்றைச் சொல்லிக் கொடுத்து, குருவானவர் கூறும் முறைகளில் அவனை வளர்ப்பதும் ஆகும். இந்த இரண்டிலுமே அவளுக்கு அரசகுரு மற்றும் முதலமைச்சரின் முழுமையான உதவியானது கண்டிப்பாகக் கிடைக்கும் என்பது வேறு விஷயமாகும்.

மகன் நிஜகுணனின் இளம் இதயத்தின் மீது தந்தையின் மரணமானது ஆழமான விளைவை ஏற்படுத்தி அந்தச் சின்னஞ்சிறு இதயத்தின் மீது அடி விழுந்து, துயரங்கள், கவலைகள் என்னும் இவற்றுடன் பிறப்பு-இறப்பு என்னும் இவற்றை குறித்து எண்ணுவதற்கும் வழி வகுத்தது. அதன் பயனாகக் கண்ணிலே தென்படும் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் பகுத்து, அலசி, ஆராய்ந்து, வகுத்து, திறனாய்ந்து பார்க்கும் விவேகமானது அவனிடம் வேர் ஊன்றியது. விவேக உணர்வானது வளர்ந்தது.

தந்தையின் மரணம் ஏற்படுத்திய மின்னல் அதிர்ச்சியால் அவன் துயரத்துடன் அழுது கொண்டு உட்காராமல், துயரத்தின் மூல காரணத்தைப் பற்றி ஆலோசித்து, அழியாத பொருள் என்று ஒன்று உள்ளதா? இருந்தால் எங்குள்ளது? எப்படி? என்று அடிப்படையான ஆதாரத்தைக் குறித்து அறிந்து கொள்ளும் விருப்பம் அவனுக்கு இருந்தது. அன்னையும், குருவும் அவனுடைய கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்தச் சிறுவனின் இளம் இதயத்தில் அரச குடும்பத்தின் இன்பங்களைத் துய்க்கும் உணர்வு முளைவிடும் முன்பே, அதற்கு எதிரான வைராக்கிய உணர்வானது ஏற்பட்டது. தோற்றம் கொள்ளும் அனைத்துமே அழியும் தன்மை உடையது என்னும் நிலைத்த உண்மையைக் குறித்த ஈரத்தை உறிஞ்சிக் கொண்டு பெரிய மரமாக வளரும் செயலானது நடைபெற்றுக் கொண்டிருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


விளக்கின் ஒளியை விரும்பி, ஈர்க்கப்பட்ட விட்டில்பூச்சியானது அதைச்சுற்றிச் சுற்றி ஆடி சுட்டுக் கொண்டு இறப்பதைக் கண்ட நிஜகுணன் வியப்படைவான். அரசகுருவான ஸ்ரீ சன்னசதாஸிவர் அவர்களிடம் இந்த விஷயத்தைப் பற்றிக் கூறி "எதற்காக இப்படிச் செய்கிறது?" என்று கேட்பான்.

"குழந்தாய், கண்களின் ஈர்ப்பிற்குப் பலியாகி அது தன்னுடைய மரணத்தைத் தானே ஏற்படுத்திக் கொள்கிறது. அதைப் போன்றே, மீனானது நாக்கின் சபலத்திற்கு மருளாகி, தூண்டிலிலே கட்டப்பட்டுள்ள புழுவை விழுங்குவதற்குச் சென்று, தூண்டிலிலே வாயானது சிக்கிக் கொள்ள அழிகிறது. அதைப்போன்றே வண்டானது நறுமணத்தை நுகர்வதற்குச் சென்றும் (மூக்கு), மான் செவிக்கு ஏற்படும் இன்பத்திற்காகவும், யானையானது தொடு உணர்வால் ஏற்படும் இன்பத்திற்கும்' பலியாகித் தங்களுடைய அழிவைத் தாமே தேடிக் கொள்கின்றன. இவ்வனைத்தும் ஒவ்வொரு புலனின் சபலத்திற்கு ஆட்பட்டு துன்புறுகின்றன.

ஆனால்... "ஆனால் என்ன குரு அவர்களே, அதாவது அவை அனைத்தும் ஒவ்வொரு புலனின் சபலத்திற்கு ஆட்பட்டு அழிகின்றன. மனிதனிடம் ஐம்புலன்களும் ஒன்று சேர்ந்து இருக்கும்பொழுது அவனால் கெட்டுப்போகாமல் இருக்க இயலுமா குழந்தாய்! உனக்கு இது மிகவும் சூட்சுமமான விஷயம் ஆகும்."

"இத்தகைய சூட்சுமமான விஷயமே எனக்குத் தேவையாக உள்ளது. எனக்குக் காகம், குருவி அல்லது அரசன்-அரசியைக் குறித்த கதை வேண்டாம். அதாவது மனிதன் கெட்டுப்போகாமல் இருக்க வியலுமா குரு அவர்களே? கெட்டுத்தான் ஆக வேண்டுமா?"

"அப்படி இல்லை குழந்தாய். எது அழியும் தன்மை உடையது? எது அழியாத தன்மை உடையது? என்றும் இது நன்மையைப் பயக்கும், இது நன்மையைப் பயக்காது. இதனால் கேடு ஏற்படும், இப்பொழுது இன்பமாகத் தென்படுவது மற்றொரு கணத்தில் துயரத்தை அளிக்கவல்லது என்று யார் உணர்ந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கொள்கிறார்களோ, அவர்கள் இந்த வலையிலே விழ மாட்டார்கள். உலகியல் சார்ந்த விஷயங்களே அப்படித்தான். நஞ்சு கலந்த சுவையான உணவைப் போன்றது.''

குமாரனின் மனத்தின் ஆழத்தில் அந்தச் சொற்கள் இறங்கின. மற்ற பாடங்கள், விளக்கங்கள் என்னும் அனைத்தும் இயந்திரகதியில் நடைபெற்றன. அன்று முழுவதும் அவனுடைய மனத்தைக் கிருமியைப் போல அந்தச் சொற்களே குடைந்து கொண்டிருந்தன.

''உலகியல் சார்ந்த விஷயங்களே அப்படித்தான். நஞ்சு கலந்த சுவையான உணவைப் போன்றது.''

அன்று பயிற்றுவிக்கப்பட்ட பாடங்களை எழுதி முடித்துவிட்டு, வேறு ஒரு புத்தகத்தில் குரு அவர்களுடன் சேர்ந்து தான் விவாதித்த விஷயத்தைக் குறித்து எழுதிவிட்டு, இறுதியில் உலகியல் சார்ந்த விஷயங்கள் எல்லாம் நஞ்சு கலந்த சுவையான உணவைப் போன்றது என்பதையும் கொட்டை எழுத்துக்களில் எழுதி வைத்துக் கொண்டதை யாராவது பார்த்திருந்தால் அதற்கு அவன் எவ்வளவு முதன்மையான இடத்தைக் கொடுத்திருந்தான் என்பது தெரிய வந்து இருக்கும்.

பொதுவான பாடங்கள், விளக்கங்கள் போன்றவற்றை மிகவும் வேகமாகப் புரிந்து கொள்வதைப்போல ஆன்மீகம் குறித்த விஷயங்களைக் கூட அதே போன்று விரைவாகப் புரிந்து கொள்ளும் அவனுடைய அறிவுக் கூர்மையைக் கண்டு ஸ்ரீ சன்னசதாஸிவ யோகிகளே வியப்படைவார். அவனிடம் குடி கொண்டிருந்த உலகியல் சார்ந்த விஷயங்களுடன் ஆன்மீகமும் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு இருப்பதைக் கண்டு அவர் அவனுடைய எதிர்காலத்தையும் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்.

பத்துப் பன்னிரெண்டு வயது சிறுவர்களிடம் இயல்பாக இருக்கக்கூடிய அலைபாயும் மனம், துடுக்குத்தனம், ஆசை போன்ற எதுவுமே நிஜகுணனிடம் இருக்கவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



இந்த இளவரசனிடம் அரசகம்பீரம், அத்துடன் உறுதியான உள்ளம், விவேகம், பணிவு என்னும் இவை அவனுடைய உருவம் முழுவதுமாக நிறைந்து, வளர்ந்து, வயதுக்கு மீறிய திறமையால் அவன் குடிமக்களின் அன்பிற்கு உரியவனாகத் திகழ்ந்தான்.

அரச குடும்பத்தின் குலதெய்வமான சம்புலிங்கத்திடம் சிறுவன் நிஜகுணனுக்கு மிகவும் பக்தி இருந்தது. அன்னை மகேசுவரி சம்புலிங்கம் எதிரிலே கையைக் கூப்பியவாறு பாடும் பிரார்த்தனைப்பாடலை அவனும் பாடுவான் எனினும் சிலசமயங்களில் அவன் அவனுடைய எண்ணங்கள், கருத்துக்களை நிறைத்து அவன் எழுதிய கவிதைகளையும் பாடுவது உண்டு.

''காணலாகாதோ இறைவனே | காணலாகாதோ ||
உடனே உன்மூன்றாம் கண்ணை |
  மிக நன்மையைச் செய்து எனை ||
என்மோகம் எனை ஒளிரவிடாது |
  மோகத்திரளெனும் வனத்தைச்சுட்டு ||
விபூதி தரித்த ருத்திரனே உன் |
  நெற்றிக் கண்ணால் காணலாகாதோ || (1)
களங்க அறியாமையையகற்றி |
  என் இதயத்தாமரை மகிழாது ||
மலர்ந்தமேலான உன் வடிவொடு |
  வலசூரியவிழியால் காணலாகாதோ || (2)
குழந்தாய்... நிஜகுணா ஓ | நிஜகுணா
  புலன்களெனும் சகோரம் நிறைவெய்த |
பேரின்பக்கடல் பொங்க எனை ||
  வரமீயும் சம்புலிங்கனே |
இடது சந்திர விழியால் காணலாகாதோ || (3)

''காணலாகாதோ இறைவனே'' - தழுதழுக்கும் ஒலியைக்கேட்டு, அங்கு சென்று சிறுவனின் கண்களிலிருந்து தாரை தாரையாக இறங்கும் கண்ணீர்த்துளிகளைத் துடைத்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



''குழந்தாய், இது என்ன அழுது கொண்டிருக்கிறாய்? எங்கே கண்ணைத்திற'' என்று அரசி மகேசுவரிதேவி தன் குழந்தையின் உடலைத் தடவிக் கொடுத்து, நெஞ்சுடன் அணைத்துக் கொண்டாள்.

சம்புலிங்க மலைக்கு வந்து, சம்புலிங்கத்தின் எதிரில் பத்மாசனத்தில் கண்களை மூடிக்கொண்டு வெளியுலகத்தைக் குறித்த அறிவு எதுவுமின்றி நிஜகுணன் அமர்ந்திருந்தான். தன் மன தளத்தை அகழ்ந்து கொண்டு, சொல்லியவாறு பாடிப்பாடி அழுது கொண்டிருக்கும் தன் மகனைக் கண்டு மகேசுவரியின் இதயம் வேதனை அடைந்தது. மனம் துடித்தது. ''உன் மூன்று கண்களாலும் என்னைப் பார்'' என்று துயரத்துடன் கண்ணீர் பெருக்கியவாறு இருந்த தன் மகனின், இளமை இயல்புகளுக்கு அப்பாற்பட்டிருந்த அந்தப் பிரார்த்தனையால் வியப்படைந்தாள். மகனைத் தழுவி முத்தமிட்டு மகிழ்ந்தாள்.

அன்னையைத் தழுவிய நிஜகுணன், அவள் நெஞ்சிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு மீண்டும் தழு தழுத்தான்.

''இது என்ன நிஜூ, இப்படி பக்திப் பரவசப்படலாமா? அழ வேறு செய்கிறாய். நீ இப்படியே அழுது கொண்டு இரு, அவன் உன்னைப் பார்க்கவே மாட்டான்.''

''ஏன் அம்மா, நான் இந்த அளவிற்குத் தீனமாக வேண்டிக்கொண்டு அழுதாலும், அவன் பார்க்காத அளவிற்குக் கொடுமையானவனா?''

அவனுடைய சிவந்த அதரங்களில் முத்தமிட்டு, ''ஏன் குழந்தாய், உன்னைப் போன்ற ரத்தினத்தைப் பார்க்காமலிருக்கும் பேறு அற்றவன் அவன் அல்லன். அந்த நற்பேறை அவன் இழக்க மாட்டான். அவன் கொடூரமானவன் அல்லன். கருணைக்கடலாக விளங்குபவன் கண்டிப்பாகப் பார்ப்பான். நிஜகுணனே, நீ மலைக்கு எப்பொழுது வந்தாய்? நான் உன்னை எவ்வளவு தேடினேன் தெரியுமா? என்று மகேசுவரி மகனின் கவனத்தை வேறு பக்கமாகத் திருப்பினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



''அன்னையே, நான் சூரியன் உதிப்பதற்கு முன்பே வந்து விட்டேன். உன்னிடம் கூற வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.''

''குழந்தாய், அந்தப்பாடலை யார் சொல்லிக் கொடுத்தார்?''

''அன்னையே, அது பயிற்றுவிக்கப்பட்டதில்லை, அனுபவத்தால் உணரப்பட்டது.''

''அதாவது அதை நீயே இயற்றிப் பாடினாயா?''

''நானே எழுதினேனோ, பாடினேனோ இது எதுவுமே எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய வேண்டுதலைச் சம்புவின் முன்பு வைத்தேன்.''

தன்னுடைய மகனின் இனிய பேச்சைக் கேட்டு. மகேசுவரிதேவி அவன் மீது முத்தமழை பொழிந்தாள்.''

''என் தங்கமே, என் நிஜகுணனே, உன்னைப் போன்ற புத்திர ரத்தினத்தைப் பெற்ற நானே பெறு பெற்றவள்'' என்று கூறினாள்.

''ஏன் அம்மா, உனக்கு அவ்வளவு மகிழ்ச்சியா?'' இது நிஜகுணனின் கள்ளங்கபடமற்ற கேள்வி.

அருகிலேயே நின்றுகொண்டு, தாய்-மகனுக்கு இடையில் நடைபெற்ற சுவையான உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அர்ச்சகர் மௌனமாக இருக்காமல் ஏன் இளவரசே, என்னைப் போன்றவனுக்கே மகிழ்ச்சி பொங்கித் ததும்பும் பொழுது அம்மா அவர்களுக்கு ஏற்படாமல் இருக்குமா? நிஜகுணன் தன் மலர்ந்த விழிகளால் அர்ச்சகரைப் பார்த்தவாறு வியப்புடன்,

''இலிங்கய்யனே, உனக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதா?'' என்று வினவினான்.

''ஆம் இளவரசே, மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.''

''ஆ இது என்ன, என் பாடலைக் கேட்டு அம்மாவிற்கும் அர்ச்சகருக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. ஆனால் எனக்கு ஏற்படவில்லையே! அந்தச் சம்புலிங்கம் கண் திறந்து என்னைப் பார்க்கவில்லை என்று எனக்கு வருத்தம் ஏற்பட்டால் இவர்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



மகிழ்ச்சியாமே! ஒரே ஒரு பாடலால் இரு வகையான கருத்துக்கள். ‘‘ஒருவருக்குத் துன்பம், மற்றவருக்கு இன்பம்’’ என்று தனக்குள்ளேயே தானே பேசிக்கொண்டு நெடுமூச்செறிந்தான் நிஜகுணன்.

அரசி மகேசுவரிக்கும், நிஜகுணனிற்கும் தீர்த்தப் பிரசாதத்தைக் கொடுத்தவாறு அர்ச்சகர்,

‘‘அம்மா, நம்முடைய இளவரசருக்கு சம்புலிங்கத்தின் மீது மிகுந்த பக்தி உள்ளது. இளவரசர் பெரிய மகானாகத் திகழ்வார்’’ என்று நிஜகுணனின் எதிர்காலத்தைக் குறித்துக் கூறுபவரைப் போலக் கூறினார்.

மகேசுவரிதேவி தீர்த்தப் பிரசாதங்களைக் கண்ணிலே ஒற்றிக்கொண்டு பக்தியுடன் ஏற்றுக் கொண்டாள். சம்புலிங்கத்தை வலம் வந்து நந்தியை வணங்கிப் புறப்படுவதற்கு ஆயத்தமான தாயின் கழுத்திலே தன்னுடைய கைகளை மாலையைப் போலச் சுற்றியவாறு, ‘‘அம்மா, இங்கு சம்புலிங்கனின் அருகிலேயே இருந்து விடலாம். எனக்கு அரண்மனை அத்தனை உற்சாகத்தை அளிக்கவில்லை’’ என்று நிஜகுணன் கூறினான். அதைக் கேட்டு மகேசுவரி அஞ்சி மகனின் உதடுகளின் மீது தன் விரலை வைத்து,

‘‘மகனே, அப்படி எல்லாம் கூறக் கூடாது இளவரசன் இப்படி இருந்தால், அரக்கர்கள் தூக்கிக் கொண்டு சென்று விடுவார்கள். இங்கு துறவிகள் பற்றற்றவர்கள், யோகிகள், சாதுக்கள், முனிவர்கள் மட்டுமே இருப்பார்கள் தெரிந்ததா?’’ என்று கூறினாள். மகனிடம் வெடித்துவெளிப்பட்ட எண்ணம் அங்கேயே அடங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவ்விதம் கூறினாள்.

‘‘அப்படியென்றால் துறவிகளை அரக்கர்கள் ஏன் தூக்கிக் கொண்டு செல்வது இல்லை?

‘‘அவர்களிடம் அரக்கர்களை அழிக்கும் சக்தி உள்ளது. எனவே அவர்கள் துறவிகளைப் பிடித்துக் கொண்டு, தூக்கிச் செல்லும் சிக்கலிற்குள் நுழைவதே இல்லை.’’ ‘‘அரக்கர்களை அழிக்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஆற்றலானது எப்படி அந்தத் துறவிகளிடம் உள்ளது? ஏன் என்னிடம் இல்லை''? ''துறவிகள், கடவுளைப் பக்தியுடன் பூஜை செய்து அருளைப் பெற்று அந்த ஆற்றலைப் பெற்றுள்ளனர். நீ சிறுவன் தானே'' என்று அவனைச் சமாதானப்படுத்தியவாறு கூறினாள்.

''நான் சிறுவன் என்பதால் ஆற்றல் இல்லையா? அப்படியென்றால் அந்தத் துறவிகளின் பிள்ளைகளும் சிறுவர்களாகத்தானே இருப்பார்கள்? அவர்களுக்கும் அந்த ஆற்றலானது கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்படி அந்த ஆற்றல் இல்லையென்றால் அவர்கள் எப்படி இருப்பார்கள்?'' நிஜகுணனின் இந்த வாதத்திற்குப் பதில் அளிக்க வியலாத மகேசுவரி உரக்கச் சிரித்தவாறு ''போதும் விடு அப்பா. நீ மிகவும் திறமைசாலி. அப்பொழுதே அவ்வளவு பெரிய பெரிய சொற்களைப் போட்டுப் பாடினாய். இப்பொழுது துறவிகளுக்குக் குழந்தைகள் உள்ளனர் என்று கூறுகிறாய். கிளம்பு, கிளம்பு, நேரமாகி விட்டது போகலாம்'' என்று அவள் கிளம்புவதற்கு ஆயத்தமாக நின்றாள். நிஜகுணன் தன் தாயையே கூர்ந்து பார்த்துக் கொண்டு ''அன்னையே, எனக்கு அத்தகைய ஆற்றல் இல்லை என்று நீ சிரிக்கிறாய் அல்லவா, பார்த்துக் கொண்டே இரு. நானும் துறவியாகி, யோகியாகி, இதே மலையின் மீது இருந்து கொண்டு அரக்கர்களைக் கொன்றே தீருவேன்'' என்று நிஜகுணன் உணர்வுப் பெருக்குடன் கூறினான். மகேசுவரி சற்றே சினத்துடன்,

''நிஜகுணா, நீ அதிகமாகப் பேசுகிறாய், யோகிகளைப் போல அரக்கர்களை அழிப்பானாம். அரசனாகி மக்களைக் காப்பாற்றுவதை விட்டுவிட்டு, பகைவர்களை அழிப்பதை விட்டுவிட்டு அரக்கர்களை அழிப்பானாம்'' என்று அவனுடைய தன்மதிப்பைக் காயப்படுத்தும் வகையில் கூறினாள்.

''ஓ அப்படியா அன்னையே! நீ சொல்வதும் உண்மைதான். அப்படியானால் குடிமக்களை முதலில் நன்கு பரிபாலித்துவிட்டு அதன் பிறகு யோகியாவேன். ஒப்புக் கொள்கிறாயா? என்று சற்றே சினத்துடன் இருந்த அன்னையைச் சமாதானப்படுத்தும் வகையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கூறினான். மகேசுவரி மகனுடைய பேச்சால் உள்ளுக்குள்ளே குழப்பமடைந்து, பெரு மூச்சு விட்டவாறு ''சம்புலிங்கனின் விருப்பம் எப்படி உள்ளதோ அப்படியே ஆகட்டும். நிஜகுணனே, கிளம்பு, போகலாம்'' என்று மகனுடைய கையைப் பிடித்துக் கொண்டு சிவிகையில் வந்து அமர்ந்து கொண்டாள். அதனைச் சுமந்து சென்றவர்கள் மலையிலிருந்து இறங்கி அரண்மனையை நோக்கி நடந்தனர்.

சிவிகையில் அமர்ந்திருந்த நிஜகுணன் சம்புலிங்க மலையையே பார்த்துக் கொண்டிருந்தான். மகேசுவரிதேவி, ஒரு முறை முன்னால் அமர்ந்து கொண்டிருந்த மகனையும் மற்றொரு முறை தொலைவிலே சம்புலிங்க மலையையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்முன்பாக ஏதோ ஒரு காட்சியானது கனவைப் போலத் தோன்றி மறைந்தது.

அந்த அரச குடும்பத்திற்குச் சம்புலிங்கமலை மீது அன்பும்-பக்தியும் பரம்பரையாகவே வளர்ந்து எஞ்சி நிற்கிறது. சம்புலிங்கமானது அரச பரம்பரை வழிபடும் தெய்வமாக விளங்கியது. நிஜகுணனிடம் அது அதிகமாகவே தென்பட்டது. அவன் விருப்பப்படியே, எப்பொழுதாவது அரசபரிவாரமானது மலையருகிலே முகாமிட்டுத் தங்குவதும் உண்டு. அப்படி ஒருமுறை வந்த பொழுது, தாயிடம் கூறாமல் அவன் ஒருவனாகவே அங்கு சென்று விட்டான்.

சூரியோதயம் ஆகிக் கொண்டிருக்கிறது. இளம் சூரியனின் பொன்வண்ணக் கதிர்கள் சம்புலிங்க மலையின் மீது சிதறிப் பலவகை வண்ணங்களுடன், எழிலாகப் புதியதொரு களையுடன் பொன்வண்ணத் திரையால் போர்த்தப்பட்டு இருப்பதைப் போலத் தென்படுகிறது. அந்தப் பொன்மலையின் அழகுத் தெய்வமான சம்புலிங்கமே, இங்கு சிறியமூர்த்தியாக நிஜகுணனின் வடிவத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறானோ என்று ஒருகணம் மகேசுவரிக்கு அச்சம் ஏற்பட்டது.

நிஜகுணனின் அந்தப் பொலிவு, கம்பீரம், ஞானம், என்னும் இவற்றைக் கண்டு நேற்றைய முன்தினம் நடந்த நிகழ்ச்சியானது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அவள் கண்முன்பு தோன்றி மறைந்தது. பூஜை அறையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த பொழுது நிஜகுணன் பின்னாலிருந்து வந்து, முதுகின் மீது சாய்ந்தவாறு "அன்னையே, ஶிவனுக்கு மூன்று கண்களாமே. அப்படியா அம்மா. இன்று குரு அவர்கள் அவ்வாறு கூறினார்."

"ஆம் மகனே"

"பின் எனக்கும், உனக்கும் ஏன் இரு கண்களே உள்ளன?"

"ஆம், நாம் மனிதர்கள். அவர் கடவுள், அதனால் தான்."

"சரி அம்மா, அவர் மூன்று கண்களால் பார்க்கும் பொழுது எத்தனை ஆழகாக இருக்கும் அல்லவா?"

"ஆம் மகனே"

"பிறகு, பிறகு ... அங்குபார். சம்புலிங்கம் இரு கண்களால் மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறான். மூன்றாம் கண்ணால் பார்ப்பது இல்லையே, ஏன்?"

"அவன் பக்தனுக்கு அருளும் பொழுது மட்டுமே அந்த மூன்றாம் கண்ணால் பார்க்கிறான். தங்கமே, அது ஞானக்கண். நீயும் பக்தியுடன் வேண்டிக்கொண்டால் அவன் அந்தக் கண்ணால் அன்புடன் பார்ப்பான். நீ ஞானியாகுமாறு அருள் செய்வான்" என்று அன்னை அவனுடைய கேள்விக்குப் பதிலளித்தாள். அன்னையின் சொற்களின் மீது அசைக்கவியலாத நம்பிக்கை வைத்திருந்த அவன், வெளிச்சம் வருவதற்கு முன்பாகவே மலைக்கு வந்து தன்னுடைய மனத்தளத்தை அகழ்ந்து கொண்டவாறு பாடிக் கொண்டிருந்தான். நெற்றியிலுள்ள அக்கினிக்கண்ணால், வலப்பக்கத்திலுள்ள சூரியனின் கண்ணால், இடப்பக்கத்திலுள்ள சந்திரனின் கண்ணால் பார்க்க வேண்டுமாம். அப்பா... எத்தகைய பரவசம்! எத்தகைய சொற்கள்! இச்சிறுவனிடம் உதித்த இந்தக்கவிதையானது வியப்பையே ஏற்படுத்துகிறது!

மேலே விவரிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சியைக் குறித்த நினைவிலிருந்து மீண்டு வந்த மகேசுவரிதேவி, ஆழமாகச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



சிந்தித்தவாறு அமர்ந்திருந்த மகனைப் பார்த்து ''ஏன் குழந்தாய்! என்ன ஆழமாகச் சிந்தித்தவாறு அமர்ந்துள்ளாய்?'' என்று கேட்டாள்.

''நிஜகுணன் உடனடியாகத் தாய் இருந்த பக்கத்தைப் பார்த்தவாறு ''நீயும் எதைப் பற்றியோ ஆழமாகச் சிந்தித்தவாறு அமர்ந்து இருக்கிறாய். எனவே நானும் அதைப் போன்றே அமர்ந்து விட்டேன்'' என்று கூறி கலகலவென சிரித்தான்.

''குறும்புக்காரனே, அப்படி எல்லாம் மலைக்குத் தனியாக வரவேண்டாம், தெரிந்ததா?'' என்று மகனுக்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கும் பொழுதே அவர்கள் முகாமிட்டிருந்த பகுதியில் சிவிகையைக் கீழே இறக்கினர். அவர்கள் இருவரும் சிவிகையிலிருந்து இறங்கும் பொழுது சுற்றிலும் இருந்த பணியாற்றுப் ஊழியர்கள் மரியாதையின் பொருட்டுத் தலை வணங்கினர்.

அவர்கள் அனைவரின் வந்தனைகளை ஏற்றுக்கொண்டே, ஒருவருடன் ஒருவர் கைகளைப் பிடித்தவாறு கிளம்பிய அரசி-இளவரசனைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்கள், அந்த ''அரிய'' காட்சியை இழப்பதற்கு மனமில்லாதவர்களாகப் பார்த்துக் கொண்டே இருந்தனர். நாள்தோறும் காணும் காட்சியாக இருப்பினும், அவர்களுக்கு எத்தனை முறை பார்த்தாலும் நிறைவு ஏற்படுவதில்லை.

ஆம், அவன் பார்த்துக்கொண்டே நின்று கொண்டு இருந்தான். பூஜையறையில் கௌரியைப் போலக் கைகளைக் கூப்பிக்கொண்டு, அமர்ந்தவாறு பாடிக் கொண்டிருந்த தாய்-தேவியைப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான். பதினைந்து வயதிற்கு அவன் மிகவும் தைரியமானவனாக விளங்கினான். கள்ளங்கபடமற்றதன்மை, தெய்வீகம் என்னும் இவை அவனுடைய முகமண்டலத்தில் நடனமாடிக் கொண்டிருந்தன. அவனுடைய வட்ட விழிகள் இரண்டும் விண்மீன்களைப் போலப் பளபளவென ஒளிர்ந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கொண்டிருந்தன. அரசனுக்கு உரிய உடையை அணிந்து கொண்டிருந்த அவன், ஒரு கையை இடுப்பின் மீது வைத்துக் கொண்டு மற்றொரு கையால் கம்பத்தைப் பிடித்துக்கொண்டு சற்றே குனிந்தவாறு நின்று கொண்டிருந்தான். அவன் இடுப்பிலே சிறிய கட்டாரி ஒன்று மிகவும் அழகுடன் பெருமையுடன் தொங்கியவாறு ஆடிக் கொண்டிருந்தது. அவன் அன்றைய போர்க்கலைப் பயிற்சியை முடித்துக் கொண்டு வந்த பொழுதே பூஜையறையில் அவனுடைய அன்னை பாடிக்கொண்டிருப்பது கேட்டது. மெதுவாகப் பின்னால் வந்து நின்றவாறு அன்னையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் பக்திப் பரவசத்துடன் நிர்வாண ஷட்கத்தை உணர்ச்சிப் பெருக்குடன் பாடிக் கொண்டு இருந்தாள்.

''மனோபுத்யகங்கார சித்தானி நாஹம் ।
நசச்ரோத்ர ஜிஹ்வே ந ச க்ராண நேத்ரே ॥

ந சாஸங்கதம் நைவ முக்திர்நமேய ।
சச்சிதானந்த ரூபச்ஶிவோஹம் ஶிவோஹம் ॥

அதைப்பாடி முடித்து, நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி, சம்புலிங்கனின் திருவடிகளைக் கண்ணிலே ஒற்றிக் கொண்டு கிளம்புவதற்காகத் திரும்பினாள் மகேசுவரிதேவி. அங்கு புன்னகை பூத்தவாறு நின்று கொண்டிருந்த மகனைக் கண்டு வியப்பு ஏற்பட்டது.

''எப்பொழுது வருகை புரிந்து, கள்ளனைப்போல நின்று கொண்டிருக்கிறாய் மகனே'', என்று தலையைக் கோதியவாறு கேட்டாள்.

''இப்பொழுதுதான் வந்தேன் அன்னையே, அது என்ன அம்மா, அவ்வளவு பரவசத்துடன் இருக்கிறாய்?'' என்று நிஜகுணன் குறும்பாகப் புன்னகைத்தவாறு கேட்டான்.

''குறும்புக்காரனே, நேற்றைய முன்தினம் நான் உன்னிடம் கேட்டேன் என்று இன்று நீ என்னிடம் கேட்கிறாயா?'' என்று மகேசுவரி மகனின் கன்னத்தில் மென்மையாகத் தட்டினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''அது இருக்கட்டும் அன்னையே. இப்பொழுது நான் சொல்வதைப் போலச் செய்கிறாயா?''

''பிரபுவினுடையது என்ன ஆணையோ?''

''அன்னையே, இப்பொழுது என்னைத் தொடுவாய்.'' அன்னை அவனுடைய முதுகின் மீது கையை வைத்துத் ''தொட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றாள்.

''போ அம்மா, என்னைத்தொடு என்றால் என் முதுகைத் தொடுகிறாயே. என்னைத் தொடு'' என்று சிரித்துக் கொண்டே நிஜகுணன் கூறினான்.

''அவன் கைகள் இரண்டையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு ''இப்பொழுது தொட்டு விட்டேன் பார்'' என்று தாய் வெற்றிப்பெருமிதத்துடன் கூறினாள்.

''இப்பொழுது கையைத் தொட்டாய். என்னைத் தொடுவாய் அன்னையே.''

அவள் அவனுடைய உதடு, கன்னம், தாடைப்பகுதி மார்பு என்று இவ்விதத்தில் ஒவ்வொன்றாகத் தொட்டாள். அப்பொழுது நிஜகுணன் கலகல என சிரித்துக் கொண்டு.

''அன்னையே, நீ தொட்டது கை, கால், தலை. அவையே நானா அம்மா? இங்கு பார். இந்தக் கையை உன் நிஜகுணன் என்று கூறுவாயா? அல்லது உன் நிஜகுணனைக் கை என்று கூறுவாயா?'' என்று தாய் வியப்பெய்துமாறு கேள்வி கேட்டாள்.

''இது என்னப்பா? மிகவும் சிந்திக்கும் படிச் செய்து விட்டாயே. இதை உனக்கு யார் கூறியது?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''இல்லை அன்னையே. நீ இதைத்தான் இப்பொழுது பாடிக் கொண்டு இருந்தாய். இவ்வளவு விரைவாக மறந்து விட்டாயா? அதை நீ எப்படிப் புரிந்து கொண்டாய்?'' என்று நிஜகுணன் கம்பீரமாகக் கேட்டான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''என்ன, உன்னால் வடமொழி ஸ்லோகங்களின் பொருளை உணர்ந்து கொள்ள இயலுமா? நிஜகுண உண்மையிலேயே நீ என்னை வியப்பில் ஆழ்த்தி உள்ளாய். ஆமாம், நிர்வாண ஷட்கத்தின் பொருள் அதுதான். ஆனால் நீ என்னைத் தொடு என்று கூறிய பொழுது எனக்கு அதன் பொருளே விளங்கவில்லை அப்பா, உண்மையிலேயே நீ என்று தன்னுடைய வியப்பினை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுது பணிப்பெண் ஒருத்தி வந்து அரசகுருவானவர் வருகை தந்திருப்பதாகக் கூறினாள். அரசி, அவரை அழைத்துக் கொண்டு வருமாறு பணிப்பெண்ணிடம் கூறிவிட்டு, இருவரும் விருந்தினர் ஓய்வு கொள்ளும் மாளிகைக்குக் குரு அவர்களைத் தரிசிப்பதற்காகச் சென்றனர்.

குரு அவர்களின் திருவடித்தாமரைகளை வணங்கிவிட்டு அவரை இருக்கையில் அமருமாறு விண்ணப்பித்துக்கொண்டு அவர்களும் இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். அரசியே பேச்சைத் தொடங்கினாள்.

''குரு அவர்களே, நீங்கள் ஆணை இட்டிருந்தால் நாங்களே ஆசிரமத்திற்கு வந்திருப்போம்'' என்று பணிவுடன் கூறினாள்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை தாயே, எனக்குக் குமாரனைப் பார்க்க வேண்டும் என்னும் ஆவலானது அதிகரித்தது. அதனால் நானே வந்து விட்டேன். எல்லாம் நல்லபடி உள்ளதா குமாரா?'' என்று நிஜகுணன் பக்கமாகத் திரும்பிக் கேட்டார்.

''உங்களுடைய அருளால் எல்லாம் நல்லபடியே உள்ளது குரு அவர்களே'' என்று நிஜகுணன் அழகாக மறுமொழி கூறினான்.

''இவனுடைய குறும்புத்தனம் அண்மைக்காலமாக எல்லையை மீறிவிட்டது. அவனுக்குக் கொஞ்சம்'' என்று தயக்கத்துடன் கூறினாள்.

''என்ன! இளவரசன் குறும்புக்காரனாக இருக்கிறானா? நம்ப இயலவில்லையே'' என்று இடையிலேயே குரு அவர்கள் கேட்டார்.

அரசி சிரித்தவாறு, ''நேற்றைய முன்தினம் எழுதிய அந்தப் பாடலைப் பாடுவாய்'' என்று கூறினாள். நிஜகுணன் ஒருமுறை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாயையும், மறுமுறை குரு அவர்களையும் பார்த்தவாறு இருந்தான். குரு அவர்கள் புன்னகைத்தவாறு நிஜகுணனைப் பாடுமாறு உற்சாகப் படுத்தினார். விருந்தினர் மாளிகையில் ஆழ்ந்த மௌனம் சூழ்ந்து கொண்டிருந்தது. நிஜகுணன் உணர்ச்சிப் பரவசத்துடன் கண்களை மூடிக் கொண்டான். பாடுவதற்குத் தூண்டப்பட்டவனைப் போலப் பாடத் தொடங்கினான். அவனுடைய வாயானது சிறியதாக இருப்பினும், அதிலிருந்து வெளிப்பட்ட அப்பாடல் ஆழமானதாக இருந்தது. பெரியவர்களால் கூட அந்த விதத்தில் எழுதுவதற்கு இயலாது. அப்பாடலைக் கேட்டுக் கொண்டே அரசகுருவானவர் ஆனந்தக் கண்ணீர் விடத்தொடங்கினார். பாடல் முடிந்தது. நிஜகுணன் மெதுவாகக் கண்களைத் திறந்தான். அவனுடைய மலர்ந்த வட்ட விழிகளிலிருந்து இரு சிறிய கண்ணீர்த்துளிகள் கன்னத்தின் மீது இறங்கி வந்தன.

அரசகுருவிற்கு அவர் மனத்திலே ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாமல் ''குழந்தாய்! அப்பாடலை எப்படி இயற்றினாய்? அப்பா! எத்தனை பொருள் பொதிந்ததாக உள்ளது! சொற்களின் அழகை என்னென்பேன்! எத்தகைய உணர்ச்சிப் பெருக்கு! இரு கண்களால் பார்த்தது நிறைவினை அளிக்காமல் மூன்று கண்களாலும் பார்க்க வேண்டுமாம்! ஆ! எத்தகைய பக்தி! எத்தகைய வேண்டுதல்! இச்சிறுவனிடமிருந்து அத்தகைய பாடல் வெளிப்பட்டது உண்மையாகவே நம்புவதற்கு இயலாததாக உள்ளது'' என்று கூறி அவனுடைய கண்ணீர்த் துளிகளைத் துடைத்துத் தலையை வருடிக் கொடுத்தார். அப்பொழுது நிஜகுணன் மிகவும் உற்சாகம் அடைந்தவனாக,

''குரு அவர்களே! இன்று பிற்பகலில் மற்றொன்று எழுதி இருக்கிறேன்'' என்றவாறு ஓலைச்சுவடியிலே தானே எழுதி இருந்ததைக் கொண்டுவந்து நாதநாமக்கிரியை என்னும் ராகத்தில் சுருதி, தாளத்துடன் இனிமையாகப் பாடத் தொடங்கினான்.

எண்ணிலா மகிமையுடைய மேலான ஞானிகளின்

இறைவனே ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



மிகு நல்லியல்புள்ள பரம்பரையின்களனே! ஶிவனே,
ஞானிகளின் இறைவனே ||

என்னும் இந்தப் பாடலை மிகவும் உன்னிப்பாகக் கேட்ட குரு அவர்கள்.

"குழந்தாய்! உன்னுடைய கவிதை எழுதும் திறமையானது மிகவும் ஆழமானது. இவ்வளவு இளம்பருவத்திலேயே இத்தகைய அழகிய கவிதையை எழுத வேண்டும் எனின் அது சம்புலிங்கனுடைய அருள் என்றே கூறவேண்டும். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. அதற்காகவே உன்னைப் பார்க்கும் ஆவலானது ஏற்பட்டதோ, என்னவோ நல்லது. இக்கவிதைகளை இப்படியே எழுதி வைப்பாய். மேன்மேலும் எனக்கு அவற்றைப் பாடிக்காட்டி மகிழ்ச்சி அடையச் செய்வாய்" என்று கூறினார்.

"குரு அவர்களே, எனக்குத் தெரியாமலேயே அவனுக்கு வடமொழிப் பயிற்சியையும் அளித்துள்ளீர் அல்லவா?" என்று தாய் கூறினாள்.

"அன்னையே, நான் அவனுக்கு வடமொழியைப் பயிற்றுவித்தேனா? அரசியார் என்னைக் கேலி செய்ய வில்லைதானே?" என்று கூறினார்.

இவ்விஷயத்தைக் குறித்த பேச்சு எழுந்தவுடன் நிஜகுணன் குரு அவர்களை வணங்கிவிட்டு அங்கிருந்து வெளியிலே ஓடிச் சென்று விட்டான்.

"உங்களுடன் கேலிப் பேச்சா? இதோ, மாலை வேளையிலே ஶிவபூஜையை முடித்துவிட்டு, அந்த நிர்வாண ஷட்கத்தைக் குறித்து எண்ணிக் கொண்டிருந்தேன். அவன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து கொண்டிருந்தவன், அப்படியே இங்கு வந்து நின்று கொண்டிருந்தான். அதன்பிறகு நான் பாடி முடித்துவிட்டு வெளியிலே வந்த பொழுது அவனைப் பார்த்தேன். அப்பொழுது நிஜகுணன், "அன்னையே என்னைத் தொடுவாய்" என்று கூறினான், நான் அவனுடைய மார்பு, கால், முதுகு, கை என்னும் இவற்றைத் தொட்டேன். அவன் சிரிக்கத் தொடங்கினான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''என்ன அம்மா, என்னைத் தொடு என்றால் கை-கால்களைத் தொடுகிறாயே'' என்று என்னைக் கேள்வி கேட்டுவிட்டு ''இல்லை அம்மா, நீ இப்பொழுது இதைத்தான் பாடினாய்'' என்று கூறினான். அந்த வடமொழி ஸ்லோகம் அவனுக்கு எப்படிப் புரிந்தது என்னும் வியப்பு எனக்கு ஏற்பட்டது என்று அரசி சுருக்கமாகக் குரு அவர்களிடம் கூறினாள். அதைக் கேட்ட அரசகுருவானவர் சிறிது நேரத்திற்கு சும்மா இருந்துவிட்டு,

''அன்னையே! அந்தச் சிறுவனின் லீலை எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுடைய கவிதையைக் கேட்ட உடனேயே என்வாயானது கட்டப்பட்டு விட்டது. அவனுக்கு வடமொழி எப்படிப் புரிகிறதோ, அது அந்த இறைவனுக்கேத் தெரியும். ''என்னைத் தொடுவாய்'' என்று உங்களிடம் கேட்க வேண்டும் எனின், அது, இப்பொழுது உள்ள இந்தப்பிறவியில் பயிற்றுவிக்கப் பட்டது இல்லை. சென்ற பிறவியில் பயிற்றுவித்தது, பரிசீலனை செய்தது போன்றவையே இந்தச் சிறிய வயதிலே வெளிப்பட்டுக் கொண்டுள்ளன. அன்னையே! இப்பொழுது அவனுக்கு எதற்கும் தடை சொல்ல வேண்டாம், அவன் செய்வதைச் செய்யட்டும். அது ஒரு விலைமதிப்பற்ற ரத்தினம். அதை நாம் திறமையுடன் காப்பாற்றி, பத்திரமாக வைக்க வேண்டும்'' என்றும் மிகவும் ஆழமாகச் சிந்தித்தவாறு அமர்ந்து கொண்டிருந்தார். அதன் பிறகு, ''அன்னையே! நான் இப்பொழுது சென்றுவிட்டு வருகிறேன்.'' நாளை மாலை வேளையில் அவனை மடத்திற்கு அனுப்பி வையுங்கள். அவன் எங்கு சென்றானோ? இருக்கட்டும். நான் கிளம்பட்டுமா தாயே? என்றவாறு எழுந்து கிளம்புவதற்கு ஆயத்தமானார்.

அரசி மகேசுவரிதேவி அவரைப் பக்தி-சிரத்தையுடன் வணங்கி விடைகொடுத்தாள்.

ஒருமான் குட்டியைப் பிடித்துக் கொண்டு மடத்தின் அருகிலிருந்த நந்தவனத்தின் உள்ளே நுழைந்தான் நிஜகுணன். அங்கேயே அசோகமரத்தின் கீழே கல்லால் செய்யப்பட்ட இருக்கையின் மீது அரசகுருவானவர் நிஜகுணனின் வரவை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


எதிர்பார்த்தவாறு அமர்ந்திருந்தார். நிஜகுணனைப் பார்த்தவுடனேயே அவருடைய முகமானது மலர்ந்தது. அந்த மான்குட்டியை கீழே வைத்து விட்டு அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய நிஜகுணனை வாய் நிறைந்து வாழ்த்தி, அவனுடைய தலையைக் கோதியவாறு தம் அருகிலேயே அமர்த்திக் கொண்டார். அந்த மான்குட்டியானது அங்கிருந்து அகல விரும்பாமல், தன்னுடைய இளம் நண்பனைவிட்டுப் பிரிய இயலாமல் அவன் பாதங்களையே நக்கியவாறு நின்று கொண்டிருந்தது. அதைத் தொடையின் மீது படுக்கவைத்து, மெதுவாகத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான் நிஜகுணன். அந்த மான்குட்டி, அது ஏதோ மோகினி-வித்தைக்கு ஆட்பட்டதைப் போலக் கண்களை மூடியவாறு உறக்கத்திற்கு ஆட்பட்டது.

‘‘என்ன குழந்தாய், கத்தி சுழற்றும் சாதனைப் பயிற்சி எப்படி நடைபெற்றது?’’ என்று அவர் கேட்டார்.

‘‘உண்மையைக் கூற வேண்டும் எனின் எனக்குப் போர்ப்பயிற்சியைக் குறித்த பாடங்களே பிடிக்கவில்லை. அன்னை கட்டாயப்படுத்துவதால், அதற்குக் கட்டுப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறேன்.’’

‘‘அப்படிக் கூறினால் எப்படி நிஜகுணனே? வருங்காலப் பேரரசனாக வரவிருக்கும் உன்னிடமிருந்து இத்தகைய சொற்கள் வரலாமா? போர்க்கலையை அறியாமலிருந்தால் பகைவர்களுடன் எப்படிப் போரிடுவாய்!’’

‘‘எந்தப் பேரரசன்? எந்தப் பகைவன்? எனக்குப் பகைவர்களே இல்லை. இருந்தாலும் நான் என்றுமே போர் புரிய மாட்டேன்.’’

‘‘இது என்ன? இது சத்திரியக் குலத்திற்கும் வீரர்களுக்கும் பொருத்தமான பேச்சா?’’

‘‘உலகியல் வாழ்வை மேற்கொண்டு இருப்பவர்களுக்கு நீங்கள் கூறும் சொற்கள் சரியானதாக இருக்கக்கூடும். ஆனால், ஆன்மீகம் யாருக்கு வாழ்க்கை நெறியாக உள்ளதோ, அத்தகைய என்னைப் போன்றவர்களுக்கு இது பொருந்துவதில்லை. முற்றிலும் பொருந்துவதில்லை.’’

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


‘‘அது இருக்கட்டும் குழந்தாய்’’ இவ்வளவு பெரிய பெரிய பேச்சுக்களைப் பேசுவதற்கு உனக்கு யார் கற்றுக் கொடுத்தனர்? எப்படி மற்றும் என்று கற்றுக் கொண்டாய்?’’

‘‘வழிபடும் கடவுளின் திருவருள், குருவின் அருள் மனத்தின் அருள் மற்றும் சாத்திரங்களின் அருள் என்னும் இந்த நான்கு அருள்களால் அனைத்தையுமே அடையவியலும். குரு அவர்களே, இந்தக் கூற்று உண்மையா பொய்யா என்று நீங்கள்தான் கூற வேண்டும்.’’

‘‘உண்மை, உண்மை நிஜகுணனே, உன்னுடைய பேச்சிற்கு, உன் ஞானத்திற்கு வேறு ஏதாவது ஈடாக இயலுமா?’’ என்று அரசகுருவான சன்ன சதாஶிவ தேசிகேந்திர ஸ்வாமிகள் தமக்குள்ளேயே பேசிக்கொண்டு மௌனமானார். நிஜகுணனே முதலில் பேசத் தொடங்கினான்.

‘‘குரு அவர்களே! நேற்று இரவு பிருஹதாரண்யக உபநிஷதத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு கதை வருகிறது. அதை உங்களுக்குக் கூறட்டுமா?’’

‘‘சொல் நிஜகுணனே. அவசியம் சொல், அந்த மான் குட்டியை இப்பொழுது கீழே இறக்கிவிட்டுவிடு. உன்னுடைய அழகிய, மென்மையான கால்கள் தளர்வடைந்திருக்கும்’’ என்று ஸ்ரீகுரு அவர்கள் தம்முடைய கருத்தை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கும் பொழுதே நிஜகுணன் ‘‘குரு அவர்களே, என்னுடைய கால்களை விட இந்த அழகிய மான்குட்டியின் கால்கள் இன்னும் மென்மையானவை. அதைவிட அதனுடைய உறக்கமானது அழகானதாக உள்ளது. எனவே அதை எழுப்ப வேண்டாம். இப்பொழுது கதையைக் கேட்கிறீர்களா?’’ என்று கூறியவாறு தன்னுடைய குருவிற்கு அழகாகக் கதை கூறத் தொடங்கினான். அரசகுருவானவர் அவருடைய மனத்தில் ‘‘குழந்தாய்,’’ உன்னுடைய இந்த மென்மையான, அழகிய சொற்கள் அந்த மான்குட்டியின் உறக்கத்தைக் காட்டிலும் அழகானவையாக உள்ளன’’ என்று நினைத்துக் கொண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



''ஒரு மலையின் பக்கத்தில் காடு ஒன்று இருந்தது. அங்கு சூலுற்றிருந்த ஒரு பெண் சிங்கமானது வாழ்ந்து வந்தது. அதே பகுதியில் நிலவொளியைப் போலத் தெளிந்த நீரினை உடைய ஒரு நதியானது ஓடிக் கொண்டிருந்தது. மலையிலே புல்லை மேயும் ஆடுகள் அந்த நதிநீரைக் குடிப்பதற்காக நாள்தோறும் அங்கு வந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் அந்தப் பெண் சிங்கமானது நீரை அருந்திவிட்டு, ஒரு செடியின் கீழ் ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்தது. அப்பொழுது அதற்குப் பிரசவ வேதனையானது தொடங்கியதால் மிக மிகத் துடித்துக் கொண்டிருந்தது. இறுதியில் ஒரு சிறிய குட்டியை ஈன்று விட்டு மாண்டுவிட்டது. குட்டியானது அப்பொழுதுதான் உலகத்தையே பார்த்தது. எல்லாமே புதியதாகத் தென்பட்டன. அறிமுகமற்று விளங்கின. அதன் அருகிலிருந்த அதன் தாயின் அறிமுகமும் அதற்கு இல்லை. அது எதுவும் செய்யாமல் நிலத்தின் மீது படுத்துக் கொண்டிருந்தது. அருகிலிருந்த, அந்த ஆடுகளின் தலைவன் அனாதையாக இருந்த குட்டியை எடுத்துக் கொண்டு, வீட்டிற்குக் கொண்டு வந்து ஆடுகள் இருந்த தொழுவத்திலேயே விட்டுவிட்டான். இவ்வாறாக நாட்கள் அகன்றன. அந்தக் குட்டியும் ஆடுகளுடன் புல், இலை, கிழங்குகளைத் தின்பது மற்றும் காட்டிலிருந்து ஏதாவது ஒரு விலங்கு வந்தால் உடனடியாக ஓடிப்போவது என்பன போன்றவற்றைச் செய்து கொண்டிருந்தது. இந்த விதத்திலிருந்த அந்தக் குட்டியின் நடவடிக்கைகளைக் கண்டு, அதே காட்டிலிருந்த ஒரு சிங்கத்திற்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது.

ஒரு நாள் அந்தச் சிங்கக் குட்டியானது தனியாக மேய்ந்து கொண்டிருக்கும் சமயத்திற்காகக் காத்திருந்து அந்தச் சிங்கம் அதனருகில் சென்றது. குட்டியானது மிகவும் பயந்து வேகமாக ஓடத் தொடங்கியது. இது போன்று நான்கைந்து தடவைகள் நடைபெற்றும் அது சிங்கத்திடம் சிக்கவில்லை. ஒரு நாள் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து அதைப்பிடித்துவிட்டது. அப்பொழுது அந்தக்குட்டி,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''சிங்க ராஜாவே, தயவு செய்து என்னை உயிருடன் விட்டுவிடு, உன்னுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு எங்காவது புல்லைத் தின்று கொண்டு உயிர் வாழ்வேன்'' என்று மிகவும் தீனமாக வேண்டிக் கொண்டது. அப்பொழுது சிங்கமானது சிரித்துக் கொண்டே, ''நீ யார்?'' என்று கேட்டதற்கு அந்தக் குட்டியானது ''நான் ஆட்டுக்குட்டி'' என்று இயல்பாகவே பதில் அளித்தது. அப்பொழுது சிங்கம் அந்தக்குட்டியை ஒரு கிணற்றின் அருகிலே அழைத்துக் கொண்டு சென்று அதில் எட்டிப்பார்க்க வைத்து. ''அதோ அங்கே பார். அங்கு என்ன தெரிகிறது?'' என்று கேட்டது. குட்டியானது எட்டிப்பார்த்து ''உன்னுடைய பிரதிபிம்பம் தான் தெரிகிறது'' என்று இயல்பாகவே கூறியது. அதன்பிறகு அந்தக் குட்டியைக் கிணற்றிலே எட்டிப்பார்க்குமாறு கூறி'' இப்பொழுது பார், நீ எப்படித் தென்படுகிறாய்? என்று சிங்கம் கேலிச்சிரிப்புடன் கூடிய முகத்துடன் குட்டியைப் பார்த்த பொழுது அதற்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. அதுவும் சிங்கத்தைப் போன்றே இருந்தது. ''ஆ! இது என்ன? நானும் உன்னைப்போன்றே தென்படுகிறேனே சிங்கராஜனே'' என்று கூறிய குட்டியிடம் சிங்கமானது, ''ஏய் சின்னக்குட்டியே! நீ புதிதாகச் சிங்கக் குட்டியாக ஆகவில்லை. நீ முதலிலிருந்தே சிங்கக்குட்டியாகவே இருக்கிறாய். ஆனால் நீ ஆடுகளுடன் இருந்த மருளால், அஞ்ஞானத்தால், உன்னைக் குறித்த அறிவு உனக்கு இல்லாததால்'' நான் ஆட்டுக்குட்டி'', ''நான் ஆட்டுக்குட்டி'' என்றே நீ நம்பிக் கொண்டிருந்தாய். உண்மை என்ன என்றால் நீ அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் சிங்கக்குட்டிதான்'' என்று உரக்க கர்ஜித்தது. அதைக்கேட்டு குட்டியும் மகிழ்ச்சியுடன் கர்ஜனை செய்தது மற்றும் சிங்கத்துடன் அதுவும் காட்டினுள்ளே நுழைந்து விட்டது.'' இப்படி பிருஹதாரண்யக உபநிஷதத்தில் ஒரு கதை வருகிறது. அதைப்படித்ததும் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. மறந்து போய் இருந்தது நினைவிற்கு வந்த அனுபவமாகி, இன்று நாள் முழுவதும் நான் அந்த மகிழ்ச்சியிலேயே இருக்கிறேன். இந்தக்கதை நன்றாக உள்ளது. அல்லவா குரு அவர்களே'' என்று நிஜகுணன் கூறினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அப்பொழுது அவனுடைய கண், மூக்கு, வாய், கன்னம் என்று எல்லா உறுப்புக்களும் அந்த அனுபவத்தின் நினைவால் மகிழ்ச்சியிலேயே செதுக்கிச் செய்ததைப் போல ஒளிர்ந்து கொண்டிருந்தன. அதை உணர்ந்து கொண்ட அரசகுருவானவர்,

''அது நன்றாக இருப்பதால்தான் உனக்குப் பிடித்துள்ளது. நல்லது. அந்தக் கதையின் மூலம் நீ என்ன அறிந்து கொண்டாய்?'' கூறுவாய் என்று கேள்வி கேட்டார்.

''அந்தக் கதையிலிருந்து என்னை நானே அறிந்து கொண்டேன். நான் என்றுமே அந்த ஆட்டுக்குட்டி இல்லை. நான் என்றென்றும் அந்தச் சிங்கக் குட்டியாகவே இருக்கிறேன்'' என்று உணர்ச்சிப் பரவசத்துடன் நிஜகுணன் கூறினான். அப்பொழுது தொடையின் மீது படுத்துக் கொண்டிருந்த மான்குட்டி அஞ்சி நடுங்கியது. நிஜகுணன் அதைப் பார்த்துவிட்டு ''பாருங்கள் குரு அவர்களே, இந்த மான்குட்டிகூட என்னைக் கண்டு அஞ்சி, நடுங்கி விழுந்து விட்டது'' என்று கூறினான். அரசகுருவானவர் சிரித்துக் கொண்டே ''நீ சிங்கக்குட்டி அல்லவா, பாவம், அந்த மான்குட்டி அஞ்சாமல் என்ன செய்யும்? நீ உபநிஷதங்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் அளவிற்கு வடமொழியில் புலமை பெற்று விளங்குகிறாய். உனக்கு வடமொழியில் பயிற்சி எப்படி ஏற்பட்டது?'' என்று மகிழ்ச்சி, வியப்புடன் கூடிய மனத்துடன் கேட்டார்.

''அன்று உங்களிடமிருந்து வடமொழியின் மூல எழுத்துக்களையும் நெடுங்கணக்கு எழுத்துக்களையும் கற்றுக் கொள்ளவில்லையா? அதிலிருந்தே நான் வடமொழியை மெதுவாகப்படிக்கக் கற்றுக் கொண்டேன். அதுவே பயிற்சியாக ஆயிற்று. படித்துக் கொண்டு இருந்த அளவிற்கு அறிந்து கொள்ளவும் இயன்றது.

''பலே, இழை கிடைத்தால் துணியையே நெய்துவிடும் உற்சாகம் நிறைந்தவன் நீ. மிகவும் திறமைசாலியாகிவிட்டாய். கிளம்புவாய் இருட்டிவிட்டது. பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு அரண்மனைக்குச் செல்வாய். நீ இங்கு சிவிகையில் வந்தாயா?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



எப்படி வந்தாய்? என்னும் கேள்வியானது குரு அவர்களின் முகத்தாமரையிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டு இருந்த பொழுதே "சிவிகை எங்கு உள்ளது குரு அவர்களே?" நான் என் ஆத்மாராமனின் மீது ஏறிக் கொண்டு வந்திருக்கிறேன் என்று உடனடியாகப் பதிலளித்தான்.

"அதாவது..."

"அதாவது ஆத்மாராமன் என்னும் என்னுடைய வெள்ளைக் குதிரை இல்லையா? அதன் மீது ஏறிக் கொண்டு வந்தேன்."

"ஓ அப்படியா! குதிரைக்குக் கூட எத்தகைய பெயரைச் சூட்டியுள்ளாய் நிஜகுணனே!" என்று அரச குருவானவர் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார். அவர் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, தன்னுடன் அழைத்துக் கொண்டு மடத்தின் உட்புறத்திற்குச் சென்றார். நிஜகுணன் அரசகுருவிடமிருந்து பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, அவருடைய தாமரைத் திருவடிகளை வணங்கி வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டான். தன்னுடைய அழகான குதிரையின் மீது ஏறி அமர்ந்து கொண்டு. "கிளம்பு ஆத்மாராமா" என்று முதுகைத் தட்டிய பொழுது, அந்த வெண்குதிரையானது இளவரசனைச் சுமந்தவாறு அரண்மனையை நோக்கி மின்னல் வேகத்துடன் சென்றது. அவன் சென்ற திசையையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்த ஸ்ரீ சன்னசதாஶிவ யோகிகளுக்கு, அவனுடைய பேச்சு, நடந்துகொள்ளும் முறை, நீதி-நெறிமுறைகள், சிந்தனைகள், புத்தகங்களைத் திறனாய்வது என்னும் இந்த ஒவ்வொன்றும் அவனுடைய சிறந்த எதிர்காலம் ஆளுமை வடிவமைப்பு என்னும் இவற்றை முன்கூட்டியே உணர்த்துவதாகத் தென்பட்டன.

திறமைசாலியான அந்தச் சிறுவன் பிரம்மன் விரும்பிச் செய்த அழகிய சிறு மூர்த்தியைப் போல் அவருடைய கண்ணிற்குத் தென்பட்டான். மனத்தைச் சூறை கொண்டான்.

நிஜகுணன் இப்பொழுது இளைஞன், இளவரசனான நிஜகுணனின் படுக்கை அறையிலே விளக்கானது இன்னும் எரிந்து கொண்டிருந்தது. இரவின் நான்கு யாமங்கள் அகன்று விட்டன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



இருப்பினும் கூட நிஜகுணன் விழித்துக் கொண்டே இருந்தான். எதையோ கவனத்துடன், கருத்து ஒருமித்துப் படித்துக் கொண்டிருந்தான். மகேசுவரி தேவிக்கு நள்ளிரவிலே விழிப்பு ஏற்பட்டது. நிஜகுணனின் படுக்கை அறையிலிருந்து இன்னும் விளக்கின் வெளிச்சம் வந்து கொண்டிருப்பதைக் கண்ட அவள், அவன் உறங்கி விட்டானா, இல்லையா என்று பார்த்துவிட்டு வந்தால் ஆயிற்று என்று அங்கு சென்றாள். அங்கு அவள் கண்டது என்ன? நிஜகுணன் படித்துக் கொண்டு இருந்தான். தாய் வந்ததை அவன் கவனிக்கவில்லை. மகேசுவரி மெதுவாக அவனிடம் சென்று, அவனை மெதுவாகத் தட்டிவிட்டு அருகிலேயே அமர்ந்து கொண்டாள்.

''இது என்ன குழந்தாய்! இரவு இவ்வளவு நேரம் தாண்டிய பிறகும் இன்னும் படிக்க வேண்டுமா? சரியாக உறங்காவிட்டால், உன் உடல் அதை எப்படித் தாங்கிக் கொள்ளும்?'' என்று கூறியவாறு, ஒருமுனைப்பாட்டின் விளைவால் ஒளிர்ந்து கொண்டிருந்த அவனுடைய அழகான முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

''ஓ, நீ எதற்காக அம்மா இங்கு வந்து சிரமப்படுகிறாய்? ஏதோ படிக்க வேண்டும் என்று தோன்றியது. படித்தபடியே அமர்ந்து விட்டேன்.'' என்று நிஜகுணன் கூறினான்.

''மிகவும் சமர்த்துதான், படிக்க வேண்டும் என்று தோன்றியதால் படித்தபடியே அமர்ந்து விட்டானாம். நாளை உன்னுடைய அரசி வந்தபிறகு இப்படியே செய். அப்பொழுது உனக்குத் தெரியும்'' என்று தாய் கூறினாள்.

''அன்னையே, படிப்பதற்குத் தடையை ஏற்படுத்தும் அறிவற்ற மனைவியை எனக்குக் கட்டி வைத்து விட வேண்டும் என்று கருதுகிறாயா?'' என்று புன்னகை நிலவொளியைச் சிந்தியவாறு நிஜகுணன் கூறினான்.

''இல்லை மகனே, இப்படியே படித்தவாறு அமர்ந்து கொண்டுவிட்டால் என்ன ஆவது என்பதை எண்ணிக் கூறினேனே தவிர வேறு ஒன்றுமில்லை. உனக்கு எத்தகைய பெண்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கிடைப்பாள் என்று யாருக்குத் தெரியும்?'' என்னும் கேள்வியுடன் மகனையே கூர்ந்து கவனித்தவாறு நின்று விட்டாள் மகேசுவரி.

''அன்னையே, நான் திருமணத்தையே விரும்பவில்லை. திருமணம் செய்து கொண்டால் மைத்ரேயியைப் போன்ற மனைவியைச் செய்து கொள்ள வேண்டும். மற்ற பெண்களை மணந்து கொண்டு என்ன செய்வது?'' என்று கூறிக் கொண்டிருக்கும் பொழுதே பெருமூச்சு விட்டான்.

''எந்த மைத்ரேயி? எங்காவது பார்த்தாயா? என்று வியப்படைந்த தாயிடம் ''போ அம்மா, நீ ஒருத்தி. நான் எந்த மைத்ரேயியையும் பார்க்கவில்லை. இந்த பிருஹதாரண்யக உபநிஷதத்தில் வரும் யாஜ்ஞவல்க்ய மகாமுனிவர் மெச்சிய மனைவியான மைத்ரேயியைக் குறித்து நான் கூறினேன்'' என்று நிஜகுணன் கூறினான்.

''ஓ அப்படியா? இந்த உபநிஷதத்தில் வரும் மைத்ரேயி எப்படிப்பட்டவள்? என்று ஆர்வத்துடன் மகேசுவரி கேள்வி கேட்டாள்.

''உனக்கு இப்பொழுது உறக்கம் வரவில்லையா அம்மா?''

''இப்பொழுது உறக்கம் கலைந்து விட்டது. உன் கதையைக் கேட்டபடியே உறங்குகிறேன்''.

''அப்படியானால் சரி, கேட்பாய் அம்மா-முன்பு ஜனகமஹாராஜனின் காலத்தில் யாஜ்ஞவல்க்ய மகாமுனிவர் வாழ்ந்தார். அவருக்குக் காத்யாயனி என்னும் மனைவி இருந்தாள். அதன்பிறகு மைத்ரேயி என்பவள் தானே விரும்பி அவரை மணந்து கொண்டாள். இவள் அவரிடமிருந்த மாட்டுச் செல்வம், இளமை, பொருட்செல்வம் என்னும் இவற்றைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆனால் அவருடைய பிரும்மஞானத்தை மனத்திலே கொண்டு மெச்சித் திருமணம் செய்து கொண்டாள்.

காத்யாயனி, நகை, பொருள், மாடுகளைப் பராமரிப்பது, ஆசிரமம், கணவர் என்று உலகியல் சார்ந்த செல்வங்களிலேயே இன்பத்தைக் கண்டு கொண்டிருந்தாள். மைத்ரேயி இவற்றிலே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



மனத்தைச் செலுத்தாமல், வேதியரான பிரம்மநாட்டம் கொண்ட கணவரின் அருகிலே இருந்தவாறு, ஞான உபதேசத்தைப் பெற்றவாறு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தாள். இவ்விதம் வாழ்ந்து கொண்டிருந்தபொழுது யாஜ்ஞவல்க்ய மகாமுனிவர் இல்லறத்தைத் துறந்து, வானப்பிரஸ்த ஆசிரமத்தை ஏற்றுக்கொண்டு கிளம்புவதற்கு ஆயத்தமானபொழுது, தன்னுடைய செல்வம் அனைத்தையும் இரு பகுதிகளாகச் செய்து, ஒரு பகுதியைக் காத்யாயனிக்குக் கொடுத்தார். மற்றொரு பகுதியை மைத்ரேயியை எடுத்துக்கொள்ளுமாறு கூறி ''இருவரும் நலமாக வாழுங்கள்'' என்று வாழ்த்திவிட்டுக் கிளம்பினார். மைத்ரேயி கணவனைத் தடுத்து நிறுத்தித் தானும் நார்மடிப்புடவையை உடுத்திக் கொண்டு ''கிளம்புங்கள், செல்வோம்'' என்று கூறினாள் யாஜ்ஞவல்க்ய மகாமுனிவர் மிகவும் வியப்படைந்து ''தேவி, இது என்ன? நீயும் என்னுடன் வருகிறாயா? வேண்டாம். வேண்டாம். நீ சிறுவயதினள். இந்தச் செல்வத்தை எல்லாம் அனுபவித்துக் கொண்டு இங்கேயே நலமாக இருப்பாய்'' என்று அவர் கூறினார்.

''ஸ்வாமி, உங்கள் செல்வத்தின் ஒரு சிறிய காசு கூட எனக்கு வேண்டாம். அதன் மீது எனக்கு எள்ளளவும் விருப்பம் இல்லை. அதை விரும்பினேன் என்றால் உங்கள் திருவடிகளின் மீது ஆணை! இத்தனைச் செல்வத்தையும் துறந்துவிட்டுக் கிளம்பியுள்ள நீங்கள் இதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக இன்பமளிக்க வல்ல செல்வத்தைத் துய்ப்பதற்காகக் கிளம்பியுள்ளீர்கள் அல்லவா! அந்தச் செல்வத்தில் எனக்குப் பங்கு அளியுங்கள்'' என்று மைத்ரேயி உறுதியான குரலில் கூறினாள். இதைக் கேட்ட யாஜ்ஞவல்க்ய மகாமுனிவர் மிகவும் மகிழ்ந்து ''உன்னைப் போல மனைவியை அடைந்த நானே பேறு பெற்றவன். நீயும் புண்ணியவதி. நல்ல செயலைச் செய்து அதன் பயனை அடைந்தவள். கிளம்புவாய் செல்வோம்'' என்று கூறியவாறு மனைவியுடன் கிளம்பிச் சென்று விட்டார். அதன்பிறகு மைத்ரேயி, கணவருக்குத் தொண்டாற்றி, ஞான உபதேசத்தைப் பெற்று முக்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அடைந்தாள் என்றவாறு கதை உள்ளது. இங்கு யாஜ்ஞவல்க்யர் - மைத்ரேயி இவர்களுக்குள் நடைபெற்ற விவாதம் மிகவும் நன்றாக உள்ளது. அன்னையே, இப்பொழுது கூறுவாய். மனைவியானவள் மைத்ரேயியைப் போல இருக்க வேண்டும் அல்லவா'' என்று கேட்டுத் தாயின் கருத்தை அறிந்து கொள்ள விரும்பினான். மகேசுவரி மகனின் முன் தலையைக் கோதியவாறு, அவனுடைய அகன்ற நெற்றியிலே முத்தமிட்டு ''மகனே, மைத்ரேயியைப் போன்றவளே தகுதியானவள் உனக்கு அத்தகையவளே கிடைப்பாள். சம்புலிங்கத்தின் அருளைப் பெற்ற உனக்கு, உன் வாழ்க்கையானது இன்பமயமானதாக இருப்பதற்கு அவனே அருள் புரிவான். நீண்ட நேரம் ஆகிவிட்டது. உறக்கத்தைக் கெடுத்துக் கொண்டால் உடல் நலம் கெட்டுவிடும். படித்தது போதும். உறங்குவாய்'' என்று கூறி அவன் முன்னால் இருந்த புத்தகங்களை எல்லாம் எடுத்து வைத்து விட்டு, அவன் உறங்கியபிறகு, போர்வையைச் சரி செய்துவிட்டு, குளிரக்கூடும் என்று எண்ணிச் சாளரங்களை மூடிவிட்டுக், கட்டில் நிறைந்து படுத்துக் கொண்டிருந்த மகனை மீண்டும் ஒருமுறை கண் நிறைந்து பார்த்துவிட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்றாள்.

''ஓ! என்னுடைய மகன் வாலிபத்தில் அடி எடுத்து வைத்திருக்கிறான். அவன் இனியும் சிறுவன் அல்லன்.'' என்று தனக்குள்ளேயே மகிழ்ந்தவாறு வந்து படுத்துக் கொண்டாள்.

குழந்தைப்பருவம், இளமைப்பருவம் என்னும் இவற்றைத் தாண்டி எல்லா ஆற்றல்களும் எழுச்சியுற்று இருக்கும் வாலிபப் பருவத்திலேயே நிஜகுணன் அடிஎடுத்து வைத்திருந்தான். வட்ட வடிவான முகம், அகன்ற நெற்றி, மலர்ந்த கண்கள், நீண்ட நாசி, அரும்பு மீசை, வீர உருவம் - இளைஞன் நிஜகுணனைக் கண்டு பெண்களின் பெண்மையானது - கிளர்ந்தது. அவனுடைய முகத்திலே ஒளிர்ந்து கொண்டிருக்கும் களையைக்கண்டு கௌரவமாகத் தலையைக் குனிந்து கொள்வார்கள்.

இளைஞன் நிஜகுணனுக்கு அரச போகத்திற்குக் குறையில்லை. அவன் விரும்பும் பொழுது தேவைப்பட்ட பொழுது,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தேவையான அளவிற்கு, கேட்ட அளவிற்குப் யோகங்கள் ஆவலுடன் காத்துக் கிடந்தன. அவனுடைய நாட்டிலே அரண்மனையிலே அழகிகளுக்கு, சுந்தரிகளுக்கு வறட்சி இல்லை. ஆனால் இது எதைக் குறித்த கவனமும் இன்றி விருப்பமுமின்றி, தானே அரசன், தானே குடிமகனுமாகித் தன்னுள்ளேயே லயித்துள்ள நிஜகுணனைக் கண்டு, நாட்டிற்கு நாடும், அரண்மனைக்கு அரண்மனையும் வியப்பிலே ஆழ்ந்திருந்தன.

அரசி மகேசுவரிதேவி தன் மகனான நிஜகுணனிற்குத் தந்தை ஓம்காரபிரபுவின் நினைவு ஏற்படாதவாறு விழிப்புடனிருந்து கொண்டு, பத்திரமாக வளர்த்துக் கொண்டிருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் நிஜகுணனின் அறிவின் அளவானது அப்பொழுதே வளர்ந்து இருந்தது. உணர்வுகள் பக்குவப்பட்டிருந்தன. மனமானது மென்மையாக இருந்தது. அதனால்தான் எந்த ஒரு விஷயம் அவனிடம் வந்தாலும் அதன் ஆழம், அகலம், சிறப்பு, கனம் என்னும் இவற்றை அறிந்து கொள்ளும் வரையில் விட்டு விடாமலிருந்தான் தந்தையின் மரணம் குறித்தும் அவ்வாறே.

பிறந்தது இறக்கவே வேண்டும்
சாவு விரும்பத்தகாதெனினும் தவிர்க்கவியலாதது,
எந்தக் கணத்திலும் மரணம் வந்து தழுவக்கூடும்,
கடுந்துயரத்திற்கு மரணமே மூலகாரணம்,
ஆனால்? மரணமடைவது உறுதி என்று
உணர்ந்து உணர்ந்து அழியும்
இன்பத்திற்காக போகத்திற்காக,
நாட்டிற்காக பெண், பொன்
மண்ணிற்காகப் போராடுவது எதற்காக?

என்று இந்த விதத்தில் மரணத்தைக் குறித்து ஆயிரம் வழிகளில் சிந்தித்துக் கொண்டிருந்த விளைவினால், இளைஞனான நிஜகுணனின் இதயத்தில் நடந்த போராட்டமானது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


வெளிப்படாமல் இருந்ததால் அன்னையின் கவனத்திற்கும் வராமலே இருந்தது. அந்தப் போராட்டம்தான் அவனுடைய எதிர்கால வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுத்திருக்குமோ என்று கூறத் தோன்றுகிறது.

வெளியிலே, இன்பங்களை அனுபவிக்கும் பேறு இருக்கக்கூடும். ஆனால் அவற்றால் நிரந்தரமான அமைதி, சமாதானம் போன்றவை கிடைக்காது என்னும் உறுதியான நம்பிக்கையே, அவனுக்கு நல்ல நூல்களைப் படிப்பதற்கு வழி வகுத்துக் கொடுத்தது. அவனுடைய மனத்திலே எழும் சந்தேகங்களை அகற்றுவதற்கு அரசகுருவான ஸ்ரீ சன்னசதாஸிவ யோகிகள் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருந்தார். அதைப் போன்றே யோக வழியிலும் அவன் கையைப் பிடித்து அழைத்துச் சென்று கொண்டுள்ளார். யோக வழியில் கூட நிஜகுணனிற்குக் கூர்மையான கவனம் இருந்தது. நீண்டகால ஆசனப் பயிற்சி, உடல் நலம், புலனடக்கம், என்னும் எல்லாம் ஒருங்கிணைந்து, நிஜகுணனின் ஆளுமைக்குப் புதியதொரு மெருகு, அழகு, பொலிவு எல்லாம் சேர்ந்து, பார்த்தவர்களின் கண்களும், மனமும் நிறையுமாறு வளர்ந்து நின்றான்.

சகுண அஷ்டாங்க யோகத்தின் மூலம் புறத்தூய்மையையும், நிர்குண அஷ்டாங்க யோகத்தின் மூலம் அகத்தூய்மையையும் அடையும் விருப்பம் அவனுடையது ஆகும்.

நிஜகுணனின் நீதி-நியமங்கள்:- பிரார்த்தனை, போதனை, யோகம், பற்றற்ற தன்மை, பக்தி, வழிபடுதல் என்னும் இவற்றின் குறியை அடைவது, சித்தி அடைவது என்னும் இவையே ஆகும். ஒரே ஒரு மிகச்சிறிய அணுவிலிருந்து, பரம்பொருள் வரையிலும் ஒன்றே ஒன்றாக உள்ள அந்தப் பரஸிவசைதன்னியத்தைக் குறித்த ஞானம், 'நான்யார்?' என்னும் ஞானம் மற்றும் அந்த 'நான்யார்?' என்னும் உறுதியான ஞானமானது நிலைத்து நின்ற பொழுது.

"முன்பு இருந்ததைப்போல் என்னுடன்
இசைவுடைமையை வேண்டுவதோ,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உடலே நீ எனக்கு அன்னியம்''

என்று கூறிக் கொண்டு,

''நீ பொய், நான் உண்மை
நீ பந்தம், நான் முக்தன்
நீ ஜடம், நான் அஜடம்
நீ அழிவாய், நான் நிலைத்தவன்''

என்று பிரித்துப்பார்த்து, இழை இழையாக, உடல் மற்றும் ஆன்மாவின் தனித்த இயல்பு, நிலை மற்றும் விளைவுகளைக் குறித்து விவரிப்பதைப் பார்த்தால், யாராக இருப்பினும் அவருக்கு நிஜகுணனின் மனத்தின் விருப்பமானது எந்தத் திசையிலே செல்கிறது என்பது புரியாமல் இருக்காது.

நிஜகுணனின் நுண்ணறிவானது அந்த அளவிற்கு மட்டுமே என்றும் நிறைந்துவிடவில்லை. சூட்சும, மிகவும் சூட்சுமமான நிலைக்கு இறங்கி, அங்குள்ள ரகசியத்தை அகழ்ந்து எடுத்துக்கொண்டு வந்து குரு அவர்களின் திருவடிகளிலே சேர்ப்பிக்கும் வரையிலும் ஓய்வை அவன் விரும்புவதில்லை.

சூட்சுமயோகம், வினுதயோகம், அதிகயோகம், அமளயோகம், நிஜயோகம் என்று படிப்படியாக நான்கு அந்த கரணங்களைக் கடந்து, நிதித்யாசனத்தின் இறுதி எல்லையை அடைந்து, உயர்ந்த சமாதிநிலையை எய்தும் வழிமுறையை விவரிப்பான். ஆனால் அந்த விவரிப்பு வெறும் கற்பனையானது அன்று. அனுபவித்து, ஆராய்ந்து, மூழ்கி, மகிழ்ந்து, மீண்டும் தன்னைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து பார்த்துப் பார்த்துப் பாடிய

அனுபவ பூர்வமான சொல் அது!
ஞானபூமியிலே நின்று சிந்திய முத்துக்கள்!
''பார்த்து, அறிந்து, பரிசீலித்து, யோகம் செயின்!
முக்தி இன்பம் கிடைக்கும்!!

என்று பாடியதின் மறைபொருளும், ரகசியமும் அரசகுரு அவர்களுக்கு நன்றாக விளங்கியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிஜகுணன் யோகத்துடன் நின்றுவிடவில்லை.

அவனுடைய லட்சியம், கவனம், மையம் மிக உயர்ந்த ஞானமாகும்.

முதலமைச்சராக நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, நாட்டின் நன்மை, அமைதியைக் காப்பாற்றிக் கொண்டிருந்த சிவகுமாரர் நிஜகுணனைக்கண்டு வியப்படைந்த -துடன் மட்டுமின்றி பாராட்டையும் வெளிப்படுத்தினார். நிஜகுணனின் ஒரே ஒரு பார்வைக்காக ஏங்கிக் கொண்டிருந்த மங்கையரின் அழகிகளின் கண்ணாடல், ஒய்யார ஆடல் என்னும் இவற்றைக் கண்ட நிஜகுணன் தனக்குள்ளேயே சிரித்தவாறு வருமாறு பாடிக் கொண்டிருந்தான்.

"கண்டு கேட்டு மற்றும் மோகிப்பரோ வல்லவர்!
பூமியிலே பல போகங்களைத் துறக்காமல்"

மற்றொரு சமயத்தில் புலனின்பங்களையே நாடி, மங்கையரின் மோகத்தில் மூழ்கியிருந்த, புலனின்பங்களைத் துய்த்துக்கொண்டிருந்தவர்களைக் கண்டு

"பெண்களை விரும்பி அது நிலையானது என்று!
மோகிப்பார் முக்தியை அடையா மனிதர்கள்"

என்று பாடிக் கொண்டு இருந்தான். செல்வத்தின் மீது இருந்த ஆசையால் குடிமக்களும், அதிகாரிகளும் அடித்துக் கொள்ளும் கெட்ட வழிமுறைகளைக் கண்டு நொந்து

"செய்யத் தகுமோ மனிதனே! செய்யத்தகுமோ!
துன்பங்களுடன் கூடுவதோ! செல்வத்தை விரும்பி!!

என்று பாடிக் கொண்டு இருந்தான்.

குழந்தைச் செல்வம் இன்றி சிவகுமாரர் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனையைக் கண்டு

"குழந்தை இன்பம் மேலானது எனக்கருதாது, கவலைகளை!
அறிவுடையோருணர்ந்து மோகத்தைத் துறப்பர்"

என்று பாடி சிரித்துக் கொண்டு இருந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''குழந்தை இல்லாமல் இருந்தால், பிறக்கவேண்டும் என்னும் கவலை, கரு நிலைத்து நிற்பதற்கு அது கலையாமல் இருக்க வேண்டும் என்னும் கவலை, பிறக்கும்பொழுது கஷ்டப்படாமல் இருக்க வேண்டும் என்னும் கவலை பிறந்த பிறகு குழந்தைக்குக் கிரகங்கள், நோய்கள் போன்றவற்றால் ஏற்படும் கேடுகளைக் குறித்த கவலை'' - என்று இவ்விதத்தில் குழந்தைகளால் ஆயிரம் கவலைகள். ஆனால் எல்லாம் வல்லவர்கள், தேவாதிதேவனாக விளங்கும் சம்புலிங்கத்தை நம்பிக்கையுடன் வணங்கிக் கவலையற்று இருப்பார்கள்'' என்று ஒருமுறை ஶிவகுமாரரின் எதிரிலே கூறியபொழுது, அவருக்கு நிஜகுணனின் அறிவுரையானது மனத்திலே பதிந்து, அவர் குழந்தை இல்லாத குறையையே மறந்து விட்டார்.

ஒருமுறை தக்கவாறு வளர்ச்சி அடைந்திருந்த அழகிய தன்னுடைய உடலைப்பார்த்து நிஜகுணன் ஒருகணத்திற்குப் பெருமிதம் கொண்டான். மறுகணமே அவனுடைய விவேகமானது அவனை எச்சரித்தது.

''சுஞ்ஞானி என்று கூறினால் நீ ।
அஞ்ஞானி அல்லவா மனிதனே ॥
அறிவின் உருவென விளங்கி! ஐம்பூத ஜடத்தை நீ என்பாய் ।
புனித, தூய, உண்மைத்தத்துவ மயனாகி
விழுப்புவிதிமுறையைப் பின்பற்றுவாய் ॥

என்று உடலிற்கு சாட்சியாக நின்று பாடிக்கொள்வான். ஒரு நாளின் பெரும்பாலான நேரத்தைப் படிப்பதிலேயே செலவழிப்பான். வேத-வேத அங்கங்கள், உபநிஷதங்கள் ஆகம - நிகமங்கள் - என்னும் அனைத்துமே முறையாகப் பயிற்றுவிக்கப்பட்டன. உண்மை உருவைக்குறித்த, தன்னைக்குறித்த உண்மையான அறிவை நேராகக் குறிப்பிடும் உட்பொருளைப் பற்றிப் படிக்கும் பொழுது நிஜகுணன் மெய்மறந்து அமர்ந்து விடுவான்.

ஒரு முறை மகேசுவரிதேவி நிஜகுணனை உணவு அருந்துவதற்கு அழைத்துக் கொண்டு வருமாறு பணிப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பெண்ணிடம் ஆணையிட்டாள். பணிப்பெண் அவனுடைய அறையிலே காலடி எடுத்து வைத்து,

''மகாபிரபு, உணவு ஆயத்தமாக உள்ளது. அரசியார் உங்களுக்காகக் காத்துக் கொண்டு இருக்கிறார்'' என்று வேண்டிக் கொண்டாள். அப்பொழுது நிஜகுணன் வருகிறேன் என்றோ, வரவில்லை என்றோ எதுவும் கூறவில்லை. அசையவும் இல்லை. பணிப்பெண் அஞ்சி, அரசியிடம் நிஜகுணனின் நிலையைப் பற்றி விவரித்த பொழுது மகேசுவரிதேவி விரைந்து மகன் இருந்த இடத்திற்குத் தாவிச்சென்று,

''நிஜகுணா! ஓ நிஜகுணா! என்று உரக்கக் கூப்பிட்டாள். நிஜகுணன் எத்தகைய மாற்றமும் இன்றி - அசையாமல் அமர்ந்திருந்தான். மகேசுவரிக்கு உண்மையாகவே மிகுந்த பயம் ஏற்பட்டது. மகனின் தோளைப் பிடித்துக் குலுக்கியவாறு ''நிஜகுணா, குமாரா என்று உரக்கக் கூப்பிட்டாள்.'' அப்பொழுது நிஜகுணன் கலவரத்துடன் எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தவாறு,

''ஓ! யார்? ஆ? எதற்காக? அன்னையே'' என்று புறவுணர்வைப் பெற்ற அவனிடமிருந்து எதையும் அறியாதவன் போல நீண்ட மூச்சு வெளிப்பட்டது.

''நிஜகுணா! இது என்ன? எதற்காக அப்படி அமர்ந்து கொண்டிருந்தாய்? உடல் நலம் இல்லையா?'' என்று வேதனையுடன் கேள்வி கேட்டாள்.

''ஓ அன்னையே! அது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. எல்லாவற்றையும் கெடுத்துவிட்டாயே அம்மா. எனக்கு எதுவும் ஆகவில்லை. உடல் நலத்துடனேயே இருக்கிறேன். எதற்காக அவ்வளவு பயப்பட்டாய்? தன்னுடைய உண்மையான உருவினை உணர்ந்து கொள்ளும் முயற்சியில் ஆழ்ந்த தியானத்தின் ஒரு நிலையானது வாய்க்கிறது. அவ்வளவுதான்'' என்று அன்னையைச் சமாதானப்படுத்தும் வகையில் கூறினான்.

''மகனே, கிளம்புவாய், உணவு அருந்துவதற்கு நேரம் ஆகி விட்டது. நான் அப்படியே விட்டிருந்தால் எத்தனை நேரம்தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உட்கார்ந்து இருப்பாயோ, என்னவோ'' என்றாள். இருவரும் உணவு அருந்தும் இடத்திற்குச் சென்றனர். மகேசுவரிக்கு அவளுக்குள்ளேயே கவலை அரிக்கத் தொடங்கியது. தகுந்த வயதை அடைந்துள்ள வாலிபம் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த மகனுக்கு விரைவில் திருமணம் செய்து விட வேண்டும் என்று எண்ணினாள். உணவு அருந்திய பொழுது அவள் கண் முன்பு மணப்பெண்ணாக அவளுடைய அண்ணனின் மகளான சர்வமங்கலை தென்பட்டாள்.

''நிஜகுணனே! நம்முடைய சர்வமங்கலையை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா?'' என்று கேட்டாள். வாயருகில் கொண்டு சென்ற கையைப் பாதியிலேயே நிறுத்தி நிஜகுணன் குறும்புத்தனத்துடன் ''ஓ அவளை நான் தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறேனே'' என்றான்.

''என்ன சொன்னாய்? தினமும் பார்க்கிறாயா? எங்கு? எப்பொழுது?'' என்று மகேசுவரி வியப்புடன் கேட்டாள் ''எல்லாவிதமான கல்விகளுக்கும் எல்லா விதமான அறிவுகளுக்கும், எல்லா சித்திகளுக்கும், அனைத்திற்கும், எல்லா உயிர்களின் தோற்றத்திற்கும் முதற்காரணமாக விளங்கும் சர்வமங்கலையை நான் தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறேன் அன்னையே'' என்று உணர்வுப் பெருக்குடன் கூறினான்.

மகேசுவரிதேவி மகனின் பேச்சைக் கேட்டுச் சிரித்து விட்டு ''மகனே, நீ வளர்ந்து பெரியவனாக இருப்பினும் உன் இளமைப்பருவத்தின் குறும்புத்தனம் இன்னும் குறையவே இல்லை. அப்பொழுதும் இந்த விதத்திலேயே என்னை உன்னுடைய பேச்சிலேயே சிக்க வைத்தாய். இப்பொழுதும் அப்படியே இருக்கிறாய். இப்பொழுது நான் கேட்டதற்குச் சரியாகப் பதில் சொல். அதன்பிறகு நீ சிரிக்கலாம்'' என்று கூறினாள்.

''சரி அம்மா, நான் பார்த்த சர்வமங்கலையைக் குறித்துக் கூறினேன். உன்னுடைய சர்வமங்கலை யார் என்று எனக்குத் தெரியாது'' என்று பாயசத்தைச் சுவைத்தவாறு கூறினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''என் அண்ணனின் மகளான சர்வமங்கலையை நீ பார்த்தது இல்லையா? ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்பு தன் தாயுடன் ஒரு முறை வந்திருந்தாள் அல்லவா'' என்று மகேசுவரிதேவி நினைவு படுத்திக் கூறினாள்.

''ஓ அதுவா, தாவணி, பாவாடை அணிந்து கொண்டு ஓடிக் கொண்டிருந்தாள் அல்லவா. அந்தப் பெண்ணா?'' என்று நினைவில் வைத்துக் கொண்டு கூறினான்.

''ஆம், இப்பொழுது அவள் வளர்ந்து பெரியவளாகி உள்ளாள்''

''ஆகியிருக்கக் கூடும், அவள் என்ன அப்படியே இருப்பதற்குப் பாறாங்கல்லா?''

''இங்கு பார், மீண்டும் உன் விளையாட்டைத் தொடங்கி விட்டாயா?'' என்றாள் தாய் பொய்க் கோபத்துடன்.

நிஜகுணன் கம்பீரமாக, ''சரி, உன்னுடைய எண்ணம் தான் என்ன? அதையாவது தெரியப்படுத்துவாய்'' என்று கூறினான்.

''சர்வமங்கலை நல்ல இயல்புகளுடன், நல்லொழுக்கத்துடன் அழகாகவும் இருக்கிறாள். அவளை ஒருமுறை நீ பார்த்து ஒப்புதலைத் தெரிவித்தால் உன் திருமணம் என்னும் மங்கலகரமான நிகழ்வை விரைவிலே முடித்து விடலாம்.''

''என்னம்மா, அந்தப் பாவாடை - தாவணி அணிந்து கொண்டுள்ள சிறிய பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதா?''

''உனக்கு எவ்வளவு அறிவு உள்ளது என்று பார். அவள் ஏழு, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகும் அப்படியே இருப்பாளா? இப்பொழுது ''அவள் வளர்ந்து இருக்கக் கூடும். கல் அல்ல என்று பேசிய நீயே இப்பொழுது இப்படிப் பேசுகிறாய்.''

நிஜகுணன் தான் கூறியதை கேட்டு உரக்கச் சிரித்தான். மகேசுவரியே பேச்சைப் பின்தொடர்ந்தவாறு கூறினாள்.

''அவளை வரும் திங்கட்கிழமையன்று அழைத்து வரச் செய்கிறேன். அவளுடைய சித்தியின் மகளான மதுமதியையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அழைத்து வரச் செய்கிறேன். இருவரையும் பார். உனக்கு யாரைப் பிடிக்கிறதோ அவளைத் திருமணம் செய்து கொள்வாய்.''

''அன்னையே! எதற்காக இவ்வளவு அவசரப்படுகிறாய்? என்னை இல்லறப் பிணைப்பிலே விரைவாகத் தள்ளுவதற்கு அவசரம் எதற்கோ?'' ''நீ இப்பொழுது வேறு எதையும் பேச வேண்டாம். நான் கூறுவதைக் கேட்பதுதான் உன் வேலை'' என்று அரசி அன்பு நிறைந்த பொய்க் கோபத்துடன் கூறினாள்.

''இல்லை அன்னையே, அவர்கள் இருவரையும் பார்த்தவுடனேயே அவர்களுடைய நல்ல கெட்ட இயல்புகள் எப்படித் தெரியும்? ஒருமுறை பார்த்தவுடனேயே எப்படி ஒப்புக் கொள்வது?'' என்று நிஜகுணன் தன் மனத்திலிருந்த எண்ணத்தை வெளிப்படுத்தினான்.

''ஓ அப்படியா? அதற்குத் தேவையான ஏற்பாடுகளை நான் செய்கிறேன்'' என்று அன்னை கூறினாள். பேச்சின் வேகத்திற்குச் சமமாக விரைவாக உட் கொள்ளப்படாத உணவானது நிதானமாக உண்ணப்பட்டாலும் உண்டு முடித்தாயிற்று. இருவரும் கைகளைத் தூய்மை செய்து கொண்டு எழுந்தனர்.

சம்புலிங்கமலையின் பக்கத்திலேயே அரசபரிவாரத்தினர் கூடாரமடித்துத் தங்கினர். அந்த அரச குடும்பத்தினருக்குச் சம்புலிங்கமலை என்றால் அது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்க வல்ல திருத்தலமாக விளங்கியது.

அன்று நிஜகுணன் சம்புலிங்கனின் கோயிலிற்குச் சிறிது காலம் தாழ்த்தியே கிளம்பினான். அதை அவன் நெருங்கிக் கொண்டிருந்த பொழுது இனிமையான பாடல் ஒன்று கேட்டது. மெதுவாக அடி எடுத்து வைத்துக் கருவறையின் கதவினருகில் வந்தபொழுது, சம்புலிங்கத்திற்கு எதிரிலே அமர்ந்து பாடிக் கொண்டு இருக்கும் இளம்பெண்களையும், அவர்கள் அருகிலேயே கையைக் கூப்பியவாறு அமர்ந்து கொண்டிருந்த அன்னையையும் கண்டு அவனுடைய கால்கள் பின்னடைந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஓ, அம்மா கூறிய அந்த சர்வமங்கலை மற்றும் மதுமதி - இவர்களாகத்தான் இருக்க வேண்டும்'' என்று எண்ணி அவர்களின் பின்னாலேயே சிறிது தொலைவில் நந்தீசுவரனின் பின்பக்கமாகச் சென்று அமர்ந்து கொண்டான். அவர்கள் இருவரில் ஒருத்தி மட்டும் பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய குரலானது கேட்பதற்கு இதமாக, மென்மையாக, இனிமையானதாக இருந்தது. பாட்டுடன் கலந்து மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தாள். நிஜகுணனிற்கு அந்தப்பாடல் மற்றும் அக்குரலின் மென்மையானது மிகவும் விரும்பத்தக்கதாக விளங்கியது. ஒருத்தி வெண்மை வண்ணத்தில் ஜரிகைக்கரையுடன் கூடிய புடவையையும், அதே வண்ணத்தில் ரவிக்கையையும் அணிந்து கொண்டிருந்தாள். அவள் சூட்டிக் கொண்டிருந்த மல்லிகையானது அவள் கூந்தலிலே சூட்டிக் கொண்டதால் பெரும் பேற்றைப் பெற்றதைப் போல விளங்கியது.

மற்றொருத்தி பச்சை வண்ணத்தில் கருமையான கரையுடன் கூடிய புடவையை உடுத்திக் கொண்டிருந்தாள் அதைப் போன்றே ரவிக்கையும் அணிந்து கொண்டிருந்தாள் அவள் கூந்தலிலே பாதி மலர்ந்திருந்த ஒரே ஒரு ரோஜா மலர் அழகாகத் தென்பட்டது. அவளுடைய கழுத்து, கழுத்திலே அணிந்து கொண்டிருந்த அணிகலன்களால் சோபித்துக் கொண்டிருந்தது.

நிஜகுணன் தன்னையறியாமலே அவர்கள் இருவரின் பின்பக்கத்தைப் பார்த்தான். அவனுடைய அந்த நோட்டத்தால் அவனுக்கே வியப்பு ஏற்பட்டது. ஆனால் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் மிகப்பெரிய பொறுப்பின் முன்பு அந்த வியப்பானது நிலைக்கவில்லை.

''சம்புலிங்கமே! என் வாழ்க்கையானது உன்னுடைய நல்ல சங்கல்பத்திற்குத் தகுந்தாற் போலச் சென்று கொண்டுள்ளது. அதைப்போன்றே, என் வாழ்க்கைத் துணையை ஏற்படுத்திக் கொடுப்பவனும், அதன் பிறகு வாழும் வாழ்க்கையானது இன்பமயமானதாக இருப்பதற்கு அருள்பவனும், வாழ்க்கைப் பிணைப்பிலே சிக்கிக் கொள்ளாமல் உலகியலிலே மூழ்கிவிடாமல், ஆன்மீகம் ஒன்றுதான் என் குறி. உயிராகியிருக்குமாறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


செய்பவனும் நீயே அல்லவா! உன்னுடைய நல்ல சங்கல்பமானது என் வாழ்க்கையில் செயல்களை நடத்திச் செல்லட்டும் என்று மனத்திலே வேண்டிக் கொண்டான். பாடல் முடிந்தது. அவர்கள் இருவரும் எழுந்து நின்று சம்புலிங்கத்தைக் கைகளைக் கூப்பிக்கொண்டு தலைகுனிந்து வணங்கினர். அவர்களுடைய கைகளில் அர்ச்சகர் தீர்த்தப் பிரசாதங்களைக் கொடுத்தார். அவர்கள் இருவரும் ஏற்றுக் கொண்டனர்.

அன்னை மகேசுவரி நிஜகுணன் வந்திருப்பதை அறிந்து கொண்டு அவன் பக்கமாகத் திரும்பிப் பார்த்த பொழுது அவன் அவளுக்குச் சும்மா இருக்குமாறு சைகை செய்தான். மகனுடைய இங்கிதத்தை அறிந்து கொண்ட அரசி, புன்னகை பூத்தவாறு சம்புலிங்கனை வலம் செய்துவிட்டு வருவதற்குக் கிளம்பினாள். இளம்பெண்கள் இருவரும் அரசியைப் பின்பற்றினர். சம்புலிங்கனை மற்றொரு முறை பணிந்து, நந்தீசுவரனை வணங்கி ஒரு பக்கமாக நின்று கொண்டாள். அரசியைப் பின்தொடர்ந்து வந்த அவர்கள் இருவரும், நந்தியை வணங்குவதற்கு வந்தபொழுது அங்கேயே அமர்ந்து கொண்டிருந்த, ஒளியுடன் கூடிய இளைஞனைக் கண்டு அவர்களுக்குக் கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒன்று தாக்கியதைப் போலிருந்தது.

நிஜகுணன் அவர்கள் இருவரையும் ஒருமுறை கூர்ந்து பார்த்தான். அவர்கள் இருவருமே அழகிகள் ஒருத்தியின் முகமானது சாத்துவீகக் களையுடன் கூடியதாக இருந்தது, ஒளிர்ந்து கொண்டிருந்தது. அது ஒரு கௌரவத்தை ஏற்படுத்தி முகத்தைக் கீழே தாழ்த்திக் கொள்ளுமாறு செய்தது. மற்றொருத்தியின் முகக்களையானது இதற்கு நேர்மாறாக இருந்தது. பார்த்தால் மீண்டும் அழைக்கும் அலைபாயும் கண்கள். அந்த வடிவமானது அமைதியானதாக இல்லாமல் மோகம் கொள்ள வைப்பதாக இருந்தது. ஒரு கணம் பார்த்த நிஜகுணன் கீழே பார்த்தவாறு அமர்ந்திருந்தான். வெண்ணிறப் புடவையை அணிந்திருந்த இளம்பெண், விரைந்து நந்தியை வணங்கி விட்டு மகேசுவரி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றாள். ஆனால் பச்சை வண்ணப் புடவையை அணிந்து கொண்டிருந்தவள் நிஜகுணனின் அழகை மீண்டும் பார்க்கவேண்டும் என்னும் காரணத்தால் நந்தியைக் கையைக் கூப்பி வணங்கினாள். அதன் பிறகு மகேசுவரி இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றாள். அவனைத் திரும்பத் திரும்பப் பார்த்தவாறு சென்றாள். அவன் யார்? என்று அந்த மங்கையருக்குக் குழப்பம் ஏற்பட "இவர்களில் சர்வமங்கலை யார்? மதுமதி யார்?" என்பது நிஜகுணனின் கேள்வியாக இருந்தது.

சிவிகையில் அமர்ந்து அம்மூவரும் அவர்கள் தங்கியிருந்த இடத்தை நோக்கிச் சென்றனர். அவர்களை எப்படி பரீட்சை செய்வது என்னும் சிந்தனையில் நிஜகுணன் இருந்தான். தான் வணங்கும் தெய்வமான சம்புவை நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து வணங்கி அவன் குதிரையின் மீது ஏறிக் கொண்டான். அன்றே அவர்கள் தலைநகரை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டனர்.

அந்தப்புரத்திற்குச் சென்ற நிஜகுணன் அன்னையை அழைத்து வரச்செய்து "அன்னையே! அவர்கள் இருவருக்கும் நான் எழுதிவைத்துள்ள கேள்விகளின் பிரதிகளைக் கொடு. அவர்களை விட்டுப் பதில்களை எழுதச் சொல்லிக் கொண்டுவா" என்று தாயின் கையில் கேள்விகளின் இரு பிரதிகளைக் கொடுத்தான். பதிலிற்காக ஆவலுடன் காத்துக் கொண்டு இருந்தான். சிறிது நேரம் சென்ற பிறகு தாய் அங்கு வந்து பதில்கள் எழுதியிருந்த ஓலையைக் கொடுக்க அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான். ஒன்றில் வருமாறு இருந்தது.

கேள்வி : வாழ்க்கையுடன் இணைந்துள்ள மரணம் எது?

பதில் : இனிமை, மகிழ்ச்சி இன்மை அல்லது மிக ஏழ்மை நிலை

கேள்வி : எது அமுதப் பெருக்கு?

பதில் : அன்பிற்குரியவனின் இன் சொற்கள்

கேள்வி : மனிதகுலம் தோன்றியதன் பயன் என்ன?

பதில் : நல்ல கணவன், (மனைவி) மற்றும் நல்ல குழந்தைகளை அடைதல் அல்லது ஒப்பற்ற செல்வத்தைத் துய்த்தவாறு மகிழ்ச்சியுடன் இருப்பது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கேள்வி : உருக்குலையாத அணிகலன் எது?

பதில் : சொக்கத் தங்கத்தால் செய்யப்பட்டுள்ள ஒளிர்ந்து கொண்டிருக்கும் ரத்தினமாலை.

இந்தப் பதில்களைப் பார்த்து நிஜகுணன், தனக்குள்ளேயே சிரித்தவாறு மற்றொன்றை உற்சாகம் இன்றிப் பிரித்தான். அதில் கூட தனக்கு நிறைவை அளிக்கவல்ல பதில் இருக்காது என்று கருதினான். ஆனால் படித்துக் கொண்டிருந்த பொழுதே, முதல் கேள்வியின் பதிலே அவனுடைய உற்சாகமற்ற தன்மையை அகற்றிவிட்டது.

கேள்வி : வாழ்க்கையுடன் இணைந்துள்ள மரணம் எது?

பதில் : கவலை

கேள்வி : எது அமுதப் பெருக்கு?

பதில் : இனிமையான, மென்மையான சொற்கள்

கேள்வி : மனிதகுலம் தோன்றியதன் பயன் என்ன?

பதில் : தான்யார் என்று அறிவது

கேள்வி : உருக்குலையாத அணிகலன் எது?

பதில் : கல்வி.

நிஜகுணன் இந்தப்பதில்களைப் படித்துவிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். ஆனால் அவற்றை எழுதியவள் சர்வமங்கலையா, மதுமதியா என்பது தெரியவில்லை. ''அன்னையே இந்தப் பதில்களை எழுதியது யார்?'' என்று கேட்டான். மகேசுவரி தடுமாற்றத்துடன்.

''குமாரா, அது எனக்கு எப்படித் தெரியும்? இருவரும் எழுதிக் கொடுத்தனர். உன்னிடம் கொண்டு வந்து கொடுத்தேன். அவ்வளவுதான். நான் அவர்களின் பின்னால் ஆவலுடன் நின்று பார்க்க வில்லையே'' என்று கூறினாள்.

நிஜகுணன் சிரித்தவாறு ''ஓ, சரி, சரி, ஆனால் அம்மா, இங்கு பார் என்னுடைய கேள்விக்குச் சரியான பதில் கிடைத்துள்ளது. இதை எழுதியது யார் என்று எப்படி அறிந்து கொள்வது? அவர்களையே எப்படிக் கேட்பது?'' என்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மகேசுவரி ஒன்றும் தெரியாதவளைப் போல ''எனக்கு எதுவும் தோன்றவில்லை. நீ கூறியதைப் போலக் கேட்பதுதான் என் வேலை'' என்றாள்.

நிஜகுணன் சிறிது நேரத்திற்கு யோசித்துவிட்டு ''அம்மா, எனக்கு ஒழி உபாயம் பளிச்சிடுகிறது. நான் படிக்கும் அறையில் மறைவாக இருக்கும்படி ஏற்பாடு செய்து கொடு. அங்கு நான் அமர்ந்து கொள்கிறேன். நான் அங்கு இருப்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தாமல் அவர்களை அந்த அறைக்குப் புத்தகங்களைக் காட்டும் காரணத்தைக் கூறி அழைத்துக் கொண்டு வா'' என்று கூறினான்.

மகேசுவரியும் அதனை ஏற்றுக் கொண்டு கிளம்பிச் சென்றாள். நிஜகுணன் தன்னுடைய யோசனையை எண்ணித் தானே சிரித்துக் கொண்டு படிக்கும் அறையை நோக்கிச் சென்றான்.

சர்வமங்கலை - மதுமதி - இருவரையும் அழைத்துக்கொண்டு அறையிலே நுழைந்த மகேசுவரி, ''பாருங்கள், இது இளவரசன் படிக்கும் அறை. இங்கு படித்துக் கொண்டு இருந்தால் அவ்வளவுதான். இந்த உலகத்தையே மறந்து விடுவான். இதோ-இங்கு பாருங்கள். ஏதேதோ எழுதி இருக்கிறான். எழுதுவது-படிப்பது. இவ்வளவுதான் அவனது உலகம்'' என்று அவள் கூறினாள். அறையைச் சுற்றிக் காட்டினாள். அருகிலிருந்த விருந்தினர் ஓய்வு கொள்ளும் வீட்டின் சாளரத்தின் அருகே இதைப் பார்த்தவாறு அமர்ந்து கொண்டிருந்த நிஜகுணனுக்கு, அவர்களை அருகாமையில் காண இயன்றது. பேச்சுக்கள் தெளிவாகக் கேட்டன.

அறையின் நடுப்பகுதியில் இருந்த ஒரு உயரமான பீடத்தின் மீது அவர்கள் இருவரும் எழுதிய பதில்கள் இருந்த காகிதங்களைப் பார்த்தவுடனேயே தென்படுமாறு வைக்கப்பட்டிருந்தது. சரியான பதில்கள் எழுதப்பட்டிருந்த காகிதத்தின் மீது கொட்டை எழுத்துக்களில் ''பதில்கள் சரியாக உள்ளன. எழுதியவள் வல்லவளாகவும் ஆன்மீக இயல்பு உள்ளவளாகவும் இருக்கக் கூடும்'' என்று எழுதப்பட்டிருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சர்வமங்கலை ஒவ்வொரு புத்தகத்தையும் புரட்டிப் பார்த்தாள். ஒரு பீடத்தின் மீது நிஜகுணன் எழுதிய சில கவிதைகள் இருந்தன. ஏதோ பெரிய செல்வம் கிடைத்ததைப் போல மகிழ்ச்சி நிறைந்தவளாக, அந்தக் கவிதைகளை ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டு படிக்கத் தொடங்கினாள். அவள் அமர்ந்திருந்த இருக்கையானது நிஜகுணனுக்கு எதிரிலே இருந்தது.

அவள் மதுமதி இருந்த பக்கமாகத் திரும்பி "ஏய் மது இங்கே வா இங்கு பார். இந்தக் கவிதைகள் எவ்வளவு நன்றாக உள்ளன!" என்று கூறினாள்.

மதுமதி அவள் அருகிலே அமர்ந்தவாறு "என்ன கவிதைகளோ, என்ன புத்தகங்களோ, எனக்கு மிகவும் சோர்வாக உள்ளது" என்றவாறு சோம்பல் முறித்தாள்.

நிஜகுணனிற்கு இப்பொழுது மங்கலை யார்? மதுமதி யார் என்பது தெளிவாகிவிட்டது.

சில கவிதைகளை மதுமதியிடம் கொடுத்தவாறு "இவற்றைப் படித்துப் பார். உன் சோர்வு எல்லாம் அகன்று விடும்" என்றாள் ஆனால் அவள் அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

உற்சாகமில்லாமலே அந்தக் கவிதைகளை கீழே வைத்துவிட்டு ஐயோ, "இத்தகைய கவிதைகளைப் படித்தால் என் மூளை கெட்டுவிடும். நீயே படித்துக் கொண்டு இரு. நான் சிறிது நேரத்திற்குத் தோட்டத்தையாவது சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று கூறிய மதுமதி எழுந்து வெளியே சென்றாள். மகேசுவரி எப்பொழுதோ சென்று விட்டாள். சர்வமங்கலை கவிதைகளைப் படித்துக் கொண்டிருந்தாள். படித்துக் கொண்டிருந்த பொழுது அவற்றின் பாவத்திற்குத் தகுந்தாற் போல் அவளுடைய முகமும் மாற்றமடைந்து கொண்டிருந்தது. இடையிடையே "ஓ! எவ்வளவு நன்றாக விவரித்துள்ளார். இந்த வர்ணனை மிகவும் நன்றாக உள்ளது." என்று உணர்வு பூர்வமாகக் கூறிக் கொண்டிருந்தாள். அறையிலே அவள் ஒருத்தியே இருந்தாள். எழுந்து வந்து கதவைச் சிறிது ஒருக்களித்து விட்டு மீண்டும் படித்தவாறு அமர்ந்து கொண்டாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இடையிடையில் சில நிமிடங்கள் கண்களை மூடியவாறு அமர்ந்து கொள்வாள். ஆனந்தச் சுவையிலே அவள்முகத்தை அமிழ்த்தி எடுத்ததைப் போலிருந்தது. அழகு தேவதையே அங்கு அமர்ந்து இருப்பதைப் போல நிஜகுணனிற்குத் தன்னுடைய கற்பனையின் லட்சிய தேவதையான மைத்ரேயியே சர்வமங்கலையாகத் தென்பட்டாள். ''எனக்கு ஈடான, தக்க, நான் விரும்பிய வாழ்க்கைத் துணையாவதற்குத் தகுந்தவள் இவள். ஆனால் அவள் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமே. அவள் மனத்திலே என்ன உள்ளதோ?'' என்று கருதிய நிஜகுணன் ''தனியாக, இருந்த மங்கலையிடம் இப்பொழுதே ஒப்புதலைக் கேட்டால் எப்படி இருக்கும்''? என்று ஆலோசித்து விருந்தினர் ஓய்வு எடுக்கும் வீட்டின் இந்தப்பக்கமாக வந்தான்.

படிக்கும் அறையின் கதவு திறக்கப்பட்ட சத்தம் கேட்டது. படிப்பதில் தன்னை மறந்திருந்த மங்கலை, தலையை நிமிர்த்தாமலேயே ''வா மதுமதி, இங்கு பார். இந்தச் சரணத்தில் எத்தனை பக்திப் பரவசத்துடன் பாடியுள்ளார்!'' என்று கூறியவாறு தலையை மேலே நிமிர்த்தினாள். நிஜகுணனைக் கண்டு, பளீரென்று மின்னலால் தாக்கப்பட்டவளைப் போல, நாணமும் அச்சமும் கொண்டு அவசர அவசரமாகத் தலைப்பைச் சரி செய்து கொண்டு எழுந்து நின்றாள். அதிகாலை நேரத்தில் கோயிலிலே கண்ட அந்த ஆடவன் அரசனுக்குரிய உடுப்புடன் புன்னகை பூத்தவாறு அவள் எதிரிலே நின்று கொண்டிருக்கிறான்.

அவனுடைய இந்தப் படிக்கும் அறைக்குள் வந்து இருக்கக் கூடாது என்று எண்ணினாள். சர்வமங்கலை மெதுவாக நடுங்கிக் கொண்டிருந்தாள் ''இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று எதுவும் தோன்றவில்லை. ஓ, அப்படியானால் நிஜகுணன் என்றால் அது இவராகத்தான் இருக்க வேண்டும்'' என்று கருதிய அவள், இன்னும் அதிகமாக நாணமடைந்து அடக்கமாக நின்றாள். நிஜகுணன் கதவை நன்றாகத் திறந்து கொண்டு, மங்கலையின் எதிரிலிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டே ''அமர்ந்து கொள்ளுங்கள் மங்கலாதேவி'' என்று கூறினான். மங்கலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தலையை நிமிர்த்தாமலே "மன்னியுங்கள், அன்னையார் இங்கு அழைத்துக் கொண்டு வந்தார். நானே இங்கு வரவில்லை. அப்படியே படித்தபடி நான் அமர்ந்து கொண்டுவிட்டேன்" என்று முன்நோக்கி நடந்தாள்.

"ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள், உங்களிடம் ஒரு விஷயம் கேட்கவேண்டி உள்ளது" என்று நிஜகுணன் கூறியதும் வேறு வழியின்றி அவள் தலையைக் குனிந்தவாறு அடக்கத்துடன் அமர்ந்து கொண்டாள்.

"காலையில் நீங்கள் எழுதினீர்கள் அல்லவா அந்தப் பதில்கள் சரியாக உள்ளன" என்று பதில் எழுதிய காகிதங்களை வைத்திருந்த பீடத்தின் அருகிலே வந்து நின்று கொண்டு அவற்றைத் தேடுவது போல நடித்து "இது என்ன? இப்பொழுதுதானே இங்கு வைத்திருந்தேன் இத்தனை வேகமாக அதை யார் திருடிக் கொண்டனரோ"? என்று நிஜகுணன் கூறினான்.

மங்கலை இப்பொழுது உண்மையிலேயே அஞ்சினாள். அதை ஒளித்து வைத்துக் கொண்டவள் நான்தான். அதை எப்படித் திருப்பிக் கொடுப்பது? அதை அப்படியே விடுவதும் சரியாகாது.

ஆனால் நிஜகுணன் ஒன்றும் அறியாதவனைப் போல, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தான். கடைசியில் மங்கலை தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "இங்கு பாருங்கள், அதை நான்தான் எடுத்துக் கொண்டேன்" என்று எச்சிலை விழுங்கியவாறு, அதனை நிஜகுணனிடம் கொடுத்தாள். நாணத்தினால் சிவந்திருந்த, அழகிய அந்த முகத்தைப் பார்த்த நிஜகுணன் அவளை நேருக்கு நேராகச் சில நிமிடங்கள் பார்த்துவிட்டு "ஓ, நீங்கள் தான் கள்ளரா? எப்படியோ மிகவும் விரைவில் பிடிபட்டுவிட்டீர்கள்" என்று சிரித்தவாறு கூறினான்.

மங்கலை "நான் செல்கிறேன்" என்று எழுந்து நின்றாள். நிஜகுணன் அதற்கு இடம் அளிக்காமல் "இங்கு பாருங்கள் எனக்கு எழுதிய பதிலை நீங்கள் எதற்காக எடுத்துக் கொண்டீர்கள்?"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


என்று கேட்டான். அவள் மௌனமாக இருந்தாள். கூற வேண்டுமாயினும் என்ன என்று கூறுவது?

அவள் மனத்தின் ஆழத்தில் இருப்பதை வெளியே கொண்டுவர வேண்டும் என்பதற்காக நிஜகுணன், ''கீழே எழுதப்பட்டிருந்த என்னுடைய எழுத்துக்களுக்காகத்தானே?''

மங்கலை தன்னுடைய குட்டு வெளிப்பட்டதைக் கண்டு நாணி, இன்னும் தலையைக் குனிந்து கொண்டு மிகவும் அடக்கத்துடன் அமர்ந்து கொண்டிருந்தாள்.

''மங்கலாதேவியே, இங்கு பாருங்கள். அந்த எழுத்துக்களின் மீது அவ்வளவு அன்பு இருக்கும் பொழுது அவற்றை எழுதியவனைத் திருமணம் செய்து கொள்வதற்கு சம்மதமா?'' என்று நேரடியாக அவளைக் கேள்வி கேட்டான். மங்கலை இருகைகளாலும் முகத்தை மூடிக் கொண்டுவிட்டாள்.

''இப்படி அமர்ந்துகொண்டிருந்தால் நான் என்ன என்று தெரிந்து கொள்வது? சம்மதம் இல்லை என்றா''?

''போகட்டும் விடுங்கள். சம்மதம் இல்லை என்றால் வேண்டாம்'' என்று அங்கிருந்து கிளம்புவதைப் போல நிஜகுணன் நடித்தான்.

மங்கலை இப்பொழுது அச்சப்பட்டாள். முகத்தை மேலே நிமிர்த்தி ''அந்தப்பேறு எனக்குக் கிடைக்கும் எனின் உங்களுக்குத் தொண்டாற்றி என் வாழ்க்கையைப் பயன் உடையதாக ஆக்கிக் கொள்வேன்'' என்று கூறுவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது.

நிஜகுணன் தன்னுடைய நடிப்பின் போக்கைக் கண்டு தானே சிரித்தவாறு, அவளுடைய பதிலால் மகிழ்ச்சியடைந்து மீண்டும் வந்து அமர்ந்து கொண்டான்.

''உங்களுடைய பதிலால் நான் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறேன். உங்களை மனைவியாக அடைந்தால் நானும் பேறு பெற்றவன்தான்'' என்று கூறினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''நான் கிளம்புகிறேன்'' என்று மங்கலை எழுந்து நின்று நிஜகுணன் இருந்த பக்கமாகப் பார்த்தாள். நிஜகுணனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். யுகயுகங்களின் பலபிறவிகளில் ஏற்பட்ட தொடர்பை அவர்கள் பரிமாறிக்கொண்டபொழுது, அந்தக் கண்களின் இணைவால் புளகம் அடைந்தனர். அவள் கிளம்பும் முன் அவனுடைய பாதத்தை வணங்கிவிட்டு அங்கிருந்து திரும்பும் பொழுது ''இதோ, பதில் எழுதிய இந்தக் காகிதமானது உங்களிடமே இருக்கட்டும்'' என்று அதை அவளுடைய கையிலேயே கொடுத்தான். மங்கலை, அங்கிருந்து கிளம்பினால் போதும் என்று வெளியே ஓடிவிட்டாள்.

நிஜகுணன் மங்கலையைத் தான் ஒப்புக்கொண்டு இருப்பதாக அன்று இரவே தாயிடம் தெரிவித்தான். அதைக் கேட்டதும் மகேசுவரி தனிப்பட்ட முறையில் அகமகிழ்ந்தாள். சில நாட்களிலேயே நிஜகுணனின் முடிசூட்டு விழாவும் திருமண உற்சவமும் அரசகுரு, அமைச்சர்கள், அதிகாரிகள் என்னும் அனைவரும் நிறைந்திருந்த ரகசிய அவையில் நிச்சயிக்கப்பட்டன.

பட்டாபிஷேகம், திருமண உற்சவம் போன்றவற்றின் சந்தடி, அமர்க்களம் போன்றவை முடிந்து அரண்மனையானது இப்பொழுது அமைதியாக உள்ளது. இன்று சுபமுகூர்த்தத்தில் அரசியார் சர்வமங்கலையைத் தன் வீட்டிலே நிறைத்துக் கொண்டு விட்டார். அரசியார் மகேசுவரிதேவிக்கு மிகமிக மகிழ்ச்சி ஏற்பட்டது. அரசன் நிஜகுணன் மனம் விரும்பிய மெச்சிய மனைவியின் வரவால் மகிழ்ச்சி. பணியாட்கள் பணிப்பெண்களிடமும் ஒரு வகையான களையே நிறைந்து இருந்தது. அரியணைப் பொறுப்பு அனைத்தையும் அரசன் நிஜகுணனிடம் ஒப்படைத்து முதலமைச்சர் சிவகுமாரர் எத்தகைய கவலையும் அற்று இருந்தார்.

அன்று இரவு அரசன் நிஜகுணன் சர்வமங்கலையரின் முதல் இரவு. தம்பதிகள் ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கும் அழகிய இரவு. தாம்பத்திய வாழ்க்கையிலே மறக்கவியலாத அரிய இரவு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அந்தப்புரத்தின் மேல் உப்பரிகையிலுள்ள துயில்கொள்ளும் அறையானது சிறப்பாக, நேர்த்தியாக, அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த மென்மையான மெத்தைகளுடன் கூடிய கட்டில்கள். பீடங்கள் - இருக்கைகள் போன்றவை நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தன. தின்பண்டங்களும் பானங்களும் வெள்ளித் தட்டுகளில் வைக்கப்பட்டு, மெல்லிய பட்டு விரிப்பால் மூடப்பட்டிருந்தன. உயரமான நிலைக் கண்ணாடிகள் சுவற்றிலே அங்கங்கு தொங்கிக் கொண்டு இருந்தன. சிருங்காரச்சுவை ததும்பும் சில படங்கள் அந்தச் சூழ்நிலைக்குக் களையை மிகுதியாக்கிக் கொண்டு இருந்தன. கீழே இருந்த நடனக் கூடத்திலிருந்து நடனமாடிக் கொண்டிருந்தவளின் காற்சலங்கையின் ஒலியும், வீணையின் நாதமும், பாடிக் கொண்டிருந்தவளின் குரலின் இனிமையும் மனத்திற்கு இதமாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

''ஸர்வ அலங்கார பூஷிதை'' யாக விளங்கிய மஹாராணி சர்வமங்கலை, தன் மாமியார் மகேசுவரி தேவியின் பாதங்களில் பணிந்தாள். அவர் மருமகளைத் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டு ''தீர்க்கசுமங்கலியாக பல குழந்தைகளும் பெறும் பேறு பெற்றவளாக, உன் கணவன் மெச்சிப் பாராட்டும் மனைவியாக வாழ்வாய் இந்த நாட்டிற்கே தாயாக விளங்குவாய்'' என்று இதயம் நிறைந்து வாழ்த்தினாள்.

அவர் மருமகளைப் பணிப்பெண்கள், தோழிகள் சுமங்கலிகளுடன் உப்பரிகைக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் அனைவராலும் சூழப்பட்டு மங்கலை, மெதுவாக நடந்து நாணத்துடன் வந்து நின்றாள். படுக்கை அறையின் கதவின் எதிரில், சுமங்கலிகள் அவளை உள்ளே அனுப்பி, திரையை மூடிவிட்டுக் கதவைச் சாத்திவிட்டு அங்கிருந்து கிளம்பிச் சென்றனர்.

உள்ளே அடிவைத்து, மங்கலை ஒருமுறை சுற்றிலும் பார்வையைச் சுழலவிட்டாள். இணைத்து வைக்கப்பட்டிருந்த அந்த மென்மையான மெத்தைகளின் மீது கதவின் பக்கமாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


முதுகைக் காட்டியவாறு எதையோ எழுதுவதில் தன்னை மறந்திருந்த கணவனின் தூய்மையான உருவத்தைக் கண்டாள். புறவுணர்வு இல்லாமலேயே எழுதிக் கொண்டிருந்தார் அரசர் நிஜகுணர். தன்னால் தடைப்பட்டுவிடக் கூடாது என்று மூச்சை இறுக்கிப்பிடித்து, காற்சலங்கை, கைவளையல்களின் ஒலி எழாதவாறு கவனத்துடன் நின்ற இடத்திலேயே மங்கலை நின்று விட்டாள்.

நீண்ட நேரம் ஆனபிறகு, எழுதுவதை நிறுத்திவிட்டு "ஓம் சம்புலிங்கம்" என்று கூறியவாறு எழுந்து கதவு இருந்த பக்கமாகச் சென்றபொழுது கண்ணைப் பறிக்கும் அழகி தலைகுனிந்து நின்று இருப்பதைக் கண்டு, அவள் பக்கத்திலே வந்து கையைப் பிடித்துக் கொண்டு.

"மங்கலா, நீ வந்து நீண்ட நேரம் ஆயிற்றா? நான், கவனிக்கவே இல்லை" என்று கூறினார்.

மங்கலா, கணவனின் அந்தத் தீண்டுதலால் கூறுவதற்கு இயலாத மகிழ்ச்சியை அனுபவித்தாள். கணவரின் கேள்விக்குப் பதிலளிக்கும் தைரியம் அவளிடம் இருக்கவில்லை.

அவளை அழைத்துக் கொண்டு, இருக்கையில் அமரச் செய்து, தாமும் அவள் அருகிலேயே அமர்ந்து கொண்டார். மங்கலா நாணத்துடன், மூச்சை இழுத்துப்பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவள் படும்பாட்டை அறிந்து கொண்டு அவளுடைய தாமரைமுகத்தைத் தன் உள்ளங்கைகளால் பிடித்து நிமிர்த்தினார்.

"தேவி, எவ்வளவு வெட்கப்படுகிறாய்? இப்படியே நீ மௌனவிரதத்தைக் கடைப்பிடித்தால் எனக்கு வருத்தமாக இருக்கும் எங்கே, பேசு."

மங்கலா கணவரின் சொல்லைக் கேட்டு புன்னகை பூத்தாள்.

"என்ன பேச வேண்டும்"? என்னும் மென்மையான ஒலியில் நட்புணர்ச்சி வெளிப்பட்டது. அதற்கு வசமானவர் போல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிஜகுணர், விண்மீன்களைப் போன்று ஒளிர்ந்து கொண்டிருந்த கண்களில் முத்தமிட்டார்.

"ஏதாவது பேசுவாய். இந்த மௌனம் வேண்டாம்" என்ன பேச வேண்டும் என்பதை நீண்ட நேரத்திற்கு யோசித்தாள். மங்கலா.

"அரசே! இப்பொழுது ஏதோ எழுதிக் கொண்டு இருந்தீர்கள் அல்லவா. அது என்ன? நான் பார்க்கலாமா?"

"நீ வருத்தப்படாமல் இருந்தால் நானே படித்துக் காட்டுகிறேன்" என்று மனைவியைச் சூட்சுமமாகப் பார்த்தவாறு கூறினார்.

"நீங்கள் எழுதியிருப்பதைப் படிப்பதற்கு எனக்கு விருப்பமின்றி இருக்குமா"? என்று மங்கலை வியப்புக் கலந்த மெல்லிய ஒலியில் கேட்டாள்.

அரசர் மனைவியின் உற்சாகத்தைக் கண்டு அன்புடன் அவளை அருகில் அழைத்துத் தழுவி "தேவி, என்னுடைய எழுத்தைக் குறித்து உனக்கு உள்ள உற்சாகத்தைக் கண்டு எனக்கு மிகவும் சமாதானமாக உள்ளது" என்று எழுந்து சென்று, ஓலைச் சுவடியின் பிரதியை எடுத்துக் கொண்டு வந்து, அமர்ந்து கொண்டு, மனைவியை ஒரு கையினால் தன் பக்கமாகத் திருப்பி.

"அப்படியானால் கேள்" என்று படிக்கத் தொடங்கினார்.

"ஶிவபக்தையின் திருமண வைபவத்தைக் காண்மின் ।
பரமானந்தக் கடலிலே மகிழ்ந்தாடுவீர் ॥

அலங்கரித்த சுபமான அழகிய கோயிலின்! சப்பரமம்மா ।
மங்கல சதுரமணையின் அழகிய தூய! மேடையம்மா ।
ஒளிரும் கலசங்களுடன் புனைந்தகுடம்! நிறைந்ததம்மா ।
பின்னிடாது பொலியும் தளிர் திரளாக! விளங்கியதம்மா ॥
(1)

கலச நீரிலே மிதந்து தூயவளை! நீவியதம்மா ।
ஞானமாம்கைலாய மலையின் அன்பை உடுக்க அழகு!
கூடிற்றம்மா ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


*விபூதி தரித்த ருத்திராக்கமணி! அணியாயிற்றம்மா ।*
*ஒளிரும் மங்கலமயகர கமலத்திரள்! பொலிந்ததம்மா ॥ (2)*

*நிறைந்தோர் மங்கலம் கூற சுமங்கலியர்! அருகிலிருக்க ।*
*முறையான ஆகமவிதியுடன் இசைக் கருவிகளின்!*
*முழக்கமம்மா ॥*
*நல் மந்திரங்களுடன் இனிய சோபனப் பாடல்கள்!*
*ஒலித்ததம்மா ।*
*சரிந்தது மாயை, மல வினைகளின் திரை! அப்பொழுதம்மா ॥*
*(3)*

*பஜனை, பக்தி எனுமிவை சீரகம் வெல்ல! மாயின அம்மா ।*
*உண்மையான தீட்சை நேரத்தில் நல்முகூர்த்தம்!*
*ஏற்பட்டதம்மா ॥*
*நல்லோரின் புகழுரையே மங்கலப் பாடலம்மா ।*
*மூவுலகிலும் சிறந்த குருதிருவருளின் கை! தாரையம்மா ॥*
*(4)*

*ஒளிரும் உயர்ந்த அரண்மனையிலே ஊர்வலம்! நடந்ததம்மா ।*
*குறையற்ற சம்புலிங்கனே! மணமகன் அம்மா ॥*
*அழகுற ஒளிர்ந்து அகலாத அன்புடன்! கைபிடித்தனனம்மா ।*
*பரிபக்குவ சுமங்கலி சிவபக்தையான மணமகள் உண்மை*
*காணீரம்மா ॥*

பாட்டைக் கேட்டவாறு மங்கலா மெய் மறந்தாள். நிஜகுணர் மனைவியின் முகத்தை மெதுவாக நிமிர்த்திப் ''பாடல் எப்படி உள்ளது தேவி? பொருள் புரிந்ததா?'' என்று கேட்டார்.

''அற்புதமாக இருக்கிறது பிரபு. நம் திருமணத்தின் மங்கல நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணி குருவின் உபதேசம் அல்லது தீட்சை அளிக்கும் விதிமுறைகளுக்குப் பொருந்துமாறு எழுதியுள்ள முறையானது மிக நன்றாக உள்ளது. இதைவிட மேலாக விவரிப்பதற்கு என்னால் இயலாது'' என்று தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு மங்கலை கூறினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"சரி, சுருக்கமாக இருப்பினும் சரியாகவே கூறியுள்ளாய். என் பாடலின் உண்மையான உணர்வை உணர்ந்து கொள்ளத்தக்க மனைவி அமைந்தது நம்முடைய புண்ணியம் அல்லவா தேவி"?

"மகிழ்ச்சியால் பேச இயலவில்லை பிரபு. நான் பேரரசரை மணந்துகொண்டிருக்கிறேன் என்னும் சாமான்னியமான மகிழ்ச்சியைக் காட்டிலும் கவிச்சக்கசரவர்த்தியை அடைந்திருக்கிறேன் என்னும் பெரும் பேற்றினால் பேச இயலவில்லை."

"நாம் இருவரும் ஒருவருக்காக மற்றொருவர் தவம் செய்து காத்துக்கொண்டு இருந்தவர்கள். எனவேதான் சம்புலிங்கம் நம் இருவரையும் இணைத்துள்ளான். "சரி தேவி, இந்தப் பாடலைக் கேட்பாய்.

"கணவன்-மனைவியரின் ஒருமித்த இன்பவாழ்விற்கு ।
இவ்வுலகிலே இணையாக வேறுள்ளதோ,
அழகியே காண்" ॥

மங்கலையைக் கண்ணொடு கண்வைத்து ஒருமுறை பார்த்துவிட்டு பிறகு மீண்டும் படிக்கத் தொடங்கினார்.

"கண்கள் நிலைத்த சந்திர-சூரிய வீதி நடுவிலே ।
அழகு நிறைந்த நீல அரண்மனையின் நடுவிலே ॥
ஈர்க்கும் நிறத்திலே மெத்தையுடன் கூடிய கட்டிலிலே ॥
இணைந்து வந்து பரவசத்துடன் ஒருமித்து ॥

நிஜகுணர் மனைவியின் முகத்தை ஒரு முறை திருப்புவதற்கு முயற்சி செய்தார். மங்கலா மிகவும் நாணத்துடன் முகத்தை மூடிக்கொண்டாள். அந்த மூடப்பட்டிருந்த முகத்தையே தன் பக்கமாகத் திருப்பிக் கொண்டு,

"இணைந்து வேறாகாத ரத்தினமணிகள் ।
ஒருமித்துப் பொலிவதனைய கணவன் சம்புலிங்கன் ॥
பக்தை மனைவியைக் கூடி பரமானந்தத்திலே ।
பரவசத்திலிருப்பதை உவமிக்க இயலுமோ ॥

பாட்டை முடித்துவிட்டுப் பேரரசர் சிரித்தவாறு கூறினார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)


''தேவி, எங்கு, இப்பாடலின் பொருளைப் போன்று செய்வாய், பார்க்கலாம்''- மங்கலையின் முகமானது நிமிர்த்தப்படாமலேயே செந்தாமரையாயிற்று.

''அதை என்னால் உவமிக்க இயலாது'' என்று கூறி நிஜகுணரின் கையை மென்மையாகப் பிடித்துக்கொண்டு, முழு நிலவு ஒளிர்ந்து கொண்டிருந்த சாளரத்தின் பக்கமாகப் போய் நின்றாள். அரசர் நிஜகுணர் அவளைப்பின்பற்றி பின்னால் நின்றுகொண்டு, முழுநிலவை ஒத்த தன் மனைவியின் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பிக் கொண்டார்.

பிரம்மமுகூர்த்தத்தில் மங்கலைக்கு விழிப்பு ஏற்பட்டபொழுது அருகில் கணவரைக் காணாமல் எழுந்து உட்கார்ந்து கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். கிழக்குத் திசையிலே ஒரு அரிய காட்சியைக் கண்டு அவள் அச்சம், வியப்பு என்னும் எல்லாம் சேர்ந்து அதிர்ச்சியால் தூண் போல நின்றாள்.

பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருந்த புதுவகையான மண்டபத்தில், சந்திரபீடத்தின் மீது இருந்த புலித்தோலின் மீது, பத்மாசனத்தில் ஞானமுத்திரையுடன் அகமுகமாக அமர்ந்திருந்த (மனத்தை உள்முகமாகத் திருப்பி) தன் கணவர் நிஜகுணரைக் கண்டாள். தன் கணவரைச் சுற்றிப் படர்ந்திருந்த சூரிய மண்டலத்தைப் போலத் தோன்றும் பொன்வண்ண ஒளிக்கதிர்களால் அவள் ஈர்க்கப்பட்டாள். முதல் இரவின் தொடக்கத்திலேயே தன் கணவரின் கவிதை இயற்றும் புலமையைக் கண்டு மகிழ்ச்சி அடைந்திருந்தாள். அதே இரவின் இறுதி ஜாமத்திலே சாத்தியமற்ற நிகழ்வினைக் கண்டவளைப் போல வியப்படைந்தாள்.

அவள் காலடியின் ஒலியும் ஏற்படாதவாறு சென்று நிஜகுணருக்குச் சிறிது தொலைவில் ரத்தினக் கம்பளத்தின் மீது அமர்ந்து கண் இமைக்காமல் யோகத்திலே மூழ்கியிருந்த மங்கல வடிவத்தைப் பார்க்கத் தொடங்கினாள். நிஜகுணரின் அகன்ற அடர்த்தியான ரோமத்துடன் கூடிய மார்புப் பகுதியானது நிதானமாக ஏறி, இறங்கிக் கொண்டிருந்தது. அவர் மூச்சு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


விடுவதால் ஏற்படும் அந்த சுநாதமானது ''ஶிவோऽஹம்'', ''ஶிவோऽஹம்'' என்பதைப் போன்றே கேட்டுக் கொண்டிருந்தது. நறுமணமானது அவரைச் சுற்றிலும் படர்ந்திருந்தது. முகத்தின் மீது ஶிவக்களையானது பெருகிக் கொண்டிருந்தது. அவருடைய உடலானது பொன்வண்ணத்தைப் பெற்றிருந்தது.

அசையாமல் அமர்ந்திருந்த கணவரின் புனிதமான உருவத்தை, தன் ஸ்வாமியை, மேலான கடவுளைக் கண்ணை விரித்து, இதயம் நிறைந்து பொங்கிப் பாயுமாறு பார்த்து நிறைவு அடைந்தாள். இத்தகைய மகாபுருஷனை, மகானைக் கைப்பிடித்த பாக்கியம் தன்னுடையது என்று எண்ணி அவளுடைய மார்பானது பெருமையால் பூரித்தது. புண்ணியத்திரளானது ஓர் உருப்பெற்றதைப் போல அமர்ந்து கொண்டிருக்கும் அந்த அழகிற்கு, என்றுமே காணாத கேட்டறியாத ஒளிவட்டத்திற்கு அவள் மனத்தைப் பறி கொடுத்தாள். தான் அங்கு அமர்ந்திருப்பதைக் கண்டு அவர் என்ன நினைப்பாரோ என்று எண்ணி, மெதுவாகத் தொலைவிலிருந்தே வணங்கி விட்டு அங்கிருந்து அகன்றாள்.

நிலைக்கண்ணாடியின் முன்பு நின்று கொண்டு நேற்று இரவு சூட்டிக்கொண்ட மல்லிகைப்பூவை எடுத்துவிட்டு, முடியைச் சரிசெய்து கொண்டவாறு, தன் கணவருடன் மிகவும் விழிப்புடன் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். அவருடைய விருப்பத்திற்கு எள்ளளவும் தடையாக இருத்தல் கூடாது. அவருடைய ஆன்மீகப் பயிற்சிக்குத் தன்னால் இயன்ற அளவிற்கு உதவி புரிய வேண்டும். சிறிது நேரத்திற்கு முன்பு ''ரசிகசிகாமணி''யைப் போல இருந்த தன் கணவர் கம்பீரமான தவம் செய்யும் புருஷராகவும் விளங்குகிறார் என்று தனக்குள்ளேயே தானே சிந்தித்தவாறு, புடவையின் கொசுவங்களைச் சரி செய்து கொண்டவாறு, குங்குமதிலகத்தைச் சரியாக இட்டுக் கொண்டு, பாதி மலர்ந்து நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்த மல்லிகை மொக்குகளின் கண்ணியைத் தலையிலே வைத்துக் கொள்வதற்காகக்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)


கண்ணாடியில் பார்த்தபொழுது, அங்கு தன் பின்னால் புன்னகை புரிந்து கொண்டிருந்த தன் கணவரைக் கண்டு நடுங்கிவிட்டாள். நடுங்கிய தன் மனைவியை அப்படியே தன் மார்பிலே அணைத்துக்கொண்டு அவள் கையில் வைத்துக் கொண்டிருந்த மல்லிகைக் கண்ணியை அவரே வைத்துவிட்டு, முகத்தை மேலே நிமிர்த்தியவாறு நிஜகுணர் கேட்டார்.

''இனிமையான கனவா மங்கலா?''

''ஆம் அரசே, ஒரு சுபமான கனவைக் கண்டேன்'' என்று இதயத்தைத் தொடும் வகையில் மங்கலா கூறினாள்.

''என்ன அது? சொல் பார்க்கலாம்.''

''இல்லை, இல்லை, அதைக் கூறவியலாது'' என்றாள். ''இல்லை, கண்டிப்பாகக் கூற வேண்டும். கூறாவிட்டால் இன்று நாள் முழுவதும் இந்தச் சிறையிலேயே இருக்க வேண்டியிருக்கும்'' என்று அவளை ஆரத் தழுவினார். அந்தப் பிடியின் இறுக்கத்தைத் தாங்கவியலாமல் மூச்சடைக்க,

''உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் என்னை விட்டு விடுங்கள், கூறுகிறேன்.''

''கூறியபிறகு தான் விடுவேன்.''

''அப்பா, நீங்கள் மிகவும் குறும்புக்காரர்.''

''ஓ, அம்மா ஒருவர் மட்டுமே அவ்விதம் கூறிக் கொண்டிருந்தார். இப்பொழுது அவருடன் நீயும் சேர்ந்து கொண்டுள்ளாய். அவ்வளவுதான்.

கீழிருந்து மங்கல இசைக் கருவிகளும் மங்கலப்பாடல்களும் கேட்கத் தொடங்கின மங்கலா. ''சீக்கிரமாக விடுங்கள். மங்கல நீராடுதலிற்காக அழைத்துச் செல்வதற்கு வெளியிலே சுமங்கலிகள் காத்துக் கொண்டுள்ளனர்'' என்று அவசரப்படுத்தினாள் அங்கிருந்து அகலும் எண்ணத்துடன் அவளைவிட ஒரு அடி முன்னால் வைத்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"அதோ, கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. எங்கே விரைவாகக் கூறிவிடு" என்றார் - அவளை விட அவசர அவசரமாக.

இறுதியில் வேறுவழியின்றி

"பாருங்கள் பிரபு! அதோ அங்கு (சிரித்தவாறு) மண்டபத்தில் ஒளிநிறைந்த முகத்துடன் ஷிவக்களைக்கு நிகரான அழகுடன், புண்ணியத்தின் திருவுருவமாகத் திகழும், தன்னை அறிவதில் தன்னை மறந்திருந்த தெய்வத்திருவுருவத்தை, சிறந்த புருஷரைக் கண்டேன். அந்த ஒட்டுமொத்தமான புண்ணிய திருவுருவத்தைச் சுற்றிலும் நான் என்றும், எங்கும் காணாத, படித்தும் கேட்டும் அறிந்து கொண்டிருந்த ஒளிவட்டத்தின் கட்டுக்காவல் இருந்தது. நான் அதைப் பார்த்துப் பேறுபெற்றவள் ஆனேன். அந்தப் புருஷரின் திவ்வியமான சன்னிதியில் என்னுடைய பிறவியைப் பயன் உடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று உறுதி செய்து கொண்டு இந்தக் கண்ணாடியின் முன்பு வந்து நின்றேன். இங்கும் அதே புருஷரைக் கண்டு நடுங்கினேன். விழிப்பு ஏற்பட்டுவிட்டது" என்று மங்கலை உணர்வுப் பெருக்குடன் கூறினாள். இருப்பினும் அவளுடைய கண்களில் குறும்புத்தனம் இருந்தது. நிஜகுணர் வியப்புடன்,

"அப்படியானால் பார்த்துவிட்டாய் என்று சொல். பார்த்தது நல்லதுதான், என்றாவது ஒருநாள் உனக்கு அது தெரியத்தான் வேண்டும். அது இன்றைக்கே தெரிந்தது நல்லதாகப் போயிற்று. பேசுவதில் மிகவும் வல்லவள். நீ சுபமான கனவைத்தான் கண்டு இருக்கிறாய். உன் வாழ்க்கையை அந்தக்கனவு மங்கலமயமானதாகச் செய்யட்டும்" என்று நிஜகுணர் மனைவியின் முன்தலையை வருடினார்.

மங்கலை கணவரிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அவருடைய திருவடிகளில் பணிந்து, பாத தூளியைக் கண்களிலே ஒற்றிக்கொண்டு, உடல் எங்கிலும் தரித்துக் கொண்டாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



''பிரபு, உங்களுடைய அமுதக்கரத்தைப் பிடித்த கணத்திலேயே என் வாழ்க்கையானது புனிதமானதாகிவிட்டது'' என்று மங்கலை இதயம் நிறைந்து கூறினாள்.

மனைவியின் நல்ல எண்ணம் மென்மையான பேச்சுக்களால் நிஜகுணரின் இதயமும் பொங்கியது. பொங்கிய அந்த இனிமையான சாறு மங்கலையின் அதரங்களின் மீது சிந்தியது.

அரசர் நிஜகுணரின் ஆட்சியில் குடிமக்கள் நிம்மதியுடன் இருந்தனர். அமைச்சர்கள், படைத்தலைவர்கள், அதிகாரிகள் என்னும் அனைவரும் அரசரின் ஆணையைத் தவறாமல் பரிபாலித்துக் கொண்டு, தங்களுடைய கடமையைப் பொறுப்புடன் நிறைவேற்றி, கவலையற்று இருந்தனர். கொலை, கொள்ளை, பசி, வேட்கை, கடுந்துயரம், வேதனைகள் என்னும் இவை அந்த நாட்டிலிருந்த மக்களுக்கு அறிமுகமற்று இருந்தன. எனவே அவர்கள் இன்பங்களை அனுபவித்துக்கொண்டு, உன்மத்தம் கொண்டு, அறத்திலிருந்து வழுவி, கெட்ட இயல்புகளுடன் செய்யக்கூடாத செயல்களைச் செய்து கொண்டிருக்க வில்லை. நிஜகுணரின் அரசவையில் அறிஞர்கள், சிற்ப, இசைக் கலைஞர்கள், கவிஞர்கள் - மற்றும் மற்ற கலைஞர்களுக்கு மிகுதியான மதிப்பு இருந்தது. பேரரசரின் பாராட்டைப் பெறுவதற்காக அவ்வப்பொழுது தங்களுடைய கலைத்திறமையை வெளிப்படுத்தி, வெகுமானம் விருதுகள். பாராட்டுதல்களைப் பெறுவார்கள். அதைப்போன்றே பேரரசரின் பாராட்டை வெல்ல வேண்டும் என்னும் விருப்பத்தால் ''ஸங்கீத ரத்னம்'' என்னும் விருதைப் பெற்றிருந்த மல்லிநாத சாஸ்திரி ஓலக்கத்திற்கு வந்து தன்னுடைய இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அந்த நிகழ்ச்சி நடைபெறும் நாள், சமயம் அன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

ஓலக்கத்தில் மக்கள் திரள் நிரம்பி வழிந்தது. அவரவருடைய தகுதி - பதவிகளுக்கு ஏற்ப எல்லா அதிகாரிகளும் தக்க இருக்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தனர். பேரரசர் நிஜகுணர் அரியணையில் அமர்ந்திருந்தார். ஶிவக்களை பெருக்கெடுக்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



முகத்தினால் வைரம் இழைக்கப்பட்டிருந்த மகுடத்திற்கு அரிய சோபையே ஏற்பட்டிருந்தது. அவருடைய இருபக்கங்களிலும் நின்று கொண்டிருந்த பணிப்பெண்கள் சாமரம் வீசிக் கொண்டு இருந்தனர். அரியணையின் எதிரில், வலது பக்கத்தில், அனைவரும் காணும்படியாக ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அந்த மேடையின் மீது மல்லிநாத சாஸ்திரி பொலிவுடன் அமர்ந்திருந்தார்.

இசைக்கச்சேரி தொடங்குவதற்குப் பேரரசர் ஆணையிட்டார். மல்லிநாத சாஸ்திரி வீணையைச் சுருதி கூட்டிக் கொண்டார். அரியணையின் பின்னால் மெல்லிய திரை அமைக்கப்பட்டிருந்தது. அதன் அந்தப்பக்கத்தில் மகேசுவரிதேவியும், பேரரசி சர்வமங்கலை அவளுடைய நெருங்கிய தோழிகள், மற்றும் அரசபரிவார அமைச்சர் பரிவாரத்தினரின் வீட்டுப்பெண்கள், இளம்பெண்கள் அமர்ந்திருந்தனர்.

மல்லிநாத சாஸ்திரிகள் தெய்வங்களான விநாயகர், சரஸ்வதியைத் துதித்துவிட்டு, பேரரசருக்கு வணக்கம் செலுத்தி அவையினரைப்பணிந்து, "சங்கராபரணம்" ராகத்தை ஆலாபனை செய்யத் தொடங்கினார். சங்கராபரண ராகத்திற்கு ஏற்றாற்போல், பக்கவாத்தியக்காரர்களிடமிருந்து தாளமும் லயமும் பொருத்தமுற அமைந்தது. சாஸ்திரிகளின் தொண்டையிலிருந்து இசைகங்கையானது பெருக்கெடுத்து வந்தது. அந்த அவையில் நிலவிய அமைதியானது அந்த இசையின் மெருகைக் கூட்டியது.

நிஜகுணபிரபு அவர்களின் வலப்பக்கத்தில் சாமரம் வீசிக் கொண்டிருந்த ரசவந்தியானவள், பக்கவாத்தியக் காரர்களில் தாளம் போட்டுக் கொண்டிருந்த இளைஞனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இளைஞனும் அழகியான ரசவந்தியின் உருவத்தைக் காணும் சாக்கில், தாளம் போட்டவாறு, கழுத்தை அந்தப்பக்கமாகத் திருப்பி தலையை மேலும் கீழுமாக அசைத்துக் கொண்டிருந்தான். அவன் தலையைத் தூக்கும் வேகத்தில் தலையிலுள்ள முடிகள் எல்லாம் ஆடிக்கொண்டு இருந்தன. உதடுகளை இறுக்கமாக வைத்துக் கொண்டு இருந்த அவனுடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அந்த நிலையைக் கண்டு, ரசவந்தி அந்தச் சிரிப்பை ஏற்படுத்தவல்ல காட்சியில் மெய்மறந்து திடீரென்று சிரித்து விட்டாள். மறுகணமே அவள் அஞ்சி சுதாரித்துக் கொண்டாள். அந்த இளைஞனுக்கு அதைக்கண்டு மின்னல் தாக்கியதைப் போல இருந்தது. அவன் கையின் தாளம் தப்பியது. ஆனால் அதில் அவனுடைய கவனமானது இருக்கவில்லை. ரசவந்தியுடன் ஏற்கனவே அவன் கந்தர்வ நகரத்திலே இசையைக் கேட்டுக் கொண்டிருந்தான். மல்லிநாத சாஸ்திரிகள் ஒருமுறை பின்னால் திரும்பி அவனை ஒரு குத்துக் குத்தி எச்சரித்தார். பகல் கனவிலிருந்து விழித்துக் கொண்ட இளைஞன் இப்பொழுது உண்மையிலேயே அஞ்சினான்.

பேரரசர் நிஜகுணரால் அதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. கலையைக் கொலை செய்ததைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அரியணையிலிருந்து அவர் திடீரென்று எழுந்தார். அவையே அவரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது. அவர் அந்த மேடையின் அருகிலே நடந்து சென்று அந்த இளைஞனைப் பக்கத்தில் தள்ளி, அவரே அங்கு அமர்ந்து கொண்டு தாளம் போட்டார். தம் பக்கத்தில் மிகவும் அருகில் அமர்ந்திருந்த பேரரசரைக் கண்ட சாஸ்திரிகளுக்கு உடல் வியர்த்தது. அவருடைய கைகள் நடுங்கத் தொடங்கின. வாய் உலரத் தொடங்கியது. அவருடைய சங்கராபரணராக ஆலாபனையானது தொடங்கியது.

அவர் எத்தனை முயற்சி செய்தாலும் நடுக்கத்தைத் தடை செய்ய இயலவில்லை. பேரரசரால் இதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. இத்தகைய இசையை என்றுமே அவர் கேட்டிருக்கவில்லை. அவையிலே சலசலப்பு ஏற்பட்டது. பேரரசர் சாஸ்திரிகளிடம் அகலும்படிக் கூறிவிட்டு அவரே வீணையைக் கையில் எடுத்துக் கொண்டு அமர்ந்தார். உடனேயே அவையில் கரவொலி எழும்பி காதை அடைப்பதைப் போல ஆயிற்று.

பேரரசர் நிஜகுணர் அதே ராகத்திலே ஆலாபனை செய்து, காவுள, பொம்பாள, நாராட, மிச்ரம் என்னும் நான்கு விதமான இனிய சுரங்களால் அதை மலரச் செய்து, மந்தம், மத்யம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).


வேககுஞ்சனம், உச்சோனனம், ஸ்தம்பனம் தீர்க்க பேதங்களால் அவற்றின் வேறுபாடுகளைக் காட்டி ஆலாபம், பஜாவணை, மேளங்களின் சாயலானது தப்பாமல் நாதவதி, நந்தாவதி, பத்ராவதி, வினயாவதி, போகாவதி என்னும் ஐந்து முறைகளில் ஆலாபனை செய்யும் நிலைகளுக்கு இனிமையூட்டி, கௌடி, வைதர்பி, பாஞ்சாலி என்னும் மூன்று முறைகளுடன், தரு, பரு, விக்ருதி, பின்னாணம் என்னும் நான்கு விதமான வணக்கம் செலுத்தும் முறைகளில் அழகை வெளிப்படுத்தி, கம்பிதம், சிந்திதம், அனுநாசிகம், சிரோத்கதம், கண்டகுஞ்சனம், விக்லிஷ்டம், நீரஸம், நிஷ்டுரம், நிஸ்ஸாரம், துச்ராவ்ய, சித்ராந்த, சுருதிஹீன, ப்ரயாண, அஸமானம் தாளவிஹீன என்னும் பதினைந்து சுரக்குற்றங்கள் தோன்றாதவாறு உண்மையான நிறைந்த இதயத்துடன் இசையிலே லயித்து, சபையிலே இருந்த இசைஞானம் மிகுந்தவர்களின் செவிகளுக்கு இனிமையாக, சுரத்தின் அதிதேவதையான சதாசிவமூல பிரணவநாதமாக இருந்ததால் அந்த நாதமானது பிரணவத்தின் உள்ளிருந்து தோன்றி பிரணவத்தில் நிலைநின்று, பிரணவத்திலேயே இணைந்ததைப் போல சாமகானத்திலே மிகவும் நாட்டம் கொண்டவராக அவர் பாடினார். அத்தகைய இசையை ஶிவயோகியால் மட்டுமே பாடவியலும். வயிறுவளர்ப்பவர்களால் இயலாது. புலனின்பத்தை விரும்புவோராலும் இயலாது.

பேரரசர் நிஜகுணர் வீணையைக் கீழே வைத்தார். மெய்மறந்திருந்த அவை விழித்துக் கொண்டது மல்லிநாத சாஸ்திரிகள், மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து பேரரசரை வணங்கி, ''மஹாபிரபு! பேறு பெற்றவன் ஆனேன்.'' இந்தச் செவிகள் தூய்மையாயின. என்னுடைய அற்பமான பாண்டித்தியத்தைத் தங்களிடம் காட்டுவதற்கு வந்ததற்காக மன்னிப்புக் கோருகிறேன். தங்களுடைய திருவடிகளில் மற்றொரு விண்ணப்பத்தை அர்ப்பிக்கிறேன். தாங்கள் மற்றொரு பாடலை வாசித்து எங்கள் அனைவரையும் புனிதப்படுத்த வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்று பணிவுடன் கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அவருடைய இசைக்கலையைக் குறித்த செருக்கு, பெருமை என்னும் அனைத்தும் எப்பொழுதோ மாயமாகி விட்டிருந்தன.

பேரரசர் மென்மையாகச் சிரித்துவிட்டு, மீண்டும் வீணையை எடுத்துக்கொண்டு ''மாளவ'' ராகத்தில் ஆலாபனை செய்தார். அவருடைய நோக்கு அகமுகமானதாக இருந்தது. அவர் கண்களைத் திறந்தபொழுது அவருடைய கண்களில் அரிய ஆற்றலானது சேர்ந்து இருந்ததைப் போல இருந்தது. அவர் பாடத் தொடங்கினார். சாஸ்திரிகள் பேரரசரிடமிருந்து சிறிது இடைவெளி விட்டு அமர்ந்தவாறு அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

''யோகி உண்மையான ஆனந்தத்துடன் மீட்டும் வீணை!
ராகச் சுவையின் அலைகளைக் காண் ரமணி!

திரையில் பின்னால் இருந்த பேரரசி மங்கலாதேவி வியப்புடன் நிஜகுணரையே பார்த்துக் கொண்டிருந்தாள். சங்கராபரணராகத்தின் தோற்றம், இருப்பு-லயங்களை விவரித்து லயயோகத்தைக் குறித்த அறிவை ஏற்படுத்தியபொழுது மங்கலை அதை அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தாள்.

அந்தப்பாடலையே நினைவு படுத்திக் கொண்டு இங்கு மீண்டும் பாடத் தொடங்கினார்.

''உடல் எனும் விளக்கிற்கு இரு கண்கள்
உடலை ஆடாமல் உறுதியுறப் பிணைத்து''

நிஜகுணரின் அந்த இனிய சுரத்தையும் ராகத்தின் லக்ஷணங்கள் அனைத்தின் பொருளானது விளங்குமாறு பாடும் முறையைக் கண்டு அனைவரும் அந்த ராஜயோகியின் வாயிலிருந்து பொங்கிப் பாய்ந்து வரும் ராகச் சுவையின் அலைகளிலே மிதந்து பாவனமடைந்தனர். மல்லிநாத சாஸ்திரிகளுக்கு அது ஏதோ விவரிக்கவியலாத ஆனந்தத்திலே நீந்துவதைப் போலத் தோன்றியது. தன்னுடைய கணவர் ''ஸங்கீத ஸாம்ராட்'' என்று மங்கலை பெருமைப்பட்டாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



நிஜகுணர் வீணையைக் கீழே வைத்து விட்டு எழுந்து நின்றார். சுவையற்ற, எத்தகைய பொருத்தமும் அற்ற இசைக்கு, அரசர், மதிப்பும், கௌரவமும் அளிக்காமல், அத்தகைய இசையைப் பாடியவரை இகழ்ந்து துச்சமாக எண்ணி அவமானப் படுத்தி அனுப்புவது உண்டு, ஆனால் அவரே வீணையை மீட்டிப் பாடம் புகட்டிய பரந்த இதயம் கொண்ட பேரரசரை இப்பொழுதுதான் முதன் முதலில் பார்த்த மல்லிநாத சாஸ்திரிகளுக்கு மகிழ்ச்சியுடன் கூடிய வியப்பு ஏற்பட்டது. அவர் எழுந்து வந்து தழுதழுக்கும் குரலில்,

''பிரபு! உண்மையாகவே நான் இன்று புனிதமுற்றேன். ''சங்கீத ரத்னம்'' என்னும் விருதினால் அகங்காரமடைந்து, செருக்குற்றுத்திகழும் எனக்கு என்னுடைய திறமையைக் குறித்த விழிப்பை சரியாக உணர்த்தி உள்ளீர். சரஸ்வதியின் சங்கீதவாணியின் தரிசனம் கிடைத்தது. என்னுடைய எல்லா விருதுகள் - பட்டங்கள் அனைத்தையும் தங்களுடைய திருவடிகளில் அர்ப்பித்து, அதன் பயனை அடைகிறேன்'' என்று கூறி, கடகத்தைக் கையிலிருந்து கழற்றத் தொடங்கினான். பேரரசர் அதைத் தடுத்தார்.

''வேண்டாம், வேண்டாம். அது உங்களிடமே இருக்கட்டும் எனக்கு அதிலிருந்து ஆக வேண்டியது எதுவும் இல்லை. அந்த விருதிற்கு நீங்கள் தகுதி உடையவராக விளங்கினால் அதுவே போதுமானது. ஒரு விஷயம் - இசைக்கலைஞன் வீணையின் இசையிலே ஒன்றிவிட வேண்டும. அந்த ஒன்றிய உணர்வைப் பெறுவதற்கு நீங்கள் இன்னும் சாதனை புரிய வேண்டும்'' என்று கூறி நிஜகுணர் மேடையிலிருந்து இறங்கினார். மல்லிநாத சாஸ்திரிகள் அவையிலே ''ஸங்கீதரத்ன, ஸங்கீத ஸாம்ராட் ஸாமகான லோல, ஸ்ரீ ஸ்ரீ ராஜாதிராஜ ஸ்ரீமன் நிஜகுணர் மஹாராஜாவிற்கு ஜெயம்'' என்று ஜெயகோஷம் செய்தார். அவையிலிருந்தவர்களும் உற்சாகத்துடன் ஆயிரக்கணக்கான குரல்களில் அதே ஜெய கோஷத்தை எதிரொலித்தனர். நிஜகுணர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அன்றைய ஓலக்கம் நிறைவடைந்தது என்று குறிப்பிட்டு அந்தப்புரத்தை நோக்கிச் சென்றார்.

அவருடைய வருகைக்காகவே காத்துக் கொண்டிருந்த சர்வமங்கலைக்கு அவர் வரவை பணிப்பெண் அறிவித்துவிட்டுச் சென்றாள். சர்வமங்கலை அன்றையதினம், மற்ற தினங்களைக் காட்டிலும் சிறிது அதிகமாகவே அலங்கரித்துக் கொண்டு இருந்தாள். கணவரை வரவேற்பதற்காகக் கதவின் அருகில் வந்து நின்றாள். நிஜகுணர் வந்தவுடன் ''சங்கீதஸாம்ராட் அவர்களுக்கு இனிய வரவேற்பு'' என்று மகிழ்ச்சியுடன் ஜெயகோஷம் செய்து கையைப் பிடித்து அழைத்துச் சென்று சிறந்த இருக்கையிலே அமரச் செய்து, தானும் அவருடைய திருவடிகளின் அருகிலே அமர்வதற்குச் சென்றாள்.

நிஜகுணர், மனைவியின் அலங்காரம் மற்றும் அழகைப் புதிதாகப் பார்ப்பதைப் போன்று பார்க்கத் தொடங்கினார். அதனைச் சூட்சுமமாக உணர்ந்து கொண்ட மங்கலை ''பேரரசரின் யோக சக்தியானது என்னால் குறைந்து போகக்கூடாது. பேரரசரை போகத்தில் மூழ்க வைக்கும் அல்லது மேலே எழுப்பும் பொறுப்பு எனக்கு உள்ளது. என்னுடைய நல்ல இயல்புகள், நல்ல நெறிமுறைகளினால் அவருடைய இதயத்தை வென்று அவரை மோகத்திலே மூழ்குமாறு செய்ய மாட்டேன். என்னுடைய அழகால் அவருடைய மனத்தைப் புலன் இன்பங்களைத் துய்க்கும் பக்கமாகத் திருப்ப மாட்டேன். இந்த ஞானச் செல்வம், விலை மதிக்க இயலாத ரத்தினம் எத்தகைய தொல்லையின் தொடர்பும் இல்லாமல் உண்மையான தன் இயல்பிலேயே இருக்க வேண்டும். என்னுடைய சுய நலத்திற்காக என் பிரபுவின் ஒளியினை மங்க விட மாட்டேன். சம்புலிங்கமே! எனக்கு அத்தகைய பரந்த இதயத்தைக் கொடு'' என்று தன் வழிபடு கடவுளிடம் வேண்டிக் கொண்டாள்.

அருகிலே ரம்பையைப் போல அமர்ந்திருந்த மனைவியின் முகத்தை மேலே நிமிர்த்தி அவளுடைய இதழுடன் இதழ் பதித்து ''தேவி, உன் அழகானது என் கண்ணைப் பறிக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



சாத்துவீகமும், அமைதியும் நிறைந்த உன் அழகில் நான் மெய்மறந்து விட்டால், மற்ற அனைத்துமே மறந்து விடுமோ என்று தோன்றுகிறது'' என்று அவளை இறுக்கமாக அணைத்துக் கொண்டார்.

அவருடைய சொற்கள் மங்கலையின் மனத்திலே ஆழமாகப் பதிந்தன. அவள் நடுங்கி அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு சிறிது தள்ளி அமர்ந்து கொண்டாள்.

நிஜகுணர் மீண்டும் அவள் அருகிலே வந்து, ''ஓ நீ எங்கு போகிறாய்? இன்று உன் அருகிலே இருப்பது ஒன்று மட்டும் போதும்'' என்று அவள் முகத்தைத் தன் மார்பிலே பதித்துக் கொண்டார். கணவரின் மார்பிலே முகத்தை வைத்துக்கொண்ட மங்கலை கலகலவென சிரிக்கத் தொடங்கினாள். அலை அலையாக மிதந்து வந்த அவளுடைய சிரிப்பைக் கண்ட நிஜகுணர் ''சிரிக்கும் படியாக என்ன நிகழ்ந்தது?'' என்று வியப்படைந்தார். மனைவியை உலுக்கியவாறு ''எதற்காக தேவி இந்த அளவிற்குச் சிரிக்கிறாய்?'' என்று கேட்டார். மங்கலை கணவரைக் கூர்ந்து பார்த்தவாறு,

''அரசே, தங்களைப் போன்ற ஞானியும், யோகியும் கணக்கிலே சேர்த்துக் கொள்ள இயலாத பெண்ணின் நிலையற்ற அழகைக்கண்டு ஈர்க்கப்பட்டு, மற்ற அனைத்தையும் மறப்பதற்கு ஆயத்தமாக இருப்பின், சாமான்னியமானவர்களின் நிலை என்ன? என்று சிரிப்பு வந்தது. அவ்வளவுதான் என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

நிஜகுணரின் தூய்மையான அறிவிற்கு மங்கலையின் நல்லறிவானது விளங்கியது. அதனால் இன்னும் மிகுதியான மகிழ்ச்சியை எய்தினார். மனைவியின் மோகத்தை நோக்கி அடி எடுத்து வைத்துள்ள தன்னை மனைவியே எச்சரிப்பதைக் கண்டு அவள் மீது இரு மடங்கு அன்பானது மனத்திலே பொங்கி வந்தது.

ஆனால் அதனை வெளிப்படுத்தாமல், சிறிது சினத்தை முகத்திலே வரவழைத்துக்கொண்டு, இந்தத்தடவை அவளையே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பேச்சிலே சிக்கவைத்துவிட வேண்டுமெனத் தீர்மானித்து "மங்கலா, நீ யாருடன் பேசிக் கொண்டு இருக்கிறாய் என்பதைக் குறித்த விழிப்புணர்வு உள்ளதா? நான் ஒரு முறை புறக்கணித்து நொந்து போனேன் என்றால் முடிந்தது. என்றென்றும் அந்தப்பக்கம் கூடத் திரும்பிப் பார்க்கமாட்டேன். ஓ, இருப்பினும் என்னை விழிப்படையச் செய்துள்ளாய். நல்லதாகப் போயிற்று" என்று சிறிது தள்ளிச் சென்று, சிறிது சினம் கூடிய முகத்துடனேயே அமர்ந்து கொண்டார். கண்களை மூடிக் கொண்டார்.

சர்வமங்கலை சினத்துடன் கூடிய கணவரின் முகத்தைப் பார்த்ததே இல்லை. இப்பொழுது அவளுக்கு வியப்பும், அச்சமும் ஏற்பட்டது. தான் ஏதோ செய்வதற்குச் சென்று வேறு ஏதோ ஆகி விட்டதே! குழப்பத்தில் ஆழ்ந்தாள். கணவரைத் தொடுவதற்கும் அஞ்சினாள். அப்பொழுது நிஜகுணர் பாடத் தொடங்கினார். மனைவியைக் கிண்டல் செய்து பயப்படுத்துவதுதான் அவருடைய நோக்கமாக இருந்தது.

"யோகி என என்னைக் கருதுவாய் புலனின்பத்தைத் ।
துய்ப்பவன் எனக் கருதாமல் உலகிலே ஶிவனே ॥

அஞ்சிக் கொண்டிருந்தாலும் கணவருடைய அந்தப்பாடலால், அவருடைய அந்தப் பிரார்த்தனையால் மங்கலைக்கு மகிழ்ச்சியே ஏற்பட்டது. அவள் உடல் முழுவதும் செவியாகி அடுத்த பாடலின் வரிகளைக் கேட்கத் தொடங்கினாள்.

"சிறந்த சௌகத்தின் நடுவிலே, விளங்கும் ।
சிறந்த நாதத்தை உணர்த்திப் புறத்தே ॥
இளம்பெண்தன் அனுபவச் சொல்லைக் கேட்கும் ।
உற்சாகத்தைக் கருதாமல்! ஶிவனே ॥

மங்கலை கணவரின் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள். நிஜகுணரின் முகத்தின் இறுக்கமானது அப்படியே இருந்தது. அடுத்து என்ன கூறுவாரோ என்று அவள் ஆர்வத்துடன் இருந்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''முதலில் அசையாது ஆசனத்தில் முத்திரையுடன் ।
ஒரே நிலையில் இருத்தி அதன்பிறகு ॥
மங்கையை அணைப்பான் பிணைப்பின் ।
மோகத்தைத் துறக்காமல் ஶிவனே ॥

கணவர் சினத்துடன் உற்சாகமின்றியே பாடிக்கொண்டு இருக்கிறாரே! தான் அப்படிக் கூறியது சரியில்லை என்று கலங்கியவாறு அடுத்து வந்த சரணத்தில் தன் கவனத்தைச் செலுத்தினாள். பாடல் தொடர்ந்து வந்து கொண்டிருந்த பொழுது மங்கலையின் கண்கள் பனித்தன. அதரங்களை இறுக்கமாக வைத்துக் கொண்டாள். ஒருமுறை விம்மினாள். அழுகையை அடக்கிக் கொண்டு மீண்டும் கேட்கத் தொடங்கினாள்.

''அப்பொழுது அலர்ந்த இதயத்தாமரையில்,
இடைவிடாது வீசும் நறுமணத்தை நிறைத்து,
அவள் சுவாசத்திலே அதனை நுகர்ந்து
மகிழ்ந்து துய்ப்பர், சம்புலிங்கமே, ஶிவனே ॥

நிஜகுணர் கடைசிப்பாடலைத் தொடங்கிய பொழுது நுண்ணறிவு படைத்த மங்கலைக்கு உடனே அப்பாடலின் ரகசியம் விளங்கியது.

''ஓ, எவ்வளவு அஞ்சினேன்! என்னைப் பயப்படுத்த வேண்டும் என்பதற்காகவே யோகத்தின் பொருளை இங்கு சேர்த்துக் கொண்டு பாடிக்கொண்டு இருக்கிறார். பொறுமையுடன் இரு. நானும் அவருக்கு ஏற்றாற்போல இருப்பேன்'' என்று எண்ணி, நிஜகுணர் பாடலை முடித்துக் கண்களைத் திறந்த உடனேயே அவள் தடதடவென்று எழுந்து சென்று கட்டிலின் மீது விழுந்தாள்.

அவள் அவ்விதம் நடந்து கொண்ட முறையிலிருந்து மங்கலைக்குக் கோபமும், துயரமும் ஏற்பட்டிருக்கிறது என்று நிஜகுணர் எண்ணினார். மனைவியை வேதனைப்படுத்துவதை அவர் விரும்பவில்லை. ஆனால் அவர் அவளைப் பீடிக்க வேண்டியிருந்தது. சிறிது நேரத்திற்கு அப்படியே அமர்ந்திருந்தார். தன்னை அன்புடன் சமாதானம் செய்வதற்கு வருவார் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மங்கலை காத்துக் கொண்டு இயன்ற அளவிற்கு நீண்ட பெருமூச்சுக்களை விட்டவாறு நடித்துக் கொண்டு இருந்தாள். ஆனால் இவ்வளவு நடந்த பிறகும் கணவர் வராமல் இருந்த பொழுது உண்மையிலேயே பயம் ஏற்பட்டு, தலையைத் தூக்கி கணவர் இருந்த பக்கத்தைப் பார்த்தாள். அவள் பார்ப்பதற்கும், எதையோ நினைத்துக் கொண்டு சிரித்தவாறு அவள் இருந்த பக்கத்தை அவர் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது. அவளை இன்னும் வருத்துவது சரியன்று என்று எண்ணி, எழுந்து மனைவி இருந்த இடத்திற்கு வந்து அவளுடைய தோளைப்பிடித்து மேலே தூக்கினார். மங்கலை பொய்க்கோபத்துடன் நிஜகுணரின் கையைத் தட்டிவிட்டு இன்னும் முகத்தை மூடிக்கொண்டாள். அவர் பலவகைகளில் சமாதானம் செய்தும் அவளுடைய துயரமானது குறையவில்லை. பேசவில்லை சர்ரென்று எழுந்து சென்று சாளரத்தின் வழியாக சூனியத்தைப் பார்த்தவாறு நின்றாள்.

கடைசியாக ஒரு உபாயத்தைக் கையாளலாம் என்று நிஜகுணர் அவள் அருகிலே சென்று, அவள் செவியிலே தன் வாயை வைத்து,

''என்னுடைய எல்லா வித்தைகளுக்கும், எல்லா வகையான அறிவுகளுக்கும், எல்லா சித்திகளுக்கும், அனைத்திற்கும், எல்லா உயிர்களும் தோன்றுவதற்குக் காரணமானவளாக இருக்கும் சர்வமங்கலையை வணங்குகிறேன் என்று கூறிய பொழுது மங்கலை உடனடியாகத் திரும்பி கணவரின் வாயின் மீது கையை வைத்து,

'அமைதி, அமைதி' என்று கூறினாள்.

''பிரபு! இது என்ன? எத்தகைய பேச்சைப் பேசுகிறீர்கள்? நான் எந்த நரகத்திற்குச் செல்வது? என்று அச்சமும் வேதனையும் கலந்த குரலில் கூறினாள். அப்பொழுது அவர் சிரித்தவாறு ''ஓ நரகம் இருந்தால்தானே போக இயலும்''? என்று கூறினார்.

அதற்குள் மங்கலை கணவரின் பாதங்களில் மீண்டும் மீண்டும் தலையை வைத்து வணங்கி அமைதி அடைந்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"ஓகோ, எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் வேண்டுமென்றே என்னை பயப்பட வைப்பதற்காகத்தானே அப்படிப்பாடினீர்கள்? என்று மங்கலை குறும்புப் புன்னகையுடன் கேட்டாள்.

நிஜகுணர் பதிலிற்குக் கேலியாகக் கூறினார். "ஓ எனக்கும் எல்லாம் தெரியும். நீயும் என்னை எச்சரிப்பதற்குத்தானே அப்படிக் கூறினாய்."

மங்கலை வெட்கத்துடன் கணவரின் மார்பில் சாய்ந்தாள்.

நிஜகுணர் அவளை அணைத்தவாறு, "என் தேவி! உன்னைப் போன்ற மனைவி எல்லா சமயங்களிலும் எல்லா விஷயங்களிலிருந்தும் காப்பாற்றிக் கொண்டிருக்கும்பொழுது, என்னுடைய தேவியே என் மன உறுதியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் பொழுது நான் என்றுமே புலனின்பங்களைத் துய்ப்பவனாக இருக்கமாட்டேன். இல்லையா மங்கலை? எப்படியோ, ஏதோ ஆட்டம் ஆடி ஒரு அழகிய கவிதையை இயற்றுமாறு செய்துவிட்டாயல்லவா!"

தன்னுடைய பிரபுவானவர் தன்னுடன் புலனின்பங்களைத் துய்ப்பதில் மூழ்கியுள்ளவராகத் தென்பட்டாலும் அவர் எப்பொழுதும் எத்தகைய மாற்றமும் அடையாதவர் மற்றும் தூய்மையானவர் என்று எண்ணி அவள் பெருமைப்பட்டாள். அத்தகையவரிடம் தான் அப்படிக் கூறியது அவளுக்குச் சரி என்று தோன்றவில்லை.

"பிரபு, அத்தகைய பாடல்களை வேண்டிய அளவிற்கு எழுதுங்கள். அவற்றிற்கெல்லாம் நான் தூண்டுதலை அளிக்கும் அடிப்படை ஆதாரமாக இருப்பேன்" என்று தொலைவில் பார்த்தபடி கூறினாள். பிறகு கணவர் பக்கமாகத் திரும்பி, "ஸ்வாமி இன்று உங்களுடைய பாடல் அற்புதமாக இருந்தது. நீங்கள் பாடுவதைக் கேட்டேன். ஆனால் இந்த அளவிற்குச் சாத்திரத்திற்கு ஏற்றவகையில் புலமையுடன் இனிமையாகப் பாடுவதை நான் கேட்டிருக்கவில்லை. நீங்கள் கவிசக்கரவர்த்தியாக, ஸங்கீத ஸாம்ராட்டாக உள்ளீர்கள் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்" என்று உணர்வுப் பெருக்குடன் கூறினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''சரி, நீ ஆனந்தத்தின் வடிவமாகவே ஆகியிருக்கும் பொழுது இவ்வளவு சிறிய விஷயங்களுக்காக மகிழ்ச்சி அடைவது இயல்பானதுதான். அதுவுமின்றி நீ உன் கணவரை ஒவ்வொன்றிற்கும் ''சக்கரவர்த்தி, ஸாம்ராட், மஹாராஜா என்று அழைப்பது உனக்குச் சாமான்னியமானதாக உள்ளது. ஏனெனில் உன் கணவர் அரசர் அல்லவா?'' என்று நகைச்சுவை இழையூடும் குரலில் கூறினார்.

''போங்கள் பிரபு, நான் ஒன்றும் பேசமாட்டேன்'' என்று அவள் கூறிய குரலிலே பொய்க்கோபம் இருந்தது. நிஜகுணர் சிரித்தார். மனைவியின் படிப்பின் பக்கமாக அவர் கவனம் சென்றது.

''உபநிஷதத்தில் உன்னுடைய பயிற்சி எதுவரையில் வந்துள்ளது?''

''பிருஹதாரண்யக உபநிஷத்தில் நான்காம் அத்தியாயம் முடிந்து ஐந்தாம் அத்தியாயம் தொடங்கி உள்ளது. அதுவுமின்றி ஶிவஆகமங்களின் பயிற்சியையும் நீங்கள் கூறிய முறையிலேயே செய்து கொண்டு இருக்கிறேன்.''

''கேட்கிறேன் - உன்னுடைய திறமைக்கு நல்ல பயிற்சி உள்ளது'' என்று அவளைப் பரீட்சை செய்யும் நோக்கத்துடன் நிஜகுணர் கூறினார்.

''நீ அறிந்து அன்பே! கவனமுடன் எனக்குக் கூறுவாய்!

நான் ஒவ்வொன்றாக விரும்பிக் கேட்பேன் இப்பொழுது''

கேள்வி : புலன்களின் செயல்பாடுகளை எதனால் அறிவது?

பதில் : கண், கண்ணால் அறிந்துகொள்ளலாம்
(எல்லாப்புலன்களின் செயல்பாடுகளின் செயல்பாட்டிற்குக் கண்தான் முதன்மையானது)

கேள்வி : ஹரனின் எட்டு உடல்களும் அகலாது எங்கு இணைந்துள்ளது?

பதில் : கண்களில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கேள்வி : வாக்கின் நான்கு நிலைகளில் இரண்டாம் நிலை எந்த இடத்தில் வடிவம் கொள்கிறது?

பதில் : கண் வாக்கின் நான்கு நிலைகளில் இரண்டாவதான 'பச்யந்தீ' வடிவம் கொள்வதற்கு கண்தான் ஆதாரமாகும்.

கேள்வி : கருணைரசம் எதன் மூலமாக வெளிப்படுகிறது?

பதில் : கடைக்கண்ணிலிருந்து (குருவின் கருணைக் கடாட்சம் என்பது பொருள்)

கேள்வி : ஶிவன்-சக்தி இரண்டாக எங்கு தென்படுகிறது?

பதில் : வல-இடது கண்களில்

கேள்வி : ஶிவஞானத்தை அடையும் வழி என்ன?

பதில் : கண்ணின் கருவிழி

கேள்வி : ஶிவயோக முத்திரை அனுபவத்தின் நிலைக்களன் எது?

பதில் : கண்

கேள்வி : ஶிவலிங்கத்தின் இடைப்பகுதியை என்னவென்று கூறுவர்?

பதில் : கண் (ஆறுவித லிங்கங்கள் ஆறுபுலன்களில் ஶிவலிங்கமானது கண் என்னும் புலனில்)

கேள்வி : புலன் இன்பங்களைத் துய்க்க வேண்டும் என்பதற்கான ஆதாரம் எது?

பதில் : கண்

கேள்வி : கரதலத்திலே, இஷ்டலிங்கமாக உள்ள சம்புலிங்கம் குருவின் கருத்தின்படி எந்தப் பக்கத்திலிருந்து வந்தான்?

பதில் : கண்களின் மூலமாக (குருவானவர் சீடனுக்கு லிங்கதீட்சை அளிக்கும் முறை இங்குள்ளது)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கேள்வி : மனம் உயர்நிலைகளில் அடைந்த இன்பத்தை எங்கு வெளிப்படுத்துகிறது?

பதில் : கடைக்கண்ணில்

தம்முடைய எல்லாக் கேள்விகளுக்கும் மங்கலை திறமையுடன் விடையளித்ததைக் கண்டு: அவளுடைய பயிற்சி - சாதனைகளைக் குறித்துப் பெருமைப்பட்டார். அன்பு பொங்கியது. அவளை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டார். இதழுடன் இதழ் பதித்தார்.

அதற்குள் பணிப்பெண் ஒருத்தி வந்து "மஹாபிரபு அவர்களே! உங்களுடைய தாத்தா என்று கூறிக் கொண்டு ஒரு வயோதிகர் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார்" என்று கூறினாள்.

அவரை பேட்டிகாணும் மாளிகைக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டார். மனைவி மங்கலையுடன் பேட்டி கொடுக்கும் அறைக்குச் சென்றார். அங்கு அவருடைய தூரத்து உறவினரான குருலிங்கேசர் அமர்ந்து கொண்டிருந்தார். நிஜகுணர் அவரிடம் மிகவும் அன்புடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு "சில நாட்களுக்கு இங்கேயே தங்கி விட்டுச் செல்லுங்கள்" என்று கட்டாயப்படுத்தினார். குருலிங்கேசரும் அதை ஏற்றுக் கொண்டார். உணவு உண்ணுவதற்கு அழைப்பு வந்தவுடன் இருவரும் உள்ளே சென்றனர்.

குருலிங்கேசரின் பழக்கவழக்கங்கள் மிகவும் கட்டுப்பாடுகள் நிறைந்ததாக விளங்கின. மூன்று வேளைகளிலும் பூஜை செய்யாமல் நடுநடுவே எதையுமே ஏற்றுக் கொள்வதில்லை. அவருடைய பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த பணிப்பெண்ணான வினயவதி, அவர் கூறிய குற்றங்குறைகளைக் கேட்டுக் கேட்டுப் பொறுமையை இழந்தாள். காலையில் பூஜை முடித்தபிறகு பூஜைக்குப் பயன்படுத்திய பூஜைப் பாத்திரங்களை கறை எதுவுமின்றி மீண்டும் ஒருமுறை தேய்க்குமாறு தொல்லை அளித்துக் கொண்டு இருந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஏய், அம்மா! இங்கு பார். இந்த இலைகளை எல்லாம் புழு அரித்திருக்கிறது. நன்றாக இருக்கும் இலைகளைக் கொண்டு வா'' என்று குருலிங்கேசர் கூறிக் கொண்டு இருந்தார்.

இவ்வாறு அவருடைய பூஜை முடியும் வரையிலும் அவளை விரட்டி விரட்டிச் சோர்வடையும் படிச் செய்து கொண்டிருந்தார். லிங்கத்தை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால் முடிந்தது. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகே அவர் பூஜை அறையிலிருந்து வெளியிலே வருவார்.

நிஜகுணரின் பழக்க வழக்கங்களை குருலிங்கேசருக்கு சரியானவையாகத் தென்படவில்லை. அவருடைய பூஜையானது ஆடம்பரமாகவும் இல்லை. நீண்ட நேரத்திற்கும் நடைபெறவில்லை. ஒருசமயம் ஐந்து நிமிடங்களிலேயே பூஜையானது முடிந்தால் மற்றொரு சமயத்தில் ஒருமணி நேரம் ஆகியிருந்தாலும் முடிந்து இருக்காது. சில நேரங்களில் பூ, வில்வ இலைகள் இல்லாமலேயே பூஜையானது நிறைவுறும்.

எத்தகைய விதியும் நியமமும் இல்லாத நிஜகுணரின் பூஜை என்ன பூஜையோ! இவன் வீரசைவனாக இருந்து கொண்டு, அரசனாகி, பூஜையை எவ்வளவு அலட்சியம் செய்கிறான்! இவனுக்குச் சரியான வழியைப் புகட்ட வேண்டும். வீரசைவனுக்கு பூஜை விதிமுறைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியமானதாகும். இலிங்க பூஜையில் விதி, நியமங்களைப் பின்பற்றாமல் இருப்பது சரியன்று என்று கருதி குருலிங்கேசர் நிஜகுணரை அழைத்து,

''நிஜகுணா! நீ செய்யும் லிங்க பூஜையானது விதிமுறைகளைப் பின்பற்றிச் செய்யப்படவில்லை. நான் செய்யும் லிங்க பூஜையை வந்து பார் என்று பூஜை அறைக்குள் நுழைந்தார். தமக்குள்ளேயே சிரித்தவாறு அரசர் நிஜகுணர் அவரைப் பின்தொடர்ந்து அவர் எதிரிலே சிறிது தொலைவிலே அமர்ந்து கொண்டார். ஒருமுறை பூஜைக்குத் தேவையான பொருட்களைப் பார்த்துவிட்டு ''ஏய், வினயவதி, உனக்குப் பலதடவைகள் சொல்லி இருக்கிறேன் அல்லவா. இதோ, இந்தச் சொம்பைப் பார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)


கழுத்துப் பகுதியிலே கறை அப்படியே உள்ளது. உன்னிடம் பணிவு அதிகமாக இல்லை. பணிவற்ற தன்மைதான் மிகுதியாக உள்ளது. போ, புளியைப் போட்டு நன்றாகத் தேய்த்துக் கொண்டு வா'' என்று குருலிங்கேசர் கர்ஜித்தார். அரசர் இருக்கும்பொழுது திட்டு வாங்கும்படி நேர்ந்துவிட்டதே. அவர் என்ன நினைப்பாரோ என்று கருதிய வினயவதி வேகமாகச் சென்று தேய்த்துக் கொண்டு வந்து வைத்தாள்.

நிஜகுணர் சிரிப்பை அடக்கிக் கொண்டார். சரி, அவருடைய லிங்க பூஜையானது தொடங்கியது. மந்திரங்களை உச்சரிக்கும் வேகத்தில் உமிழ்நீரானது நிஜகுணரின் மீது தெறித்தாலும் அந்த வயோதிகருக்கு அதைக் குறித்த அறிவே இருக்கவில்லை. அந்த மந்திரங்கள் சரியாக உச்சரிக்கப்படாததால் பொருளே விளங்காமல் இருந்தது. இஷ்டலிங்கய்யனை ஒரு சிறிய சொம்பில் இருந்த நீரினால் ஐந்து ஐந்து தடவைகள் தேய்த்து நீராட்டினார். விபூதியைப் பூசியபடியே இருந்தார். சந்தனம்-அட்சதைகளைப் போட்டுக் கட்டுக்கட்டாக மலர்களையும் வில்வ இலைகளையும் வைத்து தூபம் தீபம் கற்பூரம் என்னும் இவற்றைக் காட்டி நெய்வேத்யம், தாம்பூலத்தை முன்வைத்து (அதுவும் அவருக்கு) சாமரம் வீசி உள்ளங்கையில் இஷ்டலிங்கத்தை வைத்துக் கொண்டு, ஒருமுனைப்பாட்டுடன் அதைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தார். நடுநடுவே நிஜகுணர் தம்மைக் கவனித்துக் கொண்டு இருக்கிறாரா, இல்லையா என்று திருட்டுத்தனமாகப் பார்த்தபடி ஜபம் செய்து பூஜையை முடித்து விட்டு எழுந்தார்.

''தாத்தா, நீங்கள் பூஜை செய்தது மிகவும் நன்றாக இருந்தது'' என்று நிஜகுணரும் எழுந்து நின்றார்.

''ஆமாம், இதே போன்று நீயும் விதிமுறைகள் தவறாமல் முறையுடன் செய்ய வேண்டும். உன் பூஜை இன்னும் ஆகவில்லை போலிருக்கிறதே'' என்று கூறி லிங்கேசர் நிஜகுணருக்கு லிங்கபூஜையை நினைவு படுத்தினார்.

''ஓ, என்னுடைய பூஜையா? அப்பொழுதே முடிந்துவிட்டதே தாத்தா''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"எங்கு? எப்பொழுது செய்தாய்? நீராடியவன் இங்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்" என்று கண்களில் வியப்பை வெளிப்படுத்தினார். நிஜகுணர் கம்பீரத்துடன் "தாத்தா, உங்களுடைய லிங்க பூஜையே வேறு, என்னுடைய லிங்க பூஜையே வேறு. நான் செய்யும் பூஜை முறையை விவரிக்கிறேன்" கேளுங்கள்.

"அகத்திலே ஶிவலிங்க பூஜையைச் செய்வாய் ।
கண்டு, இன்பமய சாதனங்களுடன் விரும்பி ॥
ஶிவனே அனைத்து ஆதாரம் என்பது ஆசனம் ।
எங்கும் நிறைந்த ஈசுவரனென அறிவது ஆஹ்வானம் ॥
பரமஶிவனின் அருளே உலகமென்பதுதான் பாத்யமாம் ।
பேரின்பக் கடல், பிறப்பிலி என்பதுதான் அர்க்யமாம் ॥

என்று இம்முறையில் உணர்வுபூர்வமாகப் பதினாறு வகைப் பொருட்களுடன் (ஷோடசஉபசாரங்கள்) பூஜை செய்யும் முறையை விவரிக்கும் பாடலைப் பாடி முடித்தார் நிஜகுணர். "தாத்தா, நான் பூஜை செய்யும் முறையைப் பாருங்கள். என்னுடைய பூஜைக்கும், உங்களுடைய பூஜைக்கும் வேறுபாடு உள்ளது. கடவுளுக்குத் தேவையானது வெளியிலே ஆடம்பரமாகச் செய்யும் பூஜை அல்ல. கூடை கூடையாக வில்வ இலை-மலர்கள் அல்ல. மணி பறை போன்றவை அல்ல. குடை-சாமரங்கள் இல்லை. கடவுளுக்குத் தேவையானது தூய்மையான சாத்வீகமான மனம் தூய்மையான ஒருமித்த பக்தியாகும்" என்று உணர்வுப் பெருக்குடன் பூஜையின் சிறப்பைப் பற்றிக் கூறிக் கொண்டு இருக்கையில் நடுவிலே இடைமறித்து,

"ஆனால் லிங்கத்தைப் பூஜை செய்யும் முறையில் அவ்வனைத்தையும் பொருள் அற்றா கூறியுள்ளனர். அவ்வனைத்தையும் புறக்கணித்தால் அது லிங்கத்திற்குச் செய்யும் துரோகம் ஆகும். இது உனக்குத் தெரியாதா?"

நிஜகுணர் புன்னகையுடன், "தெரியும் தாத்தா. ஆனால் உங்களுக்குத்தான் தெரியவில்லை என்று தோன்றுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


எதுவரையில் உங்களுடைய பூஜையானது வெளியிலே உள்ள சாதனங்களையும் பொருட்களையுமே அனுசரித்துக் கொண்டு செல்கிறதோ அதுவரையிலும் உங்கள் மனமானது வெளியிலேதான் அலைந்து கொண்டிருக்கும். அது ஸ்தூல பக்தி. (மேலோட்டமான பக்தி) சாதகனுக்குத் தொடக்கத்தில் அது தேவைதான். ஆனால் அவன் அவனுடைய சாதனை வழியில் முன்னேறிக் கொண்டு இருக்கும் பொழுது இலட்சியத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் பொழுது, அகமுகமாக இருக்கும் பொழுது அவை அவனுக்குத் தேவைப்படுவதில்லை. அவன் அகத்திலே நிலைத்து பாவலிங்க பூஜையைச் செய்கிறான்.

"தூல உடலிற்கு இஷ்டலிங்கம்
சூட்சும உடலிற்குப் பிராண லிங்கம்"
காரண உடலிற்கு பாவலிங்க பூஜையை வைத்துள்ளார்கள்.

தாத்தா, இஷ்டலிங்கத்துடன் மட்டுமே நம்முடைய பூஜையானது நிறைவேறுதல் கூடாது. பிராணலிங்கம் பாவலிங்கப் பூஜையையும் செய்ய வேண்டும் அல்லவா? இந்த பாவலிங்க பூஜையைச் செய்யும் முறையைத் தான் நான் அப்பொழுது பாடல் வடிவத்தில் பாடிக் காட்டினேன்.

கடவுள் அனைத்திற்கும் ஆதாரம் என்பதுதான் ஆசனம். கடவுள் எங்கும் நிறைந்துள்ளான் என்பதுதான் ஆஹ்வானமாகும். இவ்வுலகமானது ஶிவனின் பாதம் என்பதுதான் பாத்யம். ஶிவன் ஆனந்தக் கடல் என்பதுதான் அர்க்கியம். கடவுள் மிகவும் பவித்ரமானவன், எப்பொழுதும் தூய்மையானவன் மற்றும் முழுமையானவன், என்று கருதுவதுதான் ஆசமனீயம். மன அமைதியே அபிஷேகம். அவனைக் குறித்த முழுமையான உணர்வே வஸ்திரம். காமம் போன்ற அறுபகைகள் சூழாமலிருக்கும் ஞானமே பூணலாகும். நல்ல அறிவே அலங்காரம். தன்னை உணர்வதால் ஏற்படும் அனுபவம் தான் கந்தம். எல்லா உயிர்களிடமும் காட்டும் அன்பு தான் அட்சதை. தூய மனம் தான் மலர். புலனின்பங்களைத் துய்க்க வேண்டும் என்னும் எண்ணம் அடங்கி அதைக் கடந்து நிற்கும் நிலைதான் தூபம். ஞானக் கண்ணை எப்பொழுதும் பெற்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இருப்பதுதான் தீபம். வேறுபாடு அகன்று வேறுபாடு அற்ற நிலையிலே அறிவானது இணைந்து இருப்பதுதான் கடவுளுக்கு நெய்வேத்யம் ஆகும். முக்குணங்களையும் கடந்து தூய்மையான சாத்வீகமான எண்ணங்களுடன் அமைதியுடன் இருப்பதுதான் ஶிவனுக்குத் தாம்பூலம் ஆகும். ஓம்காரத்தின் பொருளை உணர்ந்து ஓம் காரத்திலேயே மூழ்கி இருக்க வேண்டும். ஓம்காரமயநாதம்தான் (ஓம்காரநாதம்தான்) இசைக்கருவியாகும். நானே ஶிவன், 'ஸோஹம்' என்பதுதான் பிரதக்ஷிணம் ஆகும். தத்துவத்தால் உறுதி செய்யப்பட்ட ஞானம் தான் நமஸ்காரம். சம்புலிங்கத்துடன் இணைந்து பிரிக்க இயலாதவாறு அதாவது இயல்பாகக் கலக்கும் முக்திதான் வீடுபேறு ஆகும்.

தாத்தா, என் பூஜையின் ரகசியத்தையே விவரித்துள்ளேன். இதனை அறிந்து கொண்டு, அதைப் போலச் செய்து, அதன் உட்பொருளை உணர்ந்து கொண்டு அதில் நிலைத்து நிற்பதுதான் சாதகனின் லட்சியம் ஆகும். இதுதான் உண்மையான வீரசைவனின் லட்சணம் ஆகும் தாத்தா. உங்களுக்கும் வயது ஆகிக் கொண்டே செல்கிறது. நீங்கள் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் வெளியிலே செய்யும் பூஜையைச் செய்து கொண்டு இருப்பீர்? வெளியிலே நாட்டம் கொண்டுள்ள மனம் அகமுகமாக வேண்டாமா? நீங்கள் செய்யும் பூஜையானது இலட்சியத்தை நோக்கி மெதுவாக அழைத்துக் கொண்டு செல்லும். மனத்தை உட்புறமாகத் திருப்பிச் செய்யும் பூஜையின் முன்னேற்றத்தால்தான் வளர்ச்சியானது தீவிரம் அடையும்.

தாத்தா "ஶிவயோகத்தின் ரகசியத்தையே உங்கள் முன்பு வெட்டவெளிச்சமாக்கியுள்ளேன். அதை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் உங்களைச் சார்ந்தது ஆகும்" என்று நிஜகுணர் அங்கிருந்து அகன்றார்.

குருலிங்கேசர் அவர் கூறியவற்றை அசைபோட்டவாறு புளகம் அடைந்தார். "ஓ நிஜகுணா! ஶிவயோகத்தின் ரகசியத்தை அறிந்த ஶிவயோகி" அவரை அறியாமலே இச்சொற்கள் வெளிவந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அரசகுருவான சன்ன சதாஸிவ தேசிகேந்திரர் இயற்றிய "ஶிவயோக ப்ரதீபிகை" என்னும் புத்தகத்தை முழுவதுமாகப் படித்து முடித்தபொழுது, படித்ததன் விளைவாக அதில் மகிழ்ச்சியுடன் ஆலோசனை ஒன்றும் எழுந்தது. அந்த ஆலோசனையின் ஒளியால் தூண்டப்பட்டு, எழுதுவதற்குத் தேவையான சாதனங்களின் முன்பாக அமர்ந்து கொண்டார். நிஜகுணர் ஓலைச்சுவடியின் ஒரு பக்கத்தின் மீது சம்புவை மனத்திலே நினைத்தவாறு "பாரமார்த்த ப்ரகாசிகை" என்னும் அழகான பெயருடன் வடமொழியில் இயற்றப்பட்ட அந்த நூலைக் கன்னடமொழியில் மொழி பெயர்க்கத் தொடங்கினார். அரசகுரு அவர்களுக்கு தம்முடைய நன்றியை அர்ப்பிக்கும் விருப்பமும் அந்த நூலை எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. சிவயோகப்ரதீபிகை என்னும் நூலிலே அந்த எல்லா விஷயங்களும், சரி எது, தவறு எது என்று பரிசீலித்து அறிந்து கொள்ளும் வகையில் விதிமுறைகளுடன் அனுபவத்தை உணர்ந்து கொள்ளும் வகையிலே, சாதகர்களுக்கு எளிமையாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் அமைந்திருப்பதை மெச்சிய நிஜகுணர் அதனை எளிமையாக மொழிபெயர்க்க வேண்டும் என்று கருதினார்.

அரசர் நிஜகுணர் இடைவிடாமல் எழுதியதால் "பாரமார்த்த ப்ரகாசிகை" என்னும் மொழிபெயர்ப்பு நூலில் ஜோதிஞானம், ஸ்மாத்ம ஞானம், அவதூதம், யோகானந்தம், வேதாந்தம் என்னும் ஐந்து அத்தியாயங்களும் மிகத் தெளிவாக வடிவம் கொண்டன. நூலை எழுதிமுடித்த அந்த நல்ல நாளிலே அரசகுரு அவர்களை எல்லாவிதமான சிறந்த மரியாதைகள், கௌரவத்துடன் அரண்மனைக்கு வரவழைத்தார்.

அரசகுரு அவர்களுக்குப் பாதபூஜையைச் செய்ய வேண்டிய முறையில் செய்து முடித்த தம்பதியர், குரு அவர்களின் பாதங்களை மீண்டும் மீண்டும் வணங்கினர். அருகிலிருந்த பீடத்தில் வெள்ளித்தட்டின்மீது, பட்டுத்துணியில் வைக்கப்பட்டிருந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''பாரமார்த்த ப்ரகாசிகை'' என்னும் மொழிபெயர்ப்பு நூலை குரு அவர்களின் திருக்கரங்களில் வைத்து மீண்டும் வணங்கிவிட்டு, எதிரிலே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்துகொண்டார் நிஜகுணர்.

மிகவும் வியப்புடனேயே அந்த நூலை ஆங்காங்கு பரிசீலித்து அரசகுருவான சன்னசதாசிவ தேசிகர் மகிழ்ச்சியுடன் நிஜகுணரைப் பார்த்தவாறு,

''பேரரசே! இதைத் தாங்கள் எழுதியதைக் குறித்து எந்தவிதமான அடையாளமும் சிறிதளவிற்குக் கூடத் தெரியாதவாறு எழுதி முடித்துவிட்டாய் அல்லவா! 'பாரமார்த்த ப்ரகாசிகை' - ஏற்ற பெயர் - நன்றாக உள்ளது நிஜகுணா, உன் மனவிருப்பமும் ஈடேறி உள்ளது'' என்று கூறினார்.

''குரு அவர்களே! உங்களுடைய அந்த நூல் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எனவே அதில் கூறப்பட்டிருக்கும், முக்தியை அடையும் வழிமுறைகள் அனைவருக்கும் தெளிவை ஏற்படுத்தும் வகையில் இருந்ததாலும் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் இருப்பதாலும் அதைக் கன்னட மொழியில் மொழி பெயர்த்தேன். உங்களுடையதையே உங்களுக்கு அளித்து பேறு பெற்றவனாக உள்ளேன் என்று கூறினார்.

சன்னசதாஶிவ தேசிகர் மேன்மையான ஆனந்தத்தால் மௌனமாக அமர்ந்திருந்தார். அந்த மௌனமானது, அங்கே அமர்ந்திருந்த மூவருக்குமே இதமாக இருந்தது. தங்கள் தங்களுக்குள்ளேயே எழுந்த அந்த மகிழ்ச்சியின் அலைகளை அவர்கள் ஒருமுனைப்பட்ட மனத்துடன் அனுபவித்துக் கொண்டிருந்தனர். அரச குருவே மௌனத்தைக் கலைத்தார்.

''நிஜகுணா! உன்னுடைய நல்ல திருமண வாழ்வால் ஆன்மீகமானது இன்னும் பொலிவுடன் திகழ்வதைக் கண்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. அந்த சம்புலிங்கம் உன்னுடைய உலகியல் - ஆன்மீகம் என்னும் இரு வாழ்வும் எத்தகைய தடையும் இன்றி நடக்குமாறு, உன்னுடைய நோக்கமானது ஈடேறுமாறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அருள்புரியட்டும்'' என்று இதயம் நிறைந்து வாழ்த்தினார். பேரரசி மங்கலையைப் பார்த்து அவர் ''அம்மா, உன்னுடைய கணவரின், மைத்ரேயியைப் போன்ற மனைவியையே அடைய வேண்டும் என்னும் மேன்மையான ஆசையை நிறைவேற்றி உள்ளாய். நீ பேறு பெற்றவள்'' என்று கூறினார்.

''குரு அவர்களே! அருளுக்கு ஆட்பட்டேன். அந்தத் தாய் மைத்ரேயியை நான் ஒத்திருக்காவிட்டாலும் அவளுடைய சிறந்த உயர்ந்த இயல்புகளை என்னிடம் ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்வேன். இந்துப் பெண்களுக்குக் கணவனுக்குத் தொண்டு செய்வதுதான் மேலான தர்மம். அதைக் கடைப்பிடிப்பதே என்னுடைய கடமையாகும். அதற்கு நீங்கள் அருள வேண்டும்'' என்று கூறினாள். ''சரி தாயே! உன்னுடைய ஆளுமைக்குத் தகுந்த, நல்ல இல்லறவாழ்க்கைக்கு ஏற்ற சொற்கள்'' என்று குரு அவர்கள் மனம் நிறைந்து கூறினார். இதயம் நிறைந்து வாழ்த்தினார்.

அவர்கள் இருவருடைய உரையாடலையும் மூன்றாம் மனிதராகக் கேட்டுக் கொண்டிருந்து நிஜகுணர் ''குரு அவர்களே, இந்தப் புதிய மைத்ரேயிக்கு, நாள்தோறும் முறையாக உபதேசம் செய்ய வேண்டும் என்று கருதுகிறேன். உபதேசம் செய்வதற்கு பிருஹதாரண்யக உபநிஷதத்தையே ஆதாரமாக வைத்துக் கொண்டால்...'' என்று கேட்டார்.

''மிகவும் நல்ல ஆலோசனை பேரரசே! உன்னுடைய சங்கல்பமானது விரைவிலேயே செயல் வடிவத்தைப் பெறட்டும். நான் ஒன்றை மட்டும் அறிவுறுத்துகிறேன். பிருஹதாரண்யக உபநிஷதத்தையே ஆதாரமாக வைத்துக் கொண்டு, நீ அறிவுறுத்தும் அனைத்து வழிமுறைகளையும் முறையாகக் கவிதை வடிவத்தில் இயற்றிக் கொண்டே செல்வாய். அது ஒரு பயன்படும் நூலாகச் சாதகர்களுக்குக் கை விளக்கைப் போல இருக்கும் வேத-வேதாந்தத்தின் பொருளை உபநிஷதங்களின் சாரத்தைச் சேமித்து வைத்துக் கொண்டுள்ள உன் அறிவுக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


களஞ்சியமானது, உலகத்திற்கு நன்மையைச் செய்வதாக விளங்கும் என்பதில் சந்தேகமே இல்லை'' என்று கூறினார். இது அரச தம்பதியினருக்கு மிகவும் பிடித்திருந்தது.

உணவு ஆயத்தமாக இருக்கிறது என்று பணிப்பெண் வந்து கூறியவுடன் அவர்கள் மூவரும் எழுந்து உணவு அருந்தும் இடத்திற்குச் சென்றனர்.

உணவிற்குப் பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளும் மாளிகையில் ஓய்வாக இருக்கையில் சன்னசதாஸிவ தேசிகேந்திரர் அமர்ந்து கொண்டிருந்தார். பக்கத்தில் ஒரு கட்டிலில் நிஜகுணர் அமர்ந்திருந்தார். பணிப்பெண் ஒருத்தி அங்குவந்து ''முதலமைச்சர் வந்திருக்கிறார், ஆணைக்காக் காத்துக் கொண்டிருக்கிறார்'' என்று கூறினாள். ''இப்பொழுதே வரச் சொல்'' என்று ஆணையிட்டார் நிஜகுணர்.

ஶிவகுமாரர் விருந்தினர் ஓய்வு எடுக்கும் மாளிகையின் உள்ளே வந்து கொண்டே, ''ஓ! இங்கு அரசகுரு அவர்களும் இருப்பது மிகவும் நல்லதாகப் போயிற்று'' என்று அவரையும் பேரரசரையும் வணங்கிவிட்டு, நிஜகுணர் காட்டிய இருக்கையின் மீது அமர்ந்தார். அரசகுருவே முதலில் பேசத் தொடங்கினார். ''நான் இங்கு இருப்பது ஏன் நல்லதாகப் போயிற்று முதல் அமைச்சர் அவர்களே?''

''எளந்தூரிலிருந்து ஒரு தூதுவன் வந்திருக்கிறான் மண்டலீகன் (குறுநில மன்னன்) ஒரு ஆணைப்பத்திரத்தை அனுப்பி உள்ளார். இதோ'' என்று அதனைப் பேரரசரின் கையிலே கொடுத்தார். பேரரசர் அதைப் பிரித்துக் கொண்டிருக்கும் பொழுதே படைத்தலைவரும் வேகமாக அங்கு வந்தார்.

''ஓ, வாருங்கள், வாருங்கள் என்று நிஜகுணர் அவரை வரவேற்று அந்த ஆணைப்பத்திரத்தை முதலமைச்சரிடம் கொடுத்து படிக்கும்படிக் கூறினார். பேரரசருக்கும் குரு அவர்களுக்கும் வணக்கம் செலுத்திவிட்டு படைத்தலைவரான ருத்ரநாயகர் ஒரு இருக்கையில் உற்சாகத்துடன் அமர்ந்து கொண்டார். சிவகுமாரர் படிக்கத் தொடங்கினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"ஸ்வஸ்தி ஸ்ரீ நிஜகுணபிரபு அவர்களுக்கு, ஸ்ரீ மண்டலீகரான எளந்தூரின் அரசர் ஆணையிட்டிருப்பது என்னவென்றால், முதலாவதாக நம்முடைய எல்லைப் பகுதியின் பெரும்பாலான பகுதியை ஆக்ரமித்துக் கொண்டு இருக்கிறீர்கள். அந்தப் பகுதியை விட்டு நீங்கள் பின்வாங்கி, தொலைவிலேயே உங்களுடைய பாதுகாவல் படையை இருக்கும்படி கூறவேண்டும்.

இரண்டாவதாக, ஆட்சிப் பொறுப்பானது உங்களைப் போன்றவர்களுக்கு வேண்டியதில்லை. கையிலே லிங்கத்தை வைத்துக் கொண்டு, ஜங்கமர்களுக்கு உணவு படைத்து உபசரிக்கும் உங்களைப் போன்றவர்களுக்கு நாட்டை ஆளும் விருப்பம் எதற்கு? அதற்கு என்ன தேவை? வேதங்கள்-புராணங்கள் என்னும் பொய்யான விஷயங்களில் எப்பொழுதும் மூழ்கி, குடிமக்களுக்கு நன்மையைச் செய்யவேண்டும் என்னும் எண்ணத்தையே மறந்து "நானே பிரம்மம்" என்னும் மருளிலே காலத்தைச் செலவிடும் உங்களுக்கு அரசபதவி எதற்கு? காட்டிற்குச் சென்று துறவியாக இருப்பது நல்லதாகும்.

மூன்றாவதாக, உங்களுடைய நாட்டில் அராஜகம் மிகுந்துள்ளது. உங்களுடைய குடிமக்களால் நம்முடைய குடிமக்களுக்குத் தொந்தரவு ஏற்பட்டுக் கொண்டுள்ளது. இவ்வனைத்தையும் பல நாட்களாக பொறுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். இனிமேல் அது இயலாது. என்னுடைய ஆற்றல், வீரம் குறித்து உங்களுக்குத் தெரியவில்லை. அதை இப்பொழுது கண்டிப்பாக வெளிப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கு வாய்ப்பு அளிக்காமல் நீங்கள் நம்மைச் சேர்ந்த பகுதியை விட்டுக் கொடுப்பீர்களோ அல்லது போருக்கு ஆயத்தம் செய்வீர்களா என்பதை, இதைக் கொண்டு வந்திருக்கும் தூதன் மூலமாகத் தெரிவிக்க வேண்டும். இல்லையெனின் நீங்கள் உடனடியாக சிறைபிடிக்கப்படுவது உறுதியாகும்.

இப்படிக்கு
மண்டலீகன்
எளந்தூர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அந்த ஆணைப்பத்திரத்தைப் படித்துக் கொண்டிருந்த பொழுதே மகாமாத்திரரின் ரத்தம் கொதித்தது. அவருடைய வீரத்தோள்கள் தினவு எடுத்து நின்றன. முகம் சிவந்தது. கண்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன. சிவகுமாரர் ஆவேசத்துடன் அதிர்ந்து கர்ஜித்தார்.

''பேரரசரே! கேட்டீர்களா, அந்த ஆணைக்குக் கட்டுப்படாதவனின் பேச்சுக்களை?'' என்று படைத்தலைவர் கோபத்துடன் எழுந்தார்.

''பேரரசரே! இப்பொழுதே ஆணை இடுங்கள். அவனுடைய முண்டத்தைக் கொண்டு வந்து உங்கள் பாதங்களில் வைக்கிறேன். பேரரசரின் மீது நியாயமற்றவற்றைக் கூறியுள்ள அவனுடைய நாக்கை, எழுதிய அவனுடைய கையைக் கத்தரித்துக் கொண்டு வந்து தோரணம் கட்டுகிறேன்'' என்று கூறினார்.

''உருத்திர நாயகரே! அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள்'' என்று அமைதி நிறைந்த குரலில் நிஜகுணர் சமாதானம் செய்த சொற்களைக் கேட்டு இருவரும் பேரரசரின் முகத்தைப் பார்த்தபொழுது அதில் அமைதி நிறைந்து இருந்தது. நாள்தோறும் விளங்கும் அந்த பிரகாசத்திற்கு எத்தகைய கேடும் இல்லாமல் அது ஒளிர்ந்து கொண்டிருந்தது. நிலவொளியைப் போலத் திகழும் அந்தப் புன்னகையின் தண்ணொளியின் முன்பு அந்த சத்திரியர்களின் முகங்கள் கீழே தாழ்ந்தன.

அரசியல் சார்ந்த இக்கட்டான சூழ்நிலையிலும் அரசகுருவானவர் அமைதியாக இருந்து, நிஜகுணருடைய அப்போதைய விவாதத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் எண்ணத்துடன் உற்சாகம் அடைந்து அமர்ந்து கொண்டார்.

உருத்திர நாயகர் எழுந்து நின்று தலைவணங்கி, ''பேரரசரே! மன்னியுங்கள். அவனுடைய பணிவற்ற வாக்கியங்களை கேட்டதும் என்னுடைய ரத்தத்தில் சூடு ஏறியது. அவனுடைய பணிவற்ற தன்மைக்குத் தக்க தண்டனையை அடையாவிட்டால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அவன் இன்னும் இறுமாப்பு அடைவான். அவனுக்கோ, ஒரு குச்சியை எடுத்து வைக்கும் திறமை கூட இல்லை. ஆனால் உங்களுடைய தாராளமனப்பான்மை, தெய்வீகத் தன்மை மற்றும் குடிமக்களைப் பரிபாலிக்கும் முறை, சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் குடிமக்கள் என்னும் இவற்றைக் கண்டு அவனுடைய வயிறு எரிகிறது. நாட்டையே கேட்டாலும் அதைக் கொடுக்கும் தாராள மனப்பான்மை, தியாகம் போன்றவை உங்களிடம் உள்ளது என்று அதைக் குத்திக் காட்டியுள்ளான். ம்..ம்... நீங்கள் காட்டிற்குப் போக வேண்டுமாம். இவனுடைய பரம்பரையையே காட்டிற்கு விரட்டுகிறேன். அந்தப் பகுதியிலிருந்து பின்வாங்க வேண்டுமாம். கேட்டீர்களா அரசே! அவனுடைய நாட்டையே இந்த உலகத்தில் இல்லாமல் செய்து விடுகிறேன். இதற்கு மட்டும் ஆணை கொடுத்து விடுங்கள். அவனுடைய நிலைமையை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று உருத்ரதாண்டவம் ஆடினார்.

''அரசே! படைபலம் இல்லாமல் செருக்குடன் திகழும் அவனை வழிக்குக் கொண்டுவரும் நல்லசமயம் இதுதான். நாம் இந்த நேரத்தில் ஒன்றும் செய்யாமல் இருப்பது சரி என்று தோன்றவில்லை'' என்று தன்னுடைய கருத்தை முன்வைத்தார் ஶிவகுமாரர். சன்னசதாஶிவ தேசிகேந்திரர், ''ஆம், பேரரசனாக இருப்பவன் அப்படிச் செய்வதுதான் சரியான வழியாகும்'' என்று குரலை எழுப்பினார். அவருடைய குரலில் கடுமை இருந்தது. அவருடைய பேச்சில் எதையோ பரீட்சை செய்யும் செயற்பாங்கு இருந்தது. நிஜகுணர் எத்தகைய மாற்றத்தையும் அடையாதவராக அம்மூவரையும் பார்த்து, ''ஓ நீங்கள் மூவரும் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் எண்ணத்தைப் போலவே ஆகட்டும்'' என்று ஒரு கணத்திற்குக் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்தார். அரசகுருவானவர் நிஜகுணரையே பார்த்துக் கொண்டு இருந்தார். அவர் அடுத்துச் சொல்லப்போவதைக் கேட்க வேண்டும் என்று அவர் பக்கமாகத் தன் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தார். கண்களைத் திறந்த அரசர் ''அப்படியானால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அதற்கு என்னவென்று பதிலை எழுதி அனுப்புவீர்கள்?'' என்று முதலமைச்சர் இருந்த பக்கமாகத் திரும்பிக் கூறினார். ''உங்களுடைய நிபந்தனைக்கும், கெட்ட ஆலோசனைகள், பயப்படுத்துவது போன்றவற்றிற்கு நாங்கள் அடிபணிபவர்கள் அல்லர். அவ்வளவு திறமை இருக்குமாயின், பலம் இருக்குமாயின், போருக்கு ஆயத்தமாவாய் என்று தானே படைத்தலைவர் அவர்களே?''

''ஆமாம், ஆமாம் அரசே சரியாக உள்ளது. அப்படித்தான் எழுதி அனுப்ப வேண்டும். குரு அவர்களே! தம்முடைய ஆணை என்ன!

நிஜகுணரின் முகபாவத்தைப் பரீட்சித்துக் கொண்டிருந்த சன்னசதாஶிவ யோகிகள் அவருடைய கேள்வியால் சிறிது அதிர்ந்து தடுமாறினார்.

''அவர் கூறியது சரியாக உள்ளது''

''அதாவது போருக்கு அழைப்பு விடுப்பது என்றுதானே?''

''ஆம் அரசே! அதை விட்டால் வேறு வழியே இல்லை. இல்லையெனின் நிலத்தின் சில பகுதியை விட்டுக் கொடுக்க வேண்டும்.''

அரசர் தொலைவிலுள்ள, எல்லைப்பகுதியின் உச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''முதலமைச்சரே! ஆணைப்பத்திரத்தை அப்படியே எழுதி தயார் செய்து விடுங்கள்.''

ஆணைப்பத்திரத்தை எழுதி, எளந்தூரிலிருந்து வந்திருந்த தூதுவனை அழைத்து வரும்படிக் கூறி அவனுடைய வருகைக்காகக் காத்துக் கொண்டு இருந்தனர். அந்நிய நாட்டிற்கு வருவது என்பது உயிருக்கு ஆபத்தை எற்படுத்தவல்லது என்னும் அச்சத்துடனேயே வந்த அந்த தூதன் கையைக் கூப்பியவாறு தொலைவிலே நின்றான். பயத்தில் பேரரசரை வணங்குவதற்கும் மறந்து விட்டான்.

பணிவற்றவனே, பேரரசரின் முன்பு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை உன்னுடைய பணிவற்ற மண்டலீகன் கற்றுத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கொடுக்கவில்லையா? அரசநியமங்களை மீறுபவர்களுக்கு எத்தகைய தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது என்பதை நீ அறிவாயா? அந்த அப்பாவி கடகடவென்று நடுங்கிக் கொண்டிருந்தான்.

"பேரரசே! மன்னிக்க வேண்டும். உயிர்ப்பிச்சை அளியுங்கள்" என்று நிலத்தில் வீழ்ந்து வணங்கி, கைகூப்பிக் கொண்டு நின்றான். கூச்சத்தினாலும் மரணபயத்தினாலும் தத்தளித்துக் கொண்டிருந்தான். பேரரசர் அவனை அன்புடன் பார்த்து " இந்த அப்பாவியின் மீது ஏன் கோபத்தைக் காட்டுகிறீர்கள்? பாவம். அவன் என்ன செய்வான்? உங்களுடைய கோபம்-பிரதாபம் போன்றவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள் படைத்தலைவரே" என்று கூறியபொழுது ருத்திரநாயகர் வணங்கிவிட்டு அமர்ந்து கொண்டார். மரணதண்டனையானது தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்று அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த அந்த தூதுவன் பேரரசர் பேசிய பேச்சைக் கேட்டு வியப்படைந்து அவருடைய முகத்தையே வாயைப் பிளந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான். ஒரே ஒரு நிமிடத்திற்கு அவன் உடலிலே மின்சாரம் பாய்ந்தது. மூன்று இழை விபூதியால் சோபித்துக் கொண்டிருந்த ஶிவனுடைய திருமுகத்திற்கு நிகரான அந்த முகமண்டலமானது, ஒளிர்ந்து கொண்டிருந்தது. கருணைப் பெருக்கு பொங்கிப் பாய்ந்து கொண்டிருந்த அந்த அன்பு, அருள்மயமான நோட்டம் - என்னும் இதைக்கண்டு அந்த தூதுவன் தன்னையே மறந்து பக்தியுடன் தலைவணங்கினான். இத்தகைய ஒரு பேரரசரால் என்றைக்காவது அநியாயம் ஏற்படுமா? கனவிலும் ஆகவியலாது என்று எண்ணினான்.

ஆணைப்பத்திரத்தை அவனுடைய கையில் கொடுத்த படைத்தலைவர்

"இதை உங்கள் அரசரிடம் கொடுப்பாய்! திறமை இருந்தால் போர்புரிய வருமாறு கூறுவாய்" என்று கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அவன் மீண்டும் ஒருமுறை வணங்கி, நிஜகுணரைக் கண் நிறைந்து பார்த்து "அப்பாவி பிழைத்து விட்டாய்" என்று எண்ணிக் கொண்டு அங்கிருந்து அகன்றான்.

"அப்படி என்றால் உங்களுடைய ஏற்பாடுகள் வேகமாக நடைபெறட்டும் படைத்தலைவரே."

"ஆகட்டும் முதலமைச்சரே, என்னுடைய படையானது இந்தக் கணத்திலேயே ஆயத்தமாக உள்ளது. பேரரசர் ஆணை இடுவது ஒன்றுதான் தாமதம். இந்தக் கணத்திலேயே புறப்பட்டு விடுவேன்."

"எங்கு புறப்படுவது படைத்தலைவரே?"

"போர்புரிவதற்கு அரசே எளந்தூருக்கு."

"உங்களுக்கு எதற்கு அந்தத் தொந்தரவு? அவனே வருவானாம். அப்பொழுது எதிர்த்துப் போர்புரியலாம்."

"இப்படிச் சிரித்துக் கொண்டே தாங்கள் என்ன கூறுகிறீர்கள் அரசே! நாட்டிலே நுழைந்த பிறகு அவனை எதிர்ப்பதா? நம்முடைய தூய்மையான நாட்டில் அவனுடைய பாதங்கள் படியவே வேண்டாம்."

"அப்படியே ஆகும் முதலமைச்சரே! உங்களுடைய சங்கல்பத்தைப் போன்றே அவனுடைய பாதங்கள் இங்கு படியவே வேண்டாம். உங்களுடைய சங்கல்பத்தை எப்பொழுதும் நிறைவேற்றும் பொறுப்பானது இந்த நாட்டின் அதிதேவதையான சம்புலிங்கத்திற்கு உள்ளது. நீங்கள் கவலைப் படாமல் இருங்கள்.

பேரரசர் நிஜகுணரின் பேச்சானது எதையோ முன்கூட்டியே உணர்த்தியது. கையில் இருந்த கவளம் வாய்க்குள் செல்லவில்லை என்று உள்ளுக்குள்ளேயே மருகினார் ருத்திரநாயகர்.

"அவனே படை எடுத்து வருவதற்கு நாம் வாய்ப்பு அளித்தால் குடிமக்களுக்கு மிகவும் கெடுதல் ஏற்படும் என்று பணிவுடனே விண்ணப்பித்துக் கொள்கிறேன் அரசரே"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அப்பொழுது நிஜகுணரின் முகமானது கம்பீரமாகத் திகழ்ந்தது. படைத்தலைவரையே நேராக உற்றுநோக்கி, "உருத்திர நாயகரே! உங்களுடைய அவசரத்தின் பொருள் எனக்குப் புரிகிறது. உங்களுக்கு முக்கியமாக இரண்டு விஷயங்களைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக உங்களுடைய வீரம்-பராக்கிரமம் போன்றவை தாமசிகமாக இல்லாமல் சாத்துவீகமாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் அதற்கு இருமடங்கு பலமும், நல்ல விளைவும் ஏற்படும். தாமசிக வீரமானது கொடூரமானதாக இருக்குமே தவிர அது உண்மையான வீரனின் லட்சணம் அன்று. மற்றொரு விஷயம் என்னவென்றால், நம்முடைய சிறிய செயல்பாடுகளிலிருந்து, மிகப்பெரிய செயல்பாடுகள் அனைத்தையும் அந்த சம்புலிங்கனின் திருவடிகளில் அர்ப்பித்து, எப்பொழுதும் அவனிடம் பக்தியைக் கைக்கொண்டிருக்கும் பொழுது வீரனானவன் எதற்குமே அஞ்சமாட்டான், நடுங்கமாட்டான். பக்தியற்ற வீரனுக்கு என்ன இருந்தால் என்ன! எவ்வளவு இருந்தால் என்ன? "தொடர்ந்து தெய்வபலம் ஒன்று இல்லையெனின் கேடு அடையாது இருக்கவியலாது" என்பதைப் போல சுவர்க்கமே கோட்டை; தேவதைகளே படை, பிருஹஸ்பதியே அமைச்சர், வஜ்ஜிரமே ஆயுதம், பிரம்மா-விஷ்ணுவின் பெரியபலம் முனிவர்கள் அனைவரின் வாழ்த்து என்னும் ரட்சாகவசம், ஐராவதமே யானை, சஞ்சீவனமே மந்திரசக்தி, எடுக்க எடுக்கக் குறையாத அமுதமே உணவு-என்னும் இவ்வனைத்தும் இருந்தும், தெய்வபலம் இல்லாமல் அரக்கர்களுக்கு அஞ்சி இந்திரன் தோற்றுப் போகவில்லையா? தன்னையே எப்பொழுதும் நம்பியுள்ள பக்தனைக் கடவுள் என்றுமே கைவிடுவது இல்லை. ஶிவபெருமானே காப்பாற்றுபவனாகத் திகழ்கிறான் ஶிவபக்திதான் சக்தியாகும். ருத்திரநாயகரே கடவுள்தான் ஆற்றல் மிக்கவன்.

தாமசிக வீரத்தில் நீதிநெறிமுறையற்ற செயல்கள் சேர்ந்து கொள்வதால் அது கொலைபுரியும் செயலாகி விடுகிறது. மனிதத்தன்மையானது வீழ்ச்சி அடையும் இறுதி எல்லையாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இராஜசிக வீரத்தில் ''பயானகரசம்'' சேர்ந்து கொள்வதால் அது கேடித்தனம், வஞ்சனை, ஏமாற்றுவது போன்றவற்றின் தொடக்கமாக உள்ளது. அது சரியான நேரத்திற்காகக் காத்துக் கொண்டு, எதிர்பார்த்திருந்து செய்வது ஆகும்.

சாத்துவீகமான வீரத்தில் கருணை, பக்திரசம் சேர்ந்திருப்பதால், அதைப் பெற்றுள்ள வீராதிவீரனுக்கு அந்த தேவாதிதேவனே அவனைக் காப்பாற்றுவான். அவனுடைய தெய்வபலத்தின் முன்பு, எதிரிகளின் பலமானது அடிபணியும், தோல்வியடையும். வெற்றித் திருமகளின் மாலையானது அவனுடைய கழுத்திலே விழும்.

''உருத்திரநாயகரே! நீங்கள் சம்புவிடம் அசைக்கவியலாத பக்தியை உடையவராகத் திகழ்வதால் உங்களுக்கு இவ்வனைத்தையும் கூற நேர்ந்தது'' என்று நிஜகுணர் தம்முடைய நீண்ட உரையை முடித்தபொழுது, ருத்திரநாயகர், சிவகுமாரர் மற்றும் அரசகுருவான சன்னசதாஶிவ தேசிகேந்திரர் என்னும் மூவரும் மந்திரத்திற்கு வசப்பட்டவர்களைப் போல அமர்ந்திருந்தார்.

''மன்னிக்க வேண்டும்-பேரரசரே, உங்களுடைய அமுத மொழிகளால் பெரும்பேறு பெற்றேன். உங்கள் ஆணையைச் சிரமேற்கொண்டு பின்பற்றுகிறேன்''. உருத்திரநாயகர் எழுந்து நின்று தலைவணங்கி மென்மையாகக் கூறினார். அப்பொழுது நிஜகுணர் புன்சிரிப்புடன் கூறினார்.

''போர்புரிவதற்கு நாம் ஆயத்தம் செய்ய வேண்டாம் என்று நான் கூறியதால் என்னை ஒரு கோழை என்று எண்ண வேண்டாம். அத்தகைய கோழைத்தனம் என்னிடம் இல்லை. மனம் வைத்தால் மிகப்பெரிய படையையே நான் ஒருவனே துண்டித்துச் சிதறச் செய்வேன் என்னும் நம்பிக்கை உள்ளது. இதோ, இந்தத் தோள்களில் பலம் உள்ளது. தம்முடைய தோள்களை வில்லைப்போல வளைத்தார். தசைகள் அனைத்தையும் விளங்கச் செய்த அந்த வீரத் தோள்களின் வடிவம், வைரகவசத்தைப் போலத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



தோன்றும் அந்த அகன்ற மார்பையும் கண்டு அவர்கள் மூவரும் வியப்படைந்தனர். அதன்பிறகு கைகளைக் கட்டிக் கொண்டு நிஜகுணர் அமர்ந்து கொண்டார்.

''நான் கூறிய சொற்களின் பொருளை நீங்கள் புரிந்து கொண்டால் நான் புண்ணியம் செய்தவன். உருத்திர நாயகரே, சரி வேறு என்ன விஷயம்? என்று கேட்டார். அரசரின் கேள்விக்கு முதலமைச்சர் ''பகைவன் வரட்டும். வராமலே இருக்கட்டும். நம்முடைய படையானது ஆயத்தமாகவே உள்ளது. மற்றொரு விஷயம் என்ன என்றால், நாடு முழுவதும் இந்த விஷயத்தை பறை அறைந்து தெரிவிக்க வேண்டும். குடிமக்களுக்கு முன்னெச்சரிக்கை கொடுப்பது நல்லது''.

''சரி, நீங்கள் என்னென்ன செய்ய வேண்டுமோ, அவ்வனைத்தையும் செய்யுங்கள் முதலமைச்சரே''

''அப்படியானால் எங்களுக்கு இப்பொழுது விடை கொடுங்கள்''

''சென்று வாருங்கள். மீண்டும் நாளைக்குக் கூடுவோம்''.

அந்த இரு அதிகாரிகளும் பேரரசரையும் அரசகுரு அவர்களையும் வணங்கி, அங்கிருந்து அகன்றனர். அவர்கள் புறப்பட்டதுமே சன்னசதாஶிவர், ''பேரரசே, நீ ஆணைப்பத்திரத்தை எழுதி அனுப்புவதற்கு ஒப்புக் கொண்டபொழுது, போருக்கு நீயே முந்திக் கொள்வாய் என்று எண்ணினேன். ஆனால் நீ கூறியவற்றைக் கேட்டு என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். சிறுவனாக இருந்த பொழுது ஒருமுறை இப்படிக் கூறினாய்'' - உங்கள் பாதத்தின் மீது ஆணையாக நான் என்றென்றுமே போர் புரிய மாட்டேன்'' என்று ஆணையிட்டாய். அந்த ஆணையானது இந்த யௌவனத்திலும் உன்னிடம் அகலாமல் உள்ளது. அது இன்னும் ஆழமாக நிலைகொண்டு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. இருக்கட்டும், இருக்கட்டும் உன்னுடைய உண்மையான நோக்கத்திற்கு எப்பொழுதும் வெற்றி கிடைக்கட்டும். சம்புலிங்கம் உன்னை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



எப்பொழுதும் எல்லாவற்றிலும் காப்பாற்றுவான் என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார் அதே உணர்ச்சிப் பெருக்குடன் நிஜகுணர்.

''குரு அவர்களே, உங்களுடைய வாழ்த்தானது அதற்குப் பக்கபலமாக இருக்கும்'' என்று பணிவுடன் கூறினார்.

அரசகுரு கிளம்புவதற்காக எழுந்து நின்றார். குரு அவர்களை வணங்கி அவரை அனுப்பிவிட்டு வருவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பணியாட்களிடம் கூறி, சன்னசதாசிவ தேசிகருக்கு விடை கொடுத்தார் நிஜகுணர்.

மாலை நேரத்தின் பூஜைக்காக வந்த பொழுது, பூஜையறையில் அன்னை மகேசுவரிதேவி, மற்றும் அரசி சர்வமங்கலையும் இருந்ததைக் கண்டு, அவர்களுடன் இவரும் மூன்றாவதாகச் சேர்ந்து கொண்ட பூஜை முடிந்தபிறகு பிரசாதத்தை ஏற்றுக் கொண்டு சம்புவை வணங்கினார்.

அன்னை மகேசுவரிதேவி, ''சம்புலிங்கமே! என் தந்தையே! என் மகனை நீதான் காப்பாற்றவேண்டும் காப்பாற்றுவாய், காப்பாற்றுவாய் என்று முறையிட்டாள். அதைக் கேட்ட நிஜகுணர், சிரிப்பை அடக்கிக் கொள்ள இயலாமல் 'பக்' என்று சிரித்து விட்டார். அன்னை கலக்கத்துடன் வியப்பும் அடைந்தார். பிறகு பொய்க்கோபத்துடன்

''மகனே! இது என்ன? இத்தகைய கஷ்டமான சூழ்நிலையிலும் உனக்குச் சிரிப்பு வருகிறதா? தாய் உள்ளத்தின் கொதிப்பை உன்னால் எப்படிப் புரிந்து கொள்ள இயலும்?'' என்று கேட்டார்.

''அன்னையே! நீ அஞ்சுவதற்கு எதுவும் இல்லை. உன்னுடைய மகனை மட்டும் காப்பாற்ற வேண்டும் என்று சம்புலிங்கத்திடம் வேண்டிக் கொள்வது தாய் உள்ளத்தின் பரந்த மனப்பான்மையைக் காட்டாது. ''என்னுடைய மகன் இவன்'' என்னும் மோகமானது உனக்கு எது வரையில் இருக்குமோ அது வரையிலும் துயரம், வேதனை இவற்றினின்று விடுபட இயலாது. குடிமக்கள் அனைவரும் உன் பிள்ளைகள் என்று அறிந்து கொள்ள வேண்டும். அங்கு பரந்த மனப்பான்மை உள்ளது. தியாகம் உள்ளது. சுகம் உள்ளது.''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''என்னவோ, எனக்கு ஒன்றும் தெரியாது. என்னவோ பயம் ஏற்பட்டது''

''பயப்படுவதற்குக் காரணமே இல்லை அம்மா, போரே நடக்காது''. நிஜகுணரின் இந்தச் சொற்களில் உறுதி இருந்தது. அச்சமற்றதன்மை இருந்தது.

அதுவரையிலும் மௌனமாகத் தாய் - மகன் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மங்கலை ''அரசே, அவனுடைய நிபந்தனைகள் என்ன?'' என்று கேட்டாள்.

இப்பொழுது நிஜகுணரின் கவனமானது தம்முடைய மனைவியின் பக்கமாகச் சென்றது. அவளைக் கிண்டல் செய்யவேண்டுமென்று எண்ணி, ''எதற்காக புதிய மைத்ரேயி வாளைப்பிடித்துக் கொண்டு போருக்குக் கிளம்பியுள்ளதைப் போலத் தோன்றுகிறது'' என்றார்.

''ஓ, பேரரசர் போருக்குக் கிளம்பினால் தானே நானும் கிளம்புவது?''

''அதாவது உன் கணவர் கோழை என்றா? போர் புரிய மாட்டார் என்றா?''

''அமைதி அமைதி. என் அரசரின் வீரத்தைக் குறித்து உங்களுக்குத் தெரியாது. அது என் ஒருத்திக்கு மட்டுமே தெரியும்.''

அவளுடைய குரலிலே உறுதி இருந்தது. மனைவியின் சொற்களால் மனநிறைவு அடைந்த நிஜகுணர்,

''தேவி, அவனுடைய நிபந்தனைகளைக் கேட்பாய். நாம் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறோம் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள பகுதியை விட்டுப் பின்வாங்க வேண்டும். துறவியாகக் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்பவைதான் முக்கியமான அம்சங்கள்'' என்று இயல்பான குரலிலேயே கூறினார். கடைசியில் கூறப்பட்ட சொற்களைக் கேட்ட அன்னையார் அஞ்சி ஆவேசத்துடன் ''ஓ, அவன் அப்படியா எழுதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இருக்கிறான்? நீதான் நம் நாட்டின் அரசன். அவனுக்குக் காட்டிலிருந்து அழைப்பு வரட்டும்'' என்று கூறினார்.

நிஜகுணர் அன்னையைச் சமாதானப்படுத்தியவாறு ''துறவியாவதற்கும் ஒரு தகுதி வேண்டும். அந்தத் தகுதி, அரசனாகப் பிணைக்கப்பட்டுள்ள எனக்கு எங்குள்ளது?''

''என்ன! நீ அரசனாகப் பிணைக்கப்பட்டுள்ளாயா? அப்படி என்றால் என்ன?''

''அரசனாகப் பிணைக்கப்படாமல் வேறு என்ன அம்மா! என்னுடைய நாட்டிலே நானே பிணைப்புண்டவன். என்னுடைய அரண்மனையின் உல்லாசம், ஆனந்தம், ஆடம்பரம் என்னும் இவற்றால் பிணைக்கப்பட்டவன். என் உடலிலே நானே பிணைக்கப்பட்டுள்ளேன். இவ்வனைத்துமே தங்கக் கூண்டுகள். இந்தக் கூண்டிலிருந்து விடுதலை அடைவதற்கு வாய்ப்பு எங்குள்ளது? வாய்ப்பு இருக்கிறது. எப்பொழுதும் நிலைபெற்று இருக்கும். எல்லாச் சுதந்திரத்தையும் பெற்றுள்ள சொரூபத்துடன் நான் ஒருங்கிணைந்து இருக்கும் பொழுது இந்த எத்தகைய பிணைப்பும் எனக்கு இல்லை.''

கணவரின் இந்தச் சொல்முத்துக்களைச் செவி மடுத்துக் கேட்ட சர்வமங்கலை புளகிதம் அடைந்தாள். கணவரின் உறுதிமிக்க ''ஸ்திதப்ரஜ்ஞ'' நிலையைக் கண்டு அவள் மனத்திலேயே வணங்கினாள்.

''தந்தையே! கருணாநிதியே! என்னுடைய கணவருக்கு ஏற்ற மனைவியாக வாழும்வண்ணம் அருள்புரிவாய். என் பிரபுவிற்கு கனவில் கூட மனத்திலே என்னால் அனுகூலமற்றவையும், அகௌரவமும் ஏற்படாதவாறு அருள்வாய்'' என்பது நாள்தோறும் அவளுடைய முறையீடாக இருந்தது.

மந்திராலோசனை செய்யும் மாளிகைக்கு நிஜகுணர் வந்தபொழுது அங்கு அவருடைய ரகசிய ஒற்றனான வீரநாயகன் அவருக்காகக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். பேரரசர் வந்தவுடனேயே எழுந்து நின்று நிலத்தில் விழுந்து வணங்கி கைகூப்பியவாறு நின்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



"என்ன வீரநாயகனே! வேறு என்ன விசேஷம்? "பேரரசே! எளந்தூரிலிருந்து படை காளிபுரத்தின் பக்கமாகக் புறப்பட்டுள்ளது என்று நம் எல்லைப் பகுதியைக் காவல்காக்கும் ஒருவன் வந்து கூறினான். அதை அரசரிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்காக வந்தேன்".

"படை கிளம்பிவிட்டதா? கிளம்பட்டும், கிளம்பட்டும் நீ இப்பொழுது புறப்படு" என்று அவனை அனுப்பி வைத்துவிட்டு, முதலமைச்சருக்கு இந்த விஷயத்தைத் தெரிவிக்குமாறு நெருங்கிய சேவகன் ஒருவனிடம் சொல்லி அனுப்பினார்.

பகைவனின் படை வந்து கொண்டிருக்கிறது என்னும் செய்தியானது காட்டுத்தீயைப் போல தலைநகரத்தில் வெகுவிரைவில் பரவியது. அமைதியான சூழலைக் கொண்டிருந்த அந்த தலைநகரத்தில் குழப்பமும் கலக்கமும் அமைதியற்ற சூழலும் தலைதூக்கின. படைகள் அங்குமிங்கும் செல்வது மிகுதியாகத் தென்பட்டது. குடிமக்களிடம் ஏதோ ஒருவகையான கவலை குழப்பம் பயம் நிறைந்து தென்பட்டது. அரண்மனை மட்டும் தன்னுடைய பேரரசரைப் போல உறுதியாக தலைநிமிர்ந்து நின்று கொண்டிருந்தது. கோயில்களில், அனைவரின் வீடுகளில் சிறப்பு பூஜைகள் அபிஷேகங்கள் பிரார்த்தனைகள் நடைபெற்றன. தம்மை நோக்கிப் புறப்பட்ட பகைவனின் படையானது, தங்களுடைய தலைநகரை அடைவதற்கு இன்னும் அதிக நாட்கள் தேவைப்படாது என்று குடிமக்கள் உணர்ந்தனர். ஆனால் தங்களுடைய படையின் ஒரு துரும்பு கூட அந்த இடத்தை விட்டு அலுங்காமல் இருந்ததைக் கண்டு அவர்களுக்கு வியப்பு ஏற்படாமல் இல்லை. இதில் ஏதோ ஏமாற்றுவேலை, வஞ்சனைகள் இருக்க வேண்டும் என்றும் சிலர் கருதினர். நிஜகுணரின் ராஜதந்திரத்தைக் குறித்த அறிவானது குடிமக்களுக்கு, ஏன், முதலமைச்சர் போன்ற எவருக்குமே இருக்கவில்லை. அவர்கள் அனைவருக்கும் அதே பயம், குழப்பம் கலவரம்.

தலைநகரமான எளந்தூரைவிட்டுக் கிளம்பி, அவர்களுடைய எல்லைப்பகுதியைத் தாண்டி காளிபுரத்தின் எல்லைப்பகுதியில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


முன்னேறி ஒரு அமைதியான வெட்டவெளியில் அந்தப் பகைவனின் படைகள் மற்றும் அனைவரும் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். பேரரசர் நிஜகுணரைக் கோழை என்றும், காட்டிலே வாழும் துறவி என்றும் அந்த நாட்டை வசப்படுத்திக் கொள்வதில் தடை இருக்காது என்றும் அவர்கள் தங்கள் தங்களுக்குள்ளேயே பேசியவாறு கேலி செய்து கொண்டிருந்தனர். சிலர் பேரரசர் நிஜகுணர் கண்கூடாகத் தென்படும் பரமசிவனின் அவதாரம் என்றும், அத்தகையவரின் மீது அநியாயம் கற்பிப்பது பாவச்செயல் என்றும் எண்ணிக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கு ஓய்வு எடுத்துக்கொண்ட அவர்கள் அனைவரும் தளபதியின் ஆணைக்கு ஏற்ப முன்னேறிச் செல்வதற்கு ஆயத்தமாயினர்.

‘‘ஹூம், இன்னும் ஊற்று’’ என்று கள்ளைக் குடிப்பதில் மூழ்கியிருந்த ஓபநாயகன் கள் இருந்த பாத்திரத்தைக் காலி செய்துவிட்டு குதிரையின் மீது ஏறி முன்னேறிச் சென்றான். படைகள் அனைத்தும் அவனைப் பின் தொடர்ந்தன. சிறிது தொலைவு செல்வதற்குள் அந்த வழியானது மூன்று குறுக்குத் தெருக்களைக் கொண்ட வழியாக விளங்கியது. அதில் வலப்பக்கத்தில் இருந்த குறுக்குத் தெரு வழியாக அவர்கள் சென்றனர். முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் பொழுது அந்த வழியானது காளிபுரத்திற்குச் செல்லும் வழியன்று என்று சிலருக்குத் தோன்றிய பொழுதிலும் அதனை வெளிப்படுத்தும் தைரியம் யாருக்கும் இயலாமலிருந்ததால் மௌனமாகப் பின் தொடர்ந்தனர்.

இவ்விதத்தில் நீண்ட நேரத்திற்கு வழியைத் தாண்டிச் சென்றபிறகு அவர்கள் ஒரு காட்டினுள்ளே நுழைந்தனர். அப்பொழுதுதான் அவர்களுக்கு வழி தவறி வந்திருப்பது தெரிய வந்தது. தளபதி ஓபநாயகன் கள்ளின் போதையில், வெற்றி வெறியில், பகல் கனவில் மெய்மறந்து காட்டிலே சிரித்துக் கொண்டிருந்தான். தொலைவிலே, புதர்புதராக, நெருக்கமாகச் சேர்ந்திருந்த செடி, மரங்களைக் கண்டு அவன், ‘‘ஓ அங்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பாருங்கள். பகைவனின் படையானது தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத்துக்கொண்டு இருக்கிறது'' என்று கத்தினான். அஞ்சி, நடுங்கும்படிக் கத்தியதால் சிலர் அஞ்சினர். வேறு சிலர் கள்ளின் போதையில் வளவள என்று பேசிய தளபதியைக் குறித்துச் சிரித்தனர். படைகளின் நடுவில் முணுமுணுப்புக்களும், குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டன. சீறும் நாகப்பாம்பை போல ஆன ஓபநாயகன், தன் பின்னாலிருந்த வீரனிடம் கர்ஜித்தவாறு ''அது என்ன சத்தம்? ஏய் வீரனே, என்ன அது?'' என்றான். தளபதியின் பொறிபறக்கும் கண்களைக் கண்டு நடுங்கிய வீரன் அஞ்சியவாறு மெதுவாக, ''ஸ்வாமி, நாம் வழி தவறி வந்திருக்கிறோம். காட்டினுள்ளே நுழைந்திருக்கிறோம். எதிரிலே தெரிவது பகைவனின் படையன்று, செடிகளின் புதர் என்று இவர்கள் அனைவரும் பேசிக் கொண்டுள்ளனர்.''

ஓபநாயகன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு கர்வத்துடன், ''என்ன, யார் முன்பு பேசிக் கொண்டிருக்கிறாய் என்று தெரியுமா? என்னுடைய தலைமையின் மீது அவநம்பிக்கை கொள்ளும் அளவிற்குக் கர்வம் வந்துள்ளதா?'' என்று கேட்டான்.

''தவறு ஸ்வாமி, மன்னிக்க வேண்டும் மகா ஸ்வாமி'' என்று கூறிய வீரன் மௌனமாகப் பின்னால் சென்று மறைந்து விட்டான். படையானது மீண்டும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. நடப்பதற்கு வழி கிடைப்பதும் கஷ்டமானதாக இருந்தது. காடு அடர்ந்து இருப்பதற்கு ஏற்ப இருளும் இன்னும் இருளத் தொடங்கியது. தளபதிக்கு ஏறியிருந்த போதை இறங்கத் தொடங்கியது. காட்டிலே எழும் பயத்தை ஏற்படுத்தும் அந்த ஜீம் ஜீம் என்னும் ஒலியால் அவன் விழிப்படைந்தான். கூடாரம் அடிப்பதற்கு அந்த இடமானது சரியான வாய்ப்பை ஏற்படுத்த இயலாததாக இருந்தது. அந்த அடர்ந்த காட்டிலே வழி தவறுவதற்கு எனக்கு என்ன ஆகிவிட்டது? இது அனைத்துமே அந்த நிஜகுணனின் கெட்ட ஆலோசனையாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த பொழுது அருகிலே ஆந்தை ஒன்று உரக்கக் கத்தியதால், தளபதி முதற்கொண்டு, படையில் இருந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அனைவருமே அது அமங்கலத்தைக் குறிப்பிடுகிறது என்று அச்சம் கொண்டனர். உறுதியான மனம் கொண்டவர்களும் நடுங்கினர். வந்த வழியாகத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று ஓபநாயகன் ஆணையிட்டான்.

சரி, வந்த வழிக்கு வரி இல்லை என்பதைப் போலப் படையானது திரும்பியது. அருகிலேயே பயங்கரமான புலியின் உறுமலைக் கேட்ட படைவீரர்கள் அனைவரும் தீவிரமாக அடி எடுத்து வைக்கத் தொடங்கினர். நீண்ட நேரம் நடந்து நடந்து ஒரு வெட்டவெளிப் பகுதிக்கு வந்து, அவர்கள் அனைவரும் அந்த இரவைக் கழிப்பதற்குக் கூடாரம் அடித்துக் கொண்டனர். வழியில் நடந்து வந்த களைப்பால் சோர்ந்து போயிருந்த அவர்கள் ஆழ்ந்த உறக்கத்திற்கு ஆட்பட்டனர். மழையிலே தொப்பலாக நனைந்த பொழுது விழித்து எழுந்தனர்.

காளிபுரத்திற்குச் சரியான வழியை விசாரித்துக் கொண்டு இந்த முறை புறப்பட்ட ஓபநாயகன் பொன்னி நதிக்கரையில் ஓய்வெடுப்பதற்கு ஆணையிட்டதுதான் தாமதம். இங்கு அவர்களுக்கு மற்றொரு விபத்து காத்துக் கொண்டிருந்தது. நிறைந்திருந்த பொன்னி நதி வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. அதைத் தாண்டிச் செல்வது என்பது இயலாத ஒன்று. வேறு எந்த வழியுமே இல்லை. சரியென்று நதி வடிவதற்காகப் படையானது காத்துக் கொண்டிருந்தது. ஐந்து, ஆறு நாட்களாகிவிட்டாலும் மழையானது நிற்கவில்லை. நதியும் வடியவில்லை. சிலர் இத்தகைய மழையை என்றுமே பார்த்ததில்லை என்று எண்ணினர்.

இடைவிடாத மழையிலே நனைந்து அனைவரும் கடகடவென நடுங்கிக் கொண்டிருந்தனர். இருமல், சளி, காய்ச்சல் என்னும் உபாதைகளால் படைவீரர்கள் நொறுங்கிப் போயினர். உணவுப் பொருட்களுமே கரைந்து கொண்டிருந்தன.

அன்று நள்ளிரவு. மழை சோ என்று கொட்டிக் கொண்டிருந்தது. கூடாரங்களில் அனைவரும் சுருட்டிக் கொண்டு படுத்துக் கொண்டிருந்தனர். காய்ச்சலின் வெப்பத்தால் சிலர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


துன்பப்பட்டுக் கொண்டிருந்தால், சிலர் இருமி இருமி அச்சப்பட்டுக் கொண்டிருந்தனர். ஓபநாயகன் காய்ச்சலின் வெப்பத்தில் எதை எதையோ பிதற்றிக் கொண்டிருந்தான். மழையாலும், குளிராலும் அவர்களுக்கெல்லாம் போதும் போதும் என்றாகி விட்டது. தீவட்டிகள் எல்லாம் நனைந்தன. எண்ணெயுடன் நீர் சேர்ந்து கொண்டது. தானியங்கள் எல்லாம் முளைவிடத் தொடங்கின. இருப்பினும் தளபதியின் ஆணையின் கடுமைக்கு அஞ்சி எதுவும் செய்யாமலே இருந்தனர்.

மின்னினால் மட்டும் ஏதாவது தென்படும் சூழ்நிலையானது நிலவியது. அந்தக் காரிருளிலே இடியின் ஆர்ப்பாட்டம்! மின்னல்களின் உச்சஸ்வரம்! பொன்னி நதிக்கு ஆவேசம் ஏற்பட்டதைப் போல கண்ட இடத்திலே, கண்டது அனைத்தையுமே புரட்டிப் போட்டவாறு சென்றாள். அவளுடைய பேரிரைச்சலுடன் கூடிய ஆர்ப்பாட்டங்களுக்கு எதுவும் செய்யத் தோன்றாமல் மருளடைந்து எழுந்த வீரர்கள் ''அதோ, நதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. எழுந்திருங்கள். பின்னால் செல்லுங்கள், ஓடுங்கள், மேலே ஏறுங்கள் என்று அலறியவாறு, எழுந்திருந்தவாறு, வீழ்ந்தவாறு பின்னால் சென்றனர். ஆனால் அதற்குள் போர் வீரர்கள் அதிக எண்ணிக்கையில் அந்த நதியின் கோபத்திற்குப் பலியாயினர்.

விடிந்தது. அன்றைய இரவுப் பொழுது கழிந்து எப்படியாவது அங்கிருந்து தப்பித்தால் போதுமென்று காத்துக் கொண்டு இருந்த படைவீரர்கள் ஓரிடத்தில் குழுமினர். ஆனால் அவர்களுடைய தளபதியான ஓபநாயகனைப் பற்றிய அடையாளமே இல்லை. அவனைப் போன்றே பல போர்வீரர்களும் காணாமல் போய்விட்டனர். அதுமட்டும் அல்ல, சில கூடாரங்கள் அவர்களுடைய பொருட்கள், சாமான்கள், குதிரைகள், கோவேறு கழுதைகளும் காணாமல் போயிருந்தன. அறிவற்ற குடிபோதையிலிருந்த தளபதியின் ஆணையினால் இவ்வளவு கஷ்டங்களும் ஏற்பட்டன என்று ஒரு சிலர் கூற, வேறு சிலரில் ஒருவன் ''அப்படி இல்லை ஐயா, நான் அன்றைக்கே கூறினேன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அல்லவா, பேரரசர் நிஜகுணராக ஶிவனே அவதரித்துள்ளார். அறச்சிந்தனை உடையவர். அத்தகையவரின் மீது இல்லாத குற்றத்தைச் சுமத்தி, போர்புரியக் கிளம்பினால், என்ன நிகழுமோ, அதுதான் நிகழ்ந்துள்ளது. கங்கை வறிதே இருப்பாளா? பாவச் செயலைப் பொறுத்துக் கொள்வாளா? அன்று காட்டிலே வழிதவறி அப்படியாயிற்று; இன்று இப்படியாயிற்று'' என்று கூறினான்.

''ஆமாம் ஐயா, நீ கூறுவது உண்மை. நாம் என்ன புண்ணியம் செய்தோமோ. நாம் உயிர் பிழைத்து உள்ளோம்'' என்று மற்றொருவர் கூறினார்.

அவர்கள் அனைவரும் எளந்தூருக்குத் திரும்பினர். அங்கு அவர்களுடைய அரசன் அவர்களுக்குக் கொடுக்கவிருந்த தண்டனையை எண்ணி, தைரியத்தை இழந்து நடுங்கினர்.

எளந்தூரைச் சேர்ந்த படைகள் அனைத்தும் அந்த நதிக்கு பலியாயிற்று என்றும் எஞ்சி இருந்தவர்கள் தங்களுடைய நாட்டிற்குத் திரும்பிச் சென்றனர் என்றும் ரகசிய ஒற்றர்களின் மூலம் செய்தியை அறிந்து கொண்ட சிவகுமாரர், ருத்திரநாயகர் பேரரசர் நிஜகுணரைக் கண்டு, ''பேரரசே! இந்த வியப்பளிக்கக் கூடிய செய்தியைக் கேட்டீர்களா? என்று பீடிகை போட்டனர். அவர்களுக்கு முன்பாகவே அந்த செய்தியை அறிந்திருந்த அவர், ''அதில் வியப்படைவதற்கு என்ன உள்ளது? இது சம்புலிங்கனின் இயல்பான லீலையாகும்'' என்று கூறினார்.

''ஆம் அரசே! சம்புலிங்கன் காப்பாற்றுவான் என்றும் போர் வேண்டாம் என்றும் பகைவனின் பாதமானது நம் நாட்டு நிலத்தைத் தொடக்கூடாது என்றும் தாங்கள் அன்றே ஆணையிட்டிருந்தீர்கள். அது உண்மையாயிற்று'' என்று பக்தியுடன் படைத்தலைவர் கூறினார்.

ஶிவகுமாரர் ''படை எடுத்து வந்த பகைவர்களை இந்த விதத்தில் அழித்து வராமல் இருக்குமாறு செய்து பேரரசரின் வேண்டுதலை நிறைவேற்றிக் காப்பாற்றிய சம்புலிங்கத்திற்கு ஸஹஸ்ர அர்ச்சனை, அபிஷேகம் செய்விக்க வேண்டும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பேரரசரே'' என்று தன் பக்தி உணர்வை தடுத்துக் கொள்ள இயலாமல் கூறினார்.

''நீங்கள் சம்புலிங்கத்திற்கு அபிஷேகம் அர்ச்சனை செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, அவனிடம் ஒருமித்த பக்தி இருந்துவிட்டால் போதுமானது. இந்த போர் மட்டுமின்றி, எல்லாத் துன்பங்களிலிருந்தும் அவன் விடுவித்து விடுவான்.

''ஶிவபக்தியினால் மட்டுமே காலம்-கர்மம்-மாயை என்பனவற்றை வெல்ல இயலும்.''

''பிரபு, நீங்கள் இந்த நாட்டின் பேரரசர் மட்டும் அல்ல. எங்களுடைய தலைமுடியை வளையாமல் காப்பாற்றும் சம்புவின் சொரூபமாகவே தாங்கள் திகழ்கிறீர்கள். எங்களுடைய சிறிய குற்றங்களையெல்லாம் பேரரசர் மன்னிக்க வேண்டும்'' என்று ருத்திரநாயகர் பக்தியால் தழுதழுத்த குரலில் கூறினார்.

''அது உங்களுடைய பெருந்தன்மை ருத்திரநாயகரே! உங்கள் பக்திதான் உங்களைக் காப்பாற்றி உள்ளது. நான் ஒருவன் மட்டுமா சம்புவின் சொரூபம்? நீங்கள் அனைவருமே சம்புவின் சொரூபங்களே. ஆனால் நீங்கள் அதனை மறந்து, 'நான் அரசன், நான் முதலமைச்சர், நான் படைத்தலைவன்' என்னும் பொய்யான பிரமையில் இருக்கிறீர்கள். ''நான் சம்புவின் சொரூபம், தென்படும் அனைத்துமே என்னுடைய சொரூபம்தான்'' என்று உணர்ந்துகொண்டு நடந்து கொண்டால் நமக்கு எந்தப் பகைவனும் இல்லை, போர் இல்லை, கஷ்டம் இல்லை, தொந்தரவுகள் இல்லை. அத்தகையவனின் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் சம்புலிங்கமே பார்த்துக் கொள்வான்.''

பேரரசரின் அனுபவத்திலிருந்து வெளிப்பட்ட அமுத மொழிகளைச் சுவைத்த ருத்திரநாயகர் மிகவும் மகிழ்ச்சியுடன் - ''பிரபு, எப்பொழுதும் புதுமையானதாகத் திகழும், அறிவை அளிக்கவல்ல உங்களுடைய சொல்லமுதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தால் வேறு எதுவுமே தேவையில்லை என்று தோன்றுகிறது. மகிழ்ச்சி நிறைந்து பொங்குகிறது'' என்று கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


போரைக் குறித்த பயம் அகன்றுவிட்டதால் குடிமக்கள் கவலையற்று இருந்தனர். தலைநகரம் அன்று தனித்ததொருவகையில் உற்சாகத்துடன் சோபித்துக் கொண்டு இருந்தது. கோயில்கள், மடங்கள் போன்ற இடங்களில் சிறப்புப் பூஜைகளும் பிரார்த்தனைகளும் நடைபெற்றன. அரண்மனையில் ஜங்கமர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டது. ஜங்கமர்கள் அனைவரும் நிறைவடைந்தவர்களாக, அரசரை வாய் நிறைந்து புகழ்ந்து, கை நிறையும் வண்ணம் தட்சிணையைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியில் கொண்டாடினர்.

இந்த நிகழ்ச்சியால் கணவரின் உறுதியான நிலைமையையும், நோக்கத்தையும், சம்புவின் அருளையும் உணர்ந்துகொண்ட நுண்ணறிவினைப் படைத்த மங்கலை விவரிக்கவியலாத மகிழ்ச்சியால் உற்சாகம் அடைந்தாள். அவளுடைய சந்திரனைப் போன்ற முகமானது ஒளிர்ந்து கொண்டிருந்தது. சம்புலிங்கனை இடைவிடாமல் மனத்திலே ஜபிப்பதுடன் கணவரின் திருவுருவமும் அவளுடைய கண் எதிரிலே ஒளிர்ந்து கொண்டிருந்தது. பேரரசரின் வரவையே எதிர்நோக்கி லதா மண்டபத்தில் காத்துக் கொண்டிருந்தாள். பொற்கூண்டிலே ஒரு அழகிய கிளியானது, தலைவி கொடுக்கும் பழத்தின் மீது உள்ள ஆசையால் காத்துக் கொண்டிருக்கிறது. சர்வமங்கலைக்கு அதன் மீது அன்பு அதிகம். அதைக் கூண்டிலே வைப்பதை அவள் மனமானது ஏற்றுக் கொள்ளாது. வேறு வழியே இல்லை. ஆனால் அடைபட்டுக் கிடக்கும் வலியானது அதற்கு ஏற்படாதவாறு கவனத்துடனிருந்தாள்.

அதற்கு அவளே பழத்தை உண்பிப்பாள். விளையாடச் செய்வாள். நல்ல சொற்களைப் பயிற்றுவிப்பாள். அந்தக் கிளிக்கு அதே விருப்பமானது என்று தோன்றுகிறது. அவள் கூறுவதை அது கேட்கும். அவள் தோள்மீது ஏறிக் கொண்டு செவியில் ''நிஜகுணப்பிரபு வருகிறார், வருகிறார்'' என்று கூறி மங்கலையைப் பேச்சிலே சிக்க வைத்து கிண்டல் செய்யும். அவளுடைய தலையின் முன்பக்கத்தில் அமர்ந்து கொண்டு இறக்கையை விரித்து, கண்களை மூடி ''அதோ பேரரசர், பேரரசர்! என்று கூறி மங்கலை அவசர அவசரமாகத் தலைப்பைச் சரி செய்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



கொள்ளுமாறு செய்யும். அவள் சொல்வதை வெகு விரைவிலே கற்றுக் கொண்டு அவளிடம் ஒப்பிக்கும்.

மங்கலை அந்தக் கிளியின் உடலை அன்புடன் வருடிக் கொடுத்து சுவைமிகுந்த பழங்களை உண்ண வைத்து, நிறைவு அடையச் செய்து, தன்னுடைய கைகளில் மெதுவாக சுழற்றிப் பிடித்து, 'ஓ அழகான கிளியே, எங்கே இப்படிக் கூறுவாய்'' என்று எதை எதையோ யோசிக்கத் தொடங்கினாள். அந்த அழகிய கிளியானது தன்னுடைய சின்னஞ்சிறிய கண்களை அங்குமிங்கும் சுழற்றி, மங்கலையைப் பார்த்தவாறு, 'ஓ அழகான கிளியே எங்கே இப்படிக் கூறுவாய்'' என்றது. மங்கலை ஆலோசிப்பதிலிருந்து விழித்து எழுந்து கிளியின் அந்தச் சொற்களைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்து, அதனை முத்தமிட்டு ''பகைவனே இல்லாத ஸ்ரீ நிஜகுண அரசருக்கு நல்வரவு'' என்று மீண்டும் மீண்டும் கூறியவுடனேயே அந்தக் கிளி ''பகைவனே இல்லாத ஸ்ரீ நிஜகுண அரசருக்கு நல்வரவு'' என்று கூறியது. மீண்டும் மீண்டும் கூறவைத்து மனநிறைவு அடைந்தாள். பேரரசர் வருகை புரிந்து கொண்டிருக்கிறார் என்று பணிப்பெண் ஒருத்தி அறிவித்து விட்டுச் சென்றாள். கிளியுடன் எழுந்து வந்து கதவினருகில் நின்று கொண்டு அதன் செவியில் கூறியபொழுது அந்தக்கிளி ''பகைவனே இல்லாத ஸ்ரீ நிஜகுணப் பேரரசருக்கு நல்வரவு'' என்று வரவேற்று இறக்கைகளை அடித்துக் கொண்டது. நிஜகுணர் அதனுடைய பேச்சைக் கேட்டு புன்சிரிப்புடன் நகைச்சுவை ததும்பும் குரலிலே, ''ஓ, அதற்கு எத்தகைய கடினமான சொற்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறாய்? பாவம். அதுவும் என்னைப் போல உன் கைப்பொம்மையாக உள்ளது'' என்று கூறினார்.

மங்கலை பொய்க் கோபத்துடன் கணவரைப் பார்த்து, ''அப்பா, நீங்கள் என் கைப் பொம்மையா?'' என்று கேட்டாள். நிஜகுணர் ஆமாம் என்று தலையை ஆட்டினார். மங்கலை ''அரசே! என்னுடைய கணவர் மிகவும் அற்பமாக பெண்ணின் கைப்பொம்மையாக என்றுமே இருக்கவியலாது. சாத்தியமும் இல்லை. நீங்கள் எல்லாவிதமான சுதந்திரமும் உள்ளவர்'' என்று உணர்வுப் பெருக்குடன் கூறினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஓ, நீ இப்பொழுது வாயாடியாக உள்ளாய். இந்தக் கிளியையும் உன்னைப் போன்றே செய்து கொண்டு இருக்கிறாய்''.

''போங்கள் அரசே, அப்படி என்றால் நான் எதுவுமே பேச மாட்டேன்'' என்று பொய்க்கோபத்துடன் அங்கிருந்து சரசரவென நடந்து லதாமண்டபத்திலிருந்த ஒரு மல்லிகைக் கொடியை சுற்றி வந்து அதன் நறுமணத்தை அனுபவித்தவாறு நின்றாள். கிளி அவளுடைய தோள் என்னும் தொட்டிலில் நிம்மதியாக உறங்கியது. மனைவியின் அருகிலே சென்ற நிஜகுணர் அவளுடன் ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டு அவளுடைய முகத்தைத் தம்முடைய உள்ளங்கையில் ஏந்தியவாறு ''ஓ, சினம் கொண்டுள்ள அழகிய கௌரியே! கேட்பாய் கவனத்துடன் கேட்பாய்'' என்று அவளுடைய கண்களைப் பார்த்தவாறு இனிமையாக மெல்லப் பாடத் தொடங்கினார்.

''மனமெனும் கிளிக்கு கொஞ்சி, அன்புடன் மெதுவாக ।
அழகிய சொற்களைப் பயிற்றுவிப்பாய் பெண்ணே ॥
பெயரற்ற, எல்லையற்ற, நித்தியானந்தத்தின் ।
இருப்பிடம், ஞான வடிவினன் ॥
செயலற்ற சம்புலிங்கம் எனும் ஆத்மாராமனே ।
ஶிவஶிவ என்று பயிற்றுவிப்பாய் ॥

பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது மங்கலையின் கண்கள் மலர்ந்தன. இளம்பிறையைப் போன்ற அவளுடைய புன்னகை அழகைச் சிந்தியது. நிஜகுணரின் கண்கள் மின்னின. யோக அனுபவத்தின் நிறைவானது அவருடைய முகத்திலே சூறை கொண்டது. தம்மையே நோக்கிக் கொண்டிருந்த அந்த அழகிய கண்களிலே முத்தமிட்டார். மனைவியின் அதரச் சுவையிலே நிறைவு அடைந்தார்.

''இந்த விதத்தில் உன்னுடைய மனம் என்னும் கிளிக்கு அழகிய சொற்களைப் பயிற்றுவிப்பாய் மங்கலா'' என்று கூறினார். மங்கலை கணவரின் மார்பிலே சாய்ந்து கொண்டாள்.

''அரசே! உங்களுடைய பாடலின் பொருளானது எனக்கு முழுமையாகத் தெரியாவிட்டாலும், ஏதோ விவரிக்கவியலாத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மகிழ்ச்சியானது ஏற்பட்டுக் கொண்டுள்ளது. என்னுடைய பிரபுவின் இந்தச் செல்வம் நிறைந்த நாட்டின் அரசியாக நான் ஆகியுள்ள பெரும்பேற்றை நினைத்து மகிழ்ச்சியாக உள்ளது. காவியங்களைப் படைக்கும் ரிஷியின் கையைப்பிடித்த புண்ணியம் எனக்குக் கிடைத்துள்ளது என்று பெருமையாக இருக்கிறது.

''தேவி இது உன்னுடைய கணவர் கவிஞர் என்னும் பெருமையின் பேரெல்லையாகும். இத்தகைய தன்னலத்துடன் கூடிய பார்வையால் எந்த விதப் பயனும் இல்லை.''

''பிரபு, என்னுடையது தன்னலத்துடன் கூடிய பார்வை அன்று. சமநோக்கான பார்வையுடனேயே நான் கூறி இருக்கிறேன். இதனால்தான் எது நிலைத்தது? எது நிலையற்றது? என்று எண்ணும் விவேகமானது ஏற்படுகிறது என்று நாள்தோறும் உங்களிடமிருந்து அறிவுறுத்திக் கொண்டு உங்கள் எதிரிலே, குருவின் எதிரிலேயே நான் சமநோக்கற்ற பார்வையுடன் பேசி, உங்களுடைய ஒப்பற்ற உபதேசத்திற்கு நான் களங்கத்தை ஏற்படுத்துவேனா?''

''அரசே! இப்பொழுது உண்மையாகவே அந்தக் கண்ணோட்டத்துடன் என்னைப் பார்த்தவர் நீங்கள். அதிகமாகப் பேசி விட்டேனோ என்னவோ! அரசர் என்னை மன்னிப்பார் என்று நம்புகிறேன்'' என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள். நிஜகுணர் அவளுடைய கைகளைத் தம்முடைய முன்கையால் பிடித்துக் கொண்டு ''என்ன! உன்னை மன்னிப்பதா? அது சாத்தியம் இல்லை. அதற்குத் தண்டனை அளித்தே ஆக வேண்டும். முதலில் தன்னலத்துடன் கூடிய என்னுடைய கண்ணோட்டத்தை நிரூபித்துக் காட்டு. இது அரச ஆணை'' என்று பொய்க் கோபத்துடன் கூறினார்.

''ஓ, நிரூபித்துக் காட்டுவேன். முதலில் என் கையை விடுங்கள்'' என்று சிரித்தவாறு கையை விடுவித்துக் கொள்வதற்கு முயற்சி செய்தாள்.

''அது முடியாது, குற்றவாளி இந்தச் சிறைக்குள் இருந்தபடியே கூறவேண்டும். ஏன், தண்டனைக்கு அஞ்சி விடுவித்துக் கொள்ளும் முயற்சியோ?''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''இல்லை அரசே - நான் உண்மையைக் கூறினாலும் நீங்கள், கணவர் என்னும் பெருமையால் அப்படிக் கூறினாய், இப்படிக் கூறினாய் என்பீர்கள். நான் பெண். உங்களுடைய மனைவி என்னும் எண்ணத்துடன் தானே நீங்கள் அப்படிக் கூறுகிறீர்கள்! இது மேலோட்டமான தன்னலத்துடன் கூடிய பார்வை அல்லவா! சூட்சுமக் கண்ணோட்டத்துடன் பாருங்கள் அரசே. என்னுடைய மகிழ்ச்சியின் பொருளானது விளங்கும்''.

''அப்பா, எப்படியோ என்னையே குற்றவாளி ஆக்கிவிட்டாயல்லவா? அப்படியானால் இந்தக் குற்றவாளிக்குப் பேரரசியானவர் விதிக்கும் தண்டனை என்னவோ?'' என்று நிஜகுணர் நகைச்சுவையுடன் முன்னால் குனிந்தவாறு கூறினார்.

''ஆமாம் உங்களுக்கு இப்பொழுது தண்டனை அளிக்க வேண்டும்.'' தன்னுடைய முகத்தை அவளுக்கு அருகிலே திருப்பினார்.

''ம், கொடு ஆயத்தமாக இருக்கிறேன்''

''போங்கள் அரசே! நான் கொடுக்கும் தண்டனை அது அல்ல. அண்மையில் எழுதினீர்கள் அல்லவா. 'குயில், செல்லக்குயில், அழகிய குயில்' - அந்தப் பாடலைப் பாடுங்கள். நான் வீணையைக் கொண்டு வருகிறேன்'' என்று எழுந்து சென்று வீணையை எடுத்துக் கொண்டு வந்து அதன் உறையை எடுத்து விட்டு வீணையை அரசரின் கைகளில் கொடுத்தாள்.

வீணையின் சுருதியைச் சேர்த்தவாறு, ''இந்தக் குயிலிற்கு அந்தச் செல்லக்குயிலின் பாட்டு எதற்கோ?'' என்றார்.

''போங்கள் அரசே, குயிலாவதற்கு நான் அதைப் போலக் கருப்பாகவா இருக்கிறேன்''?

''நீ கருப்புக்குயிலன்று. செல்லக்குயில், அழகிய குயில், திறமைசாலியான குயில். எனக்கும் உனக்கும் இடையில் உன்னைப் போன்றே திறமைசாலியான அழகிய குயில் ஒன்று இருக்கிறது'' அதைக் குறித்துப் பாடியுள்ளேன்.

''சரி இப்பொழுது பாடுங்கள்'' என்று மங்கலை சரியாக அமர்ந்து கொண்டவாறு கூறினாள்.

Digitization by Hindu Heritage-Foundation of America. HHFA(USA)


''சரி ஆணை'' என்று சிரித்த நிஜகுணர், ''ஸௌராஷ்டிர'' ராக ஆலாபனையைச் செய்துவிட்டுப் பாடத் தொடங்கினார்.

''குயில், செல்லக்குயில், அழகிய குயில்,
திறன்மிக்க குயில்,
முன்பு தவத்திலே ஈசன் மூழ்கியிருக்க,
மிகவும் வெந்த காமனை விடுத்துக் குயிலே
விரைந்து வந்து பிறையணிந்த ஶிவனைக் கூடி
குறையின்றி நீ வாழ்வாய் குயிலே ॥ 1 ॥
மங்கலச் சொல்லுடன் மன்மதனைப் புகழ்வது
பங்கமல்லவா, காண்குயிலே,
ஒளிரும் சர்வமங்கலையின் அரசனை
விடாமல் நீ பாடுவாய் குயிலே ॥ 2 ॥

நிஜகுணரின் இனிமையான குரலுடன் வீணையின் ரீங்காரமானது ஒருங்கிணைந்து, உவமிக்கவியலாத ஒரு நாதப்பெருக்கானது அங்கு செவிக்கு இனிமையாக இதயத்தைக் குளிரச் செய்தது. கணவரின் அகன்ற மார்பிலே தஞ்சம் அடைந்திருந்த வீணையைக் கண்டு மங்கலைக்கு ஒரு கணம் பயம் ஏற்பட்டது. பாடலானது கடைசி சரணங்களை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது அவளுடைய மலர்ந்த கண்களிலே தீனமான உணர்வு நிறைந்திருந்தது. அவளுடைய உதடுகள் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தன. பெருமூச்சு விட்டதால் மார்புப்பகுதியானது ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. பாட்டுடன் ஆலாபனையையும் முடித்து வீணையைக் கீழே வைத்துவிட்டு மங்கலையின் பக்கமாகத் திரும்பி, ''ஏன் முகம் உற்சாகமற்று உள்ளது? என்னுடைய பாடலால் உற்சாகம் குறைந்து விட்டதா?'' என்று மனைவியின் முகவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு கேட்டார்.

மங்கலை கணவரின் அதரங்களின் மீது விரலை வைத்து ''அமைதி அமைதி, என்ன கூறுகிறீர்கள் அரசே? என் பிரபு பாடிய பாடலால் உற்சாகம் குறைந்தது என்றால் உலகத்திலே நான் மகிழ்ச்சி அடையத் தக்கது என்று ஏதாவது உள்ளதா?'' என்று கேட்டாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அவளுடைய புனிதமான, நிறைந்த அன்பைக் கண்ட நிஜகுணரின் இதயமானது பொங்கியது.

"அப்படியாயின் உன்னுடைய முகமானது உற்சாகமற்று இருப்பதற்குக் காரணம் என்ன"?

"சொல்லத்தான் வேண்டுமா அரசே"

"ஆமாம், சொல்லத்தான் வேண்டும், என்னுடைய தேவியைக் கலவரமடையச் செய்த அதனை அப்புறப்படுத்த வேண்டும்".

"ம், நீங்கள் நான்காவது சரணத்தில் "சர்வமங்கலையின் ரசனை குன்றாமல் நீ காப்பாற்றுவாய் குயிலே" என்று கூறிவிட்டீர்கள் அல்லவா அரசே, நான் அத்தகைய தொந்தரவு என்ன செய்தேன்"?

நிஜகுணர் வியப்பு அடைந்தார்.

"நீ தொந்தரவு கொடுத்தாய் என்று எப்பொழுது எங்கு கூறியிருக்கிறேன் மங்கலை"?

"சர்வமங்கலையின் அரசனை நீ காப்பாற்றுவாய் குயிலே" என்று அந்தக் குயிலிடம் வேண்டிக் கொண்டதன் பொருள் என்ன சுவாமி? நான் தொந்தரவு கொடுக்கிறேன் என்பதுதானே பொருள்!

நிஜகுணர் அவள் பேசிய பேச்சிலிருந்த தவறு என்ன என்பதை உணர்ந்துகொண்டு கலகலவென்று நகைத்தார்.

"ஓ, புதிய மைத்ரேயிதேவி அவர்கள் அதன் பொருளை இந்த விதத்தில் புரிந்து கொண்டாரோ? அதுவும் ஒரு எழுத்தைத் தானே சேர்த்துக் கொண்டு (கா - பாடு) (காப்பாற்று என்று பொருள்)

"பிறகு"

"பிறகு என்ன, "பாடு" என்பதைக் காப்பாற்று என்று கேட்டுவிட்டு இல்லாத பொருளைக் கற்பித்துக் கொண்டுள்ளாய். சர்வமங்கலையின் அரசன் என்றால் நான் அல்ல. சர்வமங்கலை என்றால் நீ அல்ல. ஆதி சக்தியான சர்வமங்கலையின் அரசனான ஶிவனை, விடாமல் நினைக்க வேண்டும் குயிலே, அதாவது மனமே என்பது பொருள் ஆகும். அது உனக்கு எப்படித் தெரியாமல் போயிற்று?"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



இப்பொழுது மங்கலை நீண்ட பெருமூச்சு விட்டாள். "அப்பா, எனக்கு இவ்வளவும் தெரியாமல் போயிற்றே?"

"அதற்குத்தான், கவனமாகக் கேட்டு, கவிஞனின் கருத்தை, சொற்களுடைய முழுமையான பொருளையும் சரியாக கிரகித்துக் கொள்ள வேண்டுமென்று கூறுவது. தேவி உன்னுடைய மனம் இன்னும் தூய்மை அடைய வேண்டும் பயிற்சியை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்."

"அரசே! உங்களுடைய காவியத்தின் உண்மையான பொருளை உணர்ந்து கொள்வதற்கு ஒருமுனைப்பட்ட மனத்தை, அறிவை அந்த சம்புலிங்கம் அருளவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்."

"ஏற்கனவே அவன் அதை உனக்கு அருளி இருக்கிறான். ஆனால் பயிற்சியினால் மட்டுமே அது நல்ல பயனைத் தரவல்லது. அதை ஒளிரச் செய்யும் ஆற்றலானது உன்னுடைய கையில் தான் இருக்கிறது மங்கலை. பிருஹதாரண்யக உபநிஷதத்தின் பயிற்சியை என்று முதல் தொடங்கலாம்?

"அரசே! இப்பொழுது எப்படி இருக்கிறோமோ, அப்படியே உலகியல் இன்பங்களில் மகிழ்ச்சியாக இருப்பது மேலானதா அல்லது நிலைத்த பரதத்துவமான இரண்டு அற்ற ஆனந்தக்கடலிலே நீந்துவது மேலானதா?" என்று கணவரைப் பரிசீலித்துப் பார்ப்பதைப் போலக் கூறினாள். அவளுடைய பரீட்சையைக் கண்டு நிஜகுணர் வேண்டும் என்றே அவளை இன்னும் இறுக்கமாக அணைத்துக்கொண்டு "இதோ, இந்த உலகியல் சார்ந்த இன்பத்தில் மகிழ்ந்தவாறு, அதர அமுதத்தைச் சுவைத்துக் கொண்டு இருப்பதே மேலானது" என்று கூறினார்.

மங்கலை உடனடியாக கணவரின் மார்பிலிருந்த முகத்தை எடுத்துவிட்டு அவரையே கூர்ந்து நோக்கியவாறு, "உண்மையைக் கூறுங்கள் அரசே அப்படியெல்லாம் பொய் கூறினால் நான் கேட்பவள் அன்று" என்று உறுதியுடன் கூறினாள். அப்பொழுது நிஜகுணர் சிரித்தவாறு, "அது பொய் என்று தோன்றினால், இந்த விதத்தில், பரதத்துவத்தின் இரண்டாவது அற்ற ஆனந்தத்திலேயே நீந்துவது மேலானது என்று உணர்வாய்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''அப்படியா?''

மனைவியின் இந்தக் கேள்வியால், அகமுகமாக நோக்கிய நிஜகுணர் கண்களை மூடியவாறு, ''தேவி கேட்பாய் உன்னுடைய கேள்வியானது மிகவும் மனத்தைத் தொடுவதாக உள்ளது. சாதகர்களை எப்பொழுதும் தொல்லைப்படுத்திக் கொண்டுள்ள கேள்வி அது. செல், எழுதுவதற்கு வேண்டிய பொருட்களை எடுத்துக் கொண்டு வந்து நீ எழுதிக் கொண்டே செல்வாய் நான் கூறுகிறேன்'' என்று கூறினார்.

மங்கலை மிகவும் உற்சாகத்துடன் ஓடினாள். புதிதாக ஒரு காவியத்திற்குத் தன்னுடைய கேள்வியானது தூண்டுதலாக அமைந்தது என்னும் பெருமிதம் அவளுக்கு எழுதுவ்வதற்கு வேண்டிய பொருட்களை எடுத்துக்கொண்டு வந்து அமர்ந்து கொண்டே அவள் எழுதுவதற்கு ஆயத்தமானாள்.

நிஜகுணரின் கம்பீரமான தொண்டையிலிருந்து ஒலி வெள்ளமாக வெளிப்பட்டது.

''ஞானி உலகியல் பரதத்துவமெனு மிரண்டையும் ।
விடாமல் இணைத்து நடத்திச் செல்வான் ॥
குரு சம்புலிங்கத்தின் நினைவு நிலைத்து ।
உலகியல் சார்ந்த ஆசையை நீத்து விடுவான்'' ॥

என்று பாடி நிஜகுணர் கண்களைத் திறப்பதற்கும், எழுதுவதை முடித்துவிட்டு மங்கலை தலையை மேலே நிமிர்த்துவதற்கும் சரியாக இருந்தது.

''தேவி, திறமை மிக்கவளே! இந்த உலகியல் மற்றும் பரதத்துவம் என்னும் இரண்டையும் நன்றாக நிறுத்துப்பார்த்துப் போக வல்லவனுக்கு, பரதத்துவத்தில் திறமை மிகுந்தவனுக்கு, ஆன்மீகத்தின் உண்மையான ரகசியத்தை உணர்ந்தவனுக்கு உலகியலானது மிகவும் எளிமையானதாக இருக்கும். அதனால் அவனுக்கு எத்தகைய கேடும் இல்லை. இரண்டையுமே ஒரே நேரத்தில் சமமாக, சரியாக நிறுத்துப் பார்ப்பதிலே வல்லவனாகத் திகழ்வான்.

குழந்தையானது தாய்ப்பால் அருந்தும் பொழுது, ஒரு மார்பிலே பாலை அருந்தியவாறே மற்றொன்றையும் பிடித்துக்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)


கொண்டிருக்கும். அதைப் போலத் திறமை மிக்கவன் உலகியல் இன்பங்களைத் துய்த்துக் கொண்டு இருக்கும் பொழுதே, தன்னுடைய லட்சியத்தைப் பரதத்துவத்தின் மீதும் வைத்திருப்பான்.

குளத்திலே நீராடிக் கொண்டிருக்கும் ஒருவன், தன் உடலின் பாதிப்பகுதியில் நீரின் குளிர்ச்சியையும் மேலே உள்ள பாதிப்பகுதியில் வெயிலின் வெப்பத்தையும் சமமாக ஒரே நேரத்தில் அனுபவிப்பதைப் போல, திறமைமிக்கவன் பரதத்துவத்தின் ஆனந்தத்தையும், உலகியல் வாழ்வின் இன்ப-துன்பங்களையும் சேர்ந்தே அனுபவிக்கிறான்.

வேற்று ஆடவனுடன் துய்த்த இன்பத்தை மனத்திலே நினைத்தவாறு வெளியிலே தன்னுடைய கணவனுடன் இன்பமாக உள்ள இழிந்த பெண்ணைப் போலத் திறமை மிகுந்தவன் மனத்திலே சொரூப ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டே வெளியிலே உலகியல் சார்ந்த இன்பங்களிலே மூழ்கியிருப்பான். தேவி, இதுவே உண்மையான திறமைசாலி (ஞானி) வாழும் முறையாகும். ''ஓ, எப்படியோ, ஒரு பாடலையே எழுதும்படிச் செய்து விட்டாயே!'' என்று மங்கலையை நிறைவுடன் பார்த்தவாறு கூறினார்.

''என்னுடைய கேள்விக்குச் சமாதானம் அடையும் வகையில் பதில் கிடைத்துள்ளது. இது என் ஒருத்திக்கு மட்டுமே பயன்தரத்தக்கது அன்று. என்னைப் போல முன்வரும் சாதகர்களுக்குச் சமாதானத்தை அளிக்கவல்ல பதிலாக இப்பாடல் விளங்குகிறது அரசே.''

உணவு அருந்துவதற்கு அழைப்பு வந்ததும் அரசனும் - அரசியும் உணவு அருந்தும் மாளிகைக்குச் சென்றனர்.

கணவரின் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளும், ஆன்மீகப் பாதையிலே தம்முடன் இணைந்து நடக்கும், உலகியல் சார்ந்தவற்றிலும் தம்முடைய விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளும் அவளுடைய பரந்த இதயம், தூயமனம், நுண்ணறிவு மிக்க மனைவியின் அருகாமை-தொடர்பால், பேரரசர் நிஜகுணரின் மனம் என்னும் மயிலானது தோகையை விரித்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஆடியது. அந்த நாட்டியத்தின் ஜல், ஜல் என்னும் சுநாதத்தின் விளைவானது மங்கலையிடமும் ஏற்பட்டது.

கணவரின் அருகிலே மங்கலை தன்னைத்தானே மறந்துவிடுவாள். கணவரின் ஒரே ஒரு சொல் முத்தினால் தன்னுடைய வாழ்வே பெரும்பேறு பெற்றது என்று எண்ணிக் கொள்வாள். தன்னுடைய பிராணநாதரின் தீண்டுதலால் தான் தூய்மையான உருவத்துடன் ஒப்பற்ற பொலிவு, ஆற்றலுடன் விளங்குவதாகக் கருதுவாள். தன் கணவரின் கருணையால் கருணை ரசமானது பெருக்கெடுத்துப் பாயும் அந்தக் கண்களைத் தன் கண்களால் சந்தித்து விட்டால் போதும், அவளுடைய கவலை, சந்தேகம், விகல்பம், ஆசை, விரும்பம், சோர்வு என்னும் அனைத்துமே அகன்று அமைதி, சமாதானம், நிறைவு என்னுமிவை கிடைத்தன. நாள்தோறும் அவள் கணவரின் தரிசனம், அவருடன் இருக்கும் நேரம், அவருடன் உரையாடுதல் என்னும் இவற்றால் அவளுடைய உவமிக்கவியலாத வாழ்விற்கு மெருகு ஏற்பட்டது. அவளுடைய மேன்மையான இயல்புகள் வளர்ச்சி அடைந்தன. சொல்-செயல்களில் கம்பீரம் சோபித்தது. அவளுடைய தாமரையைப் போன்ற முகமானது கல்வியின் இருப்பிடம் ஆயிற்று. அந்த உறுதி மிகுந்தவளுக்கு, நுண்ணறிவு படைத்தவளுக்கு கணவரின் அன்பு என்னும் அமுதம் கிடைத்து, அவளுடைய தூய்மையான மனமானது ஆனந்தத்தின் நதியானது. புண்ணியம் அனைத்தும் ஒருங்கிணைந்து இருப்பதைப் போலத் திகழும் கணவரின் தூய்மையான - புனிதமான நினைவானது அந்தப் பதிவிரதையின் முடிவற்ற பூஜையாயிற்று. இரத்தின மகுடத்தால் தான் ஒளிர்ந்தாலும், பேரரசி என்று புகழப்பட்டாலும், தன்னுடைய நல்ல இயல்புகளால் புண்ணியம் செய்தவள். ஏழை எளியவர்களின் தாய், கல்யாணி, மகாதேவி என்று அந்த பேறு பெற்றவள் புகழ் அடைந்தாள்.

ஒரு நாட்டின் செந்திருவாகத் திகழும் பேரரசி மங்கலாதேவி, தான் வழிபடும் தெய்வமாகத் திகழ்ந்த சம்புலிங்கத்திடம் உயர்ந்த பக்தியைப் பூண்டு தூய்மையான புலன்களுடன், விருப்பப்பட்ட சித்திகளை அடைவதற்குத் தகுந்தவளாக விளங்கினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அவளுடைய தகுதியைப் பரீட்சை செய்தது அந்த இரவு. ஆம். காரிருள் நிறைந்த அந்த அமாவாசை இரவு...

அரண்மனைக்கு வந்திருந்த ஸ்ரீ சன்னசதாஸிவருடன் நீண்ட நேரத்திற்கு பேசிக் கொண்டிருந்த நிஜகுணர், குரு அவர்கள் மடத்திற்குக் கிளம்பிய பொழுது அவருக்கு விடை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து அவருடன் அரண்மனையின் உள் சுற்றிலிருந்த தோட்டம் வரையிலும் வந்தார். அமாவாசை இரவு, தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் விளக்கைக் காட்டிக் கொண்டிருந்த பொழுது குரு அவர்களை தேரில் அமரவைத்து, வணங்கி, தேர் கிளம்பிச் சென்றவுடனேயே அந்தப்புரம் பக்கமாகத் திரும்பினார்.

தீவட்டியைப் பிடித்துக் கொண்டிருந்த பணியாட்கள் முன்னே சென்றனர். நிஜகுணர் பின்னாலேயே சென்றார். தோட்டத்தின் அந்தத் திருப்பத்தில் அடிவைத்த நிஜகுணர் ஏதோ குத்தியதைப் போல் உணர்ந்து, "ஏய், ராஜய்யா, கொஞ்சம் நில். இங்கு ஏதோ குத்தியதைப் போலுள்ளது" என்று கூறினார்.

தீவட்டியைப் பிடித்துக் கொண்டிருந்த அந்த சேவகன் ஒரே பாய்ச்சலில் அங்கு வந்து, விளக்கைக் காட்டிய பொழுது ஒரு நாகப்பாம்பு சலசலவென ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. ஐயோ, பேரரசே, பாம்பு பாம்பு என்று அச்சத்துடன் அந்த சேவகன் கத்திய பொழுது காவல்புரிந்து கொண்டிருந்த அனைவரும் அங்கு குழுமினர். பேரரசரின் வலது பாதத்தின் கட்டை விரலின் அருகில் ரத்தம் சிந்திக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் அனைவரும் பயத்தால் நடுங்கினர்.

"ஓ, அப்படி என்றால் அந்தப் பாம்பு கடித்து விட்டது என்று தோன்றுகிறது" என்று பாதத்தின் மீது நிஜகுணர் கையை வைத்துக் கொண்டார்.

சிலர் பாம்பைத் தேடத் தொடங்கினர். சிலர் பேரரசரை அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று உதவி செய்தனர். சிலர் அரச குடும்பத்தின் வைத்தியரை அழைத்து வரச் சென்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).


பேரரசரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மங்கலை அவரைச் சேவகர்கள் தூக்கிக் கொண்டு வருவதைக் கண்டு, தன்னுடைய கண்ணையே தான் நம்பவியலாதவாறு இருந்தாள்.

''எதற்காக? என்ன ஆயிற்று?'' அவளுடைய குரலில் அச்சம் இருந்தது. நிஜகுணரோ அவளுடைய அச்சத்தைக கண்டு சிரித்தவாறு கூறினார்.

''ஒன்றுமில்லை தேவி, எதற்காக அவ்வளவு பயப்படுகிறாய்! ஏதோ ஒரு புழு கடித்து விட்டது அவ்வளவுதான்''.

''பேரரசி, பேரரசரைப் பாம்பு கடித்து விட்டது''.

சேவகர்களின் இந்தச் சொற்கள் மங்கலைக்கு மழை இல்லாமல் இருக்கும் பொழுது ஏற்படும் மின்னலைப் போல் வந்து இறங்கியது. அவள் ஒரு நிமிடம் தத்தளித்தாள். மறுகணம் அவளுடைய பார்வையானது கணவரின் முகத்தின் மீது சென்றது. அங்கு எந்தவிதமான மாற்றமும் இன்றி, அமைதி சமாதானம் போன்றவற்றைக் கண்டு புளகிதம் அடைந்தாள். ஏதோ அளவற்ற சக்தியானது அவளிடம் வெளிப்பட்டது. பதிவிரதையாக இருந்ததின் பலமானது அவளிடம் தைரியத்தை நிறைத்தது. சம்புலிங்கன் மீது இருந்த பக்தியானது அபயம் அளித்தது. அவளுடைய முகமானது அரியதொரு களையுடன் சோபித்தது. விஷம் ஏறியிருந்ததால், அவருடைய முகமானது சிறிதளவிற்கு வலியை உணர்த்தியது.

''பேரரசரைப் பூஜை அறைக்குத் தூக்கிக் கொண்டு வாருங்கள்'' என்று சேவகர்களிடம் ஆணையிட்டுவிட்டு அவள் குளியலறையை நோக்கிச் சென்றாள்.

பேரரசரைப் பாம்பு கடித்தது என்னும் செய்தியானது அரண்மனை முழுவதும் பரவியது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மகேசுவரிதேவிக்கு இந்தச் செய்தியை அறிவிக்க வேண்டாம் என்று ஆணையிட்டுவிட்டு ஈர உடையுடன் பூஜையறையில் மங்கலை நுழைந்தாள். பேரரசியின் ஒளிரும் உருவத்தைக் கண்டு அங்கிருந்தவர்கள் அங்கிருந்து அகன்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அரச வைத்தியரான சங்கர சாஸ்திரிகள் அங்கு வந்து தன்னுடைய பரீட்சையைத் தொடங்கினார். சம்புலிங்கத்தின் எதிரில் மென்மையான இருக்கையில் நிஜகுணரைப் படுக்க வைத்தனர். அவருடைய வலக்காலின் மேற்பகுதியில் விஷம் ஏறாதவாறு இறுக்கமாகத் துணி கட்டப்பட்டிருந்தது. இருப்பினும் கூட விஷமானது தீவிரமாகப் பரவத் தொடங்கியிருந்தது. விஷம் பரவியிருந்த வேதனையால் அவர் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் அவருடைய மனம் எந்த மாற்றத்தையும் அடையாமல் இருந்தது.

அரச வைத்தியர் பேரரசியைப் பார்த்தவாறு ஒரு ஓரத்திற்குச் சென்று "கடித்த பாம்பானது மிகவும் விஷம் உள்ள பாம்பாக இருக்க வேண்டும். பாதமானது பச்சை நிறமாக உள்ளது. என்னுடைய ஆற்றலை மீறி நான் முயற்சி செய்கிறேன் இருப்பினும் மிகுந்த அனுபவம் உள்ள மாந்திரீகரான இவ்விஷயங்களில் மிகவும் புகழ்பெற்ற பைரவஸ்வாமிகளை அழைத்துக்கொண்டு வந்தால் பேரரசர் மிகவும் விரைவில் குணமடைந்து விடுவார்" என்று கூறினார்.

அவர் அந்த மாந்திரீகனை வேகமாக அழைத்துக் கொண்டு வருமாறு சேவகன் ஒருவனை அனுப்பி வைத்தார். ஆனால் அவன் நிராசையுடன் திரும்பி வந்தான். பைரவ சுவாமிகள் ஊரில் இல்லை என்று அழுதவாறு கூறினான். அங்கிருந்தவர்கள் அதைக் கேட்டு என்ன கதி ஆகுமோ என்று தளர்வுற்றனர். சாஸ்திரிகளின் தைரியம் ஆட்டம் கண்டது. இனி என்ன நடக்குமோ? விரைவாக ஏறிக் கொண்டிருந்த விஷத்தின் ஆற்றலைத் தடை செய்யும் ஆற்றல் அரசவைத்தியரிடம் இல்லை. தாமதித்தால் பேரரசரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். என்ன நடக்குமோ?

அனைவரும் அஞ்சினர், கலவரம் அடைந்தனர். பேரரசர் ஒருமுறை கண் திறந்து மனைவியைப் பார்த்தார். ஒளிரும் அந்தக் கண்களில் வேதனையின் சாயலைக் கண்டு மங்கலை அவளே செயலில் இறங்கினாள்.

சங்கர சாஸ்திரிகளைப் பூஜை அறையிலிருந்து வெளியேறுமாறு கூறி, அவர் சென்றபிறகு கதவைச் சாத்திக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கொண்டாள். சம்புலிங்கத்தின் திருவடித் திருநீரைக் (பாதோதகம்) கணவரின் மீது தெளித்து விபூதியைப் பூசி சம்புலிங்கத்தின் திருவடிகளில் தலையை வைத்தவாறு வேண்டிக் கொண்டாள்.

''தந்தையே! என்னுடைய ஸ்வாமியைக் காப்பாற்றுவாய். என் குங்கும சௌபாக்கியத்தை நிலைத்து நிற்கச் செய்வாய். என் மாங்கல்யத்தையும் நிலைத்து நிற்கும்படிச் செய்வாய். சம்புலிங்கமே! சம்புலிங்கமே! தந்தையே அருள்புரிவாய். என்னுடைய ஸ்வாமிக்குத் தொண்டு செய்வதற்கு எனக்கு பலத்தை அளிப்பாய். எல்லா ஆற்றல்களையும் உடையவனே அருள்வாய்''.

மங்கலை இதயம் நிறைந்து பக்தியுடன் முறையிட்டாள். அவளுடைய வேண்டுதல் சம்புலிங்கத்தைச் சென்று அடைந்ததோ என்னவோ, சம்புலிங்கத்தின் வலது தோளின் மேலிருந்து ஒரு மலர் கீழே விழுந்தது.

அந்த மலரைக் கண்ணிலே ஒற்றிக் கொண்டு மங்கலை கணவர் இருந்த இடத்திற்குப் பாய்ந்து சென்று சம்புவை நினைத்துக் கொண்டு, பாம்பு கடித்த அந்த வலதுகாலில் காயம் இருந்த இடத்தில் தன் வாயை வைத்து சக்திக்கு மீறி விஷத்தை எல்லாம் உறிஞ்சினாள்; உமிழ்ந்தாள். இதைப் போல் தொடர்ந்து அரைமணி நேரத்திற்குப் போராடினாள். பூஜையறையில் இருந்த ஒரு சாளரத்தில் இருந்த பல மூலிகைகளை வெளியிலே எடுத்து, அதில் ஒரு மூலிகையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, பிழிந்து சாறு எடுத்து நிஜகுணரைக் குடிக்க வைத்தாள். பாதத்தில் இருந்த காயத்தின் மீதும் பூசினாள்.

வெளியிலே நின்று கொண்டிருந்தவர்கள், உயிரை இறுக்கப்பிடித்துக் கொண்டு உள்ளிருந்து ஏதாவது சத்தம் வருகிறதா என்று கேட்டுக் கொண்டிருந்தனர். பேரரசி ஒருவரே என்ன செய்து கொண்டிருக்கிறாரோ என்று வியப்படைந்து, தங்கள் தங்களையே மௌனமாகப் பார்த்தவாறு இருந்தனர். பேரரசர் உயிர் பிழைத்தால் அது ஒன்றே போதும் என்று அவர்கள் அனைவரும் நாட்டின், குலதெய்வமான சம்புலிங்கத்திடம் முறையிட்டனர்; வேண்டிக் கொண்டனர். இந்தச் செய்தியை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அறிந்த முதலமைச்சர், படைத்தலைவர் மற்றும் எஞ்சியிருந்த அதிகாரிகள் அனைவரும் கவலையுடன் பூஜையறையின் வெளியிலே காத்து நின்று கொண்டிருந்தனர்.

விஷத்தை உறிஞ்சியதன் விளைவால் மங்கலையின் தலையானது சுற்றத் தொடங்கியது. இருப்பினும் அவள் அதைத் தன்னுடைய மன ஆற்றலால் தடுத்துக் கொண்டு பேரரசரையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அந்தப் பார்வையிலே பாதாளத்திலே இருப்பதையும் வெளியே கொண்டு வந்துவிடுவேன் என்னும் உறுதி இருந்தது. மரணத்தின் அருகிலே சென்றவனையும் கண்ணைத் திறக்கச் செய்யவல்ல அற்புதமான ஆற்றல் இருந்தது.

ஈரத்துணியுடன் ஒளிர்ந்து கொண்டிருக்கும் அவளுடைய திவ்வியமான உடல், முதுகின் மீது படர்ந்திருந்த அடர்ந்த கூந்தல், நெற்றியிலே மினுமினுக்கும் குங்குமம், வெண்மையாகத் துலங்கும் விபூதி, கழுத்திலே சோபித்துக் கொண்டிருந்த, சௌபாக்கியத்தின் முதன்மையான அடையாளமான திருமாங்கல்யம், பத்மாசனத்திலே அவள் அமர்ந்து கொண்டிருந்த முறை, என்னும் இவ்வனைத்தையும் பார்த்தால் மங்கலையோ? பேரரசியோ? என்னும் சந்தேகம் அல்ல! அவள் ருத்ராணியோ! கௌரியோ, சண்டியோ! சாமுண்டியோ! காளியோ! பைரவியாகவோ இருக்க வேண்டும்.

அவளுடைய பதிவிரதைத் தன்மையின் முன்பு, சம்புலிங்கம் கூட சிறியவனாகவே தென்பட்டான் என்றே கூற வேண்டும்.

நேரான பார்வையுடன் கையைக் கூப்பியவாறு அமர்ந்து கொண்டிருந்த அவள் வேண்டிக் கொள்ளத் தொடங்கினாள். அந்த வேண்டுதலில் அவளுடைய இதய உணர்வுகள் பீறிட்டுப் பாய்ந்தன. வெளியிலே நின்று கொண்டு இருந்தவர்கள் மூச்சு விடாமல் கேட்டுக் கொண்டு இருந்தனர்.

'பரமபாவன ஐம்முக கருணைக் கடலே, சம்புலிங்கமே!
வரதனே, இந்திரன் வணங்கும் உலகிற்கு உற்றவனே,
சம்புலிங்கமே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஒப்பிலா உறுதியான பக்திக்கு நன்மை புரிபவனே,
சம்புலிங்கமே
மனிதன், முனிவர்களின் தவநிதியே அன்பானவனே,
சம்புலிங்கமே
பிறப்பு-இறப்பு பயத்திலிருந்து விடுவிக்கும், காலனை
வென்றவனே, சம்புலிங்கமே
பிரம்மன் படைத்த உலகைக் காப்பவனே, சம்புலிங்கமே"

வெளியிலே காத்துக் கொண்டிருந்த அனைவரும் அரசியின் குரலைக் கேட்டு ஓரளவிற்குத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கைகளைக் கூப்பியவாறு நின்றனர். மங்கலையின் தொண்டையிலிருந்து பிரார்த்தனையானது அலைஅலையாக வந்து கொண்டு இருந்தது. நிஜகுணரின் உடலானது மெதுவாக அசைந்து விழிப்பு அடையத் தொடங்கியது.

"கிரிஜாவின் மார்பிலுள்ள சந்தனத்தை மார்பிலே தரித்த
சம்புலிங்கமே!
தலை எனும் அரண்மனையில் அழகிய
நங்கையைக்காக்கும் சம்புலிங்கமே!
பக்தனை விரும்பும் இன்மொழியுடையவனே, சம்புலிங்கமே!
சுவைமிக்க இசை, இலக்கியத்தை விவரிப்பவனே,
சம்புலிங்கமே!
களங்கமிலா மகிமையுடைய நல் இயல்பெனும் மணியைத்
தரித்த சம்புலிங்கமே!
எல்லா உயிர்களின் வாழ்விற்கு ஆதாரமானவனே,
சம்புலிங்கமே!

"சம்புலிங்கமே, காப்பாற்றுவாய், அருள்புரிவாய்
சம்புலிங்கமே அன்புகாட்டுவாய், சம்புலிங்கமே"

துயரத்துடன் பிரார்த்தித்துக் கொண்டிருந்த மங்கலையின் சொற்களைக் கேட்டு, சம்புலிங்கனின் அன்புப் பார்வையானது நிஜகுணரின் மீது பட்டபொழுது உணர்வற்றிருந்த அவர் கண் திறந்தார். அக்கண்களில் வலிதென்படாமல் மகிழ்ச்சியானது தென்பட்டது.

"ஓம் சம்புலிங்கமே"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிஜகுணரின் இந்தப் பரவசமான குரலைக் கேட்ட, கண்களை மூடியவாறு அமர்ந்திருந்த மங்கலை பின்னால் உருண்டாள்.

பூசையறையின் கதவின்மீது செவியை வைத்துக் கேட்டுக் கொண்டிருந்த முதலமைச்சர் சிவகுமாரர் பேரரசரின் பரவசமான குரலுடன் ஏதோ விழுந்த சத்தம் கேட்டு, அஞ்சி, கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார். அவர் பின்னாலேயே எஞ்சி இருந்தவர்களும் நுழைந்தனர், பார்த்தனர்!

பேரரசர் கண்களைத் திறந்திருந்தார். அவருடைய தொண்டை உலர்ந்திருந்தது. பேசும் சக்தியானது குறைந்து இருந்தது. மனைவியையே அன்புடன் பார்த்துக் கொண்டு இருந்தார். மங்கலை நிலத்தின் மீது விழுந்து கிடக்கிறாள். அங்கேயே சிறிது தொலைவிலே ஒரு பாத்திரத்திலே மங்கலை உறிஞ்சி உமிழ்ந்த விஷநுரையானது நிறைந்திருந்தது. இவ்வனைத்தையும் ஒரு நொடியிலே உணர்ந்து கொண்ட சிவகுமாரர், மங்கலைக்குச் சிகிச்சை அளிக்குமாறு அரச வைத்தியரிடம் உணர்த்திவிட்டுப் பேரரசர் நிஜகுணரைச் சிறிது நீர் அருந்தச் செய்து விட்டுக் காற்று வீசும்படி ஆணையிட்டார்.

விஷம் நிறைந்திருந்த பாத்திரத்தை ஒரு தடவையும், பேரரசியை ஒரு தடவையும், பேரரசரை ஒரு தடவையும் பார்த்து அவர்கள் அனைவரும் வியப்படைந்தனர். மங்கலைக்கு மயக்கம் தெளிந்தபொழுது நிஜகுணரும் குணம் அடைந்திருந்தார். கண் திறந்த மனைவியைக் கண் நிறைந்து பார்த்து நிறைவு அடைந்தார்.

அன்று இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்தனர். நிஜகுணர் உறங்கக்கூடாது என்று அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு, அந்தக்கதை, இந்தக்கதை, பாடல், ஆடல்களால் அவரை விழித்திருக்குமாறு செய்வதில் கவனம் செலுத்தினர். உயிர் பிழைத்த அவர்களுடைய பேரரசரின் மீது அவர்களுடைய அன்பானது இரு மடங்கு ஆயிற்று. கணவரின் உயிருக்காக மரணத்துடன் போராடிய தங்களுடைய பேரரசியிடம் அவர்களுடைய பக்தியானது அதிகரித்தது. நாட்டின் அடிப்படையான ஆற்றலையே ஆட்டம் காணவைத்த அந்தக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


காரிருள் நிறைந்த இரவு அகன்று, சிராவண மாதத்தின் மகிழ்ச்சி நிறைந்த புத்தொளி வந்தவுடனேயே அங்கு அமர்ந்திருந்த அரசபரிவாரத்தினர், கவலையற்று அங்கிருந்து அகன்றனர்.

அன்று நண்பகலில் மங்கலை கணவரின் அருகிலே அமர்ந்து கொண்டு, ஆரஞ்சுபழச் சுளைகளைப் பிரித்துத் தேனில் அமிழ்த்தி அன்புடன் உண்ணக் கொடுத்துக் கொண்டு இருந்தாள். மனைவியின் அமுதக் கையிலிருந்து, தேன் கலந்த அந்த ஆரஞ்சுப் பழச் சுளைகளைச் சப்புக் கொட்டியவாறு நிஜகுணர் சுவையை அனுபவித்துக் கொண்டு இருந்தார். மங்கலை, ஆரஞ்சுப்பழத்தின் தோலை உரித்தவாறு "பிரபு, இப்பொழுது சோர்வு அகன்றுவிட்டதா?" என்று கேட்டாள்.

"சோர்வு, கஷ்டம் என்னும் அனைத்துமே, நீ எப்பொழுது உன் வாயினால் விஷத்தை உறிஞ்சினாயோ. அப்பொழுதே அகன்றுவிட்டன. என்னுடைய எல்லாப் பிறவிகளின் கவலை, சோர்வு, உற்சாகமற்ற தன்மை, சூழ்ந்திருந்த அஞ்ஞானம், என்னும் இவ்வனைத்தையும் உறிஞ்சி உமிழ்ந்து விட்டாய் இன்னும் சோர்வு எங்குள்ளது?" என்று நிஜகுணர் பரவசத்துடன் கூறினார்.

"பேரரசே! பாம்பின் விஷமானது ஏறிக் கொண்டிருந்த பொழுதும், தாங்கள் அந்த நிலையிலும் கவலையின்றி, எத்தகைய மாற்றமுமடையாத மனத்துடன் விளங்கினீர்கள் சிறிதளவு கூட பயம் ஏற்பட வில்லையா?"

"மரணத்தின் பிடியிலிருந்த கணவர் எதிரிலே இருந்தபொழுதும், நடுங்காமல், அஞ்சாமல், சாமான்னியமான ஒரு பெண்ணைப் போல பயனற்று அழத் தொடங்காமல் தன்னுடைய ஆற்றலின் மீது உறுதியான நிஷ்டையுடன் இருக்கும் சம்புவிடம் மிகுந்த பக்தியையுடைய என்தேவியின் மங்கலகரமான பார்வையின் எதிரிலே எனக்கு எதற்குப் பயம்? தேவி, நான் அஞ்சி என் தேவியின் பதிவிரதைத் தன்மையின் ஆற்றலிலே அவநம்பிக்கை கொள்ளலாமா? அதை அவமானம் செய்யலாமா? என் மங்கலையின் மாங்கல்யத்தின் மேன்மையை நான் அறியாதவனா?" என்று நிஜகுணர் உணர்வுப் பெருக்குடன் கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மங்கலை, கணவரின் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளுடைய ஆனந்தக் கண்ணீர் நிஜகுணரைத் தீண்டியபொழுது, அவளுடைய முகத்தை மேலே நிமிர்த்தி அந்தத் தூய்மையான கண்ணீரைத் துடைத்தார்.

''கேட்பாய் தேவி இதைப் போன்ற ஒரு நிகழ்வு உலகைப்படைத்த பார்வதிக்கும் ஏற்பட்டது. அந்த கௌரியின் பெருமையை மகிமையைக் கேட்பாய்'' என்று உச்சஸ்தாயியில் பாடத் தொடங்கினார்.

''எனைக்காப்பாய், நன்மையைச் சொரிந்து ஶிவனைவிட
மேலெனக் கருதும் நல்லியல்புடைய சிறந்தவளே,
பார்வதியே!
நஞ்சை மகிழ்ந்து அருந்திய ஹரனை அஞ்சாதிருக்கச்செய்த
ஒளிர்பவளே, உன்மங்கலத்தாலியின் மகிமை, கிரிஜா.''

மனைவியின் கழுத்திலே ஒளிர்ந்து கொண்டிருந்த அந்த திருமாங்கல்யத்தைத் தொட்டு, ''தேவி. இதன் மகிமையால்தான், அந்த ஶிவபெருமான் விஷத்தைக் குடித்திருந்தாலும் அஞ்சாமல் நின்று தக்கவைத்துக் கொண்டான்'' என்று கூறிவிட்டு மீண்டும் பாடத் தொடங்கினார்.

''செல்வம், அனைத்து சித்திகள், முக்தி, மேன்மை போன்ற
சாதனங்களை நீ தக்கமுறையிவ் அருளவில்லை
யெனினும் ॥
குரு சம்புலிங்கத்திடம் எத்தகு நன்மையுள்ளது என
உலகமாந்தர் அன்பை ஈயவிரும்பின் கௌரி'' ॥

பாடுவதை நிறுத்திவிட்டுப் பொருள் பொதிந்து மனைவியைப் பார்த்தவாறு மௌனமானார், நிஜகுணர். அதை உணர்ந்து கொண்ட மங்கலை கணவரின் மார்பிலே சாய்ந்தாள். அவளுடைய முகம் சிவந்தது, நிஜகுணரின் இதயமானது மலர்ந்தது.

பேரரசரைப் பாம்பு கடித்த விஷயத்தையும், பேரரசியின் அந்த முயற்சி, சாகசம், நியமங்கள் என எல்லாவற்றையும் கேள்விப்பட்ட அரசகுருவான ஸ்ரீ சன்னசதாஶிவதேசிகேந்திரர் அவரைக்காணும் ஆர்வத்துடன் அரண்மனைக்கு விரைந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


வந்தார். அவரை மகேசுவரி தேவி வரவேற்று, நிஜகுணரிடம் அழைத்துக் கொண்டு சென்றார். நிஜகுணரும் மங்கலையும் வணங்கி, கௌரவித்து உபசரித்தனர்.

"நான் உறங்கிக் கொண்டிருந்த பொழுது இவ்வளவும் நடந்து முடிந்துவிட்டது. முக்கியமாகக் கடவுள் மிகவும் பெரியவன். என் மைந்தனைக் காப்பாற்றி விட்டான்" என்று நிஜகுணரின் தாய் தொடங்கி, தான் இந்த நிகழ்வைக் குறித்துக் கேட்ட எல்லா விவரங்களையும் உணர்வுப் பெருக்குடன் விவரித்தார்.

அவ்வனைத்தையும் கேட்ட சன்னசதாஸிவர் உணர்ச்சிப் பெருக்குடன் "அம்மா, பதிவிரதைத் தன்மையின் மகிமையின் முன்பு, நல்லியல்புகளும், நல்லொழுக்கமும் உடைய அந்த பதிபக்தியின் எல்லைக்கு முன்பு அணிமா போன்ற சித்திகளும், எல்லா யோகங்களும் எல்லா ஆற்றல்களும் தலைவணங்கி நிற்கின்றன. தாயே! இந்த சிறந்த தம்பதிகளின் இணக்கமுடைமையைக் கண்டு நான் புனிதமடைந்துள்ளேன்" என்று கூறினார். ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

மங்கலை அதே விஷயத்தைக் குறித்துப் பேசுவதற்கு இடமளிக்காமல்

"குரு அவர்களே! இன்று பிரதமை மங்கலமானநாள் உங்கள் எதிரிலேயே இன்று பிருகதாரண்யாக உபநிஷதத்தின் பயிற்சி, உபதேச விதிமுறைகளைத் துவங்கி விடலாம். தாமதிக்க வேண்டாம்.

"அரசருக்குச் சோர்வு ஏற்படுமே அம்மா!"

"சிறிதளவும் சோர்வு இல்லை. உங்களுடைய சிறந்த மேற்பார்வையிலே இன்றே தொடங்கி விடலாம்."

நிஜகுணர் அமர்ந்து கொண்டார். உலகியல் வேதனைகளை விழுங்கி, ஆன்மீகத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ள அந்த கணவன் - மனைவியைக் கண்ட சன்னசதாஸிவர் வியப்பு எய்தினார். பேரரசியே, தானே முன்நின்று, மனநிறைவு ஏற்படும் வகையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மாலைநேரத்தின் அந்த நல்ல முகூர்த்தத்தில் மங்கல நேரத்திலே, முமுக்ஷுக்கள் (முக்தியை அடைய வேண்டும் என்று விரும்புபவர்கள்) அனைவரையும் முன்னேற்றமடையச் செய்யும். முமுக்ஷுக்களின் குலவிளக்காக நிஜகுணர் என்னும் தந்தையின், அனுபவச்சுவை அனைத்தையும் உண்டு, நல்ல ஊட்டத்துடன், நல்ல ஆற்றலுடன் மங்கலை என்னும் தாயின் சிரவணம் என்னும் வடிவ வயிற்றிலே தோன்றி, வளர்ந்து விளங்கினான் "பரமானுபவபோதை" என்னும் குழந்தை, பரமானுபவபோதை என்று மீண்டும் கூறி, செவியிலே கூறி, பெயர் சூட்டும் சுபச் செயலானது நடைபெற்றது. இதயம் நிறைந்து வாழ்த்தி "உன் புகழானது எல்லா திசைகளிலும் பரவட்டும்" என்று குருமூர்த்தியான சன்னசதாஶிவர் வாழ்த்தினார்.

இருக்கையிலே கம்பீரமாக அமர்ந்து கொண்ட நிஜகுணர், தாம் வழிபடும் தெய்வமான, குருஉருவத்திலுள்ள தந்தை - தாயாக விளங்கும், நண்பனாகத் திகழும் சம்புலிங்கனை நினைத்துக் கொண்டு, வழிபடும் கடவுளை வேண்டிக் கொண்டார்.

"ஸ்ரீ குரு சம்புலிங்கனின் பாதகமலம் ।
இப்பொழுதென்னறிவிற்கு மங்கலமளிக்கட்டும் ॥
ஸ்ரீ மகாதேவனுக்கு, சோமனுக்கு முழு இன்ப ।
நிலையத்திற்கு, உண்மை, அறிவு உருவிற்கு
மக்களின் விருப்பங்களின் கல்பதருவாம் சம்புவை ।
மகிழ்ச்சியுடன் வணங்குவேன் ॥
அவர், இவர் என்னாது, உண்மையை உணர்ந்தோரின்
திருவடியைப்பணிந்து, உவகையுடன்
இம்முறையில் சிறந்த ஆன்மீக கருத்துக்களைக்
கூறுவேன் ॥

நிஜகுணரின் உவமிக்க இயலாத கவிதை இயற்றும் திறமையானது இப்பாடலிலே வெளிப்படுகிறது.

கடைசியில் விவரித்திருந்த ஸ்லோகத்தில் கல்வியால் ஏற்படும் பணிவும், சிறப்பும், மேன்மையும் வெளிப்பட்டிருந்த விதத்தை அனுபவித்த சன்னசதாஶிவர் பாராட்டுதலை வெளிப்படுத்தினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



நூலை விவரிக்கும் முறையை அறிந்த, உட்பொருளை அறிந்த, பதத்தை அறிந்த நிஜகுணர் வழிபடும் தெய்வத்தின் பிரார்த்தனையை விவரித்தபிறகு நூலிலே விவரிக்கப்படவுள்ள விஷயத்தைக் குறித்து விவரிப்பதற்கு ஆயத்தமானார்.

''ஸ்ரீ யாஜ்ஞவல்க்யர் மைத்ரேயிக்கு உரைத்ததை அழகுடன் விவரிப்பேன்.''

இந்த சூத்திரத்தில் நூலில் விவரிக்கப்படும் விஷயத்தின் சாரத்தை உணர்த்தியபிறகு ஒரு கணம் மௌனமாக இருந்தார். இருப்பினும் மங்கலை எழுதிக் கொண்டே இருந்தாள். நிஜகுணருக்கு வியப்புடன் மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

''தேவி, என்ன எழுதிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். மங்கலை எழுதியவாறே ஒரு நிமிடம் பொறுங்கள் என்றாள். எழுதிமுடித்தபிறகு ''தப்பாக இருப்பின் மன்னித்து விடுங்கள் ஒப்புக்கொண்டால் ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று படிக்கத் தொடங்கினாள்.

''கைம்மாறு கருதாத நண்பன், உவமிக்கவியலா இன்பக்கடல்
பணிவு போன்ற இயல்புகளெனும் அணியால் அணி
செய்யப்பட்ட
பிறப்பிலியாக, முழுமையான கல்வியுடையவனாகத் திகழும்
நிஜகுணயோகி''

அதைக் கேட்ட சன்னசதாஶிவரின் முகமானது மலர்ந்தது. நிஜகுணரின் முகம் கூச்சத்தை வெளிப்படுத்தியது.

''தேவி, எதற்காக அப்படி எழுதி உள்ளாய்?''

படிப்பவர்கள் என்னைப்பற்றி நானே விவரித்துக் கொண்டிருப்பதாக எண்ண மாட்டார்களா?

''இல்லை அரசே. அவ்விதமாக எண்ணும் சாமான்னியமானவர்கள் இந்த நூலை என்றுமே படிக்க மாட்டார்கள்.

உயர்ந்தவர்கள், ''ஓ இந்த நூலாசிரியர் எத்தனை தற்பெருமையுமின்றித் தன்னுடைய இயல்புகளைக் குறித்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கூறிக் கொண்டிருக்கிறார்'' என்று பரந்த இதயத்துடன் படிப்பார்கள்.

அவளுடைய கூற்றை ஏற்றுக்கொண்ட சன்னசதாஶிவர் ''பேரரசே! அது ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில்தான் உள்ளது. உன்னுடைய நல்லியல்புகளைக் கூறுவதால் அந்த நூலிற்கே ஒரு களையும், வழிபடும் தன்மையும் வந்து விடுகிறது. சந்தேகம் எதற்கு? உன்னிடம் அந்த நல்லாத் தன்மைகளும் இல்லையா? தன்னுடைய கெட்டதன்மைகளையும், கெட்ட இயல்புகளையும் யாராவது ஒருவர் விவரித்துக்கூறினால் அது எப்படி கர்வமற்றதாக, தற்பெருமையற்றதாகத் தென்படுகிறதோ, அதைப்போன்றே நல்ல தன்மைகளையும், நல்ல இயல்புகளையும் கூறிக் கொள்வதும் தற்பெருமையற்றதாகவே கருதப்படும். உன்னால் அவற்றையெல்லாம் எழுதுவதற்கு இயலாது என்று தான் பேரரசியார் தானே எழுதி நல்லதைச் செய்துள்ளார்.''

நிஜகுணர் இப்பொழுது அதனை ஏற்றுக் கொண்டு, அடுத்த ஸ்லோகத்தை விளக்குவதில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தினார்.

''யாஜ்ஞவல்க்யர் - மைத்ரேயி அவர்கள் செய்த சிறந்த விவாதத்தை நான் கன்னடத்தில் இயற்றுவேன். முக்தியை அளிக்கவல்ல சிறந்த சத்தியத்தைப்பற்றி இது விவரிக்கிறது. இதுமேலான உண்மை என்று கொண்டாடுவதைப்போல இயற்றுவேன். சாதகர்களுக்குப் புரியும் வகையிலே மிகவும் விரிவாக, அனுபவத்தால் உணர்ந்து கொள்ளும் வகையிலே, முக்தியை அடைய விழைபவர்களுக்கு உவமிக்கவியலாத இந்தப் பரதத்துவத்தை, ஆன்மாவை உணர்ந்தவர்களும், பரம்பொருளை உணர்வதில் நம்பிக்கை கொண்டு நியமத்துடன் வாழும் வேதியர்களும் மெச்சி, தலையை அசைப்பது போலக் கூறுவேன். சிறந்த விவேகிகள் விரும்பி, ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலே பரதத்துவம் சார்ந்த அறிவு என்னும் அமுத மழை பொழிவதைப்போலக் கேட்பவர்களின் செவிகளில் இதனை உரைப்பேன். உபநிஷதத்தின் கருத்தை, இந்த சிறந்த ரகசியத்தை, பரம்பொருளைக் குறித்து உணர வேண்டும் என்று கருதும் மக்களுக்கு, சிறந்த துறவிகளுக்கு, பலவகைப்பட்ட சீடர்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இதைக் கூற வேண்டுமே தவிர, கர்ம மார்க்கத்தை மேற் கொண்டு இருப்பவர்களுக்கு இதைக் கூறுவதற்கு இல்லை. பரமானுபவபோதை என்னும் பெயரைச் சூட்டி, மகிழ்ச்சியுடன் இந்த ஆதாரநூலை இயற்றுவேன் மென்மையாகவும், இனிமையாகவும் பொருளை இலட்சணத்தை நல்ல மனிதர்களுக்குக் கூறுவேன். இந்த சூத்திரத்தின் கடைசி ஸ்லோகத்தின் விளக்கத்தைக் கேட்பாய் தேவி.

"இதனை ஒருமுறைகேட்டு அறிந்தவனுக்கு உலகம்
தோன்றியது முதல் இன்று வரையில், தான் செய்த
எல்லாப் புண்ணியங்களும் பலித்துவிட்டது
வேறு எதுவுமில்லை எனக் கூறுவேன்"

என்று பேரரசர் தன்னம்பிக்கையுடன் முமுக்ஷுக்களுக்கு உரைத்து, நூலின் அந்தப்பகுதியில் விவரித்து இருந்ததை நிறைவு செய்தார்.

"நிஜகுணா! உன்னுடைய கவிதை இயற்றும் திறனானது அற்புதமாக உள்ளது. அந்த ஆற்றலானது, தேவையற்ற பொருட்களைக் குறித்து விவரிப்பதில், இல்லாததை விவரிப்பதில் பயனற்றுப்போகாமல் முமுக்ஷுக்களின் முன்னேற்றத்திற்காகவே இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி ஏற்படுகிறது. நல்லது விஷயத்தை நாளை தொடங்கலாம். இன்று நேரமும் மிகச் சிறப்பானதாக உள்ளது. உன்னுடைய உடலிற்கும் ஓய்வு தேவைப்படுகிறது. நான் கிளம்பட்டுமா? இன்று நீ என்னை அனுப்பிவைப்பதற்கு வெளியிலே வர வேண்டாம் நானே செல்கிறேன்" என்று கூறிய சன்ன சதாஸிவரை வணங்கி அரசபரிவாரமானது அவருக்கு விடை கொடுத்தது.

அன்று இரவு நிஜகுணருக்குப் பாதசேவை செய்து கொண்டிருந்த மங்கலை எதையோ நினைத்துக் கொண்டு "அரசே, நீங்கள் எனக்கு சாத்திரத்தை உபதேசிப்பதில் நேரத்தைச் செலவிடாமல் பாடலை இயற்றத் தொடங்கி உள்ளீர்கள். முதலில் புத்தகத்தை எழுதி முடியுங்கள்" என்று கூறினாள்.

நிஜகுணருக்கும் மனைவியின் இந்த கருத்தானது சம்மதமாகவே இருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''அரசே! இந்த நூலில் அத்துவைத தத்துவத்தை எல்லாம் மிகவும் விரிவாக அறிவுறுத்தி உள்ளீர்கள். ஞானத்தின் பெருமையை, மேன்மையையே விவரித்து உள்ளீர்கள். எதை உணர்ந்து கொண்டால் இந்த எல்லா வகையான பிறப்பு - இறப்பு வடிவம், வாழ்க்கைத் துயரமானது அழிந்துவிடுமோ அதையே கூறி விடுங்கள்'' மங்கலையின் சொற்களில் உற்சாகமும், ஆர்வமும் இருந்தன.

''பலே, பலே, தேவி! இந்தப்புத்தகத்தில் விவரிக்க வேண்டும் என்று உள்ள விஷயத்தையே நீ ஒட்டுமொத்தமான சாரம் என்னும் வடிவத்தில் கேட்டுள்ளாய். அதை விட்டு விட்டுக் கூறுவதற்கு வேறு என்ன உள்ளது? அதையே விவரித்து, முறையாக மாற்றி, ஆறுலிங்கங்களுக்குத் தகுந்தாற் போன்று கூற வேண்டும். அவ்வளவுதான் மனைவியின் கையைத் தம்கையிலே வைத்துக் கொண்டு ''தேவி, இந்த நூலை நான் யாருக்காக எழுதிக் கொண்டு இருக்கிறேன் தெரியுமா?'' என்று கேட்டபொழுது மங்கலை ''முமுக்ஷுக்களுக்காக'' என்று உரைத்தாள்.

ஒருவகையில் அப்படி வைத்துக் கொண்டாலும் இன்னொரு வகையில், என்னுடைய தேவிக்காக, என்னுடைய தேவியைப் போன்ற, மிகுதியாக முமுக்ஷுத்துவம் உள்ள, பரம்பொருளை உணர வேண்டும் என்னும் எண்ணம் இருப்பவர்களுக்காக, நல்லறிவைப் பெற்று இருப்பவர்களுக்காக எழுதிக் கொண்டு இருக்கிறேன்.

''ஐயோ, வெறும் தன்னலம் உடையவர்'' என்று மங்கலை சிரித்துக் கொண்டு கூறினாள்.

''தன்னலமோ, தன்னலமின்மையோ, நானறியேன். ஆயின், மைத்ரேயியைப் போன்ற மனைவி எனக்குக் கிடைக்காமல் இருந்திருந்தால், இந்த பிருஹதாரண்யக உபநிஷதத்தை மீண்டும் நான் என்றென்றுமே தொட்டுக்கூட இருக்கமாட்டேன், மற்றும் அதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்த நூலை இயற்றவும் தொடங்கியிருக்க மாட்டேன். மைத்ரேயியைப் போன்ற சிறந்த முமுக்ஷுவை, உயர்ந்தவரைக் கைப்பிடிப்பதற்கு யாஜ்ஞவல்க்யர் புண்ணியம் செய்திருந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அத்தகைய மங்கலையைக் கைப்பிடித்ததால் அத்தகைய புண்ணியம் எனக்கும் உள்ளது. திருமணம் நடைபெறுவதற்கு முன்பு என் வாழ்க்கையில் உபநிஷதத்திலே வரும் கண்களால் காணவியலாத மைத்ரேயியால் ஆக்கபூர்வமான விளைவுகள் ஏற்பட்டிருந்தன. திருமண வாழ்க்கையிலே, என் அரசி சர்வமங்கலையின் தூய்மையான, கண்முன்பாக உள்ள அவளுடைய ஆளுமையால் எனக்கு ஆக்கபூர்வமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. வேறுவேறு காலங்களிலிருந்த, வேறு வேறு உடல்களாக விளங்கிய, ஒரே சமஸ்காரம் உள்ள இரு பெண்களின் நீங்காத நினைவிற்காக என்னுடைய ஆற்றலை மீறி இந்த ''பரமானுபபோதை'' என்னும் நூலை எழுதியுள்ளேன் தேவி" என்று நிஜகுணர் மங்கலையை இறுக்கமாக அணைத்துக் கொண்டு கூறினார். அந்த அணைப்பிலே அடங்கி, தன் கணவரின் இனிமையான இதமான சொற்களை மங்கலை கேட்டுக் கொண்டு இருந்தாள்.

மிகுந்த, சிறந்த அனுபவங்களால் நிறைந்து பொங்கிக் கொண்டிருந்த, பிரம்ம நிஷ்டையிலே நாட்டம் கொண்டுள்ள வேதியரான குருவிற்கு, தான் விரும்பிய தன்னைப் போன்றே திகழும் சீடன் கிடைத்தால் இருவருக்குமே எவ்வளவு மகிழ்ச்சி - பேறு - பயன் நிறைவு!

நூலை இயற்றும் அந்தப் புண்ணியச் செயலானது நிஜகுணரின் அமுதக் கரத்தால் சோபித்தது.

''வரமுனியாஜ்ஞ வல்க்யரால் இவ்விதத்தில் மைத்ரேயி, ।
பரதத்துவத்தை உணர்ந்தாள்!! சூத்திரம் ॥

இங்கு, பரதத்துவத்தை உணர வேண்டும் என்னும் மைத்ரேயியின் மனத்தையும், யாஜ்ஞவல்க்யரின் நிலைப்பாட்டையும் உணர்த்தி, அவர்கள் இருவரின் மேன்மையான இல்லற வாழ்க்கையின் அழகையும் உணர்த்தி உள்ளார்.

''எத்தகைய துயரமும் இன்றி முழுமையான ।
பேரின்பத்துடன் எப்பொழுதும் இருக்கும் ॥
அழகிய வழியை இது என்று அன்புடன் நீர் ।
இன்றெனக்கு முக்கியமாக முனியே அறிவுறுத்தினீர்.'' ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


என்று முமுக்ஷுவின் ஒரே ஒரு லட்சியத்தையே குறியாகக் கொண்டு, ஆசை, புலனின்ப நாட்டம் போன்றவையின்றி, தமக்கு நல்ல விளைவுகளை ஏற்படுத்தத்தக்க, தன் புகழை விவரித்துக் கொள்ளும் வழிமுறைகளைக் கேட்டுக் கொள்ளாமல் அத்துவைதத்தின் சிறந்த மறை பொருளையே கேட்டார். மிகச் சிறந்த மேன்மையான தகுதியை உடைய மைத்ரேயி இங்கு கூறப்பட்டுள்ள முமுக்ஷுக்களின் தகுதியை உடைய பிரதிநிதியாகி.

"பெரிய அளவில் தத்துவப்பொருளைப் பரிசீலித்து ।
அனைத்தையும் மிகவும் விரிவாக அறிவுறுத்துவாய் ॥
சிறிதும் சந்தேக மின்றி தாமதிக்காது கூறுவாய் ।
சிறந்த முனிவரே, அன்புடன் அறியும்படி ॥

என்று தன் மனத்தின் மிகப்பெரிய விருப்பத்தைக் கணவரின் முன்பு மைத்ரேயி வெளிப்படுத்திக் கொண்டாள்.

அடுத்த சூத்திரத்தில்

"அத்துவைதத்தை அறியுமறிவு ஜடத்திற்கு உண்டா ।
நல்லியல்புடைய மனைவி நீ கேட்பாய், கூறுவேன்." ॥

என்று மனைவியின் புண்ணியத்தை நினைத்து, அவளுடைய தீவிரமான, பரம்பொருளைக்குறித்த ஞானத்தை அடைய வேண்டுமெனும் விருப்பத்தைக் கண்ட யாஜ்ஞவல்க்யர். "மனைவியே! நீயே பேறு பெற்றவள்" என்று கூறி அத்துடன் நிறைவடைந்துவிடாமல் மிகவும் அன்புடன் உவகையுடன், அன்பான சொற்களால் அழகிய பற்களை உடையவளே! இவ்வுலகத்திலே உன்னைப் போல புண்ணியம் இல்லாதவர்களுக்கு அது சாத்தியம் இல்லை. எனவே நீ பேறுபெற்றவள். செய்ய வேண்டிய செயலைச் செய்து பயனை அடைந்தவள். அதனால், கூறினால், உன்னைப் போன்றவர்களுக்குக் கூற வேண்டுமே தவிர பிறருக்கு இல்லை எனவே மைத்ரேயி! கேட்பாய். அந்த அத்துவைத விஷயத்தை மகிழ்ச்சியுடன் கூறுவேன்" என்று யாஜ்ஞவல்க்யர் மனைவிக்கு உணர்த்தினார்.

"முற்றிலும் கேள், கேட்டதை உணர்ந்து அதனை ।
மறவாமலிருப்பாய், குருகூறும் முறையிலே ॥
புலனின்பத்தைத் துறப்பாய், துறந்து, பற்றற்று ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அதைச்சுட்டு, உறுதியுடனிரு, நீ இன்புறுவாய்'' ||

என்று சிரவணம், மனனம், நிதித்யாசனங்களின் (ஆன்மாவின் இயல்பைக் குறித்து நேரடியாக ஆராயும் ஒரு உயர்ந்த தியான முறைதான் நிதித்யாசனம் ஆகும்) உண்மையாக இது ''இதுவன்று இதுவன்று'' என்னும் வழிமுறையால் உண்மைக்கான ஆழமான உள்முகத் தேடல் ஆகும்.

உட்பொருளைக் கூறி குருவானவர் அறிவுறுத்தியதைப் போல புலனின்பங்களைத் துறந்து, பற்றற்று, புலன்களுக்கு அப்பாற்பட்ட உன்னுடைய சொரூப அனுபவத்தில் நிலைத்து நிற்பாய் என்று இதயம் நிறைந்து வாழ்த்துகிறார். அந்த வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்ட மைத்ரேயிக்கு உற்சாகம் ஊற்றெடுக்கிறது. கணவரின் தூண்டுதலால் அவள் கேள்வி கேட்ட விதமானது நயமளிப்பதாக உள்ளது.

யாஜ்ஞவல்கியரைப் போன்று, மகிழ்வுடன் கூடிய, முனிவராகிய, ஞானக்களஞ்சியமான நிஜகுணர், அத்துவைத விஷயத்தை, பரதத்துவம் என்னும் கைலாய மலையின் சிகரத்தின் மீது நின்றுகொண்டு, சத்-சித்-ஆனந்தம் என்னும், எப்பொழுதும் நிலைத்து நிற்கும் முழுமை என்னும் நிலைத்த உண்மைப்பொருளைத் தங்கப் பெட்டகத்தில் தத்துவத்திரள் என்னும் விலை மதிக்க வியலாத ரத்தினக் குவியலைச் சொரிந்தார்.

மைத்ரேயியாக, மிகமிகச்சிறந்த தகுதியை உடைய (விவேகம், பற்றற்றதன்மை, மன அடக்கம் போன்ற ஆறு ஐசுவரியங்களை, முமுக்ஷுத்துவம் என்னும் நான்கு வித சாதனைகளில் சிறந்தவளான) மங்கலை, ஆர்வத்துடன், ஒப்பற்ற சிரத்தை, நம்பிக்கையுடன், மிகுந்த பக்தியுடன் அந்தத் தத்துவ ரத்தினங்களை மிகுந்த ஈடுபாட்டுடன் ஆராய்ந்தாள். திறமையாகத் தொகுத்து வைத்தாள்.

பரமானுபவபோதை என்னும் நூலின் பாடல்கள் அழகாக, வரிசையாக வந்தன. நிஜகுணர் நூலை மிகவும் வேகமாக இயற்றினார். நிஜகுணரின் ''ப்ரவர்த்த கர்ம'' என்னும் முதல் அத்தியாயத்தில், உலகம் தோற்றம் கொள்ளும் முறையை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அத்யாரோப முறையில் விவரிக்கிறார். (அதாவது ஒருபொருளின் இயல்பை மற்றொன்றின்மீது விதிமுறையுடன் ஏற்றிக் கூறி விவரிப்பது)

''முன்பு தற்செயலாகத் தோற்றுவிக்கப்பட்ட |
புருஷன் எல்லா உணர்வுகளுடனும் கூடி'' ||

என்று முதல் அத்தியாயத்தில், முதல் சூத்திரத்தில் தோற்றுவிக்கப்பட்ட புருஷன் தோன்றிய விதத்தை, இணையற்ற முறையில் மிகவும் விரிவாக விவரித்துள்ளார். அடுத்த சூத்திரத்திலே,

''தசபாவ லட்சணத்தைக் கூறுவேன் |
அதைக் கேட்டறிவாய் இனியவளே'' ||

என்று இவ்விதத்தில் கற்பிக்கப்பட்ட புருஷனின் பத்து பாவங்களைத் தெளிவாக விவரித்து, இவ்வுலகத்தின் முதற்காரணம் அவனே என்பதை உறுதி செய்துள்ளார்.

''தோற்றுவிக்கப்பட்ட என்பது பெயரே குறிப்பிடுவதைப் போல, முதன்முதலாகச் செய்யப்பட்ட கற்பனை'' யாக உள்ளது. இவ்வகையில் உருவமற்ற அஞ்ஞானமற்ற சச்சிதானந்தமான பரம்பொருளால் கற்பிக்கப்பட்ட புருஷனின் தோற்றமானது அமைதி நிறைந்த உறக்கத்தில் தோன்றிய கனவைப் போல ஆகியுள்ளது என்று நிஜகுணர் அற்புதமாகக் கூறியுள்ளார்.

''நிவர்தக கர்ம'' என்னும் இரண்டாவது அத்தியாயத்தில் மாற்றமற்ற முழுமையான பரம்பொருளிலிருந்து தற்செயலாகத் தோன்றிய உலகின் உயிர்கள் அவர்களுடைய மூவகையான துயரங்களின் தோற்றம் குறித்து முதலில் கூறியதை இல்லை என விதிமுறைகளுடன் அவற்றின் செயல்பாடுகளுக்கும் ஆன்மாவிற்கும் தொடர்பு இல்லை என்று மறுத்துக் கொண்டு செல்கிறார்.

''ஆன்மாவிற்கு ஜட ஐம்பூத தர்மங்கள் இல்லை |
மனைவியே காண் ஜடத்துடன் பொருந்துவதில்லை'' ||

என்னும் சூத்திரத்தில் ஆன்மாவிலே, ஜடமாக, உலக வடிவத்தில் தென்படும் ஐம்பூதங்களும், மற்றும் அவற்றின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பொருத்தமான செயல்பாடுகளும் தங்களுடைய இருப்பைப் பெறவில்லை என்று கூறுகிறார். இதே விதத்தில் பரம்பொருளிடத்தில் ஆன்மாவில் உடல், பத்து புலன்கள், ஐந்து பிராணன்கள், ஐந்து அந்த கரணங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் இல்லவே இல்லை என்பதைச் சுருதி - யுக்தி, அனுபவங்களின் மூலம் உணர்த்தி உள்ளார்.

அறிவுறுத்தும் முறையானது, புலன்களால் அறிந்து கொள்ளும் அனுபவத்தை உணரத் தக்க வகையில் அமைந்துள்ளது. சிரவணத்தினால் மட்டுமே ''முக்தி'' என்னும் கூற்றானது நிஜகுணரின் அறிவுறுத்தலில் ஒவ்வொரு எழுத்தும் ஒப்புக் கொள்ளும் வகையில் இருந்தது.

இந்த ஆன்மீக சாத்திரத்தில், ஒரு நாளிலே பலமணி நேரங்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்த பேரரசி மங்கலைக்கு, விலைமதிக்கவியலாத துணிமணிகளும், அழகு செய்து கொள்ளும் முறைகளும் துச்சமாகத் தென்பட்டன. இராஜபோகமானது பயனற்றது, விடத்தக்கது என்று தோன்றியது. அரண்மனையில் இருந்த உணவுப்பொருட்களும் அருந்தும் வகைகளும் சுவையற்று இருந்தன. பரதத்துவ விளக்கம் என்னும் சமாதியிலே தோய்ந்து உறங்கிய அவளுக்கு அந்தப்புரத்தின் அழகிய கட்டிலானது மகிழ்ச்சியை அளிக்கவில்லை.

பதினாறு சூத்திரங்களை உட்கொண்ட ''நிவர்தகர்ம'' என்னும் அத்தியாயமானது நிறைவடைந்தது. இப்பொழுது ''பிராந்தி நிராகரண'' என்னும் மூன்றாவது அத்தியாயத்தில் நிஜகுணர் அடியிட்டார்.

மனைவியை எவ்வளவு வகைகளில் பெயரிட்டு அழைத்தாலும் நிஜகுணருக்கு நிறைவு ஏற்படுவது இல்லை. அலைபாயும் அழகிய கண்களை உடையவள், தாமரையைப் போன்ற கண்களை உடையவள், மானைப் போன்ற கண்களை உடையவள், நிலவைப் போன்ற முகமுடையவள், சந்தனம் போன்ற நறுமணம் உடையவள், யானையைப் போல மெல்ல நடப்பவள், நீண்டு அடர்ந்த அழகிய கூந்தலை உடையவள், புலமையுடையவள், மிகவும் அன்புடையவள், மென்மையானவள்,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)


அழகிய மங்கை, மெலிந்தவள், பெருமையை உடையவள், பெண்களில் ரத்தினம் போன்றவள், இளந்தளிரைப் போன்ற அதரம் உடையவள், பிறைநிலவைப் போன்ற நெற்றியை உடையவள், கஸ்தூரியின் நறுமணம் உடையவள், அன்னம் போன்ற நடையுடையவள், உறுதியான அறிவை உடையவள், திறமையுடையவள், சிற்றிடையை உடையவள், பெருமையை உடையவள், பொலிவுள்ளவள், அழகிய உடலை உடையவள், அழகிய பற்களை உடையவள், ஒன்றா இரண்டா, பலவகைகளில் அழைத்து நிறைவடைந்தார்.

அரண்மனையிலிருந்த தோட்டத்தைச் சுற்றிவந்து களைப்படைந்திருந்த நிஜகுணர் - மங்கலை ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக அசோகமரத்தின் கீழே இருந்த கற்பலகையின் மீது அமர்ந்தனர். அவர்களின் எதிரிலே இருந்த குளத்திலே தாமரைகள் மலர்ந்திருந்தன. பாதி மலர்ந்திருந்த மல்லிகை, செண்பகமலர்களின் நறுமணம் வீசிக் கொண்டிருந்தது. மேற்கு திசையில் மறைந்து கொண்டிருந்த சூரியனின் பொற்கதிர்களால் அந்தத் தோட்டமானது வண்ணமயமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது.

பொன் வண்ணத்திலே புடவை அணிந்து கொண்டிருந்த மங்கலைக்கு, மாலை நேரத்துப் பொன் நிறமானது மேலும் அழகூட்டிக் கொண்டிருந்தது. நிலவைப் போன்ற முகத்திலே, தாமரைகள் என்னும் கண்கள் மலர்ந்து, மகரந்தத்திற்காகச் சுற்றிச்சுற்றி வரும் வண்டுகளை ஏமாற்றிக் கொண்டிருந்தன. அவளுடைய சுருண்ட முன்தலைமயிர் நெற்றியின் மீது தும்பியைப் போலச் சுழன்று கொண்டிருந்தது.

அழகிலே அவர்கள் இருவரும் ரதி - மன்மதராக விளங்கினர். அமைதியிலே பார்வதி - சிவன், இந்த சமயத்தில் அவர்களின் நடுவிலே ஆன்மீகம் சார்ந்த பேச்சுக்களே நடந்து கொண்டிருந்தன. கேட்டுத் தெரிந்து கொள்ளும் விருப்பமானது மங்கலையிடம் இருந்தது. சொல்லிக் கொடுத்து, அறிவிலே நிலைத்து நிற்குமாறு செய்யும் விருப்பமானது நிஜகுணரிடம் இருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


குளத்திலிருந்த தாமரையையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த மங்கலையிடம் நிஜகுணர் வருமாறு கூறினார்.

''தேவி, சேற்றிலே இருந்தாலும் தாமரை தூய்மையாக உள்ளது''

''ஆமாம், பிரபு, தூய்மையாக உள்ளது''

''தண்ணீர் - சேறு இருந்தும் எத்தகைய தொடர்பும் இல்லாமல் உள்ளதல்லவா''?

''ஆமாம், ஸ்வாமி, எத்தகைய தொடர்பும் இல்லை''

''அப்படித்தான் உன் மனம் இருக்க வேண்டும் மங்கலா. அறிவை ஆராய்ந்து, உன்னுடைய மனத்தின் இயல்புகள், நீ, ராஜபோக வைபவத்தில் இருப்பினும் தூய்மையாக, மாற்றம் அடையாமல் தொடர்பில்லாமல் இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு இருக்கும் பொழுதே, பணிப்பெண் ஒருத்தி அங்கு வந்து, கூற வேண்டியதைக் கூறவியலாமல் நின்று கொண்டிருந்தாள். அதனை அறிந்த மங்கலை, ஏன் எதற்காக சந்தேகப்பட்டுக் கொண்டு இருக்கிறாய் பகுளிகா'' என்று கேட்டாள். பகுளிகா இப்பொழுது சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு விண்ணப்பித்துக் கொண்டாள்.

''பேரரசரே! அரண்மனையின் பெரிய நுழைவாயிலின் அருகில் துறவி ஒருவர் வந்திருக்கிறார். தங்களைக் காணவேண்டும் என்று உள்ளே வருவதற்கு முயற்சி செய்த பொழுது காவல் புரிபவர்கள் தடுத்து நிறுத்தினர். இப்பொழுது பேரரசரைக் காண இயலாது. நாளைக்கு வரலாம் என்று கூறிய பொழுது, அவர் கேட்காமல், சினமடைந்து தன்னிடமிருந்த விபூதியைக் காவல்காரரின் மீது தூவினார். எங்கிருந்தோ ஒரு பாம்பு வந்து அவனைக் கடித்துவிட்டது. அவன் உணர்விழந்து விழுந்துவிட்டான். மற்ற எல்லா காவல்காரர்களும் அச்சம் கொண்டுள்ளனர். அதைத் தங்களிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்காக நான் இங்கு வந்தேன்.''

''என்ன... துறவி வந்திருக்கிறாரா? அவரை இங்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்.'' அப்படியே அந்த பாம்பு கடித்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


காவல்காரனைத் தூக்கிக் கொண்டு வாருங்கள். அரசரின் ஆணையைக் கேட்ட பணிப்பெண் விரைந்து வெளியே ஓடினாள்.

"தேவி, நீ சிறிது நேரத்திற்கு அந்த அசோகமரத்தின் பின்னால் மறைந்து கொள்வாய். அந்தத் துறவியை ஒரு பூதம் அடித்துள்ளது" என்று நிஜகுணர் கூறியதும் மங்கலை அங்கிருந்து மறைந்தாள்.

ஆயுதங்களை வைத்திருந்த காவல்காரர்களின் நடுவிலே ஆஜானுபாஹுவான கம்பீரமான முகத்தைக் கொண்ட அந்தத் துறவி நடந்து வந்தார். உணர்விழந்திருந்த அந்தக் காவல்காரனை நிஜகுணரின் எதிரிலே படுக்க வைத்தனர். அந்தத் துறவி எதிரிலேயே நின்று கொண்டு இருந்தார்.

"என்ன, என்னைப் பார்க்க வேண்டும் என்னும் விருப்பம் அதிகமாக இருந்ததா?"

"ஆமாம், அரசரே"

"ஆனால், இந்த எல்லா கெட்ட நடவடிக்கைகளுக்கும் தண்டனை என்ன என்று தெரியுமா?" அரசர் நிஜகுணரின் குரலிலே கடுமை இருந்தது.

"தெரியும் பேரரசே. ஆனால் தண்டனைக்கு அஞ்சும் கோழையில்லை." துறவியின் குரலில் கர்வத்தின் உணர்வு இருந்தது. அதை உணர்ந்துகொண்ட நிஜகுணர் புன்னகை புரிந்தார். அந்த புன்னகையினால் துறவியின் கர்வமானது ஆட்டம் கண்டது. பேரரசரின் ஒளித்திரளால் அந்தத் துறவியின் சுழன்று கொண்டிருந்த எண்ணங்கள் எல்லாம் சஞ்சலமடைந்தன. அவருடைய பதவியுடன் கூடிய அமைதியான அமுதமயமான சொற்களால் துறவியின் புலன்கள் ஆற்றலை இழந்தன. அவர் முகத்திலிருந்த ரௌத்திரமானது, அமைதியின் வசமாயிற்று.

"நீ தண்டனைக்கு அஞ்சும் கோழையில்லையா"?

"ஓ, ஒருவனின் உயிரை அழிக்கும் வீரன் நீ. முதலில் அந்த ஏழையை உயிர்பிழைக்க வைப்பாய்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிஜகுணரின் இந்த ஆணைக்காகவே காத்துக் கொண்டிருந்த அந்தத் துறவி உற்சாகத்துடன் தன் அருகிலிருந்த ஒரு புதரைப் பார்த்தான். ஒரே நிமிடம் நான்கு முழ நீளமிருந்த ஒரு பாம்பு சரசரவென பாய்ந்து வந்து அந்த காவல்காரனின் பாதத்தில் தன் வாயை வைத்து விஷத்தை உறிஞ்சிக் கொண்டிருந்த பொழுது அதன் பின்னாலேயே பல பாம்புகள் வெளியே வந்தன.

அதைக் கண்ட அந்தத் துறவி வியப்புடன் நிஜகுணரைப் பார்த்தான். நிஜகுணர் அந்தக் காவல்காரரையே பார்த்துக் கொண்டிருந்தார். அவன் விஷம் ஏறியதால் ஏற்பட்ட வேதனையிலிருந்து விடுபட்டு எழுந்து நின்றான். சுற்றி இருந்தவர்கள் அனைவரும் அந்தப் பாம்புப் படையைக் கண்டு தூர ஓடினர். மங்கலை பயத்துடன் மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தாள். பாம்புகள் அனைத்தும் படம் எடுத்து நிஜகுணரையே பார்த்துக் கொண்டிருந்தன. துறவி, அவைகளுக்கு ஆணையிடு. அவை போகட்டும்.

துறவி சந்தேகத்துடன் தன்னிடமிருந்த விபூதியை அவைகளின் மீது தூவினான். அவை மிகவும் கோபத்துடன் அவனைச் சூழ்ந்து கொண்டன. அவன் எந்த வழியும் புலப்படாமல் மிகவும் பயப்பட்டான். பாம்புபந்தத்திலிருந்து வெளியேறும் வழிகாணாமல் நிஜகுணரின் பாதங்களில் வீழ்ந்து,

''பேரரசே! எல்லா வகைகளிலும் தப்பாகிவிட்டது. மன்னிக்க வேண்டும்'' என்று தீனமாக வேண்டிக் கொண்டான். நிஜகுணர் சிரித்தவாறு அந்த பாம்புகளை எல்லாம் பார்க்க அவை அனைத்தும் கயிறுகளாக விழுந்தன. அதைக்கண்ட அந்தத் துறவிக்குத் தன்னுடைய அல்பத்தன்மையானது தெரியவந்தது.

''அரசே! அணு அளவிற்கு வித்தை தெரியும் என்னும் கர்வத்தில் தங்களிடம் பணிவற்ற முறையில் நடந்து கொண்டேன் என்னை மன்னித்து அருள் புரியுங்கள்'' என்று பச்சாதாபத்துடன் பிரார்த்தித்துக் கொண்டான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



"பச்சாதாபமே உன்னைத் தூய்மையானவனாகச் செய்துவிட்டது. என்னுடைய மன்னிப்பின் அவசியமே இல்லை, உன் பெயரென்ன?"

"என்னுடைய பெயர் விசுவநாதன்"

விசுவநாதன்! விசுவநாதன் ஆவதற்குப் பதிலாக விசுவநாசகனாக ஆகியுள்ளாய் - அவ்வளவுதான். நீ எங்கு இருக்கிறாய்?

"நான் ஓரிடத்தில் நிலைத்து இருப்பதில்லை அரசே நான் ஒரு ஹடயோகி."

"சரி ஹடயோகியே உன்னுடைய பிடிவாதமானது சித்திகளைப் பயன்படுத்துவதில் இல்லாமல், சொரூபத்துடன் ஒருங்கிணைவதில் பிடிவாதம் இருக்கட்டும்" என்று உன்னுடைய குரு உனக்குக் கூற வில்லையா?

"இல்லை அரசே. நான் வழி தவறி விட்டேன் நீங்களே எனக்கு வழியைக் காட்டுங்கள். இந்த சித்திகள் அனைத்தையும் தங்கள் பாதங்களிலேயே சமர்ப்பித்து விடுகிறேன்."

ஹடயோகசாதனையால் அவன் ருத்ரனாகத் தென்பட்டாலும் அவனுடைய மனம் தூய்மையானதாக இருப்பதையும், அவனுக்குப் பச்சாதாபம் ஏற்பட்டு உள்ளதையும் கண்ட நிஜகுணரின் மனம் கரைந்தது.

"சரி, நீ இன்று அரண்மனையிலேயே இரு. நாளை சந்திப்பாய், நீ இங்கேயே இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்."

"பேறுபெற்றேன் அரசே" என்று விசுவநாதன் வணங்கினான்.

"ஏய் யார் அங்கு? இவனுக்கு அரண்மனையின் விருந்தினர் தங்கும் மாளிகையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்" என்று சேவகனிடம் கூறிவிட்டு, அவர்கள் அனைவரும் செல்லலாம் என்று ஆணையிட்டார். அவர்கள் அனைவரும் கிளம்பிச் சென்றவுடன் மங்கலை மெதுவாக நிஜகுணர் இருந்த இடத்திற்கு வந்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தேவி, ''அத்துவைத வழியிலே கயிறு - பாம்பு நியாயத்திற்கு உயர்ந்த நிலை அளிக்கப்பட்டுள்ளது. ஓ, நீ பயப்படுபவளைப் போல இருந்து கொண்டு, மிகவும் ரகசியமானதையே அறிந்து கொள்ளும் உளவாளி ஆகிவிட்டாய் என்று நிஜகுணர் கூறினார். பிறகு அவரே தொடர்ந்து, உளவாளிகளுக்கு எத்தகைய தண்டனையானது காத்துக்கொண்டு இருக்கிறது என்று தெரியுமா?'' மங்கலை கணவரை ஓரக்கண்ணால் பார்த்தவாறு தெரியும் என்று கூறினாள்.

''சொல் பார்க்கலாம்.''

''இவள் ஓர் உளவாளி என்பதை அறிந்த அரசன் அவளைத் திருமணம் செய்து கொண்டு விடுகிறான். இல்லை எனில் கொன்று விடுவான். இந்த இரண்டு வழிகள் தான் அரசே. அதைப் போன்றே ஆன்மாவின் ரகசியத்தை அறிவதற்குச் சென்ற அந்த மனத்தின் செயல்பாடுகளை ஆன்மாவானது மெச்சி கைபிடிப்பான். இதுதான் ஜீவன் - பரமன் இணையும் நிலை அல்லது ஆன்மாவை அறியச் சென்ற மனமானது அழிவது ஆகும். ''ந-மனம்'' ஆகிவிடுகிறது இல்லையா அரசே? தாங்கள் அறிவுறுத்தியது தான்'' என்று மங்கலை நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''ஏய் கள்ளி, என்னுடையதையே களவு செய்து எனக்கேக் கொடுக்கிறாயா? என்று மனைவியின் கன்னத்தைக் கிள்ளி. இருட்டிவிட்டது'' என்று கிளம்புவதற்காக மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு எழுந்து கொண்டார்.

கைகளைப் பிடித்துக் கொண்டு, சிரித்தவாறு வந்து கொண்டிருந்த மகன் - மருமகளைக் கண்ட மகேசுவரி தேவி, மனம் நிறைந்து, கண்களை அகலவிரித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் அருகிலே வந்தவுடன்

''இது என்னப்பா, இவ்வளவு உற்சாகம்!

மங்கலையைக் காட்டியவாறு '' இதோ இந்தப் பெண்ணின் மாயை அது. அவளுடைய மாயையில் நரன் சிறுவனாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஆகிவிடுகிறேன்'' என்று நிஜகுணர் கூறினார். மங்கலை நாணமுற்று, தன் கையை விடுவித்துக் கொண்டு நின்றாள்.

என்னம்மா! நீ தேடித் தேடி, பயப்படும் பெண்ணாகப் பார்த்து கட்டி வைத்து விட்டாய் அல்லவா!

தோட்டத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியை மறந்துவிட்டு மங்கலை ''ஏன் நான் அப்படி என்ன பயப்படும் தன்மையைக் காட்டினேன்?''

''ஓ மிகவும் வீரம் மிக்கவள்! கயிற்றைப் பாம்பு என்று எண்ணி, அச்சமடைந்து என்னை இறுக்கித் தழுவி....... இல்லை, இல்லை பிடித்துக் கொண்ட வீரம் மிக்கவள் அல்லவா?''

மங்கலை நாணத்துடன் தலை குனிந்து கொண்டாள். அந்த நகைச்சுவையில் மகேசுவரிதேவியும் பங்கு கொண்டாள்.

''போங்கள், உங்களுக்கு எப்பொழுதும் வேடிக்கைதான்''

மங்கலை இவ்விதம் கூறியதும் மகேசுவரிதேவி சிரித்தவாறு

''இருவரும் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்கிறீர்கள். தொல்லையளிக்கும் ஒரு குழந்தை பிறந்து விட்டால் அப்பொழுது உங்கள் சிறுபிள்ளைத் தனம் தெரியும்'' என்று எதையோ நினைத்துக் கொண்டு கூறியபொழுது நிஜகுணர் ''தொல்லையளிக்கும் எந்தக் குழந்தையும் வேண்டாம் எதுவும் வேண்டாம். நாங்கள் எப்பொழுதும் இப்படியே இருந்து கொண்டு உன்னைத் தொல்லைபண்ணிக் கொண்டு இருக்க வேண்டும்'' என்றார்.

''ம். என்னை நீங்கள் தொல்லை படுத்துவதைப் போல உங்களுக்கும் தொல்லை அளிப்பதற்கு ஒருவன் வருவான். விரைவிலே வரட்டும் என்று நாள்தோறும் வேண்டிக் கொள்கிறேன். அந்த ஒரு ஆசையை சம்புலிங்கன் நிறைவேற்றி விட்டால் போதும். நிறைவுடன் கண்களை மூடுவேன். இதற்குள்ளாகவே பேரனைக் கண்டிருக்க வேண்டும் ஆனால் அந்த சம்புலிங்கனின் விருப்பம் என்னவாக உள்ளதோ யாருக்குத் தெரியும்?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''போகட்டும் விடு அம்மா. அதற்கு எதற்காக அவ்வளவு கவலைப்படுகிறாய்? உன்னுடைய மருமகளுக்கு குழந்தைகளைப் பெற்று போதும் போதும் என்றாகி விட்டதாம்.''

இதைக்கேட்டு மகேசுவரி தேவிக்கு பயம் ஏற்பட்டது. அவளுக்கு எதுவும் புரியவில்லை.

''எப்பொழுது பெற்றது? என்ன? அப்படி என்றால்?''

நிஜகுணர் பேசிய பேச்சால் மங்கலைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவளும் கேள்விக்கு விடையறிந்து கொள்வதற்காக நிஜகுணரைப் பார்த்தாள். நிஜகுணர் சிரித்தவாறு ''ஆமாம் அம்மா. அவள் பெற்ற எண்ணிக்கை அளவிட வியலாதது. ஒன்றா, இரண்டா? ஓராயிரமா? ஈராயிரமா? எண்ண இயலாது'' என்று புதிரை விடுவிக்காமல் நிஜகுணர் கூறினார். மகேசுவரி தேவிக்கு கோபம் பொங்கி வந்தது.

''மனைவி வீட்டிற்கு வந்த பிறகு கூட உன் குறும்புத்தனம் இன்னும் குறையவில்லை. எதை எதையோ பேசி தொல்லையளிப்பாய். தெளிவாகக் கூறக்கூடாதா?''

நிஜகுணர் மீண்டும் சிரித்தவாறு

''நான் பொய் சொல்லவில்லை அம்மா. உண்மையைத்தான் கூறிக்கொண்டு இருக்கிறேன். எறும்பாக, காகமாக, நாய், பூனை, பசுவாக எண்ணற்ற குழந்தைகளை'' என்று இன்னும் தொடர்ந்து கூறுவதற்கு இருந்தார்.

அப்பொழுது மகேசுவரி தேவி கோபத்துடன் ''விடு, விடு, போதும் உன் வேதாந்தத்தை இங்கும் கொண்டு வர வேண்டாம்.''

கணவர் கூறியதன் பொருளைப் புரிந்து கொண்ட மங்கலையும் சிரிக்கத் தொடங்கினாள்.

''வேதாந்தம் என்றால் எங்கோ ரகசியமாகச் செய்யும் செயலன்று அம்மா. அங்கோ, இங்கோ - உண்மையை அறிவதுதான் வேதாந்தம். வெறும் தோற்றங்களாக உள்ளவற்றை உண்மையென்று உணர்ந்து கொள்வதே வாழ்க்கை. பல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பிறவிகளில் பிறந்து, இறந்து, இறந்து, பிறந்து, பெற்று, சுமந்து போதும் போதும் என்றாகி விட்டதாம் உன் மருமகளுக்கு. இந்த ஒரு பிறவியிலாவது உன் மருமகளுக்கு அந்தச் செயலிற்கு ஓய்வு கிடைக்கட்டுமே!''

வறிதாக இந்த வாழ்க்கையில் காலத்தைச் செலவிடாமல் முக்தியை அடைவதற்கு மங்கலை நன்றாக உழைக்கட்டும்.

''வறிதே காலத்தைக் கடத்தி மடிவது நன்றோ ।
அனுசரித்து - முக்தியை அடையாது மனிதனே ॥

அம்மா,

சம்புலிங்கனிடம் நிலைத்த ஆனந்தம் ஏற்படும் ।
நற்சிந்தனை, பஜனை, பக்தியிலே என்பதை அறியாமல் ॥

என்று பாடிய நிஜகுணர்.

''அம்மா, நமக்கு உலகியல் சார்ந்த வாழ்க்கை முக்கியமானது அல்ல. அந்த வாழ்வின் போகங்களும், நற்பேறுகளும் முக்கியமானது அன்று. சம்புலிங்கனிடம் உறுதியான நிலைத்த பக்தி மற்றும், ஒரே ஒரு லட்சியமான முக்தி என்னும் இந்த இரண்டும் தான் முக்கியமானது'' என்று கூறினார்.

''சரி விடு அப்பா. என்ன வேண்டுமானாலும் செய். நீங்கள் மகிழ்ச்சியாக, சுகமாக இருப்பதுதான் எனக்கு முக்கியம்.''

''அம்மா, நாங்கள் இருவரும் பிரபுதேவரின் மலைக்குச் செல்ல வேண்டுமென்று இருக்கிறோம்.''

''சென்று வாருங்கள், மகிழ்ச்சியாகச் சென்று வாருங்கள்'' என்று மகேசுவரி தேவி கூறினார். மகனின் அந்த விருப்பத்தால் மகிழ்ச்சியுற்றாள். மங்கலைக்கும் அந்தப் பயணம் குறித்த விஷயத்தைக் கேட்டு மகிழ்ச்சி ஏற்பட்டது. பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு நிஜகுணர் ஆணையிட்டு சிவகுமாரரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து பயணத்திற்கு ஆயத்தமானார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சம்புலிங்கமலைக்கு வந்து, சம்புலிங்கனைத் தரிசித்து, தேரில் நிஜகுணரும், சர்வமங்கலையும் அமர்ந்து கொண்டனர். தேரானது வடக்கு திசையை நோக்கிச் சென்றது. காவேரியின் அருகிலேயே பிரபுலிங்கேசுவரரின் மலை இருந்தது. காவேரியின் அக்கரையிலே பரந்த சமவெளிப் பகுதி இருந்தது. நிஜகுணர் மங்கலைக்கு அப்பகுதிகளைக் குறித்து விவரித்தார்.

''தேவி ! முதலில் காவேரிக்குச் சென்று, நம்மைத் தூய்மைப் படுத்திக் கொண்டு அதன்பின் பயணத்தைத் தொடரலாம்'' என்று மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு தேரிலிருந்து இறங்கினார். தேரை நிழலிலே நிறுத்தினார். தம்பதியர் காவேரியிலே கை, கால், முகம் போன்றவற்றைத் தூய்மை செய்து கொண்டு மலையிலே ஏறத் தொடங்கினர். மேன் மேலும் ஏறிய பொழுது மலை ஏறுவதற்குக் கஷ்டமாக இருந்தது. அரசி மங்கலை நடக்கவியலாமல் உதவியற்ற நிலையிலே சிறிது நின்றாள். சில இடங்களில் அவளுடைய காலானது வழுக்கும் என்னும் பயத்தினால், கீழே குனிந்தவாறு, கல்லையோ, புதரையோ இறுக்கிப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினாள்.

அவளுடைய இந்த நிலையைக் கண்ட நிஜகுணர், மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு ''ஓ தேவி அவர்களே! உங்களுக்கு என்னுடைய கையைப் பிடித்துக் கொண்டே ஏற வேண்டும் என்னும் விருப்பமோ? அதற்காகத்தான் இந்த எல்லா ஆட்டமுமா?'' என்று கேலி செய்தார். மங்கலை நாணம் அடைந்து அதைக் காட்டிக் கொள்ளாமல் ''எங்கு கையை விடுங்கள். எனக்கு அந்த ஆசை இல்லை, உங்களுக்கு இருக்கக் கூடும். அப்பா! எத்தகைய கிண்டல் பேர்வழி நீங்கள்? தங்களுடைய ஆசையை மற்றொருவரின் மீது சுமத்தி மகிழ்வது எத்தகைய கிண்டலோ?'' என்று கூறினாள்.

ஓ தேவி ! எத்தனை நன்றாகக் கூறினாய்! ஆன்மாவின் சச்சிதானந்தமான நிலைத்த தன்மை மற்றும் முழுமை என்னும் லட்சணங்களை ஜடப்பொருளின் மீது ஏற்றி அங்கு இன்பத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மனிதன் தேடிக்கொண்டு இருக்கிறான். மங்கலை, உன்னுடைய ஒவ்வொரு சொல்லுமே என்னை ஆன்மீகத்திடையே கொண்டு செல்கிறது. ஆன்மீகத்தின் அழிவற்ற தத்துவத்தையே விவரிக்கும் படிச் செய்து விடுகிறது. என்று மனைவியின் கையைப் பிடித்தவாறு மேலே ஏறிக்கொண்டே கூறினார்.

'' அரசே, ராஜஹம்ஸமானது நீரை அருந்தாமல் பாலை மட்டுமே அருந்துகிறது. அதைப்போன்றே தாங்களும் என்னுடைய உலகியல் சார்ந்த பேச்சுக்களினிடையே கவனத்தைச் செலுத்தாமல், ஆன்மீகம் சார்ந்த விஷயங்களை மட்டுமே ஏற்றுக் கொள்கிறீர்.''

சிறிது நேரத்திற்கு அவர்கள் இருவருமே மௌனமாக நடந்தனர். வெண்ணிறத்தில் உடுத்திக் கொண்டிருந்த மங்கலை, அதிகாலை நேரத்தின் அழகுடன் சேர்ந்து அழகிய தேவதையைப் போல நடந்து கொண்டு இருந்தாள். அவளுடைய முதுகின்மீது தலையிலிருந்து இறங்கி கால் வரையிலும் தொங்கிக் கொண்டிருந்த பின்னல் அங்குமிங்குமாக ஆடிக் கொண்டு இருந்தது. அவள் அணிந்து கொண்டிருந்த மல்லிகை மொக்குகளின் சரமானது தன் பிறவியைப் பயனுடையதாகச் செய்து கொண்டிருந்தது. காற்சலங்கையின் ஒலியானது மலைப்பகுதியின் அமைதியான சூழ்நிலைக்குக் களையை அளித்துக் கொண்டிருந்தது. அவளுடைய கைவளையல்களின் இன்னொலியின் ''ஸ்ரீகார''மானது சிவனுடைய ஓம்காரத்திலே இணைந்து, வேறு எங்குமே இல்லாத அழகை முழங்கிக் கூறிக்கொண்டிருந்தது.

நிஜகுணர் வெண்ணிற ஆடைகளால் பொலிந்து கொண்டிருந்தார். சிவனின் உடலிலே விளங்கிக் கொண்டுள்ள விபூதியானது அவருடைய நெற்றியிலே அழகுடன் பொலிந்து கொண்டிருந்தது. சிவனின் மறுஉருவமான இஷ்டலிங்கமானது. (வீரசைவர்கள் கையில் வைத்துக் கொண்டு பூஜைசெய்யும் லிங்கத்திற்கு இஷ்டலிங்கம் என்று பெயர்) அவருடைய கழுத்திலே ஒளிர்ந்து கொண்டிருந்தது. சிவனுடைய மங்கல வடிவமான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உமையின் மறுவடிவான மங்கலையின் கையானது அவருடைய கையிலே பத்திரமாக இருந்தது.

ஒளியே, ஒளியை அழைத்துச் சென்று கொண்டு இருப்பதைப்போல, ஸிவகளை, அறிவுக் களையுடன் கூடி நடந்து கொண்டு இருப்பதைப்போல நிஜகுணர் மங்கலையின் கையைப் பிடித்துக் கொண்டு முன்னால் சென்று கொண்டு இருந்தார். ஏறிக் கொண்டிருந்த களைப்பினால், சிறிது நேரத்திற்கு ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக ஒரு பாறையின் மீது அமர்ந்து கொண்டனர். அவர்கள் வேகமாக மலை ஏறியதால் அவர்களுக்கு மூச்சுவாங்கியது. அத்துடன் ஏதோ ஒரு நாதமும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

''அரசே, ஸிவனுடைய பெயரை நினைத்துக் கொண்டு இருப்பதே உங்களுடைய சுவாச கதியாக உள்ளது. அதோ, கேளுங்கள் ''ஸிவோஹம், ஸிவோஹம்'' என்று கேட்கவில்லையா?'' என்று பேச்சைத் தொடங்கினாள். நிஜகுணர் புன்னகையுடன் ''நான் ஒருத்தன் மட்டுமல்ல. அனைவரின் சுவாசகதியும் மந்திரமயமானதுதான். ஆனால் அதனை உணர்ந்து கொள்ளாமல் வெளியே தேடுகிறார்கள்.

''வேறு பல வித்தைகளுடன் களைப்புறுவர் தம்முள்ளே ।
மனத்தாலுணரப்படும் சிறந்த மந்திரத்தைச் செபிக்காது ॥
மந்திரத்துடன் இணைந்து வரும் நாதத்தைக் காணின் ।
தெளிவாகக் கூறின் கூடியுள்ள சம்புலிங்கமே
தென்படுவான் ॥
முறையாக, நியமத்துடன் ஆராய்ந்து விரும்பி ।
ஜெபத்தை மேற்கொள்வாய், முக்தி சித்தியாகும் ॥

மந்திரயோகத்தின் ரகசியமே இப்பாடலிலே அடங்கியுள்ளது. ''மங்கலா, வெறும் ஆடம்பரத்திற்காகப் பலரும் காணுவது போலக் கூறும் மந்திரங்களை மந்திரம் என்று கூறுவது தெய்வீக மந்திரம் ஆகாது.'' என்ற நிஜகுணர் கம்பீரமாகக் கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அமர்ந்துகொண்டிருக்கும்பொழுதே இயல்பாகப் பாடிய கணவரின் கவிதை இயற்றும் திறனைக் கண்டு அதனால் ஈர்க்கப்பட்ட மங்கலை, ''அரசே, நான் பேறு பெற்றேன், பேறு பெற்றேன்'' எனக் கூறி அந்த ஆனந்தத்தை அனுபவித்தவாறு மௌனமானாள்.

நிஜகுணர் அவளுடைய நல்ல இயல்பைக் கண்டு புன்னகைத்து விட்டு மீண்டும் மேலே ஏறுவதற்காக எழுந்து நின்றார். மலையின் மீது ஏறிக் கொண்டு இருந்தபோது அந்தப் பகுதியானது சமதளத்தில் இருப்பதைப் போலத் தோன்றியது. அதைச் சூழ்ந்திருந்த இயற்கைச் சூழலில் குகைகளும், வடக்குப்பக்கமாகப் பார்த்தவாறு ஒரு கோயிலும் இருந்தன. நடுவிலே தாமரைகளால் நிறைந்து சோபித்துக் கொண்டிருந்த அழகிய ஒரு குளமும் இருந்தது. நிஜகுணர் முதலில் குகையின் முன்பு நின்று கொண்டு மனைவியிடம் அதைக்காட்டி ''தேவி, இது பண்டைக்காலத்திலிருந்த சிவனடியார்களில் ஒருவரான திருநீலகண்ட நாயனாருடைய குகை ஆகும். சிவன் ஆணையிட்ட பொழுது தன் மனைவியைத் துறந்து, சிவனுடைய அருளைப் பெற்ற பெரும் சிறப்பை உடையவர், இது இயற்பகை நாயனாரின் குகை, இதுகோட்புலி நாயனாருடையது, இது சண்டேச நாயனாருடையது, இது கண்ணப்பருடைய குகை, என்று ஒவ்வொரு குகையின் முன்பாக நின்று, நின்று அந்தக் குகையிலே வீற்றிருப்பவர்களான சிவனடியார்களின் புனிதமான நாமங்களையும், அவர்களுடைய வரலாற்றையும் மனைவிக்குக் கூறினார். அறுபத்து மூன்று நாயன்மார்களின் புனிதமான நினைவுகளால் அந்த அரசதம்பதியரும் புனிதமடைந்து மகிழ்ச்சியிலே மௌனமாக இருந்தனர். அப்படியே அவர்கள் தாமரைக் குளத்தின் அருகிலிருந்த கற்பலகையின் மீது அமர்ந்தனர். மனத்தை அகமுகப்படுத்தி, ஒருமுகப்பட்டு அமர்ந்திருந்த நிஜகுணரின் அந்தக் கோலத்தைக் கண்ட மங்கலை, தான் வரும் பொழுது மிகவும் கவனத்துடன் கொண்டு வந்திருந்த எழுதுவதற்குத் தேவையான பொருட்கள் இருந்த கட்டினை நிஜகுணரின் முன்பு வைத்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அவளுடைய திறமையை மெச்சித் தலையை அசைத்த நிஜகுணர், மௌனமாக அவற்றை எடுத்துக் கொண்டு எழுதத் தொடங்கினார். ஓலைச்சுவடிகள் ஒன்றன் பின் ஒன்றாக நிறைந்து சரிந்தன. மங்கலை, மகிழ்ச்சி வியப்புடன் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எழுதிமுடித்துவிட்டு முகத்தை நிமிர்த்தியபொழுது ஆகாயத்தின் நடுவிலிருந்த சூரியன், நிஜகுணரின் ஒருமுனைப்புற்ற தன்மையைக் கண்டு வியப்படைந்து தானும் சிறிது நேரத்திற்கு நின்று பார்த்து விட்டு கீழே இறங்கத் தொடங்கினான்.

நிஜகுணர் மங்கலையைப் பார்த்தவாறு தேவி, உன்னுடைய சங்கல்பத்தைப்போல இதோ, அறுபத்துமூன்று நாயன்மார்களைத் துதி செய்துள்ள துதிமாலையானது தயாராக உள்ளது. இதில் எழுபத்தாறு பாடல்கள் உள்ளன. என்று மனைவியின் கையிலே கொடுத்தார். மங்கலை நூறுமடங்கு மகிழ்ச்சியுடன் அதனைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு, பக்தியுடன் கண்களிலே ஏற்றிக் கொண்டு படிக்கத் தொடங்கினாள். அந்தத்துதிமாலையின் தொடக்கமானது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஒவ்வொரு நாயனாரின் வரலாற்றின் சாரத்தையும். ''திரிபதி'' (மூன்று வரிகளை உடையது) யில் விவரித்திருந்த கணவரின் திறமையின் பெருமையைப் பறை சாற்றியது.

''ஸ்ரீ குருவே, மெய்யான இன்பக் கடலே, திரையை
அகற்று. இடையறாது விளங்குமுன் கடைக்கண்கள்
உடனே மகிழ்வை அனைவருக்கும் அருளவே 1

பக்தருக்கு நன்மை செய்வோனை, அருளுடையோனை.
துயரைக் களைபவனை, மலை மகளின் மணாளனை.
குருசம்புலிங்கனை வணங்குகிறேன் 2

பாற்கடலின் இனிமை, நிலவொளியின் தண்மை.
மலர்களின் நறுமணம் சேர்ந்ததனைய பரமனிலே
நிலைத்தவளை வணங்குவேன் 3

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



என்று வழிபடும் கடவுளான, குருவடிவத்திலுள்ள சம்புலிங்கத்தை வணங்கி, அந்த சம்புலிங்கத்துடன் ஒருவருடனொருவர் பிரிக்கவியலாதவாறு இணைந்துள்ள பார்வதியை வணங்கி, சிவகணங்களை வணங்கி விட்டு அறுபத்து மூன்று நாயன்மார்களை நினைவு கூர்கிறார்.

''ஶிவனைத் துதிப்பது, வணங்குவது மிகவும் மேலானது என்று சுருதி கூறுவதால் அந்தச் ஶிவ அர்ச்சனையிலே தம்மையே தாம் மறந்த சந்ததியைப் பாடிக் கொண்டாடுவேன். அந்த ஈசுவர கணகுலத்தைச் சரணடைந்த திருவடிகளுக்கு மனம் விரும்பி உரைப்பேன்'' என்று கூறி

''ஶிவன் ஆணையிட, தம் மனைவியைத் துறந்து ।
சம்புவி னருளைப் பெற்ற திருநீலகண்டருக்குக் ।
குன்றாத அன்பினால் தஞ்சம் என்பேன் ॥
மனைவியைச் ஶிவனுக்கீந்து, உடனேகியதைக்கண்டு ।
தாளாது சுற்றம் வேதனையடைய, இயற்பகை யார்தம் ।
திருவடிகள் எனக்கிப்பொழுது முக்தியை நல்கிடவே ॥

என்று அறுபத்துமூன்று நாயன்மார்களையும் இதயம் நிறைந்து, ஒவ்வொரு விதமாகப் புகழ்ந்து பலவகைகளில் தஞ்சம் என்று அருளை வேண்டி, பக்தனின் இதயமானது மலரும்படிப் பாடியுள்ளார். இறுதியில்,

''இவ்விதத்தில் அறுபத்து மூவரின் வரலாற்றை ।
உமாபதியின் கருணைக் கடல் பெருகுவதை ।
விரும்பிக் கேட்பவனே பயன் பெற்றவன் ॥
அன்று, இன்று என்றும் பயனுற்று பின்பற்றியதால் ।
இன்று சிவனை நயக்கும் கணங்களை ।
என்றென்றும் பாடுபவனே முக்தன் ॥
அறுபத்து மூவர்தம் மகிமைகளை இவ் ।
வகையில் எழுதிப் படித்துக் கேட்டு கூறியவருக்கும் ।
நன்மை இக-பரத்திலே உறுதியாகக் கிடைக்கும் ॥
என்று பயனை விவரித்து எழுபத்து ஆறாம் பாடலில் ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



''சிறந்த சிந்தாமணியனைய! முக்திவழியை அடியார் ।
அனைவரின் விருப்பம்தனை ஈடேற்றிய சம்பு ।
நீ என்னைச் சேர்ந்தோரைச் சிற்சபையிலிடுவாய் ॥
என்று அழகாக வேண்டிக் கொண்டுள்ளார்.

முழுவதுமாகப் படித்த மங்கலைக்கு, அவை மிகவும் பிடித்திருந்தன. இருப்பினும் அவளுக்கு அதில் ஒரு குறை தென்பட்டது.

''அரசே, இது மிகவும் அழகாக உள்ளது. நன்றாக உள்ளது வேண்டிய பலனை அளிக்கும் கல்பதருவைப் போல உள்ளது. ஆனால் ஒரே ஒரு குறை உள்ளது.''

அவள் இவ்விதம் கூறியதைக் கேட்ட நிஜகுணர் வியப்புற்று ''குறையா? என்னகுறை?'' என்று கேட்டார்.

''இத்தகைய ஆழமான பொருளைக் கொண்டுள்ள துதியை இயற்றிய மகான் யாரோ? என்று இதைப் படிப்பவர்களுக்கு ஆர்வம் ஏற்படாதா?

''ஆனால் ஆகட்டும். அதற்கு என்னவாம்?

அதனால் எத்தகைய கேடும் இல்லை அல்லவா? என்று நிஜகுணர் சிரித்தார்.

கேடு இல்லாமல் வேறு என்ன அரசே?

அடியார் குலத்தைச் சேர்ந்தவர்களின் மணிமாலையை நமக்கு அருளிய மகானின் பெயரைக் கூட நம்மால் அறிய இயலவில்லையே? நாம் நற்பேறு அற்றவர்கள் என்று துயரப்படும் நல்ல உள்ளம் படைத்தவர்களின் உயிர் நீங்கி விட்டால் அது கேடு அல்லவா? அதற்கு எல்லாம் வாய்ப்பளிக்க வேண்டாம். தம்முடைய பெயரைக் குறிப்பிட்டு மற்றொரு பாடலை எழுதி விடுங்கள் என்று மங்கலை வேண்டிக் கொண்டாள். மனைவியின் மனத்திலிருந்த எண்ணத்தைப் புரிந்து கொண்ட நிஜகுணர் சிரித்தவாறு, மறுமொழி கூறாமல் மற்றொரு திரிபதியை எழுதி மனைவியின் கையிலே கொடுத்தார். அதை உற்சாகத்துடன் வெற்றியுடன் மங்கலை படித்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இவ்வகையில் நிஜகுணயோகி! மகிழ்வுடன் கூறியிருப்பதை ।
வரையற்ற மகிமைக் கடலான, சம்பு தான் ஏற்று ।
மகான்களால் பாடவைக்க வேண்டும்.
மங்கலைக்கு இப்பொழுது நிறைவு ஏற்பட்டது.

பாருங்கள் இது இப்பொழுது நன்றாக உள்ளது. கலசம் வைத்ததைப் போன்று உள்ளது. அடியார்களின் மனவிருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றிய சம்பு,

''அவர்களின் குழாத்திலே என்னை இருக்கவைப்பாய் என்னும் உங்களுடைய வேண்டுதலுக்கு அந்த சம்பு எத்தனை விரைவாக அருள் புரிந்து விட்டான்?''

நிஜகுணர் அவளுடைய பொருள் பொதிந்த பேச்சை அறிந்து கொள்ளாமல் எங்கு? எப்படி அருளியுள்ளான்? என்று கேட்டார்.

அந்த அறுபத்துமூன்று நாயன்மார்களின் புண்ணிய நாமங்களுடன் தங்களுடைய புனிதமான நாமமும் சேர்ந்து மிகவும் புனிதமானதாகி விட்டது. அந்த நாயன்மார்களின், சிவனடியார்களின் குழாத்திலே தங்களுடைய நாமமும் ஒரு தகுதியைப் பெற்றுள்ளது.

இது அறுபத்து மூவரின் துதி மட்டும் ஆகியில்லாமல் அறுபத்து நான்காமவரின் துதியும் ஆகியுள்ளது.

அவளுடைய எண்ணப்பொழிவு - மற்றும் நல்லியல்பை அறிந்த அரசர் நிஜகுணர் கேட்டார். ''மங்கலை, நீ மிகவும் தன்னலம் மிக்கவள், உன் கணவரின் பெயர் எங்கு மறைந்து விடுமோ? என்னும் கவலை உனக்கு உள்ளது அல்லவா?''

''நான் அப்படியே தன்னலம் மிக்கவளாகவே இருந்து விட்டுப் போகிறேன். அதிலேயே எனக்கு ஆனந்தம் உள்ளது. என்னுடைய அனைத்தும், எல்லா நற்பேறுகளும் அதிலேயே அடங்கியுள்ளது. அதுவுமின்றி அந்தத் தன்னலமானது அடுத்துவரும் முமுக்ஷுக்களுக்குத் துருவ நட்சத்திரமாக உள்ளது.'' தொலைவிலே பார்வையைச் செலுத்தியவாறு மீண்டும் அவள்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''என்னுடைய பிரபுவின் வாழ்வு விளங்குவதற்கு என்னுடைய சுவாமியின் புகழ் உலகம் முழுவதும் பரவுவதற்கு என் அரசரின் வாழ்க்கை இன்பமயமானதாக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அவ்வனைத்தையும் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பேன். உன் உயிரைக் கொடுப்பதால் உன் கணவர் உலகப்புகழ் அடையத்தக்க நூல்களை இயற்றுவார் என்று கூறினால், நான் எதனையும் ஆலோசிக்காமல் என் ஸ்வாமியின் பாதங்களில் என் உயிரை அர்ப்பிப்பேன்'' என்று உணர்வுப்பெருக்குடன் கூறிக் கொண்டிருந்த மங்கலையை நிஜகுணர் தழுவிக் கொண்டார்.

''தேவி, என்னுடைய தேவியின் உள்ளம் எனக்குத் தெரியாதா? எனக்காக நீ உயிரின் மீது உள்ள ஆசையையும் துறந்து பாம்பின் விஷத்தை உறிஞ்சியதை என்னால் மறக்க இயலுமா? உன்னுடைய உயிரை அபகரித்துக் கொண்டு நான் என்ன செய்வது? என் எதிரிலே இருந்து கொண்டு நீ தூண்டுதலை அளித்துக் கொண்டிருந்தால் எனக்கு ஆயிரம் மகத்துவம் வாய்ந்த நூல்களை இயற்றும் ஆற்றலானது வரும்.''

''அரசே! இப்பொழுது நான் உங்களிடமிருந்து வேறுபட்டுத் திகழ்வேன் ஆனால் உயிரைத் தியாகம் செய்து உங்களுடன் சேர்ந்து விடுவேன். உங்களை விட்டுப் பிரியாதவளாக ஆகிவிடுவேன். அப்படியானால்''

பாதியிலேயே பேச்சு நின்று ஆனந்தத்தில் அவள் மனம் மூழ்கியிருந்தது. பேரரசர் அவளுடைய முன்னுச்சிக் கூந்தலை வருடியவாறு,

''அப்படி ஆனால்தான் நீ என்னுடன் இணைந்து இருப்பாய் என்று உணர்ந்திருந்தால் அது தவறு. தேவி, இப்பொழுதே நீ என்னிலிருந்து வேறுபட்டவளாக இல்லை. இரு உடல்கள், ஆன்மா ஒன்றே. என்னிடம் தூய்மையான அறிவுமயமான சொரூபத்துடன் எப்பொழுதும் விழித்துக் கொண்டிருப்பாய். உன்னுடைய விழிப்பு நிலையிலுள்ள அறிவை நான் மெச்சுகிறேன். உன்னால்தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இந்தப் பாடல் வெளிப்பட்டது. கேள், உனக்கு என்ன வேண்டும் கேள் கொடுக்கிறேன் என்று கூறினார்.

மங்கலை அதற்கு நேர் எதிர்மாறான நிலைக்கு அப்பாற்பட்டு "அரசே! உங்களுடைய புனிதமான அருகாமை, இந்த குங்குமத்திலகம், திருமாங்கல்யம், இந்தப் பச்சை வளையல் என்றும் இந்த சௌபாக்கியங்களை விட்டுவிட்டு வேறு எதையுமே நான் விரும்பமாட்டேன்" என்றவாறு அவள் கணவரின் பரந்த மார்பிலே தஞ்சம் அடைந்தாள்.

வெயில் இறங்கத் தொடங்கியதும் அவர்கள் மற்றொருமுறை அந்தக் குகைகளை வலம் வந்து மலையிலிருந்து இறங்கத் தொடங்கினர். இப்பொழுது செங்குத்தான பகுதி, மெதுவாக நடந்தாலும் அதில் ஓடும் வேகம் இருந்தது. மலைப்பகுதியில் வீசிய சுழல் காற்றால் அவளுடைய முன்னுச்சிக் கூந்தலானது நெற்றியிலே ஆடத் தொடங்கியது. அந்தச் சுமங்கலியின் தலைப்பானது பறந்து அந்த அடியார்களிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டிருந்தது.

இறங்கி இறங்கி வந்து கொண்டிருக்கும், ஓடோடி, இணைந்து வந்து கொண்டிருக்கும் அந்த அரச தம்பதியர் தேவலோகத்திலுள்ள தேவ - தேவதையைப் போல, கந்தர்வர்களைப் போல பிரம்மன் சரஸ்வதியரைப் போல மற்றொரு முறை நாயன்மார்களைக் காண வந்த ஶிவன் - பார்வதியைப் போல சோபித்துக் கொண்டு இருந்தனர். மலை இறங்கி வந்த அவர்கள் தேரிலமர்ந்து கொண்டதும், அந்த உயர்ந்த குதிரைகள் மகிழ்ச்சியால் கனைத்தன. தேர் ஓடத் தொடங்கியது.

மங்கலகரமான அதிகாலை நேரத்திலே, அரண்மனையின் துயில் கொள்ளும் அறையை ஒட்டி ஒரு ஓரத்தில் மிக நுட்பமாகக் கட்டப்பட்டிருந்த வட்டவடிவமான, புதுமையான சிறந்த மண்டபத்திலே, பிரணவ பீடத்தின் மேலுள்ள கருமையான வண்ணமுள்ள மானின் தோலால் செய்யப்பட்ட தூய்மையான இருக்கையிலே, அரசர் நிஜகுணர் பத்மாசனத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஞானமுத்திரையுடன், மிகவும் கம்பீரமாக அமைதியாக அமர்ந்திருந்தார். அவருடைய முகத்தாமரையிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்த அரிய தெய்வீகக்களையினாலும், அவருடைய மந்திரமயமான உடலிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்த பிரணவகிரணங்களின் ஒளியினாலும் அவரைச் சுற்றிலும் பரவி இருந்த பொன்வண்ண ஒளிக்கற்றைகளின் காந்தியினாலும், ஒளிவட்டத்தினாலும் அங்கு ஏதோ விவரிப்பதற்கு இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

பேரரசர் நிஜகுணரின் திருக்கண்கள் இரண்டும் அகமுகமாக இருந்தன. அவருடைய நீண்ட தோள்களின் நடுவிலே பரந்த மார்பானது நிதானமாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. அவருடைய சுவாச கதியினால் வெளிப்படும் அந்த நாதமானது ''ஶிவோஹம் ஶிவோஹம்'' என்று கேட்டுக் கொண்டிருந்தது. அவர் அருகிலே நறுமணமானது அலை அலையாக மிதந்து வந்தது. உடலெல்லாம் லிங்கமாக, லிங்கமே அங்கமாக, மனித உணர்வு அகன்று, பிரம்ம உணர்விலே நிலை கொண்டிருந்த அந்த ''சைதன்ய புருஷரின்'' அருகிலே சேதனமே பரவியிருந்தது. ஜடத்தைப் பற்றிய பேச்சே இல்லை.

அவர் எதிரிலே ஸ்ரீவடிவத்தில் இருந்த பீடத்தின்மீது பத்ராசனத்தில், தூய வெண்மையே உருக் கொண்டதைப் போல, தூய்மையான சாத்துவீகமே அந்தக் கண்களின் களையாக தூய்மையான அறிவின் வடிவத்திலே, கௌரியின் கம்பீரத்தையும், சாரதையின் மங்கல அறிவையும், ஸ்ரீதேவியின் சௌபாக்கியத்தையும் நிறைத்துக் கொண்டு, கணவரின் புனிதமான திருவுருவத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்தவாறு பேரரசி சர்வ மங்கலா தேவி அமர்ந்திருந்தாள். நிஜகுணரின் அந்த அமுத வடிவத்தைக் கண்டு, அமுதச் சொற்களைக் கேட்டு தூய்மையான நிலையைப் பெறும் பேறு மங்கலைக்கு மட்டுமே இருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



கணவருக்குத் தக்க மனைவியாக, அரசனுக்குத் தகுந்த அரசியாக இருந்த மங்கலை, ஸிவயோகிக்குத் தகுந்த ஸிவயோகினியாகவும் விளங்கினாள். ஸ்ரீகுருவிற்குத் தகுந்த திருமாணவியாகவும் ஆகியிருந்தாள். செருக்கற்ற மகிழ்ச்சி நிறைந்தவராகவும், முழுமையானவராகவும், கருணைக் கடலாகவும் நல்லறிவு படைத்த உத்தமராகவும், செயற்கரிய செயலைச் செய்து பயனை அடைந்தவருமாகிய சிறந்த உயர்ந்த குருவாக நிஜகுணர் விளங்கினால், குருபக்தி, கர்வமற்றநிலை, ஆசையற்ற நிலை, நினைவாற்றல், புலனடக்கம், பரிபக்குவம் அடைந்துள்ள நிலைத்த அறிவு என்னும் நல்லியல்புகளுடன் கூடிய சிறந்த மாணவியாகவே சர்வமங்கலை விளங்கினாள்.

நாள்தோறும் நியமம் தவறாமல் தக்கமுறையில் ஆன்மீகம் சார்ந்தவை பற்றி சிந்திப்பதே அந்தச் சிறந்த தம்பதியரின் அன்புடன் கூடிய ஆடலாக விளங்கியது. ஞானத்தின் உச்சத்திற்குச் சென்று, ஸ்ரீ சிகரத்திலே நின்று கொண்டு அங்குள்ள அழகு எழில் என்னுமிவற்றை அனுபவிப்பதே தேன் நிலவு ஆயிற்று. ஆத்மானந்தமே பால்-தேனாகவும் ஆன்ம அனுபவமே அமுதமாகவும் துவைதபாவனை அகன்று, அத்துவைத பாவனையை மீறி, அத்தன்மையுமற்ற நிலையே அவர்களுக்கு ஏகாந்தமாக விளங்கியது. தன்னை அறிந்து கொள்வதற்கு உதவும் நியமங்களே அழகிய கட்டிலாகவும், ஆன்ம ஞானமே போர்வையாகவும், மனமற்ற நிலையில் ஆன்மாவுடன் இணைந்துள்ள நிலையே அவர்களுக்கு மெத்தையாகவும், தம் உண்மையான உருவத்தை உணர்ந்து கொண்டு அந்த நிலையிலேயே மூழ்கி இருப்பதே அவர்களுக்கு நிம்மதியான உறக்கமாகவும் விளங்கியது.

நீண்ட நேரத்திற்கு ஆழ்ந்த அந்த நிலையில் இருந்த பேரரசர் நிஜகுணர் மெதுவாகக் கண்ணைத் திறந்தார். அவருடைய அழகிய கண்களிலிருந்து கருணை ரசத்தின் வெள்ளமானது பொங்கிப் பாய்வதைப் போல அவருடைய அன்புடன் கூடிய அருளானது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



மனைவியின் மீது பொழிந்தது. சமாதானப் பெருக்கானது புன்னகையின் புனலாக முகத்திலே தோன்றியது. அவருடைய தொண்டையிலிருந்து அமுதக்குரலாக பாடல் வடிவத்திலே, ராகத்துடன் மிகவும் இனிமையான வேதமுழக்கமாக, மந்திர வடிவத்துடன், அருளுடன் இணைந்த பாடலொன்று எழுந்தது. பக்தியே முகமாக, சிரத்தையே செவியாக மங்கலாதேவி அதைக் கேட்டாள்.

"ஸ்ரீ குருவின் அனுபவ அறிவுரையைக் கேட்பின் ।
மனிதருக்கு முக்தி கிடைக்கும். ॥

யார் நானென்று ஆராய்ந்து, துயரம்மிக்க ।
வாழ்க்கையை கனவு என்று அறிவாய் ॥

மன்மதனை அழித்த சம்புலிங்கம் மெச்சுமாறு செய்யின் ।
ஆழ்ந்த இன்பத்தில் இருப்பாய் என அறிவுறுத்தும் ॥
ஸ்ரீ குரு.

என்று நாதபிரம்மராகி, நாதநாமக்கிரியை ராகத்தில், சாமகானத்தை விரும்புபவராக, இசைச்சக்கரவர்த்தியாகப் பாடிய பேரரசர் குருவின் நாமத்தைக் கூறியவாறு பாடலை முடித்தார்.

சர்வமங்கலாதேவி, வேறு இரண்டாவது இருக்க இயலாத ஒப்பற்ற பாடலை ஓலைச்சுவடியிலே, இனிமேல் வரவிருக்கும் அத்வைத சாதகர்களின் ஆயிரக்கணக்கான தூய்மையான இதயங்களுக்காகவோ என்று தங்க எழுத்துக்களிலே எழுதினாள். அவளுடைய மகிழ்ச்சிக்கு இன்று எல்லையில்லை. அவளுடைய பெருமைக்கு வரையறை இல்லை. தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு "அரசரே! இந்தப் பாடலைக் கேட்டு உணர்ந்து கொண்டதுமே பேறு பெற்றவள் ஆனேன். இந்த ஐந்து வரிகள் எல்லா சாத்திரங்களின், வேத ஆகமங்களின், உபநிஷதங்களின் ஒட்டுமொத்த சாரமாகத் திகழ்கின்றன. இந்த பாடல் ரத்தினமானது சாதகர்களுக்கு கைவிளக்கைப் போன்றுள்ளது. எனக்கு மிகவும் பிடித்துள்ளது" என்று மங்கலை கூறினாள். நிஜகுணர் புன்னகையுடன் தேவி இன்று எதற்காக இப்படி ஆயிற்று? பரமானுபவ போதையின் (நூலின்) நான்காம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அத்தியாயத்தின் நிர்குணயோகத்தின் இரண்டாம் சூத்திரத்தை எழுத வேண்டும் அல்லவா? என்றார்.

''ஓ, ஆமாம் பிரபு. இருப்பினும் எந்த இழப்பும் ஏற்பட்டுவிடவில்லை. இத்தகைய காவியம் வெளிப்பட்டது அல்லவா!''

''ஆனால் இன்று எதற்காக இப்படி ஆயிற்று என்று எனக்கு தெரியவில்லை. இதைப் பாடிக் கொண்டு இருக்கும் பொழுது ஒளிமண்டலத்திலிருந்த ஒரு மனிதனின் பாதத்திலே என் முகத்தை வைத்துக் கொண்டு பாடுவதைப் போன்று தோன்றியது.''

''அத்தகைய அனுபவத்தினால்தான் இத்தகைய சிறந்த காவியத்தை இயற்றமுடிந்தது அரசரே''!

''அனுபவத்தினால் ஏற்பட்டது என்பது சரிதான். ஆனால் அந்தச் சிறந்த அனுபவத்திற்கு உண்மையான பொருளில் முழுமை கிடைக்க வேண்டும் என்றால் குருவின் அருள் கண்டிப்பாக வேண்டும்.'' அத்தகைய வேத அத்யயனம் செய்த, பிரம்ம நாட்டத்தில் மிகுதியான நம்பிக்கையுடைய சிறந்த குருவின் அருகாமை தொண்டாற்றுதல், சிரவணம் போன்றவை சரியான முறையில் ஏற்பட்டால் மட்டுமே இந்த குருவின் திருவருளானது கிடைக்கும். குருவின் திருவருளைப் பெறுவது எவ்வளவு அவசியமானது என்பதை அடுத்து விவரிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

அவதாரபுருஷர்களான ஸ்ரீராமரும், ஸ்ரீகிருஷ்ணரும் முறையாக, பிரம்மரிஷியாக இருந்த வசிஷ்டரையும் அரிய அனுபவத்தைப் பெற்று விளங்கிய ஸந்தீபரையும் குருமார்களாக ஏற்றுக் கொண்டு இருந்தனர். மங்கலா, இந்தச் சிறந்த மகத்துவம் வாய்ந்த குருபரம்பரையானது பண்டைக் காலத்திலிருந்தே பரம்பரையாகத் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறது என்பது எனக்குத் தெரியும் அதற்காக என்னுடைய மனமானது குருவிற்காக பரிதவித்துக் கொண்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அரசரே! எனக்கு அது ஒன்றும் புரியவில்லை. ஆனால், "ஸ்ரீகுருவின் அனுபவ அறிவுரையைக் கேட்கும்பொழுது மனிதர்களுக்கு முக்தி கிடைக்கும்" என்னும் வரியானது எனக்குப் பொருந்தி வருகிறது. ஸ்ரீகுருவின் அறிவுரையைக் கேட்டால் மட்டுமே முக்தியை அளிக்கும்." கடவுளின் கதவருகிலேயே நின்று இருப்பாய்" என்று மங்கலை மகிழ்ச்சியுடன் கூறினாள்.

"நீ கொடுத்து வைத்த பாக்கியசாலி, ஆனால் நான்?"

"நீங்கள் ஸௌபாக்கியசாலி. சம்புலிங்கத்தையே குருவாகப் பெற்றவர். சரி, நேரம் ஆயிற்றல்லவா?"

தங்கத்தட்டிலே கணவரின் திருவடிகளை வைத்து, பால் அபிஷேகம், தயிர் அபிஷேகம், நெய் அபிஷேகம், தேனபிஷேகம், சர்க்கரை அபிஷேகம் செய்து - வெதுவெதுப்பான நீரை இறைத்து மலருடன் கூடிய நீரைச் சொரிந்து, சுவர்ண நீரைச் சொரிந்து, இரத்தின நீரை பொழிந்து மந்திரத்துடன் கூடிய நீரை அர்ப்பித்து எள்ளுடன் கூடிய நீரை இறைத்து, தீர்த்தத்தை பாதங்களில் விட்டு தன்னுடைய தலைப்பினால் தூய்மை செய்து, விபூதி, சந்தனத்தைப்பூசி, குண்டுமல்லிகை மாலையைத் திருவடிகளில் வட்ட வடிவத்தில் அணிவித்து, கழுத்திலே இரத்தின மாலையைப் போட்டு தூப-தீபங்கள் காட்டிக் கணவரின் நெற்றியிலே நீண்ட ஆயுளை அறிவிக்க வல்ல உயர்ந்த முத்து ஒன்றைச் சுட்டு அதைக் கட்டினாள். பாலையும், தேனையும் கலந்து, ஏற்கனவே ஆயத்தமாக வைத்திருந்த இளம் சூட்டுடன் இருந்த பானத்தை அவருக்கு அளித்து விட்டுத் தான் கணவரின் திருவடித் திருநீரை அருந்தி புனிதமான திருவுருவத்துடன் விளங்கினாள்.

கணவருக்குப் பாதபூஜைசெய்து, நெறிமுறை பிறழாத சிறந்தவளாகி, பக்தியினால் தான் பின் பற்றும் ஆசாரத்தை, உயிருள்ள வரையில் கடைபிடித்துக் கொண்டு இருப்பேன் என்னும் உறுதியுடன் கூடிய நிலைத்த ஆசாரத்தை மேற்கொண்டவளாக, கணவனே பரம்பொருள் என்று உணர்ந்து, வேறு விஷயங்களில் ஈடுபடாமல், கணவரை யாராவது ஏசுவது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மற்றும் கணவருக்கு உடல் நலக்கேடு ஏற்பட்டால் பொறுத்துக் கொள்ளாமல் இருப்பது போன்ற நல்ல இயல்புகளுடன் கூடிய சர்வமங்கலா, கணவரின் திருவடிகளில் தலையை வைத்து, வணங்கி, பாததுளிகளைத் தலையிலே தரித்துக் கொண்டு, கணவரின் கையைப் பிடித்து எழுந்திருக்கச் செய்தாள்.

துயில் கொள்ளும் அறையின் வெளியிலே, அரசர் பாராட்டும் பாடகன் விருபாக்ஷ தேவன் உணர்வுப் பெருக்குடன் பாடிக் கொண்டு இருந்தான் அழகானதாகவும், பொருள் பொதிந்ததாகவும் இருந்த அந்தக் காலை நேரத்தில் பாடக் கூடிய ராக அலைகள் விருபாக்ஷனுடைய வெண்கலக் குரலில், பேரரசர் நிஜகுணரின் செவிப்படலங்களின் வரையில் மிதந்து வந்தன. நிஜகுணர் வியப்புடன்.

''தேவி, காலை நேரத்திலே பாடும் அந்தராகம் - நான் இயற்றியது அல்லவா! விருபாட்சதேவனிடம் அதைப்பாடும்படி யார் கூறியது? அந்தப்பாடல் அவனுக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரியாது அரசே. நீங்கள் தான் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்.''

அவளுடைய உதடுகளில் குறும்புப் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

''இல்லையே, நான் சொல்லிக் கொடுக்க வில்லையே. அவனையே கேட்டு விடுவோம். பொறுப்பாய்'' என்று கூறிய நிஜகுணர் மங்கலையுடன், துயில் கொள்ளும் அறையின் திரையை விலக்கியவாறு வெளியிலே வந்தார். துயில் கொள்ளும் அறையை ஒட்டியவாறு இருந்த மேடையிலே, அமர்ந்து கொண்டு, கண்களை மூடியவாறு மிகவும் மகிழ்ச்சியுடன் விருபாட்சன் பாடிக் கொண்டு இருந்தான்.

''அதிகாலையிலே எழுவாய் ஶிவனே ।
நடைமுறை உணர்த்திய அறிவை மறவேன் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பிறப்பிலியே, எழுவாய் என எழுப்பி உபசரித்து ।
எழுப்பப்பட்ட இறைவனே, ஷிவனே ॥

என்று பாடிக் கொண்டிருந்த பொழுது அரசனும் - அரசியும் தன் எதிரிலேயே இருந்தாலும் அதை உணராமல் பக்திப் பரவசத்துடன் காலை நேரத்திலே பாடக் கூடிய ராகத்தைப் பாடிக் கொண்டிருந்தான். பாடலை முடித்துவிட்டுக் கண் திறந்த பொழுது, எதிரிலே கண்ட காட்சியினால் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். ஷிவனும் - பார்வதியும் கண் எதிரிலே நின்று கொண்டு இருந்ததைப் போல அரசன் - அரசியைக் கண்டு அவசர அவசரமாக எழுந்து.

"பேரரசே! தவறு ஆகி விட்டது. மன்னிக்க வேண்டும்."

என்று அரசரை வணங்கினான். அரசர் அவனைத் தூக்கி நிறுத்தி,

"விரூபாட்சா, எப்படித் தவறு ஆகும்? வெளியிலே இருப்பதை மறந்து பக்தியுடன் பாடிக் கொண்டு இருப்பது எப்படித் தவறு ஆகும்? பலே, பலே மிகவும் அழகாகப் பாடினாய். விரூபாட்சா, இதோ, இதனை எடுத்துக் கொள்" என்று அவன் பாடியதைப் பாராட்டித் தன் கழுத்திலிருந்த முத்துமாலையை எடுத்துக் கொடுத்தவாறு.

"அதைப்பாடுமாறு உன்னிடம் யார் கூறினார்கள்?"

"பேரரசே! அம்மா அவர்களே சொல்லிக் கொடுத்தார்கள். நாள் தோறும் காலை நேரத்திலே இங்கு வந்து பாடுமாறு ஆணையிட்டுள்ளார்கள்" என்று விரூபாட்சன் பணிவுடன் கூறினான். பேரரசர் மனைவியைப் பெருமையுடன் பார்த்தவாறு அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு முன்னால் நடந்தார்.

"தேவி, நீ மிகவும் திறமைசாலி, காலை நேரத்திலே பாடத்தக்க ராகத்தின் இனிமையைக் கேட்குமாறு செய்த அந்த ராகத்தை விரும்பும் நங்கை நீ"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கணவர் கூறிய அச்சொற்கள் மங்கலையின் மனத்திற்கு அமைதியை அளித்தது. மேல் உப்பரிகையில் இருந்த பரந்த ஓலக்கமண்டபத்தில் அந்த அரச தம்பதியினர் அடியிட்டபொழுது, அதிகாலை நேரத்தின் இளம் வெயிலானது பரவத் தொடங்கியது.

அந்த ஓலக்க மண்டபத்தைத் தாண்டி, நாட்டிய மன்றத்திலே அடியை வைப்பதற்கும், அங்கு இனிமையான மற்றொரு பாடலைக் கேட்பதற்கும் சரியாக இருந்தது. அந்தப்புரத்தின் பாடகியான கலாவதி வீணையை மீட்டியவாறு தன்யாசி ராகத்திலே.

''ஹரநாமத்தை விடாது ஜபிக்கவல்லவர்தம் ।
பிறப்பு, இறப்பு, மாயை, வினை, மலம், பாசப்பிணைப்பு ॥
பாவம், வாழ்க்கைத் துயரங்கள் அகன்று ।
சிறந்த துய்க்கவல்ல முக்தி கிடைக்கும் ॥

என்று பாடிக் கொண்டு இருந்தாள். ஶிவநாமாவளியைக் காலை நேரத்து மங்கலமான முகூர்த்தத்தில் படித்து, அரசனுக்கும் - அரசிக்கும் நன்மையை வேண்டிக் கொண்டு இருந்த கலாவதி அவர்களைக் கண்டு எழுந்து நிற்பதற்கு முயற்சி செய்தாள். மங்கலை அதற்கு வாய்ப்பளிக்காமல், ''எழுந்திருக்க வேண்டாம். முழுவதும் பாடு'' என்று கூறியதும் பாடிமுடித்துவிட்டு அரச தம்பதியரை வணங்கி விட்டு ஒரு பக்கமாக நின்றாள். அவளுடைய இனிமையான குரலைப் பாராட்டிய அரசர்,

''மிகவும் இனிமையாகப் பாடினாய் கலாவதி. இந்தப் பாடலைப் பாடுமாறு யார் சொல்லிக் கொடுத்தார்கள்?'' என்று கேட்டார்.

''பேரரசியே ஆணையிட்டார்கள் அரசரே'' என்று கூறிய கலாவதிக்கும் பரிசினை அளித்துவிட்டு முன்னால் நடந்தனர். நிஜகுணரும் - சர்வமங்கலையும், அந்தப்புரத்தின் மேல் உப்பரிகையின் படிகளில் இறங்கி பூஜையறையின் அருகிலே வரும்பொழுது அங்குக் கோலம் போட்டவாறு, மகேசுவரிதேவியின் அன்பிற்கு உரிய பணிப்பெண்ணான விமலை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



''பரமேசுவரியின் புண்ணிய நாமத்தைப்பகலும், இரவும் |
அன்புடன் ஓதிக் கேட்பவர்களுக்கு ||

பாவங்களும், கேடுகளும் அகன்று, தூய |
தகுந்த, துய்க்கத் தக்க முக்திகள் கிடைக்கும் ||

என்று இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். நிஜகுணர் அவளுக்கு நிறைவு ஏற்படும் வகையிலே ''விமலா, பரமேசுவரியின் புண்ணிய நாமங்களை நாள்தோறும் கூறுவதால் மனம் தூய்மையடைகிறது. மனம் ஒருமுகப்படுகிறது. நீ அதனைச் சாதிக்க வேண்டும்'' என்று அறிவுறுத்திக் கூறி, அவளுக்குப் பரிசளித்து விட்டு மனைவியுடன் பூஜை அறைக்குள் நுழைந்தார்.

''மங்கலா, நீ மங்கலை மட்டுமன்று. சர்வமங்கலை, சுமங்கலை. உன்னுடைய அறிவு - மனமும் கூட மங்கலமயம். நான் என்னுடைய மகிழ்ச்சிக்காக எழுதிய அந்தப் பாடல்களை நீ இந்த விதத்திலே சேகரித்து, அவர்களிடம் கொடுத்து நான் வரும் சமயத்தில் பாடும்படிக் கூறிய உன் திறமையானது சிறந்தது. சமயத்திற்குத் தக்கவாறு நடந்து கொள்பவளும், நன்மையைச் செய்பவளும். முமுக்ஷுவுமாக உள்ள மனைவி கிடைத்தது என்னுடைய சிறந்த புண்ணியமாகும். தேவி, ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது. வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருந்துவிட வேண்டும். இல்லையெனின் மைத்ரேயியைப் போல இருப்பவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அன்னையிடம் கூறிக் கொண்டிருந்தேன்.

மங்கலை நடுவிலேயே இடைமறித்துச் சிரித்தவாறு, ''பாவம், என்னால் பேரரசர் பிரம்மச்சரியத்திலிருந்து வழுவினாரோ என்னவோ, அல்லவா அரசரே?'' என்று கூறினாள்.

''இல்லை தேவி, என்னுடைய பிரம்மச்சரியத்திற்கு என்றும், எவராலும் கேடு ஏற்படாது. உன்னிடமிருந்து இன்னும் சிறந்த பலம் வந்துள்ளது. உண்மையான பிரம்மச்சரியமானது வெளியிலே இல்லை. மனத்திலே உள்ளது. உலகியல் வாழ்க்கையில் இருந்து கொண்டே பிரம்மத்தைக் குறித்து எண்ணிக் கொண்டிருப்பவனே பிரம்மச்சாரி. எனவே உன்னால் என்னுடைய பிரம்மச்சரியத்திற்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


எவ்விதக் குறையும் இல்லை. என்னுடைய மங்கலையின் கையைப் பிடித்து நான் நல்ல பயனை அடைந்திருக்கிறேன். எல்லாமே சம்புவின் நல்ல சங்கல்பம்தான்.'' என்று பூஜையறையிலிருந்த சம்புலிங்கத்தை வணங்கினார்.

பேரரசி மங்கலை சம்புவிற்கு மலர்களை அணிவித்து ஆரத்தி எடுத்தாள். அவள் ஆரத்தி எடுத்துக் கொண்டிருந்த பொழுதே, காற்று அடிக்காமல் இருப்பினும் எதனாலோ ஜோடியாக எரிந்து கொண்டிருந்த இரு விளக்குகளில் ஒன்று சட்டென்று அணைந்துவிட்டது. பக்கத்தில் ஜோடியாக எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டதால் அந்தப் பிரிவால் எரிந்து கொண்டிருந்த விளக்கும் ஆடத் தொடங்கியது. அதைக் கண்ட அரசி மங்கலை கலவரத்துடன் சம்புவின் அருகில் ஓடினாள். அவள் பார்ப்பதற்கும், சம்புலிங்கத்தின் தலையின் இடப்பக்கத்தில் ஒரு பாம்பு மேலிருந்து உருளுவதற்கும் சரியாக இருந்தது. அவள் வலக்கண் துடித்தது. இந்தக் கெட்ட நிகழ்வால் உறுதியை இழந்த சர்வமங்கலை கணவர் இருந்த பக்கமாகத் திரும்பி, ''அரசே! இந்த எல்லாக் கெடுதல்களும் சரியானதல்லவே, என்ன கெடுதல் காத்துக் கொண்டு இருக்கிறதோ?'' என்று நடுங்கும் குரலில் கூறினாள் நிஜகுணர் அவள் கூறியதைக் கேட்டுச் சிரித்து,

''சீ, பைத்தியமே - என்ன இவ்வளவு தைரியமற்றுக் காணப்படுகிறாய், சம்புவிடம் உறுதியான நியமம், நிஷ்டை உடையவர்களுக்கு கெடுதல் ஏற்படுவதற்குச் சிறிதும் வாய்ப்பு இல்லை. இங்கு அமங்கலமும் மங்கலமாகவே பரிணமிக்கும். சம்புலிங்கனின் நல்ல சங்கல்பத்தைப் போன்றே நடக்கும் அனைத்துமே மங்கலகரமானவை. அவனுடைய பார்வையில் மங்கலம் - அமங்கலம் என்னும் வேறுபாடே இல்லை. அது நம் கற்பனையாகும். எந்த ஒரு நிகழ்வு நம் பார்வைக்கு அமங்கலம் என்று தென்பட்டாலும், அது சம்புவின் பார்வையில் மங்கலமானதாகவே இருக்கும். இப்பொழுது பார் - என்னுடைய மரணம் ... என்று கூறிக் கொண்டிருக்கும் பொழுதே சர்வமங்கலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


வேகமாகக் கணவரின் உதடுகளின் மீது விரலை வைத்து ''அரசே! அரசே! என்னால் கேட்கவியலாது. அமைதி .. அமைதி.. என்ன இது! இப்படிப் பேசுகிறீர்கள்? போதும், நீங்கள் இன்னும் எதுவும் பேச வேண்டாம்'' என்று கணவரின் பேச்சைத் தடுத்து நிறுத்தினாள். அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. நிஜகுணர் மனைவியைச் சமாதானம் செய்தவாறு,

''வெறும் பேச்சிற்கே இவ்வளவு பயப்பட்டால் எப்படி தேவி! நல்ல விவேகத்தால் உண்மையை உணர்வாய் அப்பொழுது நீ எதற்கும் அஞ்சமாட்டாய். எதிர்மறை கருத்துக்கள், கெட்ட எண்ணங்களே அமங்கலகரமானவை ஆகும். அவை இரண்டும் உன்னைப் போன்ற ஆன்மீக சாதகர்களுக்குப் பிசாசுகளைப் போன்றவை ஆகும். அவற்றை மிதித்து நின்று, நல்லதும், தூய்மையுமான நல்ல எண்ணங்களுடன் இருக்க வேண்டும்'' என்று மனைவிக்கு அறிவுறுத்தி, சம்புலிங்கத்தை மற்றொரு முறை வணங்கி விட்டு ஓலக்கத்திற்குச் சென்றார்.

கணவரின் அனுபவம் நிறைந்த அறிவுரைகளால் சிறிதளவிற்குச் சமாதானம் ஏற்பட்டாலும், எதற்காகவோ உள்ளுக்குள்ளே கலக்கம் அடைந்தாள். சம்புலிங்கத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டே கைகளைக் கூப்பிக் கொண்டு நாள் தோறும் செய்யும் பிரார்த்தனையைப் போன்றே முறையிட்டாள்.

''சம்புலிங்கமே! கருணாநிதியே! எதற்காகவோ தெரியவில்லை, என் மனம் பயப்படுகிறது. ஆவது அனைத்தும் எனக்கே ஆகட்டும். என் அரசரை சுகமாக வாழ வைப்பாய். அவர் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும். அவருடைய மகத்துவம் நிறைந்த ஞானநிதியானது சாதகர்களின் செல்வமாக இருக்க வேண்டும். என்னுடைய கணவருக்குத் தக்க மனைவியாக நடந்து கொள்ளும் நற்பேறு என்னுடையதாக இருக்க வேண்டும். என்னால் என் கணவரின் ஆன்மீக வாழ்விற்கு சிறிதுகூட தடங்கல் ஏற்படாமல் இருக்க வேண்டும் நான் அறிந்தோ, அறியாமலோ, எந்தக் கணத்தில் என்னுடைய கணவரின் விருப்பத்திற்குத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தடையாக இருப்பேனோ. அதே கணமே என்னுடைய உயிர் உன் திருவடியை வந்து அடையட்டும். தந்தையே! கருணை காட்டுவாய், அருள்புரிவாய்'' என்று மிகுந்த பக்தியுடன் வேண்டிக் கொண்டாள். அந்த உணர்வுப் பரவசத்தால் அவளுடைய கண்களிலிருந்து இரு நீர்த்துளிகள் கீழே உருண்டன.

நள்ளிரவு நேரம். எங்கெங்கும் அமைதி நிறைந்திருந்தது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு வீறிட்டு அலறிய சர்வமங்கலையின் கூக்குரலால் அந்தப்புரத்தின் துயில் கொள்ளும் அறையில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த நிஜகுணர் விழித்து எழுந்திருந்து பக்கத்திலிருந்த மனைவியை உலுக்கி விழிப்படையச் செய்தார். சர்வமங்கலையின் வெண்மையும், செம்மையும் கலந்த நிறத்திலிருக்கும் முகமானது களை இழந்திருந்தது. அவளுடைய மென்மையான உடலானது மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. அவள் கணவரின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

நிஜகுணர் அவளுடைய முதுகை மெதுவாகத் தட்டி, ''தேவி! இது என்ன? இன்னும் விழிப்புவரவில்லையா என்ன அழுது கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

இவ்வளவு நாட்களாகத் தங்களுடைய தாம்பத்திய வாழ்க்கையிலே மனைவியின் நிலவொளி போன்ற புன்னகையை மட்டுமே பார்த்திருந்த நிஜகுணர் அன்று அவள் அழுது கொண்டிருப்பதைக் கண்டு திகைத்தார். மனைவிக்காக அவர் மனம் துடித்தது. மங்கலையின் மௌனத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாதவராக அவளுடைய முகத்தை நிமிர்த்தி,

''தேவி, என்னை உன்னுடைய மௌனத்தினாலேயே ஏன் வாட்டிக் கொண்டு இருக்கிறாய்? சொல்லக் கூடாதா? பயத்தினால் வீறிட்டாயே? ஏன்?'' என்று ஆர்வத்துடன் கேட்டார்.

''ஆமாம் பிரபு, நினைத்துக் கொண்டாலே பயம் ஏற்படுகிறது. அத்தகைய பயங்கரமான கனவுகண்டேன்'' அவளுடைய குரல் நடுங்கியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பைத்தியமே, கனவில் ஏற்பட்ட பயத்தை, விழித்துக் கொண்டிருக்கும் பொழுது நினைத்துக் கொண்டு பயப்படலாமா?

அப்பா, அத்துவைதியா? "தேவி, இது என்ன? இன்று உன்னுடைய நடவடிக்கையே விசித்திரமாக உள்ளதே! கனவு நிலைக்கே இத்தகைய உண்மை நிலையைக் கொடுக்கும் நீ, விழித்துக் கொண்டிருக்கும் நிலைக்கு உண்மை என்று கூறாமல் இருப்பாயா? இருக்கட்டும் நீ என்ன கனவு கண்டாய்? சொல், கேட்கலாம்" என்று கூறியவாறு மனைவியை இன்னும் அருகிலே அமர்த்திக் கொண்டார்.

"பாருங்கள் அரசே! நீங்களும், நானும் எங்கோ மகிழ்ச்சியாக இருப்பதற்காகச் சென்று இருக்கிறோம். ஒரு கற்பலகையின் மீது அமர்ந்து கொண்டு பேசியவாறே சிரித்துக் கொண்டு இருந்தோம். அப்பொழுது நீங்கள் நேற்று பாடினீர்கள் அல்லவா, ஸ்ரீ குருவின் அறிவுரையைக் கேட்பின் மனிதர்களுக்கு முக்தி கிடைக்கும்" அதைப்பாடிக்கொண்டிருக்கிறீர்கள்.

அப்பொழுது எங்கிருந்தோ ஒரு குரல் "ஓ நிஜகுணா, போதும், நிறுத்து உன் பாடலை" என்று கேட்டது. நீங்கள் உடனடியாகப் பாடலை நிறுத்திவிட்டு திகைப்புடன் சுற்றுமுற்றும் பார்க்கத் தொடங்கினீர்கள். அப்பொழுது எதிரில் ஒரு மனிதன் தென்பட்டான். அவன் நம்பக்கமாக வரத் தொடங்கினான். நீங்கள் எழுந்து சென்று அம்மனிதனின் பாதங்களில் பணிந்து அழைத்துக் கொண்டு வந்து அமர வைத்தீர்.

"ஸ்வாமி, ஏன் பாட்டை நிறுத்துமாறு கூறினீர்கள்?"

என்று பணிவுடன் வேண்டிக் கொண்டு கேட்டீர்கள் அப்பொழுது அந்த.. அந்த மனிதன் சினம் நிறைந்த பார்வையுடன் உங்களைப் பார்த்தவாறு மிகவும் கடுமையாக "மீண்டும் பாடுவாய் என்று சொல்லி இருக்க வேண்டுமோ?" ஸ்ரீகுரு என்று பாடினாய். அதற்குத் தகுந்தாற் போல நடந்துகொள்ள வேண்டாமா?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



"அதாவது?"

"குரு வேண்டாமா?"

"வேண்டும்"

"உபதேசம் அளித்த அந்தக் கணத்திலேயே முக்தியை அளிக்கக் கூடிய குரு வேண்டாமா?"

"வேண்டும், வேண்டும் ஸ்வாமி! அவசியமாக வேண்டும் என்குரு எங்கிருக்கிறார்?" என்று நீங்கள் ஆர்வத்துடன் கேட்டீர்கள்.

"என்னுடன் வா, காட்டுகிறேன்" என்று அம்மனிதன் கூறினான். நீங்கள் அவனுடன் கிளம்பி விட்டீர்கள் என்னை விட்டு விட்டுப் போகிறாரே? என்னுடைய கதி என்ன? என்னும் பயத்தால் வீறிட்டேன்"

கனவை விவரித்த சர்வமங்கலை, கணவரை இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டு" அரசே என்னை என்றென்றும் விட்டு விட வேண்டாம் உங்களுடைய பாதங்களை விட்டு விட்டு நான் ஒரு கணம் கூட வாழ மாட்டேன் என்று தீனமாகக் கணவரைப் பார்த்தாள். நிஜகுணர் சர்வமங்கலையை அமைதிப்படுத்தினார்.

"என்ன பேச்சு இது தேவி? என் தேவியை, என் உயிரை, என் ஆன்மாவை நான் விட்டு இருப்பதற்கு இயலுமா? இல்லாமல் கனவு நனவாகுமா? அவ்வளவு பயப்படலாமா?"

"இருப்பினும், எதற்காகவோ எனக்குப் பயமாகவே உள்ளது" ஸ்வாமி.

"பயப்படாமல் இரு தேவி, ஆனால் உன்னுடைய கனவு ஒரு விதத்தில் உண்மையாகி உள்ளது." தென்படும் அனைத்தும் குருசொரூபம் தான். அரச குருவான ஸ்ரீ சன்ன சதாஶிவ யோகிகள் கூட முன்பு ஒரு சமயத்தில் அவரே வருமாறு கூறினார். "நான் உனக்கு அரசகுரு, அறிவுரை கூறும் குருமட்டுமே நிஜகுணா புனிதமானவனான சம்புலிங்கமே தானாகி, தானே சம்புலிங்கமாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உனக்கு முக்திப்பதத்தை அளிக்கவல்ல, தகுந்த குரு வேறு ஒருவன் இருக்கிறான்....''

''சம்புலிங்கம் குருவடிவம் என்று நம்பி நான் நடந்து கொண்டிருந்தாலும், உபதேசம் செய்த அந்தக்கணத்திலேயே முக்தியை அளிக்கவல்ல பரமகுரு, சிறந்தகுருவின் அவசியமானது என்னைப் போன்ற முமுக்ஷுகளுக்கு மிகவும் தேவையானதாகும்.''

நிஜகுணர் தம்முடைய மனத்திலிருந்த விருப்பத்தை மனைவிக்கு விவரிப்பதற்கு முயற்சி செய்தார்.

காலைவேளையில் நடைபெற வேண்டிய அனைத்துச் செயல்களும் எப்பொழுதும் போல நடைபெற்றாலும் மங்கலையின் மனத்திற்கு, மப்புக் கவிந்ததைப் போல அனுபவம் ஏற்பட்டது. அவளுடைய கலவரமானது அந்தக் காரணத்தினால் அதிகமாக ஆகிக் கொண்டிருந்தது. பதிவிரதையும், தூய்மையான மனமும், கர்வமற்றவளுமான, அந்த தூய்மையானவளுமான சர்வமங்கலை, பேரரசி சர்வமங்கலையின் அகக்கண்ணிலே, இனிமேல் நடக்கவுள்ள நிகழ்ச்சியின் தெளிவற்ற காட்சியானது தோன்றி மறைகிறது!

சாளரங்கள் எல்லாம் திறந்தே இருந்தாலும், கண்கள் திறந்திருந்தாலும் ஒரு சமயம் இருள் கவிந்ததைப் போன்ற உணர்வு! மறுசமயத்தில் நாள்தோறும் உள்ள ஒளியையும் மீறியபடி உள்ள ஒரு பெரிய ஒளி அரண்மனையை விட்டு வெளியேறியதைப் போன்ற உணர்வு! கருமையான நிழலொன்று அவளுக்குள்ளே நுழைந்து, விவேகம் ஞானம் போன்றவற்றை அவளுடைய தலைப்பினால் மூடியதைப் போன்று அஞ்சி நடுங்கினாள். காரணமின்றி அழத் தோன்றுகிறது. மனத்துயரத்தை மறக்க வேண்டுமென்று சம்புலிங்கனிடம் முறையிட்டாள். சம்புலிங்கனின் பாதகமலங்களில் தலையை வைத்து கண்ணீரால் அபிஷேகம் செய்தாள்.

''சம்புலிங்கமே! என் பிரபுவிற்கு, என் ஸ்வாமிக்கு நீண்ட ஆயுளை அருள் புரிவாய். இந்த நாட்டிற்கு எத்தகைய விபத்தும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஏற்படாதவாறு காப்பாற்றுவாய் என் ஸ்வாமிக்கு நான் அபசாரம் விளைவித்தால் என் தலைதண்டம். காப்பாற்றுவாய் தந்தையே'' என்று முறையிட்டாள். மனம் ஒரு நிலைக்கு ஓரளவிற்கு வந்ததைப் போலத் தோன்றியது இருப்பினும் அந்த அழகியின் முக அழகிலே ஏனோ குறை தென்பட்டது. பேரரசியின் வாடிய முகத்தைக் கண்ட பணியாட்கள் பணிப்பெண்கள், பொருள் புரியாமல் அங்குமிங்கும் ஓடிக்கொண்டு இருந்தனர். அவர்களுக்கும் எதனாலோ அரண்மனை இருண்டதைப் போல, வெறிச்சோடிக் கிடப்பதைப் போன்ற அனுபவம் ஏற்பட்டது.

என் மனத்துயரங்களை எல்லாம் அவரிடம் கூற வேண்டும். ஆனால் என்னுடைய கற்பனை என்று அவர் சிரித்து விடுவார். ''நீ புதிய மைத்ரேயி'' என்று சீண்டுவார். ''இது விவேகியின் லட்சணமா என்று கேலி செய்வார். வேண்டாம், வேண்டாம் அவரிடம் கூறாமல் இருப்பது உத்தமம். ஆனால் இன்று நாள் முழுவதும் அவர் அருகிலேயே இருக்க வேண்டும். ஒருகணம் கூட அவரை விட்டு அகலாமலிருக்க வேண்டும்'' என கருதினாள்.

சபையின் எல்லாச் செயல்பாடுகளையும் முடித்துக் கொண்டு, பேரரசர் அந்தப்புரத்தின் பக்கமாகச் சென்றார். அங்கு சர்வமங்கலை வாடியமுகத்துடன் நிஜகுணரின் பாடல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய வாயானது இடைவிடாமல் சம்புலிங்கனின் நாமத்தைக் கூறிக் கொண்டிருந்தது. பாடல்களின் கட்டுக்களைத் தனித் தனியாகப் பிரித்து, பிறகு அடுக்கிப் பட்டுத் துணியிலே கட்டி வைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இச்செயலைக் கண்ட நிஜகுணர் ''என்ன? தேவி, மூட்டை கட்டிக் கொண்டிருக்கிறார் எங்கு செல்லும் உற்சாகத்துடன் இருக்கிறாரோ'' என்று சிரித்தார். அந்தச் சொற்களைக் கேட்ட மங்கலை அஞ்சி விழுந்து, உடனே எழுந்து நின்று கணவரின் அருகில் வந்து ''இல்லை, இல்லை. நான் எங்கும் கிளம்பவில்லை. உங்களை விட்டுப் பிரிந்து நான் எங்கும் செல்லமாட்டேன்'' என்று தழுதழுக்கும் குரலில் கூறினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அப்படி எதற்குப் பயப்படுகிறாய் தேவி? நான் சும்மா அப்படிக் கூறினேன். அவ்வளவுதான் சரி, இதில் என்ன உள்ளது? என்று நிஜகுணர் மனைவியின் கவனத்தை வேறு பக்கமாகத் திருப்புவதற்கு முயன்றார்.

''நீங்கள் எழுதிய அனைத்தையும், சரியாக, வகைவகையாகப் பிரித்துத் துணியில் கட்டி வைத்துள்ளேன்'' என்று அவள் ஒவ்வொரு கட்டாக அவரிடம் காட்டினாள்.

நிஜகுணர் அந்தச் செயலைப் பாராட்டி, சிரித்தவாறு, ''இப்படிச் செய்தது நல்லதாயிற்று உன் செயலைப் பாராட்டுகிறேன். நீ கேட்டதைக் கொடுக்கிறேன்'' ''அரசே! அப்படி என்றால் ஒரே ஒரு சிறிய விருப்பதை நிறைவேற்றிக் கொடுப்பீர்களா?''

அவள் குரலில் தீனம் நிறைந்திருந்தது.

''அது என்ன? உன்னுடைய சிறிய விருப்பம்?''

''அது ஒன்றுமில்லை, இன்று உங்களுடன் நீண்டநேரத்திற்கு இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது'' - அவ்வளவுதான்.

''ஓ இவ்வளவுதானா? கண்டிப்பாக நடக்கட்டும் இன்று முக்கியமாகச் செய்ய வேண்டிய செயல்கள் எதுவும் இல்லை. நாவிதனுக்குச் சொல்லி அனுப்பி இருக்கிறேன். முடி திருத்தி முடித்துக் கொண்டு நீராடி, பூஜை, பிரசாதங்களை முடித்துக் கொண்டு விட்டால் மற்ற எல்லா நேரத்தையும் உன்னுடனேயே செலவிடுகிறேன்.''

பணிப்பெண் ஒருத்தி நாவிதன் வந்திருப்பதை உணர்த்திவிட்டுச் சென்றாள். நிஜகுணர் அரச உடைகள், அணிகலன்கள் அனைத்தையும் களைந்து விட்டு சிறிது ஜரிகைக் கரையுடன் கூடியபட்டு வேட்டியை உடுத்திக் கொண்டு, ஒரு துணியால் முதுகைப் போர்த்தியவாறு வெளியிலே சென்றார்.

வெளியிலே சென்று கொண்டிருந்த கணவரின் அந்த மங்கல உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்த சர்வமங்கலை ஒரு பெருமூச்சுடன் எழுந்து கீழே சென்றாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அந்தப்புரத்தின் வெளிச்சுற்றிலுள்ள முற்றத்தில் நாவிதனின் எதிரிலே தலையைக் குனிந்து கொண்டு பேரரசர் நிஜகுணர் அமர்ந்து கொண்டிருந்தார். நாவிதனின் வேலை முற்றுப் பெற்றுக் கொண்டிருந்தது, அதற்குள் ஒரு ஜங்கமன் அங்கு வந்து நின்றான். அரசர் அவனைக் கழுத்தை நிமிர்த்திப் பார்த்தார். ஒளிரும் முகம் பளபளக்கும் கண்கள். இருவரின் கண்களும் சந்தித்தன. நிஜகுணரின் உடல் புளகம் அடைந்தது. அவர் ஜங்கமனைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அப்பொழுது அந்த ஜங்கமன் ''பேரரசரே! இங்கு ஜங்கமர்களுக்கு விருந்து நடைபெற்றுக் கொண்டுள்ளது என்று கேள்விப்பட்டேன் உண்மையாக இருந்தால் நானும் அதில் பங்குபெற வேண்டும் என்று எண்ணிக் கொண்டு இங்கு வந்தேன்.

''தாங்கள் கேள்விப்பட்டது உண்மை ஸ்வாமி. உங்கள் வரவால் இந்த அரண்மனை புனிதமடைந்து உள்ளது. உள்ளே வருகை தாருங்கள். நீராடி விட்டு நானும் வருகிறேன்'' என்று கூறி, பணிப் பெண்ணிடம் ஜங்கமனை உள்ளே அழைத்துச் செல்லுமாறு ஆணையிட்டு விட்டு அவர் நீராடும் அறையின் அருகில் சென்றார்.

பணிப்பெண் ஜங்கமனை அழைத்துக் கொண்டுவந்து, ஜங்கமர்களுக்காக, கட்டப்பட்டிருந்த உணவு உண்ணும் அறையில் ஒரு இருக்கையைக் காட்டி, அமரும்படிக் கூறிவிட்டு, சமையல் அறைக்குச் சென்று உணவு பரிமாறும் பணிப்பெண்களிடம் கூறினாள். அந்தப் பணிப்பெண்கள் நாள்தோறும் செய்வதைப் போல ஜங்கமனுக்குப் பரிமாறுவதற்குச் சென்றனர். ஜங்கமன் தட்டின் மேல் கைவைத்து, ''நீங்கள் அரண்மனையின் எஜமானிகளா?'' என்று கடினமாகக் கேட்டான். எதிர்பாராத அந்தக் கேள்வியால் நடுங்கி பின்வாங்கிய அந்தப் பணிப் பெண்கள் ''இல்லை, நாங்கள் ஊழியம் செய்பவர்கள், உணவு பரிமாறும் வேலை எங்களுடையது'' என்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''சரி, நான் ஊழியர்கள் அளித்ததை ஏற்றுக் கொள்ள மாட்டேன். இந்த அரண்மனையின் எஜமானி அளித்தால் மட்டும் ஏற்றுக் கொள்வேன்'' என்று அந்த ஜங்கமன் நன்றாக அமர்ந்து விட்டான்.

அந்தப் பணிப்பெண்கள் ஒன்றும் புரியாமல் அரசி சர்வமங்கலையிடம் வந்து ''பேரரசி, ஒரு ஜங்கமன் வந்திருக்கிறான், நாங்கள் பரிமாறச் சென்றால் ஏற்றுக் கொள்ள மறுக்கிறான். தாங்களே பரிமாறினால் உணவை ஏற்றுக் கொள்வானாம் அது அவனுடைய விரதமாம்'' என்று கூறினர். ''என்ன? நானே பரிமாறவேண்டும் என்று பிடிவாதமா? செல்லுங்கள், போகலாம்'' என்று அவனைப் பார்க்கும் ஆர்வத்துடன் உணவு உண்ணும் அறைக்குச் சென்றாள்.

கம்பீரமாக அமர்ந்து கொண்டிருந்த அந்த ஜங்கமனின் முகத்தைப் பார்த்த அந்தக்கணம் பேரரசி தத்தளித்தாள். நேற்று இரவு கனவிலே கண்ட அதே மனிதனைப் போன்று இந்த ஜங்கமன் இருந்தான் ஆம். ஆம் சந்தேகமே இல்லை. அதே முகம் என்று நினைவுபடுத்திக் கொண்டிருந்த பொழுதே அந்த ஜங்கமன் தலையை நிமிர்த்தி அவளைக் கடுமையாகப் பார்த்து ''பேரரசி, இங்கு உணவிற்காகக் காத்துக் கொண்டு அமர்ந்திருக்க வேண்டுமா?'' என்று கேட்டான்.

அதே சினம் கொண்ட உருவம், அதே வெண்கலக் குரல், ஆம் கனவிலே கண்ட மனிதன்தான் இவன், என்னும் சந்தேகத்துடன் ஏதோ ஒரு பயங்கரம் நிகழப்போகிறது என்று கற்பித்துக் கொண்டு, நடுங்கியாறு சமையல் அறையை நோக்கி நடந்தாள் பரிமாறுவது, சமையல் செய்வது போன்ற பழக்கங்களை என்றும் மேற்கொள்ளாத மங்கலை தடுமாறினாள். உள்ளம் அலை பாய்ந்தது. மனம் அங்குமிங்குமாக ஆடத் தொடங்கியது. அறிவு ஒரு நிலையிலே இல்லை.

மேடையின் மீது இருந்த ஒவ்வொரு பாத்திரத்தையும் திறந்து பார்த்தாள். ஆனால் அவைகளில் என்ன உள்ளது? எல்லாம் காலியாக இருந்தன. ஒன்றுமே இல்லை. உணவு எங்கு?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பணிப்பெண்களுக்கு மிகவும் வியப்பாக இருந்தது' "அரசியே! இதுவரைக்கும் அவ்வனைத்துமே உணவுப் பொருட்களால் நிறைந்து இருந்தன. இப்பொழுது எதுவும் இல்லாமல் இருப்பது விசித்திரமாக உள்ளது." என்று அவர்கள் அஞ்சி நின்றனர்.

அதையே விசாரித்துக் கொண்டு இருக்க இயலாது. தாமதிக்கவும் இயலாது. வெளியிலே உணவு உட்கொள்ளும் அறையில் துர்வாசரின் மறு அவதாரமாகத் திகழும், சினத்துடன் அமர்ந்திருக்கும் அந்த ஜங்கமனை நினைத்த சர்வமங்கலாதேவி, ஒரு பாத்திரத்திலிருந்த அன்னத்தை அவசரமாக எடுத்துக் கொண்டு வந்து ஜங்கமனின் தட்டில் இட்டாள். ஜங்கமன் அன்னத்தைப் பிசைந்தவாறு இது என்ன ஊசிப்போனதா? ஜங்கமர்களுக்கு விருந்து அளிப்பதில் பெயர் பெற்ற நிஜகுண அரசரின் அரண்மனையிலே ஊசிப்போன அன்னமா? என்று சீறினான். அவனுடைய பேச்சைக் கேட்டு, கோபத்தைக் கண்டு, அரசியின் கை-கால்களின் சக்தியே அடங்கிவிட்டது. அவள் இதயம் மிகமிக வேகமாகத் துடித்தது சர்வமங்கலை மிகவும் கஷ்டப்பட்டு சுதாரித்துக் கொண்டு ஒரு கம்பத்தை ஒட்டியவாறு நின்றாள்.

அதற்குள் நீராடிவிட்டு நிஜகுண அரசர் அங்கு வந்தார். உணவுத் தட்டைத் தொலைவிலே வைத்துக் கொண்டு, சினத்துடன் புறப்பட்டுக் கொண்டிருந்த ஜங்கமனைக் கண்டு வியப்பு ஏற்பட்டது.

"என்ன ஸ்வாமி? ஏதாவது அபசாரம் நடந்து விட்டதா?"

"அபசாரமா? பொறுத்துக் கொள்ள வியலாத அபசாரம் பசியுடன் வந்த ஜங்கமனுக்கு ஊசிப்போன அன்னம் அளித்து உபசாரம்!"

ஜங்கமனின் குத்திப் பேசும் பேச்சு, புறக்கணிக்கும் பார்வை என்னும் இவை நிஜகுணரைத் தைத்தன. அவருடைய மனம் ஆவேசமடைந்தது. துயரமடைந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



"என்ன? பசியுடன் வந்த ஜங்கமனுக்கு ஊசிப் போன அன்னமோ? யார் அளித்தது? கூறுங்கள். அவருக்கு இப்பொழுதே தண்டனை விதிக்கிறேன்" என்று அவர் முழங்கினார். அப்பொழுது மங்கலையின் இதயத்துடிப்பே அடங்கியதைப் போல ஆயிற்று.

"பேரரசே! யாருக்கு தண்டனை விதிப்பாய்? உன் அரசிக்குத் தண்டனை விதிப்பாயா" என்று ஜங்கமன் உரக்கச் சிரித்தான்.

"என்ன? ஊசிப்போன அன்னத்தை அரசியா அளித்தாள்?"

"என்னுடைய சர்வமங்கலையா அளித்தாள்? என் செவி என்ன கேட்டுக் கொண்டிருக்கிறது? தேவி, அதை நீயே அளித்தாயா? உனக்கு ஏன் இன்று இத்தகைய கெட்ட புத்தி? உண்மையைக் கூறுவாய் தேவி."

ஜங்கமனின் பேச்சை நம்ப இயலாதவராக அரசி இருந்த பக்கமாகத் திரும்பி அரசர் கேட்டார்.

மங்கலைக்குத் தன்னுடைய கனவு நினைவிற்கு வந்தது. இந்த நிகழ்ச்சி அதைப் போன்றே உள்ளது. ஜங்கமன் தன்னுடைய மன மகிழ்ச்சி அனைத்தையும் கறந்து விடுவான் என்னும் கற்பனையால் அச்சமடைந்த அவளுடைய வாயானது அடங்கி பேசும் சக்தியையே இழந்து விட்டதைப் போலத் தோன்றியது. தன் கணவர் கேட்ட கேள்வியால் முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள், அந்தப் பார்வையில் ஊமையின் தீனம் இருந்தது. நிஜகுணரின் பார்வையில் இருந்த சினத்தைக் கண்டு அவள் தலை குனிந்தது. உதடுகள் நடுங்கின. நடந்த நிகழ்ச்சி குறித்து விவரிப்பது கஷ்டம் என்று தோன்றினாலும், நடக்க இருக்கும் நிகழ்வானது மிகவும் தெளிவாகத் தெரிவதைப் போலத் தோன்றியது. இப்பொழுது அவள் நேற்றைய கனவு, இன்றைய நனவு - என்னும் இவற்றைக் காணும் அறிவு, உணர்வுள்ள சாட்சியாக மட்டும் விளங்கினாள்.

ஜங்கமன் மேடையை விட்டு இறங்கிப் புறப்பட்டவாறு பேரரசே! விழிப்புடன் இருப்பாய் உனக்கு மீண்டும் மீண்டும் அனுபவித்ததையே அனுபவித்துக் கொண்டு, பழைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


வாழ்க்கையே சுவையானதாகத் தெரிகிறது. ம், அஞ்ஞானம் சூழ்ந்துள்ளது. உனக்கு அமுதம் வேண்டும் என்றால், இங்கிருந்து வடக்குத் திசையிலுள்ள காட்டிற்கு வா. அங்கு என்றுமே பழையதாக வியலாத, எப்பொழுதுமே புதிதாக இருக்கும் அமுதம் கிடைக்கும். ஓம் சம்புலிங்கமே! ஓம் சம்புலிங்கமே! என்று கூறியவாறு தடதடவென்று நடந்து சென்று விட்டான். ஜங்கமனின் பின்னாலேயே சென்ற நிஜகுணர் மந்திரத்திற்கு ஆட்பட்டவரைப் போல முற்றத்திலேயே நின்று விட்டார்.

இந்த விசித்திரமான நிகழ்ச்சியைக் கண்ட பரிவாரத்தினர், சமையல்காரர்கள் அனைவரும் ''பேரரசி ஊசிப்போன அன்னத்தை அளித்ததால் ஜங்கமன் சினத்துடன் சென்று விட்டான்'' என்று வகைவகையாகத் தங்களுக்குத் தெரிந்ததைப் போலப் பேசிக் கொண்டனர். சர்வ மங்கலையின் மனம் - அறிவு எல்லாம் அவள் வசம் இருக்கவில்லை. அவள் தனிமையை விரும்பி மேல் உப்பரிகையின் படியில் ஏறத் தொடங்கினாள். காலை எடுத்துவைப்பதற்கும் இயலவில்லை தலை சுற்றி, கண்கள் இருண்டன. அவளிடமிருந்த சக்தி, ஆற்றல் எல்லாம் அடங்க தொப்பென்று மேலிருந்து விழுந்து விட்டாள். பணிப்பெண்கள் ஓடிவந்து அரசியைத் தூக்கிக் கொண்டனர். கல்லாலான நிலைப்படியில் அவள் தலை பலமாக மோதி ஆழமான காயம் ஏற்பட்டு ரத்தம் பெருக்கெடுக்கத் தொடங்கியது. பணிப்பெண் ஒருத்தி தன் புடவையைக் கிழித்துத் தலையிலே அழுத்தமாகச் சுற்றினாள். சிலர் பேரரசரிடம் இந்தச் செய்தியைக் கூறுவதற்கு ஓடினர், சிலர் அரச வைத்தியரை அழைத்துக் கொண்டு வருவதற்குச் சென்றனர்.

சர்வமங்கலை உணர்விழந்திருந்தாள். அரச வைத்தியர் கவனித்துச் சில மாத்திரைகளை அளித்து விழிப்பதற்காகக் காத்துக் கொண்டு இருந்தார். உடனடியாக உணர்வு திரும்பாததால் இனி என்ன நடக்குமோ என்று அனைவரும் பயப்பட்டுக் கொண்டிருந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உணர்விழந்திருந்த மனைவியின் உடலைத் தூக்கிக் கொண்டு எழுந்து நின்றார் நிஜகுணர். அனைவரையும் ஒரு முறை பார்த்து "யாரும் மேலே வரவேண்டாம்" என்று ஆணையிட்டுவிட்டு உப்பரிகையின் படிகளிலே ஏறத் தொடங்கினார் அரச வைத்தியர்.

"பேரரசே, இ...இ ... இந்த மாத்திரை "என்று திக்கினார்.

"அது எதுவும் வேண்டாம். நீங்கள் அனைவரும் இங்கிருந்து கிளம்பிச் செல்லுங்கள். அம்மா அவர்களுக்கு இந்தச் செய்தியானது போகாத வண்ணம் எச்சரிக்கையுடன் இருங்கள்" என்று கூறி மனைவியை மலரை எடுத்துக் கொண்டு செல்வதைப் போல எடுத்துக் கொண்டு மேலே சென்றார்.

நீண்ட பன்னிரெண்டு மணி நேரத்திற்குப் பிறகு விழிப்பு அடைந்த மங்கலை, தான் கணவரின் தொடையின் மீது இருப்பதைக் கண்டாள். நடந்த நிகழ்ச்சியானது மீண்டும் அவள்கண் முன் சுழன்றபொழுது அவளுடைய கண்ணீர் நிஜகுணரின் மீது பட்டது. அதைத் துடைத்த நிஜகுணர், மனைவியின் முகத்தைத் தன் கையால் பிடித்துக் கொண்டு. "தேவி, விழிப்படைவாய் எங்கே கண்ணைத் திறவாய், இதோ, நான் உன்னுடைய பிரபு" என்று வகைவகையாக அங்கலாய்த்தார்.

"பயப்படவேண்டாம், மங்கலா, உன்னை விட்டுவிட்டு நான் எங்கும் செல்ல மாட்டேன். எங்கே, கண்ணைத்திற" என்று தைரியம் அளிப்பதற்கு முயற்சி செய்தார்.

மங்கலாதேவி மெல்லக் கண்களைத் திறந்தாள். கண்களிலே களை இல்லை" மங்கலையின் முகம் வலியினால் மாற்றம் அடையத் தொடங்கியது.

"பிர..பு, நீர் ... விப...ரீதம் ... கஷ்டம்." அவள் தவித்துக் கொண்டிருந்தாள். அரசர் மெதுவாக நீர் அருந்தச் செய்தபொழுது, அவள் கணவரைப் பார்த்து விக்கத் தொடங்கினாள்..

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"அரசே! என்...னை மன்...னியுங்...கள்,
வேண்...டாம், வேண்...டாம், தண்...ட...னை
அளி... யுங்...கள், உங்...களு...க்கு அப...சாரம் ...
செய்து ... விட்...டேன், உங்க...ளுடைய புனித... மான ...
வாழ்...விற்குக் கள...ங்க...த்தை ஏற்...படு...த்தி
விட்...டேன்."

என்று பேசிக் கொண்டிருந்த பொழுதே அவளுடைய நாக்கானது உட்பக்கமாக இழுத்துக் கொள்ளத் தொடங்கியது. "தேவி, அப்படி எல்லாம் பேசி சோர்வடைய வேண்டாம்.

இப்பொழுது உனக்கு அமைதி தேவை"

மங்கலை மெதுவாகச் சிரித்தாள்.

"அர...சே! ஒரே... ஒரு... கணம், என்...னைத் தடு...க்க வேண்...டாம்."

விக்கல் அதிகமாயிற்று. "அதிக... நேரம்... இல்லை.
அ...ஹூ ... காலை ... யில் ஒரு ... சொல் கூறி... னேன்
உங்க...ளுடன் நீ... ண்ட நே...ரம் இரு...க்க
வேண்டு...மென்று. ஆ...னால் அந்த விருப்...பம்,
இந்த விதத்...தில் ஈடேறி...யது. பிறகு நீங்...கள்
எங்...கேயோ கிளம்...பு...கிறேன் என்...று
கூறி...னீர்...கள். அத...ற்கு இப்...பொழுது கூறு...கிறேன்
இப்...பொழுது புறப்...பட்டு...விட்...டேன் என்...று
அந்த... எல்லா ... நீங்...கள் எழு...திய சமய...த்தில்
ஜாக்...கிரதை. அது ... தான் ... நான். நான் அவற்...றில்
இருக்...கிறேன். ஸ்வாமி, ஊசிப் .... போனதை
அளித்த... வருக்கு தண்...டனை என்...றீர்...கள்.
அதை... அளி...ப்ப...தற்கு உங்க...ளால் இயல...வில்லை.
"தேவி, இப்பொழுது அமைதியாக இருப்பாய்"
நிஜகுணர் மிகவும் வேதனையுடன் கூறினார்.
"இன்...னும் ... ஒரு... நிமி...டத்...தில்
அமைதி...யாக ஆகி... விடு... வேன். அரசே அத...னால் சம்பு... லிங்கமே,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என...க்கு மரண... தண்...டனையை அளி...த்து உங்க...ளுடைய

சொல்...லைக் காப்...பாற்...றுவான். ஆ... பிர...பு, நீங்...கள் மகிழ்ச்...சியாக

இரு...க்க வேண்...டும். நீங்...கள், என்...னுடைய

''நினை...வினால் துய...ரப் பட்...டால் பொறுத்...துக் கொள்ள...விய...லாது.

என்...னை ... மற...ந்து விடுங்...கள். நீங்...கள் ... தான் ... நான்.

உங்க...ளுடைய ஞான...மானது சாத...கர் களுக்...குக் கைவிளக்...காக

விள...ங்க வேண்டும்.

பிர...பு, என்...னுடைய ஸ்வா...மியே, எங்கே, நான்...

நமஸ்...காரம் செய்ய வேண்...டும், என்... அரசே...

கணவரின் பாதங்களை வணங்க முயற்சி செய்தாள், அரசருடைய குடலே அறுபட்டதைப் போல இருந்தது. அவர் தம்முடைய பாதங்களை மங்கலையின் மங்கலமான குங்குமம் நிறைந்த நெற்றியின் மீது படுமாறு வைத்தார்.

''நான்...வரு...கி...றேன் அ...ர...சே''

அவளுடைய வாயிலிருந்து இறுதிச்சொல் வெளிப்பட்டது.

கணவரின் பாதங்களிலே தலையை வைத்தாள். கணவரின் திருவடிகளிலேயே அவளுடைய உயிர்ப்பறவை அடங்கியது. அவளுடைய ஆன்மா நிஜகுணருடன் இணைந்தது.

மனைவி சர்வமங்கலையின் முடிவைக் கண்ட நிஜகுணரின் இதயம் மிகவும் வேதனை அடைந்தது. சில நிமிடங்களுக்கு அவர் அந்த வேதனையால் கடகட வென்று நடுங்கினார்.

அந்த மகாபுருஷரின் மஹாத்மாவின் வேதனையின் வெப்பத்தால் தாக்கப்பட்ட பூமிதேவியும் நடுங்கினாள். அவள் நடுங்கிய வேகத்தால் மலை, காடு, கோயில், மேடு-பள்ளம், வீடு-மடம், செடி-கொடி, அரண்மனை, குருமனை, யானைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொட்டில், பசுக்கொட்டில் என்னும் இவ்வனைத்துமே அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்குமாக ஆடின. காக்கைகளும், ஆந்தைகளும் விகாரமாக ஓலமிட்டன. உறங்கிக் கொண்டிருந்த மக்கள் விழித்தெழுந்து கலவரத்துடன் வெளியிலே ஓடி வந்தனர். சிலர் பேரரசரைக் காப்பாற்றும் பொருட்டு மேலே ஓடினர்.

மனைவி, இறைவனுடன் இணைந்த நிலையைக் கண்ட, எதிர்பாராத இந்த நிகழ்வைக் கண்ட நிஜகுணரின் இதயத்தில் அடி விழுந்தது. அவர் பித்துப் பிடித்தவரைப் போல மனைவியையே அசையாமல் பார்த்துக் கொண்டு இருந்தார். தன்னுடைய அன்பிற்கு உரிய மனைவியின் அந்த முகத்தையே உற்றுப் பார்த்தார். தொட்டுத் தொட்டுப் பார்த்தார். தட்டிப்பார்த்தார். மார்பிலே அணைத்துக் கொண்டு பார்த்தார். முத்தமிட்டார்.

வெண்ணிறப்புடவை, வெண்ணிற ரவிக்கையில் நெற்றி நிறைந்த குங்குமப் பொட்டுடன், கழுத்திலே ஒளிர்ந்து கொண்டிருக்கும் மாங்கல்யத்துடன். சூட்டிக் கொண்டிருந்த மல்லிகை மலருடன் ஒளிர்ந்து கொண்டிருந்த சர்வமங்கலையைத் தம்முடைய சௌபாக்கியவதியை சுமங்கலி சாவித்திரியைப் பார்த்து கொண்டே இருந்தார். அவர் ஊமையானார். அவர் கண்களிலிருந்து ஒரு சொட்டு நீர் கூடச் சிந்தவில்லை. இதயத்தில் ஏற்பட்ட அச்சமானது விவேகத்தின் சமநிலைக்கு வழி வகுத்தது.

மேலே வந்த பணியாட்கள் அரசருடைய அந்த நிலையைக் கண்டு, அரசியின் மரணத்தைக் கண்டு அஞ்சி கீழே சென்று அழத் தொடங்கினர். அரச பரிவாரமும், பணியாட்களின் பரிவாரமும் மேலே ஓடினர்.

நிஜகுணர் மனைவியைத் தூக்கிக் கொண்டு எழுந்து நின்றார். ஒருமுறை மார்புடன் இறுக்கமாக அணைத்துக் கொண்டார். இறுதியாக ஒருமுறை முத்தமிட்டு அந்த அழகிய மண்டபத்தின் பக்கமாக நடந்தார்.

மிகவும் மெதுவாக மனைவி மங்கலையை அந்த பிரணவபீடத்தின் மீது இருத்தினார். தம்முடைய தேவியின் இறந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உடலுடன் அவருடைய எல்லா ஆசைகள் விருப்பங்களையும், போகங்கள் - பாக்கியங்களையும் படுக்க வைத்துவிட்டு, இறுதியாக மனைவியைக் கண் நிறைந்து பார்த்து இதயத்திலே நிறைத்துக் கொண்டார்.

அதிகாலை நேரத்திலே சர்வமங்கலை தொடுத்து வைத்திருந்த, அவளுடைய அன்பிற்குப் பாத்திரமான அவளுடைய உயிர்வடிவமான, அவளே ஆன, அவருடைய நூல்களின் கட்டை எடுத்துக் கொண்டு, துயில் கொள்ளும் அறையிலே நிறைந்திருந்த அந்தப் பரிவாரத்திடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அந்த ஜங்கமன் கூறிய வடதிசையை நோக்கி நடந்தார். அரண்மனையைத் துறந்து, ஞானத்தின் இருப்பிடத்தை நோக்கி நிஜகுணர் நடந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


## பகுதி - 2

பூமியிலுள்ள வெயில் அனைத்தும் ஒன்று சேர்ந்து நிஜகுணரைப் பின்தொடர்ந்து வருவதைப் போல இருந்தது. வெயிலின் வெப்பத்தால் அவருடைய வெண்மையான முகமானது செவ்வண்ணமாக மாறி இருந்தது. காய்ந்துபோன நிலத்தைத் தொட்டுக் கொண்டு இருந்ததால் சர்வமங்கலைக்கு உயிராகவே ஆகியிருந்த அவருடைய புனிதமான பாதங்கள் ரத்தத்திலே தோய்த்து எடுத்ததைப் போல இருந்தன. மகுடத்தால் ஒளிர்ந்து கொண்டிருந்த, குடை, சாமரங்களால் தண்மையான நிழலிலிருந்த அவருடைய தலைப்பகுதியானது சூரியனின் வெப்பம் மிகுந்த கிரணங்களின் மகுடத்தைத் தரித்தவாறு சுமையினால் கீழே குனிந்திருந்தது.

சர்வமங்கலை நேற்று தொகுத்து வைத்திருந்த பாடல்களின் தொகுப்புக்கள் சேர்ந்த கட்டை தோளின் மீது சுமந்து கொண்டிருந்தார். குதிரையின் மீதோ, தேரின் மீதோ, சிவிகையில் அமர்ந்து கொண்டோ வெளியிலே சென்று கொண்டிருந்த பேரரசர் நிஜகுணர் வெறும் காலினால் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு, வழியின் இடது-வலது பக்கங்களிலிருந்த செடிகளும் மரங்களும் கூடத் தங்களுடைய வேதனையைச் சலசலத்தவாறு வெளிப்படுத்தின. நீண்ட பெருமூச்சு விட்டவாறு "ஓம் சம்புலிங்கா, ஓம் சம்புலிங்கா" என்று கூறியவாறு மனைவியை இழந்த நிஜகுணர் முன்னால் சென்று கொண்டிருந்தார். அரண்மனை, தலைநகரை விட்டு அவர் இப்பொழுது வெகுதொலைவு வந்திருந்தார். நேற்றைய முன்தினம் சர்வமங்கலையுடன் உண்டதுதான். அதுதான் இறுதியான உணவு. முதல் நாளும் உண்ணவில்லை. வெயிலின் வெப்பம், பசித்தொல்லை, இதயத்து அரசியை இழந்த இதயம்! வேதனை-அகத்திலும், புறத்திலும் தாபத்தின் வேதனை. இருப்பினும் அந்த அனைத்தையும் விழுங்கி, ஆலகால விஷத்தையே குடித்த நீலகண்டரைப் போல ஆழ்ந்த மௌனம், அந்த மௌனத்திலேயே படம் விரித்து, கடந்த காலத்திய நினைவானது நின்று கொண்டிருந்தது.

ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு சுவாசத்திலும் ஒவ்வொரு கணத்திலும் சர்வமங்கலையின் நினைவு அவரைப் பின் தொடர்ந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



கொண்டிருந்தது. வாழ்க்கைத் துணைவியாக, ஆன்மீகத்தில் உறுதுணையாக, அரசியாக மெச்சத்தக்கவளாகி, முன்மாதிரியான மனைவியாகப் புண்ணியத்திரளாக, உயிரின் உயிராக ஆன்மவடிவினளாக பிறவிப்பயனை அடைந்த சர்வமங்கலையின் நினைவிலேயே மூழ்கியவாறு நடந்து கொண்டிருந்தார்.

நேற்றுதான் சர்வமங்கலையை இழந்திருந்தார். அவளுடன் இருந்த சுவைமிகுந்த நிமிடங்கள், ஆன்மீகம் குறித்து அறிந்து கொள்ளும் விருப்பம், அதைப் பரிசீலனை செய்த நேரங்கள் என்னும் இவையெல்லாம் இன்னும் பசுமையாக உள்ளன. ஆனால் அவருடைய இதயமானது வறிதாகிவிட்டது. ஏதோ வெறுமை, ஏதோ குழப்பம், கூறவியலாத அனுபவமிக்க கஷ்டமான கலக்கம்!

சர்வமங்கலையின் நினைவாகவே இருந்ததால் நிஜகுணருக்கு நடந்து சென்ற வழியைக் குறித்த தெளிவு இல்லை. பசி-தாகங்களைக் குறித்த கவனமே இல்லை. தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தார். அவளுடைய கைவளையல்களின் சுநாத ஒலி, காற்சலங்கைகளின் இன்னொலியானது கேட்பதைப் போலத் திரும்பிப் பார்ப்பார். எதுவும் புலப்படாமல் மீண்டும் தொடர்ந்து நடப்பார். பறவைகளின் இன்னொலியைக் கேட்டு சர்வமங்கலையே ''பிரபு'' என்று கூறுவதைப் போல எண்ணி நின்று கேட்பார். தென்றல் காற்று சுழன்று சுழன்று வெயிலைச் சூழ்ந்து கொண்டு 'சுய்'யென்று வீசி அவரைத் தொடும் பொழுது, மங்கலையே வந்து தழுவிக் கொண்டாளோ என்று அஞ்சி வீழ்வார். கல்லும், முள்ளும் பாதங்களிலே படும்பொழுது அவளே வந்து பாதத்தைத் தொடுகிறாளோ என்று குனிந்து பார்ப்பார். தோளின் மீது சுமந்திருந்த புத்தகக் கட்டு இதமாக இருந்தது. அந்தக்கட்டே அவள்தானோ என்று எண்ணி மெதுவாக மார்பின் மீது அழுத்திக் கொள்வார். இவ்விதத்தில் அவருடைய கண்களில், இதயத்தில், அகத்தில்-புறத்தில், அங்கு-இங்கு என்று எல்லா இடங்களிலும் மங்கலையே நிறைந்து, மங்கலையே தென்பட்டுக் கொண்டிருந்தாள்.

மனைவியின் நல்ல இயல்பு, நல்ல நெறிமுறை, நல்ல எண்ணங்கள், நல்ல விருப்பங்கள் கணவர்மீது வைத்திருந்த பக்தி-பதிவிரதைத்தன்மை என்னும் இவை நிஜகுணரின் மனத்தின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஆழத்திலிருந்து மேலெழும்பிக் கொண்டிருந்தன. அவரால் அவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்க இயலவில்லை. தனக்கு அடிப்படை ஆதாரமாக இருந்த மனைவியை இழந்துவிட்ட அவருக்கு அவ்வனைத்துமே அவரிடம் மனைவியைக் குறித்து முறையிட்டுக் கொண்டிருந்ததைப் போல, ஒன்றன்பின் ஒன்றாக முந்திக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்தன.

நிஜகுணரின் நினைவானது பின்னோக்கிச் சென்றது. அவள் அவருடைய கேள்விகளுக்குச் சரியான விடைகளை அளித்தது, ஆன்மீகம், இலக்கியம் சார்ந்த விஷயங்களில் அவளுக்கு இருந்த ஆர்வம், தாங்கள் விரும்பித் திருமணம் செய்து கொண்டது, அதன்பின் நிகழ்ந்த இனிய அனுபவங்கள் ஒன்றா இரண்டா? இடைவிடாமல் தொடர்ந்து, ஒன்றன்பின் ஒன்றாக நினைவுகள் மேலெழுந்து கொண்டிருந்தன. அத்துடன் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியும் சுழன்றது.

தம்முடைய பாடல்களை நாள்தோறும் படிப்பதற்கு ஏற்பாடு செய்தது. சம்புலிங்கனின் சன்னிதியில் நடந்த தேவையற்ற விஷயங்கள் அதனால் அவள் அஞ்சியது. இரவு நேரத்திலே கண்ட பயங்கரமான கனவு...

"ஐயோ, என்தேவி சென்றே விட்டாள். ஒரு நிமிடம் கூட அகலவிரும்பாத மங்கலை என்றென்றுமே இல்லாமல் சென்றுவிட்டாள். இல்லை, இல்லை அவள் எங்கும் செல்லவில்லை. அப்படியானால் என் தேவிக்கு நான் அவளுடைய ஜீவன்முக்தி நிலைக்கு துரோகம் இழைத்ததைப் போல ஆகும். அவள் ஓரிடத்தில் இருந்து, மற்றொரு இடத்தில் இல்லாமல் இருந்தால் தானே போவது, வருவது எல்லாம்? எல்லா இடங்களிலும் அவள் நிறைந்து இருக்கும்பொழுது எங்கு செல்வது? என் தேவி எங்கும் செல்லவில்லை. நான்தான் அவள், என்னிடமுள்ள தூய்மையான மனமே அவள். சிறந்த ஞானவடிவினளான மங்கலையை இறுதிவரையில் பத்திரமாக வைத்துக் கொண்டு, துரீயத்திற்கு அப்பாற்பட்ட நிலையிலே நானும், அவளும் சேர்ந்தே ஒருங்கிணைந்திருந்தோம். இப்பொழுது என்தேவி இறக்கவில்லை. அவள் பிறந்திருந்தால் தானே இறக்கவியலும்? பிறப்பு-இறப்பிற்கு அப்பாற்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இன்ப-துன்பங்களுக்கு அப்பாற்பட்ட என்தேவிக்கு மரணம் என்பது இல்லை. அவள் அழிவற்றவள்.

''தேவி, என் தேவியே! அரசமோகத்திலே சிக்கிக் கொண்டு துன்புற்றுக் கொண்டுள்ள என்னை, உன்னுடைய பரு உடலைப்பலி கொடுத்து என்னை முக்தனாக்கினாய். என்னுடைய ஒவ்வொரு அணுவிலும், ஒவ்வொரு சுவாசத்திலும் நீயே நிறைந்துள்ளாய் தேவி! சர்வமங்கலா! உன் வாழ்க்கையின் உயிர்நாடியான, உன் உயிரான, ''பரமானுபோதை''யை (என்னும் நூலை) முழுவதுமாக முடித்து உன்னை நிறைவறையும்படிச் செய்வேன். போதும் போதும் இன்னும் கடந்த காலத்திய நினைவு வேண்டாம். நீ என்னிடம் இல்லை என்றால்தானே உன்னை நினைக்க வேண்டும்? நானே நீயாக இருக்கும் பொழுது நினைவு எதற்கு? வேண்டாம். நான் இப்பொழுது மறுபிறவி எடுத்துள்ளேன். பழைய நினைவுகள் போதும். அவை மீண்டும் வராமல் இருக்குமாறு துகைத்து ஆழத்திலே தள்ளிவிட்டு விடுவேன் ''என்று தமக்குத் தாமே கூறிக்கொண்டு நிஜகுணர் மாமரத்தின் கீழே நின்று ஒருமுறை பலமாகத் தலையை உதறினார். மாமரத்தின் சின்னஞ்சிறிய பூக்கள் நிஜகுணரின் மீது சொரிந்தன. மாமரத்தின் அடியிலே பொருத்தமாக அமர்ந்து கொண்டார். சிறிது நேரத்திற்கு ஓய்வு எடுத்துக் கொண்டார். மனதிற்கு ஓரளவிற்கு இதமாக இருந்தது. கண்களை மூடியவாறு சிறிது நேரத்திற்கு அமர்ந்திருந்து பிறகு தாமாகவே பாடத் தொடங்கினார்.

''பயனற்ற 'நான்' என்பதை முற்றிலும் துறக்க வேண்டும் ।
கெடுக்கும் காமத்தைக் கண்டயோகி
நல்லியல்புள தலைமுறையை, வேதநிகமவிதியை ।
மிகுந்த தவத்தை தனக்கு வரும் சித்திகளை ॥
உலகின் மேன்மையை, ஒளிரும் உடலை ।
இவ்வகையில் காமமே உருக்குலைக்குமால் ॥ (1)

மேலான அன்பை, அரசரின் நன்மதிப்பை ।
உயர்ந்தோர்பயபக்தியை, உலகத்தவரின் ॥
சிறந்த வந்தனையையும், தன்னுருவ ஒளிர்வையும் ।
வேதனையை நல்கும் காமமே அழித்து விடுவதால் ॥(2)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தனக்கினி கிடைக்கவுள்ள முனி, தேவ, கணபதத்தையும் ।
உருத்திரேசுவர, சதாஸிவன் குறித்த எண்ணத்தையும் ॥
மேலான சம்புலிங்கம் அளிக்கும் முக்தி இன்பமும் ।
இக்காமத்தை அகற்றுவதால் ஏற்படும் ॥'' (3)

பாடுவதை நிறுத்திவிட்டு அவர் கண்களைத் திறந்த பொழுது, எதிரிலே கண்ட காட்சியால் வியப்படைந்தார். விசுவநாதன், நிஜகுணர் பாடிக் கொண்டிருந்ததை எழுதிக் கொண்டிருந்தான்.

''விசுவநாதா! நீ இங்கு எப்பொழுது வந்தாய்?''

''உங்கள் பின்னாலேயே வந்து கொண்டிருந்தேன் அரசே''

''என் பின்னாலேயே வந்தாயா? பார்க்கவே இல்லையே. சரி, நீ எதற்காக வந்தாய்?''

''நீங்கள் இருக்கும் இடத்திலேயே நானும் இருப்பேன். உங்களுக்குத் தொண்டாற்றி என் வாழ்க்கையைப் பயனுடையதாகச் செய்து கொள்கிறேன்''.

''என்னைப் பின்பற்றுவது என்றால் தொடர்ந்து கஷ்டத்தையே பின்பற்றுவதைப் போல என்பது உனக்குத் தெரியாதா? மற்றொரு முறை ஆலோசிப்பாய் விசுவநாதா''.

''நான் உலகியல் இன்பங்களைத் தேடிக் கொண்டு உங்களிடம் வரவில்லை. அரசே, எப்பொழுதும் நிலை பெற்று விளங்கும் பேரின்பத்திற்காக உங்களிடம் தஞ்சம் அடைந்துள்ளேன். அதற்கு வாய்ப்பு அளியுங்கள் மறுக்க வேண்டாம் அரசே'' என்று விசுவநாதன் வேண்டிக் கொண்டான்.

''அப்படியானால் உன் விருப்பம். எப்படியோ, நான் பாடிய பாடல் காற்றோடு காற்றாகப் போய்விடாமல் நீ கவனத்துடன் இருந்திருக்கிறாய்''.

''ஆம் பேரரசே. அதுதான் இனிமேல் என் வாழ்க்கையின் பயனுள்ள சேவையாகும்''.

''விசுவநாதா! என்ன கூறினாய் பேரரசர் என்றா''? என்று அவர் கம்பீரமாகச் சிரித்து, மீண்டும் தொடர்ந்து பேசினார். ''நான் எந்த ஊரின் பேரரசன்? நீ எந்த ஊரின் குடிமகன் விசுவநாதா!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இனிமேல் அந்தப் பெயர் எனக்குப் பொருந்தாது. அவ்வனைத்தையும் மறந்து விடு. இப்பொழுது நாம் இருவரும் இந்தப் புதிய வழியில் நண்பர்கள். அவ்வளவுதான்''.

விசுவநாதன் எதைஎதையோ யோசித்தபடி அப்படியே உட்கார்ந்து கொண்டு விட்டான். நிஜகுணர் மேலே எழுந்தவாறு, ''விசுவநாதா, இனி புறப்படலாமா?'' என்று கேட்டார்.

''இல்லை அரசே. இப்பொழுது நீண்ட நேரம் ஆகி விட்டது. அதற்கும் மேலாக ஒரே நாளிலே நீண்ட தொலைவு வந்திருக்கிறீர்கள். உணவு உட்கொண்டு விட்டு அதன் பிறகு போகலாம்'' என்று விசுவநாதன் விண்ணப்பித்துக் கொண்டான்.

''உணவா''?

''அரண்மனையிலிருந்து கிளம்பும்பொழுது இதோ இந்தச் சிற்றுண்டியைக் கொண்டு வந்தேன். இது அரண்மனையின் கடைசி உணவின் கடனாகும். இதை முடித்து விடலாம்.

''அப்படியானால் கிளம்பு. ஆனால் தண்ணீர் அருகில் இருக்கிறதா இல்லையா?

''பொறுங்கள், நான் பார்த்துக் கொண்டு வருகிறேன்.''

விசுவநாதன் சிறிது தொலைவில் தென்பட்ட ஈச்ச மர வரிசைகளினருகில் நடந்து சென்றான். அங்கு தண்ணீர் இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து திரும்பிவந்து நிஜகுணருடன் உணவு அருந்துவதற்கு ஆயத்தமானான்.

உணவு உண்டு சில நிமிடங்கள் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு அவர் மீண்டும் நடக்கத் தொடங்கினார். முன்னால் நிஜகுணர் சென்றார். பின்னால் விசுவநாதன் சென்றான். அவர்களிடையில் முதல்நாள் அரண்மனையில் நடந்த விஷயங்கள் குறித்த எத்தகைய உரையாடல்களும் நடைபெறவில்லை. ஆன்மீகம் சார்ந்த விஷயத்தையே பேசினார்.

மாலைவேளை வந்தது. அவர்கள் ஒரு கிராமத்திற்கு வந்திருந்தனர். ஊரின் வெளியே அரசமரம் இருந்தது. அதைச் சுற்றி அகன்ற கட்டை இருந்தது. இருவரும் சிறிது களைப்பை அகற்றிக் கொள்வதற்கு அக்கட்டையின் மீது அமர்ந்தனர். அப்பொழுது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அங்கு ஒரு முதியவர் வந்து, இவர்கள் இருவரையும் உற்றுப்பார்த்துவிட்டு "எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அந்த அறிமுகமற்ற முதியவரைப் பார்த்து விசுவநாதன் சட்டென்று ஆலோசிக்காமல் "காளிபுரத்திலிருந்து வந்து இருக்கிறோம்" என்று கூறிவிட்டான். அந்த முதியவர் ஆர்வத்துடன் "அப்படியானால் நீங்கள் அரசர் நிஜகுணரின் நாட்டைச் சேர்ந்தவர்களா? தொந்தரவு இல்லை. நீங்கள் புண்ணியசாலிகள். பேரரசர் நிஜகுணர் ஈஸ்வரனின் அவதாரம் என்பதும், மிகவும் நல்ல அரசர் என்பதும், இந்தப் பக்கத்திலுள்ள மக்களின் நம்பிக்கையாகும். ஆனால் இப்பொழுது ஒரு செய்தி வந்துள்ளது" என்று கூறுவதா வேண்டாமா என்று அந்த முதியவர் சந்தேகம் கொண்டார்.

நிஜகுணர் மிகவும் உற்சாகத்துடன், "தாத்தா கூறுங்கள், என்ன செய்தி வந்தது?" என்று கேட்டார்.

"இது உண்மையோ, பொய்யோ ஸ்வாமி, பேரரசர் நிஜகுணரின் மனைவி, ஜங்கமனுக்கு ஊசிப்போன அன்னத்தை அளித்தாளாம். அதற்காக நிஜகுணர் வைராக்கியத்துடன் நாட்டைத் தியாகம் செய்துவிட்டு எங்கோ சென்றுவிட்டாராம். உண்மையா? நீங்களும் அங்கிருந்துதானே வருகிறீர்கள்? எனவே உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் அல்லவா?" என்று அந்த முதியவர் ஆர்வத்துடன் கேட்டார்.

முதியவரின் பேச்சைக் கேட்டு நிஜகுணருக்கு வயிற்றிலே வேதனை ஏற்பட்டது. அவர் முகமானது வலியால் வாடியது. புருவங்கள் நெறிந்தன. அதைக் கவனிக்காத அந்த முதியவர் மேலும் மேலும் தொடர்ந்து பேசிக் கொண்டே சென்றார்.

"பிறகு, நிஜகுணரின் மனைவி, நிஜகுணர் நடைமுறைப்படுத்திய ஜங்கமர்களின் விருந்தோம்பலிற்கு அனுகூலமாக இல்லாமல் இருந்ததால் வேண்டுமென்றே ஊசிப்போன அன்னத்தை ஜங்கமனுக்கு அளித்தாளாம். மேலும் அவருடைய மனைவி..."

முதியவர் பேசிக் கொண்டு இருந்தபொழுதே நிஜகுணர் தடுத்து "போதும் போதும், இனிமேல் எதுவும் கூற வேண்டாம்" என்று நொந்து போய்க் கூறினார். முதியவர் வியப்புற்று,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



"அப்படியானால் அந்தச் செய்தி பொய்யானதா?" என்று கேட்டார்.

"பொய், பொய் எல்லாமே பொய்" என்று சினத்துடன் நிஜகுணர் அழுத்தந்திருத்தமாகக் கூறினார். இதற்கு மேலும் விசுவநாதன் பொறுக்கவியலாமல்

"தாத்தா, இவர் யாரென்று தெரியுமா? இவர்தான் பேரரசர் நிஜகுணர்" என்று கூறி விட்டான்.

முதியவர் அஞ்சி, நடுங்கி, பாய்ந்து வந்து 'அய்யோ அரசே, வணங்குகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்', என்று கூறியவாறு நிஜகுணரின் திருவடிக் கமலங்களில் வீழ்ந்து வணங்கினார். நிஜகுணர் அவர் கையைப் பிடித்து எழுப்பி, அருகிலே அமர்த்திக் கொண்டு,

"தாத்தா, இதில் மன்னிப்பதற்கு எதுவும் இல்லை. இருப்பினும் மக்கள் எவ்வளவு வேகமாக எந்தெந்த கதைகளைப் புனைந்து விடுகின்றனர்! என்று வேதனையாக உள்ளது. அவ்வளவுதான். நீங்கள் கூறியதைப் போல என் மனைவி ஜங்கமருக்கு விருந்தளிப்பதில் அனுகூலமாக இருக்கவில்லை என்பது முற்றிலும் பொய்யாகும். என்னுடைய புண்ணியமே உருக்கொண்டு வந்தது போல அவள் எனக்குக் கிடைத்தாள். எல்லா வகைகளிலுமே அவள் எனக்குத் தகுந்தவளாக இருந்தாள். அவள் என்றுமே ஜங்கமர்களுக்கு விருந்து அளிப்பதற்கும் மற்றும் மற்ற செயல்களுக்கும் தடையாக இருந்தது இல்லை."

"என்னுடைய கணவர் செய்யும் செயலிற்கு நான், என்று தடையாக இருப்பேனோ, அபசாரம் செய்வேனோ, அதே கணம் என் உயிர் உன் பாதங்களை அடையட்டும்" என்று அவள் சம்புலிங்கனிடம் நாள்தோறும் வேண்டிக்கொள்வாள். சம்புலிங்கம் அவள் முறையீட்டைக் கேட்டான். அன்றே அவள் முக்தி அடைந்தாள். தாத்தா, என் மனைவி ஜங்கமனுக்கு ஊசிப்போன அன்னத்தை அளிக்கவில்லை. மாயாவியான ஜங்கமனாலேயே சூடாக இருந்த அன்னமே ஊசிப்போய் விட்டது! அந்த ஊசிப்போன அன்னமே என்னுடைய தேவிக்கு விழுங்கவியலாத பிடியாக, அந்த விஷமாக, அவளுடைய மரணத்திற்குக் காரணமாயிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மாயாவி ஜங்கமன் என் மனைவியை மரணத்திடம் அனுப்பிவிட்டு என்னை அமுதத்திடம் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறான்.

"அப்பா, மக்கள் என் தேவியைக் குறித்து இல்லாததையும் பொல்லாததையும் சேர்த்து எத்தகைய கதையைப் புனைந்து விட்டார்கள்! தேவி, ஓ என்னுடைய ஆன்மாவே, என்னுடைய புகழுடன் உனக்கு அவப்புகழ் வந்ததா? களங்கமற்ற மிகவும் தூய்மையான உன்னுடைய வாழ்விற்கு இந்நிகழ்ச்சியால் களங்கமானது ஏற்பட்டு விட்டதா? பதிவிரதையாக வாழ்ந்து வந்த உனக்கு அந்த நிகழ்ச்சி அரக்கியின் வடிவத்தைக் கொடுத்துவிட்டதா? ஜங்கமதுரோகி, கணவனுக்குத் துரோகி, களங்கமுள்ளவள் என்னும் விருதுகளைக் கொடுத்துவிட்டதா? தேவி! என் உயிரே, ஓ என் ஆன்மாவே! உன்னுடைய மரணத்தைவிட, உன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தைக் கேட்டு நான் மிகவும் அடிபட்டிருக்கிறேன்" என்று வேதனை நிறைந்த குரலிலே கலக்கத்துடன் ஏதேதோ பேசிவிட்டார்.

இப்படி மனைவியின் மரணத்திற்காகத் துயரப்படாத அவருடைய பரிபக்குவமான, மனம், மங்கலையின் மீது சுமத்தப்பட்ட குற்றத்தைக் கேட்டுத் துயரம் அடைந்தது, நிஜகுணரின் வாயினாலேயே இந்த துயரத்தைக் குறித்த விசித்திரமான கதையைக் கேட்ட அந்த முதியவர் அழுது விட்டார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீரானது தாரையாகச் சொரிந்து, மனத்தின் துயர் இறங்கியவராக "அரசே, மக்களின் பேச்சை நம்பி, உண்மையை அறியாமல் ஏதேதோ பேசி மிகப்பெரிய தவறு செய்து விட்டேன். உங்கள் மனத்திற்கு வேதனையை ஏற்படுத்திய அந்த நாக்கு ஒழியட்டும், ஒழியட்டும். உங்களுடைய வெப்பமான சுவாசத்தின் சாபம் அவர்களைச் சென்றடையட்டும்" என்று ஆவேசத்துடன் கூறிய அந்த முதியவர், சிறிது அமைதியை அடைந்தபிறகு நிஜகுணரிடம் வேண்டிக் கொள்ளும் குரலில் கூறினார்.

"அரசே, புறப்படுங்கள் அருகிலேயே நம் வீடு உள்ளது. ஏழையின் வீட்டிற்கு எழுந்தருளுங்கள். வீட்டை புனிதமடையச் செய்யுங்கள்".

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர் தொலைவிலிருந்த குயவர்களின் பக்கமாகப் பார்த்தவாறு யாரையோ கூவி அழைத்து அவனுடைய செவியிலே எதையோ கிசுகிசுத்தார். அவன் நிஜகுணரை வணங்கிவிட்டு விரைவாக நடந்து சென்றான்.

அவன் சென்ற சிறிது நேரத்திலேயே மக்கள், கும்பல் கும்பலாக வந்து நிஜகுணரைத் தரிசித்துப் பயன் அடையத் தொடங்கினர். அந்த ஊரின் தலைவனாக இருந்த தேவேந்திர கௌடர், எல்லாச் சிறப்புக்கள், சீர்களுடன் வந்து நிஜகுணரைக் கட்டாயப்படுத்தி வீட்டிற்கு அழைத்துச் சென்று, அன்று அங்கேயே தங்குமாறு வேண்டிக் கொண்டார். அவருடைய அன்பிற்குத் தலைவணங்கிய நிஜகுணர், அந்த ஒரு இரவு அங்கேயே தங்கிவிட்டு, மறுநாள் யாரும் எழுந்திருப்பதற்கு முன்பாகவே அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்தார். இப்பொழுது அவர் நேற்று நடந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்திக் கொண்டு, யார் என்ன கேட்டாலும் இந்த ஊரைச் சேர்ந்தவர், இத்தகையவர் என்று தெரியப்படுத்தாமல் மௌனமாகச் சென்றார். அதே முறையில் நடப்பதற்கு விசுவநாதனுக்கும் கடுமையாகக் கட்டளை இட்டார்.

ஒரே ஒரு நாளிலே, ஒரே ஒரு நிகழ்ச்சியால் தம்முடைய வாழ்க்கையின் திசையே மாறிவிட்டதைக் கண்டு நிஜகுணர் தம்முள்ளேயே சிரித்துக் கொண்டார். அரண்மனையிலே, அரசபதவியிலே இலவம்பஞ்சு மெத்தையின்மீது இருந்த தாம் இப்பொழுது அந்த அனைத்தையுமே துறந்து, காட்டு வழியிலே அலையுமாறு செய்த வினைப்பயனின் ஆட்டத்தை விதியின் வலிமையைக் கண்டு பாடினார்.

"பலே! விதியே, உன்னைவிட வல்லவர் வேறுயாருளர் ।
உயர்ந்தோரை உருக்குலைத்துள்ளது ॥
பெரும்பரப்பை ஆளும் அரசரைப், புலையனைப் ।
பணியாளாகச் செய்துள்ளது. பேரரசருக்கு ।
வாழ்வின் சுழற்சியை ஈந்து, சம்புலிங்கத்திலே ॥
இணைந்தோர்க்கு வினைப்பயனைத் துய்க்கும் ।
இயல்பினை இறுக்கியுள்ளது ॥

என்று முந்தைய காலத்தவர்களுக்கு ஏற்பட்ட கதியை, வினைப்பயனின் லீலைகளைக் குறித்து, தம்முடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



வாழ்க்கையிலே விதியின் விளையாட்டைக் கண்டு பாடிக் கொள்வார். அதைக்கேட்ட விசுவநாதன் மௌனமாகக் கண்ணீர் வடிப்பான். இருப்பினும் கூட அந்தப்பாடலை எழுதிக் கொள்வதற்கு மறக்கவில்லை.

நேற்றைய நினைவுகள் எவ்வளவு முயற்சி செய்து தடுக்க நினைத்தாலும், மீண்டும் ஒருமுறை வெள்ளம் போலப் பாய்ந்து வந்து அவரைச் சூழ்ந்து கொண்டு அவருடைய மனஉறுதியைக் கலைப்பதற்கு முயற்சி செய்தன. எதையாவது பேசச் சென்றாலும் அரண்மனையைச் சார்ந்த விஷயமே வந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவில் நிஜகுணரும் - விசுவநாதனும் ஏதோ ஒரு ஊரின் வெளியிலிருந்த சத்திரத்திலே படுத்துக் கொண்டிருந்தனர். நேரம் கடந்து கொண்டிருந்தாலும் நிஜகுணருக்கு உறக்கம் வரவில்லை. அருகிலேயே விசுவநாதன் கவலையற்று படுத்துக் கொண்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். விசுவநாதனைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுதே மங்கலையின் நினைவானது மீண்டும் எழுந்தது. அதைப்போன்றே அவருடைய விவேகமும் விழிப்படைந்தது. அப்பொழுது நிஜகுணர்,

"உறக்கம் வராது, என் துயரக்கடல் எனும் ।
தொல்லைகளை நினைத்து ॥

என்று பாடினார்.

"அடிக்கடி தோன்றுவதை யார் பொறுப்பது ।
கோரவாழ்வின் துயரத் தொடரை ॥

என்று மனத்தின் துயரத்தைக் கிளறிக் கொண்டு சிறிது நேரத்திற்குப் பிறகு சம்புலிங்கனை நினைத்தவாறு அமைதியாகக் கவலையற்று உறங்கச் சென்றார்.

மீண்டும் மறுநாள் அதிகாலையிலேயே பயணம் தொடங்கியது. காலையிலிருந்து மாலைவரையில் நடந்து கொண்டே இருந்தனர். நிழல் இருந்த இடத்தில் ஓய்வெடுப்பது, உணவு கிடைத்தால் உண்பது, இல்லையெனில் பட்டினி இருந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இந்த ஏழு எட்டு நாட்களாக அலைந்த அலைச்சலில் நிஜகுணரின் ஊட்டச்சத்து மிகுந்த உடலானது இளைத்துக் கொண்டிருந்தது. உடலின் மீது இருந்த துணிகள் அழுக்கடைந்திருந்தன. முகத்திலே மீசை, தாடி எல்லாம் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. ஆனால் அந்தக் கண்களின் ஒளி மட்டும் முதலில் இருந்ததை விட மிகுதியாக ஒளிர்கிறது. முகத்தின் ஒளியானது ஆயிரம் பங்கு அதிகரித்திருந்தது. அந்த வீரம் மிக்க உடலைச் சுற்றி ஏதோ ஒரு விவரிக்கவியலாத ஒளி வட்டமானது சுற்றி நின்று, வழியில் வருபவர்களை கண நேரத்திற்கு நிற்கச் செய்து, நிஜகுணரைப் பார்க்கச் செய்து மந்திரத்தால் கட்டுண்டவர்களைப் போலச் செய்தது. அவருடைய புனிதமான பாதங்கள் மண்ணிலே படுவதால், கீழே இருந்த ஒவ்வொரு மண் துகளும் ''பேறு பெற்றேன், பேறு பெற்றேன்'' என்று ஒளிர்ந்து மின்னிக் கொண்டிருந்தது. நிஜகுணரின் உயர்ந்த, சிறந்த ஆளுமையின் தொடர்பால் விசுவநாதனும் கூடப் புனிதமானவனாகச் சோபித்துக் கொண்டிருந்தான்.

மாலை வேளையிலே ஒரு ஊருக்கு வந்தனர். ஊரின் வெளியிலே ஒரு கோயில் தென்பட்டது. அவர்கள் இருவருக்கும் சிறிது நிம்மதியாக இருந்தது. அகன்ற முற்றம், அழகிய கலைவேலைப்பாடுகளுடன் விளங்கிய கோயிலின் வெளிச்சுற்று மிகவும் அழகாக இருந்தது. கருவறையிலே சிங்கத்தின் மீது அமர்ந்திருக்கும் சக்திதேவியின் அழகிய உருவமானது எழிலுடன் சிறந்து விளங்கியது. நிஜகுணரும் விசுவநாதனும் கோயிலின் அழகைச் சுவைத்தவாறு ஓரிடத்தில் அமர்ந்து கொண்டனர். சிறிது நேரத்தில் மக்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். அங்கு ஏதோ சிறப்பு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது எனக் கருதி அங்கிருந்து புறப்படுவதே நல்லது என்று நிஜகுணர் விசாரிப்பதற்குள் ராஜ நர்த்தகியைப் போன்று சோபித்துக் கொண்டிருந்த ஒரு இளம்பெண் தோழிகளுடன் சேர்ந்து கோயிலிலே நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திற்குச் சென்று கொண்டிருந்தாள். அன்று அம்பிகைக்கு அவளுடைய ஆடல் சேவை என்று தெரிய வந்தது. அம்பிகைக்கு சிறப்புப் பூஜைகள் நடந்து கொண்டிருந்த இடத்தில் ஒரு முறை அம்பிகையை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



வலம்வந்து, அதன்பிறகு கருவறையின் வெளிச்சுற்றில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தின் மீது அமர்ந்து முழங்கால்களை ஊன்றி வணங்குவதைப் போல அபிநயித்து விட்டு மேலே எழுந்து நின்றாள். அவளுடைய காற்சலங்கைகள் 'ஜில்-ஜில்' என்று ஒலிக்க, காமனுடைய வில்லைப்போல இருந்த இருபுருவங்களும் வளைந்து ஆடின. முகத்திலே கர்வக்களை ததும்பியது. அவளுடைய நீண்ட பின்னலானது பாம்பைப் போல வளைந்து வளைந்து மார்பின் மீது விழுந்து பார்ப்பவர்களின் மனத்தை ஈர்த்தது. அவள் அணிந்து கொண்டிருந்த விலைமிகுந்த ஆடையில் ஜரிகையால் நெய்யப்பட்டிருந்த நட்சத்திரங்கள் பார்ப்பவர்களின் கண்களைப் பறித்தன. கூட்டத்தின் நெரிசலிலிருந்து ''பலே-பலே'' என்று உணர்வு பூர்வமான சொற்கள் கேட்டுக் கொண்டிருந்தன. கண்ணைப்பறிக்கும் மின்னல்களைப் போல விளங்கிய அவளுடைய கண்கள் அம்பிகையின் மீது நிலைக்காமல், பார்வையாளர்களின் கூட்டத்திலே ஆங்காங்கு மின்னி வேறு இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. நடனம் நிறைவுற்று, மீண்டும் ஒருமுறை அம்பிகையைப் பணிந்து விட்டுக் கிளம்புவதற்கு ஆயத்தமானாள். கூடியிருந்த மக்கள் சிதறத் தொடங்கினர். தோழியருடன் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தின் படிகளில் இறங்கினாள். அவள் வலப்பக்கமாகத் திரும்பிப் பார்த்தபொழுது ஒரு முற்றத்தில் அமர்ந்திருந்த நிஜகுணரைக் கண்ட அவளுடைய கண்கள் அவர் மீதே நிலைகுத்தி நின்றன. கால்கள் சோர்வுற்றன.

அவளுடைய கண்களும், நிஜகுணரின் கண்களும் சந்தித்தன. அவளுடைய உடல் புளகமடைந்தது. அவள் முகத்திலே புன்னகை தவழ்ந்தது. அவளுடைய உடல் மெதுவாக நடுங்கத் தொடங்கியது. நிஜகுணரின் ஒளிரும் உடல், அழகிய உருவத்தின் மீது மோகம் கொண்ட அவள் நீண்ட பெருமூச்சு விட்டாள்.

நிஜகுணர் அவளுடைய நாட்டியத்தின் பலவிதமான அழகான அசைவுகளைப் பாராட்டினார். சாத்திரம் விவரிக்கும் முறையிலே அந்த நாட்டியமானது மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் அவளுடைய கர்வம் நிறைந்த பார்வையால் அவருக்கு அவள் மீது இரக்கம் ஏற்பட்டது. அவள் அவரைப் பார்த்துக்கொண்டிருந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



பொழுது எத்தகைய மாற்றமும் அற்ற நிலையில் அவர் இருந்தார். அவளுடைய ஒட்டுமொத்தமான அழகின் பின்னாலிருந்த அழகற்ற தன்மையைக் கண்டு வேதனை அடைந்தார். நீண்ட பெருமூச்சு விட்டார்.

அவள் இன்னமும் நின்று கொண்டிருந்தாள். சுற்றி இருந்தவர்கள் நிஜகுணரை ஒரு முறையும் அவளை மற்றொரு முறையுமாகப் பார்த்துக் கொண்டே இருந்தனர். நிஜகுணர் கண்களை மூடிக் கொண்டார். உடனடியாக அவருடைய தொண்டையிலிருந்து ஒரு பாடல் வெளிப்பட்டது.

மகளிரின் அன்பு எத்தகு நிலையென ।
மோகிப்பர் முக்தியை அடையாமல் மனிதர்கள் ॥
கலையையறிந்து, கூடி, விரும்பி, தக்கதையீந்து ।
அழகனை எண்ணி, விரும்பி, ஏற்று ॥
விரும்புவோரை விடுத்து, மற்றவர் அன்பை ।
இடைவிடாது தாமரைக்கண்ணியர் நாடுவர் ॥ *(1)*

இன்னுரை, அழகு, திறமையின் அனுகூலம் ।
புதுமை உரு, இளமையழகைக் காட்டி ॥
ஆசை குன்றாது, நன்றாக நயப்பவரை ।
மகளிர் விட்டகல்வர், வேறொன்றை நயந்து ॥ *(2)*

தென்றல், வானவில், கனவு, நீர்மேல் எழுத்து ।
ஒளிரும் மின்னலை உண்மை என எண்ணி ॥
பெண்ணின் அன்பை ஏற்கலாகாது அதனால் ।
சம்புலிங்கத்தை நன்கு அர்ச்சிப்பாய் ॥ *(3)*

என்று பாடிக் கொண்டிருந்த நிஜகுணரின் அந்த வெண்கலக் குரலினுடைய நாதத்தின் ரீங்காரமானது அவளுடைய செவியினுள்ளே சென்று, அவளுடைய தலையிலே நிறைந்திருந்த மோகம் என்னும் திரையைக் குடைந்து, கத்தரித்து உள்ளே சென்றது. அவளுடைய முகமானது அவமானத்தால் சிவந்தது. நிஜகுணரை ஒருமுறை சிவந்த கண்களால் பார்த்துவிட்டு, அங்கு நில்லாமல் வேகமாகத் தடதடவென்று வெளியே சென்றாள். அவளுடைய தோழியரும் அவளைப் பின்பற்றிச் சென்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நீண்ட நேரத்திற்குப்பிறகு நிஜகுணர் கண்களைத் திறந்தபொழுது விஸ்வநாதனைத்தவிர அங்கு யாருமே இருக்கவில்லை. அவர்கண் திறந்ததைக் கண்ட விசுவநாதன், ''ஸ்வாமி மிகவும் நன்றாகப் பாடினீர்கள். அந்தக் காமப் பொம்மையைப் பிடித்து நன்றாக அடிப்பதைப் போல அவளுக்கு அந்தப் பாடலால் அடி விழுந்தது. நீங்கள் பாடும்பொழுது அவளுடைய நிலையைப் பார்த்திருக்க வேண்டுமே'' என்று வெற்றி எய்தியவனைப் போலக் கூறினான்.

''பாவம், அஞ்ஞானியின் மனத்தின் ஆட்டம்தான் அவ்வளவும். விசுவநாதா, இது அவருடைய தவறு இல்லை. என்னிடம் தவறு உள்ளது.''

''என்ன ஸ்வாமி? இது என்ன பேச்சு? உங்களிடம் தவறு உள்ளதா?''

''ஆமாம் விசுவநாதா, என்னிடம் இன்னும் காமம் உள்ளது. அவ்வுணர்வுடன் என்னைப் பார்ப்பவர்களுக்கு காமம் சார்ந்த எண்ணம் ஏற்படுகிறது. என்னிடம் கோபம் உள்ளது. அந்த உணர்வுடன் என்னைப் பார்ப்பவர்களுக்குக் கோபம் வருகிறது. இங்கு பார், இந்தக் காமம் போன்றவை என்று என்னிடம் இல்லாமல் போகுமோ, அன்று என்னைப் பார்ப்பவர்களுக்கும் மனத்திலே மாற்றம் எழாது. அது வைராக்கிய சித்தியாகும். அழகின் அரசியானவள் உன்னை விரும்பி வந்தாலும் நீ அலட்சியமாக இருப்பது வைராக்கியத்தின் உயர்ந்த எல்லையானால் உன்னைப் பார்த்தவுடனேயே பூஜிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை ஏற்படும்படிச் செய்வது வைராக்கிய சித்தியாகும்'' என்று கூறிய நிஜகுணர் உணர்வுப் பெருக்குடன் தான் வழிபடும் கடவுளிடம் முறையிட்டார்.

''பிறப்பற்ற உம்மை வேண்டுவேன் ஒவ்வொரு பிறவியிலும் ।
இவ்வகையில் நல்ல தலைமுறையை எனக்கு நயந்து
அருள்வாய் ॥

சினம் தாக்காத தவத்தையும், பிறமகளிர்தம் அழகைக் ।
கண்டு ஈர்க்கப்படாதிருக்கும் புலன் அடக்கத்தையும் ॥
தாபம் படர்ந்து அழிந்த மேலான இன்பத்தையும் ।
கபடமற்ற ஆசிரம தர்ம மகிழ்வையும் அருள்வாய் ॥''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பாட்டுடன் கலந்து மெய்மறந்து பாடிய நிஜகுணர் கண்களைத் திறந்தபொழுது அந்தக் கோயிலின் அர்ச்சகர் ஒரு தேங்காய் மூடியையும் ஐந்தாறு வாழைப்பழங்களையும் கொடுத்து, ''எடுத்துக் கொள்ளுங்கள் ஸ்வாமி. மிகவும் நன்றாகப் பாடினீர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவரோ?'' என்று கேட்டார்.

''ஊரில்லாத, திக்கில்லாத எல்லையில்லாத தேசமில்லாத பரதேசிகள்'' என்று நிஜகுணர் கூறினார். அர்ச்சகர் அவருடைய முகத்தை ஒரு விதமாகப் பார்த்தவாறு, அங்கிருந்து அகன்றார். அவர் பிரசாதத்தை ஏற்றுக் கொண்டு, அதிலேயே நிறைவடைந்து உறங்கச் சென்றார்.

அமைதியான கபிலை நதிக்கரையில் அழகாக வளர்ந்திருந்த மாமரத்தின் கீழே நிஜகுணரும், விசுவநாதனும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். இருவரும் மௌனமாக இருந்தனர். சிறிது தொலைவில், எதிரிலே நிதானமாக ஓடிக் கொண்டிருந்த கபிலையையே அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அதற்குள் அக்கரையிலிருந்து தண்ணீரில் இறங்கி வந்து கொண்டிருந்த மனிதனின் பக்கமாக அவர் பார்வை திரும்பியது. அவர்கள் பார்த்துக் கொண்டு இருந்த பொழுதே அம்மனிதன் நீரில் நடக்காமல் பாதம் நீரின் மீது இருக்குமாறு மிதந்து கொண்டு வந்ததைப் போல நடந்து வந்து நின்றான். அவன் முகத்திலே ஏதோ பெரியதாக ஒன்றைச் சாதித்து விட்டதைப் போன்ற பெருமிதத்தின் களையானது வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

நிஜகுணர் ஒரு கணம் அவனைக் கூர்ந்து கவனித்தார். விசுவநாதன் ஒரே குலத்தைச் சேர்ந்த நண்பனைக் கண்டதைப் போல மகிழ்ச்சியுடனும் வியப்புடனும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். நிஜகுணர் தம் எதிரிலே இடத்தைக் காட்டி அமர்ந்து கொள்ளுமாறு கூறினார். வந்த அந்த மனிதன் ''தாங்கள் அக்கரைக்குச் செல்ல வேண்டுமா? நீர் மிகவும் ஆழமாக உள்ளது'' என்று கூறினான். அவனுடைய குரலில் ''உங்களால் தாண்டிச் செல்ல இயலாது'' என்னும் உணர்வு ஒலித்தது.

நிஜகுணருக்கு அந்த உணர்வின் பொருள் புரிந்தது. அவர் சிரித்தவாறு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஆம், அக்கரைக்குச் செல்ல வேண்டி உள்ளது. நீர் ஆழமாக இருப்பதால் தாண்டிச் செல்வதற்குப் பயமாக உள்ளது. இங்கு அருகில் எங்கும் படகும் தென்படவில்லை. காத்துக் காத்து அலுத்து விட்டது. தயவு செய்து நீங்கள் தாண்டுமாறு செய்தால் மிகவும் உதவியாக இருக்கும்'' என்று கூறிய நிஜகுணரின் குரலில் சவால் விடும் அழைப்பு இருந்தது. அவரிடம் சிறுவர்களிடம் இருக்கும் உற்சாகமானது நிறைந்திருப்பதைப் போல இருந்தது.

அம்மனிதன் எழுந்து நின்றவாறு, ''கிளம்புங்கள் அதற்கு என்ன? நான் தாண்டச் செய்கிறேன்'' என்று முன்னால் முன்னேறிச் சென்று கபிலையின் கரையில் நின்றுகொண்டு நிஜகுணரின் கையைப்பிடித்துக் கொண்டு ஒரு கணத்திற்கு கண்களை மூடிக் கொண்டு மூச்சை உள்ளிழுத்துக் கொண்டான். அவனுடைய உதடு நடுங்கியது. உடல் நடுங்கியது. அவன் தண்ணீரில் காலை வைத்தான். ஆனால்?

ஆனால், முன்பு இருந்ததைப் போல அவனுடைய பாதங்கள் தண்ணீரின் மீது நிற்காமல் மூழ்கி விட்டன. அவன் வியப்பு அவமானங்களுடன் கண்ணைத் திறந்து பார்த்த பொழுது, விசுவநாதனும் தன்னைப் போன்றே நீரின் மீது பாதத்தை வைத்துக் கொண்டு தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். வலப்புறத்தில் நிஜகுணர் தன்னையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டு இருந்தார். அவருடைய முகத்திலே புன்னகை மின்னிக் கொண்டிருந்தது. அவன் முகத்தைத் தாழ்த்திக் கொண்டான். நிஜகுணரின் பாதங்களின் பக்கமாகப் பார்வையைச் செலுத்தியபொழுது, அவருடைய தாமரையைப் போன்ற திருவடிகளைச் சுற்றி ஒன்பது கஜம் அளவிற்குத் தண்ணீரானது வட்டவடிவமாகச் சரிந்து நின்று கீழே மணல்துகளானது மினுக்கிக் கொண்டிருந்தது. சில நிமிடங்களில் அக்கரைக்குச் சென்று சேர்ந்தனர்.

சிறிது நேரத்திற்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருந்த அந்த அறிமுகமற்ற மனிதன் உடனே நிஜகுணரை வணங்கினான். அவர் அவனைத் தூக்கி நிறுத்தினார்.

''ஸ்வாமி, என்னை மன்னியுங்கள். தாங்கள் மகாத்மாவாக இருக்கிறீர்கள். நான் அதனை அறிந்து கொள்ளாமல் என்னுடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அல்பமான வித்தையைக் காட்டி தவறு செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்று அவன் பச்சாதாபத்துடன் கூறினான்.

நிஜகுணர் அங்கேயே மணலின் மீது அமர்ந்தவாறு, ''இருக்கட்டும், இருக்கட்டும் - மன்னிப்பதற்கு எதுவும் இல்லை. உங்களுடைய பெயர் என்ன?'' என்று கேட்டார்.

''என் பெயர் மருளசித்தன். நான் ஹடயோகப் பயிற்சியை மெற்கொண்டுள்ளேன்.

''ஓ, மகிழ்ச்சி, நீங்கள் இப்பொழுது எங்கு தங்கியுள்ளீர்''?

''அதோ, அங்கு மாந்தோப்பு ஒன்று தென்படுகிறதல்லவா. அங்கு 'ஆத்மயோகாசிரமம்'' என்னும் பெயரில் ஒரு குருகுலம் உள்ளது. தற்சமயத்திற்கு நான் அங்கேயே இருக்கிறேன். நான் கேரள சீமையைச் சேர்ந்தவன்''.

''என்ன, இங்கு குருகுலம் உள்ளதா? கலாசாலையின் தலைவர் யார்''?

''நிராபாரிதேசிகர் என்பவர் ஆவார். அவர் எல்லா யோகங்களையும் நன்கு அறிந்தவர். வேத அத்யயனம் செய்யும் பிரம்மநிஷ்டர் ஆவார்''.

''நிராபாரி தேசிகரா? நிராபாரி தே..சிகர். அந்தப் பெயர் இதயத்தைத் தொடுகிறது அல்லவா. மருளசித்தா. நான் அவரைத் தரிசிக்க வேண்டும்.

''அவசியம் தரிசிக்கலாம். கிளம்புங்கள். உங்கள் பெயர் என்ன''?

''என் பெயர் நிஜகுணர் என்பது ஆகும். இவனுடைய பெயர் விசுவநாதன் ஆகும். இவனும் உங்களைப் போன்றே ஹடயோகப் பயிற்சி செய்கிறவன்'' என்று ஓரளவிற்கு அறிமுகம் செய்து வைத்த பொழுது மருளசித்தன், அவருடைய பாதங்களை வணங்கி விசுவநாதனைத் தழுவிக் கொண்டு அன்பை வெளிப்படுத்தினான்.

''அப்படியானால் செல்வோம், வாருங்கள்'' என்று ஆசிரமத்தை நோக்கி நடந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



நதியின் கரையிலிருந்த அந்த மணல் பகுதியைத் தாண்டி, சிறியதொரு மேட்டுப்பகுதியை ஏறி, இறங்கி அந்தப் பக்கத்திலிருந்த பரந்த வெட்டவெளியில் காலை வைத்தனர். அங்கு மாமரம், தென்னை, வாழைமரங்களின் தோப்புக்கள் இருந்தன. அந்தப் பக்கத்தில் பூந்தோட்டமும் அதற்கு வலப்புறத்தில் ஒரு அழகிய தாமரைக் குளமும் இருந்தன. இடப் பக்கத்தில் பசுக் கொட்டில். பூந்தோட்டத்தை ஒட்டினாற்போல் அகன்ற அழகிய லதாமண்டபங்கள் இருந்தன. இலைகளால் வேயப்பட்ட குடிசை இருந்தது. மருளசித்தன் அவர்கள் இருவருக்கும் அவ்வனைத்தைப் பற்றியும் விவரித்துக் காட்டியவாறு, குடிசையின் வலப்பக்கத்திலிருந்த மற்றொரு தோட்டத்திற்குள் நுழைந்தான். அந்தத் தோட்டத்தின் நடுவில், அரசமரத்தின் பரந்த சூழலில் அந்தக் குருகுலத்தைச் சேர்ந்த மாணவர்கள் குழுமியிருந்தனர். அவர்கள் அனைவரின் மையப்புள்ளியாக, நெற்றியின் பொட்டுபோல அமர்ந்திருந்த மனிதரின் மீது நிஜகுணரின் பார்வை நிலைத்தது. அவர் தொடர்ந்து நடந்தார். நடுவிலே அமர்ந்திருந்த அந்த மனிதர்,

''அதோ ஞானதீபம் வந்துவிட்டது'' என்று கூறவும் அங்கு இருந்த அனைவரின் பார்வையும் நிஜகுணரின் மீது விழுந்தது. நிஜகுணர் கண் இமைக்காமல் 'நிராபாரிதேசிகர்' , 'நிராபாரிதேசிகர்' என்று தமக்குள் தாமாகவே கூறிக் கொண்டார். அந்த மனிதர் எழுந்து நின்று நிஜகுணரை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்று தழுவியவாறு, ''வந்து விட்டாயா உண்மையான அறிவே! வாவா நிஜகுணா; நீ வருவாயா எனக் காத்துக் கொண்டிருந்தேன்'' என்று அவருடைய கையைப் பிடித்து தம் அருகிலிருந்த இருக்கையில் நிஜகுணரை அமர்ந்து கொள்ளுமாறு கூறினார். தம்முடைய பெயரை நிராபாரிதேசிகர் கூறக்கேட்ட நிஜகுணருக்கு மிகவும் வியப்பாக இருந்தது. முக்காலமும் உணர்ந்த ஞானியான அவருடைய திருப்பாதங்களை வணங்கி இருக்கையில் அமர்ந்தார்.

தேசிகர் சீடர்களிடம், ''நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகள் தொடங்கட்டும். இறுதியில் இவரை அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று கம்பீரமாகக் கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



அவருடைய ஆணைக்குத் தலைவணங்கிவிட்டு சீடர்கள் அனைவரும் உறுதியாக ஆடாமல் அமர்ந்து கொண்டு பிரார்த்தனைப் பாடலைப் பாடத் தொடங்கினர். அதைக் கேட்ட நிஜகுணருக்கு வியப்பின் மீது வியப்பு ஏற்பட்டது. அது அவருடைய பாடல் தான்.

ஸ்ரீ குருவின் அறிவுரைகளைக் கேட்பின் ।
மனிதருக்கு முக்தி கிடைக்கும் ॥

என்னும் பாடல்தான் அது.

''அது இங்கு எப்படி வந்தது?'' என்று சிந்திக்கத் தொடங்கினார்.

அந்தப் பரந்த வெட்டவெளியில், அந்தப்பாடல் அவர்கள் அனைவரின் தொண்டையிலிருந்து வெளிப்பட்டு ஒரே நாதமாக ஒருங்கிணைந்து, மலைகளில், குகைகளில் எதிரொலித்தது. அதைப் பாடிய பிறகு மௌனம் சூழ்ந்தது. ''குரு அவர்களின் அன்பிற்குரிய அவருடைய மனத்தைச் சிறைப்பிடித்த, ஒளிர்ந்து கொண்டிருக்கும் முகத்தை உடைய இந்த இளைஞர் யார்? யாராக இருக்கக்கூடும்'' என்று சீடர்கள் ஆர்வத்துடன் இருந்தனர்.

நிஜகுணர் தம்மைச் சுற்றி அமர்ந்து கொண்டிருந்த அனைவரையும் ஒருமுறை நுட்பமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய கண்களில் இருந்த மின்னலைப் போன்ற ஒளியால் அவர்கள் அனைவரும் விளங்கி அவர்களுடைய உடல்கள் புளகமடைந்தன. அந்த மின்னலுடன் குரு நிராபாரிதேசிகரின் கம்பீரமான பேச்சானது கேட்கத் தொடங்கியது.

''என்னுடைய ஆன்ம சொரூபங்களே! கேளுங்கள். இவர் யாராக இருக்கக் கூடும் என்னும் ஆர்வம் உங்களிடம் இருக்கிறது அல்லவா? இவர் ஒரு ஞானவிளக்கு. எல்லா யோகங்களின் சக்கரவர்த்தி! கொள்ளேகாலச் சீமையின் அரசர் நிஜகுணர் என்பது இவருடைய பெயராகும்''.

வினைப்பயனால் அரண்மனையைத் துறந்து குருமனைக்குப் புறப்பட்டுள்ளார். இவருக்கு எந்தவிதக் குறையுமில்லை. எல்லாவிதமான கல்விகளிலும் பெரும்புலமை உடையவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



இருப்பினும் "ஸ்ரீ குருவின் அறிவுரைகளைக் கேட்பின் மனிதருக்கு முக்தி கிடைக்கும்" என்னும் கூற்றுடன் இவரது நடத்தையும் ஒருங்கிணைந்துள்ளது. இத்தகைய புண்ணியபுருஷருடன் இருக்கும் நல்ல வாய்ப்பு நமக்கு இப்பொழுது வாய்த்துள்ளது. அவர் சில நாட்களுக்கு நம்முடைய ஆசிரமத்திலேயே தங்கி இருப்பார். உங்கள் அனைவருக்கும் நல்லதொரு வழிகாட்டுபவராக இருந்து கொண்டு எனக்குச் சில நாட்களுக்கு ஓய்வு அளிப்பார். "நீங்கள் அனைவரும் அவருக்கு உதவி புரிந்து, உங்களுடைய சாதனை வழியிலே முன்னேறிச் செல்லுங்கள்" என்று கூறி நிராபாரிதேசிகர் அனைவரையும் பார்த்தார்.

சீடர்களின் குழுவினர் அனைவரும் உற்சாகத்துடன் ஜெயகோஷம் எழுப்பினர். நிஜகுணர் நிராபாரிதேசிகரின் திருவடிகளில் பணிந்து, "ஸ்வாமி, உங்களுடைய மகிமையை அறியாத சிறுவன் நான். என் வாழ்க்கையை குறித்து நீங்கள் கூறியதைக் கேட்டு நான் ஊமையாகியுள்ளேன். உங்களுடைய ஆணைப்படி நடப்பதற்கு நான் எப்பொழுதும் ஆயத்தமாக உள்ளேன். நான் இயற்றியுள்ள இந்த குருதுதியானது இங்கு எப்படி பிரார்த்தனைப் பாடலாக உள்ளது என்று வியப்பாக உள்ளது".

நிராபாரிதேசிகர் சிரித்தவாறு, "நிஜகுணா! எந்தப்பாடல் உன்னுடைய வாழ்விலே சிறப்பு, பெருமை மிகுந்த மாற்றத்திற்குக் காரணமாயிற்றோ, யாருடைய பேச்சைக் கேட்டு நீ இந்த குருதுதியை எழுதினாயோ, அந்த மனிதரே இங்கு வந்திருந்து இந்தப் பாடல் உள்ள ஓலைச்சுவடியைக் கொடுத்து "இது மிகவும் விலைமதிப்பற்றது, இந்த ரத்தினத்தை நல்ல வகையில் பயன்படுத்திக் கொள். இதை எழுதியவன் இங்கு வருவான். இங்கு சில நாட்கள் இருந்துவிட்டு சுவாதி நாட்டில் இருக்கும் புஜலிங்கஶிவயோகிகளிடம் சென்று உன்னிடம் வரட்டும்" என்று சம்புலிங்கயதி அவர்களே ஆணையிட்டுவிட்டுச் சென்றுள்ளார்.

"அதாவது அவர் சம்புலிங்கரா?"

"ஆமாம், சம்புலிங்கர் என்பது அவருடைய புண்ணிய நாமமாகும். அவருக்கு இணை யாருமே இல்லை பிரம்மரிஷி என்றால் அது அவர்தான். அத்தகையவரின் அருளுக்கு நீ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



பாத்திரமாக இருப்பது சாமான்னியமானது அன்று நிஜகுணா. அவருடைய சீடராக ஆகும் சௌபாக்கியமானது உன் ஒருவனுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. அவர் இதுவரையில் எவரையுமே சீடர் என்று ஏற்றுக்கொள்ளவில்லை. நானும் அவருடைய உபதேசத்தைக் கேட்டிருக்கிறேன். அப்பா! அதை விவரிப்பதற்குத் திறமை போதுமானதாக இல்லை'' என்று பரவசத்துடன் தேசிகர் விவரித்துக் கொண்டு இருந்தார்.

அவர் கூறியதைக் கேட்ட நிஜகுணருக்கு தனித்ததொரு விதத்தில் மகிழ்ச்சியான அனுபவம் ஏற்பட்டது. சிறிது நேரத்திற்கு அங்கு மௌனம் நிலவியது. அதைக் கலைத்துத் தம்முடைய சீடர்களைக் குறித்து அறிமுகம் செய்வதற்கு நிராபாரிதேசிகர் ஆயத்தமானார்.

''நிஜகுணா! இங்கு மந்திரயோகம், லயயோகம், ஹடயோகம்' ராஜயோகங்களின் பயிற்சி வகுப்புகள் செய்முறைகள் கற்பிக்கப்படுகின்றன. இங்கு பார். வலப்பக்கத்தில் அமர்ந்திருப்பவர் மந்திரயோக சாதகர் ஆவார். இவருடைய பெயர் ஓம்காரஸ்வாமிகள் இவர் பஞ்சாக்ஷரி ஆவார். இவர் பிரணவநாதர் ஆவார். இவர் நமஶிவாய சரணர், இவர் ஷடக்ஷர ஸ்வாமிகள். இவர் மந்திரேஸ்வரர் ஆவார்'', என்று ஓரத்தில் வரிசையாக அமர்ந்திருந்த மந்திரயோக சாதகர்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்த பொழுது அவர்கள் ஒவ்வொருவராக எழுந்து நின்று, நிஜகுணரையும் நிராபாரிதேசிகரையும் வணங்கிவிட்டு மீண்டும் தம்முடைய இடத்தில் அமர்ந்து கொண்டனர்.

தேசிகர், மற்றொரு பக்கத்தில் அமர்ந்திருந்த சாதகர்களைக் காட்டியவாறு ''நிஜகுணா, இவர்கள் லயயோக சாதகர்கள். இவருடைய பெயர் சங்கரயோகி, இவர் ஏகாக்ஷரி, இவர் நாதபிரம்மர், இவர் விலயநாதர். இவர் சச்சிதானந்தர்'' என்று அறிமுகப்படுத்திய பொழுது அவர்கள் அனைவரும் இவர்கள் இருவரையும் வணங்கி விட்டு அமர்ந்து கொண்டனர்.

மற்றொரு பக்கத்தில் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து, ''இவர்கள் ஹடயோக சாதகர்கள். இவர் பைரவர், இவர் ஜடயோகி, இவர் சித்தர், இவர் குருசித்தர், இவர் நிஷ்டாபதி, இவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மருளசித்தர்'' என்று கூறியதும் அவர்களும் வணங்கிவிட்டு அமர்ந்தனர்.

அவருடைய வலப்பக்கத்தில் அமர்ந்தவர்களை விரலால் சுட்டிக்காட்டி ''இவர்கள் அனைவரும் ராஜயோக சாதகர்கள். இவர் ராஜசேகரர், இவர் ஹரஸராஜர், இவர் ஶிவராஜர், இவர் சுகமுனிகள், இவர் திருமூலர், இவர் பெருமாள், இவர் சின்மயானந்தர், என்று கூறிய பொழுது அவர்கள் அனைவரும் வணங்கினர். அவர்களை நிஜகுணர் தாமும் வணங்கினார்.

தேசிகர் அறிமுகப்படுத்துவதைத் தொடர்ந்தார்.

''இவர்கள் அனைவரும் வேறுவேறு இடங்களிலிருந்து வந்தவர்கள். கேரளா, கொடகு, வடநாடு, மைசூர், என்று எல்லா ஊர்களைச் சேர்ந்தவர்களும் ஒருங்கிணைந்து இருக்கின்றனர். தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல தகுந்த யோக சாதனங்களைத் தொடங்கி உள்ளனர். சிலர் ஏற்கனவே சித்தியை அடைந்து உள்ளனர். சிலர் சாதனையின் தொடக்கநிலையில் உள்ளனர். வேறுசிலர் அதில் முன்னேறி உள்ளனர்.

இவர்கள் அனைவரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். சிரத்தை, பக்தி உள்ளவர்கள். வயிற்றுப்பாட்டிற்காக அவர்களே இங்கு விவசாயம், பசுக்களை வளர்ப்பது, தோட்டங்களை உருவாக்கி பராமரிப்பது போன்ற வேலைகளைச் செய்து வெளியிலேயும் நிம்மதியாக இருப்பவர்கள். இவர்களுக்காக அதோ, இலையால் செய்யப்பட்ட குடிசைகளைக் கட்டி, ஒவ்வொருவரும் தனித்தனியாக இருக்குமாறு, தகுந்தமுறையில் இருக்குமாறு செய்துள்ளேன். அவர்களுடைய பயிற்சி, தியானம், ஜபம், தவம் போன்ற சாதனைகளுக்குத் தக்க வரையில் எல்லா வகைகளிலும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த ஆசிரமத்திற்கு அவ்வப்பொழுது மகான்கள், பெரிய அரசர்கள் வருவது உண்டு. அவர்கள் செய்த உதவியையும் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் இந்த சாதகர்கள் தங்களுடைய சாதனையில் சித்தியடைந்து லயயோகி, மந்திரயோகி, ஹடயோகி, ராஜயோகி என்னும் பட்டம் பெற்றுச் செல்கின்றனர். வேறுசிலர் சாதகர்களாக நுழைந்து இங்கேயே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிலைத்திருப்பதும் உண்டு. இவ்விதத்தில் இது தொடர்ந்து நல்ல குருவின் நல்ல சங்கல்பத்தைப் போன்று நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

எனக்கு உதவி செய்துகொண்டு சங்கரயோகியும், மருளசித்தரும் உள்ளனர். "நீ எனக்கு சில நாட்களுக்காவது ஓய்வு அளித்து, அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்" என்று முழுமையாக விவரித்து விட்டு மௌனமானார். நிஜகுணர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு, "ஆகட்டும் ஸ்வாமி, தாங்கள் அவசியமாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். ஓரளவிற்குத் தொண்டாற்றி உங்களுடைய அன்பிற்குப் பாத்திரமாகும் நானே பாக்கியசாலி என்று உணர்வுபூர்வமாகக் கூற, அனைவரும் ஜெயகோஷம் எழுப்பித் தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மங்கலத்துடன் அன்றைய நிகழ்ச்சி முடிவுற்றது. உணவு வேளையாக இருந்ததால் அனைவரும் உணவு உண்ணும் அறைக்குச் சென்றனர்.

உணவு உட்கொள்ளும் அறையில் நான்கு வித உணவுகள் இருந்தன. அந்த அந்த யோகப் பயிற்சிக்குத் தகுந்தாற் போல மிகவும் நேர்த்தியுடன் நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட நான்கு வித உணவுகள் காணப்பட்டன. நிராபாரி தேசிகர் சங்கரயோகியிடம் நிஜகுணரை ஒப்படைத்து "இதோ இவரைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு உன்னுடையதாகும். இவர் இருப்பதற்கு, என் குடிலின் எதிரிலுள்ள குடிலையே தயார் செய்து வை" என்று கூறிவிட்டு நிறைவுடன் அவர் புறப்பட்டுச் சென்றார்.

உணவு உட்கொள்ளும் இடமானது நல்ல பெரியதாக இருந்தது. நான்கு பந்திகளில் அந்த அந்த சாதனையை மேற்கொள்பவர்கள் அமர்ந்து இருந்தனர். விசுவநாதன் ஏற்கனவே மருளசித்தனின் பக்கத்தில் அமர்ந்திருந்தான். நிஜகுணரை எந்தப் பந்தியில் அமரச் செய்ய வேண்டுமென்று தெரியாமல் ஶிவயோகிகள் திண்டாடிக் கொண்டிருந்தார். எல்லா சாதகர்களும் மிகவும் அன்புடன் "இங்கு வாருங்கள்", "இங்கு வாருங்கள்" என அழைத்தனர். அப்பொழுது நிஜகுணர் எல்லா இடத்தையும் ஒருமுறை பார்த்துவிட்டுச் சிரித்தவாறு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



“இதோ, எல்லோருக்கும் நடுவிலே இங்கேயே நான் அமர்ந்து கொள்கிறேன். எனக்கு இங்கேயே உணவளியுங்கள்” என்று நடுவிலேயே அமர்ந்து கொண்டார்.

தங்கள் தங்களுக்காகச் செய்யப்பட்டிருந்த உணவை, பத்திய உணவை உண்ணும் பிணியுற்றிருப்பவர்களைப் போல அவர்கள் அனைவரும் உணவை உண்டனர். நிஜகுணர் நான்கு விதமான உணவுகளையும், ஒவ்வொன்றிலும் சிறிது சிறிது எடுத்துக் கொண்டு, சேர்த்து நெருப்பைப் போல அவர்களுடன் சேர்ந்து உணவை ஏற்றுக் கொண்டார்.

அங்குள்ள ஒவ்வொரு சாதகரிடமும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நியமம், குருபக்தி, பொறுமை, நம்பகத்தன்மை மற்றும் தொண்டு செய்யும் மனம் என்னும் இவற்றைக் கண்ட நிஜகுணர், அவர்கள் அனைவரையும் வெகுவாக மெச்சிக் கொண்டார். நிராபாரிதேசிகரிடம் அவருடைய பக்தியானது இருமடங்காயிற்று. “நான் இந்த சாதகர்களுக்கு உதவியாக இருந்துகொண்டு, தொண்டாற்றி, குரு அவர்களுக்கு ஓய்வு அளித்தால் நான் என் வாழ்க்கையின் பயனைப் பெற்றவனாவேன்” என்று எண்ணி, மறுநாள் தான் செய்யப்போகும் செயலின் பொறுப்பைப் பற்றி எண்ணியவாறு உறங்கிவிட்டார்.

சிறுபறையின் சத்தமானது ஆசிரமவாசிகளை எழுப்பியது. பிரம்மமுகூர்த்தத்தின், சுபத்தை உணர்த்தும் மங்கல ஒலியாக அது சாதகர்களுக்குச் சுபத்தை அறிவித்தது. அமைதியாக உறங்கிக் கொண்டு இருந்த ஆசிரமமானது நடவடிக்கைகளால் நிறைந்ததைப் போன்று, சிலருடன் அந்த அகன்ற, பெரிய பிரார்த்தனை செய்யும் இடமானது சாதகர்களால் சோபித்துக் கொண்டிருந்தது.

பிரார்த்தனை செய்யுமிடத்தின் நடுவிலே, உயரமான பீடத்தை அமைத்து அதன்மீது புலித்தோல் விரிக்கப்பட்டு இருந்தது. சந்தனத்தின் நறுமணம் அங்கங்கு பரவியிருந்தது. நிராபாரிதேசிகர் தம்முடைய இருக்கையை அலங்கரித்தவாறு தம்முடைய வலப்புறத்திலுள்ள இருக்கையில் நிஜகுணரை அமருமாறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எல்லாச் சாத்திரங்களையும் நன்கு உணர்ந்தவன். இகத்திலும், பரத்திலும் போகங்களை அனுபவிக்க விரும்பாதவன், கர்மங்களைத் துறந்தவன், இரண்டாவது அற்ற சூரன் மனமாற்றம் அடையாதவன், தன் உண்மை சொரூபத்தை உணர்வதற்கு விரும்புபவன் ''அதிமாத்ரதரன்' ஆவான் (மிகச்சிறந்தவன்).

''நான்கு வகையைச் சேர்ந்த மனிதர்களும் முறையாக மந்திரயோகம், லயயோகம், ஹடயோகம், ராஜயோகம் என்னும் நான்கு யோகங்களில் ஒவ்வொரு யோகத்தைச் சாதித்துச் சித்தி அடைந்தவர்கள்; நிலைத்த இன்பத்தை அடைந்தவர்கள்'' என்று அந்த சாதகர்களுக்கு தகுதிகளில் உள்ள வேறுபாடுகளை உணர்த்தி, அவரவருடைய தகுதியைக் குறித்து (மனத் தூய்மையின் அளவு) அவரவரே பரீட்சித்துக் கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். தகுதியுடையவனின் லட்சணத்தை விவரித்த அவர், ஒவ்வொரு யோகத்தின் சொரூபத்தையும் இருவரிகளில் அறிவுறுத்தினார். சாதகர்கள் மிகவும் உற்சாகத்துடன் செவிமடுத்தனர்.

''கேட்டு உணர்ந்து ஐந்து யோகத்தைச் செயின்
முக்தி நிலையை ஆள இயலும்''

என்று உறுதியான குரலிலே பாடி அனைவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு மந்திரயோக சாதகர்களின் பக்கமாகத் திரும்பி

''பலவகையான மனுக்களின்
சந்தத்தை அறிந்து, விரும்புவதைக்
குறையாமல் ஜபத்தாலிது மந்திரயோகம்
என்று முனிவர்கள் கூறுவர்.''

என்று மந்திர யோகத்தின் ரகசியத்தையே முன் வைத்தார்.

''நாதத்தின் உண்மை உருவிலே இணைந்து, பிந்துவின்
அழகிய உருவுடன் முயற்சித்துக் கூடி,
பேதமழிந்து மனம் நிலைப்பின், லயயோகமென
ஓதி அறிஞர்கள் குறிப்பிடுவர்''

என்று பாடிவிட்டு விவரித்தபொழுது லயயோக சாதகர்கள் ரகசியத்தை அறிந்து கொண்டு மகிழ்ந்தாடினர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"பொருத்தமுற அட்டாங்கத்திலிருந்து கரணமுத்திரை
போன்றவற்றுடன் வெறும் கும்பகத்தால்
காற்றை வெல்வதே மூன்றாம் யோகமாம் என
நிலைத்த அறிவுடையோர் ஊகித்துளர்"

என்று அறிவுறுத்தியபொழுது ஹடயோக சாதகர்கள் ரகசியத்தை அறிந்து அகமகிழ்ந்தனர்.

"அறிவினால் அகத்தும் புறத்தும் மூன்று
இலட்சியத்தா லுண்மையை அறிந்து, மனத்தை
அடக்கி நிற்பதே ராஜயோகம் என்று
கூறிக் காட்டுவர் தூய இன்பமுற்றோர்"

என்று கூறியபொழுது ராஜயோக சாதகர்கள் ரகசியத்தை அறிந்து கொண்ட அனுபவத்தைப் பெற்றவர்களாக மகிழ்ச்சியடைந்தனர். இறுதியில்

"குரு சம்புலிங்கத்தை அர்ச்சித்து, தியானித்து
சிறந்த பக்தி ஞானம், உயர்ந்த நோன்பை நூற்று
உண்மையாக உணர்ந்ததையே ஶிவயோகமென
அன்புற்று உரைப்பர் வேத வித்துக்கள்"

என்று தமக்குத்தாமே கூறிக் கொண்டு சில நிமிடங்களுக்கு மௌனமாக இருந்தார். மங்கலத்துடன் அன்றைய நிகழ்ச்சியானது நிறைவடைந்தது. நிஜகுணர், அவர்கள் அனைவருக்கும் வழி காட்டுபவராக, பாடம் நடத்துபவராக, அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார். அவரவர்களின் சந்தேகத்தை அகற்றிச் சரியான அறிவுரையை எளிதில் புரிந்து கொள்ளும்படிச் செய்தார்.

ஒருநாள் மந்திரயோக சாதகரான பிரணவநாதர் நிஜகுணரை வணங்கி,

"ஸ்வாமி, மந்திரயோகமானது அந்தரங்க சாதனையா? (அகமுக சாதனையா) புறமுக சாதனையா?" என்று கேட்டார்.

"வேறு பல வித்தைகளில் களைப்புறுவர் தம்முள்ளே ।
விளங்கும் சிறந்த மந்திரத்தை ஜெபிக்காமல்" ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றுபாடி, மந்திரமானது ஆன்மாவின் அருள் ஆகும். ஒவ்வொரு மூச்சும் (சுவாசமும்) மந்திரசொரூபமாக வேண்டும். மந்திரசொரூபமாக உள்ளது. அதை அறிந்து பின்பற்ற வேண்டும். ஓம்காரமானது மாயையை அடித்து விரட்டும் மிகப்பெரிய சக்தியாகத் திகழ்கிறது. அந்தப் பிரணவம்தான் மூல மந்திரமாக உள்ளது. அந்த மந்திரத்தின் ரகசியத்தை அறிந்து கொண்டு ஜெபித்தால் கண்டிப்பாக முக்தி அடையலாம் என்று நிஜகுணர் வலியுறுத்தினார்.

லயயோக சாதகரான சங்கர யோகியானவர்,
"தியான யோகத்தின் பயன் என்ன?" என்று கேட்டார்.

"நிமிடமாவது உங்கள் நினைவு நின்றால் முக்தி
ஏற்படாதோ மக்களால் வணங்கப்படும் சங்கர யோகியே"

என்று நிஜகுணர் பதிலளித்து சமாதானம் அளித்தார்.

விலயநாதர், "பூஜிக்கத்தக்கவரே! லயயோகத்தின் ஒன்றுபட்ட நிலையை (ஐக்கிய நிலை) விவரிக்கிறீர்களா?" என்று பணிவுடன் கேட்டார்.

"அடங்கி, ஞான அமுதக் கடலிலே மூழ்கி ।
விழிப்பற்ற தூய இன்ப நிலையிலே முன்னேறி ॥
பிரிந்து, வேறாகத் தோன்றாது, சம்புவிலிணைந்து ।
மனமடங்கி அப்பட்ட பரவசத்திலே நின்றேன்" ॥

என்று அவருக்கு அனுபவத்தில் உணருமாறு விவரித்தார்.

அதைப்போன்றே ஒரு நாள் ஹடயோக சாதகர்களுக்கு விவரித்துக் கொண்டிருந்த பொழுது சகுண அஷ்டாங்க யோகத்தின் மூலமாக எப்படிப் புறத் தூய்மையையும் நிர்குண அஷ்டாங்க யோகத்தின் மூலமாக அகத்தூய்மையையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும், மற்றும் யோகத்தின் படிகளான யமம், நியமம் போன்றவற்றை அகத்திலும், புறத்திலும் எவ்விதம் சாதித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அறிவுறுத்தினார்.

"ஆசனத்தில் நிலைத்தமர்ந்து மனமடங்கி ।
மூக்கு நுனியில் நிலைநின்றால் முக்தியாம் ॥"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


என்று ஆசனம் என்னும் சொல்லின் பொருளை விவரித்து, சித்தாசனம், சுவஸ்திகாசனம், பத்மாசனம், வீராசனம், சுகாசனம் போன்ற ஆசனங்களைச் செய்யும் முறையைக் காட்டியும் அறிவுறுத்தினார்.

மெய்மறந்த நிஜகுணர், சுகாசனத்தில் அமர்ந்து கொண்டு, மகிழ்ச்சியால் புளகமடைந்து பாடத்தொடங்கினார்.

"பரநாதம் எனும் சாமக்கோழி நன்கு கூவுகிறது ।
பரபிந்து எனும் கிழக்கிலே செம்மை அரும்பியுளது ॥
நீண்ட காலமாக அமுங்கியிருந்த அஞ்ஞானமெனும் இருள் ।
இருப்பதற்கு அஞ்சி அகல்கிறது ॥
குண்டலினி எனும் சூரியன் தலைகாட்டுகிறது ।
பிரம்மரெனும் பறவைக் கூட்ட ஒலி பொங்கிப்பாய ॥
தகுந்தபல இதயமெனும் தாமரை மலர்கிறது ।
பாவமற்ற நீ விழித்தெழுந்து நிலை கொள்வதற்கு ॥"

என்னும் அந்தப்பாடலில் இரண்டாவது அற்ற ஆன்ம அழகு தூறை கொண்டது. விவரித்த முறையானது சிகரத்தையே அடைந்தது. உணர்வு - அனுபவங்களின் ஒப்பற்ற சங்கமத்தின் இணையைக் கண்டு அங்கு அமர்ந்திருந்தோர் தலைவணங்கினர்!. பாடலின் உட்பொருளை உணர்ந்த அவர்கள் அவ்வனைத்தையும் அறிவின்கண் கண்டு கொண்டனர்! பரநாதம் என்னும் அருணோதயத்தைக் கண்டனர்! ஞானக் களஞ்சியமான நிஜகுணரின் அந்த இதயத்தைத் தொடவல்ல அனுபவபூர்வமான பேச்சு என்னும் ஜோதிர்லிங்கத்திலிருந்து, நீண்ட காலமாகப் பல்கிப் படர்ந்திருந்த, அஞ்ஞானம் என்னும் இருளானது அஞ்சி ஓடியதைக் கண்டனர். இருள் கரைந்து விட்ட அந்த இடத்தில் மேல்முகமாக வாயை வைத்துக் கொண்டுள்ள குண்டலி என்னும் சூரியன் உதயமாவதைக் கண்டனர். நாற்பது பிரம்மர் என்னும் பறவைக் கூட்டமானது அவர்களின் இதய ஆகாயத்தில் ஒலி எழுப்பியதைக் கேட்டனர்! இதயகமலமானது மலர்ந்து கொண்டு இருப்பதைக் கண்டு, பாவமற்ற தூய ஆன்மாவானது விழித்தெழுவதைக் காண அவர்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

உணர்வு மயமான உலகத்திலிருந்து நிஜகுணர் விழிப்படைந்தார். காவிய உலகத்திலிருந்து விழிப்பு நிலைக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


வந்த அந்த ஆனந்தமயமான ரிஷிக்கு அந்த யோகிக்கு அந்த சாதகர்கள் அனைவரும் நமோ, நமோ என்றனர்.

மற்றொரு நாள், ராஜயோகிகளின் யோகப்பயிற்சியைப் பார்த்துவிட்டுப் பயிற்சியினால் அடையும் சித்தியின் ஆனந்தத்தை விவரித்தவாறு, ''நீயே அறிவு'' என்பதை அவர்களுடைய பயிற்சிமுறைகளினாலேயே கூறத் தொடங்கினார்.

''உன்னுடைய கண்ணால் காணுமனைத்திலும் நீ அறிவஎனும்
குறியின் ஒருமித்த எண்ணமே எஞ்சி''

அனைத்தும் உன் இருப்பிலே வெளிப்படுகிறது. எல்லாத் தத்துவங்களும் உன்னுடைய விளக்கிலிருந்து விளக்கைப் பெற்று ஒளிர்ந்து கொண்டுள்ளன.

''தெளிவாக இதயகமலத்தில் அன்னத்தை, உறுதிப் ।
பொருட்களை அடையச் செய்யும் சம்புலிங்கமே'' ॥

''புரிந்ததா? ஹம்ஸராஜரே? என்று நிஜகுணர் சிரித்தவாறு கூறினார்.

''பேறு பெற்றேன் ஸ்வாமி'', என்று ஹம்ஸர் நிறைவுடன் கூறினார்.

''ராஜயோகிக்கு வேறு விதமான முக்தி சாத்தியமா?''
என்று சுகமுனிகள் கேட்டார்.

''யோகிக்கின்றி வேறுவகைமுக்தி கிடைக்குமா ।
நிலைத்த ஆசனம், நேரான உடல், அடங்கிய புலன் ॥
பிராணன், மனம், கவனத்தின் ஒருங்கிணைவு எனும் ।
உயர்ந்த மனத்தின் முயற்சியால் இயலும் ॥''

என்று அவர் மனத்திலே எஞ்சியிருந்த சிறிய சந்தேகத்தையும் அகற்றிவிட்டார்.

இந்த விதத்தில் அந்த நான்கு விதமான யோக சாதகர்களுடன் இணைந்து, அவர்களுடைய மனத்திலிருந்த மாசினை அகற்றித் தூய்மை செய்தார். இந்தக் காலக் கட்டத்தில் நிஜகுணர் அவர்கள் அனைவரின் அன்பு, பக்தி, மதிப்பு, கௌரவத்திற்குப் பாத்திரமானார். நிஜகுணரால் அந்த யோக ஆசிரமத்திற்கே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


இப்பொழுது வேறு எங்கும் இல்லாமலுள்ள யோகபலமும், அரியதொரு களையும் வந்ததைப் போல இருந்தது. அவர் யோகத்தை அறிவுறுத்தும் முறையையும் மற்றும் எல்லா யோகங்களிலும் அவருக்கு இருந்த பரிபக்குவம், அனுபவம் போன்றவற்றையும், அவருடைய கவிதை இயற்றும் திறமையையும் நாள்தோறும் கண்ட நிராபாரிதேசிகர், நிஜகுணரைக் குறித்துப் பெருமைப்பட்டார்.

அவர் தம்முள்ளே ஆனந்தம் அடைந்து ''அன்று குருசம்புலிங்கரைக் குறித்து தெரியப்படுத்தியதற்கு நிஜகுணன் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தான். குரு சம்புலிங்கத்தின் யோகம் உள்ளது என்று அன்புடன் கூறிய உயர்ந்த குருவான நிராபாரிதேசிகர் என் ஆசனத்தில் வீற்றிருக்கட்டும்'' என்று எவ்வளவு திறமையுடன் நன்றியை வெளிப்படுத்தினான். அப்பா! குருவான சம்புலிங்கர் யோகசாலி. ''யோகம் என்றால் ஒன்று சேர்வது என்றுதானே பொருள்?'' தன் குருவான சம்புலிங்கருடன் அவன் இணைய இருக்கிறான். இணையட்டும். அந்த சம்புலிங்கரை இந்தக் குழந்தை வெகு விரைவில் சந்திக்கட்டும் என்று மனத்திலேயே வாழ்த்தினார்.

இந்த மூன்று நான்கு மாதங்களில் நிஜகுணர் அந்த சாதகர்கள் அனைவரின் இதயங்களையும் சூறை கொண்டுவிட்டார். அன்று அவர் புறப்படும் நாள் ஆகும். விசுவநாதனுக்கு இங்கேயே இருந்து விடக் கூடாதா? என்று தோன்றாமல் இல்லை. ஆசிரமத்திற்குச் செய்ய வேண்டிய தொண்டினை செய்து முடித்தாயிற்று. குரு அவர்கள் கொடுத்த சமயமும் முடிந்து விட்டது. அறுபகைகளைக் களைந்து கொண்ட அந்த சாதகர்களும் நிஜகுணரை விட்டுப்பிரிய வேண்டி உள்ளதே என்று கலங்கினர். அவர்களுடைய முகங்களிலே யோகத்தினால் ஏற்பட்ட களையானது அகன்று பிரிவின் வேதனையானது தென்பட்டது. நிஜகுணருக்கு விடை கொடுத்து அனுப்பும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து அவருக்கு உபநிஷதங்கள் ஆகமங்களின் கையெழுத்துப் பிரதிகளைக் காணிக்கையாக அளித்தனர். ''ஸகலயோகஸார்வபௌம'', ''யோகிகுலதிலக'' என்னும் விருதுகளை அளித்து ''நிஜகுணயோகிகளுக்கு ஜெயம் உண்டாகட்டும்'' என்று ஜெயகோஷம் எழுப்பினர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிஜகுணரும், விசுவநாதனும் நிராபாரி குரு அவர்களின் திருவடிகளில் விழுந்து வணங்கினர். நிஜகுணரின் குரல் தழுதழுத்தது. நிராபாரிகுரு அவர்கள் நிஜகுணரைக் கட்டித் தழுவிக் கொண்டு இதயம் நிறைந்து வாழ்த்தினார். நிஜகுணர், சாதகர்களில் சிலரைக் கட்டித் தழுவி சிலருடன் கைகுலுக்கி, சிலருடைய தலையைத் தடவி, சிலருடைய உடலைத் தடவி, சிலருடன் இன்மொழிகளைப் பேசி விடைபெற்றார்.

சங்கரயோகி, நிஜகுணரைத் தழுவி, அவருடைய திருவடிகளில் பணிந்து கண்களைத் துடைத்தவாறு பின்னால் சென்றார். மருளசித்தர் முன்னால் வந்து நிஜகுணரை வணங்கி, மருளரைப் போல விக்கிக் கொண்டு ஓரத்திற்குச் சென்றார். நிஜகுணர் அவர்கள் அனைவரையும் சமாதானம் செய்து ''இவ்விதம் மோகத்திற்கு ஆட்படுவது சாதகர்களுக்கு அழகன்று'' என்று இதமாகப் பேசி அனைவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, நிராபாரி தேசிகரை மீண்டும் பணிந்துவிட்டு, பாததூளியைத் தலையிலே தரித்துக்கொண்டு புறப்பட்டு நின்றார். ஆசிரமத்தின் வெளிச்சுற்று வரையிலும் அவர் விடைஅளிப்பதற்கு வந்தார். நிஜகுணரே அவரை அங்கேயே இருக்குமாறு கேட்டுக் கொண்டு, ''போதும். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். நான் சென்று வருகிறேன்'' என்று கூறி முன்னால் சென்றார்.

''சென்று வாருங்கள் யோகியே'' என்று ஒருவர் கூற, ''யோகத்துடன் பிரிவின் வேதனையை அகற்றிக் கொள்ள வேண்டும் என்னும் அறிவையும் புகட்டியுள்ளீர். மற்றொரு முறை மீண்டும் இங்கே வாருங்கள்'' என்று மற்றொருவர் கூறினார்.

இவ்விதத்தில் அவர்கள் அனைவரும் நிஜகுணர் விசுவநாதனிடம் ''சென்று வாருங்கள்'' என்று கூறியவாறு அங்கேயே நின்று கொண்டு இருந்தனர். நிஜகுணர் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு கைகளை வீசி அவர்கள் அனைவரிடமிருந்தும் விடை பெற்றுக் கொண்டு முன்னால் சென்றார். தொலைவிலே செல்லும் நிஜகுணரையே பார்த்தவாறு இன்னமும் நின்றுகொண்டே இருந்தனர். தூய்மையான ஆடை, சூரிய நிறத்தில் மின்னும் அந்த ஜடை, தாடி, அவருடைய வீர உருவம், அற்புதமான ஒளி என்னுமிவை அவர்கள் அனைவரையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிறைபிடித்ததைப் போல இருந்தது. நிஜகுணர் கண்ணிலிருந்து மறைந்தபிறகு இதயத்தில் எதையோ இழந்ததைப் போல அவர்கள் அனைவரும் நீண்ட பெருமூச்சு விட்டவாறு ஆசிரமத்தின் பக்கமாகத் திரும்பினர். ஆசிரமம் வெறிச்சோடிக் கிடப்பதைப் போல எண்ணியவர்களுக்கு, நிஜகுணருடன் அவர்களுடைய உற்சாகமும் சென்றுவிட்டதோ என்பதைப் போல ஆயிற்று. நீண்ட நாட்களுக்கு நிராபாரி குரு முதற்கொண்டு மற்ற சாதகர்கள் அனைவரும் நிஜகுணரின் இயல்புகளைப் புகழ்ந்து பேசியவாறே இருந்தனர்.

நிஜகுணர் - விசுவநாதரின் பயணம் மீண்டும் தொடங்கியது. வழி சென்று கொண்டே இருந்தது. சூரியன் மறையும் பொழுது இவர்கள் தங்களுடைய பயணத்தை நிறுத்திக் கொண்டு ஓய்வு எடுப்பார்கள். பிறகு அதிகாலையில் சூரியன் உதிக்கும் பொழுது பயணத்தைத் தொடங்குவார்கள். நிஜகுணர் வழியிலே யாருடனும் அதிகமாகப் பேசுவது தொடர்பு கொள்ளுவதை விரும்பாமல் மௌனமாகவே செல்வார். வழிப்போக்கர்களில் பலரும் அரிய ஒளியுடன் விளங்கும் நிஜகுணரை நின்று இமைக்காமல் பார்ப்பார்கள். இன்னும் பலர் ஈர்க்கப்பட்டு அவரை வணங்குவார்கள். அவர்கள் அனைவருக்கும் இதயமானது அமைதியான முழுநிலவின் ஒளியைப் போல குளிர்ச்சியாக இருந்தது. மனத்திற்கு இதமாக இருந்தது. உலகத்தின் கண்களில் அழகிய பொருளானது அழகாகவே தென்படும். அதைப்போல பூஜிக்கத்தகுந்த மனிதர் பூஜிக்கத் தக்கவராகவே தென்படுவார். மனிதனுக்குத் தெரிந்திருந்தாலும், தெரியாமலிருந்தாலும், அந்த மனிதரின், அருகாமையில் அமைதி கிடைக்குமாயின், அந்த மனிதர் மகாத்மாவாகவே இருக்கவேண்டும். இவ்வாறு நிஜகுணரின் மகிமை மற்றும் ஒளி வட்டத்திலே, தெய்வீகப் பாதுகாப்பிலே வரும் மனிதர்கள் அவருடைய தெய்வீகக் களையால் ஈர்க்கப்பட்டு பாராட்டி தலைவணங்கிக் கொண்டிருந்தனர். விசுவநாதன் முதலில் இருந்ததை விட நூறுமடங்கு பக்தியுடன் நிஜகுணரைக் காவல் காப்பவனாகி அவருடைய காவியச் செல்வத்திற்கு உறுதியான பாதுகாவலனாகி அவருடைய புகழானது நிலைத்து இருக்க வேண்டுமென்று விரும்பியவாறு அவரைப் பின்பற்றிச் சென்று கொண்டிருந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHF(USA)


நதியிலே நீந்தி முன்னேறிச் சென்றனர். நதியை ஒட்டியிருந்த அப்பகுதி மிகவும் அழகாக இருந்தது. தென்னை, பாக்கு, வாழைத் தோட்டங்கள் கண்களுக்கு விருந்தாக பயணக் களைப்பை மறந்து விடுமாறு செய்தது. வெயிலைப் பொருட்படுத்தாமல் அவர்கள் சென்றனர். நிஜகுணரின் திருவடிகள் நிலத்தில் படுவதால் புளகம் அடைந்த அந்த நிலமும், அந்த நிலத்தின் ஒவ்வொரு அணுவும் உற்சாகத்துடன் மேலே எழும்பி செந்தூளாக ஆயிற்று.

அவர்கள் இப்பொழுது மேற்குப் பகுதியைத் தாண்டி முன்னேறிச் சென்றனர். துங்கபத்திரையின் மங்கலமான சூழலைத் தாண்டி சுவாதீ நாட்டின் அருகிலிருந்த பட்டணத்தில் நுழைந்தனர். புஜலிங்க ஶிவயோகியின் தெளிவற்ற உருவமானது நிஜகுணரின் கண்முன்பு சுழன்று விட்டுச் சென்றது. மடத்திற்கு வழியைக் கேட்டுக் கொண்டே அவர்கள் புஜலிங்க ஶிவயோகியின் மடத்திற்கு வந்தனர்.

அந்த மடமானது அற்புதமான சிறந்து கட்டிடத்துடன் விரிந்து பரந்ததாக இருந்தது. எதிரிலே பரந்த முற்றம் இருந்தது. இடப்பக்கத்தில் அழகிய பூந்தோட்டமிருந்தது. வலப்பகுதியில் வில்வவனம் தென்பட்டது. மடத்திற்கு வருபவர்களின் மூன்று இயல்புகளைக் காட்டுவதைப் போல விளங்கியது. அவ்வளவு தொலைவிலேயே மலர்களின் நறுமணமானது நிஜகுணரை மௌனமாக வரவேற்றது. இடப்பக்கம் வலப்பக்கங்களிலிருந்த இரு தென்னை மரங்கள் கைகளை வீசி அழைத்தன. இன்னும் சிறிது முன்னால் சென்றதும் முற்றத்திலே விளையாடிக் கொண்டு இருந்த மான்குட்டி ஒன்று ஓடிவந்து நிஜகுணரின் கையை முகர்ந்து வரவேற்றது. அதன் அருகிலேயே இந்த அழகான வெள்ளை நிறத்திலிருந்த கன்றுக்குட்டி 'அம்மா' என்று ஆனந்தத்துடன் துள்ளி விளையாடியது. மடத்தின் நுழைவாயிலிற்கு வந்தபொழுது அங்கேயே மல்லிகை மண்டபத்தில் கூட்டில் இருந்த ஒரு கிளியானது "ஶிவயோகி வந்துள்ளான்! ஶிவயோகி வந்துள்ளான்" என்று அழகாகக் கூறியவாறு படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு வரவேற்றது.

அதனுடைய இனிய சொற்களைக் கேட்ட நிஜகுணர் சிரித்தவாறு "யார் வந்தாலும், "ஶிவயோகி வந்திருக்கிறான்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


என்று கூறுவதற்கு அதற்குக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும் அல்லவா விசுவநாதா?'' என்று கூறினார்.

''ஸ்வாமி, இது ஶிவயோகிகளின் இருப்பிடம், மற்றும் ஶிவயோகியே வந்திருக்கும் பொழுது அதற்கு அப்படியே மனத்திலே தோன்றியிருக்க வேண்டும்'' என்று விசுவநாதன் தன் மாறுபட்ட கருத்தை வெளிப்படுத்தினான்.

உள்ளே செல்வதற்கு தயங்கிக் கொண்டிருந்த பொழுது மடத்தின் உள்ளிருந்து வெளியே வந்த ஒரு மனிதர் ''வாருங்கள், வாருங்கள்; ஶிவயோகிகள் லிங்க பூஜை செய்து கொண்டு இருக்கிறார். வாருங்கள்'' என்று உள்ளே அழைத்துக் கொண்டு சென்றார்.

அவர்கள் நீராடிய பிறகு பாலும் பழமும் கொடுத்து உதவி செய்து மடத்தை ஒட்டியிருந்த முற்றத்தில் அமரச் செய்தார்.

ஶிவயோகிகளின் பூஜையானது இன்னும் நிறைவு பெற்றிருக்கவில்லை. வெளியில் அனைவரும் காத்துக் கொண்டு இருந்தனர். உள்ளே மணியின் ஒலி கேட்டதும் அனைவரும் மங்களம் பாடிவிட்டு அமர்ந்துக் கொண்டனர். சிறிது நேரத்தில் ஶிவயோகிகள் ''மங்கலம் உண்டாகட்டும், மங்கலம் உண்டாகட்டும்'' என்று கூறியவாறு வெளியிலே வந்தார். அவர் மிதித்த அந்த பாதுகையின் ஒலியானது ''பேறுபெற்றேன்'' என்பதைப் போலக் கேட்டுக் கொண்டிருந்தது. புஜலிங்க ஶிவயோகிகளின் அந்த அற்புதமான உடல், தியாகம் - பற்றற்ற தன்மையின் அடையாளமான காவி வண்ண உடையைத் தரித்திருந்ததால் புனிதமானதாக சோபித்துக் கொண்டிருந்தது. ஶிவயோகமே உடல் தரித்திருப்பதைப் போன்று முகத்தில் ஶிவகளை தாண்டவமாடியது. மங்கலத்தை அளிக்கும் பார்வை நெற்றியிலே விபூதி, கழுத்திலே இஷ்டலிங்கம் (வீர சைவர்கள் உள்ளங்கையில் வைத்து பூஜை செய்யும் சிறிய லிங்கத்திற்கு இஷ்ட லிங்கம் என்று பெயர்) உருத்திராக்க மாலை என்னும் ஒவ்வொன்றும் அவருக்கு என்றே சொல்லி செய்ததைப் போன்று பொருத்தமுடையதாக இருந்தது. ஶிவயோகியின் நல்ல லட்சணங்கள் அனைத்தும் அங்கு வெளிப்பட்டன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


ஶிவயோகிகள் ஒருமுறை அங்கு சுற்றி நின்று கொண்டு இருந்த அனைவரையும் பார்த்துவிட்டு இருக்கையில் அமர்ந்தார். அனைவரும் "ஜெய ஜெய நம பார்வதி...பதயே... ஹரஹர... மஹாதேவ..." என்று ஜெயகோஷம் எழுப்பி அமர்ந்து கொண்டனர். அவருடைய எதிரிலே ரத்தினக் கம்பளத்தின் மீது அமர்ந்து கொண்டிருந்த நிஜகுணரின் மீது அவருடைய பார்வை மையம் கொண்டது. நிஜகுணர் எழுந்து நின்று நெடுஞ்சாண்கிடையாக வணங்கிவிட்டு அமர்ந்தார். விசுவநாதனும் அவரைப் பின்பற்றினான்.

புஜலிங்க ஶிவ யோகிகள் வெண்கலக் குரலில்

"தாகம், சோகம், மோகம், மதம், பொறாமை என்னும் இவைகள் இல்லாமல் இருப்பவன்; நாஹம், கோஹம், ஸோஹம் என்னும் உணர்வு இல்லாமல் இருப்பவன், எட்டுவித அர்ச்சனைகள், பதினாறு வித உபசாரங்களை விட்டவன். கர்ப்பூரமும் நெருப்பும் ஒருங்கிணைந்து கர்ப்பூரத்தின் இயல்பழிந்து நெருப்பாகவே ஆவதைப் போல லிங்கத்தை நினைத்து லிங்கமாகவே ஆகியிருப்பவன். உண்மையான ஐக்கிய நிலையிலே நின்று நிலைபெற்ற இவருடைய பெயர் நிஜகுணர் என்பதாகும்" என்று பொருள்பொதிந்து நிஜகுணரை அங்கிருந்த அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். அனைவரும் நிஜகுணருக்குக் கையைக் கூப்பித் தங்களுடைய பக்தியை வெளிப்படுத்தினர். நிஜகுணர் மீண்டும் ஒருமுறை ஶிவயோகிகளை வணங்கிவிட்டு கையைக் கூப்பியபடி தலையைத் தாழ்த்தியவாறு "ஶிவனின் நெருங்கிய தோழியான பக்தி தேவதையைத், தன்னை, சம்புலிங்கத்தைத் தெரியப்படுத்திய ஸ்ரீகுருவின் திருவடிகளை வணங்குகிறேன்" என்று கூறினார்.

அவருடைய பேச்சிலே பக்திச்சுவை ஊற்றெடுத்து ஶிவயோகிகளைப் புளகம் அடையுமாறு செய்தது. புஜலிங்கர் நிஜகுணரின் உடலைத் தடவிக் கொடுத்தவாறு,

"வெட்டவெளியில் நிலையுற, சுவர்க்க, உலக,
பாதாளத்திற்கு இடம் எங்குளது!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மேகத்தின் தூய நீரெலாம் முத்தானால் ஏழு கடல்களுக்குத் தண்ணீர் எங்குளது?

துயரப்படும் மனிதரெலாம் முழு ஶிவஞானிகளாகி விட்டால்

பிறவிக் கொடிக்கு விதை எங்குளது? இதனால் கூடல சென்ன சங்கய்யனிடம், லட்சத்தில் ஒருபக்தன், கோடியில் ஒருவன் சரணன்.

அத்தகு சரணன் நீ நிஜகுணா''

என்று வாய் நிறைந்து பாராட்டினார். அவருடைய பேச்சிலே, பார்வையிலே, நிஜகுணரை ஈர்க்கும் அற்புதமான உலகியல் சாராத ஆற்றல் இருந்தது. அதனாலேயே அவர் பேச்சைத் தொடர்ந்து,

''கர்ப்பூரமலை தீப்பிடித்து எரிந்தபின் கரிஉண்டோ?
பனி படர்ந்த ஶிவாலயத்திற்கு வெயிலின் கலசமுண்டோ?
தணல் மலையை அரக்கு பாணம் தீண்டின், மீண்டும்
பாணத்தைத் தேட இயலுமா?
உன்னை நீ அறிந்தபின் வேறு கடவுளைத் தேடுவது உண்டோ?

நிஜகுணா! எதைத் தேடிக் கொண்டு நீ இங்கு வந்தாய்? என்று கேட்டார். ஶிவயோகிகளின் பேச்சிலிருந்த ஆழம் மிகுந்த கூர்மை, நுட்பத்தன்மைகளை அடையாளம் கண்டு கொண்டு பாராட்டிய நிஜகுணர், அவருடைய சொற்களாலேயே, ''கற்பூரமலையானது தீப்பிடித்த பிறகு அங்கு கரி இல்லை. தணல் மலையை அரக்குபாணம் தொட்டால் மீண்டும் பாணத்தைத் தேடுவதும் இல்லை. என்னை அறிந்தபிறகு வேறு கடவுளைத் தேடிக் கொண்டு இங்கு வரவில்லை. அன்னிய வேறுபாடு என்பது இல்லை'' என்று பணிவுடன் கூறினார்.

நிஜகுணருடைய பதிலால் நிறைவடைந்த புஜலிங்க ஶிவயோகிகள், ஓய்வெடுப்பதற்காகக் கிளம்புவதற்கு எழுந்து நின்றார். ''நல்லது, மல்லிகார்ச்சுன தேவரே, இவர்கள் ஓய்வு எடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுங்கள். நிஜகுணரே, விசுவநாதரே இப்பொழுது சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு மீண்டும் மாலை நேரத்தில் சந்திப்போம், மங்கலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உண்டாகட்டும், மங்கலம் உண்டாகட்டும்'' என்று கூறியவாறு ஓய்வு கொள்ளும் மாளிகைக்குச் சென்றார்.

அவர்கள் இருவருக்கும் ஒரு அறையை ஏற்பாடு செய்து, மல்லிகார்ஜுன தேவர் அவர்களை அங்கு அழைத்துச் சென்றார். அறிமுகம் ஆன ஆர்வத்தால் இன்னும் சிலர் நிஜகுணரைப் பின்பற்றிச் சென்றனர். அவர்கள் அனைவரையும் அமர்ந்து கொள்ளுமாறு கூறி மிகவும் அன்புடன் அவர்களிடம் பேசினார். சிறிது நேரத்திற்கு அங்கு மௌனம் நிலவியது. மல்லிகார்ச்சுன தேவர் அங்கு அருகிலேயே இருந்த சுருதிப்பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து, பைரவி ராகத்தில் ஆலாபனை செய்து, சுருதிப்பெட்டியின் சுருதியுடன் தம்முடைய குரலை இணைத்தவாறு பாடத் தொடங்கினார்.

''ஶிவயோகிக்கு மனம் உண்டோ, மருளே?

ஶிவயோகிக்கு மீண்டும் மன ஒருமைப்பாடு உண்டோ!

இல்லாத மனத்தை உண்டு எனக்கூறி, அடக்கினேனென்பாய்.

சொல் மனத்திலே நிலைத்து விளங்க.

குகேஸ்வரன் அறிந்த பக்தருக்குக் காட்டவில்லை,

அடங்கவில்லை, கேளாய்.''

என்று நிஜகுணருக்கு இனிமையாகப் பாடிக் காட்டினார்.

குறுகிய காலத்திலேயே ஶிவயோகியின் நிலையை விவரித்த அப்பாடலிற்கு நிஜகுணர் மனத்தைப் பறி கொடுத்தார். தம்முடைய பாராட்டுதலை வெளிப்படுத்தியவாறு, ''பலே, மிகவும் அழகாகப் பாடினீர்கள். அந்த வசனம் அல்லமப்பிரபு அவர்கள் இயற்றியது அல்லவா?'' என்று அவர் கூறியபொழுது அங்கிருந்த அனைவரும் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

மல்லிகார்ச்சுன தேவரும் வியப்புடன்.

''உங்களுக்குச் ஶிவசரணர்களின் வசனங்களின் அறிமுகம் இல்லையா? இது அல்லமப்பிரபு அவர்களுடைய வசனம் தான்'' என்று கூறினார். (வசனம் என்பது கன்னட மொழியிலே ஒரு செய்யுள் வகையாகும்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஶிவசரணர்களைக் குறித்து அறிந்துகொண்டிருக்கிறேன். அவர்களுடைய வசன நடையைக் குறித்தும் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் சிறப்பாகப் பயிற்சி பெறவில்லை. இருக்கட்டும், நீங்கள் மிகவும் அழகாகப் பாடினீர்கள். இன்னொரு வசனத்தைப் பாடுங்கள்'' என்று கூறினார்.

''பிராணலிங்கத்திற்கு உடலே விரிப்பு, ஆகாயகங்கையில் திருமஞ்சனம்
மலரற்ற நறுமண பூஜை, இதயத்தாமரையிலே 'ஶிவ ஶிவ'
என்னும் ஒலி இது அத்துவைதம் காணாய் குகேஸ்வரனே''

என்று மல்லிகார்ச்சுனர் பாடி முடித்துவிட்டுச் சுருதிப்பெட்டியை ஓரமாக வைத்தார்.

''இனிமேல் போதும், தாங்கள் அவசியம் ஓய்வு எடுங்கள்'' பிறகு ''மாலை நேரத்திலே புலன்களுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களைக் குறித்துப் பேசும்பொழுது சந்திக்கலாம்'' என்று கூறியவாறு அவர் எழுந்தார்.

மடத்தின் அகன்ற முற்றத்திலே, மாலை நேரத்திலே, நடைபெறவுள்ள புலன்களுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களைக் குறித்த விவாதத்தைக் கேட்பதற்கு அனைவரும் குழுமியிருந்தனர். நடுவிலிருந்த இருக்கையில் புஜலிங்க ஶிவயோகிகள் அமர்ந்திருந்தார். சீடர்கள் அனைவரும் அங்கு குழுமி இருந்தனர். மாலை நேரப் பிரார்த்தனையானது அந்த மடத்திலே எங்கெங்கும் அலைஅலையாகப் பரவி, விவரிக்கவியலாத புனிதமான சூழ்நிலை ஏற்பட்டு இருந்ததைப் போலத் தோன்றியது.

அதன்பிறகு ஶிவயோகிகளின் ஞான உபதேசத்தால் அனைவரும் புனிதம் அடைந்தனர். தம்முடைய இடப்பக்கமாகத் திரும்பி. ''ஶிவயோகிகளே! ஒரு பாடல் பாடுங்கள்'' என்றார். கள்ளங்கபடமற்ற தன்மையே உருவெடுத்ததைப் போலத் திகழ்ந்த அந்த மனிதர் தலைவணங்கி, ''ஆணை'' என்று பாடத் தொடங்கினார்.

''தலைமகள், நானுமைப் புகலடைந்துள்ளேன் ।
'கம்' என மணம் கமழ்வான், அழைக்க வாருங்கள் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சென்னண்ணனிற்கு, மடிவாளனிற்கு ।
நம் தத்தை பசவய்யனின் திருவடிக்கு ॥
அஜ கண்ணனிற்கு, சத்தியண்ணனிற்கு ।
நம் ஐயன் பிரபு தேவரின் திருவடிக்கு
மங்கலம் பாடுவோம் ॥"

பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் அரிய ஆனந்தமான அனுபவம் ஏற்பட்டது. நிஜகுணருக்கு மகிழ்ச்சியுடன் வியப்பும், அந்த மனிதரின் மீது பக்தியும் ஏற்பட்டது. அவரும் அந்தப் பாடலின் மோடியிலே மெய்மறந்து அமர்ந்திருந்தார். பாடி முடித்த அந்த மனிதர் ஒருமுறை புஜலிங்க ஶிவயோகிகளைப் பார்த்துக் கையைக் கூப்பி வணங்கி விட்டு அமர்ந்தார்.

ஶிவயோகிகள், ''நிஜகுணா! இவருடைய பெயர் ஷடக்ஷர ஸ்வாமிகள் என்பதாகும். ஏரகம்பள்ளி என்னும் ஊரைச் சேர்ந்த சித்தலிங்க ஶிவயோகிகள் இவருடைய குரு ஆவார். இவர் கவிஞருமாவார் மற்றும் ஶிவயோகிகளும் ஆவார்'' என்று அறிமுகம் செய்து வைத்தபொழுது ஷடக்ஷர ஸ்வாமிகள் கைகளைக் கூப்பி வணங்கினார்.

நிஜகுணர் எழுந்து வந்து அவரை வணங்கி விட்டு அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டவாறு,

''ஷடக்ஷர ஸ்வாமிகளே! உங்களுடைய கவிதை எழுதும் ஆற்றலானது அற்புதமாக உள்ளது. நீங்கள் பாடிய அப்பாடல் எளிமையானதாகவும், அழகானதாகவும் உள்ளது. எனக்கு மிகவும் பிடித்துள்ளது'' என்று தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

புஜலிங்க ஶிவயோகிகள், ''எங்கு நீ ஒரு பாடலைப் பாடுவாய், கேட்கலாம்'' என்று நிஜகுணரிடம் கூறினார்.

அவர் கூறியபடியே நிஜகுணர்

''எத்தகைய துன்பத்தை ஏற்படுத்த இயலும் ।
உலகியலைச் சார்ந்துள்ள ஶிவயோகிக்கு ॥
சூரியன் சாரத்தையெலாம் சுவைத்து, எல்லாப் ।
பொருட்களையும் மகிழ்ந்துண்ண, தீயானது
காற்றையெலாம் தீண்டி தூய்மை செய்ய । (1)
அத்தகு பேதமிலா உருவம் தத்துவஞானிக்கு ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பளிங்கு உபாதியால், தாமரை இதழுடன் நீரிலே
மேகஜாலத்துடன் இணைய, ஆகாயம்
மாசடையாது, பூச்சற்று, நனைந்து கெடாத தனையது
நியமத்திலே நிலைத்து உணர்ந்த துறவிக்கு (2)

மரத்திலுளது அனல், ஆனால் அம்மரம் அனலிலே
இல்லாததனைய, எல்லா உலகியலிலும்
கூடியுள்ள குரு சம்புலிங்கமே தானாத
சரணனுக்கு உலகியல் இல்லை'' (3)

என்று ராகத்துடன், உணர்ச்சிப் பெருக்குடன் மெய் மறந்து பாடினார். அங்கிருந்த அனைவரும் அந்த ராகத்தின் ஆனந்தத்தில் மூழ்கி அமர்ந்து இருந்தனர். நிஜகுணர் பாவ சமாதியிலிருந்து விழிப்பெய்தினார்.

ஷடக்ஷர ஸ்வாமிகள், ''ஓ, மிகவும் நன்றாகப் பாடினீர்கள் இறுதியில் ''குரு சம்புலிங்கம்'' என்னும் முத்திரை உள்ளது அல்லவா. இந்தப் பாடலை அவர் இயற்றியுள்ளாரா?'' என்று உற்சாகத்துடன் கேட்டார்.

''அதை நான் தான் இயற்றியுள்ளேன். உங்கள் வாயினால் இன்னொரு பாடலைக் கேட்க வேண்டும் என்னும் ஆசை உள்ளது'' என்று நிஜகுணர் கூறியதும் ஷடக்ஷரஸ்வாமிகள் எத்தகைய கர்வமும் இன்றி,

''கிளியைக் கூண்டிலிட்டு, விளக்கிலெண்ணெய் ஊற்றி,
திரியை இட்டு, வரவை எதிர் நோக்கினே னம்மா।
சருகு சலசலப்பின், வெளியிலே கூர்ந்து நான் கேட்பேன்.
சென்று விட்டால் என் மனம் அஞ்சுமம்மா।
கூடலசங்கனின் அடியார் வந்து கதவின் முன்பு
ஶிவ என்றால் மகிழ்வேன் அம்மா।''

என்று பசவண்ணலின் வசனத்தை எடுத்துக் கொண்டு மிகவும் அழகாகப் பாடினார். அதன் பிறகு நிஜகுணரிடம் ''நீங்கள் ஒரு வசனம் பாடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

''மன்னிக்க வேண்டும். எனக்கு வசனங்களில் பயிற்சி இல்லை'' நிஜகுணரின் இந்த பதிலைக் கேட்டு ஷடக்ஷர ஸ்வாமிகளுக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. அத்துடன் சிறிய நிராசையும் ஏற்படாமல் இருக்க வில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''என்ன! உங்களுக்கு வசனங்களில் பயிற்சி இல்லையா! நம்ப இயலவில்லையே. காரணம் என்ன என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று ஷடக்ஷர ஸ்வாமிகள் ஆர்வத்துடன் நிஜகுணரிடம் விசாரித்தார். அங்கிருந்த அனைவரும் நிஜகுணரையே பார்த்துக் கொண்டு இருந்தனர். புஜலிங்க ஶிவயோகிகள் அகமுகமாக அமர்ந்து கொண்டிருந்தார்.

நிஜகுணர் ''உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வமானது நியாயமானது தான். கேளுங்கள் - நான் அரண்மனையில் இருந்தபொழுது ஒரு முறை இப்படி ஆயிற்று'' என்று தொடர்ந்து கூறினார். ஶிவனடியார்களின் வசனங்களின் தொகுப்பு எனக்குக் கிடைத்தது. அவற்றின் நடை, புதிய அமைப்பு, பொருள், அனுபவத்துடன் எழுதப்பட்ட அந்தச் சிறிய சிறிய வசனங்கள் என் மனத்தைச் சூறை கொண்டன. அவற்றை என்னுடைய அரச குரு அவர்களிடம் படித்துக் காட்டி நானும் இதைப்போன்றே என்னுடைய எண்ணங்கள் - கருத்துக்களை வசன வடிவத்திலேயே எழுத வேண்டும் என்று இருக்கிறேன்'' என்று கூறினேன். அப்பொழுது அவர் சிறிது நேரத்திற்கு எதுவும் பேசாமல் இருந்தார். மௌனமாக கண்களை மூடியவாறு அமர்ந்திருந்தார். நீண்ட நேரத்திற்குப் பிறகு தம்முடைய கம்பீரமான குரலில்

''நிஜகுணா! நிஜகுணா! என்னுடைய கூற்றை இங்கு நீ தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். அதிலுள்ள உண்மையான பொருளை உணர்ந்து கொள்வாய். வசனங்கள் என்றால் .... கடவுளின் சொற்களாகும். அது வீரசைவர்களுக்கு மட்டுமே உரியது அன்று. அந்த வசனங்களில் உண்மையான நிலையை மூலசொரூபத்தை, குறியை உணர்ந்து கொள்ள இயலும். அவை சாதகர்களுக்கு வழிகாட்டும் விளக்குகளாக உள்ளன. ஆனால் நிஜகுணா! நீ உணர்ந்து அனுபவித்ததை சாதகர்களுக்கு மனத்திலே பதியுமாறு கூறும் கலையானது உன்னிடம் மிகவும் ஆழமாக உள்ளது. வசனங்கள் எளிமையானவை, அழகானவை. நீ பாடல்களை இயற்றும் விதமானது சிறந்தது, அழகானது, மற்றும் முறையாக எழுதும் கலையானது உனக்கு சாத்தியமாக இருப்பதைப் போல மற்றவர்களுக்கு அப்படிச் செய்வது அவ்வளவு எளிதானதன்று!... ! வடமொழியில் உள்ள ஞான அமுதகங்கையை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கன்னடத்தில் இறக்கிக் கொண்டு வரும் பகீரத ஆற்றலானது உன்னிடம் உள்ளது. எனவே உன்னிடமுள்ள ஞானக்களஞ்சியம், இந்த வகையில் பாடல்களை இயற்றுவதில் பயன்படட்டும். இந்த ஒரு விஷயத்தை இறுதி வரையில் பின்பற்றினால், அதுதான் நீ எனக்குச் செலுத்த வேண்டிய குரு காணிக்கையாகும்'' என்று கூறினார். அவருடைய கருத்து எனக்குப் பிடித்திருந்தது அன்று முதல் நான் மூன்று ஆதாரநூல்களிலேயே பயிற்சி பெறத் தொடங்கினேன்.

இந்த நிகழ்ச்சியைக் கூறியதன் மூலம் நிஜகுணர், ஷடாக்ஷரரின் மனத்தின் வருத்தத்தை அகற்றினார். ஆனால் அவையில் இருந்த ஒருவருக்கு மட்டும் இது சரி என்று படவில்லை. அவன்தான் கர்ம காண்டத்திலுள்ளவற்றைப் பின்பற்றும் ருத்திரமுனியாவான். நிஜகுணருடைய நீதி, நேர்மை போன்றவை அவனுக்குப் பிடிக்கவில்லை. அவர் சிந்திக்கும் முறையை அவனால் ஏற்க இயலவில்லை. அனைவரின் அன்பிற்குப் பாத்திரமான அவரை அவன் பொறாமையுடனேயே பார்த்துக் கொண்டிருந்தான். கோணல்புத்திக்குக் காண்பது எல்லாமே கோணல்தான் அவன் எழுந்து நின்று கம்பீரமான குரலில் ''ஸ்வாமி. எனக்கு ஒரு கேள்வி கேட்க வேண்டும் தயவு செய்து சரியாகப் பதில் கூறுங்கள் முதலாவதாக, தங்களுடைய பூஜையைத் தாங்கள் எப்பொழுதாவது முடக்கி உள்ளீர்களா? இரண்டாவதாக ஜபம் போன்ற நியமங்களை ஏன் பின்பற்றுவது இல்லை? மூன்றாவதாக, அத்வைதம், அத்வைதம் என்று வாயினால் கூறிக் கொண்டிருந்தால் சாதிக்க வேண்டியதைச் சாதித்ததைப் போல ஆகுமா? எப்படி? என்று தன்னுடைய சந்தேகங்களை முன் வைத்தான்.'' அவனுடைய கேள்வியில் கபடத்தனம் இருந்தது.

''பேஷ்! ருத்ரமுனி அவர்களே! உங்களுடைய கேள்வி சாதகர்களுக்குப் பயன் அளிக்கவல்லதாக விளங்குகிறது. சாதகர்களை தொடக்ககாலத்தில் வாட்டிக் கொண்டிருக்கும் கேள்விகள் தான் அவை'' என்று புன்னகை புரிந்தார்.

புஜலிங்கஶிவயோகிகள் நிஜகுணரையே பார்த்துக் கொண்டு இருந்தார். ஷடக்ஷர ஸ்வாமிகளும் மிகவும் ஆர்வமாக இருந்தார். எஞ்சியிருந்தவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்தனர். ருத்ரமுனி,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



கர்வத்துடன் நெஞ்சை நிமிர்த்தியவாறு அமர்ந்து கொண்டிருந்தான்.

நிஜகுணர் கம்பீரமாக இருந்தார். அவருடைய முகத்தில் - ஞான ஒளியானது பெருகிக் கொண்டிருந்தது. ''ருத்திரமுனிகளே! கேளுங்கள், நான் மனிதனாக அதாவது மனிதனுக்கு இயல்பாக உள்ள இயல்புகளுடன் நான் ஶிவனைப் பூஜிக்கவில்லை. ஶிவனாகி, ஶிவனைப் பூஜிக்க வேண்டும். ஜபம் போன்றவற்றைச் செய்யும் பொழுது முறை இல்லாமல் செய்யக்கூடாது. அறியாமல் செய்தல் கூடாது. வீரசைவன் என்றால் கர்மங்களைச் செய்பவன் அன்று. அங்கு துவைதம், அத்துவைதத்தை மீறி நிற்கவல்ல அத்துவைத மற்ற நிலை உள்ளது. ஆனால் அதனை அறிந்து கொள்ளாமல் கர்மத்தின் பக்கமாகத் திரும்பியிருப்பது வேதனைக்குரியது. மனிதனாகச் ஶிவனைப் பூஜிப்பது, ஜீவனாகக் கடவுளை பூஜிப்பது அங்கமாக லிங்கத்தைப் பூஜிக்கும் இந்த வேறுபட்ட பக்தியானது உண்மையான வீரசைவனின் லட்சணம் அன்று. அந்த உருவமற்ற, இயல்பற்ற பரஶிவ உருவமுள்ள மூர்த்திதான் இந்த லிங்கமாகும். இது தான் நான் என்னுடைய சொரூபம்... என்று உணர்ந்து கொண்டு என்று விவரித்துக் கொண்டு இருந்த பொழுதே இடையில் தடுத்த ருத்திரமுனி,

''ஓ, உருவமற்றதற்கு உருவமா? குணமற்றதற்கு சகுணமா? இது நல்ல விசித்திரமாக உள்ளதே'' என்று வக்கிரமாகக் கூறினான்.

இந்த வக்கிரப் பேச்சினால் அவையிலே மின்னல் பாய்ந்ததைப் போல இருந்தது. ஆனால் நிஜகுணர், மாறுபாடு அடையாத மனத்துடன்,

''கேளுங்கள், உங்களுடைய கேள்வி நன்றாக உள்ளது. இப்பொழுது பாருங்கள். நம்மைச் சுற்றியுள்ள உலகம் அதிலுள்ள கண்டங்கள், நாடுகள், மலைகள், ஆண் - பெண் நதிகள் - என்னும் இவற்றை அவைகள் இருக்கும் இடத்திற்கே சென்று பார்த்து அறிந்துகொள்வது என்பது அனைவராலும் இயலாது. எவராலும் இயலாது என்று கூறும் அளவிற்குக் கஷ்டமானது. ஆனால் தெரிந்து கொண்டவர்கள் விவரித்தால் இவை இங்கு உள்ளன என்று தெரிந்து கொள்ள இயலும் இல்லையா? அதே விதத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உருவமற்ற பரஶிவனை இந்த ஒரு எளிமையான மற்றும் பொருள்பொதிந்த உருவ வடிவத்தால், மிகவும் சிறியதாகச் செய்து (இஷ்டலிங்கம்) நாம் நம்முடைய குறியைச் சென்றடைவதற்கு எந்தத் தடையும் இல்லை.

இது என்ன? நம் நாட்டின் வரைபடம். இங்கு பாருங்கள். இந்த வழியாகச் சென்றால் மைசூருக்கு, இந்த வழியினால் கல்யாணத்திற்குப் போகவியலும். இல்லையா. இது பயணத்திற்கு உதவத்தக்கது என்று இவ்விதம் செய்யப் பட்டுள்ளது. இதை நம்பாமல் இது என்ன? நம் பூமியின் வரைபடமா? நம்முடைய வட்ட வடிவமான பூமி இப்படிக் கோணலாக உள்ளதா? நூற்றுக் கணக்கான யோஜனைகள் உள்ள (1 யோஜனை என்பது சுமார் 12 மைல்கள்) பகுதியானது இங்கு ஒரு அங்குலமாக அல்லவா தென்படுகிறது? என்று இந்தவிதத்தில் பலவகைகளில் சந்தேகங்களை ஏற்படுத்திக் கொண்டு, அதைப்போன்றே போகாமல் இருந்தால் அவன் செல்ல வேண்டிய குறியைச் சென்று அடைய மாட்டான் அல்லவா? அதைப் போன்றே உருவமற்ற, குணமற்ற பரஶிவனே நீயாக இருக்கிறாய் என்று கூறினால் அது புரியாமல், அந்த வழிப்போக்கனுடைய நிலை ஏற்பட்டுவிடும். அதற்காகவே சாதகர்களுக்கு எளிமையாக இருக்க வேண்டும் என்பதற்காக ஸ்ரீகுருநாதன், உருவமற்ற, குணமற்ற பொருளை உருவமுள்ள, குணமுள்ள வடிவத்துடன் இந்த இஷ்டலிங்கத்தை அருளி உள்ளனர். இதை உணர்ந்து கொண்டு இந்த லிங்கம்தான் நான். நானே லிங்கம் என்று உறுதியாக அறிந்து கொண்டு நம்பி பூஜிப்பது வீரசைவனின் உண்மையான பூஜையாகும்.

ஸ்ரீருத்ரமந்திரத்தைப் பாராயணம் செய்ய வேண்டும் எனின் ஸ்ரீருத்ரனே தானாகி ஜபிக்க வேண்டும்.

''நாருத்ரோ ருத்ரம் யஜேத்'' ஶிவகவச மந்திரத்தை ஜபிக்கும் பொழுது ஶிவகவசேஸ்வரனாகவே ஜபிக்க வேண்டும். ''ஶிவோ பூத்வா ஶிவம் யஜேத்'' குருவிற்குப் பாத சேவை. அர்ச்சித்தல் போன்றவற்றில் ஆசாரியனே தானாகிப் பூஜிக்க வேண்டும். ஜங்கம தாசோகங்களில் ஜங்கமமூர்த்தியாக தானே ஆக வேண்டும். லிங்கத்தைப் பூஜிக்கும் பொழுது லிங்கமே தானாகி பூஜிக்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


வேண்டும். புரிந்ததா? குழந்தைகளுடன் விளையாடும் பொழுது குழந்தைகளாக ஆட வேண்டும் அல்லவா?

ஶிவபூஜைக்கு நேரக் கட்டுப்பாடு உள்ளதா? ஒருமணி நேரமாவது செய்யலாம். அரை நிமிடத்திற்கு வேண்டுமானாலும் செய்யலாம். பல நாட்களுக்குத் தொடர்ந்து செய்யலாம். அவ்வளவு ஏன்? ஆயுள் முழுவதும் செய்யலாம். யார் யாருக்கு எவ்வளவு எவ்வளவு இயலுமோ அவ்வளவு அவ்வளவு செய்யலாம். தொடக்கத்தில் புற பூஜையில் சாதித்தது அனைத்தும் சூட்சுமமாக ஆகிக் கொண்டே செல்கிறது. மனத்தில் இறங்குகிறது. புற பூஜையின் ஆடம்பரம். ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் அங்கு மறைந்து விடுகின்றன. இஷ்ட, பிராண, பாவ லிங்கங்களின் ஒருங்கிணைவு கூட இந்த அடித் தளத்தின் மீது தான் நின்று கொண்டுள்ளது.

நடக்க வராத குழந்தைக்குக் கால்வண்டி தேவைப்படுகிறது. நடப்பதற்குக் கற்றுக் கொண்ட பிறகும் அது வேண்டும் என்றால் நகைப்பிற்கிடமானதாகி விடும் அல்லவா? பிரம்மாண்டத்தில் இருப்பது பிண்டாண்டத்திலும் உள்ளது. மனம் வெளிப்புறமாக இருக்கும் வரையில் வெளிப்புறச் சாதனங்கள் தேவைப்படுகின்றன. அகமுகமாக இருக்கும்பொழுது அவை உள்ளே உள்ளன. ஆனால் இவ்வனைத்தையும் அறிந்து கொள்ளும் கண் வேண்டும்.

"அகத்திலே ஶிவலிங்க பூஜையைச் செய்வாய் ।
நயந்து, இன்பமீயவல்ல சாதனங்களுடன் கண்டு
செய்வாய் ॥
ஶிவனே அனைத்திற்கும் ஆதாரமென்பது ஆசனம் ।
எங்கும் நிறைந்தவனென்றறிவது ஆஹ்வானம் ॥
பரமஶிவனினருளே இவ்வுலகமென்பது பாத்யம் ।
ஆனந்தக்கடல், பிறப்பிலி என உணர்வது அர்க்யம் ॥
(1)

ஈசன் தூயஆன்மா என்பது ஆசமனீயம் ।
தூய புலனடக்கம் எனும் நீர் அபிஷேகம் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


முழுமையாக நிறைந்த உணர்வே வஸ்திரம் |
பகைவரால் சூழப்படாதுள்ள கலையே யஜ்ஞஸூத்ரம் || (2)

நல்ல மங்கல உதயத்தில் அலங்கார அனுபவம் |
அழகே லேபனம், மிகுந்த அன்பே அட்சதை ||
மனத்தில் மலரும் விஷய வாசனையி னழிவே தூபம் |
நிலைபெற்ற பரஞ்ஜோதியே தீபமாம் || (3)

பேதம் அடங்கிய அறிவே நைவேத்தியம் ஒப்பற்ற |
சத்துவம் போன்ற குணப்பெருக்கே தாம்பூலம் ||
இசைக்கருவிகளின் மேலான நாதமே'' ஸோஹம்பாவம்'' |
உபசாரம் நிலைபெற்றால் அதுவே பிரதட்சிணம் || (4)

எல்லாத் தத்துவங்களையும் மீறியிருப்பது நமஸ்காரம் |
குரு சம்புலிங்கத்துடன் தக்கமுறையில் பொருந்தி ||
யோகநெறியிலே உறுதியுடன் இயல்பாக |
முக்தி அடைவதே விசர்ஜனமாகும் || (5)

என்று உணர வேண்டும். கேளுங்கள். இப்பொழுது கர்ம, பக்தி, ஞானகாண்டங்களின் அறிமுகம் உங்களுக்கு உள்ளது அல்லவா? இங்கு, கர்மம், பக்தி என்னும் இரு காண்டங்களையும் விட்டு விடலாம். ஞான காண்டத்திலேயே, ஞான காண்டத்தின் கர்ம காண்டம், ஞான காண்டத்தின் பக்தி காண்டம், ஞான காண்டத்தின் ஞான காண்டம் என்று மூன்று வகைகள் உள்ளன. இந்த ஞான காண்டத்தின் கர்ம காண்டம்தான் ''ஶிவனாகி ஶிவனைப் பூஜிப்பாய்'' என்று கூறுகிறது. எல்லாச் செயல்களையும் ஶிவனுக்கு அர்ப்பிக்கும் அறிவுடன் செய்'' என்று கூறுகிறது.''

என்று தொடர்ந்து விவரித்துக் கொண்டிருந்த பொழுது, பாய்ந்து வரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தியதைப் போல இடையிலேயே மிருத்யுஞ்ஜெயர் ஒரு கேள்வியை முன் வைத்தார்.

''ஸ்வாமி, பசவண்ணல் கூட ''உழைப்பே கைலாயம்'' என்று கூறியுள்ளார்.'' அதற்குப் பதில் அளிக்கும் வகையில் நிஜகுணர் தமது விளக்கத்தைத் தொடர்ந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"உண்மைதான், உழைப்பே கைலாயம் என்னும் ஶிவனடியார்களின் கூற்று பொய்யன்று. அதிலே நுட்பமான பொருள் உள்ளது. உழைப்பே கைலாயம் என்பதைச் சாமான்னியமான கர்மகாண்டத்தைப் பின்பற்றுபவர்களுக்குப் புரிந்து கொள்வதற்கு இயலாது. ஞானகாண்டத்தின் கர்மத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டுமே இயலும்.

இன்னும் ஞானகாண்டத்தின் உபாசனா காண்டம் உள்ளது. ஶிவனாகி, ஶிவானந்தத்திலே மெய்மறந்து இருப்பது ஆகும். அது ராஜயோகத்தின் இறுதிநிலையாகும். இங்கு மனத்திலுள்ள புதையல் தென்படும்.

மூன்றாவதாக இருப்பது ஞானகாண்டத்தின் ஞானகாண்டம் ஆகும். அகத்திலும், புறத்திலும் எங்கெங்கும் ஶிவமயம். இது ஐக்கியமானவனின் ஐக்கிய நிலையாகும். ஆறு தலங்களையும் ஏறியவனின் நிலையாகும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் என்றால் ஸ்ரீ ஸ்ரீ புஜலிங்க ஶிவயோகிகள் ஆவார். அவருடைய அந்தப் புனிதமான அருகாமையினால் மட்டுமே மனத்திலே உணர்ந்து கொள்ள இயலும்.

நிஜகுணரின் மிக நீண்ட விளக்கமானது அனுபவபூர்வமானதாக இருந்தது. அவர் சிறிது நேரத்திற்கு மௌனமாக இருந்தார். மல்லிகார்ச்சுனர், ருத்ரமுனிகளிடம் "உருத்திரமுனிகளே! உமக்குக் கணக்கற்ற நன்றியைக் கூறுகிறேன். நிஜகுணரிடம் அடங்கியிருந்த தத்துவ ரகசியத்தை வெளிப்படுத்துமாறு செய்த புண்ணியம் உங்களுடையது ஆகும். நீங்கள் அந்தக் கேள்வியைக் கேட்காமலிருந்திருந்தால் இந்தச் சிறந்த கருத்துக்களும் சிந்தனைகளும் ரகசியமாகவே இருந்திருக்கும்.

வைராக்கிய மூர்த்தியான மகாதேவி அக்கா அவர்களும் இதைப் போன்றே கூறவில்லையா ருத்திரமுனிகளே?

ஐக்கியத்தலத்திலே ஐக்கிய நிலையை விவரித்தவாறு.

"இலிங்கமன்று, இலிங்கமுக்தியன்று,
இணைதலன்று, சமரசமன்று.
நிகழ்ந்ததன்று, நிகழாததன்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நீயன்று, நானன்று,
சன்னமல்லிகார்ச்சுனனுடன் இணைந்தபின்
ஏதும் கூறவியலுமோ?''

என்று மகாதேவி அக்கா அறிவுறுத்தி உள்ளார்.

மல்லிகார்ச்சுனதேவர் தம்முடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்திய பிறகு மிருத்யுஞ்ஜெயரும் நிஜகுணரின் சிந்தனைப்பொழிவுகள் மனத்தைத் தொடவல்லதாகவும் அனுபவவெளிப்பாடுகளாகவும் உள்ளன. ஶிவனடியார் ஒருவர் கூறியிருப்பதைப் போல,

''இதயகமலத்தில் கவனமாகக் காணும் கடவுள் கடவுளன்று,
புருவ நடுவிலே கவனமாகக் காணும் கடவுள் கடவுளன்று,
மூக்கின் நுனியிலே கவனமாகக் காணும் கடவுள் கடவுளன்று,
அகண்ட கோளமாக உள்ள லிங்கம் தான் என அறியின்,
தானே இறைவன், எல்லையற்ற கூடலசங்கம் தேவன்''

மிருத்யுஞ்ஜெயரின் பேச்சைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சியுடன் ஜெயகோஷம் எழுப்பினர். உருத்திரமுனிகள் சமாதானம் அடைந்தவரைப் போலத் தென்படவில்லை. அவமானத்தால் அவர் முகமானது இளஞ்சிவப்பாக மாறியது.

இந்த அனைத்து விவாதங்களையும் ஒருமுனைப்பாட்டுடன் கேட்டுக் கொண்டு இருந்த ஸ்ரீபுஜலிங்கஶிவயோகிகள் ருத்திரமுனிகள் இருந்த பக்கமாகத் திரும்பி,

''உங்களுடைய கேள்வியானது. 'கேள்வி' என்னும் கண்ணோட்டத்திலே சரியானது. ஆனால் நிஜகுணரிடம் கேட்கத்தக்க கேள்வியன்று. விதிமுறைகள், மறுக்கத்தக்கவை என்னும் இவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் ஞானியைக் குறித்து உன்னால் என்ன கூற இயலும்?''

''மலைக்குக் குளிர்ந்தால் எதைப் போர்த்துவாய்? வெட்டவெளியானது ஆடையற்று உள்ளது என்று எதை அதற்கு உடுத்துவாய்? குருவிடம் தீட்சை பெற்ற பக்தனானவன் உலகிலேயே சுழன்று கொண்டிருந்தால் அதற்கு எதை ஒப்பிடுவாய்?'' என்று கடுமையாகக் கேட்டபொழுது ருத்திரமுனிகள் தலையைத் தாழ்த்திக் கொண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


புஜலிங்கஶிவயோகிகள் கிளம்புவதற்கு ஆயத்தமான பொழுது அனைவரும் அவருடைய திருவடிகளில் பணிந்து அங்கிருந்து அகன்றனர்.

ஏரகம்பள்ளி என்னும் ஊரைச் சேர்ந்த துறவியான ஸ்ரீசித்தலிங்கருக்கு நிஜகுணரை அறிமுகப்படுத்த வேண்டும் என்பது ஷடக்ஷரஸ்வாமிகளின் விருப்பமாகும். அவர் புஜலிங்கஶிவயோகிகளின் ஆணையைப் பெற்றுக் கொண்டு நிஜகுணருடன் ஏரகம்பள்ளிக்குச் சென்று ஏற்கனவே நான்கு தினங்கள் அகன்று விட்டன.

நிஜகுணரின் வரவிற்காக புஜலிங்கஶிவயோகிகளே ஆர்வத்துடன் இருக்கும்பொழுது மற்றவர்களால் ஆர்வத்தை அடக்கிக் கொள்ள இயலுமா? ஒரு கணத்திற்கு ஒருமுறை வெளியே ஓடிச்சென்று கண்ணிற்கு எட்டிய தொலைவுவரையில் பார்த்துவிட்டு, நிராசையுடன் உள்ளே வருவார்கள். ''உலர்ந்த இலையானது சலசல என ஒலி எழுப்பினாலும் வெளியே சென்று எதிர் பார்ப்பேன்'' என்று ஷடக்ஷரர் கூறிய சொற்களை மல்லிகார்ஜுனதேவர் ஆயிரம் முறையாவது உணர்ந்தார்.

மனவேகத்தைத் தடுத்துக் கொள்ள இயலாமல் அவர்,

''நிஜகுணேஸ்வரர் அங்கிருந்து எங்கு சென்றுள்ளாரோ என்னவோ - என்று எண்ணத் தோன்றுகிறது. இன்று அவர் வரவேண்டும். அல்லவா ஸ்வாமி'' என்று கூறினார்.

புஜலிங்கஶிவயோகிகள் சிரித்தவாறு ''தைரியமாக இருங்கள் மல்லிகார்ஜுன தேவரே! இன்று நிச்சயமாக வருவார்'' என்று சமாதானம் செய்தார். பசவானந்தர், ''நிஜகுணர் நல்ல இசைக்கலைஞராகவும் இருக்கிறார் அவர் எந்த சங்கீத சக்கரவர்த்திக்கும் குறைந்தவர் அல்லர், அல்லவா ஸ்வாமி?'' என்று கேட்டார்.

''பசவானந்தரே! நீ கூறுவதும் சரிதான். ஆனால் நீ அவருடைய இசையினால் மட்டும் பயனை அடையாமல், அவரிடம் அடங்கியுள்ள தத்துவரகசியத்தையும் அறிந்து கொள்'' என்று கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஸ்வாமி! நிஜகுணர் ஹடயோகிகளைப் போலத் தெரிகிறது. ஏனென்றால் நேற்றைய முன்தினம் தாங்கள் அவருக்கும், ஷடக்ஷரஸ்வாமிகளுக்கும் தேங்காய் ஒவ்வொன்றை ஆசிர்வாதம் செய்து கொடுத்தீர்கள். ஷடக்ஷரஸ்வாமிகள் தேங்காயை உடைத்து பிரசாதத்தை ஏற்றுக் கொண்டார். நிஜகுணரோ அதை அப்படியே முகர்ந்து பார்த்து விட்டு வைத்து விட்டார். அதன் பிறகு நாங்கள் எங்கள் ஆர்வத்தைத் தடுத்துக் கொள்ள இயலாமல் அந்தத் தேங்காயை உடைத்துப் பார்த்தபொழுது உள்ளே எள்ளளவிற்குக் கூட எதுவும் இருக்கவில்லை!''

இதைக்கேட்ட புஜலிங்கஶிவயோகிகள் உரக்கச் சிரித்தார். அவர் ''ஶிவாசார்யரே, ஹடயோகம் ஒன்று மட்டும் அல்ல. எவ்வளவு யோகங்கள் உள்ளனவோ, அவ்வளவும் நிஜகுணரிடம் அடங்கியுள்ளன. ஞானேந்திரியங்கள் அனைத்தும் லிங்கமயமான நிலையாகும். உடலெல்லாம் லிங்கமாகி லிங்கத்தின் வாயிலிருந்து பிரசாதத்தை ஏற்றுக் கொள்ளும் சித்தியடைந்த நிலையாகும்''!

''அதாவது? அணிமா போன்ற சித்திகளை வசப்படுத்திக் கொண்டு, அவைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சித்தராக விளங்குகிறார், அல்லவா ஸ்வாமி?''

''ருத்திரமுனிகளின் இந்தக் கேள்வியில் கேலியும் கிண்டலும் அடங்கி இருந்தது புஜலிங்கருக்குத் தெரியாமல் இல்லை.''

''ருத்திரமுனிகளே! நிஜகுணரைப் போன்றவர்களுக்கு அணிமா போன்ற சித்திகள் வசமாகாமல் இருக்குமாயின் வேறு யாருக்கு ஆகும்? ஏதோ ஒன்று, இரண்டை விளையாட்டிற்காகச் செய்திருக்கலாம். ஆனால் நீ கூறியதைப்போல சித்திகளை வெளிப்படுத்திக் கொள்ளும் சித்தரன்று. சித்திகளை அனைவரின் முன்னாலும் செய்து காட்டி மக்களை மருளடையச் செய்து புகழ், பொன் போன்றவற்றை சேர்க்கும் எண்ணம் நிஜகுணரிடம் இல்லை. அப்படி இருந்திருந்தால் நாடு, எல்லாவிதமான செல்வங்கள், பதவிகளைத் துறந்திருக்க மாட்டார்.''

குரு அவர்கள் கூறிய பதிலால் ருத்ரமுனிகளுக்கு மேற்கொண்டு பேச இயலாதபடி ஆயிற்று. நிஜகுணரைக் குறித்த இந்த வாத - விவாதங்களைக் கேட்டு மற்றவர்களுக்கும் சிறிது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உற்சாகம் ஏற்பட்டு அவரவர் அவரவருடைய கருத்துக்கள், சந்தேகங்களைக் கூறுவதற்கு முற்பட்டனர். அவர்களில் சங்கமநாதர்,

''குரு அவர்களே! நிஜகுணர் அத்வைதி அல்லவா?'' என்று கேட்ட பொழுது கிரீசுவரர்.

''இல்லை. ஶிவ அத்வைதிகள் அல்லவா குரு அவர்களே?'' என்று கேட்டார்.

புஜலிங்கர் அனைவரின் கேள்விகளையும் கேட்டுவிட்டுப் புன்னகை புரிந்தார்.

''அவருடைய ஆசாரம் - நடைமுறை என்னும் இவற்றைப் பார்க்கும்பொழுது அப்பட்டமான வேதாந்தியாகத் தென்படுகிறார்.'' இது சித்தலிங்கரின் கருத்தாகும்.

''அவர் அப்பட்டமான வீரசைவர்'' - இது நாகேசுவரரின் நம்பிக்கையாகும்.

''அவர் அரசராகவும் இருந்தாராமே'' - என்று பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது. அப்பொழுது புஜலிங்க சிவயோகிகளுக்குச் சிரிப்பை அடக்க இயலவில்லை.

''பலே, பலே அனைவரும் அவரவருடைய மட்டத்திற்குச் சரியாக தெரிந்து கொண்டு உள்ளீர்கள் ஏன்? மல்லிகார்ஜுனதேவரே! உங்களுடைய கருத்தைத் தெரிவிக்கவே இல்லையே?

''எதையுமே உவமிக்க இயலாத மிகப் பெரிய கடலிற்கு அது, இது என்று எதையாவது கூறுவதற்கு இயலுமா? இவ்வளவு மட்டும் உண்மை. அவர் அருகிலே இருந்து விட்டால் வேறு எதுவுமே வேண்டும் என்றும் தோன்றுவது இல்லை. போதும் என்றும் தோன்றுவது இல்லை.''

மல்லிகார்ச்சுனருடைய பணிவு, பரந்தமனம் என்னும் இவை குரு அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

''சரியாகக் கூறினீர்கள். அவர் அத்வைதி, ஶிவாத்வைதி, வேதாந்தி, வீரசைவர் என்னும் சமயம் சார்ந்த கண்ணோட்டத்தை விட்டுவிட்டு, உண்மையான நிலை, உண்மையான தத்துவத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். நிஜகுணரின் ஒவ்வொரு சொல்லையும், பாடலையும் ஆசாரம்-விசாரம் என்னும் இவற்றைத் தெரிந்து கொண்டால் போதும். எல்லா வேதங்கள், ஆகமங்கள். உபநிஷதங்களைப் படித்ததைப் போல ஆகி விடும். நிகமங்கள், ஆகமங்களின் ரகசியத்தை அறிந்து கொண்ட ஶிவயோகி அவர்'' என்று புஜலிங்கர் புகழ்ந்து கொண்டிருந்த பொழுது நிஜகுணரும், ஷடக்ஷரரும் வருகை புரிந்தனர்.

''வாருங்கள், வாருங்கள் ஶிவயோகிகளே!'' என்று அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஒவ்வொரு வகையில் கௌரவித்தனர்.

''உங்கள் வரவையே எதிர்நோக்கி, இவர்கள் அனைவரும் மிகவும் ஆசையுடன் உள்ளனர். நீங்கள் இன்று வந்திருக்காவிட்டால் நாளை இவர்கள் எரகம்பள்ளியில் இருந்திருப்பார்கள்'' என்று கூறினார்.

ஶ்ரீகுரு அவர்கள் இவ்விதம் கூறியதால் அங்கு சிரிப்பு நிறைந்தது; மகிழ்ச்சி பொங்கியது.

''படைப்பிலேயே மிகவும் அழகு நிறைந்த இடமாக எரகம்பள்ளி விளங்குகிறது. ஶ்ரீசித்தலிங்கயதிகள் புண்ணியமூர்த்தி, ஜீவன் முக்தர், அவரைவிட்டு வருவதற்கு மனம் இருக்கவில்லை'' என்று நிஜகுணர் கூறினார். நிஜகுணர் இவ்விதம் கூறியதற்கு மல்லிகார்ச்சுனதேவர், ''எனக்கும் அப்படித்தான் தோன்றியது. ஆனால் நம்முடைய அழைப்பின் சக்தியானது பலமானதாக இருந்ததால் நீங்கள் இன்று வந்தீர்கள்'' என்று தங்கள் அனைவரின் ஆசை, தீவிரம் போன்றவை எவ்வளவு இருந்தன என்பதை அவர் வெளிப்படுத்தினார்.

''ஸ்வாமி, வழியிலே வரும்பொழுது நிஜகுணர் சில விஷயங்களைக் கூறினார். எங்கே, இன்னொரு முறை கூறுங்கள்'' என்று ஷடக்ஷர ஸ்வாமிகள் நிஜகுணரின் பக்கமாகத் திரும்பிய பொழுது அவர் எத்தகைய கர்வமும் இன்றி ''சித்தலிங்கயதிகளின் இயல்பான நிலையைக் கண்டு இந்த எண்ணம் ஏற்பட்டது. வழியிலே கூறிக் கொண்டே வந்தேன்'' என்று பாடத் தொடங்கினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


'வந்ததை இல்லை என்னான் I பிறகு வரும் ஒன்றை நயவான் II
இழந்த ஒன்றை நினையான் I அதனை அறியும் மனமுமில்லை II
மோகிப் போருட ரவரனையவனாம் ! மோகமிலாருட ரவரனையவனாம் II
கர்மிகளுட ரவரனையவனாம் I விடுத்தவருட ரவரனையவனாம் II
போகிகளுடரவரனையவனாம் I யோகிகளுட ரவரனையவனாம் II
ஜீவன்முக்தருடரவரனையவனாம் I தியானிப்போருடன் கூடிதஞ்சமடைவான் II
காண்போரிடரவரனையவனாம் I உண்டும் உண்ணாதவனனையவனாம் II
அவனுடைய எண்ணத்தை அறியேன் I மனிதரின் நடைமுறையின் நீதியை அறியேன் II

என்று உணர்வு பூர்வமாக மென்மையாக, இனிமையாகப் பாடியபொழுது அவருடைய அந்த கம்பீரம் அழகு என்னும் இவற்றால் ஈர்க்கப்பட்டு அனைவரும் தலை வணங்கினர்.

புஜலிங்கர், ''மிகவும் அழகாகக் கூறினீர்கள். நிஜகுணரின் இந்தப்பாடல் உங்கள் அனைவரின் கேள்விகளுக்குத் தகுந்த விடையாக உள்ளது அல்லவா மல்லிகார்ஜுனதேவரே! என்றார்.

''உண்மை, உண்மை, குரு அவர்களே! நிஜகுணருக்கு முக்கால ஞானமும் உள்ளது என்பது உறுதியாகி விட்டது. அதற்காகவே நம் அனைவரின் கேள்விகளுக்கு தம்முடைய பாடலின் மூலமாக விடையளித்து உள்ளார்.''

அப்பொழுது அனைவரும் - ஒரேகுரலில் ஜெயகோஷம் எழுப்பினர்.

''வாருங்கள் செல்வோம். உணவிற்கு நேரமாகி விட்டது'' என்று கூறி ஸ்ரீகுரு அவர்கள் எழுந்து நின்றார். அனைவரும் அவரை வணங்கினர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்று நிஜகுணர் புறப்படும் தினம். மென்மையான இதயத்தைக் கொண்ட மல்லிகார்ஜுனருடைய மனம் கலங்கியது. அன்று அவர் நிஜகுணரை விட்டுச் சிறிதும் அகலவில்லை. அவ்வப்பொழுது அவருடைய நாசிதுவாரங்களிலிருந்து வெப்பமான மூச்சுக்காற்று வெளிவந்து கொண்டிருந்தது. கண்ணீரை எவ்வளவோ முறைகள் அடக்கிக் கொண்டிருந்தார்.

''எல்லாவற்றையும் துறந்துள்ள நீங்கள் ஏன் இங்கேயே இருக்கக்கூடாது? உங்கள் வழிகாட்டுதலில் நாங்கள் புண்ணியம் அடைந்து உள்ளோம்''

மல்லிகார்ஜுனரின் மனத்தை அறிந்த நிஜகுணர் ''இங்கு இருக்க வேண்டிய காலம் இவ்வளவுதான். சம்புலிங்கர் கையசைத்து அழைத்துக் கொண்டே இருக்கிறார். ஏதோ ஒரு சக்தி, காந்தத்தைப் போல நாள்தோறும் என்னை ஈர்த்துக் கொண்டுள்ளது. நான் மீண்டும் வருவேன். நீங்கள் அமைதியாக இருங்கள்'' என்று கூறினார்.

மல்லிகார்ஜுனர் விக்கி விக்கி அழத் தொடங்கினார். நிஜகுணர் அவருடைய உடலை நீவிவிட்டு எடுத்துக்கூறி சமாதானப்படுத்தினார்.

ஷடக்ஷரர் அவர்களுக்கும் நல்ல நண்பனை விட்டுப்பிரியும் அந்தக் கணமானது வேதனையை ஏற்படுத்தியது. மல்லிகார்ஜுனரும், ஷடக்ஷர ஸ்வாமிகளும் நிஜகுணரை மீண்டும் மீண்டும் தழுவிக் கொண்டனர். கிரீசுவரரும், மிருத்யுஞ்ஜெயரும் கைகளைக் கூப்பியவாறு தலை வணங்கி நின்றனர். அவர்களுடன் ஒருவனாக சேர்ந்து இருந்த விசுவநாதன் இந்தப்பக்கமாக வந்து நின்றான்.

நிஜகுணர் புஜலிங்கரைப் பலமுறைகள் பணிந்து பாததூளியைத் தலையிலே தரித்துக் கொண்டார்.

''சென்றுவா ஶிவயோகி! குருவின் திருவருளைப் பெற்று ஆன்மீகத்தில் புகழின் உச்சியைத் தொடுவாய். சூரியன்-சந்திரன் இருக்கும் வரையிலும் உன் பெயர் ஒளிர்ந்து கொண்டு இருக்கட்டும். சென்று வா குழந்தாய்'' என்று தழுவிக் கொண்டு விடை கொடுத்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"நிஜகுணஸிவயோகிகளுக்கு வெற்றி உண்டாகட்டும்" என்னும் ஜெயகோஷமானது மடத்தைச் சுற்றிலும் கேட்டது. மடத்தின் நுழைவாயில் வரையிலும் சென்று அனைவரும் வழி அனுப்பச் சென்றனர்.

"போதும், அனைவரும் இங்கேயே நில்லுங்கள். நாங்கள் வருகிறோம், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கைகூப்பி, கைவீசி, நிஜகுணரும் விசுவநாதனும் முன்னால் சென்றனர்.

நீண்ட நேரத்திற்குச் சீடர்கள் கைகளை வீசிக் கொண்டே நின்று கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் கண்களை விட்டு மறைந்ததும் ஒவ்வொருவரும் நிஜகுணரைப் புகழ்ந்த வண்ணம் உள்ளே சென்றனர்.

காட்டின் பயங்கரமான அமைதியைக் கிழித்துக் கொண்டு, நிஜகுணரின் குரலானது எங்கெங்கும் நிறைந்து எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அடிக்கும் பாடியதையே பாடிக் கொண்டிருக்கிறார். வேண்டியதையே வேண்டிக் கொண்டு இருக்கிறார்.

"ஸ்ரீகுருவின் அனுபவ அறிவுரையைக் கேள்மின் ।
அப்பொழுது மனிதருக்கு முக்தி ॥"

என்று ஒருமுறை பாடினால் மறுமுறை.

"ஸ்ரீகுரு சம்புலிங்கனின் திருவடித்தாமரை ।
இப்பொழுது என் அறிவிற்கு மங்கலம் அருளட்டும் ॥"

என்று பாடுவார்.

தைரியம், நம்பிக்கை, பணிவு, பக்தி உறுதிமிக்க நியமங்களை எல்லாம் இறைஞ்சி இறைஞ்சி இதயம் நிறைந்து வேண்டி, வேண்டிப் பாடிக் கொண்டிருந்தார்.

அந்த இரு பல்லவிகளும் மந்திர சொரூபமாக சிறந்த ஆற்றலை அளித்துக் கொண்டுள்ளது. அவர் நேற்று நடத்து கொண்டதற்கும், இன்று நடந்து கொள்வதற்கும் விசித்திரமான வேறுபாடு உள்ளது. கண்ணிற்குத் தெரியாத ஒரு சக்திக்கு வசமானவரைப் போல மின்னல் வேகத்தில் நடந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
கொண்டிருந்தார். விசுவநாதன் அவரைப் பின் தொடர்ந்து செல்வதற்கு இயலாமல், மூச்சு இறைக்க, இடையிடையே ஓடியும். நிஜகுணருடன் சேர்ந்து சென்று கொண்டிருந்தான் இன்று அவருக்குப் பசி-தாகம் குறித்த கவனமே இருக்கவில்லை. வழி நடந்த களைப்பும் இல்லை.

சூரியன் மறையும் நேரம். குரு அவர்களின் நினைவினால் நிஜகுணரின் முகமானது முற்றிலும் செவ்வண்ணத்தில் இருந்தது. செம்மை படர்ந்திருந்த இந்த முகத்தின் ஒளியினால் அந்த வனமே செவ்வண்ணமாக மாறி இருந்தது. தடதடவென்று நடந்து கொண்டிருந்த நிஜகுணர் சட்டென்று நின்றுவிட்டார். ஓடோடி வந்த விசுவநாதன், நிஜகுணரின் முதுகின் மீது விழுந்து இடறி விழுந்தான். நிஜகுணரின் பார்வையைப் பின் தொடர்ந்து பார்த்தான்.

அகன்ற பரந்த வெட்டவெளி. அதன் நடுவிலே சின்னஞ்சிறிய தாமரைக்குளம். அதன் கரையிலே கல்லால் ஆன ஒரு மண்டபம். அதன் நடுவிலே ஈஸ்வரலிங்கம். அதற்கு எதிரிலே மிகவும் உயரமான, ஆஜானுபாகுவான ஒரு மனிதர். அவருடைய தலைப்பகுதியிலே நிழலாக ஒரு மிகப்பெரிய பாம்பு தன் படத்தை விரித்து ஆடிக் கொண்டிருந்தது. இடப்பக்கத்தில் வரிகளுடன் கூடிய புலியானது அவருடைய தொடையின் மீது தலையை வைத்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தது. அம்மனிதனைச் சுற்றியிருந்த ஒளிவட்டமானது அவர் ஒரு உயர்ந்த புருஷர் என்பதை முழங்கிக் கொண்டிருந்தது. அவர் செய்த தவத்தின் பயனான ஒளியால் அவ்விடமானது தானாகவே ஒளிர்ந்து கொண்டிருந்தது.

மண்டபத்தின் முன்னால் வந்து நின்ற நிஜகுணர் ஆனந்த பரவசமானார். கலக்கத்தால் கொதித்துக்கொண்டிருந்த அவருடைய இதயமானது அமுதத்தைப் பருகியதைப் போல அமைதி அடைந்தது. ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்த மிகத் தீவிரமான விருப்பம் ஒன்று கைகூடும்பொழுது ஏற்படும் மகிழ்ச்சியும், வியப்பும் அவரைச் சூழ்ந்து கொண்டன. முழுமையான நிறைவின் புன்னகை அவருடைய தாமரையை ஒத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America- HHFA(USA)


முகத்திலே மலர்ந்து நின்றது. மெதுவாக அடி எடுத்து முன்னால் சென்றார். விசுவநாதன் அவருடைய கையை அழுத்தியவாறு ''வேண்டாம், வேண்டாம், முன்னால் செல்ல வேண்டாம்'' என்று கிசுகிசுத்தான்.

அது எதைக்குறித்த கவனமும் இன்றி நிஜகுணர் கல் மண்டபத்தின் படியின் மீது ஏறி நின்றார். பாம்பு திரும்பிப் பார்த்து விட்டு படத்தை விரித்தது. புலியும் மிகுந்த ஆசையுடன் தலைநிமிர்ந்து பார்த்துவிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டது. நிஜகுணர் மிகவும் மெதுவாக ஈஸ்வரலிங்கத்தின் பின்பக்கத்திலே அம்மனிதனின் எதிரிலே அமர்ந்து கொண்டார். வேறுவழி இன்றி விசுவநாதனும் ஓர் ஓரமாக அமர்ந்து கொண்டான்.

அம்மனிதரின் முகத்தைக் கூர்ந்து கவனித்த நிஜகுணர் புளகம் அடைந்தார். அவருடைய நினைவு பின்னோக்கிச் சென்றது.

சமாதியின் இன்பத்திலே மூழ்கியிருந்த அந்த மனிதனுக்கு வெளியுலகைக் குறித்த உணர்வு இல்லாமல் இருந்தது. நிஜகுணரின் பார்வை மட்டும் அங்குமிங்கும் செல்லாமல் அம்மனிதனின் மீதே நிலைத்து இருந்தது. நிஜகுணரைக் கண்டு வியப்படைந்த புலி எந்தக் கவலையுமின்றி ஒரு முறை பெருங்குரலில் உறுமிவிட்டு உடலை வில்லைப்போல ஒரு முறை வளைத்து, நிஜகுணரிடம் வந்து தொடையின் மீது தலையை வைத்துக்கொண்டு சுகமாக உறங்கியது. மடிக்கப்பட்ட அதன் இருகால்களும் விசுவநாதன் இருந்த பக்கமாகச் சரிந்தன. விசுவநாதன் கலக்கமடைந்தான். உட்கார்ந்தவாறே நடுங்கினான். அவன் இதயமானது வேகமாகத் துடித்தது.

சூரியன் மறையும் நேரம், பகலும், இரவும் கூடும் சந்தியா நேரம். அம்மனிதன் சிறிது அசைந்தான். மூடி இருந்த உதடுகள் திறந்தன. ''ஓம் சம்புலிங்கா'', ''ஓம் சம்புலிங்கா'' என்னும் சுவாசத்துடன் கண்கள் திறந்தன. கண்ணும், கண்ணும் சந்தித்துக் கொண்டன. சந்தியா நேரத்திலே தூய்மையான ஞானவடிவான ஆன்மசொரூபம். இரு உடல்களும் மின்னலால் தாக்கப்பட்டதைப் போல அசைந்தன. அம்மனிதனின் கண்ணின் ஒளிக்கதிர்கள் நிஜகுணரின் கண்ணின் ஒளிக் கதிர்களுடன் ஒன்றாக இணைந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகத்திலே (மனத்தின் ஆழத்திலே) ஏற்பட்ட அனுபவம்! தழுவல்! இதெல்லாம் முடிந்த பொழுது இருவருக்கும் புற உலகைக் குறித்த அறிவு ஏற்பட்டது. (புற உலகை உணர்ந்தனர்) புலியின் தலையை மெதுவாக எடுத்து விட்டு, எழுந்து வந்து "இரு பாதங்கள், இரு கைகள், தோள்கள், மார்பு, நெற்றி என எட்டு அங்கங்கள் நிலத்திலே பதியுமாறு வணங்கிவிட்டு, பிறகு குருவின் திருவடிகளை வணங்கி, மகிழ்ந்து "கையைக் கூப்பியவாறு நகர்ந்து உட்கார்ந்து கொண்டார். விசுவநாதனும் அவரைப் பின்பற்றினான்.

"நீ யார்"? வெண்கலக் குரல் கிடுகிடுத்தது. அவருடைய கண்களின் ஓரத்திலே அணைந்த திரியை ஏற்றவல்ல தவ ஒளியின் மின்னல் இருந்தது.

"உங்கள் கருணையின் குழந்தை" - பணிவான சொல்லின் மறுமொழி இது - பற்றிக் கொண்டு எரியும் நெருப்பை அணைக்கவல்ல தண்ணீரின் குளிர்ச்சி அந்தப் பணிவில் இருந்தது.

"என்னைத் தேடிக் கொண்டு எதற்காக வந்தாய்"? உனக்கு என்ன வேண்டும்"?

"உங்களுடைய அருள் வேண்டும். அதைத் தேடிக் கொண்டு வந்தேன். தந்தையே!

"கருங்கல்லிலே கருணையைத் தேடி நிராசைக்கு ஆட்படவேண்டாம். புரிந்ததா? சமயம் இருக்கும் பொழுதே வேறு எங்காவது செல்வாய்"

'பரீட்சித்துப்பார்க்கும்!, அஞ்சவைக்கும்' யுக்தியின் திறமை"

"கருணைரசமானது வெள்ளமெனப் பொங்கிப் பாயும் உங்களுடைய அன்பு நிறைந்த பார்வையில் கல்லானது மலர்ந்து பூவாகும். தந்தையே! சமயம் இருக்கும் பொழுதே உங்களிடம் வந்தேன். நான் மீண்டும் அங்கும், இங்கும் அலைய மாட்டேன் குருவே."

"குரு! உனக்கு எவ்வளவு பேர்கள் குருவாக உள்ளனர்? அந்த மனிதனின் சிரிப்பானது அலை அலையாகக் காடு முழுவதும் எதிரொலித்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHF (USA)

"குருவே முக்தியின் மூல இருப்பிடம். நம்பியவர்களின் சிந்தாமணி" என்று உறுதியாக நம்பியுள்ளேன் தந்தையே. இன்று வரையிலும் அந்த குருவின் திருவருளானது கணக்கற்ற வாய்களிலிருந்து சொரிந்தாலும் என்னுடைய வேட்கை தணியவில்லை தந்தையே. இப்பொழுது ஒரே வாயினால் வெள்ளமெனப் பொழியும் அந்த அருள் உரைகளால் வேட்கையைத் தணித்துக் கொள்ளும் ஆசை."

"சரி, உன் பெயர் என்ன?

"நிஜகுணர் என்று கூறுகிறார்கள் ஸ்வாமி"

"உன் பெயர் என்ன?

"விசுவ...நாதன்" விசுவநாதனின் குரல் தடுமாறியது.

அடர்ந்த காட்டிலே காரிருள் படர்ந்தது. பாம்பு அங்குமிங்குமாக வளைந்து சென்று மறைந்தது. புலி ஒருமுறை உறுமிவிட்டு அங்கிருந்து அகன்றது. கல்லால் செய்யப்பட்ட அகல்விளக்கிலிருந்த திரியைத் தூண்டிவிட்டபொழுது மண்டபம் ஒளிர்ந்தது. நிஜகுணரும் விசுவநாதனும் மற்றொரு முறை வணங்கிய பொழுது அவர்களுடைய தலைகளின் மீது கையை வைத்து "ஓம்சம்புலிங்கா" என்று கூறியபொழுது நிஜகுணரின் இதயமானது பூரித்து கடலைப் போன்று பரந்து விரிந்தது.

ஒரு பையில் கையைவிட்டு ரஸ்தாளி வாழைப் பழம், கிழங்குகளை எடுத்து, நிஜகுணர்-விசுவநாதனிடம் கொடுத்துவிட்டுத் தானும் சிறிதளவு எடுத்துக்கொண்டு. "இன்றைய உணவு இவ்வளவுதான், உண்ணுங்கள்" என்று கூறிய பொழுது நிஜகுணர் பக்தியுடன், குரு அளித்த பிரசாதத்தை கண்களில் ஒற்றிக் கொண்டு உண்டார்."

ஈஸ்வரனின் எதிரிலிருந்த கல்மேடையின் மீது மூவரும் படுத்துக் கொண்டனர். நிஜகுணர் உறங்கவே இல்லை. தான் வழிபடும் தெய்வமான குருமூர்த்தியை எவ்வளவு பார்த்தாலும் நிறைவு ஏற்பட வில்லை.

பிரம்மமுகூர்த்தத்தில் அவர் முதலிலே எழுந்து தாமரைக்குளத்திலே முகத்தைத் தூய்மை செய்து கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அங்கேயே ஒரு பாறாங்கல்லின் மீது தியானத்தில் மூழ்கியவராக அமர்ந்து விட்டார். நிஜகுணர் உணர்ச்சிப் பெருக்குடன் பாடத் தொடங்கினார்.

"அதிகாலையிலே எழுவாய், ஶிவனே, ।
நடைமுறை உணர்த்திய அறிவைமறவேன் ।।
"பிறப்பிலியே! எழுவாய் என எழுப்பி உபசரித்து
எழுப்பப்பட்ட ஈசனே ।
ஏழுபிறவிகளின் களங்கத்தை வெல்லும் சிறந்த
யோகியே, எழுவாய், கைலாச உச்சியில் கேட்கும்
இனிய நாதமே எழுவாய், மலபாசமற்ற சம்புலிங்கமே
முனிவர்வணங்குபவனே, நீ எழுவாய் ।।

பாட்டு நிறைவுற்ற பொழுது நிஜகுணரின் கண்களில் இருந்து கண்ணீர் தாரையாகப் பெருகிற்று. சம்புலிங்கயதிகள் அப்பொழுதே எழுந்து வந்து நிஜகுணருடைய பாடலின் மோடிக்கு ஆட்பட்டு, எதிரிலிருந்த பாறையின் மீது மெய்மறந்து அமர்ந்திருந்தார். அவருடைய முகத்திலே நிறைவும், ஆனந்தமும் நிறைந்திருந்தது. நிஜகுணர் கண்களைத் திறந்த பொழுது மட்டும் அங்கு செயல்கள் இயங்கத் தொடங்கின. நிஜகுணர் எழுந்து வந்து சம்புலிங்கரை வணங்கினார். தாமரைக்குளத்திலே நீராடிவிட்டு வந்த விசுவநாதனும் வணங்கிவிட்டு நின்றான். சம்புலிங்கர் பயணத்திற்கு அனுமதி அளித்தார்.

நடக்கத் தொடங்கினர். முதலில் சம்புலிங்கரும், நடுவிலே நிஜகுணரும் பின்னால் விசுவநாதனும் சென்றனர். வழி நெடுகிலும் மூவரிடத்திலும் ஆழ்ந்த மௌனமே நிலவியது.

சூரியன் உச்சிக்கு வந்தபொழுது ஒரு குளத்தின் அருகிலே வந்தனர். முகத்தைத் தூய்மை செய்து கொண்டு கிழங்குகளைப் புசித்து, வயிறு நிறைய நீரைக்குடித்து விட்டு மரத்தின் கீழே ஓய்வு எடுத்துக் கொண்டனர்.

மாலை நேரத்திலே மக்கள் வசிக்கும் ஒரு பட்டணத்தைச் சென்று அடைந்தனர். ஊரின் வெளியே இருந்த அரசமரத்தின் கட்டையின் மீது மூவரும் அமர்ந்து கொண்டனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சம்புலிங்கரையே கூர்ந்து கவனித்துக் கொண்டு இருந்த நிஜகுணருக்கு அவருடைய முகத்தின் மீது பலவிதமான உணர்வுகளின் அலைகள் தோன்றி மறைவதைக் காண இயன்றது. நீண்ட மௌனத்தைக் கலைத்த சம்புலிங்கர் ''நிஜகுணா, உன்னால் ஒரு செயலைச் செய்யவியலுமா?''

''ஒரு செயல் என்ன? உங்களுடைய திருவருள் ஒன்று இருந்தால் ஆயிரம் செயல்களைச் செய்வேன்''

''ஓ, அந்தப் பெருந்தன்மை உன்னிடமே இருக்கட்டும் எனக்கு இப்பொழுது காசியாத்திரை செய்ய வேண்டும் என்னும் விருப்பமானது எடுத்துள்ளது. அதற்குத் தேவையான பணத்தை உன்னால் கொடுக்க இயலுமா?''

அவருடைய கேள்வியிலே தீவிரம் இருந்தது. பண விஷயம் என்று வந்தபொழுது நிஜகுணர் தத்தளித்தார். அவர் ஆலோசனைகளின் போராட்டத்தில் ஊமையானார்.

''ஏன் சும்மா இருக்கிறாய்? உன்னால் இயலாது என்றால் இயலாது என்று கூறு.'' கூர்மையான சொற்கள் இதயத்தைத் தைத்தன.

''இல்லை ஸ்வாமி, அப்படிக் கூற மாட்டேன். என் உயிரையும் பணயமாக வைத்து பணத்தைக் கொடுப்பேன். ஆனால் ஓரிரு நாட்கள் தேவைப்படுகிறது.''

விண்ணப்பித்துக் கொள்ளும் சொற்களை, நடுவிலே ஆணையிடும் சொற்கள் தடுத்து நிறுத்தின.

''இல்லை இப்பொழுதே பணம் வேண்டும். வா, போகலாம் அந்த மாடி வீட்டிற்குச் சென்று ஏதாவது ஏற்பாடு செய்யலாம்'' என்று சம்புலிங்கர் முன்னால் நடந்து சென்றார். நிஜகுணர், பசுவைப் பின்பற்றிச் செல்லும் கன்றுக் குட்டியைப் போலப் பின் தொடர்ந்தார்.

அந்த வீட்டின் முன்பு வந்து நின்ற சம்புலிங்கர் அந்த வீட்டின் முன்பகுதியில் இருந்த பணிப்பெண்ணிடம் ''அம்மா, இந்த வீட்டின் எஜமானனைக் கூப்பிடுவாய்.''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தத் துறவிகளைக் கண்ட அந்தப் பணிப்பெண் பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு உள்ளே சென்றாள். சில நிமிடங்கள் சென்ற பிறகு ஒய்யாரத்துடன் தளுக்கிக் கொண்டிருந்த ஒரு அழகி, கதவின் திரையை விலக்கி விட்டு வந்தவர்களைப் பார்த்தாள். அவள் முகத்தில் சிரிப்பு தென்பட்டது. நிஜகுணரைப் பார்த்த அவள் அவரிடமிருந்து பார்வையை அகற்ற இயலாதவள் ஆனாள். நிஜகுணர் முகத்தைத் தாழ்த்திக் கொண்டு நின்றார். விசுவநாதனுக்கு அந்த அழகியின் போதையூட்டும் அழகால் தலை சுற்றுவதைப் போல இருந்தது.

''அம்மா நான் காசியாத்திரைக்குச் செல்ல வேண்டும் என்று இருக்கிறேன். சிறிது பணம் கொடுக்கிறாயா? திரும்பி வந்தபிறகு உன் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.''

வெண்கலக் குரலிற்கு மின்னலைப் போன்ற பெண் அஞ்சி நடுங்கினாள்.

தடுமாறியவாறு ''அறிமுகமற்றவர்களுக்கு பணம் எப்படிக் கொடுப்பது ஸ்வாமி? உங்களிடம் ஏதாவது இருந்தால் அடகு வைத்துக்கொண்டு கொடுக்கலாம்'' என்று அந்த இளம்பெண் வழிமுறையையும் கூறினாள்.

''துறவியிடம் என்ன பொருள் இருக்கும் அம்மா?'' ''இதோ, இந்த கமண்டலத்தை வைக்கலாம் அல்லவா?'' அவள் கலகலவென்று சலங்கையின் ஒலியைப் போலச் சிரித்து விட்டாள். அந்தச் சிரிப்பின் பொருளை உணர்ந்து கொண்ட சம்புலிங்கர்.

''சரி, சரி, புரிந்தது இதோ, இந்த இளைஞனையே அடகாக வைத்துக் கொள். எனக்குப் பணம் கொடு நான் திரும்பி வந்து, உன் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு இவனை விடுவித்துக் கொண்டு செல்வேன்.''

நிஜகுணர் அச்சம், வியப்பு, துயரம் என்று எல்லாம் கலந்தவராக அப்படியே அசையாமல் நின்று விட்டார். மறுகணமே சுதாரித்துக் கொண்டார். விசுவநாதன் இருவருடைய முகத்தையும் பார்த்து ஏதும் செய்வதறியாமல் நின்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''சரி அப்படி என்றால் கொடுக்கிறேன், பொறுங்கள் வருகிறேன்'' என்று கூறி உள்ளே சென்று மறுகணம் பட்டுத் துணியில் கட்டியிருந்த ஒரு சிறு முடிச்சைச் சம்புலிங்கரிடம் கொடுத்தாள்.

''நிஜகுணா! நான் திரும்பி வரும் வரையில் இங்கேயே இரு. வா விசுவநாதா, நாம் போகலாம். ஓம் சம்புலிங்கா, ஓம் சம்புலிங்கா'' என்று கூறியவாறு நடந்து சென்று விட்டார் சம்புலிங்கர்.

எந்த ஒரு பேச்சிற்கும் வாய்ப்பற்ற சூழ்நிலையால் விசுவநாதன் அஞ்சினான். அவனுடைய கண்களில் நீர்த்தாரை வழியத் தொடங்கியது. நிஜகுணரைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு, கண்களைத் துடைத்துக் கொண்டு சம்புலிங்கரின் பின்னால் நடந்து சென்றான்.

பேய்பிடித்தவரைப் போல நீண்ட நேரத்திற்கு அவர்கள் சென்ற திசையையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்த நிஜகுணரைப் பார்த்து அந்த இளம் பெண்,

''எத்தனை நேரம் இப்படி நின்று கொண்டு இருப்பீர்கள்? உள்ளே வாருங்கள்'' என்று கூறியபொழுது நிஜகுணர் விழித்துக் கொண்டு, நீண்ட பெரு மூச்சுடன் அந்த இளம் பெண்ணைப் பின் தொடர்ந்து சென்றார். வீட்டின் முன் பகுதியில் நுழைந்த அவள் இருக்கையைக் காட்டி,

''அமர்ந்து கொள்ளுங்கள். ஏய் சம்பகா, இவருக்கு ஏதாவது சிற்றுண்டி எடுத்துக் கொண்டுவா'' என்று பணிப்பெண்ணிடம் கூறிவிட்டு அவளும் அவருடன் அமர்ந்து கொண்டாள்.

''உங்களுடைய பெயர்...?''

''நிஜகுணா, உங்களுடைய பெயர்?''

''என் பெயர் நந்தினி. உங்கள் பெயர் மிகவும் நன்றாக உள்ளது.''

''நான் உங்கள் வீட்டில் என்ன வேலை செய்ய வேண்டும் என்று கூறுங்கள்.''

''இதோ, இந்தச் சிற்றுண்டியை ஏற்றுக்கொள்வதிலிருந்து உங்கள் வேலை தொடங்கட்டும்'' என்று பணிப்பெண்ணின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கையிலிருந்து சிற்றுண்டி இருந்த தட்டை வாங்கிக் கொண்டு அவளே அதை நிஜகுணரின் கையிலே கொடுத்தாள். அவளுடைய கை, நிஜகுணரின் கையின் மீது பட்டது. அவள் ஓரக் கண்ணால் அவரைப் பார்த்தாள். இது எதைக் குறித்த கவனமும் இன்றி நிஜகுணர் எத்தகைய மாறுபாடுமின்றி பழத்தை உண்டு கொண்டிருந்தார்.

''ஏய் சம்பகா! இவர் இனிமேல் இங்குதான் இருப்பார். இவருக்காக மாடியிலே ஒரு அறையை ஏற்பாடு செய்'' என்று கூறி நிஜகுணரையே பார்த்தவாறு அமர்ந்து கொண்டாள். கைகளைத் தூய்மை செய்து கொண்ட நிஜகுணர். ''என்ன வேலை செய்ய வேண்டும்? கூறுங்கள்'' என்றார்.

''களைப்படைந்து இருப்பதைப் போலத் தோன்றுகிறீர்கள், இன்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அதற்குள் நான் உங்களுக்காக, நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளின் பட்டியலைத் தயாரிக்கிறேன்'' என்று அந்த அழகி கலகலவென்று சிரித்தாள்.

அங்கு நிலவிய சூழ்நிலை, சுற்றுமுற்றும் இருந்தவர்கள் என்னும் இவற்றால் அது ஒரு விலைமாதரின் வீடு என்பதை உணர்ந்து கொண்ட நிஜகுணர், அவருடைய வைராக்கிய பரீட்சையின் போர்க்களம் அது என்பதை உணர்ந்து அதற்கு ஆயத்தமானார்.

''மேலே போகலாம் வாருங்கள். உங்களுடைய அறையைக் காட்டுகிறேன்.'' என்று நந்தினி தளுக்கியவாறு முன்னால் நடந்து சென்றாள் மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்ட நிஜகுணர் பின் தொடர்ந்து சென்றார்.

''இதோ, இதுதான் உங்களுடைய அறை இதன் எதிரில் இருப்பது என்னுடைய அறை. அது என்னுடைய தாய். உங்களுக்கு வேறு ஏதாவது வேண்டும் என்றால் கூச்சப்படாமல் கேளுங்கள்.''

''இப்பொழுது இருப்பதே அதிகமாக உள்ளது. இந்தக் கட்டிலை எடுத்து விடுங்கள். பணியாளாக வந்து இருப்பவனுக்கு இந்த உபசரிப்பு தேவையில்லை.''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"சே, உங்களைப் பணியாள் என்று நான் கருதவில்லை. அதுவுமின்றி உங்களுடைய முகக்களையைப் பார்த்தால் அரசரின் நினைவு வருகிறது."

"பணியாளோ, அரசனோ, அது முக்கியமன்று முதலில் கூறியதைப்போல நடந்து கொள்ள வேண்டும். அவ்வளவுதான். குருவின் சொல்லை மீறக் கூடாது. நான் அடகு வைக்கப்பட்ட ஒரு பொருள் அல்லவா. அதை இருவரும் மறக்கக்கூடாது."

"ஆமாம் அதற்காகத்தான், நான் கூறியதைப்போல கூறியதைக் கேட்பது தான் உங்கள் வேலை. இப்பொழுது நானே கூறுகிறேன். முதலில் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்."

தம்மையே பேச்சிலே சிக்கவைத்து விட்ட அவளுடைய திறமையான பேச்சை மெச்சிய நிஜகுணர் பேச்சை வளர்க்காமல் மௌனமானார்.

அதற்குள் சம்பகா "அம்மா, தளபதி மாரசிங்கரின் குமாரர் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம்."

நிஜகுணரிடம் மோகம் கொண்ட நந்தினி அவருடைய வருகையை விரும்பவில்லை.

"எனக்கு இன்று உடல் நலம் சரியில்லை. யாரையும் பார்க்க விருப்பமில்லை என்று அவரிடம் கூறிவிடு. எத்தகைய மனிதர்களோ, என்னவோ?"

சம்பகா விசித்திரமாக ஒருமுறை நந்தினியைப் பார்த்துவிட்டு அங்கிருந்து அகன்றாள். அப்பொழுது அவள் நிஜகுணரிடம் "நீங்கள் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். உணவு ஆயத்தமானவுடன் சொல்லி அனுப்புகிறேன்."

அவள் அதைக் கூறிவிட்டு போக விருப்பமின்றிச் சென்றாள். நிஜகுணர் அப்படியே உறங்கிவிட்டார்.

பௌர்ணமியுடன் கூடிய அழகிய இரவு அது. கோடைக்காலத்தின் வெப்பத்தினால் சோர்ந்திருந்த நிஜகுணர், எல்லாச் சாளரங்களையும், கதவையும் முழுமையாகத் திறந்து வைத்து விட்டு படுத்துக் கொண்டிருந்தார். சாளரங்களின் வழியாக நிலவொளியானது அறையிலே பரவி இருந்தது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பக்கத்துத் தோட்டத்திலிருந்து மல்லிகையின் நறுமணத்தைத் திருடிக் கொண்டு வந்திருந்த தென்றல் காற்று அங்கு சுழன்று கொண்டிருந்தது.

முழுநிலவின் அழகான ஒளியிலே நிஜகுணரின் இளமை நிறைந்த உடலானது அழகாக ஒளிர்ந்து கொண்டிருந்தது.

நள்ளிரவு நேரமாக இருப்பினும் நந்தினி உறக்கமின்றி புரண்டு கொண்டிருந்தாள். எழுந்து உட்கார்ந்து கொண்டாள். மிகவும் மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். "ஓ, அவருடைய அறைக் கதவு திறந்துள்ளது. என்னுடைய ஆசை கைகூடும் நல்ல நேரத்திற்கான நல்ல அறிகுறி இது'' என்று எண்ணி, தன்னுடைய அறைக்குத் திரும்பி வந்து, முகத்தைத் தூய்மை செய்து கொண்டு அழகாக அலங்கரித்துக் கொண்டாள். வெண்ணிறத்தில் மென்மையான புடவையை அணிந்து கொண்டு, அதே வண்ணத்தில் ரவிக்கை தரித்து, கொத்துக் கொத்தாக தானே மலர்ந்து கொண்டிருந்த மல்லிகை மாலையை சூட்டிக் கொண்டாள்.

அணி செய்து கொண்டபிறகு, தன்னுடைய அழகில் தன் மனத்தையே அவள் பறி கொடுத்தாள். புன் சிரிப்பு, சிறிதளவிற்கு நாணம். ஒய்யாரத்துடன் அவள்-திகழ்ந்தாள் உறங்கிக் கொண்டிருந்த நிஜகுணர் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்தார்.

அகன்ற தோள்களுடன், ரோமம், நிறைந்திருந்த அவருடைய மார்புப்பகுதியானது மெதுவாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. சிவ களை; சிவ ஒளியுடன் ஒளிர்ந்து கொண்டிருந்த அவருடைய முகமானது பொலிவுடன், அழகுடன், ஈர்ப்புடன் விளங்கியதைக் கண்டு நந்தினிக்குப் பித்துப் பிடித்ததைப் போல ஆயிற்று.

''இந்த இளமை முழுவதும் என்னுடையதாக வேண்டும். விரும்பி வந்த எத்தனையோ செல்வந்தர்களை நிராகரித்து உள்ளேன். எப்படி எப்படியோ இருப்பவர்களும் என்னுடைய அழகில் மனத்தைப் பறி கொடுத்து இருக்கும் பொழுது, இந்த விசித்திரமான மனிதன் ஏறெடுத்தும் பார்ப்பது இல்லை. எனக்கும், என் அழகிற்கும் இது அவமானமாகும் என்னால் இன்னும் பொறுக்கவியலாது'' என்று கருதிய நந்தினி அவர் பக்கமாகச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சரிந்து கட்டிலின் ஓர் ஓரமாக அமர்ந்து கொண்டாள். அவருடைய அகன்ற மார்பிலே முகத்தை மூடிக் கொள்ள வேண்டும் என்னும் ஆசையானது நந்தினியைச் சூழ்ந்து கொண்டது. அவள் மெதுவாக முன்னால் குனிந்தாள்.

ஏதோ ஒரு கனவின் மோடிக்கு ஆட்பட்ட நிஜகுணர் புருவங்களை நெறித்தார். சிவந்த அதரங்கள் மெல்ல நடுங்கின. அமைதியான அவருடைய முகமானது கலவரம் அடைந்தது. நந்தினி அச்சத்துடன் பின்னால் சரிந்தாள். நிஜகுணர் கனவில் விக்கி விக்கி அழத் தொடங்கினார். நந்தினி உண்மையாகவே அஞ்சினாள். கனவு கண்டு கொண்டிருக்கிறார் என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அன்புடன் அவரை அசைத்து "எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள் கனவு கண்டு அழுவதைப் போல உள்ளதே" என்று கூறினாள். கனவின் துயரத்திலிருந்து விடுபட்ட நிஜகுணர் எழுந்து உட்கார்ந்து கொண்டார். தம் அருகிலே அமர்ந்திருந்த, தம்மைத் தொட்டுத் தட்டி எழுப்பிய அழகியைக் கண்ட அவர், கனவோ, நனவோ என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். ஓ நந்தினி, நிலவொளியே பெண்ணாக உரு எடுத்ததைப் போல வெண்ணிற ஆடையில் மோகினியைப் போல அருகிலே அமர்ந்திருந்த நந்தினியை ஒரு கணம் பார்த்ததும் முழுமையாக விழிப்படைந்த நிஜகுணர் தள்ளி அமர்ந்து கொண்டார்.

"ஐயோ, கனவிலே நான் பேசி உங்களுக்குத் தொல்லை அளித்து விட்டேன். உங்களுடைய உறக்கம் கெட்டுவிட்டது என்று தோன்றுகிறது."

"ஏன் நள்ளிரவைக் கடந்து விட்டது அல்லவா? உறங்கவில்லையா?"

"உறக்கம், உறக்கம் - என்னிடமிருந்து வெகு தொலைவிற்குச் சென்றுவிட்டது" என்று கூறியவள் - எதைஎதையோ கிசுகிசுத்தாள். நுட்பமுள்ள நிஜகுணருக்கு அவளுடைய மனவிருப்பம் என்ன என்று தெரிந்தது. அவரும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "போங்கள் படுத்துக் கொள்ளுங்கள். அமைதியாகப் படுத்துக் கொண்டால் உறக்கம் தானாகவே வரும்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''கனவில் ஏன் அழுதீர்கள்? என்று மோடியுடன் பேச்சிற்கு இழுத்தாள்.

''என்னவோ கனவு நினைவில்லை. இங்கு பாருங்கள். நான் நாளையிலிருந்து உங்களுடைய வயதான தாயாரின் அறையிலேயே படுத்துக் கொள்கிறேன். இங்கு எதனாலோ சரியாகப் படவில்லை.''

''அந்தக் கிழவியின், தெளிவற்ற பேச்சு, வேதனை, குறட்டையினால் உங்களுக்கு அங்கு நிம்மதி கிடைக்காது இங்கேயே இருங்கள்.''

''இல்லை, இல்லை அவருக்குத் தொண்டு செய்வதில்தான் நிம்மதி கிடைக்கும்'' என்று நிஜகுணர் எழுந்து நின்றார்.

வேறுவழி இன்றி நந்தினி அவமானத்தை விழுங்கி தடதடவென்று நடந்து சென்றாள். நிஜகுணர், நந்தினியின் தாயார் சந்திரம்மா படுத்துக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தார். அங்கு கண் தெரியாத அவள் தண்ணீருக்காகத் தவித்துக் கொண்டிருந்தாள். நிஜகுணர் தண்ணீர் கூஜாவை அவள் அருகில் பிடித்துக்கொண்டு ''அம்மா, குடியுங்கள், இதோ தண்ணீர்!'' என்றார் சந்திரம்மா வியந்து, உனக்கு ''எப்படித் தெரிந்தது அப்பா? தாகத்தினால் என்னுடைய உயிரே போய்விடுமோ என்று கூறுமளவிற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தேன். கண் தெரியாத கிழவி. எல்லோரும் பொறுமையையே இழந்து விடுகின்றனர்'' என்று வேண்டிய அளவிற்கு நீர் பருகி விட்டு அமைதியடைந்தார்.

''உன்னைப் பற்றி நந்தினி நிறையக் கூறினாள் உன்னைப் பார்க்கும் பேறு இல்லை. என்ன செய்வது அப்பா?! என் அருகிலே வா. எங்கு... ஆஹா! எவ்வளவு நன்றாக இருக்கிறது! இன்னும் சிறிது நேரத்திற்கு அமர்ந்து கொள்ளக் கூடாதா? கிழவியின் கேள்வியில் தீனம் இருந்தது.

''நான் இனிமேல் இங்கேயே இருக்கிறேன் அம்மா''

''எதற்கு? இங்கேயே இருக்கிறாய்?''

''ஆம், இங்கேயே! உங்களுக்குத் தொண்டு செய்வதிலேயே என் பொழுதைச் செலவிடுவேன்.''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''தொண்டும் வேண்டாம், எதுவும் வேண்டாம். நீ பேசிக் கொண்டே இரு; நான் கேட்டுக் கொண்டே இருக்கிறேன். அவ்வளவே போதும்.''

''நீ மிகவும் நன்றாகப் பாடுகிறாயாமே, உனக்கு விருப்பம் இருந்தால் ஒரு பாட்டுப்பாடுவாய்.''

சில நிமிடங்களுக்கு மௌனமாக அமர்ந்திருந்த நிஜகுணர், உணர்வுப்பெருக்குடன் இதயம் நிறைந்து பாடத் தொடங்கினார்.

''புலன்கள் அடங்க நீ எனக்கருள்வாய் மேலான ।
புண்ணிய மகலாதிருக்க அருள்வாய் பக்தையின்
இயல்புணர்வான ।
கிரிஜாவின் இன்ப உயிரே, விரைந்து அருள்வாய் ।।

பாடல் நிறைவுற்றது.

பாவசமாதியிலிருந்து விழிப்படைந்த நிஜகுணர் விக்கி விக்கி அழுது கொண்டிருந்த சந்திரம்மாவைக் கண்டு வியப்படைந்தார்.

''ஏன் அம்மா அழுகிறீர்கள்''?

''பொருள் பொதிந்து, வேண்டி வேண்டிப்பாடும் இந்தக் குழந்தையைக் கண்டு என் இதயமானது துடித்தது குழந்தாய். மிகவும் இனிமையாகப்பாடினாய். இனிமேல் படுத்துக்கொள், மீண்டும் நாளைக்கு வருவாய்'' என்றவாறு கிழவி மகிழ்ச்சியுடன் படுத்துக் கொண்டாள். அவளுக்கு நன்றாகப் போர்த்திவிட்டு ''உறங்குவாய் அம்மா, நான் வருகிறேன்'' என்று நிஜகுணர் எழுந்து கொண்டார்.

நந்தினியின் வயதான தாயாருக்குத் தொண்டு செய்வது நிஜகுணரின் வேலையாயிற்று. அத்துடன் பார்வையை இழந்திருந்த அவருக்கு மருத்துவம் சார்ந்த உபசாரமும் நடைபெற்றது. காட்டிலே வெகு தொலைவு சென்று, ஏதோ மூலிகைகளைக் கொண்டு வந்து, எந்த அளவு சேர்க்கவேண்டும் என்னும் விதி முறைகளுக்குத் தகுந்தாற்போல் பயன்படுத்திக் கொண்டிருந்தார். அந்த மூதாட்டிக்கு அவர்மீது ஒவ்வொரு நாளும் பக்தியும், சிரத்தையும் ஏற்படத் தொடங்கின. அவருடைய தொண்டு-உபசரிப்பால் மகிழ்ச்சியடைந்த அவள் உணர்வுப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பெருக்குடன், "குழந்தாய், மருத்துவ உபசரிப்பால் என் கண்ணிற்குப் பார்வை நிச்சயமாக வரும். அந்தப் புதிய கண்ணால் உன்னைக் கண்டு பேறு பெற்றவளாவேன்." என்று அவர் கூறுவார். நிஜகுணர் சிரித்தவாறு, "உங்களுடைய சிரத்தையும், பக்தியுமே உங்களுக்கு கண்ணைக் கொடுக்கும் அம்மா" என்று கூறுவார்.

நிஜகுணரின் பெரும்பான்மையான நேரமானது சந்திரம்மாவிற்குத் தொண்டு செய்வதில் செலவழிந்தது. எஞ்சியிருந்த நேரமானது, தியானம், எழுதுவது, படிப்பதில் செலவழிந்தது. நிஜகுணரின் இயல்புகள், நடந்து கொள்ளும் முறைகள் போன்றவை நந்தினிக்குக் குழப்பத்தை ஏற்படுத்தின. இருப்பினும் அவர் மீது அவள் கொண்ட ஆசை, மோகம் போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றன.

நிஜகுணர், தன்னை இந்த அறிமுகமற்ற, இத்தகைய நிலையிலே வைத்து விட்டுச் சென்ற சம்புலிங்கரின் வரவை தினமும் எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். குருவின் திருநாமத்தை இடைவிடாமல் நினைப்பது ஒன்றுமட்டும்தான் எல்லாக்காலங்களிலும் குறியை அடைவதற்கான வழியாகும் என்று உணர்ந்து கொண்டு அதில் மிகுதியான நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருந்தார்.

நந்தினியின் மனநிம்மதி பறந்து போய்விட்டது. நிஜகுணருடன் பேச வேண்டும் என்றும், அதிகமாக அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்னும் சபலமானது அதிகமாக ஆனாலும், அவருடைய கம்பீரத்திற்கு அஞ்சி, தன்னுடைய மனவிருப்பத்திற்குத் தடை போட்டுக் கொண்டிருந்தாள். இருப்பினும் ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டுக் கொண்டு நேரம் கிடைத்தபொழுதெல்லாம் தன்னுடைய விருப்பத்தை ஈடேற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

நிஜகுணர் சாப்பிடுவதற்கு அமர்ந்து கொண்டால் உபசரிப்பதற்கு வருவாள். உறங்கினால் மறைந்திருந்து பார்ப்பாள். தியானத்தில் மூழ்கியிருக்கும் பொழுது தொலைவிலிருந்து பார்ப்பாள். தோட்டத்திலுள்ள குளத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நீராடிக்கொண்டிருந்தால் மாடியின் மீது நின்று கொண்டு கூர்ந்து கவனிப்பாள். செண்பக மரத்தின் அடியிலுள்ள கல்மேடையின் மீது கண்களை மூடிக்கொண்டு, உட்கார்ந்து பாடும்பொழுது பூக்களைக் கொய்யும் சாக்கிலே நின்று பார்ப்பாள். தன்னுடைய தாயாருக்குப் பணிவிடை செய்யும் பொழுது தானும் உதவி செய்வதற்கு வந்ததைப் போல நடித்துக் கொண்டே பார்ப்பாள். நந்தினியின் இந்தப் பலவகையான பார்வைகளுக்குப் பதில் என்ன என்றால் நிஜகுணரின் குனிந்து கொண்டுள்ள முகம், மௌனம், கம்பீரம்.

நிஜகுணரின் வைராக்கியம் உறுதியாக, ஆழமாக நிலைகொண்டதைப் போல, நந்தினி மோகத்தால் சஞ்சலம் அடைந்தாள், சபலப்பட்டாள்.

ஒருநாள் நிஜகுணர் நாள்தோறும் அமர்ந்து கொள்ளும் கல்மேடையின் மீது, பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறார். ஸிவகளை அவருடைய முகத்திலே சோபித்துக் கொண்டிருந்தது. கண்கள் இரண்டும் மூடியிருந்தன. உதடுகள் இரண்டும் சிறிதளவு திறந்திருந்தன. நந்தினி மல்லிகை மொக்குகளைக் கொய்யும் சாக்கில் நிஜகுணரைக் கண்களை விரித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தாள். அவருடைய தொண்டையிலிருந்து ஒரு பாடல் வெளிப்பட்டது.

"மகளிரின் அழகைக் கண்டு மனத்திலே
தோற்காதவனே துறவி"

இதைக் கேட்ட நந்தினியின் இதயம் வேகமாகத் துடித்தது. அவளுடைய உடலிலிருந்த ரத்தமெல்லாம் முகத்திற்கு வந்துவிட்டது.

"மென்மையான பாதம், அழகிய தொடைகள்
பரந்த நிதம்பத்துடன் கூடிய நடைக்கும்
மிகச்சிறிய இடை, அழகிய தோள்களையும்
உடைய இனியவளைக் கண்டு" (1)

இந்த வரிகளில் தன்னுடைய பாதம், தொடை, இடைப்பகுதி, தோள்களைக் குறித்து விவரித்து இருப்பதைக் கண்ட நந்தினி புளகமடைந்தாள். ஆனால் கடைசியில் இத்தகையவளிடத்திலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மனத்தைப் பறி கொடுக்காதவனே வைராக்கியம் உள்ளவன் என்று கூறியதைக் கேட்டு அவளுடைய கால்கள் நடுங்கின. மீண்டும் கேட்டாள்.

''சிறிது புலப்படும் திரண்ட முலைகளின் அழகு ।
இன்பம் பொழியும் அழகிய முகப்பொலிவு ॥
படர்ந்துள்ள நெடுங்கண்கள்; இளமையிலே ।
ஒளிரும் இத்தகு பெண்ணைக் கண்டு ॥
தோற்காதவனே துறவியாவான்'' (2)

வருணனையின் சிகரத்திற்கு ஏறி, அப்படியே கிடுகிடுபள்ளத்தில் தள்ளப்பட்ட அனுபவம். அவளுடைய இதயம் துயரத்தால் சுமையாயிற்று

''மலர்ச்சரத்துடன் அசைந்தாடும் கூந்தலை ।
ஒளிரும் வெண்பல்லை, சங்குக்கழுத்தினழகை ॥
ஒளிசிந்தும் சிவந்த அதரங்களை, கூர்மையான ।
முகவாய்க்கட்டை உடையவளைக்கண்டு ॥
தோற்காதவனே துறவி'' (3)

மார்பின் மீது தொங்கிக்கொண்டு, அங்குமிங்கும் ஊசலாடிக் கொண்டிருந்த கூந்தலை நந்தினி கோபத்துடன் சர்ரென்று பின்னால் தள்ளினாள். தன்னுடைய கன்னத்தின் மீது தானே படபடவென்று அடித்துக்கொண்டு சிவந்த அதரங்களைக் கடித்தவாறு நின்று கொண்டு தொடர்ந்து கேட்டாள்.

''இறைஞ்சும் பார்வையை, புன்னகையை ।
சைகையி லுணர்த்தும் இன்மொழிகளை ॥
உறுதியாகத் தோன்றும் உணர்வின் மோகத்தை ।
மென்னழகை, அழகியபற்களை
உடையவளைக்கண்டு ॥
தோற்காமலிருப்பவனே துறவி (4)

நல்லநேரம் கூடிவந்தது; ஶிவசக்தி விழித்தெழுந்தது.

திடீரென்று நந்தினியிடம் விவேகம் ஏற்பட்டது. மோகம் மிக்கவளாக நடந்து கொண்ட தன் நிலையைக் கண்டு அருவறுப்பு ஏற்பட்டது. நிஜகுணரின் ஒப்பற்ற, உறுதி மிக்க வைராக்கியத்தைக் கண்டு பூஜிக்கும் எண்ணமும் பக்தியும் முளைவிட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தன்னுடைய பாவம் மிகுந்த தூய்மையற்ற வாழ்க்கையைக் குறித்து குமட்டுவதைப் போலத் தோன்றியது. பச்சாதாபத்துடன் தூய்மையானவளாக ஆன நந்தினி, நிஜகுணர் பாடிக் கொண்டு இருந்ததைச் சிரத்தையுடன் கேட்டாள்.

"அலைபாயும் மனம் சார்ந்த பயமில்லை |
தன்னை ஈர்க்கச்செயும் அனுகூல அழகியே ||
பணிவு மிகுந்த, உண்மையான உறுதியைச் |
சம்புலிங்கத்திடமிருந்து பெற்று ||
தோற்காமலிருப்பவனே துறவி" (5)

நந்தினி ஓடிவந்து நிஜகுணரின் திருவடிகளில் வீழ்ந்து விக்கி விக்கி அழத் தொடங்கினாள். நிஜகுணர் தலையை நிமிர்த்துவதற்கும். "பலே, பலே, நிஜகுணா! உன் வைராக்கியத்தை மெச்சுகிறேன். உன்னுடைய குரு பக்திக்கு மனத்தைப் பறிகொடுத்தேன்" என்று கூறியவாறு சம்புலிங்கர் செண்பகமரத்தின் அந்தப் பக்கத்திலிருந்து வெளிப்பட்டார். விசுவநாதனும் வந்து நின்று கொண்டு இருந்தான். அதற்குள் சந்திரம்மா,

"நிஜகுணா! குழந்தாய்! இதோ எனக்குப் பார்வை வந்து விட்டது" என்று கூறியவாறு அங்கு வந்து சேர்ந்து கொண்டார். நிஜகுணருக்கு வியப்பின் மேல் வியப்பு ஏற்பட்டது. மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சி! எழுந்து வந்து சம்புலிங்கரின் திருவடிகளில் பணிந்தார்.

சம்புலிங்கர் நிஜகுணரை இறுக்கமாகக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"புண்ணியம் செய்தவன், பேறுபெற்றவன். நான் வைத்த பரீட்சையில் தேர்ச்சி பெற்று விட்டாய். கிளம்புவாய். சம்புலிங்கமலை அழைத்துக் கொண்டு இருக்கிறது" என்று கூறிய பொழுது நந்தினி,

"ஸ்வாமி, என் தாயாருக்குப் பார்வை அளித்தீர்கள் என்னையும் விழிப்படையச் செய்தீர். இந்த ஏழையின் எளிமையான தொண்டை ஏற்றருள்வீர்" என்று விண்ணப்பித்துக் கொண்டாள்.

Digitized by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''எனக்குப் பார்வை அளித்த மிகப்பெரும் மகிமையை நீ உடையவன். உன்னைப் பார்த்து இந்தப் புதிய கண்கள் பயனை அடைந்தன. நந்தினி, பாத பூஜைக்கு ஏற்பாடு செய்வாய். வாருங்கள் போகலாம்'' என்று சந்திரம்மா கூறியபொழுது மகிழ்ச்சியினால் ஊமையான அவர்கள் அனைவரும் உள்ளே சென்றனர்.

பலநாட்களுக்குத் தொடர்ந்து பயணம் செய்தபிறகு சம்புலிங்கரும், நிஜகுணரும், விசுவநாதனும் சம்புலிங்க மலையை அடைந்தனர். மலையின் மீது கால்வைத்த பொழுது நிஜகுணர் புளகம் அடைந்தார். பக்தியினால் வணங்கினார். வணங்கிய பின் நிலத்தின் மண்ணை எடுத்து உடலெங்கிலும் பூசிக் கொண்டார். அவர் அவ்விதம் செய்ததைக் கண்டு சம்புலிங்கர் புன்னகை புரிந்தார். கோயிலின் முன்பாக நின்றபொழுது நிஜகுணர் மின்னலைப் போல உள்ளே ஓடினார். சிறு வயதிலிருந்தே தன் மனத்தை ஈர்த்த இஷ்ட தெய்வமான சம்புலிங்கரை மீண்டும் மீண்டும் வணங்கினார். வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தார். நந்தியை வலம் வந்தார். கணபதியை வணங்கிவிட்டு, வீரேச்னைப் பணிந்து விட்டு அகன்ற பாறையின் மீது ஏறி அமர்ந்து கொண்ட பொழுது மனம் குளிர்ந்தது. உடலானது மல்லிகையைப் போன்று லேசாயிற்று. சம்புலிங்கரும், விசுவநாதனும் அங்கேயே வந்து ஓய்வெடுத்துக் கொண்டனர்.

நிஜகுணர் சம்புலிங்கமலைக்கு வந்துள்ளார் என்று அர்ச்சகர் கூறிய செய்தியால் தலைநகரிலே இருந்த மக்கள் அனைவரும் கும்பல் கும்பலாக வந்து கொண்டு இருந்தனர். அவரை மீண்டும் கண்டோமே என்று சிலருக்கு மகிழ்ச்சி பொங்கினால் ''நம் அரசருக்கு எத்தகைய நிலை வந்தது அல்லவா!'' என்று சிலருக்குத் துயரம் பொங்கிப் பாய்ந்தது. இன்னும் சிலர் வறிதாகக் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் எல்லாவற்றையும் எடுத்துரைத்து சமாதானம் செய்து அனுப்பி வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

முதலமைச்சர் சிவகுமாரர் நிஜகுணரைத் தழுவிக் கொண்டு கண்ணீருடன் ''அரசே! எங்களையெல்லாம் அனாதைகளாகச் செய்துவிட்டீர். நீங்கள் கிளம்பிச் சென்ற சில நாட்களிலேயே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தங்கள் தாயாரும் இறைவனடி சேர்ந்துவிட்டார்'' என்று துயரச் சுமையால் விக்கினார். நிஜகுணர் அவரைச் சமாதானம் செய்தவாறு,

''ஞானப்பழமான நீங்களே இவ்விதத்தில் துயரப்பட்டால் எப்படி முதலமைச்சரே? அம்மா அவர்களின் மரணத்தால் மிகவும் துயரத்திற்கு ஆட்பட்டுள்ளீர்கள். அமைதியாக இருங்கள். வினைப்பயன்களின் திருவிளையாடல்களுக்கு நாம் அனைவரும் தலைவணங்கவே வேண்டும்.''

''நீங்கள் இல்லாமல் நாங்கள் இவ்வளவு நாட்களும் எப்படி வாழ்ந்தோமோ என்பது கடவுளுக்குத்தான் தெரியும். தயவுசெய்து அரண்மனைக்கு வாருங்கள். சம்புலிங்க மகாஸ்வாமிகளும் வரட்டும். உங்களுக்கு எப்படி வேண்டுமோ அப்படி நீங்கள் இருப்பீர்களாம்.''

''அமைச்சரே! உங்கள் இதயம் பெரியது. அனைத்தையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் உங்களிடம் உள்ளது. துறந்ததை மீண்டும் ஏற்றுக்கொண்டு அனுபவிப்பது என்பது யோகிக்குச் சரி ஆவது இல்லை. நான் இப்பொழுது அரசன் இல்லை. முன்பு நடந்ததையெல்லாம் நினைவில் கொள்ளாமல் என்னை நிஜகுணா என்று மட்டும் கூப்பிடுங்கள்'' என்று கூறியபொழுது சிவகுமாரருக்குப் பதிலளிப்பதற்கு வாயே அடைத்துப் போய் விட்டது. இதயத்திலே பூஜிக்கும் எண்ணமானது நிறைந்தது. அவர் தலைவணங்கி விட்டு அமர்ந்து கொண்டார். சம்புலிங்கர் பாராட்டித் தலை அசைத்தார்.

நிஜகுணரைப் பார்க்க வந்த மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. முதியவர்கள், பெண்கள், சிறு குழந்தைகள், அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள், வீரர்கள் என்னும் அனைவரும் வந்து தரிசனம் செய்து விட்டுச் சென்றனர். அடுத்த இரு நாட்களுக்கு விதவிதமான பட்சணங்கள், உணவு வகைகள், பழங்கள், தேங்காய், பால், தயிர் என்னுமிவற்றை மக்கள் பக்தியுடனும், அன்புடனும் விருப்பத்துடனும் சுமந்து கொண்டு வந்து உண்ண வைத்துவிட்டுச் சென்றனர். நிஜகுணர் வேண்டாம் என்று கூறினாலும் மக்கள் மீண்டும் கொண்டு வந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சிவகுமாரர் தாமே முன்நின்று மலையின் மேல் பகுதியைத் தூய்மைப்படுத்தி, அம்மூவருக்கும் இருப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

''அமைச்சரே, இவ்வளவு ஏற்பாடுகள் தேவையே இல்லை. அரசருக்குச் செய்ய வேண்டிய உபசரிப்பையே மீண்டும் இங்கு செய்துள்ளீர்கள். துறவிகளுக்கு இது தேவையில்லை.''

''நான் விசேஷமாக எதுவுமே செய்யவில்லை. ஏதோ அல்பத்தொண்டு'' என்று அமைச்சர் நழுவினார்.

நிஜகுணர் அன்று அதிகாலை நேரத்தில் தினமும் செய்யவேண்டிய விதிமுறைகள் அனைத்தையும் முடித்துவிட்டுத் தம்மை நாள்தோறும் காந்தக்கல்லைப்போல ஈர்க்கும் பாறையின் மீது வந்து அமர்ந்து கொண்டார். மெதுவாக அகமுகமானார். சிறிது நேரத்திலே அங்கு சம்புலிங்கரும் விசுவநாதனும் வந்தனர்.

''நிஜகுணா!'' என்று சம்புலிங்கர் அழைத்ததற்கு எங்கோ, வெகு தொலைவிலே, ஆழத்திலே இருப்பவரைப் போன்று ''ஓ, தந்தையே..'' என்று பதில் கூறினார். நிஜகுணர். சம்புலிங்கர் அவர் எதிரிலே அமர்ந்து கொண்டு நிஜகுணரின் தலையைத் தமது கையால் பிடித்துக் கொண்டு இரண்டு செவிகளிலும் எதையோ கூறினார். முன்தலையை மென்மையாக வருடி, நீண்ட நேரத்திற்கு அவரைக் கூர்ந்து கவனித்தவாறு அமர்ந்து கொண்டிருந்தார். அதன்பிறகு மெதுவாகக் கீழே இறங்கி வந்தார்.

''விசுவநாதா! நிஜகுணன் இன்னும் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு இதே வகையில் தவம் செய்வான். அவனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பெல்லாம் உன்னுடையது ஆகும். நான் கிளம்புகிறேன்''.

''அதாவது ...'' விசுவநாதன் தடுமாற்றத்துடன் பேசினான்.

''அதாவது பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இதே நாளில், இதே சமயத்தில் நான் இங்கு இருப்பேன். நீ தைரியமாக இரு'' என்று கூறி சம்புலிங்கர் கிளம்பிச் சென்று விட்டார்.

நிஜகுணரின் எந்தப்பயனையும் எதிர்பார்க்காத தன்னலமற்ற தவமானது தொடர்ந்து நடைபெற்றது. முதன்முதலில் நித்திராதேவியால் அவருடைய தவத்திற்குத் தொல்லை ஏற்பட்டுக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கொண்டிருந்தது தெரிந்தது. தம்முடைய குருபக்தி, தவசக்தி மற்றும் ஆற்றல் மிகுந்த சங்கல்பத்தால் அவர் நித்திரா தேவியை வென்றார். ''தேவி, உன்னுடைய இயல்பிற்குத் தகுந்தாற்போல உன் செயலை நீ செய்; என்னுடைய குருவின் ஆணையைப் போல என் செயலை நான் செய்கிறேன்'' என்று அவர் சங்கல்பம் செய்து கொண்டு தொடர்ந்து தவம் செய்த பொழுது, நித்திராதேவி (துர்க்கை) அவருடைய ஆன்மீக பலத்தை அறிந்து கொண்டு மகிழ்ந்து, அவருக்குத் தொண்டாற்ற விரும்பினாள். அதனால் நிஜகுணர் தாம் தவம் செய்யும் கல்லின் எதிரிலேயே இடத்தைக் காட்டிக் கல் வடிவத்திலே நிலை கொள்ளுமாறு கூறினார். சம்புலிங்கனைத் தரிசிப்பதற்கு முன்பு அவளுடைய தரிசனத்தையும் வாழ்த்துக்களையும் பக்தர்கள் பெறவேண்டும் என்று வாழ்த்தினார். அவருடைய தவமானது எத்தகைய தடையுமின்றி நடைபெற்றது.

விசுவநாதனின் உபசரிப்பு, தொண்டு, பாதுகாப்பு போன்றவை எப்பொழுதும் இருந்து கொண்டிருந்தன. மலைக்கு யாரும் வராதவாறு சிவகுமாரர் ஆணை பிறப்பித்திருந்தார்.

குளிர், மழை, காற்று, வெயில், பகல், இரவு என்று எண்ணாமல் நிஜகுணரின் தவமானது ஆழ்ந்து, ஆழ்ந்து சென்று கொண்டிருந்தது. நாட்கள் உருண்டன; வாரங்கள் சரிந்தன. மாதங்கள் அகன்றன. ஆண்டுகள் முடிந்தன.

பன்னிரெண்டாம் ஆண்டின் இறுதியிலே நிஜகுணர் உணவு, பானங்கள் அருந்துதல் போன்றவற்றையும் துறந்தார். சிறிதளவு கூட புற உணர்வு ஏற்படாமலிருந்த அவருடைய நிலையைக் கண்டு விசுவநாதன் அஞ்சினான். அவன் மனத்திலே ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டான்.

சம்புலிங்கரின் வருகையையே அவன் ஆர்வத்துடன் எதிர்பார்க்கத் தொடங்கினான். அன்று சரியாகப் பன்னிரெண்டு ஆண்டுகள் முடிந்து விட்டிருந்தன. சம்புலிங்கர் மலையின் மீது காலை வைத்தார். நிஜகுணரின் தவவலிமையைத் தென்றல் காற்று சுழன்று கூறியது. மரங்களும் கொடிகளும் அசைந்தும் வளைந்தும் கூறின. பறவைகள் நீ முதலில், நான் முதலில் என்று அழைத்துச் சம்புலிங்கரிடம் தெரிவித்தன. அந்தப் பகுதி முழுவதுமே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிஜகுணரின் தவவலிமையின் மகிமையால் மிகமிகத் தூய்மையாகி இருந்ததைப் போலத் தோன்றியது. நிஜகுணரின் தவத்தின் பயனானது புடம் போட்ட தங்கத்தைப் போல ஒளிர்ந்து கொண்டு இருந்ததைச் சம்புலிங்கர் அடையாளம் கண்டு கொண்டார். அந்தப் புனிதமான இடத்தின் ஒவ்வொரு துகளும் தான் பெற்ற பயனை விவரித்துக் கூறுவதைப் போல இருந்தது.

நிஜகுணரின் எதிரிலே சம்புலிங்கர் வந்து நின்றார். அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வந்து கொண்டிருந்தது. நிஜகுணரைப் பார்த்துக்கொண்டே இருந்தார். விசுவநாதன் வியப்படைந்து வாயைப் பிளந்தவாறு நின்று கொண்டு இருந்தான். சம்புலிங்கரை வணங்கிய அவனை மேலே தூக்கி அணைத்துக் கொண்டு,

''விசுவநாதனே! நீ புண்ணியம் செய்தவன், குருவிற்குத் தொண்டு செய்து, குருவின் அருளைப் பெற்ற புண்ணியசாலி நீ'' என்று வாய் நிறைந்து புகழ்ந்தார். மெதுவாகப் பாறையின் மீது ஏறி நிஜகுணரின் எதிரிலே அமர்ந்து கொண்டார். நிஜகுணரின் செவிகளிலே ஓம்கார சிம்மநாதத்தைக் கூறினார். பல தடவைகள் அப்படிக் கூறியபிறகு நிஜகுணர் மெல்ல மெல்லப் புற உணர்வைப் பெற்றார். கண்கள் மலர்ந்திருந்தன. உதடுகள் நடுங்கின. ''ஓம்குரு சம்புலிங்காய நம:'' எதிரிலே குருமூர்த்தி! நிஜகுணரின் முகம் மலர்ந்தது. குருவின் திருவடிகளில் தலைவைத்து வணங்கினார். அழகுடன் ஸிவக்களை இணைந்து. அந்த இரண்டுடனும் தவக்களையும் சேர்ந்து இன்னும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. சித்துமணிக்கை, சித்துமணிச் சொல்! நடந்தால் சிறந்த க்ஷேத்திரம்; நின்றால் புண்ணியக்ஷேத்திரம், புண்ணியத்தலம்.

கூறியது நிகழக்கூடிய சொல்லையும், சொல்லே அருளுரையாகவும் இருக்கும் தன்மையைப் பெற்ற நிஜகுணர் கூறியது எல்லாம் வேதமாக, மந்திர வடிவமாக ஆயிற்று. நிஜகுணர் சம்புலிங்கர் விசுவநாதன் மூவரும் நீண்ட நேரத்தை நம்பிக்கைக்கு உரிய ஆலோசனைகளில் செலவிட்டனர்.

''நிஜகுணா! உன்னிடம் உறுதியான வைராக்கியம் உள்ளது. தவம் வலுவடைந்துள்ளது. அனுபவமானது பக்குவப்பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அது நான்கு மனிதர்களுக்குப் பயன்தரக் கூடியதாக விளங்கட்டும். உன்னிடம் இடையறாது தோன்றி வெள்ளமெனப் பாய்ந்து கொண்டு இருக்கும் ஞானப்பெருக்கிற்கு எவ்விதத் தடையுமின்றி கற்பிக்கும் வடிவமான பெரும் வெள்ளத்திலே முமுக்ஷுக்கள் முன்னேறட்டும். முறையாகக் கற்றுக் கொள்வதற்குத் தகுந்தாற் போன்று, சாதகர்களுக்குப் புரியுமாறு கூறும் ஆற்றலும், திறமையும் உன்னிடம் தெளிவாகத் தென்படுகிறது. அத்துடன் கவிதை இயற்றும் ஆற்றலும் அமோகமாக உள்ளது. நிஜகுணா! கவனித்துக் கேட்பாய். இது என்னுடைய சத்திய சங்கல்பமாகும்''.

சம்புலிங்கரின் கண்கள் அரிய ஒளியுடன் ஒளிர்ந்தன. ''நீ இயற்றும் ஆன்மீகப் பாடல்கள் கன்னட நாட்டிலே மிகமிக அரியதாகவும், சிறந்ததாகவும் விளங்கும். சாதகர்களின் கை விளக்காக இருக்கும். முக்தி தீபங்களாகத் திகழும். நிஜகுணா! இது என்னுடைய சங்கல்பம். செல்வாய் நூல்களை இயற்றுவாய்'' என்று உணர்வுப் பெருக்குடன் கூறினார்.

நிஜகுணர், சம்புலிங்கரின் பொறிபறக்கும் சொற்களால் நூறு மடங்கு ஆலோசிக்கத் தொடங்கினார். அவருடைய கண்கள் பளபளவென்று ஒளிர்ந்தன. முகத்தின் ஒளியானது இரு மடங்கு கூடியிருந்தது. எழுந்து வந்து குருவின் திருவடிகளை வணங்கினார். சம்புலிங்கர் மிகவும் அன்புடன் நிஜகுணரின் உடலை நீவியவாறு ''தினமும் கற்பிப்பாய் அல்லவா? அவ்வனைத்தையும் செய்யுள் வடிவத்தில் எழுதிக் கொண்டே செல்வாய். உன் ஆன்மீக அனுபவங்கள் அனைத்துச் சாரத்தின் வடிவமாக சாதகர்களுக்கு இருக்குமாறு எளிமையாக முறையுடன் எழுதிக் கொண்டு செல்வாய். நாட்டிலுள்ள முமுக்ஷுக்கள் முன்னேற்றம் அடையட்டும். பேறு பெற்றவன், பேறு பெற்றவன்''.

''அப்படியே ஆகட்டும். குரு அவர்களே! உங்கள் ஆணையைத் தலைமீது சுமந்து காப்பேன்'' பக்தியின் வேகத்தில் அவருடைய சொல்லானது தழுதழுத்தது. உடல் தானாகவே சம்புலிங்கரின் திருவடித் தாமரைகளில் பணிந்தது.

திங்கட்கிழமை பிரம்மமுகூர்த்தத்தின் இனிய ஒளியில் விழிப்படைந்த நிஜகுணர், குருவின் திருவடிகளை வணங்கி, மலையின் மேலிருந்த அருவியில் நீராடுதல் போன்றவற்றை

Digitization by Hindu Heritage-Foundation of America. HHFA(USA)


முடித்துக் கொண்டு, சம்புலிங்கத்தை வலம் வந்து, கணபதியை வணங்கி விட்டு, வீரேசனைப் பணிந்து, அகன்ற பெரிய பாறாங்கல்லின் மீது ஏறி அமர்ந்து கொண்டார்.

சுற்றுச்சூழல் அமைதியாக இருந்தது. அதன் ஆனந்தத்தை அனுபவித்தவர்களுக்கு சாத்தியமற்றதையும் சாத்தியமாக்கிக் கொள்ளவியலும் என்னும் உற்சாகம் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. நிஜகுணர் நீண்ட நேரத்திற்குத் தியானத்திலே மூழ்கியிருந்தார். விசுவநாதனின் பறை ஒலி அவரை விழிப்படையச் செய்து கீழே இறங்கி வருமாறு செய்தது. அதற்குள் சம்புலிங்கரும் சம்புலிங்கத்தை வணங்கி விட்டு வந்தார். மக்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். சம்புலிங்கத்தின் எதிரிலிருந்த பரந்த முற்றத்தில் மக்கள் அமர்ந்து கொள்வதற்காக விரிக்கப்பட்டிருந்தது. சம்புலிங்கத்தின் கருவறையின் கதவின் அருகிலேயே புலித்தோல் விரிக்கப்பட்ட பீடம் குருசம்புலிங்கருக்குத் தயாராக இருந்தது. சம்புலிங்கரின் வலப்பக்கத்தில் ஏழெட்டுப் பேர்களும் இடப்பக்கத்தில் ஏழெட்டுப் பேர்களும் எதிரெதிராக அமர்ந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சம்புலிங்கத்தின் முன்பு இருந்த நந்தீசுவரனின் பின்பக்கத்தில் மற்றொரு புலித்தோல் விரிக்கப்பட்டு வேறொரு இருக்கையும் தயார் செய்யப்பட்டிருந்தது. அது நிஜகுணருக்காகச் செய்யப்பட்டிருந்தது. எழுதுவதற்கு வேண்டிய பொருட்களும் சதுரமான பலகையின் மீது வைக்கப்பட்டிருந்தன. இவ்வனைத்தும் முதலமைச்சர் சிவகுமாரர் செய்த ஏற்பாடு ஆகும்.

நிஜகுணர் சம்புலிங்கரின் கையைப் பிடித்துப் பீடத்தின் மீது அமர்த்தினார். குருவின் திருவடிகள் இரண்டையும் சேர்த்து வைத்து, விபூதியைப் பூசி மலர்களைத் தூவி வணங்கினார். பிறகு மீண்டும் எழுந்து நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினார். பாததூளியை உடல் முழுவதிலும் தரித்துக் கொண்டார். மக்களை அமருமாறு கூறிவிட்டு அவரும் அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பீடத்தை வணங்கி விட்டு அமர்ந்து கொண்டார்.

தம் எதிரில் சிரத்தையுடன் அமர்ந்து கொண்டிருந்த மக்கள் அனைவரையும் நிஜகுணர் ஒருமுறை பார்த்தார். குரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சம்புலிங்கரின் மீது அவர் பார்வை நிலைத்தது. கௌபீனத்தை மட்டும் தரித்துக் கொண்டு பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். உயரமான தோற்றம் பூவைப் போன்ற மென்மையான உடல், முகம், உடல் முழுவதிலும் விபூதியைப் பூசிக் கொண்டு இருந்தார். நெற்றியிலே மூன்று இழைகளாக விபூதி ஒளிர்ந்தது. முடியெல்லாம் முதுகின் மீது பரவியிருந்தது. தாடியானது மார்பையும் தாண்டி வளர்ந்திருந்தது. மார்பின் மீது கற்றை கற்றையாக முடி இருந்தது. அந்த முடியெல்லாம் மஞ்சளாகி வெண்மையாகி வெண்மைத் திருவுருவமாகவே சம்புலிங்கரைச் செய்து விட்டிருந்தது. நிஜகுணரையே அன்பான பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்த அவருடைய கண்களில் நிஜகுணரின் பார்வை நிலைத்து உடல் புளகமடைந்தது. அதே வேகத்தில் கண்களை மூடியவாறு அகமுகமானார். சில கணங்களுக்கு அங்கு மௌனம் சூழ்ந்து கொண்டிருந்தது.

அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு நிஜகுணரின் குரலானது பாடலாக வெளிப்பட்டது.

“சிறந்த பேரின்பமய குரு சம்புவின் திருவடியை என் ।
தலையிலே தரிப்பேன் உண்மையான அன்புடன்” ।।

முதலில் வழிபடு கடவுளை வணங்கும் முறையில் மங்கலப் பாடலானது மலையெங்கிலும் எதிரொலித்தது.

“ஸ்ரீகுருவே, நிலைத்த இன்பக்கடலே, வெளிப்படுவாய் ।
எப்பொழுதும் விளங்கும் உன் கடைக் கண்கள் ।।
இப்பொழுது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருக” ।

கடைக் கண்களிலிருந்து கருணைரசம் நிறைந்து, வெள்ளமெனப் பெருகுவதைத் தடுத்துக் கொள்ள இயலாமல் சம்புலிங்கர் மகிழ்ச்சியுடன் நிஜகுணரையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

“உலகின் மூலவித்தை வேதத்தின் உட்பொருளை ।
மலையரசனின் மகளின் மணாளனை சம்புவை
மிகுந்த உவகையுடன் பணிகிறேன் ।।

கருவறையிலே கல்லிலே அடங்கி அமர்ந்திருந்த சம்புலிங்கம் ஆனந்தத்தால், உணர்வுடன் கூடியவனாக நிஜகுணரிடம் புதிய, சிறந்த அறிவையும், உணர்வையும் நிறைத்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஶிவனை, எல்லாம்வல்ல மேலான ஈசனை ।
அனைவரிலும் ஆன்மாவாகஉள்ள எல்லா
ஆற்றலுள்ள ॥
சர்வமங்கலையை உறுதியுடன் பணிகிறேன் ॥

சம்புவின் இதயத்திலே அடங்கியிருந்த தூய்மையான ஞான வடிவின் அரசியான சர்வமங்கலை, நிஜகுணர் தன்னை நினைப்பதைக் கேட்டு, மகிழ்ந்து அவர் அந்த நிலையிலேயே நிலைத்து நின்று எல்லாப் பாடல்களையும் எழுதுவதற்கு அருள் புரிந்தாள்.

"ஒருமுறை கணபதியை, மறுமுறை சேனாதிபதியை ।
ஒருமுறை வீரேசனை, ஒரு முறை நந்தீசனை ॥
நான் நயந்து வணங்குவேன்" ॥

மோதகத்தை உண்ட அளவிற்கு மகிழ்ச்சி எய்தியவனாக, வயிற்றைக் கையால் தடவியவாறு வயிற்றிலிருந்த மோதகமானது கரைந்து பொடிப்பொடியாகுமாறு, நிஜகுணருக்கு எல்லாவிதமான தடைகளும், தொல்லைகளும் பொடிப் பொடியாக ஆகட்டும் என்று தும்பிக்கையை வீசி, கணபதி அபயம் அளித்ததைப் போல இருந்தது.

நிஜகுணரின் ஆற்றலையும், ஞானத்தையும் பாதுகாத்து முமுக்ஷுக்களின் முன்னேற்றத்திற்குத் தாம் எப்பொழுதும் அவருடனிருந்து காவல் புரிய வேண்டும் என்று படைத்தலைவர் வீரேசர் சங்கல்பம் செய்து கொண்டார். நந்தீசுவரர் அதை ஆமோதித்து வாலை வீசியதைப் போல நிஜகுணருக்குத் தென்பட்டது.

"அன்றும் இன்றும் என்றென்றும் வீடாது உண்மையான ।
பக்தியினால் ஈசனுடன் இணைந்து இன்புறும் ।
கணக் கூட்டத்தை நயந்து வணங்குவேன் ॥"

சம்புவின் எல்லா சக்தி கணங்களும், முக்தியை தேடிக் கொண்டு வந்த முமுக்ஷுக் கணங்களும் தலை வணங்கின.

இதற்கு மேலில்லை என்பது தான் அதுவாகுமின்பமாம் ।
அதனை ஒருமுறை, தன்னை அறிவதற்கு அருளும் ॥
ஆன்மபதம் என் அகத்திலே உள்ளது ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தன்னை உணர்ந்ததால் ஏற்பட்ட பேரின்பக்கடலின் அலையொன்று நிஜகுணரைத் தாக்கியது. நிஜகுணரின் தலையானது ஒருமுறை வணங்கிவிட்டுப் பிறகு மேலே எழுந்தது. மூடியிருந்த கண்கள் திறந்தன. அந்தக் கண்களிலிருந்து ஞானத்தின் நுட்பமான கதிர்கள் வெளிப்பட்டன. சாதகர்கள் அனைவரும்

''ஜயஜய நம: பார்வதிபதயே, ஹரஹர மஹாதேவ ।
ஸ்ரீ குரு சம்புலிங்க மகாராஜருக்கு ஜெய்'' ॥

என்று ஜெயகோஷம் எழுப்பினர். விசுவநாதன் அந்தப் பாடல்களை எழுதிக் கொண்டு இருந்தான். முடிந்தவுடன் எழுந்து வந்து நிஜகுணரின் முன்பு வைத்தான். சம்புலிங்கர் மகிழ்ச்சியில் ''புண்ணியம் செய்தேன், நிஜகுணா, புண்ணியம் செய்தேன். பேசவியலாத அளவிற்கு இதயம் நிறைந்துள்ளது. நிறைந்து இருக்கும்பொழுது சிந்தாது. பேசவும் இயலாது'' என்று மௌனமானார்.

சம்புலிங்கர், ''இங்கு பாருங்கள், நீங்களனைவரும் விளக்கவுரையினைத் தொடங்குவதற்கு முன்பு இந்தப் பாடல்களையே பிரார்த்தனையாகக் கூறுங்கள்'' என்று ஆணையிட்டார். அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

''நிஜகுணா, நீ விவரிக்க வேண்டியதை விவரித்து விட்டு, பிறகு அதே கருத்துக்களை அடிப்படையாக வைத்து பாடல்களை எழுதுவாயா அல்லது முதலில் பாடலை எழுதிவிட்டு அதன்பிறகு அதையே விவரித்துக் கொண்டு செல்வாயா?

'ஆமாம் குரு அவர்களே! தாங்கள் இரண்டாவதாகக் கூறினீர்கள் அல்லவா, அதைப் போன்று பாடலை எழுதிவிட்டு விவரித்துக் கூறுவேன். அதற்கும் முன்பாக அத்தியாயத்தைக் குறித்து விவரிக்கும் பொழுது, நான் கூறவேண்டிய விஷயத்தில் அத்தியாயங்களையும் அவற்றின் நிலைப்பாடுகளையும் இந்த ஆதார நூலிற்குப் பெயரையும் குறிப்பிட்டு ஒரு பாடலை எழுதுவேன்'' என்று திரிபதியில் (மூன்று வரிகளில்) எளிமையாகத் தெளிவாக, மனத்தின் உணர்வுகளை வெளிப்படுத்திப் பாடத் தொடங்கினார். விசுவநாதன் எழுதத் தொடங்கினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''வேதாந்தசார மனைத்தையு மறிவதுபோல ।
சாதகருக்கு இப்பகுதியில் நயந்து உரைப்பேன் ॥

என்று சூத்திரத்தின் மூலம் உறுதிகூறிய பிறகு தொடங்கினார்.

''சுருதியையே தியானித்துக் கூறும் மேதகு முனிவர் ।
கூற்றை ஸ்ம்ருதி எனக்கருதி உலகிலே துதிப்பதற்கும் ।
அனைத்திற்கும் சுருதியே ஆதாரமாகும் ॥''

என்று முதல் திரிபதியில் கூறி, பிறகு ஐந்தாவது ஆறாவது திரிபதிகளில்

''வேதாந்தத்தில் பொருள் மறைந்துள்ளது திரிபதியில்
முதல் அத்தியாயத்தில் ஞானிகளும் ।
நயந்து கேட்கும் பாங்கிலே ॥

குன்றாத அனுபவசாரம் என இதற்குப் பெயரை ।
மகிழ்வுடன் குரு சூட்டவேண்டுமெனக் கூறுவேன் ॥
விரும்பி சாதகர் அறியுமாறு ॥''

என்று வேதாந்தத்தில் மறைபொருளாக உள்ள விஷயத்தையே இங்கு ஆன்மஞானம் அடைந்தவர்களும் சிறந்த ஞானிகளும் தலைவணங்குவதைப் போலக் கூறுவேன். இதற்கு சிறந்த ஞானியான ஸ்ரீ குரு ''அனுபவசாரம்'' என்னும் பெயரைச் சூட்ட வேண்டும் என்று ஆனந்தத்துடன் கூறுவேன். சாதகர்கள் உணர்ந்து கொள்வதைப் போலக் கூறுவேன்'' என்று பணிவுடன் குறிப்பிட்டார்.

முதல்நாள் குரு சம்புலிங்கர் ''உன்னுடைய அனுபவத்தின் சாரத்தையே சாதகர்களுக்கு உணர்த்துவாய்'' என்று ஆணையிட்டதன்படியே தன்னுடைய நூலிற்கு ''அனுபவசாரம்'' என்று நிஜகுணர் பெயர் சூட்டினார்.

அடுத்துவரும் பாடல்களில் பயன், விஷயம், அத்தியாயம், தொடர்பு என்னும் இவற்றைப் பற்றிக்கூறி அந்தப் பகுதியில சந்தி (எழுத்துப்புணர்ச்சி), சமாஸம் (இரண்டு அல்லது பல சொற்கள் இணைந்து ஒரே சொல்லாகும் முறையாகும்) எதுகை, மோனைகள் என்னும் இவற்றை ஆராயாமல் சாதகர்களும் முமுக்ஷுக்களும் பொருளை உணர்ந்து கொள்வதிலே மட்டும் கவனமாக இருக்க வேண்டும். அது அணிகலன்களை அணிந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கொள்ளாமல் அழகுடன் திகழும் பெண்ணைப் போல இருக்கும் என்று கூறிவிட்டு குரு அவர்களைப் பார்த்து,

''அனுபவத்திலே ஏதாவது குற்றம் இருப்பின்
ஶிவஞானம் எய்தியோர் அதனைத் திருத்திக் கூற வேண்டுமால்''

என்று அவர்களிடம் வேண்டிக் கொண்டார். ஏதாவது ஒரு அனுபவத்தை விவரித்துக் கொண்டிருக்கும் பொழுது குற்றம் இருப்பின் அதனைத் திருத்தி அறிவுறுத்த வேண்டும் என்று ஶிவஞானமடைந்தவர் -களிடம் பணிவுடன் வேண்டிக் கொண்டார். பணிவின் திருவுருவமாக இறுதியில் பதினாறாம் திரிபதியில்,

''குரு கற்பித்த பரம்பொருளின் ஞானவடிவே!
தன்நிலை என உண்மையை அறிந்த நிஜகுருமைந்தன்
இயற்றியுள்ளான் இந்நூலை''

என்று கூறி நிறைவு செய்தார். கேட்டுக்கொண்டே மெய்மறந்திருந்த அனைவரும் புற உலகிற்குத் திரும்பினர். சம்புலிங்கர் ''நிஜகுணா, இறுதி வரியை இன்னொருமுறை கூறுவாய்'' என்று கேட்டார்.

''.... நிஜகுருமைந்தன்
இயற்றியுள்ளான் இந்நூலை'' என்று மீண்டும் நிஜகுணர் கூறினார்.

''அது என்ன? உண்மையை அறிந்த உண்மையான குருவின் மைந்தன். நூலை இயற்றியுள்ளான் என்றுள்ளது? இந்த நூலை இயற்றிக் கொண்டிருப்பவன் நீ. உண்மையை, ஞானத்தை உணர்ந்தவனும் நீதான் அல்லவா? உண்மையை உணர்ந்த என்று கூறிக் கொள்வதில் எந்த கர்வத்தின் கேடும் இல்லை. ஆனால் ''உண்மையான குருவின் மைந்தன்'' என்பதற்குப் பதிலாக ''நிஜகுணயோகி'' என்று கூறுவதற்கு அகங்காரம் என்று கூறும் கேடு எங்குள்ளது? உன்பெயரை மறைத்துக் கொள்வதற்கு எவ்வளவு முயற்சி! அகங்காரமானது. ''நான் அகங்காரம் அற்றவன்'' என்னும் இயல்பைக் குறிப்பிட்டுத் தொல்லையை அளிக்கும் என்பதை நீ அறியமாட்டாயா? அகங்காரம் -

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அகங்காரமற்றதன்மை என்னும் இரண்டையுமே மீறிய நிலை உன்னுடையது ஆகும். இயல்பான இருப்பு, அதனால் அதனை ...

''உண்மையை அறிந்த நிஜகுணயோகி இயற்றியுள்ள நூலில்'' என்று எழுதுவாய்'' என்று திருத்திக் கூறினார். குருசம்புலிங்கர் கூறியது, அங்கு இருந்த மற்றவர்களுக்கும் சமாதானத்தை அளித்தது.

இனி நூலின் விஷயமானது தொடங்கப்பட வேண்டும். நிஜகுணர் கேள்வியை விவரித்து வருமாறு பாடினார்.

சூத்திரம்
''குரு பேரின்பத்துடன் இலங்க, ஒரு சீடன்
அன்புடன் வந்து உபசரித்து வணங்கிக் கேட்டனன்''

என்று கூறி கருணை, நல்ல கல்வி, சாத்திரப்புலமை, நிராசை, அழகு , சிரித்தமுகம், நல்ல இயல்புகள், சிறந்த ஞானம் என்னும் இவை இருப்பவனே குருவைப் பூஜிக்கத் தக்கவன்'' என்று முதல் பாடலில் கூறியபொழுது முமுக்ஷுக்கள் அனைவரும் ஒருமுறை குருசம்புலிங்கரையும், ஒருமுறை கற்பிக்கும் நிஜகுணரையும் பார்த்தனர். அந்த எட்டு இயல்புகள், ஆறு ஐசுவரியங்கள் அவர்கள் இருவரிடத்திலும் தாங்களே தாங்களாக இருப்பதை உணர்ந்து, அந்த இயல்புகளுக்கு அவர்கள் மூல இருப்பிடமாக உள்ளனர் என்று எண்ணி மகிழ்ந்தனர்.

நிஜகுணரின் இந்த முதல் பாடலே அனைவரையும் சிறைபிடித்தது. அடுத்ததை ஆர்வத்துடன் கூறினார்.

''குரு-இறைபக்தி, மேலான வேத நம்பிக்கை, வைராக்கியம் ।
போன்ற ஒன்பது நல்லியல்பு உடையவனே சீடனாம்'' ।।

அதைக் கேட்டுக் கொண்டு இருந்தவர்கள், சீடனின் இந்த லட்சணங்களைத் தங்களிடம் காண்பதற்கு முயன்றனர்.

இந்தச் சீடன் சிறந்த, உயர்ந்த குருவை வணங்கும் முறையை விவரித்துவிட்டு முக்கியமான விஷயத்திற்கு வந்தார்.

''குருவே, விண்ணப்பத்தைக் கேட்டு, பலவிதமாகத் ।
திகழும் உலகிலே பிறந்து, அழகுடனுள்ளது என ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சிலர் இதைப்பொய்யெனவும், சிலர் இதை மெய்யெனவும் ।
சிலர் இதை முதலி லிருந்ததை அறியவில்லை எனவும் ।
சிலர் இதை விவரிக்க வியலாது என்றும்'' ॥

என்று தன் மனத்திலிருந்த சந்தேகமான, மிகவும் முக்கியமான கேள்வியைக் குரு அவர்களின் முன்புவைத்த பிறகு,

''என்னவென்று அறிவேன், நான் என்னவென்று நம்பி ।
பொருத்தமுற இதனையே கூறுவேன் உண்மைச் ।
செல்வம் நீனே சிறந்த குருவே, அருள்வாய்'' ॥

என்று வேண்டிக் கொண்டார். நிஜகுணர் சீடனின் மனத்துயரை உணர்ந்து கொண்டார்.

''ஓ, மிகவும் மகிழ்ச்சி, மிகவும் அழகாக விவரித்து உள்ளாய். அடிப்படையான கேள்வியையே எடுத்து விட்டாயே? நிஜகுணா! நீ பாடல்களை இயற்றுவது இதே முறையிலே தொடர்ந்து நடைபெறட்டும். கற்பிக்கும் செயலும் இவ்விதத்திலேயே இருக்கட்டும். கேள்வியையே இத்தனை அழகாகக் கேட்டுள்ளாய். அதற்கான பதிலானது அதைவிட அழகாக வரவேண்டும். பேறு பெற்றேன்! பேறு பெற்றேன்! நிஜகுணா! இன்று நேரமானது மிகச் சிறப்பானதாக இருந்தது. நாளைக் காலையிலே மீண்டும் சத்சங்கத்தில் பார்க்கலாம்'' என்று கூறி சம்புலிங்கர் கோலை ஊன்றியவாறு எழுந்து நின்றார். அனைவரும் மீண்டும் ஒருமுறை ஜயகோஷம் எழுப்பி, குரு அவர்களையும் நிஜகுணரையும் வணங்கினர். அன்றைய சத்சங்கம் அங்கேயே நிறைவடைந்தது.

சம்புலிங்க மலையிலே நடைபெற்றுக் கொண்டிருந்த ஞான விருந்தோம்பலிலே முமுக்ஷுக்கள், சாதகர்கள், பக்தர்கள் தவறாமல் பங்கு கொண்டனர். நாள்தோறும் இரு வேளைகளிலும் நிஜகுணரின் உபதேசமானது அவர்களை மந்திரத்தால் கட்டுப்பட்டவர்களைப் போலச் செய்தது. அவர்மீது இருந்த பக்தியானது பக்தர்களைப் பிணைத்தது. தங்களுடைய சந்தேகங்கள், குழப்பங்களை நிஜகுணரின் முன்பு வைத்தனர். அவருடைய பதிலால் நிறைவடைந்து சமாதானம் அடைந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


உலகியல் வாழ்க்கையிலே, அரசியலிலே உழன்று சுழன்று கொண்டிருந்த மனநிறைவு அற்றவர்களுக்கு துயரத்திலிருந்தவர் -களுக்கு இங்கு நிறைவும், நிம்மதியும் நிஜகுணர் கற்பித்ததில் கிடைத்தது. வேறு இடங்களிலிருந்தும் மக்கள் ஞானச் செல்வத்திற்காக வரத் தொடங்கினர். கேட்க வந்தவர்களின் எண்ணிக்கையானது அதிகமாகத் தொடங்கியது. அமைச்சர் சிவகுமாரர் மலையின் மீதே பொருட்களை வைப்பதற்கு என்று ஒரு அறையையும் சில சிறிய சிறிய குடில்களையும் கட்டினார்.

ஒருமுறை குரு சம்புலிங்கர் ''விசுவநாதா, மிகவும் தாகமாக உள்ளது. தண்ணீர் கொண்டு வா'' என்று கூறினார். விசுவநாதன் மண் குவளையை எடுத்துக் கொண்டு அருவியின் பக்கமாகச் சென்றான். அருவி வற்றிப் போயிருந்தது! அதை விட்டால் வேறு எங்குமே நீர் கிடைக்காது. விசுவநாதன் வேதனையுடன் எதுவும் தோன்றாமல் வெறும் கையுடன் திரும்பினான்.

அதைத் தொலைவிலிருந்தவாறே பார்த்த நிஜகுணர், ''ஏன்? தண்ணீர் இல்லையா?'' என்று அவசரமாகக் கேட்டார்.

''இல்லை ஸ்வாமி, அருவி வற்றிப் போய் விட்டது. ஆனால் குரு அவர்களுக்குத் தாகம் அதிகமாக உள்ளதைப் போலத் தோன்றுகிறது. என்ன செய்வது? எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.''

நிஜகுணர் அவன் கையிலிருந்த மண்குவளையை எடுத்துக்கொண்டு ''நீ போ, குரு அவர்களின் அருகிலேயே இரு'' என்று கூறிவிட்டு முன்னால் சென்றார். அருவியோ வற்றியுள்ளது. அவர் குரு அவர்களுக்கோ தாகம். நிஜகுணர் கலக்கம் அடைந்தார். அவர் அருவியைத் தாண்டி முன்னால் சென்றார்.

வில்வவனம் அழகாக வளர்ந்திருந்தது. அதன் பசுமையானது கண்ணைப் பறிப்பதைப் போல இருந்தது.

''இந்த வில்வச் செடிகளுக்கு நீரை அளித்திருப்பவன் எனக்குக் கொடுக்காமல் இருப்பானா? சம்புலிங்கா, நீயே கதி'' என்று கூறியவாறு ஒரு தாழ்வான பகுதியிலே வந்து நின்றார். வட்டவடிவத்திலிருந்த அந்த இடமானது நிஜகுணரைச் சிறைபிடித்தது. அதன் நடுவிலே வட்ட வடிவத்திலே உயரமான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கருங்கல் ஒன்று இருந்தது. நிஜகுணர் அங்கு சென்று அமர்ந்து கொண்டு சில கணங்களுக்குத் தியானத்திலே மூழ்கினார்.

நிஜகுணர் அமர்ந்து கொண்டிருந்த பொழுது அந்தக்கல் அதிர்ந்தது. அது சரிந்து கொண்டு இருப்பதைப் போலத் தோன்றியது. அவர் எழுந்து அந்தக்கல்லை இந்தப்பக்கமாக நகர்த்தினார். கல்லின் சிலபகுதி நிலத்திலே புதைந்து இருந்தது. நிஜகுணரின் ஒப்பற்ற சக்தி அதைச் சரித்தது.

தண்ணீர் ஊற்றுப் பெருக்கெடுத்தது! நிஜகுணர் வட்டவடிவப் பகுதியிலிருந்து வெளியே வந்து நின்றார். அவருடைய முகமானது மகிழ்ச்சி மற்றும் வியப்பினால் செவ்வண்ணமாக மாறியது. சில நிமிடங்களிலேயே அந்தத் தாழ்வுப் பகுதியானது பாலைப் போன்ற தண்ணீரால் நிறைந்தது.

''சம்புலிங்கா, உன்னுடைய நல்ல சக்தியால் கல்யாணி பாய்ந்து வந்தாள். உலகநன்மை ஒன்றுதான் உன்னுடைய உயர்ந்த லட்சியமாகும். தாய் கல்யாணி எனக்கு அருளினாள்'' என்று நிஜகுணர் உணர்ச்சிப் பெருக்குடன் மண்குவளையை நிறைத்துக் கொண்டு, வேகமாக மடத்தின் பக்கமாக நடக்கத் தொடங்கினார்.

நிறைந்த மண் குவளையுடன் வந்த நிஜகுணரைக் கண்ட விசுவநாதனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அவனும் அதே உணர்வுப் பெருக்குடன்

''ஸ்வாமி, தண்-ணீர் என்று திக்கினான். நிஜகுணர் சிரித்துக் கொண்டே,

''பொறுப்பாய், பொறுப்பாய், குரு அவர்கள் முதலில் எடுத்துக் கொள்ளட்டும். அதன்பிறகு உனக்கு '' என்று கூறினார்.

சம்புலிங்கர் நீரைக் குடித்து விட்டு ''ஆஹா, இன்று எவ்வளவு தாகமாக இருந்தது. நீ விரைந்து வராமலிருந்திருந்தால் நானே வந்திருப்பேன்'' என்று கூறினார்.

பிறகு மீண்டும் நினைத்துக் கொண்டு, ''இது என்ன?''

தினமும் குடிக்கும் நீரை விட இது மிகவும் சுவையாக உள்ளதே! இது எங்கு உள்ள நீர்?'' என்று கேட்டவாறு நீர் முழுவதையும் கடகடவெனக் குடித்துவிட்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"ஓ, விசுவநாதனுக்குத் தண்ணீர் இல்லாமல் போய் விட்டது. விசுவநாதா, போ. இன்னும் கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொண்டு வா" என்று கூறினார்.

விசுவநாதன் பரவசத்துடன் நின்று கொண்டிருந்தான்!

"குரு அவர்களே! அருவியில் நீர் இல்லை. ஆனால் இந்தத் தண்ணீர், இந்த மலையின் மீது எங்கிருந்து வந்தது?" என்று தன் ஆர்வத்தைத் தடுத்துக் கொள்ள இயலாமல் கேட்டான்.

"அந்தக் கடவுளின் அருளின் அடையாளம் தான் இந்தத் தண்ணீர். நம் அனைவரின் நன்மைக்காக சம்புலிங்கம் கருணையின் ரசத்தையே அளித்துள்ளார். வில்வவனத்தின் நடுவிலே, கல்யாணி தென்பட்டுக் கொண்டிருக்கிறாள். அங்கிருந்து நீர் எடுத்துக் கொண்டு வா" என்று நிஜகுணர் கூறினார்.

விசுவநாதன் ஒரே மூச்சுடன் கல்யாணி ஊற்றை நோக்கி ஓடினான்.

நிஜகுணரே கல்யாணியைத் தோற்றுவித்தார் என்றும் கல்யாணி என்று அவரே பெயர் சூட்டினார் என்றும் மக்களிடம் வியப்பான விஷயமாக செய்தி பரவியது. நீரின் அனுகூலத்தில் நிறைவு அடைந்தனர்.

நாள்தோறும் இரு வேளைகளில் உபதேசம் தங்குதடையின்றி நடைபெற்றது. சாதகர்களின் மனத்திலிருந்து அழுக்கு அகன்று தூய்மையான மனத்தைப் பெற்றுக் கொண்டிருந்தனர். ஒருமுனைப்பாடு அதிகமாயிற்று. அறிவு பெருகத் தொடங்கியது. ஞானமடைவதற்கு அடிப்படையாக உள்ள மனத்தைக் கட்டுபடுத்துவதற்குப் பயனளிப்பதாக இருந்தது. அகங்காரமானது, பரம்பொருளிலிருந்து வேறுபடாமலுள்ள ஆன்மாவில் கரைவதற்கு விரும்பியது.

கடைநிலை, இடைநிலை, முதல்நிலை மிக உயர்ந்த நிலை என்னும் பல நிலைகளில் இருந்த சாதகர்கள் நாள்தோறும் முன்னேறத் தொடங்கினர். அவர்களில் சில முதியவர்களும் இருந்தனர். ஞானமடைந்த முதியவர்களும் இருந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சிலுகவாடி என்னும் கிராமத்தைச் சேர்ந்த சதாஸிவன் நுட்பமான அறிவை உடையவனாகவும் ஒருமுனைப்பட்ட மனம் உடையவனாகவும், கூறியதை உடனடியாக அதைப் போன்றே கிரகித்துக் கொள்பவனாகவும் சிறந்தவனாகவும் விளங்கினான். நிஜகுணரிடம் உறுதியான நம்பிக்கை ஏற்பட்டது. மிகவும் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தான். வாழ்க்கையில் மனைவியை இழந்து, பற்றற்று இங்கு புகல் அடைந்திருந்தான்.

சந்திரமௌலி, மகேஸ்வரன், லோஹிதாசுவன், கைலாசநாதன் என்னும் இவர்களும் சிறந்த தகுதிகளைப் பெற்றிருப்பவர்களின் வரிசையில் இருந்தனர்.

ரவிவர்மன், புவனேசன், வேதமூர்த்தி, பசுபதி, சோமசேகர், ஈஸ்வரய்யா என்னும் இவர்களைப் போன்றோர் இடைநிலைத் தகுதிகளைப் பெற்றிருந்தனர். கடைநிலைத் தகுதிகளைப் பெற்றவர்களும் அங்கு இருந்தனர். பக்தர்கள் பக்தியுடன் தவறாமல் கேட்பதற்கு வந்து கொண்டிருந்தனர். முதலமைச்சர் சிவகுமாரர் இரு வேளைகளிலும் வருவதற்குத் தவறவில்லை.

அனுபவசாரத்தின் அத்தியாயங்கள் ஒவ்வொன்றாகச் சென்று கொண்டிருந்தன. சீடனால் கேள்வியைக் கேட்க வைப்பதில் மற்றும் கேள்வியை விவரிக்கும் பாடலின் முதல்வரியை, குரு அவர்களின் மனமானது நிறைவடையுமாறு இதயம் நிறையுமாறு பிரார்த்தனை செய்து கொண்டு சென்றார். குருவைத் துதிப்பதின் மூலமே, குரு நிலையை அடைவதே குருவின் கடனை அடைப்பது போல ஆகும் என்னும் ரகசியமானது நிஜகுணருக்குத் தெரிந்திருந்தது. அதையே முமுக்ஷுக்களுக்குப் பலவகைகளில் அறிவுறுத்தினார்.

“பிறவிக் காட்டிலே துன்புறும் மனிதருக்கு ।
சதாஸிவபதத்தைக் காட்டும் குருவே ॥
விண்ணப்பத்தைக் கேட்டருள்வாய் ।
ஸ்ரீகுருவே பெரும்பிறவிப்பிணிகளின் மருத்துவன் ।
யோகியரால் வணங்கப்படும், உண்மை இன்பத்தை
ஈவோனே ।
அருள் கூர்ந்து விண்ணப்பத்தைக் கேட்பாய் ॥
அகலாத பெண், இரு தோள் சந்திரகலை, நெற்றிக் ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA (USA)

கண்ணுடன் தூலசிவ உருவிலுள்ள குருவே । வெற்றி
எனப் புகழ்ந்து வேண்டினன் சீடன் ॥
சிலரைப் பார்த்து, சிலரிடம் பேசி, சிலரைத் தொட்டு ।
உடனே சிலரை முற்றிலும் கடவுளாகச் ।
செய்யும் ஸ்ரீகுருவைத் தஞ்சம் அடைவாய் ॥
யாருடைய கடைக்கண் உணர்வு இவ்வுலகின் ।
நல்லுணர்விற்கு ஆதாரமோ அந்த சம்புவாகத் ।
திகழும் ஸ்ரீகுருவே, விண்ணப்பத்தைக் கேட்பாய் ॥
முழுமையானவனாகச் ஶிவன் திகழ, உலகம் அவ்விதம் ।
இன்றி நோட்டத்தினால் மட்டும் ஶிவனெனத் ।
திகழும் குருவே, விண்ணப்பத்தைக் கேட்பாய் ॥
அஞ்ஞானத்தை யகற்றி, மெய்ஞ்ஞான இன்பமளிப்பவன் ।
ஞானியின் திருவடியில் பணிகிறேன். குருவே, நீ என் ।
விண்ணப்பத்தை நயந்து கேட்பாய் ॥
சூரிய சந்திர ஒளிக்கிரணங்களால் ।
அஞ்ஞான இருளை அழித்துக் கெடுத்துவிடும் ।
குருவே! உம்முடைய சிறு நோட்டம் ॥
ஹரி, பிரம்மன், ருத்திரன் மேலான சதாசிவன் ।
மஹேசுவரன் மேலோருடன் ஒளிர்ந்து கொண்டுள்ள ।
குருவே, விண்ணப்பத்தைக் கேட்டருள்வாய் ॥

இவ்விதம் நிஜகுணர் நிகம ஆகமங்களின் கூற்றுக்களுக்கு நன்கு ஊட்டமளித்து, சாத்திரங்களைப் பின்பற்றுவோர்க்கும் சமாதானம் ஏற்படுவதைப் போல குருவைத் துதிக்கும் பாடலை இயற்றினார்.

வேதத்தை முற்றிலுமுணர்ந்த குருவே, வெற்றி ।
எனப் புகழ்ந்து வேண்டினன் மைந்தன் ॥
சிறந்த ஞான ஒளியை, நிலைத்த முக்தியின் இருப்பிடத்தை ।
துன்பங்களை அகற்றுபவனை, ஶிவனை, உமையின் ।
மணாளனை, குருசம்புவைப் பணிகிறேன் ॥
சொல்லை வேதமென எண்ணி, கடைக்கண்
கருணைக்கடலென எண்ணி ।
விடாமல் என்னை முன்னேற்றுவாய், மேலோனே, வெற்றி ।
என்று அடிக்கடி வணங்கி மைந்தன் கேட்டான் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


பணிபவரின் கல்பதருவே, நிலைத்த இன்பமூலமே ||
முக்திவழிக்கு உதவும் ஆதாரமே, நிஜகுருவே |
வெற்றி எனப் பணிந்து மைந்தன் பணிந்தனன் ||

தாய்-தந்தை, நட்பு-சுற்றம் என அனைத்துமாக நிஜகுணருக்கு குரு சம்புலிங்கரே விளக்கியதை ஓரிடத்தில்

''குருவே தாய், குருவே தந்தை, குருவே சுற்றம் உறவு |
குருதத்துவத்தை விடச் சிறந்தது வேறு இல்லை எனும் |
உயர்ந்த குருவே, விண்ணப்பத்தைக் கேட்டருள்வாய் |
மனிதன், முனிவர், கணங்களறியா, உவமிக்கவியலாத |
பேரின்ப இறைவனே, குருவே, மைந்தன் பணிவுடன் |
தஞ்சமடைகிறேன், மீண்டும் பணிவுடன் கேட்கிறேன் ||
பிறவிக்கடல், அகத்தியர், கேடுசார்ந்த எண்ணத்திற்கு |
உருத்திரவடிவில் திகழும் குருவே ஆணையிடுவீர் |
என சீடன் இவ்விதத்தில் பணிவுடன் கேட்டனன் ||

என்று வகைவகையாக ஸ்ரீகுரு அவர்களைக் கேட்டுக் கொண்டும், வேண்டிக் கொண்டும் பாடிக் கொண்டும் கொண்டாடினார் நிஜகுணர்.

ஒவ்வொரு குருதுதியினாலும் ஸ்ரீ குருசம்புலிங்கரின் இதயமானது நிஜகுணரிடம் கரைந்தது. அவருடைய அருளானது நிஜகுணருக்கு எப்பொழுதும் நிறைவையும், சமாதானத்தையும் அளித்தது. சிறந்த குருவான சம்புலிங்கரின் தாமரைத் திருவடிகளின் சிறந்த இதழைப் போலுள்ள கட்டைவிரலின் ஒளிக் கதிர்கள், நிஜகுணர் வணங்கும் பொழுதெல்லாம் அவருடைய நெற்றிக்கண்ணைச் சென்றடைந்து கொண்டிருந்தன. அப்பொழுது அவருக்கு விவரிக்க இயலாத மகிழ்ச்சியும், புளகமும் ஆனந்தக் கண்ணீரும் ஏற்படும். அதனால்தானோ என்னவோ, இந்த ஆனந்தத்தின் ஆசைக்காகவோ என்னவோ, நிஜகுணருக்கு குருவின் திருவடிகளை எத்தனை வணங்கினாலும், தலையிலே தரித்துக் கொண்டாலும் நிறைவே ஏற்படாது. குருசம்புலிங்கரால் அனைத்திலும் மன நிறைவையும் சமாதானத்தையும் பெற்ற நிஜகுணர், இது ஒன்றில் மட்டும் நிறைவு அடையாதவராக இருந்தார். எத்தனை வணங்கினாலும் மீண்டும் வணங்க வேண்டும்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)


என்னும் தீவிரமான விருப்பம் அவருக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. முக்தியைக் கூட அவர் துறந்து விடுவார். ஆனால் குருவின் திருவடிகளை வணங்காமல் தொடாமல் பாததூளியைத் தரித்துக் கொள்ளாமல், திருவடிகளைப் பூஜிக்காமல் இருக்கவியலாது. குருவின் திருவடிகளின் மகிமையைக் குறித்து அவருக்கு நன்றாகத் தெரிந்து இருந்ததைப் போல மற்றொருவருக்குத் தெரிந்து இருக்கவியலுமா என்பதை நல்ல இதயம் கொண்டவர்களால் கருதாமல் இருந்திருக்கவியலாது.

''அனுபவசாரம்'' என்னும் நூலின் நான்கு பகுதிகள் நிறைவுற்று ஐந்தாம் பகுதி தொடங்கியுள்ளது.

''உறக்கத்தில் அறிவு இருக்கிறதா இல்லையா''? என்று சந்திரமௌலி கேட்டதையே நிஜகுணர்

'உணர்வற்ற உறக்கத்தில் அறிந்துகொள்ளும்

அறிவிற்கு வாய்ப்பில்லை'' என்றும்

''ஆழ்உறக்கத்தில் அறிவில்லை, தன் உடலிலுள்ள ।
அணிகளைத் திருடன் கொண்டேகின் மனிதன் அறிவதில்லை
ஏன் இறைவனே ॥

என்னும் கேள்வியை விவரிக்கும் பாடலை எழுதிவிட்டு அதற்குப் பதிலாக மாலை வேளையில் விளக்கமளித்ததில்

''அறிவில்லை என ஏதுமறியாது, நன்குறங்கினேனெனும் ।
நினைவு இருக்கும்பொழுது உணரும் அறிவு உறக்கத்தில்
உண்டு மைந்தனே ।

என்று தொடங்கிய விளக்கவுரை சுலோகங்களில், மிகவும் தெளிவாக, சான்றுகளின் மூலமாக சாத்திரங்கள், குரு அனுபவங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவகையில் சமாதானம் செய்தார். ஸ்ரீகுரு சம்புலிங்கரால் விதிப்படி முறையாக நிஜகுணருக்கு ''வித்வத்ஸன்னியாசம்'' அருளவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

துவராடையை அணிந்தவராக, உருத்திராக்க மாலையைத் தரித்துக் கொண்டவராக , பரந்த நெற்றியிலே விபூதியைப் பூசி கொண்டிருப்பவராகத் தம் எதிரில் அமர்ந்து கொண்டிருந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிஜகுணரை சம்புலிங்கர் வைத்த கண்களை எடுக்காமல், தூய்மையான பார்வையுடன் கூர்ந்து கவனித்தார். அவருடைய ஞானக்கிரணங்கள் நிஜகுணரைச் சென்றடைந்தன. சம்புலிங்கர் சிறிது முன்னால் குனிந்து நிஜகுணரின் செவிகளில் மந்திரங்களைக் கூறினார். அவருடைய உடல் புளகமடைந்தது. எல்லை மீறிய ஆனந்தத்தைச் சமநிலையிலே வைத்துக் கொண்டு குரு அவர்களின் திருவடிகளில் தலையை வைத்து

"குருவே! உம் கருணையால் என் உண்மை ।
நிலையை அறிந்து நிலைத்த இன்பமெய்தினேன் ॥
நாம வடிவினை அபிமானித்தவாறு ।
மன அஞ்ஞானம் அகன்ற நிலைஎய்தினேன் ॥
அருள், நிலைபேறு, ஒளி என்னும் இவை ।
உன் உண்மையான இருப்பிடமென் விழிப்பு எய்தினேன்" ॥

நிஜகுணரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர்த் துளிகள் வழிந்து கொண்டிருந்தன. குரு அவர்களின் திருமுகத்தைப் பார்த்தவாறு

"பளிங்கு உபாதியால் அதே வடிவெய்துவதனைய ।
நீ முழுமையான உண்மை மயமாகி ॥
விளங்கும் உண்மைநிலை தோன்றியிருக்க ।
தூய்மையான நீ எனக்கு அருள வேண்டும் ॥
இறுதியில் பாத தூளிகளை ஏற்றுக் கொண்டு
"உயிரிலே உயிர் நிலையாகத் தனக்கு
எக்குறையும் இன்றிக் கண்கூடான
நிலை எனத் திகழும் சம்புலிங்கருடனிணைந்து
ஞானியாவாய் என அறிவுறுத்தப்பட்டு"

குரு அவர்களின் உபதேசத்தால் பெரும்பேறு பெற்று மகிழ்ந்து ஆடிய நிஜகுணரைச் சம்புலிங்கர் கட்டித் தழுவிக் கொண்டார். தமக்கு நிறைவு ஆகுமளவிற்கு நிஜகுணரின் உடலை நீவினார். மைந்தனின் மூளைப்பகுதியைத் தம் கைகளால் மென்மையாகத் தொட்டார். நிஜகுணரின் முகத்தை மேலே நிமிர்த்தி, "யோகி நிஜகுணா! உன்னுடைய ஞான ஒளியானது எல்லா திசைகளிலும் பரவட்டும்! உயர்ந்த முமுக்ஷுக்களை முன்னேற்றுவதற்கு உன்னுடைய ஒவ்வொரு பாடலும் முழுமையான அனுபவத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அளிக்கும் வாய்ப்பாக விளங்கட்டும். உன்னுடைய ஒவ்வொரு வரியினாலும், ஒவ்வொரு சொல்லினாலும் முமுக்ஷுக்களின் இதயம் அமைதியை அடையட்டும்! அவர்களுடைய பிணைப்பு அகலட்டும்! முக்தியின் பயனை அவர்கள் அடையட்டும். உன்னுடைய நூல்களைப் படித்தவர்களும், பூஜித்தவர்களும் ஏற்றுக் கொண்டவர்களும், உயிரின் உயிர் என்று எண்ணியவர்களும் நல்ல பயனை அடையட்டும்! உன்னுடைய ஆன்மீகத்தின் அழிவற்ற கொடியானது உலகத்தின் மற்றும் தூய்மையான மனம் கொண்டவர்களின் இதயப் பந்தலிலே படரட்டும்! உன்னுடய வைராக்கியத்தின் விரிபரப்பானது உலகெங்கிலும் பரவட்டும்!

''ஜயஜய சம்புலிங்கா! ஓம் குருநாதா! இந்தச் செல்வத்தைக் காப்பாற்றுவாய்! ஜயஜய நிஜகுணயோகி! பேறு பெற்றாய்! பேறு பெற்றாய்!'' என்று தம்முடைய சீடனைப் பாடி வாழ்த்தினார். நிறைந்த இதயத்துடன் ஆசிர்வதித்தார்.

முறையாகச் சாதகர்களின் பயிற்சியானது நடைபெற்றது. அனுபவசாரத்தின் ஏழு பகுதிகள் நிறைவடைந்துவிட்டன. எட்டாம் பகுதியும் இன்று நிறைவு அடைந்துவிடும்.

முதல்நாள், ''வாக்யார்த்த ப்ரதிபத்தி நிராகரண'' என்னும் சூத்திரத்தில் ''தத்வமஸி'' என்னும் மஹா வாக்கியத்தின் உண்மையான பொருள், சொரூபம் மற்றும் பயன்களை குருவின்மூலம் உணர்ந்து கொண்ட சீடன், எல்லா சந்தேகங்களும் நீங்கியவனாக துரீயாதீத நிலையை (துரீயத்தையும் கடந்த நிலை) தூய்மையான ஞான நிலையை எய்துவான். துரீயத்தின் ஆனந்தமானது இன்னும் ஒளிரும். துரீயத்தையும் கடந்த நிலையை அடையாமலேயே இங்கேயே, உள்ள ஆனந்தத்தை அனுபவித்தவாறு அவன் வருமாறு கூறுவான்.

''சிறந்த குருவே, உம் அருளால் முற்றிலும் ।
பிணைப்பற்ற பரம்பொருள் ஆனேன்'' ॥

தனக்குக் கிடைத்த அந்த நிலையை, எத்தகைய பிணைப்புமற்ற குரலிலே கூறியவாறு குருநாதரைத் துதிக்கிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''குருகுல சூரியனே! தஞ்சம், வணங்கும்
சுரர்களுக்குக் காமதேனுவே! தஞ்சம்,
உமக்கு நான் தஞ்சம், அன்னியனல்லேன்
இன்னுமென்ன, சிறந்த குருவே! தஞ்சம்''

என்று இவ்விதத்தில் குருவிற்குத் தன்னுடைய நன்றியை விதவிதமாக வெளிப்படுத்திய சீடன், அணு உருவத்துடன் இருந்த தன்னை முழுமையான பரம்பொருளின் நிலைக்குக் கொண்டு சென்று, அடையச் செய்த குருவின் கருணைக்கு அப்பாடலிலே வெற்றியைக் கோருகிறான். நிஜகுணர் அதை பாடி முடித்தபொழுது இட, வலப்பக்கங்களில் அமர்ந்திருந்த விசுவநாதன்-சதாஸிவரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஆனந்தக் கடலிலே மிதந்தனர்.

ஸ்ரீகுரு சம்புலிங்கர் ஆனந்தத்தை மௌனமாகவே அனுபவித்தார். நிஜகுணருக்குத் தம்முடைய கருத்துக்கள் சரியான, தகுந்த முறையில் வெளிப்பட்டது நிறைவை அளித்தது.

நூலின் முக்கியத்துவத்தைப் பற்றி விவரித்து விட்டால் நூலானது நிறைவடைந்துவிடும்.

''சாதகர் அறியத்தக்க அனுபவசாரமிது ।
தூய்மையை நல்கி முக்தியையே அளிக்க வல்லது ॥''

என்று அனுபவசாரம் என்னும் நூலின் பயனை, சாரமாகப் பாடலின் சூத்திரத்தில் சுருக்கமாக அடக்கிவிட்டுப் பிறகு அது இயற்றப்பட்ட முறையை அதன்பிறகு வரும் விளக்கவுரை ஸ்லோகத்தில் வெளிப்படுத்தினார்.

''புதிய உத்தியை ஊகித்து ஒருங்கிணைத்து
அனுபவசாரத்தை இவ்வகையில் இயற்றி

அனுபவசாரத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயமானது தன்னால் ஊகித்து எழுதப்பட்டது அன்று. இருந்ததையே இருந்ததைப் போன்றே பண்டிதரும், பாமரரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இந்த நூல் இயற்றப்பட்டுள்ளது என்று கூறினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''இது உபநிஷதத்தின் பொருள், சாத்திரங்களின் பொருள் ।
இது பண்டையோரின் கருத்து, குருவின் உரை,
மற்றுமிது ।
உண்மையை உணர்ந்தோரின் உண்மையான வழி ॥

என்று கூறி முமுக்ஷுக்கள் இந்த நூலை முழுமையாக நம்பி நிலைத்த உண்மைப் பொருளைக் கண்டு உணர்ந்து புண்ணியம் அடையுமாறு செய்து கொள்ளட்டும் என்று ஆர்வத்துடன் வெளிப்படுத்தினார்.

''பற்றற்றவருக்கு, புகழுள்ளோருக்கு, அமைதி ।
அன்புடையோர்க்குக் கூறவேண்டும். அறிவிலார்க்கு ।
மனம் நயந்து இதனை அறிவுறுத்தலாகாது'' ॥

என்று கற்பிப்பவர் தூய்மையான மனம் உள்ள சீடனுக்கு மட்டும் உபதேசிக்க வேண்டும். தூய்மையற்ற மனமுள்ள தகுதியற்றவர்களுக்குக் கூறலாகாது என்னும் மனநலம் விஞ்ஞானம் சார்ந்த உண்மையான எச்சரிக்கையையும் அளித்துள்ளார்.

''இவ்வாறு நிஜகுணயோகி தூயோருக்கு உரைத்த ।
இதனை எல்லையிலா மகிமைக் கடலான சம்புவின் ।
ஒப்புதலுடன் சாதுக்களால் பாட வைத்திட வேண்டும்'' ॥

இவ்வாறு தம்முடைய நூலிற்கு அளவற்ற மகிமையை உடைய கடலான சம்புவின் ஒப்புதலாம் முத்திரையைப் போடுவதுடன் மட்டுமின்றி சாதுக்கள், மகான்கள் மூலமாக அதை எழுத வைத்துப் படிக்க வைத்துப் பாட வைக்க வேண்டும் என்றும் கோரினார்.

விளக்கவுரையின் இறுதி ஸ்லோகத்தில், இறுதிப்பகுதியில் சூத்திரம், சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுக் 'கந்த' எனும் பாடல் வடிவத்தில்

கந்த ''ஐநூற்று முப்பத்தைந்து திரிவிதிகளை ।
எண்ணிக்கையில், நாற்பத்தாறு சூத்திரங்கள் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


எட்டு அத்தியாயங்களுடன் அனுபவசாரம் ।
ஒளிர, கற்றுணர்ந்தோர் பாராட்ட'' ॥

என்று எட்டு அத்தியாயங்கள் உள்ள நாற்பத்தாறு சூத்திரங்களுடன் ஐநூற்று முப்பத்தைந்து திரிபதிகள் உள்ள அனுபவசாரம் என்னும் நூலிற்கு மங்களம் பாடினார். அக்கணத்திலேயே ஜெயகோஷம் எழுந்தது. கையினால் எழுதப்பட்ட அனுபவசாரத்தின் ஓலைச் சுவடியின் பிரதியை ஒரு பட்டுத்துணியிலே வைத்து, சம்புலிங்கத்தின் முன்பாக மணையின் மீது வைத்துப் பூஜித்தனர். ஸ்ரீகுருசம்புலிங்கர் நூலை மிக மெதுவாக எடுத்து தலையின் மீது வைத்துக் கொண்டு கண நேரத்திற்குக் கண்களை மூடியவாறு நின்றார். பிறகு மெதுவாக எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டார். மார்பிலே அணைத்துக் கொண்டு நின்றார். நிஜகுணர் உட்பட அங்கிருந்த அனைவரும் கண்களை இமைக்காமல் அந்த அரிய காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீகுரு சம்புலிங்கர் நிஜகுணரைச் சைகை காட்டி உள்ளே அழைத்தார். நிஜகுணரின் மடியின் மீது அந்த நூலை வைத்து மந்திரம் கூறி ஆசிர்வதித்து,

''யோகிகள் வணங்கும் நிஜகுணா! இந்த மிகச் சிறந்த நூலை வரையறைப் படுத்தியது மனிதனான நீ இல்லை.முழுமையான சம்புலிங்கத்தின் சக்தி உன்னுடையதாக இருப்பதால் இதை மிகவும் கவனத்துடன் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையது ஆகும். முமுக்ஷுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறந்த அருளாகத் திகழும் இதனை அழிக்கும் உரிமை அந்த சம்புவிற்கே இல்லை. குருவின் அருளானது இதை எப்பொழுதும் பாதுகாக்கும். அதோ! சம்புலிங்கத்தின் எதிரிலே அந்த ஏழு பகுதிகளை உடைய உறி உள்ளது அல்லவா? அதில் இதனை வைப்பாய். அதன் ஒரு பகுதியைக் கொய்து விடுவாய். நீ இயற்றும் ஒவ்வொரு நூலாக அங்கு வைக்கும் பொழுதெல்லாம் அந்த உறியின் ஒவ்வொரு பகுதியைக் கொய்வதற்கு மறக்க வேண்டாம். அதனுடைய எல்லாக் கால்களையும் கொய்து எடுத்த பிறகும், எத்தகைய ஆதாரமும் இன்றி அந்தரத்தில் இந்த எல்லாநூல்களும் அப்படியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நிற்குமாயின் அவை புனிதமான பிரசாதத் தன்மையை அடைந்துள்ளன. காலத்தைக் கடந்து நிற்க வல்லவை என்பதை உணர்ந்து கொள்வாய்'' என்று தொலைவிலே எங்கோ பார்த்தவாறு சம்புலிங்கர் கூறியபொழுது அங்கிருந்த அனைவரும் புளகமடைந்தனர்.

நிஜகுணர் குரு அவர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்டு காப்பாற்றினார். அதன்பிறகு மங்கல ஆரத்தி பிரசாதங்களுடன் அன்றைய, நூலைக் குறித்த விளக்க நிகழ்ச்சியானது மிகச் சிறப்பாக நிறைவேறியது.

அரண்மனையிலே இருந்தபொழுது ''பரமானுபவபோதை'' என்னும் நூலை இயற்றும் செயலானது வாழ்க்கையில் ஏற்பட்ட சில இக்கட்டுகளால் பாதியிலேயே நின்றிருந்தது. ஐந்து பகுதிகள் மட்டுமே முழுமையாக நிறைவடைந்திருந்தன. சம்புலிங்கர் ஓய்வு எடுத்துக்கொண்டுவிட்டு அமர்ந்திருந்ததைக் கண்டு, அதன் பிரதிகளை அவர் முன்பாக வைத்தார். குரு அவர்கள் மிகவும் நுட்பமாக பரிசீலித்து விட்டு இதுவும் அனுபவசாரத்தைப் போல மிகச் சிறப்பாக உள்ளது. இதுவும் ஒரு சுதந்திரமாக எழுதப்பட்ட நூலாக உள்ளது. எஞ்சியதை நிறைவு செய்வாய் என்று ஆணையிட்டார். நிஜகுணர் அதை ஏற்றுக் கொண்டு அந்த நூலை நிறைவு செய்யும் செயலில் இறங்கினார்.

ஆறாம் பகுதியில் சிறந்த குரு உபதேசத்தின் வேறுபாடு, சிறந்த சீடன், கடைநிலை சீடனின் லட்சணங்கள் ஸ்ரீ யாஜ்ஞவல்க்யர் -மைத்ரேயி என்னும் இவர்களின் வாத-விவாதங்களின் வெள்ளப் பெருக்கிலே மனத்திற்கு இதமாக அழகாக மிதந்து வந்தன.

மோக்ஷத்திற்குத் தகுதி வாய்ந்த ''முமுக்ஷு'' குரு-சாத்திரங்கள் கூறும் விஷயத்தைப் பயிற்சி செய்யும் ''மாணவன்'', பயிற்சியின் மூலம் வந்த அனுபவ ஆனந்தத்தில் இருக்கும் ''ஆத்மஞானி'' என்னும் இவர்களின் லட்சணங்களை மிகவும் எளிமையாக ஆனால் அழகுடன் எழுதினார் நிஜகுணர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சம்புலிங்கர் அதைப் படித்துவிட்டுப் பாராட்டினார். கர்மம் செய்பவன், முமுக்ஷு, மாணவன், ஆத்மஞானி, ஜீவன்முக்தன் என்னும் ஐவரின் இயல்புகளில் இறுதியாக, அவர்கள் இருக்கும் நிலையைக் குறித்து விவரிக்க வேண்டி இருந்தது. அன்று அத்துடன் நிறுத்திவிட்டு, அதை மறுநாள் எழுதிவிடலாம் என்று எண்ணிக் கொண்டு உறங்கி விட்டார்.

மறுநாள், இரவு கண்ட கனவை ஸ்ரீகுரு சம்புலிங்கரிடம் கூறினார். நிஜகுணர் கண்ட கனவின் விவரத்தை, எதிர்காலத்தில் நிகழ்பெற உள்ளதைப் பார்த்தவாறே ஸ்ரீகுரு கேட்டுக் கொண்டிருந்தார்.

''நான், அதோ அந்தப் பாறாங்கல்லின் மீது எழுதியவாறு அமர்ந்திருந்தேன். என்னுடைய வலப்பக்கத்தில் நான் எழுதிய எவ்வளவோ புத்தகங்கள் இருந்தன. அப்பொழுது நீங்கள் அங்கு வந்து, 'நிஜகுணா! எழுந்திரு'' என்று ஆணை இட்டீர்கள். நான் எழுந்து வணங்கி விட்டு நின்றேன்'.

''வா கிளம்புவோம்'' என்று அழைத்து மலையிலிருந்து இறங்கி வடக்கு திசையை நோக்கிப் புறப்பட்டீர்கள். நம்முடைய பாதயாத்திரை தொடர்ந்தது. இறுதியாக ஒரு பட்டணத்தைத் தாண்டிச் சென்று மனிதர்கள் அற்ற ஒரு பகுதியைச் சென்று அடைந்தோம். அங்கு ஒரு அழகிய கைலாச மண்டபம் ஒளிர்ந்து கொண்டு இருந்தது. நீங்கள் என் கையைப் பிடித்து மேலே ஏற்றி அந்த மண்டபத்தின் நடுவிலிருந்த சிம்மாசனத்தில் அமர வைத்தீர்கள். நான் எதுவும் தோன்றாமல் ''ஸ்ரீகுருவே இது என்ன? உங்களைக் கீழே நிறுத்தி விட்டு நான் இங்கு அமர்ந்து கொள்வதா? என்னால் இயலாது'' என்ற பொழுது நீங்கள் ''அப்படிக் கூறவேண்டாம் நிஜகுணா. இங்கு வேறுபாட்டைக் குறித்த கேள்விக்கு இடமில்லை. அனைவரும் சமம் என்னும் எண்ணம்தான் முக்கியமானது. இருமைக்கு அப்பாற்பட்ட நிலை இது. உச்சம் என்று தோன்றினாலும் குரு-சீடன் என்னும் வேறுபாடு கரைந்து ஒரே தன்மையுள்ள ஒருங்கிணைந்த நிலையாகும்!'' என்று எனக்கு அறிவுறுத்தி, பக்கத்தில் குனிந்து, பளபளத்துக் கொண்டிருந்த ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


வைரம் இழைக்கப்பட்ட பொன் மகுடத்தை எடுத்து என் தலையின் மீது வைத்தீர்கள். அரண்மனை பொலிவுடன் ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஆயிரக் கணக்கானவர்கள் ஜெயகோஷம் செய்து கொண்டிருந்தனர். கடந்த காலத்திய அரண்மனையின் நினைவு வந்தது. அரண்மனைக்கு மீண்டும் கூட்டிக் கொண்டு வந்து விட்டீர்கள் அல்லவா என்று கருதி "தந்தையே! என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று தழுதழுத்துக் கூறினேன். அப்பொழுது நீங்கள், "நிஜகுணா! அஞ்சாமல் இருப்பாய். உன்னுடைய ராஜயோகம் இன்னும் முடியவில்லை. அதை நீ இந்தப் பிறவியில் துறந்தாய். உண்மை. ஆனால் வினைப் பயனானது (பிராப்த வினை) அப்படியே எஞ்சி உள்ளது. அதனை அஞ்ஞான வாசனை என்றும் கூறுகிறார்கள். அது மாயையின் செயல். நீ இப்பொழுது ஜீவன் முக்தன் என்பது உண்மை. ஆனால் இனிவரவிருக்கும் முமுக்ஷுக்களின் முன்னேற்றத்திற்காக உன்னுடைய இந்த நூல்களைப் பரப்புவதற்காக தத்துவஞானியாக, ஜீவன் முக்தனாக உன்னுடைய லீலைகளை வெளிப்படுத்துவாய். புகழுடன் விளங்குவாய்" என்று கூறினீர்கள். எனக்கு அப்பொழுது விழிப்பு ஏற்பட்டது. ஸ்ரீகுரு அவர்களே! இந்தக் கனவின் உட்பொருள் என்ன? என்று நிஜகுணர் கேட்டார்.

நனவில் நடக்கயிருப்பதையே கனவிலே கண்ட நிஜகுணர், இந்தக் கனவு உணர்த்தும் பொருளை ஸ்ரீகுருவின் வாயிலிருந்து அவர் கண்டுகொள்ள விரும்பினார். சம்புலிங்கர் புன்னகை பூத்த முகத்துடன்

"கனவு, சரியாகவே தகுந்த முறையிலேயே வெளிப்பட்டுள்ளது நிஜகுணா! இது எதிர்காலத்தைக் குறிப்பாக உணர்த்துகிறது" என்று கூறினார். குரு அவர்களின் சொற்களால் சமாதானம் அடைந்ததுடன் மட்டுமின்றி, உற்சாகத்தையும் அடைந்து நிஜகுணர் "ஆருடஸ்திதி"- எல்லாவற்றையும் கடந்த நிலையைக் குறித்து விவரிக்கும் பாடலை எழுதத் தொடங்கினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"உடல், மனம், செல்வம், தானியம், பெண், மகள் ।
எனுமிவற்றில் மோகம், வைராக்கியம் ஏற்டாது ॥
தன்னுள்ளேயே ஆழ்ந்து மூழ்கினேன் எனக் ।
கூறின் அவன் ஆரூடன் ஆவான் ॥

விஷயங்களுடன், போகவிஷயங்களுடன், தத்துவ ।
விஷயங்களுடன், கர்மங்களைச் செய்தல் எனும் ॥
விஷயங்களிலே, மோகம், வைராக்கியமின்றி ।
விஷயங்கள் அற்றவன் ஆரூடன் ஆவான் ॥

தனக்கு எல்லாக் கர்மங்களிலும், விஷயங்களிலும் ।
சிறிதுகூட சங்கல்பமும், விகல்பமும் ।
தோன்றாது அனைத்திலும் சமமான உணர்வுள்ள ।
அவன்தான் ஆரூடன் ஆவான் ॥

தனக்கொரு துன்பமும் ஏற்படாது, செயல்கள் ।
இனி இல்லை என எண்ணி, முழுமையான பேரின்பமய ॥
உயர்ந்த, நிலைத்த நிர்விகல்ப, இருமையற்ற ।
மனிதனே ஆரூடன் என அறிய வேண்டும் ॥

கனவிலே குரு அவர்கள் அறிவுறுத்தியதே தன்னுடைய அனுபவமாக இருந்ததால், அதனைச் சாத்திரத்திற்குப் பொருத்தி வருவதைப் போல விவரித்து எழுதினார். அதைப் போன்றே அடுத்தடுத்த பாடல்களையும் எழுதி முடித்தார். ஆறாம் பகுதியின் இறுதி ஸ்லோகத்தில்

"அனைவருக்கும் அனைத்து நன்மைகளையும் ।
களங்கமிலா சம்புவின் நல்லருள் நல்கும் ॥
என்று எல்லா நன்மைகளையும், உலக நலனையும் விரும்பி,
"இது நிஜகுணயோகி மகிழ்வுடன், அறிந்துகொள்ள ।
உரைத்த யாஜ்ஞவல்க்ய - மைத்ரேயியிடையிலே ॥
நடைபெற்ற விவாதத்தின் ஆறாம் அத்தியாயம் ।
புனிதமான பரமானுபவம் நிறைவெய்தியது ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



என்று நிறைவு செய்தார். நூற்று இருபத்தி இரண்டு சூத்திரங்களை உட்கொண்ட இந்த ''பரமானுபவபோதை'' என்னும் நூலானது, குரு சம்புலிங்கர் அவருடைய கருத்தினை அறிவுறுத்தியதின்படி அனுபவசாரத்தின் மேலாக வைக்கப்பட்டது.

''நிஜகுணா! நீ அவ்வப்பொழுது ஒவ்வொரு பாடலாக எழுதிக் கொண்டிருப்பதாக கூறினாய் அல்லவா? அவற்றை எடுத்துக் கொண்டு வருவாய்'' என்று சம்புலிங்கர் ஒருநாள் தம்முடைய பரமசீடரான நிஜகுணரிடம் கூறினார்.

நிஜகுணர் ஒரு புத்தகக் கட்டைக் கொண்டுவந்து பிரித்து குரு அவர்களின் முன்பு வைத்தார். அதில் ''பாரமார்த்தப்ரகாசிகை'' மற்றும் ''புராதனர் திரிவிதி'' களை எழுதிய சூழ்நிலையைக் குறித்து விவரித்தார். சில பாடல்களைப் படித்தும் காட்டினார். குரு அவர்கள் அவற்றைச் சிறிது நேரத்திற்குப் பார்த்துவிட்டு

''நிஜகுணா! இந்த எல்லாப் பாடல்களுமே மிகவும் அரிய பாடல்களாகத் திகழ்கின்றன. இந்த அனைத்தையும் தலம், தலமாகப் பொருத்தமுற அமைத்து அந்த அந்தத் தலங்களில், அந்த அந்தப் பாடல்களைப் பொருத்தமாக வைத்தால் சாதகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அது மட்டுமின்றி, இந்த இரு நூல்களையும் உறியின் மீது வைத்து, நான் கூறியதைப் போலச் செய்வாய்'' என்று அறிவுறுத்தினார்.

நிஜகுணரும் அதை ஏற்றுக் கொண்டு, அதைப் போன்றே அவர் ஶிவகாருண்ணியத்தலம், ஜீவசம்போதனத்தலம், நீதிக்ரியாசர்யத்தலம், யோகப்ரதிபாதனத்தலம், ஞானப்ரதிபாதனத்தலம் என்று ஐந்து தலங்களாகச் செய்தார்.

ஶிவகாருண்ணியத்தலத்தின் தொடக்கத்தில் ஐந்து தலங்களுக்கும் முன்னுரையாக விளங்கும் விதத்தில் இருந்ததால்

''ஸ்ரீ குருவின் அறிவுரையைக் கேட்பின் ।
மனிதருக்கு முக்தி கிடைக்கும்'' ॥

என்று தொடங்கும் ஐந்து வரிகள் உள்ள பாடலை இணைத்தார். இடையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



"…. பக்தர்களின் நல்லிதயத் தாமரையில் ஶிவநாமத்தை விடாமல் …. பரமேசுவரியின் புண்ணிய நாமத்தை" என்பன போன்ற பாடல்களையும் சேர்த்து, இறுதியில் "குயில், செல்லக்குயில், அழகுக் குயில்" என்னும் பாடலையும் சேர்த்தார். இந்தத் தலத்தில் ஶிவனின் திருவருளை வேண்டி இருபத்து எட்டு பாடல்களை இயற்றினார்.

அதே விதத்தில் "ஜீவசம்போதன தலத்தில்

நாள்தோறும் அதிகாலையிலே நினைப்பது" என்னும் பாடலிலிருந்து தொடங்கி, அதன் பிறகு எஞ்சிய பாடல்களைப் பொருத்தமுற அமைத்தார். இதில் வைராக்கியத்தை அறிவுறுத்தும் வகையில் மொத்தமாக இருபத்து இரண்டு பாடல்கள் சோபித்தன.

மூன்றாம் தலமான நீதிக்ரியா சர்யதலத்தில் ஆன்மீக வாழ்விற்கு அடிப்படையாக உள்ள இருபத்து ஆறு பாடல்களையும், நான்காம் தலமான யோகப்ரதிபாதன தலத்தில் மந்திரம்-லயம்-ஹட-ராஜ' ஶிவ யோகங்களைச் சுருக்கமாக, பொருத்தமாக விவரிக்கும் முப்பத்து ஒன்பது பாடல்களையும் பொருத்தமுற அமைத்து விட்டார். இன்னும் இறுதியாக உள்ள ஞானப்பிரதிபாதன தலத்திற்காகப் பாடல்களை இயற்ற வேண்டியிருந்தது. எழுதியவற்றை சம்புலிங்கரிடம் காட்டிய பொழுது -

"இந்தத் தலத்தை அமைத்துள்ள விதம் நன்றாக உள்ளது. இன்னும் உன்னுடைய அனுபவமான குரு உபதேசங்களின் சாரத்தை இந்தத் தலத்துடன் இணைத்துவிடுவாய். அத்வைத சாதகர்களுக்கு இதுவும் முக்திப் பயனை அளிக்கவல்ல ஒரு கற்பகமரமாகத் திகழும்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார். அனுபவசாரம் என்னும் நூலை இயற்றிய அதே முறையிலேயே இந்தப் புற உலகைக் குறித்தனவற்றையும் அறிவுறுத்தி எழுதி முடிக்க வேண்டும் என்பது அவருடைய எண்ணமாகும்.

அன்று திங்கட்கிழமை. பிரம்ம முகூர்த்தத்தின் இருள்பிரியாத நேரத்தில் விழித்தெழுந்த சம்புலிங்கர் நிஜகுணரையும் எழுப்பினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நீராடல் போன்றவற்றை முடித்துக் கொண்டு வரவேண்டும் என்று வேகவேகமாக நிஜகுணரின் கையைப் பிடித்துக் கொண்டு கல்யாணியின் அருகில் சென்றார். வழிபடு தெய்வமான சம்புலிங்கரின் எதிரிலே அமர்ந்து கொண்டனர். குருசம்புலிங்கர் விபூதியை அணிந்து கொண்டார். வயதுமுதிர்ந்த அவருடைய உடல் குளிரினால் நடுங்கத் தொடங்கியது. நிஜகுணர் சம்புலிங்கரைத் தம் தோள்களில் தழுவிக் கொண்டு குரு அவர்களே! என்ன குளிர்கிறதா? என்று அவசரமாகக் கேட்டார்.

''குளிர், மழை, காற்று என்னும் இவற்றிற்கு நான் பணிபவனல்லன். நிஜகுணா! ஞானம், அஞ்ஞானங்களுக்கு அப்பாற்பட்டு நான் இருக்கிறேன் எதனாலும் எட்ட இயலாத, அனைத்திலும் வியாபித்து உள்ள பொருள் நான். பிறப்பு - மரணம், வினைகளுக்கு ஏற்ற வகையில் அனுபவிப்பது என்னும் அனைத்தும் இந்த உடலிற்கு மட்டும்தான், எனக்கு இல்லை. இந்த உடலின்போகம் முற்றுப்பெற்றது. ஆனால் நான் எப்பொழுதும் நிலைத்து உள்ள முழுமையான பொருள் நான் அமரன்'' என்று கூறினார்.

நிஜகுணருக்குப் புரிந்து விட்டது, அவர் பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டு சம்புலிங்கரைத் தம்முடைய துடையின் மீது படுக்க வைத்துக் கொண்டார். அப்பொழுதே ஆன்மீகச் சொற்பொழிவிற்காக வரத் தொடங்கி விட்டனர். அங்கிருந்த அனைவரும் கருவறையின் வெளியிலே நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தனர். விசுவநாதனும் சதாஶிவரும் அச்சத்தால் சூழப்பட்டு கவலைப்படத் தொடங்கினர்.

நிஜகுணர் குரு அவர்களின் மார்பை மென்மையாக நீவி விட்டுக் கொண்டிருந்தார். அவருடைய வாயிலிருந்து ஸ்ரீகுருவின் திருநாமமானது தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. சம்புலிங்கர், நிஜகுணரின் முகத்தை முன்னால் தாழ்த்திக் கொண்டு,

''நிஜகுணா! ஒரு விஷயம். நான் உனக்காக இவ்வளவு நாட்களாக இந்தவுடலை வாழ வைத்துக் கொண்டிருந்தேன். இனி எனக்குக் கவலை இல்லை. உன் பெயரானது நிலைத்து நிற்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



சமாதி நிலையில் அமர்ந்தவாறு உயிரை விட விரும்பவில்லை. உன்னுடைய இந்த தொடையின் மீதே உயிரை விடுவதே மிகவும் மகிழ்ச்சியை அளிக்கவல்லது. அதுதான் என் இறுதி விருப்பம். என் பெயர் உன்னிடம் அடங்கட்டும் உன்னுடைய நூல்கள் என்றென்றும நிலைத்து நிற்கட்டும் எங்கே? என்னைப்பார். கண்களை இமைக்க வேண்டாம்'' என்று கூறி நிஜகுணரைக் கண்ணிமைக்காமல் பார்க்கத் தொடங்கினார். அவருடைய கண்களிலிருந்து நிஜகுணரிடம் ஒளிரும் கிரணங்கள் சென்றடைந்தன. சம்புலிங்கரின் தலையைப் பிடித்துக் கொண்டிருந்த நிஜகுணரின் கையைச் சரித்து விட்டு ஜோதி ஒன்று கிளம்பி நிஜகுணரின் இதயத்தைச் சென்று அடைந்தது. சம்புலிங்கரின் முகம் பக்கத்தில் சரிந்து விட்டது.

சம்புலிங்கர் சம்புவானார். சுயம்புவாகத் தென்பட்டார். விதேஹமுக்தி அடைந்தார். நிஜகுணரின் கண்களிலிருந்து இரு பெரிய நீர்த்துளிகள் உதிர்ந்து சம்புலிங்கரின் பூத உடலின் மீது விழுந்தன. நிஜகுணர் பின்னால் திரும்பி.

''ஸ்ரீகுரு அவர்களைச் சமாதி செய்வதற்காக சம்புலிங்கன் இருக்கும் இடத்திற்குப் பின்னால் ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறி, அதுவரையில் ஸ்ரீகுரு அவர்களின் உடலை அப்படியே வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

''பக்தர்களின் நல் இதயத்தாமரையிலே ।
உன்திருவடி ஒளிர்ந்து கொண்டுள்ளது'' ।

என்று அவர் பாடிக்கொண்டிருந்த பாடல் கருவறையிலே எதிரொலித்தது. அந்த அமைதியான காலை நேரத்திலே மலைமுழுவதிலும் எதிர் அதிர்வுகளை ஏற்படுத்தியது.

சமாதி ஆயத்தமாக உள்ளது என்று கூறியபிறகு நிஜகுணர் மிகவும் மெதுவாக குரு அவர்களின் திருவுடலை எடுத்து மார்புடன்அணைத்தவாறு வெளியிலே வந்தார். மற்றவர்கள் துயரத்துடன் பின்தொடர்ந்தனர். துயரப்படக் கூடாது என்று அவர்களுக்குக் கட்டளை இடப்பட்டது. குரு அவர்களின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


திருவுடலை அந்தச் சமாதியிலே வைத்து அவரே பூஜித்தார். திருவடித் தாமரைகளை வணங்கிப் பாத தூளியை உடல் முழுவதும் தரித்துக் கொண்டு இந்தப் பக்கமாக வந்தார். அவரைப் போன்றே மற்றவர்களும் இறுதியாகத் தரிசனம் செய்தனர். சமாதியின் கதவிற்கு ஒரு பெரிய கல்லைப் பத்திரமாக வைத்தனர். சமாதியின் மீது ஒரு விளக்கு அமைதியாக எரிந்து கொண்டிருந்தது.

நிஜகுண ஶிவயோகிகளிடமிருந்து முமுக்ஷுக்களுக்கு ஞான அமுதமானது தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருந்தது. ''ஞானப்ரதிபாதனதல''த்தில் பாடல்கள் முறையாகச் சேர்ந்து கொண்டிருந்தன. இந்த இரு வேளைகளில் நடைபெற்ற சொற்பொழிவுகள் - விளக்கங்களுக்கு இடையில் நிஜகுணரின் பயிற்சியும் தானாகவே நடந்து கொண்டிருந்தது.

குருபேதம், ஞான - வைராக்கியம், வைராக்கியத்தின் லட்சணங்கள், முக்தி அடையும் முறை, ஞான வளர்ச்சியின் மேன்மை, புற உலகைச் சார்ந்தனவற்றை நீக்குதல், என்னும் இவை குறித்து, பாடல்களின் வடிவத்திலே பொருத்தமாக அமைந்தன. உண்மையைக் குறித்து உணர்ந்து கொள்வதற்கு உரிய வழிமுறைகளை மனத்தில் பதியுமாறு அமைத்திருந்தார். ஆன்மாவின் ஸத், சித், ஆனந்த, நித்ய, பூர்ண என்னும் ஐந்து லட்சணங்களைச் சூத்திர வடிவத்தில் விவரித்திருந்தார். இப்பாடல்கள், சாதகர்களின் எல்லாவிதமான செல்வங்களாகத் திகழ்ந்தன.

''ஸத்ரூபசந்தானத்தில்

''அவயவமற்று ஆகாயத்தைப் போலுள்ளது'' என்றும்

''தொடரும் பிறவிகளில் ஆட்பட்டேன் என்பதே பொய்''

என்றும் விவரித்து நான்கு பாடல்களை எழுதினார்.

''சித்ரூபானுஸந்தான''த்தில் அறிவைப் பரிசீலிக்கும் முறையை ஒன்பது பாடல்களில் முறையாக விவரித்திருந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''அறிவே, வெறும் அறிவே! நீ இவ்வுலக இருப்பை |
உன் அறிவினால் ஒரு முறை கூட மறவாதிருப்பாய்'' ||

என்று கூறியுள்ளார்.

''ஆனந்தத அவிர்பாவ'' - ஆனந்த வெளிப்பாட்டின் பரிசீலனையில் பயனும், இன்பமும் பலவகைகளில் உணரப்பட்டாலும் அது நிலையானது அன்று, கணநேரத்திற்கு மட்டுமே இருக்கவல்லது. ஆன்ம இன்பம் ஒன்று மட்டுமே நிலைத்த இன்பமாகும் என்று ஏழு பாடல்களில் விவரித்து உள்ளார்.

''என்னவென்று கூறுவேன் எனக்கு ஏற்பட்டபேரின்ப நிலையை'' என்று பேரின்பமானது விவரிப்பதற்கு இயலாது என்று உணர்த்தியுள்ளார்.

''நித்யபதவிதர்சன''த்தை இல்லை என்று எண்ணிய, காட்டுவதற்கு அடங்காத மணல் அன்றி, உன்னை எங்கும் தேடிக்காணேன். உள்ள மணலைப்போல சம்புலிங்கம்தான் உலகம். ''உலகம் அனைத்துமே உன் அழகால் விளங்கிக் கொண்டுள்ளது'' என்று ஆன்மாவின் நிலைத்த தன்மையை இரு பாடல்களில் விவரித்துள்ளார். ஆன்மா பரிபூரணமானது என்பதை இரு பாடல்களில் உணர்த்தியுள்ளார்.

அதன்பிறகு, சாதகர்களின் பலவிதமான சந்தேகங்களுக்குப் பதில் அளித்துச் சில பாடல்களை இயற்றியுள்ளார்.

லோஹிதாச்வன் ''ஞரனியின் அடையாளம், இயல்புகளை நமக்கு உணர்த்த வேண்டும் ஸ்வாமி'' என்று கேட்டுக் கொண்டார்.

''ஞானியின் அடையாளத்தை அறிய விரும்புவோர்க்கு'' -

ஒருமுனைப்பட்டமனம் - உடல் சார்ந்த எண்ணமற்ற தன்மை என்றும் இவை உணர்த்தும்! தகுந்தது - தகாதது என்னும் தெளிவு, விஷயங்களில் பற்றற்ற தன்மை, உலகம் புகழ்ந்து கூறின் அதனால் மாறுதலடையாத அடங்கிய மனம் மற்றும் பிறர் முக்தி அடைய வேண்டும் என்னும் விருப்பம்'' என்னும் இவை அடையாளங்கள் ஆகும் என்று மனத்திலே நன்கு பதியுமாறு லோஹிதாச்வனின் சந்தேகத்தை அகற்றினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஹடயோகத்தை எனக்குக் கற்பிக்க வேண்டும்'' என்று வேத மூர்த்தி விண்ணப்பித்துக் கொண்டான். ஆனால் அவனுடைய ஆன்மீகம் சார்ந்த தகுதியானது உயர்ந்த நிலையிலே இருந்தது? எனவே நிஜகுணர்

''வேறொரு யோகத்திலே களைப்புறாது, பேரின்பத்தையே ।
அள்ளித்தரும் ஆன்மாவின் மீது நிலைத்த நம்பிக்கை
கொள்வீர் ॥
இயல்பான இறைவனே தான் எனும் அறிவை மறவாமல் ।
இருப்பதே வேதம் ஏற்கும் யோகம் ஆகும் ॥
புலன்களினியல்பு, விஷயங்களின் சாட்சி எனும் ।
குருசம்புலிங்கமே தான் ஆனேன் எனும் ॥
உறுதியை நிலைநிறுத்தி, அலைகளடங்கியபின் ।
நிலையனைய இடைவிடாது அமைதியுடனிருப்பதே
நிஜயோகமாகும் ॥

என்று வேதமூர்த்தியின் ஹடயோகம் பயில வேண்டும் என்னும் கண்ணோட்டத்தை அகற்றி, இந்த உண்மையான யோகத்தில் அசைக்கவியலாத நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கூறினார்.

சாதகர் பிரிவிலே பசுபதி சேர்ந்திருந்தாலும் அவனுடைய மனத்தின் இயல்புகள் மேம்போக்கானதாகவே இருந்தன. சில சமயங்களில் அவனுடைய அனுபவமற்ற நடைமுறைகளைக் கண்ட நிஜகுணர், இன்னும் சிலரும் அது போன்றே இருந்ததைக் கண்டு, அன்று அளித்த விளக்கத்தில்

''நாள்தோறும் ''நானே ஆன்மா'' எனும் உணர்வு இருக்க ।
நிலைத்தவேதத்தை உணர்த்திய குருவின்மூலம்
உணர்ந்தால் ॥
பேரின்ப முக்தி நிலையை அடையலாம்'' ॥

என்று பசுபதியின் பக்கமாக பார்த்தார். பசுபதி வெட்கத்துடன் தலையை குனிந்து கொண்டான். இடப்பக்கத்தில் அமர்ந்திருந்த சாந்தமுனி மற்றும் டம்பாச்சாரியான கபிலனை கவனத்தில் கொண்டு நிஜகுணர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


"நாள்தோறும் காமம், நாள்தோறும் சினம், பேராசை ।
நாள்தோறும் மதம், மோகம், பொறாமைத்திரள் ॥
நாள் தோறும் பயம், துயரம், நாள்தோறும் மூன்று நிலை ।
நாள்தோறும் தோன்றும் பசியும், தாகமும்
இருக்கும்பொழுது ॥

என்று கேள்விக்குறியுடன் அவர்கள் இருந்த பக்கத்தைப் பார்த்தார். அவர்களின் முகமானது வெட்கத்தால் வியர்த்தது.

அதைப்போன்றே ஒருநாள் விளக்கம் அளித்துக் கொண்டிருந்த பொழுது, நிஜகுணரின் எதிரிலே சிறிது இடைவெளி விட்டு அமர்ந்திருந்த கல்லய்யன் விளக்கவுரையில் கவனத்தைச் செலுத்தாமல் வெளியில் ஆர்வத்துடன் எதையோ பார்த்துக் கொண்டிருந்தான். வலப்பக்கத்தில் அமர்ந்து கொண்டிருந்த சதாஶிவனும் விசுவநாதனும் மிகவும் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"ஸ்ரீ குருவின் உபதேசம் அப்பொழுதே இயற்றப்படுவதால் ।
சாதகரின் குழு மூவகைப்படும் ॥

என்று கூறிவிட்டு கல்லய்யனைப் பார்த்து அவன்பெயரைக் கூறி அழைத்து அவனைத் தன்பக்கமாக ஈர்த்தார்.

"உற்சாகமாகக் கடைநிலைசீடனுக்குரைத்த இறை அறிவுரை ।
சூடான இரும்பின்மீது தெளித்த நீரனையப் பயனற்றது" ॥
என்று கூறினார். கல்லய்யன் ஆற்றல் இழந்து அமர்ந்திருந்தான்.

விசுவநாதன் - சதாஶிவன் இருந்த பக்கமாகத் திரும்பி
"மகிழ்ந்து இடைநிலை சீடனுக்குக் கூறிய ஆன்ம அறிவுரை ।
தாமரை இலைமீது தெளித்த நீரனைய, முத்தனைய
ஒளிரும் ॥
உயர்ந்த முதல் நிலை சீடனுக்குரைத்த சம்புலிங்க அறிவு ।
சிப்பி உறுதியாக முத்தாவதனைய முறையாகப் பலன்
ஈயும் ॥

என்று பாடினார். மற்றொரு நாள் விளக்கமளித்துக் கொண்டிருந்த பொழுது சதாஶிவன்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஞானியானவன், மோகம் கொள்வானா? கொள்வது இல்லையா? என்னும் கேள்வியை நிஜகுணரின் முன்பு வைத்தான். அவனுடைய கேள்விக்கு நிஜகுணர் மிகவும் மகிழ்ச்சியுடன் பதில் அளித்தார்.

''ஞானி மோகிப்பது எனின் பரம்பொருளை ।
ஞானி மோகிப்பது எனின்' ॥
தானே நிலைத்த பேரின்ப உண்மை வடிவம் என்பதை ॥
என்று தொடர்ந்து மூன்று உடல்களையும் (.....)
(தூல உடல், ஸூக்ஷ்ம உடல் காரண உடல்)

ஐம்புலன்களையும் மனம் போன்றவற்றையும் தன்னைவிட வேறுபட்டவை என்று உணர்ந்து, பிறப்பு - இறப்பு அற்று, வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்னும் எண்ணத்தைத் துறந்த பரம தத்துவஞானியானவன் மீண்டும் என்றாவது அவற்றை விரும்புவானா?

இவ்வுலகம் கனவைப் போன்றது. கானல் நீரைப் போலத் தோன்றி அழியும் தன்மையுடையது. இவ்விதம் வகை வகையான பொருட்களைக் கண்டு ஞானி மோகிப்பானா?

''பேரின்பக் கடல், சம்புலிங்கத்துடனிணைந்து ।
பிறவிவாசனைகெட்டு - உறுதியான
இயல்புநிலையிலே!'' ॥

உள்ள ஞானியால் மோகிக்க இயலுமா? சாதகனாக இருக்கும் பொழுதே அவற்றைத் துறந்து, அல்பமாகக் கருதி, சித்தி நிலையை அடைந்தபிறகு மீண்டும் அவற்றின்பால் மனத்தைச் செலுத்துவானா? '' என்று விதவிதமாக மனத்திலே பதியுமாறு சதாசிவனுக்குப் பதிலளித்தார். அப்பொழுது அவன் எழுந்து வந்து நிஜகுணரின் திருவடிகளில் பணிந்தான்.

இவ்வாறே ''ஞானப்ரதிபாதன தல''த்தில் பாடல்கள் அழகாகப் பொலிந்தன. இறுதியில் ஜீவன் முக்தர்களின் நிலையை விவரித்து, நிறைவு பெற்றதை உணர்த்தும் வகையில் மங்கலப் பாடலை எழுதினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



"தீபம் ஒளிர்கிறது - தூயசுடர் - தீபம் ஒளிர்கிறது"

என்னும் மங்கலத்துடன் ஐம்பத்தொன்பது பாடல்கள் சோபித்துக் கொண்டிருந்தன. இந்த ஐந்து தலங்களின் தொகுப்பிற்குக் "கைவல்ய பத்ததி" என்னும் பெயரைச் சூட்டி, அதனை ஸ்ரீகுருசம்புலிங்கரின் ஆணை, கருத்திற்கு ஏற்ப உறியிலே வைத்தார்.

நிஜகுணரின் இதயபூர்வமான, மனம் நிறைந்த அழைப்பிற்கு ஷடக்ஷரஸ்வாமிகள் சம்மதிக்க வேண்டி வந்தது. காலையிலிருந்தே எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிஜகுணருக்கு ஷடக்ஷரரின் வருகையானது மகிழ்ச்சியை அளித்தது. உபசரிப்பு, மற்றும் நலன் விசாரித்துக் கொண்ட பிறகு நிஜகுணர் தம்முடைய சீடர்களுக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார்.

ஒளியும் ஒளியும் இணைந்து நின்ற அந்த பேரிணைவுக் காட்சியானது, விசுவநாதன், சதாஶிவன் போன்றோருக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தது. நிஜகுணரும் ஷடக்ஷரரும் இரு பெரிய நட்சத்திரக் கூட்டங்களைப் போல ஒளிர்ந்து கொண்டு இருந்தனர்.

ஷடக்ஷரருக்காக மற்றொரு இடம் காத்துக் கொண்டிருந்தது. அந்த இடமானது அவரை ஈர்த்தது. சம்புலிங்கமலையின் மீது காலை வைத்த பொழுதே ஏதோ ஒரு காந்த சத்தியானது அங்கு உள்ளது என்று அவருக்குத் தோன்றியது. விசுவநாதனுடன் மலையைச் சுற்றி வந்தார். ஸ்ரீபுஜலிங்கஶிவயோகிகளை விட்டு வந்ததிலிருந்து இன்று வரையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும், நிஜகுணரின் தவம், நூல் இயற்றி இருப்பது என்னும் அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"விசுவநாதா, இந்த சம்புலிங்கமலை, இத்தகைய சிறந்த ஶிவயோகி ஒருவனின் தவம் செய்யும் பூமியாவதற்கு எத்தனை யுகம், யுகங்களாகத் தவம் செய்ததோ?

இன்று அதனுடைய விருப்பமானது நிறைவேறியுள்ளது அல்லவா?" என்று நிஜகுணரைக் குறித்து, அவருக்கு இருந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


மதிப்பு, அபிமானம் போன்றவற்றை வெளிப்படுத்தும் அன்பு நிறைந்த குரலிலே கூறினார். விசுவநாதனும் அத்தகைய உணர்வு நிறைந்தவனாகி.

"நீங்கள் கூறுவது உண்மைதான் ஸ்வாமி. தங்களைப் போன்ற ஶிவயோகிகளின் அருகாமையில் இருப்பதற்கு நாங்களும் பிறவிதோறும் தவம் செய்து இருக்க வேண்டும். ஒரு மகாபுருஷரின் வரவிற்கு உயிரினங்கள் அனைத்தும் தவம் செய்திருக்க வேண்டும். அல்லவா ஸ்வாமி?"

"பலே பலே! என்னை விட ஒரு அடி முன்னால் வைத்துவிட்டாய். நீ நிஜகுணரின் சீடன் அல்லவா?" என்று ஷடக்ஷரர் பாராட்டிக் கொண்டே புன்னகை பூத்தார்.

ஷடக்ஷரரின் பயிற்சியானது அனுபவத்திலே நிலைநின்றது. முயற்சிகள் சித்திகளின் வடிவத்தை அடைந்தன. நியமங்களைப் பின்பற்றுவதில் உறுதி ஏற்பட்டது. நிஜகுணரும், ஷடக்ஷரரும் சில நேரங்களில் தத்துவம் குறித்து ஆலோசிப்பார்கள். மணிக்கணக்காக விவாதிப்பார்கள். தாங்கள் இயற்றியுள்ள பாடல்களை ஒருவருடனொருவர் படித்து, விவரித்து மகிழ்வார்கள். சில நேரங்களில் ஏழெட்டு நாட்களுக்குச் சந்திக்காமலும் இருந்தனர்.

இருவருமே ஶிவயோகம் அடைந்தவர்கள் யோகசித்தர்கள். அவர்களுடைய ஒவ்வொரு ரோமத்திலும் தவத்தின், யோகத்தின் மிகப்பெரும் ஆற்றலானது பொறி பறப்பதைக் கண்ட விசுவநாதன், சதாஶிவன் இருவரும் புளகமடைந்து கொண்டிருந்தனர். ஒருமுறையாவது அவர்களுடைய யோகசித்தயின் மேன்மையைக் கண்ணாரக் காண வேண்டும் என்று முழுமையான இதயத்துடன் விரும்பினர். அந்த விருப்பம், நிஜகுணருக்கும் ஷடக்ஷரருக்கும் கண் ஜாடையாயிற்று.

ஒருமுறை விசுவநாதன் நிஜகுணரிடம் "ஸ்வாமி, யோகிகளால் செய்ய இயலாதது எதுவும் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் மனம் அதை எதனாலோ ஏற்றுக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



கொள்ளவில்லை'' என்றவாறு சதாஸிவன் இருந்த பக்கமாகப் பார்த்து கண் ஜாடை செய்ய அதை அறிந்து கொண்ட சதாஸிவர்,

''ஆமாம் ஸ்வாமி'' என்று விசுவநாதனின் கருத்தை ஆமோதித்தார்.

ஷடக்ஷரருக்கு அது சவால் விட்டதைப் போல இருந்தது. யோகிகளைச் சந்தேகிக்காமல் இருக்க வேண்டும். விசுவநாதா, நாளைக்காலையிலே உன் சந்தேகம் தீரட்டும். ''கல்யாணியின் கரையில் அனைவரும் சேருவோம்'' என்று கூறி தம்முடைய இருப்பிடம் நோக்கிச் சென்றார்.

கல்யாணியின் கரையின் அருகில் நால்வரும் நின்று கொண்டு இருந்தனர். விசுவநாதா! ''இதோ உன் அருகில் இங்கேயே, இப்படியே மறைந்து, கங்கா நதியில் நீராடி விட்டு வருகிறோம் அதுவரையிலும் இந்தத் துணிகளை வைத்துக் கொண்டு காத்துக் கொண்டு இருங்கள்'' என்று நிஜகுணர் சிரித்தவாறு கூறினார்.

''ஸ்வாமி, இதோ இந்த மூங்கில் கோலைக் கல்யாணி நதியில் எறிகிறேன். அங்கு கங்கா நதியில் இதைக் கங்கையிடமிருந்து பெற்றுக் கொண்டு வாருங்கள், என்று கூறி இருப்பிடத்திற்குத் திரும்பினர். விசுவநாதனும், சதாஸிவனும் பார்த்துக் கொண்டு இருந்த பொழுதே ஷடக்ஷரர் மறைந்தார். நீண்ட நேரத்திற்குப் பிறகு அவர் நிஜகுணருடைய மூங்கில் கோலைப் பிடித்துக் கொண்டு வெளிப்பட்டார். அவருடைய துணிகள் நனைந்திருந்தன. விசுவநாதனும், சதாஸிவனும் மிகவும் வியப்படைந்தனர். ஒருவர் தொலைவிலிருந்த கங்கையில் நீராடி விட்டு வந்தால் மற்றவர் கல்யாணியில் எறிந்த மூங்கில் கோலை கங்கையிலிருந்து எடுத்துக்கொண்டு வந்தவர் !

இருவரின் திருவடிகளிலும் அவர்களின் தலைகள் பணிந்தன.

''கைவல்யபத்ததியை'' (நூலை) எழுதி முடித்த பிறகு சில நாட்களுக்கு நிஜகுணர் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். அவர் பார்வையானது அகமுகமாக ஆயிற்று. மற்றொரு மேன்மையான சிறந்த நூலானது வெளிப்பட இருந்தது. அத்துடன் ஶிவ ஆகம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


தரிசனத்தின் பயிற்சியும் தொடர்ந்து நடைபெற்றது. இரவெல்லாம் அவர் இருப்பிடத்தில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

ஒரு நாள், நள்ளிரவைத் தாண்டிய நேரம். திடீரென்று விழித்துக் கொண்ட விசுவநாதன் தான் படுத்துக் கொண்ட இடத்திலிருந்து எழுந்து வெளியே வந்தான். அவனுக்கு வியர்த்துக் கசகச என்று இருந்தது. காற்றாட வெளியில் நின்று விட்டு வரலாம் என்று வெளியிலே வந்தான். அந்தக்காற்று உவமிக்க வியலாத அளவிற்கு நறுமணத்தைச் சுமந்து கொண்டு வந்து தீண்டியது அவனுக்கு வியப்பாக இருந்தது. அந்தக் காட்டிலே இந்த நறுமணமானது எங்கிருந்து வருகிறது? அந்த நறுமணத்தின் சுவட்டைப் பின்பற்றியவாறு அவன் நிஜகுணரின் இருப்பிடத்திற்கு எதிரிலே நின்றான். அதன் வாயிலில் கதவாக நிறுத்தப்பட்டிருந்த மூங்கில் கதவின் சந்திலிருந்து ஒளி சிந்திக் கொண்டிருந்தது. கதவைத் தள்ளிவிட்டு ஓரடி முன்னால் வைத்தான். வேறு ஒரு உலகத்திலே இருப்பதைப் போல அவனுக்கு வியப்பாக இருந்தது. நிஜகுணர் பத்மாசனத்தில் யோக முத்திரையில் கண்களை மூடியவாறு அமர்ந்து இருந்தார். அவருடைய அந்த மந்திரமயமான உடலிலிருந்து ஒளியானது பாய்ந்து கொண்டிருந்தது. அவருடைய தலையின் பிற்பகுதியில் பொன்வண்ணத்தில் ஒளிவட்டமானது ஒளிர்ந்து கொண்டிருந்தது. நறுமணமானது அந்த இடம் முழுவதுமே நிறைந்திருந்தது. அவருடைய தலையின் மீது ஒரு நூல் இருந்தது. விசுவநாதனுக்கு உடனேயே புதிதாக எழுதிக் கொண்டிருந்த நூலானது நிறைவடைந்து இருக்க வேண்டும் என்பது விளங்கியது. அவன் நின்ற இடத்திலேயே எத்தகைய ஒலியும் எழாதவாறு, நெடுஞ்சாண்கிடையாக வணங்கினான். சிறிது நேரத்திற்கு அங்கேயே நின்று கொண்டிருந்து விட்டுத் தன் அறைக்குத் திரும்பினான்.

மறுநாள் வழக்கம் போல விளக்கவுரை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது நிஜகுணர் அந்தப் புதிய நூலை அறிமுகம் செய்து வைத்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


''ஸ்ரீகுரு உண்மையான சீடனுக்கு அன்புடன் ।
முறையாக முக்திக்கு வழியை அறிவுறுத்தியதை ॥
விட்டுவிடாமல் இம்முறையில் கன்னடமொழியிலே ।
இடைவிடாது சம்புலிங்கன் தன் அன்பால் உரைத்தேன் ॥

என்று 'கந்த' வகையைச் சேர்ந்த பாடலால் தொடங்கும் இந்த ''பாரமார்த்த கீதை'' யில் மொத்தமாக பதினொரு அத்தியாயங்களும், நூற்று இருபத்து ஒன்று விளக்கங்களும், மற்றும் ஆயிரத்து நானூற்று அறுபத்து ஒன்பது வரிகளும் உள்ளன. இதனை ஆங்காங்கு படித்துப் பார்த்து பாராட்டிய ஷடக்ஷரர்,

''நிஜகுணயோகீசனே! முதல் அத்தியாயத்தில் 'வஸ்து சக்தி த்விதயம்' என்னும் விஷயமானது சாத்திர விதிமுறைகளை அனுசரித்து முழுமையான அனுபவ வெளிப்பாடாகவும் உள்ளது. ''என்று முதல் அத்தியாயத்தைக் குறித்துப் பாராட்டிவிட்டு, மற்றவற்றைக் கவனத்துடன் படித்துக் கொண்டு சென்று, கடைசி அத்தியாயமான ''யோகிவரனின் சரித்திரம்'' என்பதன் இறுதிப் பகுதியைக் காட்டியவாறு,

''விசுவநாதா, சதாஶிவா, கேளுங்கள்
முக்தி நிலையை அறிவுறுத்தினோம் ।
எல்லா நிலைகளையும் உரைத்துள்ளோம்,
யோக சித்திகளைக் காட்டியுள்ளோம்,
யோகியின் உயர்நிலையைக் காட்டினோம்,
உனக்கு அவற்றிலே நிலைத்த அறிவு முழுமையாக,
மகனே, நீ விரும்பி ஏற்கும் வண்ணம் அமையும் ॥

என்று சிரித்தவாறு ராகத்துடன் பாடியதும் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டு அனைவரும் சிரித்தனர்.

''ஶிவயோகிகளே! பூதபஞ்சீகரணம் (மாறுபட்ட இயல்புகளால் பிண்டம் தோன்றுவதில் வேறுபாடு, உலகத்தின் படைப்பிலுள்ள மாறுபாடு, பந்தம் - முக்தி என்னும் இருமை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


சாதகர்களின் நிலை) குணபேத விகார பிண்டதுதயபேதம், விச்வரசனாபேதம், பந்தமோட்சத்விதயம், சாதகரஸ்திதி, நிஜக்கெ நிஸ்ஸங்கத்வம், நிஸ்ஸங்கயுகம், சதுர்பூமிகா - யோகிவரன சரித்ரம் என்று மிகவும் ஈர்க்கும்படியாக அத்தியாயங்களுக்குப் பெயர் சூட்டியுள்ளீர். இது ஈடு இணையற்ற நூல்'' என்று ஷடக்ஷரர் நூலையும், நிஜகுணரையும் வாய் நிறைந்து புகழ்ந்தார். சிறிது நேரத்திற்கு அங்கு அமைதி நிலவியது. நிஜகுணரே அந்த அமைதியைக் கலைத்தவாறு,

''ஸ்வாமி, தாங்கள் எரகம்பள்ளிக்கு இன்றே புறப்பட வேண்டுமா? என்று கேட்டார்.

''ஆமாம், இன்றே கிளம்புகிறேன். மீண்டும் வருகிறேன்'' இன்னும் சில நாட்களுக்குத் தங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். நல்லது. சென்று வாருங்கள். இப்பொழுது உணவு உண்ணும் நேரமாகி விட்டது வாருங்கள் என்று நிஜகுணர் எழுந்து சென்றார். மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர். ஷடக்ஷர ஶிவயோகிகள் அங்கிருந்து சென்று விட்டதால் நிஜகுணருக்குத் தனிமை அதிகமாயிற்று. இரவெல்லாம் அவரது அறையிலே விளக்கு எரிந்து கொண்டே இருந்தது. மற்றொரு சிறந்த நூலை அவர் இயற்றத் தொடங்கியிருந்தார்.

பசி, தாகம், உறக்கம் போன்றவற்றின் எத்தகைய தொல்லையும் இன்றி எழுதிக் கொண்டே இருந்தார்.

இளைத்துக் கொண்டு வந்த அவருடைய உடலைக் கண்டு விசுவநாதன் நொந்துபோனான். சதாஶிவனுக்கு அவருடைய புன்னகை மட்டும் சமாதானத்தை அளித்துக் கொண்டிருந்தது. பேச்சின்றி மௌனம் ஆட்கொண்டது. அந்த மிகப்பெரும் மௌனத்தின் உட்புறத்திலிருந்து விவேகசிந்தாமணி தோற்றம் கொண்டது. நிஜகுணரின் ஞானத்தின் மூலமானது அங்கு சூறை கொண்டது.

''இவ்வுலக நன்மைக்காக! வேத, புராண, சாத்திர
விஷயங்களை வகுத்துக்காட்டும் உலகவிஷயங்களின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


நல்ல நிலையை விவேக சிந்தாமணி எனும் பெயரிலே
காவியத்தை நான் நயந்துகூற, சம்புலிங்கமே நீ நயந்து
கேட்பாய்''

என்று சம்புலிங்கனிடம் வேண்டிக் கொண்டார். அன்புக் கட்டளை இது! சம்புலிங்கனும் அந்தக் கட்டளைக்கு அருளினன். விவேக சிந்தாமணியிலே கூறப்படாத விஷயமே இல்லை. அது அவருடைய மிகச்சிறந்த நூல் என்று சீடர்களெல்லாம் கொண்டாடினர். அதில் பெண்ணின் நல்லியல்புகள் - தீய இயல்புகளிலிருந்து தொடங்கி ஆன்மாவின் இயல்புகள் வரை பல விஷயங்களைப் பற்றி எழுதி இருந்தார். தானியம் - பருப்பு வகைகளை அளக்கும் முறைகளிலிருந்து தொடங்கி, உலகமானது எவ்வளவு அளவு உள்ளது என்று அளந்து அதைப்பற்றியும் எழுதி உள்ளார். விவேக சிந்தாமணியை இயற்றும் பணியானது தொடர்ந்து நடைபெற்றது.

அவர் எழுதிய அனைத்தையும், விசுவநாதனும் சதாஸிவரும் படித்துத் தங்களுக்குத் தெரியாத எவ்வளவோ விஷயங்களைப் பற்றி அறிந்து கொண்டனர்.

''சதாஸிவா நிஜகுணகுரு அவர்களின் ஞானகங்கையானது தூய கன்னட மொழியில் உரைநடையிலே மிகவும் அழகாக இறங்கி வந்துள்ள, பாய்ந்து வந்துள்ள நிலையைப் பார்க்கும்பொழுது, தேவகங்கையானது பகீரதனின் முயற்சியால் பூமிக்குப் பாய்ந்து வந்த கதையானது நினைவிற்கு வருகிறது. முமுக்ஷுக்கள் அனைவரையும் முன்னேற்றவல்ல சாகசமானது இங்கு மிகவும் ஆழமானதாக உள்ளது. சிறப்பாகவும் உள்ளதல்லவா?'' என்று விசுவநாதன் இதயம் நிறைந்து கூறியபொழுது சதாசிவரும் அதே அளவிற்கு இதயம் நிறைந்து

''உண்மை விசுவநாதா, உன்னுடைய கூற்றானது முக்காலத்திற்கும் உண்மை. நாம் இருவருமே பேறு பெற்றவர்கள். அவருக்குத் தொண்டாற்றும் பேறு பெற்று உள்ளோம். இத்தகைய நூறு நூல்களை அவர் இயற்றட்டும். வா, நாம் குரு அவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கும் இடத்திற்குச் செல்வோம்'' என்று எழுந்து வெளியே நடந்து சென்றனர்.

நிஜகுணர் சில மாதங்களிலேயே ''விவேக சிந்தாமணி'' என்னும் நூலை பலவகைப்பட்ட வேறு, வேறு கட்டுரைகளின் தொகுப்பாக எழுதி முடித்தார். இது கன்னட மொழியிலே முதன் முதலில் வெளிவந்த தொகுப்பாக (வஸ்து கோசம்) விளங்குகிறது. நிஜகுணரின் தலையிலே நிறைந்திருந்த ஞானகங்கை பாய்ந்து வந்தாள். விவேக சிந்தாமணியில் எழுதப்படாத விஷயமே இல்லை. ஆன்ம இயல், உலகஇயல் சார்ந்த சூத்திரங்கள் எல்லாம் அங்கு சூறை கொண்டுள்ளன. இது மிகப் பெரிய சாதனையாகும். சிறந்த நூல், சிறந்த காணிக்கை என்று சாதகர்கள் மகிழ்ந்தனர். பாரமார்த்த கீதை, விவேக சிந்தாமணி போன்ற நூல்களை உறியின் மீது வைத்துவிட்டு எஞ்சியிருந்த இரு இணைக்கும் பகுதிகளையும் கொய்தார். அந்த ஆறு சாத்திரங்களும் ஆதாரம் எதுவும் இல்லாமல் இருப்பினும் அந்தரத்திலே நிலைத்து நின்று இருப்பதைக் கண்டவர்கள் வியப்பு எய்தினர். முமுக்ஷுக்களின் இதயங்கள் அவை இறைவனுக்கு அர்ப்பிக்கப்பட்ட நூல்கள் என்று மகிழ்ந்தாடின.

விவேக சிந்தாமணியை எழுதி முடித்த பிறகு நிஜகுணர் ஆழ்ந்த மௌனத்திலிருந்தார். அவருடைய அந்த மௌனமானது விசுவநாதன்-சதாசிவருக்கு செரிக்க இயலாததாக இருந்தது. அவருடைய மௌனத்தின் முன்பு விசுவநாதனின் பேச்சானது இடறியது. தடுமாற்றம் அடைந்தது. ஏன் இப்படி ஆயிற்று? என்று கலங்கினான். இடைவிடாது தொடர்ந்து நூல்களை எழுதிக் கொண்டு இருந்ததால் களைப்பு அடைந்திருக்கக் கூடும் என்று அவன் ஊகித்து தானே சமாதானம் அடைந்தான்.

கவிச் சக்கரவர்த்தியுடனும் ஶிவயோகியுடனும் தவவலிமையுடையவருடனும் உடன் இருந்ததால் அம்மலையின் உடலானது நிறைந்திருந்தது. முழுமையை அடைந்திருந்தது. அங்குள்ள ஒவ்வொரு அணுவும் புனிதத் தன்மையைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பெற்றிருந்ததால் பேறு பெற்று விளங்கின. எத்தனையோ நூற்றாண்டுகள் கடந்து விட்டாலும் ஆறிப் போகாத அளவிற்குத் தவச்சுடரானது மலையைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது. ஞானியால் அந்தப் புண்ணியத் தலமானது, முக்தியை அளிக்கும் திருத்தலமாக நிஜகுணர் நீராடிய கல்யாணியானது மிகப் புனிதமான தீர்த்தமாகப் பேறு பெற்றுள்ளன.

நிஜகுணர் எதற்கு வந்தாரோ அது நிறைவடைந்து விட்டது. அணுஅளவிற்குக் கூட அலைபாயாமல் அவர் மனமானது பரம்பொருளிடம் நிலைத்து நின்றது. உடலென்னும் பொற்கூண்டிலிருந்து விடுபட்டு முழுமையான இறைவனுடன் நிலைத்து நிற்பதற்குப் பரிதவித்துக் கொண்டிருந்தது.

அன்று மாலை நேரத்திலே நிஜகுணர் அந்தப் புனிதமான பாறையின் மீது அமர்ந்து இருந்தார். விசுவநாதன் அவருடைய திருவடிகளின் அருகிலே அமர்ந்து இருந்தான். ''ஸ்வாமி, மேற்குத் திசையிலே, ஆழத்திலே நிறைந்துள்ள நீர்ச்சுழியின் செவ்வண்ண ஆலத்தியின் நடுவிலே சூரியனின் பிம்பமானது எவ்வளவு அழகாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லவா'!

''ஆமாம், விசுவா, இந்தக் காட்சி மிகவும் அழகாக உள்ளது''

''ஸ்வாமி, தாங்கள் களைப்படைந்துள்ளதைப் போலத் தென்படுகிறது. சிறிது நாட்களுக்குத் திருத்தலங்களுக்குச் சென்று வரலாமா? தங்களுடைய ....

''நானும் அதைத்தான் கூறவேண்டும் என்று இருந்தேன் விசுவநாதா, நீயே கேட்டு நன்மையைச் செய்துள்ளாய்.''

''கூறுங்கள் ஸ்வாமி, காசிக்குச் செல்லலாமா? அல்லது சிருங்கேரிக்குப் போகலாமா? ஸ்ரீ சைலத்திற்குச்செல்வோமா?'' விசுவநாதனின் குரலிலே மகிழ்ச்சியும், ஆர்வமும் நிறைந்திருந்தது.

''நான் போக வேண்டிய இடத்திற்கு என்னை அனுப்பி வைப்பாய் அல்லவா?'' என்று புன்னகையுடன் நிஜகுணரிடமிருந்து கேள்வி வந்தது.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)


"ஓ, அவசியமாகச் செய்வேன், எத்தனை கஷ்டம் வேண்டுமானாலும் வரட்டும். நான் உங்களுடைய பயணத்திற்கு முறையாக எல்லாவற்றையும் செய்து கொடுப்பேன்" விசுவநாதனின் பதிலிலே நிஷ்டையின், பக்தியின் உச்சமானது தானாக வெளிப்பட்டது.

"ஆம், எவ்வளவு கஷ்டம் வந்தாலும், கஷ்டமானாலும் நீ பொறுத்துக் கொண்டு முறையாக எல்லாம் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்கிறேன் என்று உறுதி அளிப்பாயா?"

"இது என்ன ஸ்வாமி? தாங்கள் பரீட்சிப்பதைப் போலத் தோன்றுகிறதே. இதோ, உங்கள் திருவடிகளின் சாட்சியாக நான் உறுதி அளிக்கிறேன்."

"சரி நினைவு இருக்கட்டும். நாளை பிரம்ம முகூர்த்தத்தில் மங்கல நேரத்தில் நம்முடைய பயணம்."

"எங்கு ஸ்வாமி? எந்தப்பக்கம்?"

"விசுவநாதா, அவசரப்படாதே. கேட்டுவிட்டுத் துயரப்படாமல் இருப்பாய். கேட்டபிறகு கூட இதே மனநிலையுடன் விளங்குவாய். சம்புலிங்கத்துடன் இணையும் பரம் பொருளுடன் இரண்டறக் கலக்கும் நல்ல நேரமானது நெருங்கி விட்டது."

"என்ன! என்ன கூறுகிறீர்கள் ஸ்வாமி...?"

விசுவநாதன் நடுங்கிக் கொண்டே அலறினான்.

"ஆம், நான் எதற்கு வந்தேனோ, அந்த வேலை நிறைவு அடைந்து விட்டது. நீங்கள் அனைவரும் நாளை விடை கொடுக்க வேண்டும்" என்று அமைதியான குரலில் நிஜகுணர் கூறினார்.

"அய்யோ, கடவுளே, சம்புலிங்கா... நான் எதைக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்? நானே பிடித்து, வேண்டிக் கொண்டு புறப்படுமாறு செய்து விட்டேனா? ஐயோ, குரு அவர்களே - என்னுடைய பிறவி கெடட்டும்." விசுவநாதனின் விழிப்படையாத அறிவானது எதை எதையோ பிதற்றியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''விசுவநாதா! இங்கு பார் - நினைவிருக்கட்டும், உறுதி அளித்திருக்கிறாய். திருவடிகளின் சாட்சியாக எத்தனை கஷ்டம் வந்தாலும் அனுப்பி வைப்பதாகக் கூறியிருக்கிறாய்.''

விசுவநாதனின் துயரத்தைச் சிறைபிடித்த திறமையுடன் நிஜகுணர் நினைவூட்டினார்.

''ஐயோ! என் சபதமே!'' விசுவநாதனின் மன நிலையை அறிந்து கொண்ட நிஜகுணர் சமாதானம் செய்தவாறு,

''விசுவா, இவ்வளவு நாட்கள் என்னுடன் இருந்தும், எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டும் இந்த வகையான துயரத்திற்கு ஆட்படலாமா? இதுவும் கூட ஒரு அஞ்ஞானம் தான். ஞானத்தில் நிலை நின்ற நீயே பிறகு மீண்டும் அஞ்ஞானத்திற்கு ஆட்படுவாயா? பார். ஆராய்ந்து பார். எங்கே என்னுடைய திருவடிகளின் மீது தலையை வைப்பாய்'' விசுவநாதன் எழுந்து வந்து நிஜகுணரின் திருவடிகளின் மீது தலையை வைத்து விக்கி விக்கி அழுதான். நிஜகுணர் அவனுடைய உடலை நீவியவாறு தலையின் மீது திருக்கரத்தை வைத்து ''ஓம் சாந்தி, ஓம் சாந்தி'' என்று சில கணங்களுக்குக் கூறினார். விசுவநாதன் அமைதி அடைந்தான். உறக்கத்திலிருந்து எழுந்து வந்ததைப் போல அசைந்தாடினான். நஞ்சை அருந்தியும் உயிர் பிழைத்தவனைப் போல அமைதியானான். சூறாவளிக்கு முன்பு கடலில் உள்ள பேரமைதியானது அவனைச் சூழ்ந்து கொண்டது. அவனுடைய கையைப் பிடித்து நிஜகுணர் மேலே தூக்கினார். தாயைப் பின் தொடர்ந்து செல்லும் குழந்தையைப் போல விசுவநாதன் பின் தொடர்ந்தான்.

நாள்தோறும் செய்வதைப் போல கல்யாணியில் நீராடிவிட்டு வந்த நிஜகுணர், சம்புலிங்கத்தின் எதிரிலே பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டார். நாள்தோறும் செய்வதைப் போன்றே சீடர்களின் குழாமானது பிரார்த்தனையில் மெய்மறந்திருந்தனர்.

''எண்ணற்ற மகிமையுடைய மேலோனே, ஞானியரின்
இறைவனே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


அழகிய நல்லியல்புகளுடைய பரம்பரைக்கு ஆதாரமான
ஸிவனே, ஞானியரின் இறைவனே

என்னும் நிஜகுணரின் பாடல் மலையிலே எதிரொலித்தது. உறக்கத்திலிருந்து விழிப்படைந்ததைப்போல விசுவநாதன் விழிப்புற்று கருவறையினுள்ளே நுழைந்தான். நிஜகுணரின் உடல் முழுவதும் விபூதியைப் பூசினான். சந்தனத்தையும் தடவினான். திருவடிகள், கரங்கள், கழுத்து, தலையின் மீது மலர்களை வைத்தான். மீண்டும் மீண்டும் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அவனுடைய இந்த நிலையைக் கண்டு, வெளியில் நின்று கொண்டிருந்த சீடர்களின் குழாம் வியப்புடன் கலங்கினர். ஏன் இப்படிச் செய்கிறான்? என்னும் கேள்வியுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஒருவரிடமிருந்தும் பதில் வராமல் இருந்ததால் நிஜகுணரைப் பார்த்தனர். விசுவநாதன் தேங்காயின் மீது கர்ப்பூரத்தை வைத்து மணியடித்து

''ஒளி ஒளிர்கிறது, தூய பரஞ்சுடர் ஒளிர்கிறது''
என்று கூறியபொழுது சீடர்கள் அனைவரும்
''பிரணவத்தின் மூவியல்பை அடைந்த
முதன்மையானவனே, நிலைகளைக் கடந்த
அணு அளவும் அலைபாயாத முக்திசிந்தாமணி
எனத் திகழும் சம்புலிங்கமே தானாத ஒளி ஒளிர்கிறது''

என்று கூறுவதற்கும், மலையெங்கும் அதிர்ந்ததைப் போன்று, வெடித்துக் சிதறும் பேரொலியுடன் நிஜகுணரின் மந்திரமயமான உடலிலிருந்த ஐம்பூதங்களும் ஐந்து ஒளிகளாக சம்புலிங்கத்தைச் சென்றடைந்தன.

காதுகளை அடைக்கும் பேரொலி! கண்ணைப் பறிக்கும் பேரொளி! சீடர்கள் என்னவென்று புரியாமல் தத்தளித்தனர். கருவறையிலே கண்கள் நிஜகுணரைத் தேடியபொழுது சம்புலிங்கமே தானாத ஒளி ஒன்று தென்பட்டு, சம்புலிங்கத்துடன் இணைந்த, நிஜகுணர் இரண்டறக் கலந்த நிலையினை விவரித்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)


கர்ப்பூர ஜோதி இன்னும் எரிந்து கொண்டு இருந்தது. ஞானிகளின் இறைவன் நிஜகுணர், ஒவ்வொரு அணுவிலும், புல்லிலும், கட்டையிலும் தங்களிடமும் அனைவரிடமும் கலந்து நிறைந்து நின்ற அனுபவத்தால் சீடர் குழாத்தின் இதயக் கண்கள் நிறைந்து பொங்கின.

விசுவநாதனின் பார்வையானது உறியின் மீது நிலைத்தது. நிஜகுண ஶிவயோகிகளின் நூல்களின் மீது நிலைத்தது. அவன் சதாஶிவனின் செவியில் எதையோ கூறினான். சதாஶிவன் ஒரு புதிய கூடையையும் தூய்மையான துணியையும் கொண்டு வந்தான். விசுவநாதன் அந்தக் கூடையை உறியின் கீழே பிடித்துக் கொண்டு பிரார்த்திக்கத் தொடங்கினான். அங்கு குழுமி இருந்தவர்கள் அவனுடைய குரலிலே பிரார்த்தனையில் மெய் மறந்தனர். அந்த நூல்கள் அனைத்தும் அற்புதமான நட்சத்திரங்களைப் போல ஒளியின் அடிகளாக புண்ணியத்தின் கொத்துக்களாக மெல்ல மெல்ல இறங்கி இறங்கி கூடையிலே நிறைந்தன. அங்கிருந்தவர்கள் புளகம் அடைந்தனர். அவர்களிடம் கண்ணிற்குப் புலப்படாத ஒரு சக்தி ஏற்பட்டதைப் போல பக்திப் பரவசத்துடன் ஜெயகோஷமிட்டனர். விசுவநாதனும் சதாஶிவனும் அந்தக் கூடையைத் தலையின் மீது சுமந்துகொண்டு மெய்மறந்தனர். ஆடினர்; ஆடிக் கொண்டே மலையைச் சுற்றிச் சுற்றி வந்தனர். மக்களும் ஆடினர்.

நிஜகுணர் பரம்பொருளுடன் இரண்டறக் கலந்துவிட்டாலும் யுகயுகங்களுக்குப் போதுமான அளவிற்குத் தேவையான அளவிற்கு ஏற்றி வைத்த அந்த அற்புத விளக்கை, நூல்கள் என்னும் விளக்குகளைச் சுமந்தவாறு கூடைத் திருவிழாவிலே மெய்மறந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

A Novel on NIJAGUNA SIVAYOGI

Translated from KANNADA

*by* Smt. ***KALYANI VENKATARAMAN***

***Published by:***

**NIJAGUNA FOUNDATION**

Chilukavadi, Kollegal Taluk